# தமிழ் இலக்கிய வரலாறு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் நூல் வெளியீடு

# தமிழ் இலக்கிய வரலாறு

## (கி. பி. 1 முதல் 1100)

1. சமணமும் தமிழும்
2. பௌத்தமும் தமிழும்
3. வைணவமும் தமிழும்

ஆக்கியோர்

**E. S. வரதராஜ அய்யர், பி.எ;**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்
விரிவுரையாளர் (கலைப்பகுதி)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

1957

*Published October, 1957.*

*Printed at Sree Ramaprasad Press, 56, Broadway, Madras-1.*

# உள்ளுறை

## சமணமும் தமிழும்


| | பக்கம் |
|---|---|
| ஆதிவரலாறு | 1— 10 |
| சமணரின் கொள்கைகள் | 10— 22 |
| தொல்காப்பியர் ஜைனரா ? | 22— 24 |
| சமண நூல்களும் உரைகளும் | 24— 98 |
| திருஞானசம்பந்தரும் சமணரும் | 99—103 |
| சித்தியார் | 103 |
| சமணம் தேய்ந்து குன்றிய வரலாறு | 110—111 |
| தேவாரமும் சமணமும் | 112—119 |
| சாசனமும் சமணரும் | 120—129 |
| அருகர் துதி | 129—131 |


## பௌத்தமும் தமிழும்


| | |
|---|---|
| இலக்கிய வரலாறு | 133—137 |
| சமயத் தோற்றமும் வளர்ச்சியும் | 137—146 |
| மணிமேகலையும் பௌத்தமும் | 146—152 |
| புத்தர்பிரான் வாழ்க்கை வரலாறு | 153—160 |
| தமிழ்நாட்டிற் பௌத்தம் | 160—164 |
| இலங்கையிற் பௌத்தம் | 164—174 |
| பௌத்தர் கொள்கைகள் | 174—184 |
| சமய வாதங்கள் | 184—190 |
| வளையாபதி | 190 |
| வீரசோழியம் | 194 |
| பௌத்தத் திருப்பதிகள் | 197 |
| பௌத்தர் துதிகள் | 201 |


## வைணவமும் தமிழும்


| | |
|---|---|
| ஆதிவரலாறு | 209—250 |
| முதலாழ்வார்கள் | 250—261 |
| திருமழிசையாழ்வார் | 261—271 |
| பெரியாழ்வார் | 271—280 |
| ஆண்டாள் | 280—294 |
| நம்மாழ்வார் | 294—327 |
| குலசேகராழ்வார் | 327—334 |
| தொண்டரடிப் பொடியாழ்வார் | 334—338 |
| திருப்பாணாழ்வார் | 338—339 |
| திருமங்கையாழ்வார் | 339—385 |

# முன்னுரை

ஸர். கே. வெங்கட்டரெட்டி அவர்கள் இப்பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தபோது தமிழ் ஆராய்ச்சித்துறையிற் பணியாற்றிநின்ற ஐவரைத் தமிழ் இலக்கியவரலாறு எழுது மாறு பணித்தனர். வரலாற்றுப்பகுதி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஐவர்க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. நான், தென்னிந்தியாவும் சமண பௌத்த வைணவ சமயங்களும் என்ற பகுதியை ஆராய்ந்து எழுதுவதாக ஏற்றுக்கொண்டேன். சமணரும்பௌத்தரும் தமிழ்நாட்டிற் றழைத்து நின்றகாலம், அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்த உதவிகள், சைவ வைணவங்களோடு அவர்கள் மாறுபட்டுநின்ற நிலை, அம்மாறுபாட்டால் அவர்கள் தளர்ந்து குன்றியநிலை முதலியன பல ஆதரவுகளைக்கொண்டும் நூல்களில் ஆங்காங்குக் காணப்பெறும் அகச்சான்றுகளைக் கொண்டும், இந்நூற்கண் ஆராய்ந்தெழுதப் பெற்றுள்ளன. போதிய ஆதரவுகள் இல்லாத நிலையில் ஆழ்வார்கள் காலம் பலவகையாக நிறுவப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுவப்பட்ட கொள்கைகளை யுட்கொண்டும், சரித்திர வரலாறு, சாசனம், கல்வெட்டு முதலியவற்றைத் தழுவியும் ஆராய்ந்து எழுதப்பட்டது இந்நூல். இதனைப் பல்கலைக்கழகப் பதிப்பாக வெளியிடுவதற்கு அநுமதி அளித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சிண்டிகேட்டவர்க்கு முதற்கண் எனது நன்றி உரித்தாகும். தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து ஊக்கம் காட்டிவரும் துணைவேந்தர் திவான்பகதூர் T.M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் எம். ஏ. பி.எல்., அவர்களின் ஆட்சியில் இந்நூல் அச்சேறி வெளிவருவது ஓர் மகிழ்ச்சிக்குரிய நற்செய்தியாகும். இந்நூலை விரைவில், இனிய அழகிய முறையில் அச்சிட்டுதவிய சென்னை ஸ்ரீராமப்ரசாத் அச்சகத்தார்க்கு எனது நன்றி உரித்தாகும்.

E.S. வரதராஜய்யர்

21-5-1957

தமிழ் விரிவுரையாளர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

# தென்னிந்தியாவும் சமண பௌத்த வைணவ சமயங்களும்

## சமணமும் தமிழும்

புத்தர்பிரான் காலத்தும் அவர்க்குச் சற்று முன்பும் இருந்த வர்த்தமானர் கி.மு. 559-இல் பிறந்து கி. மு. 527-இல் நிர்வாணம் எய்தியவர் என்ப. தமக்கு முன்னர்த்திகழ்ந்த 23 தீர்த்தங்கரரின் மதக் கொள்கைகளை விளக்குபவராகத் தம்மைக் கூறிக்கொள்வர். எனவே அவர் தமக்கு முன்னர் வழக்கிலிருந்த கோட்பாடுகளை ஒழுங்குபடுத்தினர் அன்றித் தாமே ஓர் புதிய சமயத்தைக் கண்டனர் என்று கூறற்கில்லை. கி.மு. 776-இல் நிர்வாணம் எய்திய பார்சுவநாதர் என்பார் இச்சமயத்தின் ஆதிமுதல்வர். ஆனால் சமணமதம் வர்த்தமானர், பார்சுவநாதர் என்ற இவர்கட்கு முன்னரே இருந்த ஓர் பழைய சமயம் என்ப. யஜுர் வேதத்திலேயே இடபதேவர், அஜாதநாதர், அரிட்டநேமி என்ற தீர்த்தங்கரர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. வர்த்தமானரின் பின் போந்தவர்கள் பெரும்பாலும் அரசர் வழியினரே.

பார்த் (Barth) என்பவர் இந்திய சமயங்களைப்பற்றி எழுதும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார். "யாதவ குலத்திலுதித்த கண்ணன் ஓர் இளவரசனாக விளங்கும் போதே சமண சமயம் இருந்திருக்கவேண்டும். பாரதக் கதையிலேயே கண்ணனை ஓர் தெய்வமாகக் கருதினர். அவனைக் குறித்துக் கூறும் கோபியர்கள் கதை அப்பொழுது வழங்கவில்லை. ஆகவே பாரதம் இயற்றப்படுவதற்கு முன்னரே சமண சமயம் இருந்திருத்தல்வேண்டும்.

வேத நூல்களாகிய வாஜசநேய சங்கிதையிலும், சதபதப் பிராமணத்திலும், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

காசி, கோசலம், விதேகம், மகதம் முதலிய தேசங்களில் யாகங்கள் ஒழுங்காய் நடைபெறவில்லை. அவ்விடங்களில் ஆரியர் தாம் மேற்கொண்ட சமயத்தினின்றும் வழுவினர். அவ்விடங்களில் மன்னர்களே மக்கட் சமூகங்களில் மேன்மையெய்திப் பிராமணரை அடக்கிக்கொண்டார். அங்கே பிராமணர் வதியத் தகுதியில்லை. அரசர் வழியில் வந்த சிலர் வைதிக யாகாதிகளைக் கைவிட்டதுமன்றி மறைகளிற் கூறப்பட்ட தருமத்திற்கு முற்றும் முரணாக யாகம்புரிவது பாவமென்றும், யாகாதிகளைச் செய்யா தொழிதலே புண்ணியமென்றும் கருதும் ஒருவிதக் கோட்பாடுடையர். "வேத தரும பரிபாலனம் செய்து வரும் குருபாஞ்சால தேயத்தினராய் நழுவின இழிதர்மத் தராகிய இம்மக்களை எதிரிகளாகவும் மிலேச்சராகவும் கருதவேண்டும்." இவ்வாறு வழுவினவர் ஆரியரேயாவர். ஏனெனில் குருபாஞ்சால தேசத்திலிருந்த வைதிக சமயத்தார் இவர்களது எதிரியாயிருந்தும், இவரை நழுவின ஆரியராகக்கொண்டனர் ஆதலின், நிற்க, பௌத்த சமண சமயங்களைப் பெரிதும் ஆதரித்தவர் மகத தேய மன்னர்கள். வர்த்தமான மகாவீரரின் முன்னோரான பார்சுவநாதர் காசியிற் பிறந்தார். விதேக மாநகர் புண்ணிய பூமி என்று சமண நூல்கள் கூறும். மேலும் தீர்த்தங்கரர் எல்லோரும் காசி, கோசலம், முதலிய தலங்களில் அவதரித்தவர் என்பது வரலாற்றா னறியப்படும். ஆதலின் பிராமணங்கள் எழுதப்பட்ட வேதகாலத்தில் காசி, கோசல, விதேகத் தலங்களில் சமண சமயம் இருந்திருக்கவேண்டும் என்று கருதலாம். மற்றும் வான்மீகிமுனிவர் இயற்றிய இராமாயணத்திலேயே இராமன் தெற்கண் போந்தபோது சமணர்கள் ஆசிரமத்தைக் கண்டதாகக் கூறப்பட்டிருப்பது காணலாம். எனவே பத்திரபாகுவின் கூடத்தான் சமணர்கள் முதல்முதல் தென்னாட்டிற் புகுந்திருக்கவேண்டும் என்பது பொருந்தாது' என்பர். அ. சக்கிரவர்த்திநயினார்.[1] மேலும் தென்தமிழ் நாட்டில் ஏற்கனவே சமண சமயம் பரவி

1. நீலகேசி முகவுரை.

யிருந்தாலன்றிப் புதிய சமயமாகிய சமணத்திற்கு அங்கு ஆதரவு கிடைத்திராதென்பர் அவ்வறிஞர்.

இந்தியாவிலேயே இப்பொழுது சுமார் 10 லக்ஷம் மக்கள் சமண சமயிகள். இந்த சமயம் கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத்திலிருந்து சுமார் 13 நூற்றுண்டுகள் வழக்கிலிருந்தது என்பது சிலர் கொள்கை. கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்து 7-ஆம் நூற்றுண்டுவரையில் மிகவும் சிறந்து விளங்கியது, கி. மு. ஆறும் நூற்றுண்டிலிருந்த லிச்சவிகள் என்ற மக்களாலும், வைசாலி நகர மன்னராலும் பெரிதும் பாலிக்கப்பட்டுவந்தது. சமணர் நூற் குறிப்புக்களிலிருந்து பிம்பசாரன் என்ற அரசன் மகாவீரரின் சீடன் என அறிகின்றோம். மகத மன்னர்களான நந்தர்களிற் பலர் சமண மதத்தினர் என்ப. புகழ்பெற்ற மௌரிய மன்னரான சந்திரகுப்தன் சமணப்பற்றுடையவன் என்றும், அவர் பத்திரபாகு என்ற சமண முனிவரைப் பின்பற்றிச் சிரவண வேள்குளத்திற்குச் சென்று, அங்கே சமணர்களைப்போன்றே சல்லேகனம் செய்தனர் என்றும் சரித்திரம் கூறும். அவனுடைய பெயரன் அசோகர், முதலிற் சமணராயிருந்து பின்னர் பௌத்தராயினர் என்ப. அசோக மன்னரது பெயரன் சம்பிரதி என்பவன் சமணன் என்றும், அவன் சமணரில் ஓர் வகையினரான சுவேதாம்பரரின் கொள்கைகளைப் பரவச் செய்வதற்காகச் சமயக் கோட்பாடுகளில் வல்லுநரைத் தென்றமிழ் நாட்டிற்கு அனுப்பியதாகவும் சரித்திரம் உண்டு. இதுவே தென்னிந்தியாவிற் சமணம் வந்ததாகக் கூறும் முதற்செய்தி. ஹத்திகும்பாக் கல்வெட்டிலிருந்து (கி.பி. முதல் நூற்றுண்டு) கலிங்க மன்னன் காரவேலன் சமணப்பற்றுடையவன் என அறியக்கிடக்கின்றது.

[1] கி. மு. 300-இல் இறுதிச் சுருதகேவலியான பத்திரபாகு முனிவர் 12 ஆண்டுகள் வடக்கே வற்கடம் என்று கூறிப் பல சமணர்களை அழைத்துக்கொண்டு விந்தியமலையைக்

கடந்து தெற்கண்போந்தனர். அப்பொழுது சந்திரகுப்த மன்னரும் அவருடன் வந்தனர். சிரவண வேள்குளம் எய்தியவுடன், தமது வாழ்நாளிறுதி கிட்டுவதை உணர்ந்து, தம்முடன்போந்த சமணர்களைத் தமது பிரயாணத்தைத் தொடரும்படி செய்து தாம் விந்திய மலையில் நிர்வாணம் எய்தினர். பின்னர் பல ஆண்டுகள் சந்திரகுப்தன் அங்கே இருந்து பின் சல்லேகனம் செய்து உயிர் துறந்தார். அதுவரையில் சமண சமயத்தில் உட்பிரிவுகள் ஏற்படவில்லை. ஆயினும் தென்னாட்டில் இருந்த சமணர்கள் திகம்பரரென்றும் அவர்கள் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து வடக்கே பல இடங்கட்கும் சென்று தமது சமயக் கொள்கையைப் பரப்பினர் என்றும், கூறுவர் எம். வி. கிருஷ்ணராவ் தமது தலைக்காட்டுக் கங்கமன்னர்கள் என்ற நூலில், (பக். 192). (The Gangas of Talikad).

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசுபுரிந்த கங்க மன்னர்கள் சமண சமயத்திற் பற்றுடையவர், தமிழ்ச் சரித்திரப் பகுதியிலே இருண்ட காலம் என்று கூறப்படும் களப்பிரர் காலம் சமணம் ஓங்கித்திகழ்ந்த காலம் என்னலாம். களப்பிரர் முதலில் பௌத்தராக இருந்து பின்னர்ச் சமண சமயிகள் ஆயினர் என்ப. இக்காலப் பகுதியை அடுத்துப் பல ஆண்டுகள் சமண சமயம் தலைசிறந்து விளங்கியது.

உலக வாழ்க்கைச் சுழலிலிருந்து மக்களைக் கரையேற்றுவது எப்படி என்று ஆராய்வதே பல உண்மைச் சமயங்களின் நோக்கம். மிகப் பழைய காலத்திலேயே மக்கள் துன்பக்கடலினின்றும் கரையேறும் வழியைக் காட்டியவர் தங்களது தீர்த்தங்கரரான இடபதேவர் என்பதே சமணரின் கருத்து. இடபதேவர்க்கு முன் இந்தியா முழுதும் போக பூமியாகவே எந்தவிதமான குறைபாடுமின்றி, பசியும் வளனுமிக்குத்திகழ்ந்தது என்றும், பின்னர் அந்நிலைமாறி மக்கள் பசியும் துயருமிக்கு வருந்தவே, இடபதேவர் முதன்முதலில் உழவுத் தொழிலை

மக்கட்குக் கற்பித்தனர் என்றும் எழுதினர் அறிஞர். A. சக்கிரவர்த்திநயினர்.[1] சமணரில் திகம்பரர் என்பவர் உடையணியாத நிர்வாணிகள். இம்முறையை மகா வீரரின் சீடர்கள் ஏற்றனர் என்ப. ஆனால் சுவேதாம்பரர் என்ற பிரிவினர் இதனின் மாறுபட்டகொள்கையராய் வெள்ளாடை உடுத்துத்திரிவர். ஆனால் நிர்வாணமுத்தி எய்துவதற்கு ஆடையின்மை இன்றியமையாதது என்பது சமணப் பெரியார் கருத்து. சமணர்கள் கடுமையான யோக முறையைக் கைப்பிடித்தவர்.

பௌத்தரும் சமணரும் மறைகளையும் வேள்விகளையும் மறைபயில் அந்தணர் தலைமையையும் அறவே வெறுத்தவர். நால்வகை வருணப் பாகுபாடு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயினும் பிராமண இருடிகள் பின்பற்றிய பெரும்பான்மையான தவ வழிகளும் பௌத்த சமணரால் அங்கீகரிக்கப்பெற்றன. கி.மு. 300-இல் தோன்றிய கௌடில்யர் பொருள் நூலில், ஓர் பிராமண முனிவன் பின்வருமாறு வருணிக்கப்பட்டுள்ளான். "ஓர் தவ முனிவன் ஐந்து இந்திரியங்களையும் அடக்கி, உலகப் பொருள்களில் ஈடுபடாமல் விலகியிருத்தல் வேண்டும். இரந்தே தன் பசியாற வேண்டும். காட்டில் உறைதல் வேண்டும். உள்ளும் புறமும் தூய்மையனாய் ஒழுகல்வேண்டும். பிற உயிர்களிடம் கருணை பூண்டொழுக வேண்டும்" என்பன. இவை அனைத்தும் முறையே சமண சமய நூல்களிலும் காணலாம். பிறப்பினால்மட்டும் ஒருவன் உயர்ந்தவனாகக் கருதப்படான். தொழில்பற்றியே ஒருவனது பெருமை நன்குணரப்படும். என்று பௌத்தரும் சமணரும் கருதினரேனும், அக்கொள்கை அவர்கட்கு முன்னரே இந்நாட்டில் உண்டு பொருளில் அறமுரைத்த திருவள்ளுவரும்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமையான்"

1. அவரியற்றிய தேவர்குறள். கவிராச பண்டிதர் உரை பார்க்க.

என்றும்,

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்"

என்றும் கூறியருளினர்.

பார்சுவநாதரே சமண மதத்தை நிலைபெறுத்தியவர் என்று கூறினோம். இவர் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர் என்பது அறிஞர் ஜாகொபியின் கருத்து. பிற தீர்த்தங்கரர்போன்று இவரும் அரசர் வழியினரே. இவர் தந்தை அசுவசேனர் என்ப. இவர் தமது சீடரிடம் நான்கு உண்மைகளை வற்புறுத்தினர். அவையாவன :— பிற உயிர்க்குறுகண் செய்யாமை, உண்மையுரைத்தல், களவின்மை, பொருட்பற்றின்மை என்பன ஆகும். கரும யோகமார்க்கமே முத்திக்கு வழி என வற்புறுத்தியவர் இவர். பார்சுவநாதர் சமணர் அரையுடை மேலுடை தரிக்கலாம் என்றனர். மகாவீரர் உடையே தரித்தல் கூடா தென்றனர். சமணர் கன்னபரம்பரை வரலாற்றின்படி விருஷபர் என்பவர்தாம் ஜைன முதல்வர். அவர் காலத்திலேதான் கரணத்தோடுகூடிய திருமணமும், இறந்தவர்களை எரியிலிட்டுக் கொளுத்தலும், கல்லறைகள் சமைத்தலும், இந்திர விழாவும், நாகர்க்குரிய விழாவும் ஏற்பட்டன. (சமண மறைகளில் கண்ட சமணர் வாழ்க்கை.)

By Jagadesh Chandra Jain.

இனி, 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணமென்ப' என்பது தொல்காப்பியமாகலின், அம்முனிவர் காலத்திலேயே கரணத்தோடு கூடிய மணம் வழங்கினமை புலனும். இவ்வகை மணம் இவர்காலத்திற்கு 200, 300 ஆண்டுகட்குமுன்பே தமிழ் நாட்டில் வழங்கியிருத்தல்கூடும் என்று கூறின் மிகையாகாது. தனக்கு முன் பயின்றுவந்த வழக்கத்தையே தொல்காப்பியர் குறித்திருக்கக்கூடுமாதலின், சமண முதல்வர் காலத்தில் நிகழ்ந்த இந்திரவிழா தென்றமிழ் நாட்டில் பல்லாண்டுகளாக நடைபெற்றிருத்தல் வேண்டும். பின்னர் திருமால் அல்லது கண்ணன் வழிபாடு

சிறக்கவே அது வழக்கு வீழ்ந்திருத்தல் கூடும். இந்திர விழா நடத்தத் தவறினமையின் புகார் நகரைக் கடல் கொண்ட செய்தி மணிமேகலையிற்கண்டது. மற்றும் இறந்தவர்களை அடக்கம்செய்யும்வகை ஐந்தென மணி மேகலை கொண்டறிகின்றோம். அவற்றுள் எரியவிடுவதும் ஒன்று.

இவர்க்குப் பின்வந்த மகாவீரர் ஐந்தாவது கொள்கை யாகக் கற்பையும் கூறிப்போந்தார். மகாவீரர் நிர்வாணம் எய்தியபோது (கி. மு. 528) புத்தர்பிரானுக்கு வயது 80. ஆனால் இருவரும் மகத அரசர் அஜாதசத்துரு காலத்து வதிந்தனர் எனச் சரிதம் கூறும்.

மகாவீரர் சித்தார்த்தருக்கும் திரிசயா அரசிக்கும் மகவாயுதித்தவர். யசோதரை என்ற கற்பரசியை மணம் புரிந்தார். 30-வது வயதில் காட்டிற்குத் தவமியற்றச் சென்றார். நாளந்தா என்ற பெருங்கல்லூரியைக் காணச் சென்றபோது கோசல முனிவரைக் கண்டார். இந்தக் கோசலர் ஆசீவக சமயத்தினர். நாளடைவில் கோசலர்க் கும் மகாவீரர்க்கும் கொள்கை வேறுபாடுகள் எழுந்தன. தமது 42-வது வயதில் பூரண ஞானம் எய்தினர் மகா வீரர். புத்தர்பிரானுக்கும் மகாவீரரது சீடர்கட்கும் அடிக் கடி வாதம் நிகழ்ந்ததுண்டென்ப. மகாவீரர் கருத்துப்படி அஃறிணைப் பொருட்கும் உயிருண்டு. வளர்ச்சியும் உண்டு. புத்தர்க்கு இஃதுடம்பாடில்லை. புத்தர் கடுந்தவத் தையோ காயக்கிலேசம் அல்லது உடலை வருத்துவ தையோ வற்புறுத்தவில்லை. ஆனால் மகாவீரர் கடுந்தவம், ஆடையின்றி யிருத்தல், உடலை வருத்தி யோகம் புரிதல், பட்டினி கிடந்துயிர் துறத்தல் என்ற இவைகளைக் கடைப் பிடிப்பதாலேயே முத்தி எய்தும் என்று கூறினர். தங்க ளுடைய தவம் மிகத் தூய்மையானதென்று கூறிப் பௌத்தரை ஆடம்பரமும் அவாவும் மிக்கவர் என்று சமணர் இழித்துக் கூறுவதுண்டு. பிறவுயிர்க்கிரங்கல் என்ற பண்பைப் புத்தரும் வற்புறுத்தினர் எனினும்,

சமணர் அதனை மிகக் கடுமையாக வற்புறுத்தினர். மகாவீரர் கி. மு. 468-இல் இறந்தார். அதன் பின்னர் சுமார் 150 ஆண்டுகள் வரையில், அம்மதத்தைப்பற்றிய சிறப்பான குறிப்புகள் இல்லை.

நந்த வமிசத்தின் கடைசி மன்னர் காலத்தில் சம்பூத விசயன் என்றும் பத்திரபாகு என்றும் இரண்டு சமணத் தலைவர்கள் விளங்கினர். மகாவீரரின் வாழ்க்கைச் சரித்தத்தை வரைந்தவர் இந்த பத்திரபாகு என்பவரே. இவர் இருவர்களும்தான் சமணர்களாற் பெரிதும் பாராட்டப் பெறும் 14 பூர்வாகமங்களிலும் வல்லவர் என்ப. சந்திர குப்தர் அரசுரிமை யெய்திய ஆண்டிலேயே சம்பூத விசயர் இறந்தனர். அப்பொழுது வங்காளப் பகுதியில் 12 ஆண்டு வற்கடஞ் சென்றது. அப்பொழுது அந்தக் கொடிய பஞ்சத்தால் மதக்கேட்டை விளைக்கும் நிகழ்ச்சிகள் நிகழக்கூடும் என்று அஞ்சிப் பத்திரபாகு தப்பி ஓட முயன்றூர். பலசீடர்கள் பின்தொடரச் சென்று கர்நாடகம் சேர்ந்தார். பலர் ஸ்தல பத்திரர் என்ற தலைவர்க்கடங்கி மகதநாட்டிலேயே இருந்துவிட்டனர். பஞ்சம் தெளிந்தவுடன் அவர்கள் தமது ஊருக்குத் திரும்பினர். அவர்கள் தலைவராக ஸ்தலபத்திரர் நியமிக்கப்பட்டார். இதனிடையில் அதாவது கி. மு. 300-இல்தான் ஸ்வேதாம்பரர் என்றும், திகம்பரர் என்றும் இருபிரிவுகள் ஏற்பட்டன. கி. மு. 300-இல் இந்தியாவின் கீழ்ப்பாகத்தில் சமணர் ஆதிக்கம் குறைந்தது.

பௌத்தர்களைப்போலச் சமணர் மதப்பிரசாரத்தில் இறங்கவில்லை. அவர்கள் சமய தூதரைப் பல இடங்கட்கும் அனுப்பியதுபோன்று, இவர்கள் செய்யவில்லை. பத்திரபாகு முனிவருடன் சேர, சோழ, பாண்டிய நாடுகட்குப் போந்தவர்களில், சமந்தபத்திரர் என்பார் ஒருவர். இவர் சியாத் வாதத்தில் மிகவும் வல்லவர். இவரை அடுத்து அகளங்கர் என்ற முனிவர் காஞ்சியில் பௌத்தருடன் வாதம் செய்தனர் என்ப.

நிற்க, தமிழில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்ருகிய நாலடியார் என்னும் நூல் 8000 சமண முனிவரால் இயற்றப்பட்டதென்றும், இந்தச் சமணர்கள்தாம் பத்திரபாகு முனிவருடன் தெற்கண் போந்தவர் என்றும் ஒரு வரலாறுண்டு. ஆனல் முத்தரையரைப்பற்றிய குறிப்பு அந்நீதி நூலிற் காணப்படுவதாலும், முத்தரையர் என்பார் கி. பி. 8-ஆம் நூற்ருண்டில் நந்திவர்ம பல்லவ மல்லன் காலத்திருந்தவர் எனச் சரித்திரம் மொழிதலானும் நாலடியாரை 8-ஆம் நூற்ருண்டு நூலாகக் கருதலே பொருத்தமுடைத்தாகலானும், மேலே கூறிய வரலாற்றின் உண்மை ஆராயத்தக்கது.

இனிக் களப்பிரர் ஆட்சியிலேதான் இந்தச் சமணர்கள் மிகவும் செழித்தனர் என்று கூறுவர். இந்தக் களப்பிரர் யார்? வேள்விக்குடிச் செப்பேட்டில் களப்பிரர் ஆட்சி பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. முதுகுடுமிக்குப் பின் வந்த பாண்டியனை ஆட்சி நகரைவிட்டுத் துரத்தியவன் ஓர் களப்பிர மன்னன். சளுக்கியரும் பல்லவரும் இந்தக் களப்பிரரை வென்றதாக அடிக்கடி கூறுவர். சளுக்கிய மன்னர்களாகிய விக்கிரமாதித்தியன், விமலாதித்யன் என்ற இவர்கள் களப்பிரரை அடிப்படுத்ததாகச் சரித்திர வரலாறுண்டு. பல்லவ சிம்ம விஷ்ணுவும், முதலாம் நரசிம்மனும் களப்பிரரை முறியடித்துள்ளனர்.

ஒரு கர்நாடக மன்னன் மதுரையிற் படையெடுத்துச் சிறிது காலம் அங்கிருந்ததாகப் பெரியபுராணமும் திருவிளையாடலும் கூறும். இப்படையெடுப்பு மூர்த்திநாயனர் காலத்து நிகழ்ந்ததென்ப. மேற்கூறிய கர்நாடக அரசன் சமணனுகி மதுரையிற் சைவர்களைத் துன்புறுத்தியதாக வரலாறுண்டு. அம்மன்னன் மகப்பேறில்லாதவனுகவே, பட்டத்துயானை மூர்த்திநாயனரைச் சுமந்து வந்து மதுரைக்கரசாக்கியதென்ப. கல்லாடத்திலும் இச்செய்தி குறிக்கப்படுவதால் இஃது ஓர் பழஞ்செய்தியாக இருத்தல் கூடும். எனவே இது மதுரையில் களப்பிரர் ஆக்கிரமத்

தையும், சமணம் பரவியதையும் ஒருவாறு குறிக்கக் கூடும். மற்றும் தலையாலங்கானத்தில் நெடுஞ்செழியன் வெற்றி கொண்ட பகைவருள் எருமையூரனும் ஒருவன் ஆவன். இவன் மைசூர் மன்னன். இது கொண்டு களப் பிரர் மைசூர் அருகில் இருந்தவர் ஆவர் என்றும், நெடுஞ் செழியன் அவர்களைப் பாண்டி நாட்டினின்றும் விரட்டி யவன் ஆவன் என்றும், ஆனால் பாண்டியர் வரலாற்றில் இக்களப்பிரர் பெயர் காணப்படவில்லையென்றும் கூறு வர் காலஞ்சென்ற கோபிநாத ராயரவர்கள்.

## சமணரின் கொள்கைகள்

இச்சமயத்தார் இச்சமயமே எல்லாவற்றிற்கும் ஆதி யென்றும், ஏனைய சமயங்கள் இதன் பல கிளைகள் என் றும், நிர்வாணம் என்ற முத்திநிலை இச்சமயத்தில்தான் உண்டென்றும், பிறசமயங்கள் யாவும் பொய்யை மெய் யாகக் காட்டி ஒழுகுவன என்றும், கருதுவர். அவர்கள் வழிபடும் கடவுள் அருகதேவர். இவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். அறம் பலவற்றைத் திறம்பட உரைப்பவர். தோற்றமிறுதியில்லாதவர். ஆதியில் உலகின்புறற்பொருட்டு அநாதியான பன்னி ரண்டு வேதங்களையும் பாங்குற வெளியிட்டவர். முக் குடையினர், அசோகினடியில் வீற்றிருப்பவர். "பூமலி யசோகின் புனைநிழலமர்ந்தோன்" என்றும், "முச்சக நிழற்றுமுழுமதி முக்குடை அச்சுதன்" என்றும் மெச்சப் படுபவர்.

இவர் பிறர்க்குபதேசித்ததாவது :—"என்னை யல்லா மல் வேறு தெய்வமில்லை. என்னை வழிபடுவோர் எல் லோரும் வீடு பேற்றை எய்துவர். எல்லா உயிர்களும் தாம் செய்த இருவினைப் பயன்களைத் தாமே துய்க்கும். பாவ மிகுதியால் நரகம் புகும். புண்ணிய மிகுதியாற் சுவர்க்கம் புகும். புண்ணிய பாவம் இரண்டும் கலந்த இடத்து மக்கட் பிறப்பை அடையும். பாவத்தின் காரண மாக விலங்காய்ப் பிறக்கும். புண்ணிய பாவம் இரண்

டும் அற்றவிடத்து முத்தி எய்தும். என்னைப்போலவே வேதமும், உலகமும், காலமும், உயிர்களும், கன்மமும், தருமமும், எப்பொழுதும் அநாதியாகவும் நித்தியமாகவும் உள்ள பொருள்கள்'' என்பதாம்.

மற்றும் உயிர்கள் ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர்கள் ஈறாக ஐந்து வகைப்படும் என்றும், மாவு மாக்களும் ஐயறிவுடையன என்றும், ஐயறிவுயிர்களுள்ளும் பகுத்தறிவுள்ளனவும், இல்லாதனவும் உண்டென்றும், அவ்வண்ணமே மக்களுள்ளும் பகுத்தறிவுள்ளனவும், இல்லாதனவும் உண்டென்றும், சமண நூல்கள் கூறும். பகுத்தறிவற்ற மக்களை மாக்கள் என்பர் தொல்காப்பியர். மேலும் உயிர்களிற் பெருமை சிறுமையுண்டென்றும், அப்பெருமை சிறுமைகள் உடற் பருமை சிறுமைகளுக்கேற்ப அமையும் என்றும் கொள்வர் சமணர். ''பெரிய தன் ஆவி பெரிது'' என்ற சமணர் மொழியும் உரையும் உண்டு. உயிர்களே முத்திநிலைக்குரியன என்றும், வினைகளாற் பிணிக்கப்பட்டு உழல்வன என்றும் இருவகையினவென்பர். மக்கள் உருவாகப் பிறந்தவரே முத்திக்குரியர் என்றும், அவர் தம்முளும் துறவிகளே சிறப்பாக அதற்குரியர் என்றும் நூல்கள் நுவலா நிற்கும்.

உயிர் அநாதி, உயிரைப் போன்றே அநாதியாக உள்ள உயிரல்லாப் பொருள்களும் உண்டு. உயிர்களைப் புண்ணிய பாவங்களில் ஈடுபடுமாறு செய்வது ஒன்று, தருமம் இரண்டு, அதன்மம் மூன்று, காலம் நான்கு, ஆகாயம் ஐந்து என்பர். இதனை,

'தருமாத்திகாயம் தானெங்கும் உளதாய்ப்
பொருள்களை நடத்தும்பொருந்த நித்தியமாய்
அப்படித்தாகி அதன்மாத்தி காயம்
எப்பொருள்களையும் நிறுத்துதல் இயற்றும்''
என்ற மணிமேகலையிற் காண்க. (27. 187—190)

மற்றும் நல்வினை தீவினைகளில் நீரூற்றுப்போல உயிரில் சுரப்பது ஊற்று எனப்படும். திரிகரணங்களின் வழி

யாக ஊற்றுக்கள் உயிரினை யடையும். இனி, செறிப்பு என்பது இருவினைகள் உண்டாகும் வழியை அடைப்பது என்பர். பிராரத்துவ வசத்தால் உயிர்கள் தமது சஞ்சித வினையைத் துய்க்குங்கால், முனைப்பினால் சில புதிய செயல்களை ஆற்றும். அவை மறுபிறப்பில் பயனை விளைக்கும். ஆகலின் முனைப்பினால் ஆற்றும் செயல்களை உயிர்கள் தவிர்த்தல் வேண்டும். இன்றேல் பிறப்பு நீங்கும் வழியில்லை. இவ்வாறு தவிர்ப்பதே செறிப்பு எனப்படும். இதனை அடுத்து, கன்மங்கள் மேன்மேலும் சேராதபடி தடுக்கும்போதே துய்க்கவேண்டிய பிராரத்த வினைகளையும் கடந்து விடுவது உதிர்ப்பு எனப்படும். இதனை,

> ''வரும்பாவம் எதிர்காத்து மன்னும் தம்பழவினையும்
> ஒருங்காக உதிர்த்தக்கால் உயிர்த்தூய்மை வீடென்றான்''
> (நீலகேசி, மௌக்கல 312)

மல நீக்கத்தால் உண்டாகின்ற தூய்மையே வீடென்பர். வினைகள் உயிருடன் கட்டுண்டு கிடப்பது பிணிப்பு, அல்லது கட்டு. ஐந்து இந்திரியங்களையும் அடக்கி, வினைகளினின்று விடுபட்ட உயிர்கள் கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம் என்பனவற்றை அடைந்து வீட்டுலகம் பெற்று முத்தி நிலையை அடைவதே வீடென்பர். இதனை,

> ''வருவழி இரண்டையும் மாற்றி முன்செய்
> அருவினைப்பயன் அநுபவித் தறுத்திமுடுல்
> அது வீடாகும்'' (மணிமேகலை 27, 199-201)

என்றது காண்க.

மேலே குறித்த ஒன்பது பொருள்களின் உண்மையை உணர்வது நன்ஞானம். இவற்றின் தன்மையை நன்குணர்வது நற்காட்சி. நன்ஞானம், நற்காட்சி இரண்டையும் ஒரு தன்மையாக உணர்ந்து ஒழுகுவது நல்லொழுக்கம். இவற்றையே மும்மணியென்றும் கூறுப.

சமண முனிவர் பிறவுயிர்க்குத் துன்பம் இழையார். எல்லா உயிரிடத்தும் அருள் காட்டுவர். கொல்லாமையை விரதமாகக் கொள்வர். புலால் உண்ணார். தீயன பயக்கும் பொய் வழங்கார். "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற பொய்யா மொழிப்படி, பொய் கூறியேனும் ஓர் உயிரைப் புரத்தல் வேண்டும் எனக் கருதுவர். பிறர் பொருளைக் கவரக் கனவிலும் கருதார். இதனைக் கள்ளாமை யென்பர் செந்நாப் போதார். மகளிர் போகத்தை விழையார். அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்தாகலின், அதனையும் அறவே ஒழிக்க முயல்வர். "அற்றான் என்று சொலப்படுவான் ஆசையற்றான் ஒருவனே" என்றார் ஓரறிஞர். பிறரைப் புகழ்ந்தோ பழித்தோ பேச மாட்டார். சினங்கொள்ளுதல் கடுஞ்சொற்கூறல் இவற்றை விலக்க முயல்வர். "யாகாவாராயினும் நாகாக்க" என்ற முதுமொழிக்கிணங்க, நாவடக்கத்தை மேற்கொள்வர். உடல் நிலைக்கு இன்றியமையாத உணவையே சமண முனிவர் இரந்துண்பர். இசை, நாடகங்கள் காம வுணர்ச்சியை எழுப்பும் என்று அவற்றைச் சற்றும் விரும்பார். தமிழில் நாடக நூல்கள் இறந்தமைக்குக் காரணம் சமணர் என்றே வரலாறு கூறும்.

மற்றும் இன்பம், துன்பம், நன்மை, தீமை, தண்மை, வெம்மை, ஓடு, செம்பொன் இவற்றைச் சமமாகக் கருதுவர். அருகர், சித்தர் முதலியோரை எப்பொழுதும் மன மொழி மெய்களால் வழிபடுவர். இவையன்றி மயிர் களைதல், ஆடையின்றித் திரிதல், நீராடாமை, பஞ்சணை முதலியன நீக்கித் தரையிற் படுத்தல், நின்று உண்ணுதல், ஒரே வேளை புசித்தல் முதலிய பல பழக்கங்களும் சமணர்க்குண்டு என்பர்.

சமணரில் இல்லறத்தாரும் உண்டு. அவர் ஆருகதர் எனப்படுவர். இல்லறத்தாரும் மேற்கூறிய அறங்களைக் கைக்கொள்ள வேண்டும். கொல்லுதல் கூடாது, பொய்த்

தல் கூடாது, திருடுதல், பிறர்மனை நயத்தல் இவற்றையும் நீக்க வேண்டும். பொருளீட்டுவதும் அளவாகவும் நடுநிலை யாலும் ஈட்ட வேண்டும். கள், ஊன், தேன் இவற்றைப் பருகுதல் கூடாது. கதிரவன் மறைந்த பின்பு உண்ணுதல் கூடாது என்பது சமணரின் திடமான கொள்கை.

**தீர்த்தங்கரர்கள்**

இடப தீர்த்தங்கரர் முதலாய இருபத்துநான்கு தீர்த் தங்கரர்கள் அருகனது அமிசமாயுதித்தவர்கள். குரு வின் அருள்மொழியின்றி நிரம்பிய அறிவினர். தென் னிந்தியாவிற் பல இடங்களில் நிற்கும் அல்லது சப்பள மிட்டிருக்கும், தீர்த்தங்கரரின் கற்சிலைகள் பல. இவர் களிற் பெரும்பான்மையோர் இக்ஷுவாகுவழியில் வந்த அரசர் மரபினர்.

**ஆசாரங்கள்**

இவர்கள் மேற்கொண்டவை 18,000 சீலங்கள். அவை கொல்லாமை விரதம் முதலியன. இவர்கள் இரவில் உண்பதில்லை. வடிகட்டாமல் நீரை உண்பதில்லை. மயி லிறகால் முன்னே கூட்டிக்கொண்டுவழி நடப்பர். பேன் முதலியன தலையிற்சேராதபடி தலையை மழித்துவிடுவர், ஆடைகளிற் சீலைப்பேன் அடையாதபடி, அவைகளைக் கடுக்காய் நீரிற்றுவைப்பர். மதுவிலக்கு அவர்கள் மேற் கொண்ட ஆசாரத்தில் ஒன்று. ஆத்தி, ஆல், இலந்தை, புடல், சுரை, கஞ்சா, அபினி, வெங்காயம், பெருங்காயம். பூண்டு, முள்ளங்கி, காளான் முதலிய பொருள்களை யும், மற்றும் அதிக மணமுள்ள பொருள்களையும், எவ் விதமான கஷ்டம் நேரினும், உண்ணுதல் செய்யார். ஊனைக் கையினாலும் தீண்டார்.

பாண்டி நாட்டிற் சமணர்கள் மிகக்குறைவு இல்லை என்றே கூறலாம். சோழநாட்டில் தென்னாற்காடு, வடாற் காடு, ஜில்லாக்களில் சிறிது அதிகமாகக் காணப்படுவர். தெற்கே திருநறுங்கொண்டை, சிற்றூமூர், பெருமாண்டூர்,

முதலிய இடங்களும், மேற்கே கச்சியைச்சார்ந்த திருப்பருத்திக்குன்றம், வெண்குளம், மூடுபத்திரை, சீரங்கப்பட்டினம், கனககிரி, ரத்நகிரி முதலியனவும், இவர் வதியும் இடங்கள் ஆம். மைசூர்ப்பக்கத்தும், பம்பாய் இராசதானியிலும், இவர்கள் பெருஞ் செல்வராகத் திகழ்கின்றனர்.

## சமணர்கள் தமிழ்க்குச்செய்த தொண்டு

தென்னுடுபோந்த சமணர், எளிதில் தமது சமயக் கொள்கைகளைத் தமிழ் நாட்டிற் புகுத்தக்கூடவில்லை. அவர்கள் வடமொழியில் வல்லுநர். அம்மொழிப்புலமை மாத்திரம் இருப்பின், தமிழ் நாட்டில் தாம் மேற்கொண்ட சமயப்பணிக்கு அமையாது என்றுகண்டு, தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தனர். மற்றும் சமாதான முறையிலேயே தமது கொள்கைகளைச் சிறிது சிறிதாகப் புகுத்த எண்ணினர். பிராமணர்களுக்கு நேர் விரோதிகளாகலின் தமிழ் மக்களுடன்கூடித் தமிழை வளர்க்கத்தொடங்கினர். வடநாட்டில் வழங்கிய ஆரியக் கொள்கைகள்பல தமிழ் நாட்டிற்பரவின. சமண சமய நீதிகளும் கோட்பாடுகளும் தமிழ்ப் பனுவல்களில் இடங் கொண்டன. அதற்குமுன் தென்றமிழ் நாட்டில் வேலன் வெறியாட்டும், குறிகூறலும், மறியறுத்தலும், சில்லறை தேவதைகள் வழிபாடும் மிகுந்து நின்றன. சமண பௌத்தரின் சேர்க்கையால், மேற்படி கொள்கைகளில் மாறுதல் ஏற்பட்டன. உலக நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை எனப்பாகுபாடுசெய்து கொண்டு, நிலையாமையை வற்புறுத்தி, மக்களைச் சிறு காலையே தமக்குச் செல்வுழிவல்சி, இறுகிறுகத் தோட்கோட்புக்கொள்ளுமாறு நயம்பட உரைத்தனர்.

> ''துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
> மக்கட் பிணத்த சுடுகாடு—பொல்லா
> விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே நலங்கெட்ட
> புல்லறிவாளர் வயிறு''

என்ற நாலடியார்ச் செய்யுளிலிருந்து, ஊன் உட்

கொள்ளுவோரிடம் எத்துணை வெறுப்பு இவர்கள் கொண்டனர் என்பது நன்கு தெளிவாம். பொருளைத்தானும் துய்த்துப்பிறர்க்கும் வழங்காதவன் நிலையை அழகுபெற ஓர் நாலடிப் பாசுரத்திற்காணலாம்.

"வழங்கலும் துய்த்தலும் தேற்ரு விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம்—இல்லத்
துருவுடைக் கன்னியரைப்போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப்படு"

என்பது அச்செய்யுள். பிறவுயிர்க் கிரங்கல் என்னும் கொள்கை பௌத்தர்க்கும் உடம்பாடேனும், அவர்களிற் பலர் மாமிச உணவை உட்கொண்டனராகலின், சமணரும் பிறரும் அவரைப் பழித்துரையாடினர். தாமாகக் கொல்லாமல், தாமே இறந்துபட்டவிலங்குணவை உட்கொள்ளுதல் தவறன்று என்று சிலர் கருதினர். இது பற்றியே திருவள்ளுவர்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

என்றும்

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டாலூன் றருவாரில்"

என்றும் கூறிக் கண்டித்தனர். அவர்கள் திறம்பட அறங்கூறும் தன்மையை,

"பிறர் மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பரேல் யாதும்
அறங்கூற வேண்டா வவர்க்கு"

என்ற அந்நூற் செய்யுட்கொண்டறியலாம்.

பௌத்தத்தைக் காட்டிலும் சமணம் தமிழ் மக்கள் பான்மைக்கேற்றதாயிருந்தது. திராவிடமக்கள் பழைய நாகர் வழியினர் என்றும், மரங்களையும் நாகங்களையும்,

வழிபட்டவர் என்றும், துரானியரின் பண்பாடுகள் சில அவர்மாட்டுக் காணப்படும் என்றும் அறிஞர் கூறுப. சமணரும் இக்கொள்கைகளில் ஈடுபட்டுத் தமிழ்மக்களுடன் ஒன்றுபட்டனர். புத்தரது பாத பீடிகையே வழிபாட்டிற் குரியதாக இருந்ததாகலின், மக்கள் எல்லோரும் அந்த வழிபாட்டின் மேன்மையை உணர்ந்து ஆற்றக்கூடவில்லை. சமணர் வழிபாடு சிக்கலுற்று விளங்கியதாலும், பிராமணர் களின் வேள்விகளை எதிர்ப்பதில் சமணரும், தமிழரும் ஒன்றுபட்டாராதலாலும், சமண சமயம் தமிழ்நாட்டில் வளர்ந்தது. மற்றும் பௌத்தத்திலிருந்ததுபோன்று, பெண்பாலார் துறவு பூணுதல்கூடாது என்ற சட்டம் சமணத்தில் இல்லை. கி. பி. 3-4-ஆம் நூற்றுண்டுகளில் சமணம் அதிகமாக ஓங்கவில்லை. 5-ஆம் நூற்றுண்டின் முடிவில் களப்பிரர் படையெடுப்பு நிகழ்ந்தது. தெற்க ணுள்ள பாண்டிய நாட்டில் அவர்கள் நுழைந்தனர். சிலர் அவரை ஆரியர் என்றும், சிலர் திராவிடர் என்றும் கூறுப. ஆனல் அவர்கள் ஆட்சி தமிழ் மக்களாற் பெரிதும் வெறுக் கப்பட்டதற்குப் பல சான்றுகள் உள்ளன. களப்பிரர் எருமைநாடு அல்லது மைசூர்ப் பகுதியினின்றும் போந்த னர் என்பது சரித்திரம். அவர்கள் தெற்கே போந்தவுடன் சமணத்தைத் தழுவினர். சமணருடன் கூடிக்கொண்டு தமிழர்களின் தெய்வத்தை நிந்திக்கத் தலைப்பட்டனர்.

பிற உயிர்களின் உதிரத்தைச் சிந்தலாகாது என்ற கொள்கை சமணர்களின் அரசியல் ஆதிக்கத்திற்கே இடையூருக விளைந்தது. "ஒருவன் ஒருவனை அடுதலும் தொலைதலும் புதுவதன்றிவ்வுலகத்தியற்கை" என்ருர் ஓர் பழம்புலவர். அரசியற் போராட்டங்களில் உதிரம் சிந்தாமல் வெற்றிகிடைக்காது. ஆகவே கொல்லாமை விரதம் அரசர்க்குப் பயன்படுவதில்லை. நிற்க, சமண சமயம் மைசூர் இராச்சியத்திலும், சோழ, பல்லவ, இரட்ட, ஹொய்சல இராச்சியங்களிலும், சிறந்து விளங்கியது. விஜயநகர் அரசும் சமணர்கட்கு ஆதரவளித்து நின்றது, தீர்த்தங்கரரும், சித்தரும், கோயில்களில் சிலையமைக்கப்

பெற்று வழிபடப்பட்டனர். இவர்கள் தெய்வமில்லை என்று கூறும் சமயிகளேனும், உயிரும், உலக வாழ்வும் நித்தியம் என்று கொண்டவர். கன்மம் அநாதி என்றும், அதற்குட் படுதல் எவர்க்கும் இன்றியமையாதென்றும், கொண்டவர். நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற இவைகளே முத்திக்கு வழி என்ற கொள்கையுடையவர்.

கி.பி. ஆரும்நூற்றாண்டில் தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சி தோன்றிற்று. முதல் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் (கி. பி. 600-625) சமணம் சிறந்து விளங் கியது. இவனது ஆட்சியில், நடுநாட்டில் திருவாமூரில் திருநாவுக்கரசர் தோன்றினர். சமண சமயத்தில் ஈடுபட் டுத் தருமசேனர் எனப் பெயர்கொண்டு விளங்கிய இவர், தம் தமக்கையார் திலகவதியாரின் நன்முயற்சியாலும், சிவபெருமான் திருவருளாலும், சைவ சமயத்தைத் தழு வினர். சைவத் திலகவதியாரின் வேண்டுகோட்கிணங்கிச் சிவபிரான்,

"முன்னமே முனியாகி யெமையடையத் தவமுயன்றான்
அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வன் எனவருளி"

அவர்க்குச் சூலை நோய் உண்டாகுமாறு திருவுளங் கொண்டார். சூலைநோயாற்றுக்கப்பட்டு மிகவும் வருந்திப் பின்னர்த் திருவருளாற் பிழைத்தனர் ஆளுடையரசர். உடனே சைவப்பற்று மிகுந்து பரம சைவராயினர். எண்ணிறந்த பாசுரங்கள் பல தலங்கடோறும்சென்று சிவபிரான்மீதுபாடினர். இவர் பாடிய பாசுரங்கள் தேவாரமெனப் பெயர்பெற்று, நான்கு, ஐந்து, ஆறுவது சைவத் திருமுறைகளாக மிளிர்கின்றன.

இவ்வாறு சமண மதத்தைக் கைவிட்டுச் சைவத்தைத் தழுவவே, சமணர் தமது அரசனை மகேந்திரவர்மன்பால் முறையிட்டனர். அரசன் அப்பர் என்ற திருநாவுக்கரசரை யழைக்க, அவர் அவன்முன் சென்று "நாமார்க்கும் குடி யல்லோம்" எனப்பாடினர். அரசன் அவரை நீற்றறையி

லிட்டும், அரவின் விடமூட்டியும், கடலிற் கல்லேக்கட்டித் தள்ளியும் வருத்திஞன். ஆனுல் அவர் உமையொருபாகன் அருளால் எவ்வித ஊறுபாடுமின்றி யிருந்தனர். இந்நிலே,

"நீற்றறையுந் தண்ணூர் நிலாவறைகன் னீரினின்று
மேற்றரையி னேற்றும் விழுப்புணேயாம்—கூற்றுறழும்
வெங்களிறும் சூழ்வந்து வீழும் விடமமுதாம்
சங்கரன்ருள் சார்வார் தமக்கு"

என்று ஒரு புலவராற் குறிக்கப்பட்டது. சைவத்தின் உயர்வுகண்டு மகேந்திரன் சைவனுகிச் சமணப் பாழிகளே யும் பள்ளிகளேயும் இடித்துச் சைவக் கோயில்களும், குகைக் கோயில்களும் உண்டுபண்ணிஞன்.

இந்நிலேயில் அப்பர் காலத்திருந்தவரும், சைவசமயா சாரியர் நால்வருள் ஒருவருமான திருஞான்சம்பந்தர் நின்ற சீர் நெடுமாறன் என்ற கூன்பாண்டியன் மனேவி அழைப் பின் பேரில் மதுரைக்குச்செல்லப் புறப்பட்டார். அப் பொழுது அவர் சம்பந்தரை நோக்கி, "அமண் கையர் வஞ்சனேக்கோர் அளவில்லே யென்றும், உறுகோள் தீய தென்றும், கூடற்கெழுந்தருளவொண்ணு தென்றும்," கூறித் தடுக்க, ஆளுடைய பிள்ளேயார் "பரசுவது நம்பெருமான் கழல்கள் என்ருற் பழுதணேயாதெனப் பகர்ந்து பரமர் செய்ய, விரைசெய் மலர்த்தாள் போற்றி, வேயுறு தோளிபங்கன்" என்ற பாசுரத்தை அருளிச்செய்த தாகப் பெரிய புராணம் கூறும். பின்னர் சம்பந்தர் மதுரை சென்றதும், பாண்டிமாதேவியார் மங்கையர்க்கரசி யார், அமைச்சர் குலச்சிறையார் என்ற இவர்களால் வர வேற்கப்பட்டதும், சமணர் இப்புகலியர் பெருமான் தங்கி யிருந்த மடத்திற் றீக்கொளுவியதும், அப்பொழுது சம்பந் தர், "தியயராம் அமணர் கொளுவும்எரி, பையவேசென்று" பாண்டியனேப் பற்றுமாறு ஏவியதும், பாண்டியற்கிரு புறத்தும் பாலருவாயரும், சமணரும் வெப்பு நோயைத் தீர்க்க முயன்றதும், சம்பந்தரால் அந்நோய் தீர்ந்ததும், சமணருக்கும் காழிக் கவுணியர்பிரானுக்கும், அனல்வாதம்,

புனல்வாதம் நிகழ்ந்ததும், முடிவிற் சமணர் தோற்றதும்,'' ஆய வரலாறுகள் யாவும் சேக்கிழார்பெருமான் இயற்றிய திருத்தொண்டர்புராணம், திருஞானசம்பந்தர் புராணத்துக் காணலாம். தோல்வியுற்ற சமணர் சிலர் சைவ ராயினர். ஆனல் எண்ணுயிரம் சமணர் கழுவேறி மடிந் தனர்.

இவ்வாறு சைவம் தழைக்கச் சமணத்திற்கு மன்னரின் ஆதரவும் குறைந்தது. தென்றமிழ் நாட்டில் சமண சமயம் தேயத் தொடங்கியது. வைணவமும் சிறந்து ஓங்கிய நிலையில், அவைதீகமான சமண சமயம் நிலைகுலைய நேர்ந்தது. சமணரிற் பலர் மைசூர் அருகில் உள்ள சிரவணவேள்குளத் திற்குச் சென்றனர். அங்கே அவர்கட்கு ஹொய்சள மன்னர் முதலியோருடைய ஆதரவு ஏற்பட்டது. எனவே மகம்மதியர் கையிற் கர்நாடகம் சிக்கும் வரையில், சமணம் சிறிது வழங்கி நின்றது. தற்காலத்தும் சமணர் உளர். ஆனல் அவரிற் பெரும்பாலோர் ஏழை விவசாயிகளாக உள்ளனர். கல்வி முன்னேற்றம் அவர்கள்பாலில்லை. திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூக்காவில் இப்பொழுதுள்ள வேளாளர் எருத்துக்காட்டு வேளாளர் எனத் தம்மைக் கூறிக் கொள்கின்றனர். அவர்கள் சமணராக விருந்து சைவராக ஆயினர் என்று கூறுவர். இப்பொழுதும் ஜயங்கொண்ட சோழபுரத்தில் இரண்டு பெரிய சமணச் சிலைகள் தெருச் சந்தியிற் காணப்படும். அவைகட்குக் கட்டிடம் இல்லை. ஆண்டு தோறும் இவ்வேளாண் மக்கள் இந்தச் சிலைகளை ஆதரித்து உணவு முதலியன படைக்கின்றனர்.

இப்பொழுது தென்னுற்காடு ஜில்லா திண்டிவனம் தாலூக்காவில் சமணர் பலர் உள்ளனர். சித்தாமூர், வீரனூர், பெருமாந்தூர், ஆலக்கிராமம், வேலூர், தாயனூர் முதலிய ஊர்களில் இவர்கள் மிகவும் அதிகம். இவர்கள் எல்லாம் திகம்பரச் சமணர். அவர்களுடைய கோயில்கள் பெரும்பாலும் இந்துக்கள் கோயில்கள் போன்றே உள்ளன. அக்கோயில்களில் தீர்த்தங்கரரின் உருவங்கள்

உள்ளன. பலர் சிவராத்திரி, தீபாவளி, பொங்கல் முதலிய இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். சமணரில் நான்கு பிரிவுகளுண்டு. சாதாரணக் குடி மக்களும், குருக்கள்மாரும். குருக்கள்மாரில் பலர் அர்ச்சகர்கள். இந்த அர்ச்சகர்கள் பெருங்குருமாராக ஆதல் கூடும். அப்பொழுது அவர் அனுவிர்த்தி எனப்படுவர். இவர்கள் சில நிபந்தனைகட்குட்பட்டு மணம் புரிதல் கூடும். இவர்களே நாளடைவில் நிர்வாணிகளாக ஆகலாம். சமணத் துறவி மகளிர் ஆரியாங்கனைகள் எனப்படுவர்.

உயிர்களிடம் பரம கருணை பூண்ட இச்சமணரின் சீவ காருண்யக் கொள்கைகள் பல தமிழ் நூல்களில் இடங் கொண்டன. இக்கொள்கைகள் பரவவே வேள்விகளும் உயிர்க் கொலைகளும் குறைந்தன. வேள்விகளில், உயிர் கட்குப் பிரதியாக மாவினால் இயன்ற விலங்குகளைப் பயன் படுத்தினர். ஆரியப் பிராமணரிடம் உருவ வழிபாடு கிடை யாது. உருவ வழிபாடும், உருவச் சிலைகளும், குகைக் கோயில்களும் சமணர்களின் கூட்டுறவால் தமிழ் நாட்டில் ஏற்பட்டவைகள். கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன் தமிழ் நாட்டிற் கெட்டிக் கோயில்கள் இல்லை. சில கோயில்கள் அழியும் மாலைத்தாகிய பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டனவாகலின் அவைகள் இடிந்து மறைந்தன போலும். கருங்கல்லும் பாறையுங்கொண்டு சிறந்த ஓவியத் திறன் அமைய முதன் முதல் தென்றமிழ் நாட்டிற் கோயிலமைத்தவர்கள் சமண மன்னர்களேயாவர். சமணர் தமது தீர்த்தங்கரர்களுக்குச் சிலையமைத்து வழி பட்டனர். இவ்வழிபாடு மனங்கொள்ளவே தமிழ் மக்களும் அதனைப் பின்பற்றினர்.

எவ்வுயிரிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் சமணரிடம் இருந்த சிறப்பான கொள்கை. சாதி, சமய வேறுபாடின்றி எல்லோரையும் அம்மதம் ஏற்றுக்கொண்டது. ஆண், பெண் எல்லோர்க்கும் முத்தி உண்டென்பது அவர்களின் கொள்கை. தாழ்ந்தோர் என்றும் தீண்டாதாரென்றும் அம்

மதம் ஒருவரையும் விலக்கவில்லை. மிலேச்சர், தீண்டாதவர் என்ற வகுப்பிலும் சமணர் மணம் செய்து கொண்டதாக வரலாறுண்டு.

சமணர் தமிழ் நாட்டில் தமிழருடன் நெடுங்காலம் பழகித் தமிழ் நூல்களைக் கற்றுப் பல நீதி நூல்களும் காப்பியங்களும் தமிழிலேயே இயற்றினர். சக்கிரவர்த்திநயினார் கருத்துப்படிச் சிலப்பதிகாரம், சிந்தாமணி, தொல்காப்பியம், யாப்பருங்கலம், திருக்குறள், நாலடியார், நன்னூல் என்ற எல்லாத் தமிழ் நூல்களும் சமணர் இயற்றியனவாம். அவர் தமது நீலகேசிப் பதிப்புரையில் சமணரில்லாவிட்டால் பெருந்தமிழ் இலக்கண இலக்கியங்களே இருந்திருக்க முடியாது எனக் கூறினர். அவர் சமண சமயி ஆகலின், நிறைந்த பற்றுக் காரணமாக அவ்வாறு கூறுவதியல்பே. எனினும் காய்தல் உவத்தலகற்றிச் சமணர் தமிழ்க்குச் செய்த நூற்றொண்டுகள் யாவை என்று ஆராய்வோம்.

## தொல்காப்பியனார் ஜைநரா?

தொல்காப்பியரை சமணரெனக் கூறுவர் சிலர். பனம்பாரனார் தமது தொல்காப்பியப் பாயிரத்தில் அதன் ஆசிரியரைப் 'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்று கூறினர். உரையாசிரியர் இளம்பூரணர், 'படிமையோன்' என்ற சொற்குத் 'தவ ஒழுக்கத்தினை உடையோன்' என்று எழுதினர். ஸிங்கிளேர் (Sinclair) என்ற ஆசிரியர் தமது 'சமண சமயத்தின் உள்ளம்' (The Heart of Jainism) என்ற நூலிற் படிமையோன் என்பதற்குத் தவவொழுக்க முதியோன் எனப் பொருள் கொண்டனர். இக்கொள்கை செந்தமிழ்ப் பத்திரிகையில் அறிஞரால் மறுக்கப்பட்டது. சமணர் நிர்வாணம் எய்துதற்குரிய வழியில் 14 நிலைகள் உள்ளனவென்றும், அதில் முதலைந்து நிலைகள் இல்லறத்தார், துறவறத்தார் என்ற இருவர்க்கும் பொதுவென்றும், ஏனைய நிலைகள் துறவறத்தார்க்கே சிறப்பாக உரியனவென்றும், துறவறத்தார் தீர்த்தங்கரரிடமும், ஆசிரியரிட

மும், உண்மை நூல்களினிடத்தும், அசையாத பத்தியுடையவராயிருத்தல் வேண்டுமென்றும், இல்லறத்தோர் பதினொரு ஒழுக்கங்களை மேற்கொள்வரென்றும், இவ்வொழுக்கங்கள் படிமா எனப்படும் என்றும், கருதுவர். எனவே படிமை என்பது சமண சமயத்திற்கு மட்டும் உரிய பதமன்று. மற்றும் தொல்காப்பியர் யாமதங்கியின் புதல்வர் என்ப. அவரை 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பர்,' தொல்காப்பியத்திற்குப் பாயிரம் வகுத்த பனம்பாரனார். ஐந்திரம் வைதிக வழிவந்த இலக்கணம். வேதத்தைப் பிரமாணமாகக்கொள்வது. சமணர்கள் அதனை ஒப்புக்கொள்ள மறுப்பர். செப்பரும் சீர் சால் அப்பமூர்த்திகளும் தமது தேவாரத்தில் "இந்திரத்தை யினிதாக வீந்தார் போலும்" என்று சிவபெருமானைப் புகழ்ந்துபாடுவர். நிற்க, சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் மாங்காட்டு மறையோன்,

"புண்ணிய சரவணம் பொருந்து விராயின்
விண்ணவர் கோமான் விழு நூ லெய்துவிர்"

என்றுகூற, அச்சொற்களைக் கேட்கப்பொருத கவுந்தியடிகள், "கப்பத்திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட்டியற்கை விளங்கக்காணாய்" என்றுகூறி ஐந்திர வியாகரணத்தை இழித்துக் கூறியிருக்கிறார். இங்கே அடியார்க்கு நல்லார் "தேவர்களினும் வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன் தோற்றுவித்த வியாகரணத்தின் எம்முடைய அருககுமரன் அருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின்றிலையோ; அஃதுளதா நின் புண்ணிய சரவணம் பொருந்துதல் வேண்டா" என உரை எழுதியிருத்தலால், வேதாங்கமாயுள்ள, ஐந்திர வியாகரணப் பயிற்சி அவைதீகரால் அநாதரிக்கப்பட்டிருந்ததென நன்குணரலாம். எனவே ஐந்திரப் பயிற்சிபெற்ற தொல்காப்பியரை சமணர் என்று கூறற்கில்லை" என்பர் காலஞ்சென்ற புலவர் பெருமான் திருநாராயணயங்கார் அவர்கள், மற்றும்,

"ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே
யிரண்டறிவதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்ற மரபியற் சூத்திரங் கொண்டு புல், மரங்கட்கும் உயிருண்டென்று கொள்ளும் சமணர் தொல்காப்பியர் என்ப. ஆயினும் இக்கொள்கை சமணரால் விரித்துரைக் கப்பட்டதன்றிப் பிறசமயங்களில் இல்லையென்று கோடற் கில்லை.

இனித் தொல்காப்பியர் சமயத்தைக் குறித்தெழுதவந்த காலஞ்சென்ற மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள், சொல்லைத் தெய்வம் என்று கொண்டதாலும், தொல்காப்பியம் அகத்திணையியலுட் கருப்பொருள் கூறிய இடத்து அவ்வந்நிலத்துக்கு வழிபடுதெய்வம் கூறுதலானும், "மேவிய சிறப்பினேனோர் படிமைய" எனத்தொடங்கும் அகத்திணையியற் சூத்திரத்தில் (30) தெய்வங்கட்கு மக்கள் படிமையமைத்து வழிபாடு செய்தனர் எனக் கூறுதல் கொண்டும், "தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்' என்ற புறத்திணையியற் சூத்திரத்தில் (21) பல பிறவிதோறும் ஒருயிர் உடலிற் புகுந்து வருமென்பதை ஏற்றுக்கொண்டிருத்தலானும், "மேலோர் மூவர்க்கும்" என்ற கற்பியற் சூத்திரத்தினால், இவர் நான்கு குலம் உடன்பட்டது கொண்டும், "நூலேகரகம்" என்ற மரபியற் சூத்திரத்தால் இவர் உபநயனச்சடங்கை உடன்பட்டது கொண்டும், "அளவிற் கோடலந்தணர் மறைத்தே" (தொல். எழுத். பிறப். 20); "மறையென மொழிதல் மறையோராறே" (செய்யுளி. 180); "மறையோர் தேஎத்த மன்ற லெட்டனுள்" (களவியல். 1) "மறை மொழி கிளந்த மந்திரத்தான" (செய்யுள். 166); "அறு வகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" (புறத். 20) எனக்

கூறுதலின், இவர் வேதத்தினேயும், அஃது அந்தணர்கள் நிலெபெறுதலேயும், அது கூறிய வேள்வி, மந்திரம், ஸ்வரம் முதலியவற்றையும்[1] ஒப்புக்கொள்வதனுலும், "மூவா முதலா வுலகம்" என்றுகூறி உலகம் நித்தியமென்று உடன்பட்ட சமண சமயத்தவர் தொல்காப்பியரல்லர்.

### பழமொழி நானூறு

இந்நூலின் தற்சிறப்புப்பாயிரத்தால் இதன் ஆசிரியர் முன்றுறையரையர் என்பதும், அவர் சமணப்பற்றுள்ளவர் என்பதும் தெரியலாம். அது பின்வருமாறு,

> "பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
> பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா
> முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
> இன்றுறை வெண்பா விவை"

இதன் ஆசிரியர் அரசராயும் கவியாகவும் விளங்கினவர் என்ப. ஒவ்வொரு செய்யுளினிறுதியிலும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டுள்ளமையின், இந்நூல் இப்பெயர் பெற்றது. வெண்பாவினிறுதியில் பழமொழிகாணப்படும். முன்னிரண்டடிகள் அதனே விளக்கும். 'ஆயிரங் காக்கைக் கோர்கல்', 'நாய்காணிற் கற்காணுவாறு', 'நிறைகுடம் நீர் தளும்பலில்,' முதலியன காண்க. இதிற் சில குறுநில மன்னர்களின் வரலாறுகளும், அரசர் சரிதமும் காணலாம். திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலிருந்து பொருள்களே எடுத்திருப்பதால், பதினெண் கீழ்க்கணக்கில் இறுதி நூலாக இதனேக் கருத இடமுண்டு.

### சிலப்பதிகாரம்

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றும், கோவலன் கண்ணகியின் சரிதத்தைக் கூறுவதுமான இந்நூல் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. இவர்க்கு அடிகள் என்று பெயர் போந்திருத்தலேயும், பதிகத்தில் 'குணவாயிற்

---

1. தமிழ் வரலாறு. ரா. இராகவையங்கார். பக். 275-278.

கோட்டத்து' என்பதிற் **கோட்டம்** என்றதற்கு அருகன் கோயில் என்று அடியார்க்கு நல்லார் பொருள் செய்திருத்தலையும், இந்நூலிற் கவுந்தியடிகள் வரலாறு கூறுமிடத்தும், பிற இடங்களிலும், அருக சமயக் கொள்கையை இவர் மிகுத்துக் கூறியிருத்தலையும் கொண்டு, இவரது சமயம் சமணம் என்று சிலர் ஐயுறுவர். ஆயினும் கோட்டம் என்பது, எல்லாக் கோயில்கட்கும் பொதுப் பெயரேயன்றி அருகன் கோயிலுக்கு மட்டும் உள்ள பெயரன்று. அரும்பதவுரை யாசிரியர் கோட்டத்தைக் கோயில் என்றனர்; அருகன் கோயில் எனக் கூறவில்லை. இளங்கோவடிகள் ஒவ்வொரு மதத்தைப்பற்றிக் கூறுங்கால் அவ்வம் மதத்தைச் சார்ந்தவர் எனப் படிப்போர் நினைக்கும்படி கூறும் ஆற்றல் மிக்கவர்.

இந்நூல், நாடுகாண்காதை வரி 156-இலிருந்து தொடங்கும் பகுதியில், அருக சாரணரைப்பற்றிய குறிப்புக் காணலாம். ஊழ் வயத்தான் செல்வமனைத்தையுமிழந்து, மானமுமிழந்த நிலையில் தமது நகராகிய பூம்புகாரில் வதிய மனங்கொள்ளாராய்க் கோவலனும், அவனது வாழ்க்கைத் துணையாம், மாசில் கற்பினள் கண்ணகியும், மதுரை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் வழியிற் கவுந்தி என்னும் அருகத் தவசியைக் கண்ணுற்று, அவர் வணங்கத் தாமும் இந்தச் சாரணரை வணங்கினர். இச்சாரணர் தல சாரணர், சல சாரணர், பவ சாரணர் முதலாக எண் வகைப்படுவர். இவ்விருவராகச் சென்று அறமுரைத்தல் அவர்கட்கியல்பென்பர்.

> '' ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
> யிட்ட வித்தின் எதிர்ந்து வந்தெய்தி
> யொட்டுங் காலை யொழிக்கவும் ஒண்ணு
> கடுங்கா னடுவெளி யிடுஞ்சுட ரென்ன
> வொருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள் ''

என்ற இடத்தில், சமண சமயக் கருத்தை இளங்கோவடிகள் குறித்தல் காணலாம். மற்றும் அருகனது

நாமாவளி இவண் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:-

"அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
இறைவன் குரவன் இயல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கர னீசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
யோதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோர்."

இதில் பகவன், சிவகதிநாயகன், பரமன், சித்தன், இறைவன், சங்கரன், ஈசன், சயம்பு, எண்குணன் முதலிய பல பெயர்கள் சிவபிரான் பெயர்களாகக் காணலாம். உண்மையில் பௌத்த, சமண சமயங்கள் இந்து மதத்தினின்று கிளைத்தவைகளே என்பர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு தோத்திரம் செய்த சாரணரின் வாய்மொழி கேட்டுக் கவுந்தியடிகள், கை தலைமேற்கொண்டு,

"ஒருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா
ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா என்கண்
அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறாஅ

திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது.''
(சிலப். நாடுகாண். 194—207)

என்று தமது மனக் கருத்தை வெளியிட்டனர். இவ்வரிகளிலிருந்து காம வெகுளி மயக்கத்தைக் கெடுத்தவன் அருகதேவன் என்றும், அவன் ஓதியது ஞான பாதமாகிய திருமொழி என்றும், அவன் காமனை வென்றவன் என்றும், ஆயிரம் நாமத்தண்ணல் என்றும், ஐந்து புலன்களை வென்றவன் என்றும், அருளால் அறத்தைப் பூண்டோன் என்றும், அருகர்க்கு அறத்தை அருள்வோன் என்றும், அவன் மலர்மிசை நடந்தோன் என்றும், ஈறிலின்பமாகிய அநந்தசுகத்தை உடையவன் அவன் என்றும், கூறியது காண்க.

அதேகாதை 223-ஆம் வரியில், ''நோற்றுணல்யாக்கை நொசிதவத்தீர்'' என்ற வரியைக் காணலாம். அங்கே உரைகாரர் அடியார்க்கு நல்லார், ''உவா முதலிய விரத நாட்களில் பட்டினிவிட்டுண்டலான் மெலிந்தயாக்கையர்'' என்று பொருள்கூறினர். சீவகசிந்தாமணி, 1543-ஆம் செய்யுளில் இந்த விரதம் பின்வருமாறு குறிக்கப் பட்டது :—

ஒரு அறமகன் தானம், சீலம், தவம், இறைவர் பூசனை, என்று கூறப்படும் நான்கு மனைவியரை மணந்து நல்வினை என்ற மகனைப் பெறுகின்றான். இம்மகன்றான் மேற்கதியிற் கொண்டு செலுத்துமுரவோன், இந்த நல்மகவைப் பெற்றவன்றான் பெற்றவனாகக் கருதப்படுவான். படநாகம் தோலுரித்தாற்போலே அகமும் புறமும் தூயவாகத் துறந்து நோற்றுத் தம் வயத்தனவாக ஐம்பொறியையும் வென்றார்க்குவந்தீதல் தானம், தேன் முதலியவற்றைத் திடனாகத் துறத்தல் சீலம், அறமீண்டிய ஆகமத்தைக் கரைகண்ட இருடிகள், தாதை பாதத்தே நாடோறும், பூ முதலியவற்றாற் புனைதலையும், இவையொழிந்த பிறவற்றாற் புனைதலையும் பூசனையென்ப. மற்றும் இரண்டு உவா

விலும், அட்டமியிலும் பட்டினிவிட்டு ஓவாது ஒழுக்கங் காத்தலைக் கெடாத தவம் என்பர்.

மேற்கூறிய நால்வரும் மனைவியராகவும், இவனைமகனாகவு முடையார் சுவர்க்கத்தேபோய் இந்திரராய் அவ்விடத்தை யாண்டு பின்பு சக்கரவர்த்தியாய்ப் பூமி முழுவதையும் ஆண்டு வாமனுக்குப் பூசனைகளை நடத்தி அதீதாவத்தையை விளைவித்துப் பின்பு வீடுபெறுதல் உண்மையென்று, அருகாகமங்கள் கூறும்.

இன்பக் கதிக்குச் செல்லும் கதவைத்திறக்கும் தாளாகிய பாதத்தையுடைய மூர்த்தி, சந்திராதித்தம், நித்யவிநோதம், சகலபாசனம் என்ற முக்குடைக்கீழ் மாலேகாண். அவனைத் தேருதார்க்கும் பொருள் பத்தெட்டுக்கூட இல்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் கிட்டாதவாறுபோல நல்வினைகூடா.

வேற்றூர்க்குச் செல்லின் பொதிசோறு கைக்கொண்டு சேறல்மரபு. கூற்றம் உயிர் கவரும் சமயத்தை எதிர் நோக்கிநின்று பின்னர், நுந்தமரில்லாத புதிய ஊர்க்கு உம்மையீர்த்துச் செல்லும்போது, வழியில் உண்ணும் ஊணுக்குப் பொதிசோறு இப்பொழுதே தேடிக்கொள்ளா விடில் பின்பு விளைவது தீராத வருத்தமே என்று சிந்தாமணியிற் கூறப்படுதல்காண்க. காமத்தாலும், கள்ளாலும், ஊனாலும் விளைவது தீமையே. ஆகலின் இவை மூன்றை யும் கைவிடுதலே நன்னெறி. மேலும் இவ்விலம்பகத்தில், "கையாற்பொதித்துணையே காட்ட" என்ற ஓரருமைச்செய் யுளில், தானும் உண்ணுது, பிறர்க்கும் ஈயாது பொருளைச் சேமிக்கும் உலோபியின் கதி நன்கு கூறப்பட்டுள்ளது. ஏராளமான பொருளை யீட்டினன் ஒருவன் தானும் துய்த் திலன், அறத்திற்கும் பயன்படுத்தினனில்லை. அவனது வாழ்நாளிறுதி யெய்திற்று, நோய்தலைக்கொண்டது. சிலேட்டுமமிகுந்து, வாயடைத்துவிட்டது. அப்பொழுது தான் பிறரறியாதபடி புதைத்துவைத்திருந்த பொற் பொதியைக் கையால் சாடைசெய்து காட்டுகின்றான்.

அவன் மனைவிக்கு அவன் கருத்துப் புலப்படவில்லை. அவள் அவன் கையாற் சைகை செய்வது விளாம்பழம் எனக் கருதுகின்றாள். அம்மட்டோ அக்கனிக்கு அது காலம் அன்றே என வருந்துகின்றாள். இந்த இரங்கத் தக்க நிலையினின்றும் ஒருவன் விடுதலையடைதல் வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது. இதே கருத்துத்தான் நாலடியாரில் "சிறு காலையே தமக்குச் செல்வுழி வல்சி, யிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார், இறுகிறுகிப் பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும், பொன்னும் புளிவிளங்காயாம்" என்ற செய்யுளில் கூறப் பட்டது.

**பெருங் கதை**

இஃது ஒன்பான் சுவையும் ஒருங்கே அமையப்பெற்றுச் சொற் செறிவு பொருட்செறிவுகள் அமையக் கொங்கு வேளிர் என்ற புலவர் பெருமானால் இயற்றப்பட்ட ஒரு சிறந்த தமிழ்க்காப்பியம். பைசாச மொழியிற் குணாட்டி யர் என்பவரால் இயற்றப்பட்ட பிருகத்கதை வடமொழி யில் மொழிபெயர்க்கப்பட, அதனைத் தமிழில் மொழி பெயர்த்தனர் இவ்வாசிரியர் என்ப. குணாட்டியர் நூல் சைவப்போக்கில் அமைந்தது. ஆனால் இம்மொழிபெயர்ப் பைச் செய்தவர் சமணர். எனவே பல சமண வழக்குகளை இந்நூலில் ஆங்காங்குக் காணலாம். உதாரணமாகக் காதிகர்மம் ஆன்மாவின் அறிவை மறைக்கும் தீவினை; கருமந்தீர்ந்த உயிர் மேலே செல்லல்; வினைதீருயிரின் மிதந்தது (பெருங். உஞ்சைக். 40, 186); அல்லூண்நீத்தல்; பஞ்சமந்திரம்; அஞ்சாதைம்பதம் நினைமதிநீ (பெருங். நரவாண. 3, 134); அணித்தகுபள்ளி அசோகத்தண்ணி ழல் (பெருங். இலாவாண. 31, 38); தாமமுக்குடை தாமுறைகவிப்ப (பெருங். இலாவாண. 6, 54); "மூவகை யோகம் (இலாவாண. 186) முதலியன.

**கதை வரலாறு**

இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம்,

மகதகாண்டம், வத்தவகாண்டம், நரவாணகாண்டம் என்ற ஐந்து பகுதிகளையுடையது. கௌசாம்பி நகரத்துச் சதானிகன் மனைவி மிருகாவதி சிம்புட்பறவையாற் கவரப்பட்டு விபுலகிரியில் வைக்கப்பட்டதும், உதயணனை அவள் கருவுயிர்த்ததும், உதயணன் தாய்ப்பாட்டனால் வளர்க்கப் பெற்று யூகியை நண்பனாகக்கொண்டு பல கலைகளைக் கற்றுத் தேர்ந்ததும், யாழிசையால் ஓர் யானையை வணக்கியதும், பின்னர் அவ்யானையைப் பிரிந்து காட்டிலலைந்ததும், பிரச்சோதனன் என்னும் மன்னனால் உச்சைனி நகரத்திற் சிறைவைக்கப்பட்டதும், அவனை விடுவிக்குமாறு யூகி நளகிரியென்னும் யானையைக்கொண்டு நகரழியும்படி செய்து தான் இறந்ததாக வதந்தி பரப்பியதும், யூகி உதவியால் உதயணன் சிறை மீண்டதும், அரசன் மகள் வாசவதத்தைக்கு யாழ் பயில்வித்ததும், நீர் விழாவிற்குச் சென்று வாசவதத்தையைக் கவர்ந்து சென்றதும், சயந்தி நகரை யடைந்ததும், வாசவதத்தையை மணந்ததும், இலாவாண நகர்ப்புறத்து ஓர் சோலையில் உதயணனை வைத்துப் பின்னர் சாங்கியத்தாயின் உதவியைக்கொண்டு வாசவதத்தையை ஓர் சுருங்கை வழியே வரச்செய்து சண்பை நகரில் மறைந்திருந்ததும், வாசவதத்தை தங்கியிருந்த அரண்மனை எரிவாய்ப்படத் தன் ஆருயிர் மனைவி இறந்தாள் எனக் கவன்று, இறந்தவரைப் பிழைப்பிக்கும் ஒருவர் இராசகிரியில் உள்ளார் எனக் கேள்வியுற்று அங்கே சென்றதும், அங்கே பதுமாபதியை மணந்ததும், பின்னர்க் கௌசாம்பியிலிருந்து அரசாட்சி செய்ததும், பந்தாட்டத்திற் சிறந்து விளங்கிய மானனீகையையும், இராச முனிவரது மகளாகிய விரிசிகை யென்பவளையும் மணம் புரிந்ததும், வாசவதத்தை நரவாணனைப் பெற்றதும், நரவாணதத்தன் மதனமஞ்சிகையை மணந்ததும், மதனமஞ்சிகையை ஓர் வித்தியாதரன் கவர்ந்ததும், நரவாணன் தன் மந்திர வலியால் விண்வழிச் சென்று அவ்வித்தியாதரனை வென்று தன் மனைவியை மீட்டு வித்தியாதரச் சக்கரவர்த்தியாய் வீற்றிருந்ததும், முடிவாகப் பதுமாபதியின் புதல்வனாகிய கோமுகனுக்குத் தன் அரசாட்சியை அளித்துவிட்டு

உதயணன் துறவு பூண்டதும் இந்நூலில் விரிவாகக் கூறப் பட்டுள்ளன.

இந்நூலால் தெய்வம் பேணல், பெரியோரைப் பேணல், ஊழ்வினையின் வன்மை, கல்வியின் பெருமை, நட்பின் திறம், காலம் இடமறிந்து செயலாற்றல், பெண் கல்விச் சிறப்பு, செய்ந்நன்றியறிதல், ஆசிரியர் மாணுக்கரின் இலக் கணங்கள், மந்திரிகளின் இயல்பு, துறந்தோர் பெருமை முதலிய பல குறிப்புக்கள் உவமை முகத்தானும் பிற வகை யிலும் நன்கு கூறப்பட்டுள்ளன. மற்றும் இந்நூலிற் கூறப் படாத பொருள்கள் இல்லையென்றே கூறலாம். அரசியல் முறைகளும் சமூகப் பழக்க வழக்கங்களும் இந்நூலில் ஆங்காங்கே காணலாம். கருத்தைக் கவரும் பல வருணனை களும், உவமைகளும், சொல்லணி, பொருளணிகளும் இந் நூலில் நிறைந்துள்ளன.

இந்நூலில் உள்ள பாக்கள் யாவும் நிலைமண்டில வாசிரி யப் பாக்கள். இந்நூல் தொடர்நிலைச் செய்யுளின் இலக் கணமாகிய அம்மை முதலிய எட்டு வனப்பினுள் இயைபு என்பதன்பாற்படும். இந்நூற் கதை தென் மொழியில் திரு மங்கையாழ்வாராலும் சீத்தலைச் சாத்தனாராலும் எடுத் தாளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் உரைப் பாயிரத்துள் அடியார்க்குநல்லார் இவ்வுதயணன் கதையை,

"இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச் சங் கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்திருந்த அகத் தியனார் முதலிய சான்றோராற் செய்யப்பட்ட கலியும் குருகும் முதலியவற்றை ஆராய்ந்து செய்த உதயணன் கதை" என்று குறிப்பிட்டதனால் இந்நூலின் பெருமை விளங்கும். நூலாசிரியரின் ஊர் கொங்கு நாட்டு விசய மங் கலம் என்பர். பேராசிரியர் முதலியோருடைய உரைகளில் இந்நூற் பகுதிகள் எடுத்தாளப்பட்டிருப்பதால் இந்நூலா சிரியர் அவர்க்கு முன்னிருந்தவர் எனத் தெரிகின்றது.

**காலம்**

கங்க குலத்து மன்னர்கள் சமண மதத்தைப் பெரிதும் ஆதரித்தவர்கள். அதில் துர்விநீதன் என்ற மன்னன் கி. பி. 550-இலிருந்து 600-வரை அரசு புரிந்தான். சப்தாவ தாரம் என்னும் நூலை இயற்றிய பூச்சியபாதர் அவனது குரு. பைசாச மொழியில் இருந்த பிருகத் கதையை வட மொழியில் துர்விநீதன் மொழிபெயர்த்ததாக வரலா றுண்டு.[1] எட்டாம் நூற்றாண்டில் க்ஷேமேந்திரர், சோம தேவர் என்ற ஆசிரியர்களும், பிருகத் கதையை வடமொழி யில் மொழிபெயர்த்தனர் என்றும், கொங்குவேளிர் மொழி பெயர்ப்பு 7-ஆம் நூற்றாண்டிலிருந்த துர்விநீதன் மொழி பெயர்ப்பை ஒட்டியதென்றும் கூறலாம். எனவே பெருங் கதை கி. பி. 7-ஆம் நூற்றாண்டினதாகக் கூறுவர் அறிஞர். குணாட்டியர் கி. பி. 113-இல் இருந்த சாதவாகன அரசன் காலத்தவர் என்று டாக்டர் பூலர் (Buhler) எழுதியுள்ளார். ஆகவே இந்நூல் இரண்டாம் நூற்றாண்டினது என்று எழுதுவர். K. C. வீரராகவையர்.

இனி, காலஞ்சென்ற பி. தி. சீநிவாசய்யங்கார் தமது பல்லவ சரிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார். "தென் னாட்டிற்குக் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்குமுன் வந்த வர்களாகிய சமணர்கள் மலைக் குகைகளில் வசித்தனர். ஆனைமலை, சிற்றண்ணல்வாயில் என்ற இந்த இடங்களில் உள்ள சல்லேகனப் படுக்கைகளே இதற்குப் போதிய சான் றுகளாகும். நாளடைவில் அரசர் ஆதரவு இவர்கட்கேற் படவே, சமணப் பள்ளிகளும், சினகரங்களும் அதிகமாயின. சமணர் முன்னரே வடமொழியில் வல்லவர்கள். இப்பொ ழுது தமிழும் கற்றுத்தேர்ந்து நூல்களும் இயற்றத்தொடங் கினர். ஆகவே வடமொழிக் கலப்புத் தமிழுக்கேற்பட்டது. மேலும் கி. பி. 470-ஆம் ஆண்டில் விசயநந்தி என்பான் மதுரைத்தமிழ்ச் சங்கத்திற்கு எதிராக ஓர் தமிழ்ச் சங்கம்

---

1. தலைக்காட்டுக் கங்கமன்னர்கள் M. V. கிருஷ்ணராவ். பக். 44. The Gangas of Talikad.

நிறுவியதாகக் கதையுண்டு. இப்பொழுது எழுதப்பட்டவைகள் தாம் சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி பெருங்கதை முதலியன" என்பர். ஆயினும் கி.பி. 4, 5-நூற்றாண்டுகளில் சமண சமயத்துக்கு அதிகச் செல்வாக்கில்லை. களப்பிரர்கள் சமணர்களேனும், அவர்கள் இலக்கண இலக்கியங்களை ஆதரித்துக் கல்வியை வளர்த்தவராக வரலாறு இன்றாகலின், பெருங்கதை போன்ற அரிய நூல்கள் அக்காலத்துத் தோன்றற்கில்லை. பல்லவ மகேந்திரவன்மன் சைவனாக மாறியதற்கு முன்பு இந்நூல் பல்லவ அரசரின் ஆதரவு பெற்று இயற்றப்பெற்றிருத்தல் கூடும். மற்றும் கொங்கு வேளிர் தென்றமிழ் நாட்டு விசய மங்கலத்தார். ஆகலின் சமணர் தென்னாட்டில் வந்து நிலைப்பதற்குச் சில ஆண்டுகளேனும் சென்றிருத்தல் வேண்டும். ஆகவே கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் எழுந்ததாக இந்நூலைக்கொள்ளலாம். இந்நூலாசிரியர் சமணப் பற்றுள்ளவர் என்பதை இந்நூல் இலாவாண காண்டம் 6-ஆம் பகுதியிற்கண்ட, பின்வரும் வரிகள் கொண்டுணரலாம் :—

" அழகுபடப் புனைந்த வயங்குமணித் தவிசின்மிசை
நிறைகதிர் வெண்மதி நிலாவொளி விரிந்து
முறையின் மூன்றுட னடுக்கின போலத்
தாம முக்குடை தாமுறை கவிப்ப
வுலக வெள்ளத் தாழும் பல்லுயிர்க்
கலகையாகிய வருந்தவக் கிழவனை
யிருக்கை யியற்றிய திருத்தகு செல்வத்
தாரணங்காகிய வணிகிளர் வனப்பிற்
பூரணம் பொலிமை புகழ்ந்து மீக்கூறித்
திருவணி யடக்கிய செம்பொற் செப்பி
னருமணி சுடரு மராஅந் தாண
முரிமைச் சுற்றமொ டொருங்குடன் துவன்றி "

என்றது காண்க.

இந்நூலாசிரியர் சங்கச்சான்றோரது துங்கமார் பனுவல்களிலும், தம் காலத்து வழங்கிய பிறநூல்களிலும் நன்கு பயின்றவர் என்பது, அவர் தமது நூலில் ஆங்காங்கே

எடுத்தாளும் சொற்றொடர்களைக் கொண்டும், அமைக்கும் அந்நூற் கருத்துக்களைக் கொண்டும் தெள்ளிதின் உணரலாகும்.

" பைசொரி பவழம் போலப்படி தாழ்
கைசொரி யுதிரம் கான்றுவந் திகழ்தர "
என்பது (பெருங். 1, 53, 27, 28)

" பவளம் சொரிதரு பைபோல் " (களவழி.)

" பொன்று வியற்கைப் புகழது " (பெருங். 2, 8, 10)

" ஒன்றாவுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில் " (திருக்குறள். 233)

" கட்டழற்புகூஉம் சுட்டுறுகோல்போல் " (2, 8, 155)

" சுட்டுக் கோல் போலெரியும் புகுவரே
நட்டார் எனப்படுவோர் " (நாலடி. 208)

" நீலமுண்ட நூலிழை வண்ணம் கொண்டது விடாமை "
(2, 9, 88)

" மூர்க்கன்றான் கொண்டதே கொண்டு விடானாகு மாகாதே
உண்டது நீலம் பிறிது " (பழ. 168)

" செய்யகணைக்காற்செறிந் துவனப் பெதிர்ந்த தேனெய்
காம்பின் " (2, 15, 61–2)

" தேனெய்பெய் வாடாதகாம்பேபோற் கணைக்காலின்
வனப்பினவே " (சிந்தா.)

" நறுவினைத்தேற லுறுபிணிபோலப்
பிறிதிற்றீராப்பெற்றி " (2, 16, 63-4)

" கள்ளினுற் கள்ளறுத்தல் காண்டு மதுவன்றே
முள்ளினல் முட்களையு மாறு " (பழ. 54)

" நலத்தகுசேதா நறுநெய்த் தீம்பால்
அலைத்துவாய்ப் பெய்யுமன் புடைத்தாயி
னின்னுசெய்து மன்னனை நிறாஉம் " (2, 17, 6-8)

" உலப்பிலுலகத் துறுதியை நோக்கி
நல்லறங் கொள்ளக் கொளுத்தல்
மலைத்தழு துண்ணு மண்ணுக் குழவியைத் தாயார்
அலைத்துப் பால்பெய்யும் " (பழ. 212)

"காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெறித்துப் பாலொடு
நெய்பெய்யும் தாயனையர்" (அறநெறி. 48)

"செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறைவிலளே
மையறு தாமரை மலர்மகள் தானெனல்" (2, 17, 40)

"மடியுளாண் மாமுகடி யென்ப" (திருக்குறள்)

"பாடுபெயர்ந்தடிக்கு மேடகம்போல—மருப்பெழு சூழ்ச்சி
(3, 1, 30-31)

"ஊக்கமுடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து" (திருக்குறள் 617)

"பாலுஞ் சோறும் வாலிதினூட்டினும்
குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்" (3, 14, 111-12)

"கப்பிகடவதாக் காலைத் தன்வாய்ப் பெயினும்
குப்பை கிளைப் போவாக் கோழிபோல்"
(நாலடி. 311)

"பறவை நிழலிற் பிறர் பழித்தீயா ச்செவிச்சுவையமிர்து"
(3, 14, 276)

"பருந்து மதனிழலும் பாட்டுமெழாஅலும்" (சிந். 730)

"ஒடுங்கி யிருந்தே உன்னியது மூடிக்கும்
கொடுங்காற் கொக்கின்" (3, 17, 61-2)

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" (திருக்குறள் 490)

"வாழ்ந்தகாலை யல்லது யாவர்க்கும்
ஆழ்ந்தகாலை யன்பு மில்லென" (3, 21, 94-95)

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்தின்
மேலாடுமீனிற் பலராவர்—ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்" (நாலடி. 113)

"உண்டாயபோழ்தங் குடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே" ( ஷை 284)

"உதவி செய்தோர்க் குதவா
மறவியின்மை மாண்புடைத்து" (4, 3, 12-13)

" நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (திருக்குறள் 108)

" மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூ லோதிய நாவர்" (4, 10, 13)

" ஒற்று முரை சான்ற நூலு மிவை யிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (திருக்குறள் 581)

" பாம்பும் பகையு மரசும் சிறிதென
வாம் பொருளோதின ரிகழா ராதலின்"
(4, 10, 130-31)

" அளையுறை பாம்பு மரசும் நெருப்பு
முழையுறை சீயமு மென்றிவை நான்கும்" (ஆசாரக்)

" மதலை மாண்குடி தொலைவழி யூன்றும்
புதல்வற் பெற்றோர்" (5, 6, 128-9)

" சிதலை தினைப்பட்ட வாலமரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தை கட்டோன்றிற்
புதல்வன் மறைப்பக் கெடும்" (நாலடி 197)

இவை போன்றவும் பிறவும் காண்க.

சில அருமையான நீதிகளும் பழமொழிபோன்ற சொற்றொடர்களும் இந்நூலகத்தே காணலாம். உதாரணமாக,

" உயிர்கெட வரும்வழி யொழுக்கங் கொள்ளார்
செயிரறு கேள்வி தேர்ந்துணர்ந்தோரென"
(1, 34, 88-89)

" வெல்லினும் தோற்பினும் விதியென வகுத்த"
(1, 34, 90)

" சில்கலத்தியன்ற வணியின ரல்லது
பல்கலம் சேரா மெல்லென் யாக்கையர்"
(1, 34, 123-4)

" காந்த ளழித்த கைம்முகிழ் கூப்பி" (1, 34, 239)

" வேந்திடை யிட்ட வெஞ்சொ லாதலிற்
சேர்ந்தோர் மாட்டும் செப்புதல் தீதென"
(1, 35. 51, 16)

*" தீமுகத் திட்ட மெழுகிற் றேம்பியும்
தாய்முகத் தியாத்த கன்றிற் புலம்பியும்"*
(*1, 35, 51-52*)

*" பழமையிற் பசையாது குடிமையிற் கெழுவாது
தவந்தீர் மருங்கிற் றிருமகள் போல்"* (*1, 35, 136-7*)

*" மாரியுந் திருவு மகளிர் மனமும்
தக்குழி நில்லாது பட்டுழிப் படும்"* (*1, 35, 156-57*)

*" கிளிப்பயி ரன்ன களிப்பயில் மழலை"* (*1, 35, 196*)

இங்கே சொற் சுருக்கமும் பொருளழகும் ஒருங்கே காணலாம்.

*" இளமையும் வனப்பு மில்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியு மாசில் சூழ்ச்சியோ
டெண்வகை நின்றநின் நன்மகற் கல்லது
மகட்கொடை நேரார் மதியோ ராதலின்"*
(*1, 35, 89-93*)

*" எல்லை ஞாயி றிரவெழு மெனினும்
பல்கதிர்த் திங்கள் பகல்விடு மெனினும்"*
(*1, 35, 179-80*)

*" கையது வீழினும் கணவ னல்லது
தெய்வ மறியா"* (*1, 36, 256-258*)

*" நாவொடு நவிலா நகைபடு மழலையள்"* (*1, 36, 266*)

*" மெய்பெறு வெழுத் துயிர்க்கு மழலை"* (சிந்தா.)

*" மாமுதல் சாய மருந்து கொண்டாங்கு"* (*1, 37, 188*)

*" குழலும் யாழு மழலை முழவமு
முட்டின் றியம்பும் பட்டின மொரீஇத்
துறக்கம் கூடினும் துறந்திவ ணீங்கும்
பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி"*
(*1, 40, 86-89*)

*" முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வேண்டேன்"* (பட்டினப்.)

"நிறைக்குறி னிரைத்துப் போக்குறிற் போக்கும்
பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை"
(1, 40, 311-12)

"கற்ற மந்திரி காட்டவுங் காணுது
பெட்டாங் கொழுகும் பெருமகன் போலவும்"
(1, 45, 307-8)

"பலர் தோய் சாய
லரம்போழ் அவ்வளை மகளிர் மனத்தி
னிரம்பா நெறியின வாகி யரும்பொருள்
கல்லா மாந்த ருள்ளம் போல
நொய்ந்நுரை சுமந்து மெய்ந்நயந் தெரிந்து
மேலோர் நண்பிற் ருழ விழிதரு" (1, 50, 9-15)

"ஆன்முலைப் பிறந்த வானிற வமிர்த
மலைப்பெய் நெய்யொடு தலைப்பெய் தாங்கு
வேறுபட் டேகினும் கூறுபட்டியலா
வன்பினி னளைஇய நண்பி னமைதியும்"

"கெட்ட காலை விட்டன ரென்னுது
நட்டோ ரென்பது நாட்டினை நன்றென" (2, 9, 118-9)

"மேலோர் உள்ளம் போல
நூலோர் புகழப்பட்ட போர்வல் புரவி"

இந்நூற்கண் பல அரிய பொருள்கள் நன்கு வருணிக்கப் பட்டுள்ளன. அவைகளுட் சில பின்வருமாறு :—விழாவாத் திரை (பக். 46); உவந்தவை காட்டல் (பக். 66); செய் குன்றின் வருணனை (1, 46, 271-85). தலைநகரில் வந்து குவிந்த பல தேயப் பொருள்களை நன்கு எடுத்து மொழிவர் இவ்வாசிரியர். உதாரணமாக :—

"அந்தண் பொதியிற் சந்தன மரமும்
நறுந்தண் சோலை யிறுங்காற் றிமிசு
மடவி விந்தத் தியானை மருப்பும்
வடதிசை மாமலைச் சுடர்விடு பொன்னும்
குடகடற் பிறந்த படர்கொடிப் பவழமும்
தென்றிசைப் பிறந்த வெண்சுடர் மணியும்
விஞ்சையம் பெருமலை விளங்கொளி வெள்ளியும்
இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பும்

இமயத்துப் பிறந்த வயிரச் சாதியும்
கடாரத் திரும்பொடு கையகத் தடக்கி
யவனத் தச்சரு மவந்திக் கொல்லரும்
மகத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத் தியன்ற வோவியத் தொழிலரும்
வத்த நாட்டு வண்ணக் கம்மரும்'' (1, 58, 30-44)

இது போன்ற வருணனைகளை மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் காணலாம். விருத்தப்பாவினியலாது ஆசிரியப்பாவின் அமைந்த இந்நூல் சிந்தாமணிக்குச் சிறிது காலத்தான் முற்பட்டிருக்கலாம் என்பது சிலர் கருத்து. சங்க நூல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவின் இயன்றனவென்பதை அறிஞர் உணர்வர்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தையியற்றி யருளிய இளங்கோவடிகள் சமயம் சமணமென்று சிலர் கூறுவர். இஃது கோவலன் கண்ணகியருடைய சரிதத்தை விரித்துக் கூறுவது. இதன் ஆசிரியர்க்கு அடிகள் என்று பெயர் வழங்குவதையும், பதிகத்தில், ''குணவாயிற் கோட்டத்து'' என்பதிற் **கோட்டம்** என்ற சொற்கு அருகன் கோயில் என்று அடியார்க்கு நல்லார் பொருள் செய்திருத்தலையும், இந்நூலிற் கவுந்தியடிகள் வரலாறு கூறுமிடத்தும், பிற இடங்களிலும் அருக மதக் கொள்கையை இவர் மிகுத்துக் கூறியிருத்தலையும் கொண்டு இவரது சமயம் சமணமென்று சிலர் ஐயுறுவர். ஆயினும் கோட்டமென்பது எல்லாக் கோயில்கட்கும் பொதுப் பெயரேயன்றி, அருகன் சினகரத்திற்கு மட்டும் உள்ள பெயரன்று. அரும்பத உரையாசிரியர் கோட்டத்தைக் கோயில் என்றனர். அருகன் கோயில் எனக் கூறவில்லை. இளங்கோவடிகள் ஒவ்வொரு மதத்தைப்பற்றிக் கூறுங்கால் அவ்வம்மதத்தைச் சார்ந்தவரோவெனப் படிப்போர் கருதும்படி கூறும் ஆற்றல் சான்றவர்.

### சீவகசிந்தாமணி

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய இந்நூல் திருத்

தக்கதேவர் என்னும் சமண முனிவரானியற்றப்பெற்றது. சீவகன் என்னும் ஏமாங்கதநாட்டு மன்னனது பிறப்பு முதல் வீடுபேறிறுதியாகவுள்ள கதையைக் கூறும். சமண மகா புராணத்தின் ஒரு பாகத்தும், மணிப்பிரவாள நடையில் அமைந்த சீபுராணத்தும் இச்சரிதம் கூறப்பட்டுள்ளது. இப்பெருநூல் நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈருகப் பதின்மூன்று பிரிவுகளாலாயது. 3145 செய்யுட்களைத் தன்னகத்துக் கொண்டது. அற மாதி நான்கு பொருள்களையும் திறம்படக் கூறுதலான் இதனை முடிபொருட்டொடர்நிலைச் செய்யுள் என்பர்.

சீவகன், காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற வண்ண மிக்க எண்மரை மணந்த மங்கலக் கதை யோடு, வித்தை பயின்ற முறையில் நாமகளையும், திரு வெய்திய வகையிற் பூமகளையும், அரசுத் திருவெய்திய திறத்தால் மண்மகளையும், வீட்டினை மருவிய விரகால் முத்தி மகளையும் மணந்ததாகக் கதைபுனைந்து, ஒன்பான் சுவையும் ஒருங்கே யமைய, பத்து வகை வனப்பும் பாங் குடன் திகழ, இன்பச் சுவை சிறிது விஞ்ச, இயற்றிய திறம் பற்றி, இது மணநூல் என வழங்கலாயிற்று. கோவிந்தையார் இலம்பகமும், கோவிந்தை என்ற ஆயர் மகளைச் சீவகன் தன் நண்பனுகிய பதுமுகனுக்கு மணம் புரிவித்தலால், அதுவும் மணச் செய்தியே.

> '' **நாமகள் நலத்தையெல்லாம் நயந்துடன்** பருகி ''

> '' பணைமுலைப் பைம்பொன்மாலைப் பாசிழைப் **பூமிதேவி**
> **யிணைமுலை யேகமாக நுகரிய** வெய்தினனே ''

> '' களிக்கயல் மழைக்கட்
> பொருவில் **பூமகட் புணர்**ந்தனன் ''

என்ற வரிகளைக் காண்க.

இன்றும் சமணர்கள் இந்நூலைப் பாராயணப் பனுவ லாகக் கொண்டு போற்றி வருகின்றனர்.

சீவகன் கதை சமண மகாபுராணத்தின் பிற்பகுதியிற் கூறப்பட்டதென்றும், அதுவே திருத்தக்கதேவர் காப்பியத்திற்கு மூல நூலாம் என்றும், மகாபுராணம் இரட்ட மன்னனாகிய அகாலவர்ஷன் ஆட்சியில் (கி.பி. 874-914) இயற்றப்பெற்றதென்றும், ஆகவே சிந்தாமணி கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த நூல் என்றும் கூறுவர் அறிஞர்.

தனது அமைச்சனான கட்டியங்காரனிடம் அரசியற் பாரத்தை ஒப்படைத்து, மகளிர் உவளகமே கதியாக விருந்த சச்சந்த மன்னன், கட்டியங்காரன் சூழ்ச்சியால் இறந்ததும், அவன் மனைவி விசயாதேவி ஓர் மயிற்பொறி மீதிவர்ந்து ஓர் இடுகாட்டிற் சீவகனைப் பெற்றதும், சீவகன் கந்துக்கடன் என்ற ஓர் வணிகன் வீட்டில் வளர்ந்து ஆசிரியர் அச்சணந்தி முனிவரால் தன் பிறப்பு வரலாறுணர்ந்ததும், எண்மர் மகளிரை மணந்ததும், பின்னர் நந்தட்டன் முதலிய நண்பர்களின் உதவி கொண்டு கட்டியங்காரனை முறியடித்துத் தனக்குரிய ஏமாங்கத நாட்டை மீட்டும் பெற்று அரசியல் புரிந்ததும், பின்னர்ச் சமண சமய உண்மைகளை ஐயம்திரிபற உணர்ந்து முத்தி நிர்வாணம் எய்தியதும் ஆகிய வரலாற்றைப் பரக்கக் கூறுவது இச்சீரிய பனுவல். இதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் இயற்றிய ஓர் சிறந்த உரையுண்டு. திருத்தக்கதேவர் வரலாறும் காலமும் நன்கு விளங்கவில்லை. ஆயினும் இந்நூலுரைத் தொடக்கத்தில் நச்சினார்க்கினியர் இத்தொடர்நிலைச் செய்யுளைத் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என எழுதியிருத்தலான் இவரது காலம் பழமையானது என்று கூறுவர் காலஞ்சென்ற மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர். மற்றும் அவ்வுரையாசிரியர் இந்நூற் செய்யுட்களைக் கொச்சக ஒருபோகில் அமைப்பர். ஆயினும் பிற்காலத்தெழுந்த கம்பராமாயணத்திற் காணும் விருத்த விகற்பங்கள் அனைத்தும் இந்நூலகத்துக் காணப்படுதலின், வடமொழியில் வழங்கும்

விருத்தம் தமிழ்நாட்டிற் பயிலத் தொடங்கிய பின் எழுந்த காப்பியம் என்றே இதனைக் கருத வேண்டியிருக்கிறது. கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றுண்டுகளில் சமண சமயம் தென்றமிழ் நாட்டில் அதிகமாகப் பரவவில்லை என்று முன்னரே குறிக்கப்பட்டது. கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் அரசு செய்த பல்லவ மகேந்திரன் காலத்தோ, அதற்குப் பின் போந்த சில மன்னர் காலத்தோதான் இந்நூல் இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும். குலோத்துங்கன் என்ற அநபாய சோழன் சிந்தாமணிக் காப்பியத்தை இடைவிடாமற் கற்றதற்கிரங்கி, அவன் மனதை மாற்றும்பொருட்டுச் சேக்கிழார்பெருமான் சிறந்த சைவ அடியார்களின் வரலாருகிய திருத்தொண்டர் புராணத்தை இயற்றியதாகச் சேக்கிழார் புராணம் கூறும். ஆகவே இந்நூலியற்றிய காலத்திற்குச் சுமார் இரண்டு மூன்று நூற்றுண்டுகட்குமுன் இந்நூல் இயற்றப்பெற்றிருத்தல் கூடும். ஒருவாறு கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் எழுந்த நூலாக இதனைக் கோடல் பொருந்தும். மற்றும் பொய்யாமொழிபுகழ் மையறு காட்சித் திருத்தகு முனிவன் என்று பாயிரத்துக் காணப்படுவதென்றும், அப்பொய்யாமொழி என்பார் மைசூர்க் கங்க மன்னனுகிய சத்தியவாக்கியன் ஆதலால், அவனது காலமாகிய 10-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியே திருத்தக்கதேவர் வதிந்த காலம் என்றும் கூறுவர். கி. பி. 874-94-இல் அரசுபுரிந்த இரட்ட மன்னன் காலத்து இந்நூல் இயற்றப்பெற்றதென்று சிலர் கூறுவர். அஃது முன்னரே குறிக்கப்பட்டது. எனவே கி. பி. 8-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி வரையில் உள்ள காலமே இந்நூல் இயற்றப்பட்ட காலம் என்ப. அரிஞ்சயன் என்று நூலின்கண் காணப்படும் பெயர் கி. பி. 956-இல் அரசுபுரிந்த சோழ மன்னனைச் சிறப்பிப்பதாகக் கருதுமிடத்துச் சிந்தாமணி கி. பி. 10-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியினெழுந்த நூலென்று உறுதியாகக் கொள்ளலாம்.

டால், கடலின் மணலினும் அதிகமாகுமென்றும், அவ்வப் பிறவிகளில் கணவன் மனைவியாகவே தோன்றியிருத்தல் வேண்டுமென்ற நியதியில்லையென்றும், அவ்வப்பொழுது பலவாகக் கூறப்பட்ட உயர்ந்த கதிகளையடைய முயலாதது குற்றம் என்றும், ஏதோ வாழ்க்கையில் இரண்டு நாளைச் சுற்றமாக அமைந்தது என்றும், சச்சந்தன் தன் பிரிவிற்காக வருந்தி நின்ற விசயாதேவியைத் தேற்று முகமாகக் கூறுகின்றான் (269, 270). வினை பாடகம் போலச் சூழ்ந்து நிற்குமென்றும் (510), இடுக்கண் வருங்கால் அதனை நகையாடித் தொலைக்க வேண்டுமென்றும் (509), துன்பத்தையே யின்பம் எனக்கோடல் சாலச் சிறந்ததென்றும் எடுத்து அழகுற மொழிவர். மக்கள் யாக்கையினிழிவைப் பல இடத்திலும் நன்குளத்திற் பதியுமாறு விரித்துக்கூறுவர். இறக்கும்தருணம்வரை யில் தானும் துய்க்காமல் பிறர்க்கும் கொடாமல், அற நெறியிலும் செலுத்தாமல் சேமித்துவந்த தொகையைப் பிறர் அறியாமற் புதைத்துவிட்டு முடிவில், இனிப் பிழைக்க வழியில்லை என்ற உறுதி தோன்றிய அமயத்துப் புலனைந்தும் பொறிகலங்கி, யறிவழிந்திட்டைமேலுந்திய சமயமாகலின், வாயடைத்துப்போகத், தன் கையாற் சைகைகாட்ட, அச்சைகை அவன் புதைத்து வைத்திருந்த புதையல் என்றுணராராய் அவனது மனைவி மக்கள் அவன் விளாம்பழம் கேட்கின்றான் என்று எண்ணி, அக்கனி கிடைக்கும் காலம் அஃதன்றாகலின், அவன் இறந்தபின்னர், அவனை எண்ணிப்படைக்கின்ற நிகழ்ச்சியைக்கூறி அழகுபட நிலையாமையைக் கூறினர். பிறிதோரிடத்தில் மரநாய் காலைக் கௌவ, மண்சட்டியைக் கையிற்றாங்கி, தலைநிமிர்ந்து மனமேங்கி யிரப்பவர்கள், நல்லிசைபோன்ற இன்சொல்லார் பாலடிசிலைப் பரிந்தூட்ட முகம் திருப்பி உண்டபோது, பசிப்பிணி வருத்துதலால் பிச்சை கேட்டவர்க்குக் கொடாதொழிந்தவரே யாவர்என நன்கு கூறி அறத்தின் பெருமையையும் அதனைச் செய்யாததால் எய்தும் சேதத்தையும் கூறுவர். அச்செய்யுள் பின்வருமாறு :—

"மண்ணூர் சட்டிகரத் தேந்தி
மரநாய் கௌவுங் காலினராய்
அண்ணாந் தேங்கி யிரப்பாரை
யறிந்தோ மறிந்தோம் அம்மம்ம
பண்ணார் மொழியார் பாலடிசில்
பரிந்தங்கூட்ட முகம் திருப்பி
யுண்ணா நின்ற போதொருவற்
குதவா மாந்த ரிவர்தாமே"

பிறிதோரிடத்தில் கொடுத்துண்டறியாதாரைப்பற்றிக் கூறும்போது,

"மாசித்திங்கள் மாசின சின்னத் துணிமுள்ளின்
ஊசி மூசிய வாடை யுடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக் கையக லேந்திக்
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்"

எனக் கூறுவர்.

இனி, தேவர் நூலில் பலவிதமான உவமை நயங்களை ஆங்காங்கே காணலாகும். சச்சந்தனும் விசயையும் மனமொத்தியைந்தது "வெண்மதியும் ஒண்ணிறவுரோ ணியும்" கூடியதுபோன்றதென்பர். (198). தன்னிடம் அரசியற் பாரத்தைச் சச்சந்தன் ஒப்பித்தபோது, கட்டி யங்காரன் கூற்றுருக அடுகளிற்றெருத்தினிட்ட "வண்ணப் பூந்தவிசுதன்னை ஞமலிமேலிட்ட தொக்கும்" என்றார். "வாளுற்ற புண்ணின் வடிவேலிறந்திற்றதேபோல்;" "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்களென்ன— தாங்குதல்கடன்;" "பளிக்குக் கோல்போன்ற மழைத் தாரை" (508); "பாடகம்போலச் சூழ்ந்த பல்வினை;" "காசறு துறவின்மிக்க கடவுளர் சிந்தைபோல, மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசையடைய முன்னி" (851); "கருந்தடங் கண்ணியர் தம்மேற் காமுகருள்ளம்போல இருங்களிறெய்தவே" (975); "சீருறு சிலம்பி நூலாற் சிமிழ்ப்புண்ட சிங்கமொத்தான்" (1166); "ஆழ்கல மாந்தர்போல அணிநகர் அழுங்கிற்றன்றே" (1163); "தண்பனி முருக்கப்பட்ட தாமரைக் காடுபோன்றார்"

(1398); "அருமணி யிழந்தொர்நாக மலமருகின்றதொத் தான்" (1508); "வாளிரண்டு மாறுவைத்த போன் மழைக்கண் மாதரார்" (1985); "ஊடிய மடந்தைபோல உறுசிலை வாங்கவாரா" (2185); "கண்ணுடியன்ன கடி மார்பன்" (2327) முதலியவற்றைக்கண்டு ஆசிரியரின் உவமைகூறும் ஆற்றலையுணர்க. அமைச்சன், அரசன் ஆக்கத்தோடும் பெருகி அவனேடும் தேய்ந்தொழுகுவ ஞயின் அவ்வொழுக்கம் இருளையோட்டு மதிபோலப் பழியை யோட்டும் என்பதை,

"பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப்பின்னுட்
குறைபடு மதியந் தேயக் குறைமுய றேய்வதேபோல்
இறைவனுத் தன்னை யாக்கி யவன்வழி யொழுகினென்று
நிறைமதி யிருளைப் போழும்" (254)

என்று கூறினர்.

நுகரும் தன்மையுறும்படி பழுத்த காமம் ஆடவர் நெஞ்சைப் பிணித்ததேனும் தோன்ருதிருக்க வேண்டினுல் உருகின பொன்னிலுற்ற நீர்ப் புள்ளிபோலத் தோற்ருது என்பதை,

"அள்ளூற வளிந்தகாம மகமுறப் பிணித்ததேனு
முள்ளூற வெந்த செம்பொ னுற்றநீர்ப் புள்ளியற்ருற்
கள்ளூற மலர்ந்த கோதாய் காதலர் காதல்" (1387)

என்று கூறுவர். இப்பொருள் உவமையாக,

"தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப்பூப்போல்
காமரு முகத்திற் பூத்த மழைத்தடங் கண்கள்" (2133)

என்பர். மண்மகளிலம்பகத்தில் மகததேயத்தரசன் பொறி மீது எய்தகோல் அப்பொறியைத் தீண்டி மீண்டதற்கு,

"பில்கித்தே னொழுகும் கோதைப்பிறர் மனையாட்கட் சென்ற
வுள்ளத்தை யுணர்வின் மிக்கா னொழித்திடப் பெயர்ந்ததேபோல்" (2186)

என்று அழகுறக் குறிப்பர்.

கருடன் சிறகொலியினாலே பாம்பு படமொடுங்கினாற் போல சீவகன் தேரொலியால் வேடர் மனவெழுச்சி சுருங் கினர் என்பதை,

> " ஆழியானூர்திப்புள்ளி னஞ்சிறகொலியினாகை
> மாழ்கிப் பையவிந்தவண்ணம் வள்ளல்தேர் முழக்கினானும்
> சூழ்துகண் மயக்கத்தானும் புளிஞருள் சுருங்கிச்சேக்கைக்
> கோழிபோற் குறைந்து நெஞ்சிறைமென மறமும்
> விட்டார் "

என்று நயம்படக் கூறுவர். சேக்கைக் கோழி என்பது வலைப்பட்ட கோழி என்பர் உரைகாரர். காந்தருவதத்தை மணக்கோலம் செய்து அவளது விழிகட்கு மை எழுதியதை ஆசிரியர்,

> " அருங்கயம் விசும்பிற் பார்க்கு மணிச்சிறுசிரலை யஞ்சி
> யிருங்கயம் துறந்து திங்களிடம் கொண்டுகிடந்த நீல
> நெருங்கிய மணிவிற்காப்ப நீண்டுலாய்ப் பிறழ்வ
> செங்கேழ்க்
> கருங்கயலல்லகண்ணே யெனக் கரிபோக் கினாரே " (626)

என்ற அழகுபெற மொழிவர். கரிபோக்குதல் இங்கே, மையெழுதுதல் என்னும் பொருளோடு கயலல்ல கண்ணே என்று சான்றும் பகர்ந்ததாகக் கூறியநயம் உணர்ந் தின்புறத்தக்கது.

பல இடங்களில் ஆசிரியர் உருவகிப்பதைக் காணலாம்.

பூவையணிந்த மகளிரைக் கொம்பாகவும், அவரிடத்து ஆடவர் அமையுமாறு வண்டுகள் அடைந்ததாகவும், அவ் வாடவர்பால் ஒல்கி ஊடியமகளிரைப்போல அவ்வண்டின் கனத்தினால் அக்கொம்பு தாழ்ந்ததாகவும், அவர் ஊடலைத் தீர்த்து எதிர்முகமாக்கும் பெரியோரைப்போலத் தும்பிகள் சென்று ஒக்க நிறுத்தியதாகவும், உருவகம் செய்து,

> "தோடணி மகளிர் போன்ற துணர்மலர்க் கொம்பர், கொம்பி
> னாடவர் போலவண்டு மடைந்தன வளியிற் கொல்கி
> யூடிய மகளிர் போல வொசிந்தன வூடநீர்க்கும்
> சேடரிற் சென்று புல்லிச் சிறுபுறந் தழீஇய தும்பி" (852)

எனக் கூறுவர்.

இனித் தேவர் முற்றுந் துறந்த முனிபுங்கவராயிருந்தும் உலகியலறிவுமிக்கு விளங்கினர் என்பதை நூலின் பகுதி கொண்டு விளக்கலாகும்.

"சிலர்பின் தொடரச் செல்பவரைத் தேவர் என்றே
மக்கள் மதிப்பர்"

என்பதை,

"யாவராயினு நால்வரைப் பின்னிடில்
தேவரென்பது தேறுமிவ் வையகம்" (249)

என்பர்.

"பகைவற்குத் தோற்பின், இன்ன இழிந்தநிலை யனுவேன்"

என்று சூளுரைக்குங்கால்,

"தன்பால் மனையாள் அயலான் றலைக்கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின்றகைப் பேடிபோலாம்" (443)

என்பர். இங்கே வெளிப்படைப் பொருளை விலக்கி, தன்னிடமுள்ள வீரம் சிறந்த வகையில் பிறனிடம் இருக்கக் கண்டும் என்று பொருள் கூறுவர் நச்சினர்க்கினியர். தளர்ந்த காலத்தில் தந்தையை மக்கள் தாங்குதல் கடனென்பதைத் "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்களென்னத் தாங்குதல் கடன்" என்று கூறுவர். "சிதலை தினப்பட்ட வாலமரத்தை, மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்கு" என்ற நாலடிக் கருத்தை யிச்செய்யுளிற் காணலாம். மணப் பருவம் வந்து விட்டால் மகளிர் கணவனை மருவுவதை யார் விலக்குவார் என்பதைத்

"தடங்கணங்கை
பாற்படு காலம்வந்தாற் பான்மையார் விலக்குகிற்பார்"

எனக் கூறுவர். மகளிர் எங்கே பிறந்தாலும், பிறந்த இடத்திற் பயன்றரார். பிறரே அவரைத் துய்ப்பர் என்ற கருத்தை,

"வலம்புரி யீன்றமுத்து மண்மிசை யவர்கட்கல்லால்
வலம்புரி பயத்தையெய்தா தனையரே மகளிரென்ன" (563)

என்பர். இதனைப்,

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவற் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்"

"சீர்கெழு வெண்முத்தம்
அலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்"
"ஏழ்புண ரின்னிசை யாழுளே பிறப்பினும்
யாழ்க்கவைதா மென்செய்யும்"

என்ற கலித்தொகை யடிகளோடும்,

"சுரும்பிவர்சந்தும் தொடுகடல்முத்தும் வெண்சங்கு
விரும்பினர்பாற்சென்று மெய்க்கணியாம்" [மெங்கும்

என்ற திருக்கோவை வரிகளோடும் ஒப்பிட்டுணர்க.

அன்பினால் தீயனவும் நல்லனவாகக் காணப்படும் என்ற உண்மையை,

"வாரம்பட்டுழித் தீயவும்நல்லவாம்
தீரக்காய்ந்திடின் நல்லவும்தீயவாம்" (888)

என்ற வரிகளிற் கூறுவர். வேழம் என்ற நோய் தீண்டில் வெள்ளில் என்ற விளங்கனி யுள்ளீடு நீங்கப்பெறும் என்பதை,

"வெஞ்சினவேழமுண்ட வெள்ளிலின்வறியதாக" (1024)

என்றும்,

"தூம்புடைநெடுங்கைவேழம் துற்றியவெள்ளிலேபோல்"

என்றும் கூறுவர். சாதாரணமான உலக வழக்கில் வேழம் என்பதை யானையெனக்கொண்டு, யானையுண்ட விளங்கனி யுள்ளீடு நீங்கப்பெற்றும் உருக்குலையாதிருக்கும் என்று கூறுவர் பலர். ஆயினும் உரைகாரர், வேழம் என்பது வெள்ளிலுக்கு வருவதோர் நோய் என்றும் அந்நோயாற் பிணிக்கப்பட்டால், உள்ளீடு, கனியின் ஓடு உடையாமலே மறையும் என்றும் கூறுவர். கன்னியர்கள், காம நோய் எத்துணை மிக்கிருந்தாலும், அதனைத் தங் கண்ணனார்கண்ணும் உரையார் என்பதை,

"கன்னியருற்றநோய் கண்ணனார்க்குமஃ
தின்னதென் றுரைக்கலர்நாணின்"

என அணி பெறக் கூறுவர்.

"தாமுறுகாமத்தன்மை தாங்களேயுரைப்பதென்ப
தாமெனலாயிற்றன்றோ லருங்குலமகளிர்க்கம்மா"

என்ற சூர்ப்பனகை கூற்றை இத்துடன் ஒப்பிடுக. தன்னூரி

லேயே யிருந்தால் உலக அநுபவம் முற்ருது. பிற நாடுகட்கும் சென்று நடை யுடை பாவனைகளைக் காண வேண்டும் என்ற அரிய கருத்தை,

"ஊற்றுநீர்க்கூவத்தின் உறையுமீனனார்
வேற்றுநாடதன்சுவை விடுத்தல்மேயினர்" (1176)

என்று கூறுவர்.

காதலன் உற்று நோக்குங்கால் தலைவி நாணத்தாற் றரையை நோக்குவாள் என்ற உண்மையை,

"தன்னையான் முகத்தைநோக்கில்
தான்முலை முகத்தைநோக்கும்" (1626)

என்று எடுத்துக் கூறுவர்.

"யானோக்குங்காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்"

என்ற திருக்குறட் கருத்தை இதில் காணலாம். உடன் பிறப் பிறந்தாற் ருேள்வலி போம் என்றும், அவனாற் பெரும் பலம் ஏற்படும் என்றும் கூறுவர். இந்த உண்மையைத்

"திண்பொருளெய்தலாகும் தெவ்வரைச்செகுக்கலாகும்
எம்பியையீங்குப்பெற்றேறனென்னெனக்கரியது"(1760)

என்ற வரிகளிற் கூறுவர்.

"தம்பியுடையான் படைக்கஞ்சான் என்னும்மாற்றம்
தந்தையால்"

என்ற இராமாயண வரிகளை இத்துடன் ஒப்பிட்டு நோக்குக. எல்லாம் வினைப்பயன் என்னும் உண்மையை,

"நல்வினையுடையநீரார் நஞ்சுணி னமுதமாகும்
இல்லையேல்அமுதுநஞ்சா மின்னதால் வினையினாக்கம்"
(2314)

என்று கூறுவர்.

தேவர்க்குக் கனவிலும் அதனால் விளையும் நன்மை தீமைகளிலும் நம்பிக்கை யுண்டென்பதை விசயாதேவி கண்ட கனவையும், அதனை அவர் விளக்கும் திறத்தையும் கண்டு தெளியலாம். "தொத்தணி பிண்டி" (223) முதலிய செய்யுட்களைக் கண்டு தெளிக. இன்ன தீய செயலியற்றினார் இன்ன பயனைத் துய்ப்பர் என்பதைக்,

"குழற்சிகைக் கோதைசூட்டிக்
கொண்டவ னிருப்பமற்றோர்
நிழற்றிகழ் வேலினானை
நேடிய நெடுங்கணாளும்
பிழைப்பிலாட் புறந்தந்தானும்
குரவரைப் பேணல்செய்யா
திழுக்கினா ரிவர்கள்கண்டா
யிடும்பைநோய்க் கிரைகளாவார்" (252)

"நட்பிடைக் குய்யம்வைத்தான்
பிறர்மனை நலத்தைச்சேர்ந்தான்
கட்டழல் காமத்தீயிற்
கன்னியைக் கலக்கினானும்
அட்டுயி ருடலம்தின்றான்
அமைச்சனா யரசுகொன்றான்
குட்டநோய் நரகம்தம்முட்
குளிப்பவரிவர்கள் கண்டாய்" (253)

என்ற செய்யுட்களால் காண்க. இங்கே அட்டுயிர் உடலம் தின்றான் குட்டநோய் பெறுவன் என்பது, இவரது சமணப் பற்றைக் காட்டும். அரசன் கோல்கோடின் விளையக்கூடிய ஏதங்களை நன்கு எடுத்துக் கூறுவர். "கோனிலை திரிந்து" (255) என்ற செய்யுளை நோக்குக. இங்கே,

"கோனிலைதிரிந்திடின் கோணிலைதிரியும்
கோணிலைதிரிந்திடில் மாரிவறங்கூரும்
மாரிவறங்கூரின் மன்னுயிரில்லை
மன்னுயிரெல்லா மண்ணாள்வேந்தன்
தன்னுயிரென்னும் தகுதியின்றாகும்"

என்ற மணிமேகலை வரிகளோடும்,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்"

என்னும் திருக்குறளோடும் ஒப்பிட்டு நோக்குக. தேவர் நகை முதலாம் பல்வகைச் சுவைகளையும் பாங்குடன் எடுத்து மொழியும் ஆற்றல் சான்றவர். இன்பச் சுவை மிஞ்சிய காவியம் இஃது என்று முன்னரே குறிக்கப்பட்டது. சீவகன் எண்மர் மகளிரை மணந்து துய்த்த பன்னலங்களையும், பலபடக் கூறுவர். அவலச் சுவை கூறும் செய்யுட்

களும் சாலச் சிறந்தனவாகும். தனது ஆருயிர் காதலனை சச்சந்தனைத் தணந்து, அவன் கட்டளைப்படி ஓர் மயிற் பொறி மீதேறி, நன்காட்டை யடைந்து, எவ்வகையான ஆதரவுமின்றி நின்ற விசயாதேவியின் அவலம் கூறு மிடத்து,

"உண்டெனவுரையிற் கேட்பாருயிருறு பாவமெல்லாம்
கண்டினித் தெளிகவென்று காட்டுவாள் போலவாகி
விண்டொட நிவந்தகோயில் விண்ணவர் மகளிற்சென்றாள்
வெண்டலை பயின்றகாட்டில் விளங்கிழை தமியளானாள்" (303)

என்று கல்லும் கனியுமாறு மொழிவர். சீவகன் பிறந்த போது, அவனது இரக்கம் செய்யும் நிலைக்கிரங்கி, விசயை கூறுவதாக அமைந்த,

"வெவ்வா யோரி முழவாக விளிந்தா ரீமம் விளக்காக
வொவ்வாச் சுடுகாட்டு யரரங்கி னிழல்போனுடங்கிப் பேயாட
வெவ்வாய் மருங்கு மிருந்திரங்கிக் கூகைகுழறிப் பாராட்ட
விவ்வாறாகிப் பிறப்பதோ விதுவோ மன்னர்க்கியல் வேந்தே" (309)

என்னும் செய்யுட்கண், கணிதமாக்கள் கணிதம் கணிக்க மந்திரி முதலானவர்கள் புடைசூழ பதினறுவகைத் தானமும் பாங்குடனேபுரியப் பலரும் வாழ்த்த மங்கல வாத்தியங்கள் முழங்கப் பிறக்கவேண்டிய செல்வக் குழந்தை, அவற்றிற்கு நேர்மாறாக நன்காட்டிற்பிறந்தானே என்று அவள் கூறும் கூற்று எத்தகையவன் நெஞ்சையும் உருக்கும் என்பதற்கையமின்று.

பரியாயமாகவும், ஒரு சொல்லைக் குறிக்கப் பல சொற் களைப் பயன்படுத்தியும் கூறுவது தேவர் வழக்கு,

"ஐந்நூறு நூறுதலையிட்ட வாருயிரவர்" (453)
"பறவை மாநாகம், அரிக்குரற்கோழிநாமத் தரவு" (1283)

பின்னர்க் கூறியன குக்குட சர்ப்பத்தைக் குறிக்கும்.

தேவர் கருத்துப்படி அரசன் ஓர் நாட்டுக்கின்றியமையா

தவன் என உணரலாம்.

" திலக நீண்முடித் தேவரும் வேந்தரு
முலக மாந்தர்க ளொப்பவென் ருேதுப
குலவுதார் மன்னர்க்கி யானிது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர் "

எனத் தேவரைக் காட்டிலும் மன்னன் விசேடச் சிறப்புள்ள வன் என்பர். வேந்தெனும் தெய்வம் அருளுமேல் அரசாக் கும்; காயுமேற் சுட்டிடும். மற்று மயக்கத்தையுடைய அத் தெய்வங்கள்தம்மை ஒருகால் வாழ்த்துவனுயின் அவனை அருளியாக்கலும், தம்மையொருவன் வைவனுயின் அவனை அருளாதழித்தலும் அவைகட்கு ஆகா ஆதலின் மன்னரிலும் தேவர் சாலச்சிறந்தவர் என்ப. "அரசன் அன்று கொல் லும் தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழி காண்க. மற்றும் "உறங்குமாயினு மன்னவன் றன்னெளி கறங்குதெண்டிரை வையகங் காக்குமால், இறங்கு கண் ணிமையார் விழித்தேயிருந், தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலார்" என்றதையும் காண்க. "பிறங்கும் கோலான் மாறடு கொற்றம் பெருவேந்தன், உறங்கும்போதும் தன் னருளாணை யுலகெங்கும், அறங்குன்ருவாக் காப்பதை யென்ப" என்ற திருவிளையாடலை (பழிக்கஞ்சிய) இங்கே ஒப்பு நோக்குக. சிறந்த பழமொழிகளும் தேவரால் ஆங் காங்கே நூலின்கண் ஆளப்படுதல் காணலாம்.

"இடியோசை கேட்ட நாகம்போல்" (சீவக. 242)
"மலையிற் பிறந்தாலும் உரலிற்ருனேவந்து மசிய
வேண்டும்" (சீவக. 563)

என்பதைக் காணலாம்.

"வேழமுண்ட விளங்கனி" (1024)

வருணனைகளை மேற்கொள்ளும்போது தேவர், இடங்கட் கேற்ப நயம்படக் கூறுவதை அவரது நூலிற் காணலாம்.

கோவிந்தையைப்பற்றிக் கூறும்போது,

"வெண்ணெய்போன் றூறினியள் மேம்பால்போற்
றீஞ்சொல்லள்
உண்ண உருக்கும் ஆநெய்போல் மேனியள்" (480)

தேவர் நூலை நன்குபயின்று, அதன்கணுள்ள சொல்லை யும் பொருளையும் அவர்க்குப்பின் போந்த ஆசிரியர்கள் எடுத்தாண்டதற்குப் பல சான்றுகள் உள்ளன.

"சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தினுகும்"
என்பது (சிந்தாமணி. 269)

"தோன்றலும் இறத்தல்தானும் துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுலகத்தி னேர்க்கு மூலத்தே முடிந்தவன்றே"
(கம்பரா.)

"தெங்கின் பழம்வீழ வாழைப்பழங்கள் சிந்தும்"
(சீவக. 31)

"தெங்கின் பழங்கமுகின் குலைசாடிக் கதலிசெற்று"
(திருச்சிற். 103)

"வெள்ளிவெண் கோனிரைத்தனபோற் கொழுந்தாரைகள்
(சீவக. 33)

"வான் வெள்ளிடை வீழ்த்தெனத் தாரைகள்"
(கம்பரா, ஆற்று. 4)

"கண்ணெனக் குவளையுங் கட்ட லோம்பினர்
வண்ணவான் முகமென மரையினுள் புகார்" (சீவக. 51)

"கண் கை கால் முகம் வாயொக்கும் களையலாற்
களையலாமை" (கம்பரா. நாடு. 10)

"உண்டில்லை யென்றுணர் வரிதே" (சீவக. 172)

"இல்லை யுண்டென்ன நின்ற இடை"
(கம்பரா. கோலங்காண். 12)

"விண்ணக வெண்மதி யொண்ணிற வுரோணியோ
டொளித்த தொத்ததே" (சீவக. 198)

"உருவுகொளு ரோணியோ டுடனிலை புரிந்த, மறுவுடை
மண்டிலக்கடவுள்"

"வெளிறிலாக் கேள்வியான்" (சீவக. 200)

"வெளிறிலாக் கேள்வியானை" (சூளா. மந்திரப். 65)

தேவர் தமக்கு முன் வழக்காற்றிலிருந்த திருக்குறள் முதலிய நூல்களிலிருந்தும் சங்கப் புலவர்களின் வாக்கி

லிருந்தும் பல சொற்றொடர்களையும் கருத்துக்களையும் எடுத்தாண்டனர். சில உதாரணங்கள் தருதும்,

"ஓடாத்தானை யொண்டொழிற் கழல் (பெரும்பாண்)

"ஓடாத்தானை" (சீவக. 7)

"வான்மதியிழந்த மீனினம்போல" (பெருங். 1, 47, 260)

"மதியங்கெடுத்த வயமீனெனத் தம்பி மாழாந்து"
(சீவக. 23)

"செந்நெலின்,
வான்புகழ் களிறுமாய் கழனி" (சீவக. 54)

"களிறுமாய்க்கும் கதிர்க்கழனி" (மதுரைக். 247)

"புகைவிரிந்தன்ன பொங்குதுகில்" (புறநா. 398)

"ஆவியன்ன பூந்துகில்" (சீவக. 67)

"ஆவியந்துகில் புனைவதன்றி" (கம்பரா.)

"புகைமுகந்தன்ன மாசில்தூவுடை" (திருமுருகு. 138)

"ஆவி நுண்டுகில்" (பெருங். 1, 40, 228)

"நேரிழைமகளி ருணங்குணக் கவரும்
கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை"

"பொற்காற்புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற்சிறுதேர் முன்வழிவிலக்கும்" (பட்டினப். 22,26)

"பொற்சிறுதேர்மிசைப் பைம்பொற்போதகம்
நற்சிறுரூர்தலி னங்கைமார்வெரீஇ
யுற்றவர்கோழிமேல் எறிந்தவொண்குழை
மற்றத்தேருருள்கொடா வலிமைசான்றவே"
(சீவக. 89)

"தாய்முலைதழுவிய குழவிபோலவும்
மாமலைதழுவிய மஞ்சுபோலவும்" (சீவக. 100)

"மாமலையணைந்த கொண்மூப்போலவும்
தாய்முலைதழுவிய குழவிபோலவும்"
(பெருங். 1, 12, 65-66)

"இருநோக் கிவளுண்க ணுள்ளதொரு நோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து" (திருக்குறள் 1091)

"நஞ்சுமமுதமுமேபோல் குணத்தபொருகயற்கண்"
(சீவக. 167)

"நாய்மேற் றவிசிடுமாறு" (பழமொழி 75)

"அடுகளிற்றெருத்தினிட்ட வண்ணப்பூந்தவிசு தன்னை
ஞமலிமேலிட்டதொக்கும்" (சீவக. 202)

"தொழுனை வார்மண லகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅப்போல" (அகநா. 59)

"தொழுனையாற்றுட் கோனிறவளையினுர்க்குக்
குருந்தவ னொசித்தது" (சீவக. 209)

"கொல்லையஞ்சாரற் குருந்தொசித்தமாயவன்"
(சிலப். ஆய்ச்சியர்)

"ஒற்றுமுரைசான்ற நூலுமிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன்கண்" (குறள். 581)

"மன்னர்தங்கள் கண்ணென வைக்கப்பட்ட நீதி"
(சீவக. 233)

தேவர்தம் நூலின்கண் சந்தர்ப்பத்திற்கேற்ற செய்யுட் சந்தங்களைக் காணலாம். இச்சந்தங்கள் ஆசிரியர் தெளிவு படுத்தவெண்ணிய சுவைகளை நன்கு விளக்கி நிற்கும்.

"சீறடியகிண்கிணி சிலம்பொடு சிலம்ப"

எனத் தொடங்கும் சிந்தாமணிச் செய்யுளோடு, கம்பராமாயணம் சூர்ப்பனகைப் படலத்து,

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க"

எனத் தொடங்கும் செய்யுட்களை ஒப்பிட்டு நோக்குக. பிறிதோரிடத்தில்,

"வாளிரண்டும் மாறுவைத்த போன்மழைக்கண் மாதரார்"
(1985)

எனக்கூறுவர். இதனைக் கம்பராமாயணம் கும்பகன்னன் வதைப்படலத்துக் காணப்படும்,

" உறங்குகின்ற கும்பகன்ன உங்கள்மாய வாழ்வெலாம் "

என்று தொடங்கும் செய்யுளோடும்,

" பரங்கிடந்த மாதிரம் பரித்தபாழி யானையின் "

எனத் தொடங்கும் கம்பராமாயணச் செய்யுளோடும் ஒப்பிட்டுச் சந்த இன்பத்தை அறிக.

தேவர் திருக்குறளிற் பெரிதும் பயின்றவர் என்பதை அவரது செய்யுட்களைக் கொண்டே நிறுவலாம்.

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்பதில் "

என்ற அரிய குறட் கருத்தை,

" இடுக்கண்வந் துற்றகாலை யெரிகின்ற விளக்குப்போல
நடுக்கமொன் றுனுமின்றி " (509)

என்ற பாடலில் அமைத்துள்ளார்.

" இன்னுமை யின்பமெனக் கொளின் ஆகுந்தன்
ஒன்னுர் விழையும் சிறப்பு "

என்ற குறட் கருத்தை,

" துன்பத்தாற் றுகைக்கப் பட்டார்
இன்பமென் றிருத்தல்போலு மரியதிவ் வுலகின் "

என்ற செய்யுளிற் காணலாம்.

" அருமணி யிழந்தொர்நாக மலமருகின்ற தொத்தான் "

என்பதனை, இழந்ததை மீட்டும் பெற்று மகிழ்ச்சியுற்றதாகக் கூறும் இதனை,

" இழந்த மணிப்புற் றரவெதிர்ந்த தெனலானுள் "

என்ற இராமாயணத்தோடும் ஒப்பிடுக.

"தன்னையான் முகத்தைநோக்கிற்
றான்முலை முகத்தைநோக்கும்" (1626)

என்ற வரியில்,

"யானோக்குங்காலை நிலனோக்கும் நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்"

என்ற குறட் கருத்தைக் காண்க.

"தொழுததங் கையினுள்ளுந்
துறுமுடி யகத்துஞ்சோர
வழுதகண் ணீரினுள்ளும்
அணிகலத் தகத்துமாய்ந்து
பழுதுகண் ணரிந்துகொல்லும்
படையுட னொடுங்கும்பற்றா
தொழிகயார் கண்ணுந்தேற்றந்
தெளிகுற்றார் விளிகுற்றாரே"

இதனை,

"ஒன்னாரழுத கண்ணீருமனைத்து" (குறள். 828)

என்ற திருக்குறளோடும் ஒப்பிடுக.

"அஞ்சனக் கோலினாற்றா நாகமோ ரருவிக்குன்றில்
குஞ்சரம் புலம்பிவீழக் கூர்நுதியெயிற்றிற் கொல்லும்
பஞ்சியின் மெல்லிதேனும் பகைசிறி தென்னவேண்டா"

என்ற செய்யுட்கண்,

"உருவுகண் டெள்ளாமைவேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து"

என்ற குறட் கருத்தைக் காணலாம். தேவர்,

"ஒற்றர் தங்களை யொற்றறி வுய்தலும்"

என்று கூறும் இடத்தில், திருக்குறள் 'ஒற்றாடல்' அதிகாரச் செய்யுட் கருத்துக்களை உள்ளவாறே காணலாம்.

"வாள்மதர் மழைக்கணோக்கி
யாள்விருப் புற்றுநின்றா ரவ்வளைத் தோளினாரே" (2447)

என்ற கருத்தை,

"தஞ்சொற்கள் குழறத்தங்கண் தலைதடுமாறிநின்றார்
மஞ்சர்க்கு மாதரார்க்கு மனமென்ப தொன்றேயன்றோ"

என்ற கம்பராமாயணத்தோடும் ஒப்பிடுக. மற்றும் மன்னர்க்கறிவுரையாகக் கூறுமிடத்துத்,

"தோய்தகை மகளிர்த் தோயின்"

என்ற செய்யுட்கண்ணும்,

"வண்ணப்பூ மாலைசாந்தம் வாலணிகலன்களாடை
கண்முகத் துறுத்தித்தூய்மை கண்டலாற் கொள்ள
வேண்டா"

என்ற செய்யுட்கண்ணும், அர்த்தசாத்திரம் என்ற பொருணூல் கருத்துக்களைக் காணலாம்.

"தடத்திடைக் கூகையொன்றே"

என்ற சிந்தாமணிச் செய்யுளில்,

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை"

என்ற குறட் கருத்தைக் காணலாம்.

இனித் துறவு நிலையையே பெரிதும் போற்றும் முனிவராதலின் தேவர், பலவிடங்களிலும், மகளிரை யிழித்துக் கூறுவர். "அன்பு நூலாக" (1597) "பெண்ணெனப்படுவ கேண்மோ" (1598) முதலிய செய்யுட்களைக் காண்க. பின்னர்க் காட்டப்பட்ட செய்யுட்கண், "எண்ணிப் பத்தங்கையிட்டா லிந்திரன் மகளுமாங்கே, வெண்ணெய்க் குன்றெரியுற்றாற்போல் மெலிந்து பின்னிற்கும்" என்பர்.

கல்விப் பொருளின் சிறப்பைத் தேவர் அழகுபடக் கூறுவர்.

"கைப்பொருள் கொடுத்தும்கற்றல்
கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்குநெஞ்சின்
மெலிவிற்கோர் துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகள்பொன்னும் புகழுமாம்" (1595)

என்ற செய்யுளை நோக்குக. உலக வழக்குச் செய்திகள் சிலவற்றையும் இப்பெருங்காப்பியத்திற் காணலாம்.

"கார்த்திகை விளக்கிட்டன்ன" (256)

என்பது சிந்தாமணி,

"கார்த்திகைநாளிற் கழிவிளக்குப்போன்றனவே"

என்பது களவழி நாற்பது. கார்த்திகை நாளில் விளக்கேற்றுவது இன்னும் காணலாம்.

"பாம்பெழப் பாம்புகொண்டாற் பகவற்கு மரிது
தீர்த்தல்" (1280)

என்ற இடத்தில், கிரகண காலத்தில், அதாவது மதியைப் பாம்பு தீண்டும்போது, ஒருவனை அரவு தீண்டினால், அவன் பிழைப்பதரிது என்று குறிப்பர்.

சிந்தாமணியிற் கூறப்படும் மணச் சடங்குகள் பெரும்பாலும் பிராமணர் மணச் சடங்குகளை ஒத்திருத்தல் கண்டுணரத் தக்கது. 2463-ஆம் செய்யுட்டொடங்கி இலக்கணையார் திருமணச் சடங்கு கூறப்பட்டுள்ளது. அங்கே தருமணல், தருப்பை, சமிதை என்ற இவைகளைக் கொண்டு மண வேதிகை அமைத்தல், அக்கினிப் பிரதிட்டை செய்தல், நெற்பொரி பெய்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காணல், நெய்யால் ஆகுதி செய்தல், தாரை வார்த்தல், பாணிக்கிரகணம் செய்தல், கட்டிலேறல் முதலிய பல சடங்குகளும் முறையே கூறப்பட்டிருத்தல் காணலாம். இச்சடங்குகள் சங்க காலத்தில் சிறுபான்மை வழங்கினவென்பது, அகநானூற்றுச் செய்யுட் கொண்டுணரலாம். திருமங்கலியம் தரித்தல் கூறப்படவில்லை.

எனவே சிந்தாமணி இயற்றப்பெற்ற காலத்து ஆரியர் மணப் பழக்கங்கள் பெரும்பாலும் பின்பற்றப்பட்டன என்று கூறலாம். சமணர்கள் வடமொழியும் வல்லுநராக லின், வடமொழியில் மந்திர வடிவாக அமைந்த இவ்விவா கச் சடங்குகளைப் பெரிதும் அறிந்து அவற்றைக் கையாண் டிருத்தல் கூடும். மயிர் கழித்தல் முதலிய சமணச் சடங்கு களும் முறையாகக் கூறப்பட்டுள்ளன.

நிற்க இவ்வரிய காப்பியத்திற்குப் பேருரை வகுத்தவர் ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் என்ப. அவர் சைவராயிருந்தும் சமண மதக் கொள்கைகளை நன் குணர்ந்து கவிக் கருத்துக்கேற்ப வுரை வகுத்திருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது. இவர் உரையில்லையானால் பல பகுதிகளின் பொருள் நமக்கு விளங்கியிராது. "இருள் பருகும் அருமணி" என்ற இடத்தில், இருளைப் போக்கும் ஒளியுள்ள அரதனம் என்று சொல்லிவிடாமல், சமணர் நூலின் வரலாற்றை யுட்கொண்டு, "சிந்து ராக ரத்தில் சிந்துர வருவி வீழ்ந்து பதினாறு சதுர் யுகம் சிவப் பேறின முழு மாணிக்கம் இருளைக் கெடுத்தலின் இருள் பருகு மருமணி யென்றார்" என்று அணி பெற எழுதுவர். இவரது பத சாரங்கள் செம்பாகமானவை.

உதாரணமாகச் "சேலனைய சில்லரிய" (167) என்ற செய்யுட்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் பின்வருமாறு உரை எழுதுவர்.

"சில அரியவாய்ச் சிவந்து மாயோனையும் பாற்கடலை யும் முகத்தே வைத்தாற் போன்ற தன்மையவாய் மாலு றுப்பனவாய் மகிழ்ச்சி செய்வனவாய்த் துன்பத்தாலும் நஞ்சும் அமுதும் போலும் குணத்தனவாகிய கண் செவி யுற நீண்டு அதற்கேற்ப அகன்றன என்க.

"கரும்பே தேனே யமிர்தே காமர் மணியாழே"

என்ற (2453) செய்யுட்கு இவர் எழுதும் உரை மிகவும் சிறந்ததொன்று.

"கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாயிருத்தலின், கரும்பு. நல்லாருறுப்பெலாங்கொண்டு இயற்றலின் தேன். இவ்வுலகிலில்லாத மிக்க சுவையும், உறுதியுங் கொடுத்தலின் அமிர்து. காம வேட்கையை விளைவித்து இனிய பணி தோற்றலின் மழலையை யுடையதொரு யாழ். கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலின் திரு. நடையால் அன்னம். சாயலால் மயில். காலமன்றியும் கேட்டோர்க்கு இன்பஞ் செய்தலின், குயில். மன்னன் மகளே யென்றல் புகழன்மையின் மன்னன் பாவாயென்றது. அவன் கண் மணிப்பாவையென்பதுணர்த்திற்று; இனி அவள் கொல்லிப் பாவையல்லள்; மன்னன் பாவையென்றுமாம். சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலின் பூவை. நோக்கத்தால் மான்" என்றது காண்க.

இவர் சிற்சில இடங்களில் ஆற்றொழுக்காகப் பொருள் கோடலை விடுத்து மாட்டு என்னும் பொருள்கோள் உறுப்பைத் தழுவிப் பல வரிகளிற் சிதறிக் கிடக்கும் மொழிகளை யிணைத்துப் பொருள் கொள்வர் என்று சிலர் கடிவர். ஆனல், அவர் அவ்விடங்களில்தாம் அவ்வாறு எழுதிய உரைகட்குக் காரணம் கூறியே செல்வர். உதாரணமாக, (104)-வது செய்யுளின் உரையில் 'பற்றிற் பனிப்ப என்க' என்றெழுதி, மேலும் 'இத்தொடர்நிலையிற் சொற்களைத் துணித்துப் பலவிடத்துங் கூட்டியது, செய்யுளுறுப்பு இருபத்தாறிலும் மாட்டென்பது ஒருறுப்பாதலின் என்றும்' கூறினர் என்பர். மற்றும், 1273-வது செய்யுள் உரையில், 'இங்ஙனம் மாட்டுறுப்பாகக் கூறுது செவ்வனே கூறிற் பாம்பு கடித்தமை கடுகக் கூறிற்றுகாமை யுணர்க' என்று குறிப்பர். எனவே நச்சினர்க்கினியர் உரைச் சிறப்புப்பற்றியே இவ்வாறு மாட்டுறுப்பாகச் சில இடங்களிற் கூறினர் என்பதுணரப்படும். இவரது பெயரும் உரைப்பகுதியில் இவர் ஆங்காங்குச் சிவபெருமானைப் போற்றிப் புகழும் இடங்களும் இவரைச் சைவ சமயி எனக் கோடற்குத் தக்க சான்றுகள் என்று ஆராய்ந்து கூறுவர் இந்நூலின் பதிப்பாசிரியரான டாக்டர் வே. சாமிநாதையர்.

## நாலடியார்

பண்டைத் தமிழ் நூல்களில் பதினெண்கீழ்க் கணக்கென்று ஒரு தொகுதி உண்டு. கீழ்க்கணக்கென்பது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும்பற்றிப் பெரும்பாலும் வெண்பாவினுற் பாடப்பெற்றவை.

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் பகுதி
அறம் பொரு ளின்பம் அடுக்கியல் வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்."

நாலடியார் என்னும் நூல் கீழ்க்கணக்கிலொன்று. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" "நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழிகளும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்ற ஔவையார் வாக்கும் இந்நூலின் பெருமையை வலியுறுத்தும். இஃது நாலடி நானூறு என்றும் பெயர் பெறும். கி.பி. 9-ஆம் நூற்றுண்டிலிருந்த பெருமுத்தரையரைப்பற்றி இந்நூல் கூறுவதால் இஃது அவர்கள் காலத்துக்குப் பிந்தியதாம் என்பர் ஒரு சாரார். ஐந்தாம் நூற்றுண்டில் வச்சிரநந்தி என்னும் சமணமுனிவர் மதுரையில் நிறுவிய சங்கத்தினரால் இந்நூல் இயற்றப்பட்டிருக்கக்கூடும் என்பர் சிலர்.

## வரலாறு

சமண முனிவர் எண்ணுயிரவர் ஓர் காலத்திற் கொடிய பஞ்சத்தின் காரணமாகப் பாண்டிநாட்டை அடைந்து, பாண்டியனுல் ஆதரிக்கப்பெற்று, அவனது அவைக்களத்தே வீற்றிருந்து, பின்னர்ப் பன்னுள் கழிய, வற்கடம் நீங்கியவுடன் தமது நகர்க்குச் செல்வான் விடைவேண்ட, மன்னன் அவர்களைப் பிரிதற்கு மனம் இணங்காணுகைப் புலவர் உறுதிப்பொருள்கள் விளங்குமாறு, ஒவ்வொரு வெண்பாவைப்பாடிச் சிற்றேட்டில் வரைந்து தம் பீடத்தின்கீழ் வைத்துவிட்டு அந்நாட்டை அகன்றனர். பின்னர் அரசன் அறிந்து, அப்பாடல்களில் தொடர்பின்மை உணர்ந்து, அவற்றை வைகையாற்றில் எறியுமாறு கட்டளையிட்டான். எறியப்பட்ட பாடல்களில்

400 பாடல்கள் நீரில் எதிரேறிச் செல்ல அரசன் வியந்து அவற்றைத் தொகுக்கச் செய்தனன் என்ப. பதுமனூர் என்பவர் இந்நூற்குப் பால், இயல் இவற்றை வகுத்தனர் என்றும் கூறுப. இதனை,

> '' மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றி
> னெண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
> யெழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
> பழுதிலா நாலடியைப் பார் ''

என்னும் வெண்பாவானறியலாம். நீர் வேகமாய் ஓடும் ஆற்றில் கணவாயருகில் சுழல்மிக்க இடங்களில் மிதக்கும் பொருள்களை இடின், அவை அச்சுழல்வாய்ப்பட்டு நீரெதிரேறும், இதனையேதான் இவ்வரலாறு குறிப்பது போலும்.

சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர், பிறரும், இச் சமயத்தார்,

> '' சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா ''
>
> (நாலடி. பழவினை. 10)

என்றதனுணர்க என உரைத்ததனால், இந்நூல் சமண சமயத்தார் இயற்றியதெனத் தெரிகிறது. ஆயினும் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது தமிழ் இலக்கிய வரலாற்றில் "இந்நூலைப் பாடிய புலவர்கள் யாவரும் சமணர் என்று தோன்றவில்லை என்றும், இந்நூலுள் ஒரு சமயமும் விதந்தோதப்படவில்லை என்றும், 373-ஆம் பாட்டில் செங்கண்மாலையும், 400-ஆம் செய்யுளில் கண் மூன்றுடை யானையும்பற்றிய குறிப்புக் காணப்படுகின்ற'' தென்றும் கூறுவர்.

எனினும் செல்வம், யாக்கை, இளமை இவற்றின் நிலையாமையைக் குறித்து இந்நூலிற் காணப்படும் செய்யுட்களும், இல்லறவின்பத்தைச் சால இழித்துரையாடித் துறவறத்தின் பெருமையைக் கூறும் செய்யுட்களும், இந்நூலை

இயற்றினோர் சமணர் என்பதைத் தெளிவுறக் காட்டும். 6-ஆம் அதிகாரத்தில்,

"மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்"

என்ற செய்யுட்கண் திருமணத்தைக் கடி என்றது கற்றறிந்தாரால் கடியப்படுவதாகலின் என்ற கூற்றே இந்நூல் சமணர் செய்ததென்பதற்குத் தக்க சான்றாகும்.

மற்றும் நீதி ஒழுக்கங்களை வற்புறுத்திக்கூறும் இந் நூலின் பெருமை அளவிடற்கரியது. சிறந்த உவமை களைக்கொண்டு பசுமரத்தாணியென மக்கள் உள்ளத்திற் பதியுமாறு பல உண்மைகளை உரைப்பர் இச்சமணப் பெருந்தகையார்.

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்
சேனைத் தலைவ ராய்ச் சென்றோரு—மேனை
வினை யுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள"

என்ற இந்த வெண்பாவில், ஒற்றை வெண்கொற்றக் கொடையின் தண்ணிய நிழலில் தங்கிச் சேனைத் தலைவ ராக இருந்த மன்னர்களும், ஊழ்வினை வசத்தால் எல்லா வற்றையுமிழந்து, கொண்ட மனையாளையும் பிறர் கவரக் கீழ்நிலையை அடைவர் என்று குறிக்கப்பட்டது. ஈற்றடி தன்மனைவியையும் பிறனிடம் விற்க நேர்ந்து துன்புழந்த அரிச்சந்திரனைக் கருதி எழுந்ததுபோலும். செல்வம் மின்னல்போல் அழியுமாலைத்து என்றும், அறம் புரியாது அவமே குவிக்கப்படும் செல்வம், ஈக்கள் சேர்ந்த தேன் போலப் பிறரால் கவரப்படும் என்றும், தீவளியால் கனி மட்டுமின்றிக் காய்களும் பூவும் உதிர்வனபோன்று, இளைஞரும் இறப்புக்குள்ளாவதியல்பென்றும், புன்னுனி மேல் நீர்போல் யாக்கை நிலையாமைத் தன்மையுடைத்

தென்றும், கொலைவல்லுநர் யாமையைப்பிடித்து அதனைப் பக்குவம் செய்வான்வேண்டி யிடப்பட்ட நீரில், ஆமை சின்னாழிகையளவில் தனக்குநேரவிருக்கும் துன்பறியாது, துள்ளி விளையாடுவதை ஒக்கும் கொலைவல் பெருங் கூற்றம்கோட்பார்ப்ப ஈண்டு வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு என்றும் கூறுவர். மற்றும்,

"மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவற் காங்கே பிணப்பறையாய்ப் பின்றை
ஒலித்தலும் உண்டென்று"

மக்கள் மனத்திற் றைக்குமாறு யாக்கை நிலையாமையைக் கூறுவர்.

"எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப்படும்"

என்பதற்கு,

"மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினும் செருப்புத்தன் காற்கேயாம்"

என்று ஓர் புலவர் கூறும் உவமை மிகவும் பாராட்டத் தக்கது. இப்பண்புகள் பற்றித்தான்,

"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

எனச்சான்றோர் இந்நூலையும், திருக்குறளையும் பாராட்டிப் போந்தனர்.

மற்றும் இந்நூலில் பல சொல்லணிகள் பொருளணிகள் விரவி நிற்கக் காணலாம். உதாரணமாக,

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்"

இவண் திங்களும் சான்றோரும் சில குணங்களால் ஒப்ப ராயினும் மறுவாற்றுமையால் திங்களினுஞ் சான்றோர் சிறந்தவர் என்பது போதருதலால், இது குறிப்பால் வந்த வேற்றுமையணி. அதாவது உபமான உபமேயங்களுள் யாதாயினுமொன்றை வெளிப்படையாகவாவது குறிப் பாகவாவது விசேஷமுடையதாகச் சொல்வது. இதனை வடநூலார் வியதிரேகாலங்காரம் என்பர்.

'' இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையின்
அரிமா பிழைப்பெய்த வப்பினிற் றீதோ
நரிமா வுளங்கிழித்த கோல்''

இதிற் பின்னிரண்டடிகள் பிறிதுமொழிதல் என்னும் அணி. அதாவது பின்வாக்கியத்திற் குறித்த கருத்து முன் வாக்கியத்திற் கூறிய பொருளுக்குக் காரணம் என்ப. இவ்வாறு ஒன்றைக் காரணம் காட்டிச் சாதித்தல் ஏது வலங்காரம் என்ப.

'' சிலநாளடிப் படின், கல்வரையு முண்டாம் நெறி''

என்பதும் மேற்கூறிய அணியாகும்.

'' கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடிந்துநீர் கொள்ளினு மின்சுவைத் தேயாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறூர்தம் வாயிற் சினந்து''

இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி.

'' கள்ளார் கள்ளுண்ணூர் கூடிவகடிந் தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற் பொய்கூறூர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்''

இதில் சான்றோர் தன்மை கூறப்பட்டதால் தன்மை நவிற்சியணி.

" நளிகடற் றண்சேர்ப்ப நாணிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழல்போ லகன் றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு"

இது முற்றுவமையணி. எனவே இச்செய்யுளில் உவமானம், உவமேயம், உவமவுருபு, பொதுத்தன்மை என்னும் நான்கும் அமைந்திருக்கக் காணலாம்.

" நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"

என்ற குறளோடும்,

" பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு"

என்ற நாலடிச் செய்யுளோடும் ஒப்பிட்டு நோக்குக.

" மன்னர் திருவும் மகளிர் எழினலமும்
துன்னியார் துய்ப்பத் தகல் வேண்டர்—
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரங்க ளெல்லாம்"

இதில் 'மன்னர்திரு,' 'மகளிரெழினலம்' என்னும் இரு பொருள்களையும் "துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா" என்று பொதுவாகிய ஒரு அறத்தில் முடித்ததனுல், இது ஒப்புமைக் கூட்டவணி. பின்னிரண்டடி எடுத்துக்காட்டுவமையணி இவ்விரண்டணிகளும் கூடிவந்ததனுல் சேர்வையணி அல்லது சங்கராலங்காரம்.

" கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாதொழிந்த பகலு முரைப்பின்
படாவாம் பண்புடை யார்கண்"

இங்கே நாள், வைகல், பகல் என ஒரு பொருளையே குறிக்கின்ற பல சொற்கள் அடுத்து வந்ததனுல், பொருட்

பின்வருநிலையணி. கல்லாது போகியநாள், செல்லாது வைகிய வைகல், ஒழிந்தபகல் என மூன்றுக்கும் இயையு மாறு இறுதியில் "பண்புடையார் கண்படாஅவாம்" என்று வினையை வைத்தது கடைநிலைத் தொழில் தீவக வணி.

> "ஊரங்கணநீர் ;" "அங்கண் விசும்பில் ;" "பாலோடளாய நீர் ;" "மனத்தான் மறுவிலரேனும் ;" "உறுபுலி யூனிரை யின்றி"

எனத் தொடங்கும் நாலடியார்ச் செய்யுட்களில் எடுத்துக் காட்டுவமையணி காணப்படும்.

> "நல்லகுல மென்றும் தீயகுலமென்றும்
> சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
> ஒண்பொரு ளொன்றோ தவம் கல்வி யாள்வினை
> என்றிவற்றாற் சொல்லப் படும்"

இங்கே,

> "ஆக்குமறிவா னலதுபிறப்பினுன் மீக்கொளுயர்
> விழிவு வேண்டற்க"

என்னும் நன்னெறியையும்,

> "சாதியிரண் டில்லை"

யென்ற நல்வழியையும் ஒப்பிடுக.

> "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வாச்
> செய்தொழில் வேற்றுமையால்"

என்ற திருக்குறளையும் காண்க.

> "தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
> தமரன்மை தாமறிந்தா ராயினவரைத்
> தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
> தம்முளடக்கிக் கொளல்"

இப்பாட்டில் "தமர்" என வந்த சொல்லும் பொருளும் மீண்டும் பலவிடத்து வந்தமையால், சொற்பொருட் பின் வருநிலையணி.

**ஐந்திணை எழுபது**

இதனை இயற்றியவர் மூவாதியர். பெயர்கொண்டு இவரைச் சமண சமயத்தவர் என்னலாம் எனினும்,

"கண்ணுதலின்,
முண்டத்தா னண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்
கண்டத்தா னீன்ற களிறு"

என்று விநாயகர் தோத்திரம் சொல்லுதலின் சைவசமயத் தவராகவே கோடல் முறை. ஆனால் இதுபோன்ற கடவுள் வாழ்த்துப் பாடல்கள் நூலாசிரியரல்லாது வேறு பிறரால் இயற்றப்பெற்றிருத்தலும் கூடும். சங்க காலத்திலோ அதனை அடுத்தோ விநாயகர் துதி கூறப்படுதற்கிடமில்லை. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த பல்லவமகேந்திரவர்மனுக்குப் பிறகுதான் விநாயகர் வழி பாடு தமிழ்நாட்டிற் போந்திருத்தல் வேண்டும் என்பதே அறிஞர் கொள்கை. இந்தக் கடவுள் வாழ்த்துச் செய்யுட் களும் நூலாசிரியரே இயற்றினர் என்று கொண்டால், அவை விரவிவந்த நூல்களும் 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின் எழுந்தன ஆதல் வேண்டும். இந்நூல் முல்லை முதலிய அகனைந்திணையை விளக்கும் 70 பாடல்களாலாயது. சிறந்த உவமைகளையும் வருணனைகளையும் தன்னகத்தே கொண்டது.

இயற்கை வருணனைகள் பல இந்நூலிற் காணலாம். உதாரணமாக,

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலை வருடக்—கன்றமர்ந்
தாமா சுரக்கும் அணிமலை நாடன்" (ஐந்திணையெழு. 4)

மற்றும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி வரைவு கடாவுந் துணையாக்,

"காய்ந்தீய லன்னே! இவளோ தவறிலள்
ஓங்கிய செங்நீ ரிழிதருங்கான் யாற்றுட்
டேங்கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தாஞ்சிவப் புற்றன கண்" (ஐந்திணையெழு. 7)

என்று கூறுவது மிகவும் நயமுடைத்து.

மற்றும் முல்லையிற்றலைவி தலைவன் பிரிவாற்ருது கூறும் பகுதிகள் மிக்க சுவையுடையன. உதாரணமாக,

"தண்ணறுங் கோடல் துடுப்பெடுப்பக் காரெதிரி
விண்ணுயர் வானத் துருமுரற்றத்—திண்ணிதிற்
புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்"

என்ற செய்யுளைக் காண்க.

பாலைப்பகுதியில்,

"முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக்கிரை பார்க்கும்
கள்ளர் வழங்கும் சுரமென்பர் காதலார்
உள்ளம் படரு நெறி" (ஐந்திணையெழு. 36)

என்ற பொருள்வயிற்பிரிந்த தலைவனைக் குறித்துத் தலைவி கூறுவதன் நயம் காண்க.

**ஏலாதி**

இதனை இயற்றியவர் மாக்காயனார் மாணக்கர் கணிமேதையார் அல்லது கணிமேதாவியார்.

"அறுநால் வராய்ப்புகழ் சேவடி யாற்றப்
பெறுநால்வர் மேனி வழங்கிப்—பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மன்ருெழிந்து விண்ணேக்க
இறைபுரிந்து வாழ்த லியல்பு"

(இ-ள்.) இருபத்துநான்கு தீர்த்தகரருள் ஆராய்தற்குரிய புகழ் வாய்ந்த திருவடிகளைத் தாங்கப்பெறும் நான்கு வகைத் தேவராசி புருஷர்கள் காத்தளிக்க

நாமடைந்த நற்பயனையும் தரும் வேதங்களினால் உணர்த் தப்படும் கடவுளைத் துதித்து வாழுங்கள்.

என்ற செய்யுளால் இவர் அருக சமயத்தினர் எனத் தெளியலாம். ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு, அதிமதுரம் இவற்றாற் செய்த சூரணம் போன்ற நூல் ஆகலின் ஏலாதி எனப் பெயர் பெற்றது.

இதனை,

'' இல்லற நூலேற்ற துறவறநூ லேயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து—நல்ல
அணிமேதையாய் நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து '' (ஏலாதி. 82)

என்ற வெண்பாவா னுணரலாம். சிறந்த நீதிகளைத் தன் னகத்தடக்கியது இந்நூல்.

'' நிறையுடைமை நீர்மையுடைமை கொடையே [யுடைமை
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்—மறை
வேயன்ன தோளா யிவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும் ''

என்றது காண்க.

'' செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு ''

'' மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து ''

'' இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்குவது ''

என்ற குறள்களின் கருத்து,

'' இன்சொலளாவ லிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து '' (ஏலாதி.

என்ற செய்யுட்கண் மிளிர்தல் காண்க.

''பிறர் மறையின்கட் செவிடாய்''

என்ற நாலடிக் கருத்தும்,

''கொல்லான் புலாலை மறுத்தானை''

என்ற குறட் கருத்தும்,

''கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேற்
செல்லான் சிறியாரினம் சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் றீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற்கிவை'' (ஏலாதி. 19)

என்ற செய்யுளிற் காணலாம்.

''கோடியர் நீர்மைபோல, ஆடுநர் கழியு மிவ்வுலகம்''

என்ற புறப்பாட்டின் கருத்தை,

''அணியின்
அரங்கின் மேலாடுநர் போலாகாம னன்றும்
நிரம்புமேல் வீட்டுநெறி'' (ஏலாதி. 24)

என்ற செய்யுளிற் காணலாம்.

''பாடகம் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகம் சாராமை நாடுங்கால்—நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே''
(ஏலாதி. 30)

என்ற செய்யுட் கொண்டு இவர் சமணர் என நன்கு அறியப்படும். சமணர் மேனாட்டிற் பியூரிட்டன் என்ற வகுப்பினரைப்போன்று நாடக விரோதிகள். நாடகம் சிற்றின்ப உணர்ச்சியைப் பெருக்கும் என்பது அவரது கொள்கை.

மற்றும்,

''பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கும்
இழுக்கா வியன்ற தறம்''

என்ற செய்யுட் கருத்தை,

"பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனில சொலுன்கும்
மறலையின் வாயினவா மற்று" (ஏலாதி. 28)

என்றதிற் காணலாம்.

"மாண்டவர் மாண்ட வறிவினன் மக்களைப்
பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால்—பூண்ட
ஔரதனே கோத்திரசன் கானீனன் கூடன்
கிரிதன் பௌ நற்பவன் பேர்" (ஏலாதி. 30)

என்ற செய்யுட்கண் பலவகையாகத் தோன்றும் மக்களின் பெயர் கூறுவார். இது கொண்டு இவர்க்கு வடநூலின்கண்ணும் பயிற்சியுண்டென்று கருதலாகும்.

அறன் வலியுறுத்தலிற் கைதேர்ந்தவர் இவ்வாசிரியர்,

"காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்—சாலவும்"
(ஏலாதி. 36)

என்றது காண்க.

பல வடமொழிப் பெயர்களும், திசைச்சொற்களும் இந்நூலில் விரவி நிற்கக் காணலாம். உதாரணமாக,

"வைசிரவண்ணன் (49); அசனம் (50); தொண்டிருந்துண்ண (ஒன்பது); பண்டிதர் (9); சாரிகை (12) ஔரதன், கோத்திரசன், கானீனன், கூடன், தேவாதிதேவன் முதலியன காண்க.

"அறுவர்தம் நூலு மறிந் துணர்வு பற்றி
மறுவரவு மாறுன நீக்கி—மறுவரவின்
மாசாரியனு மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசாரியன தமைவு"

என்ற இடத்தில் ஆசாரியனது இலக்கணம் அழகு பெறக் கூறுவர் இவ்வாசிரியர்.

### சிறுபஞ்சமூலம்

ஐந்து அரிய பொருள்கள் அடங்கிய 100 வெண்பாக் களானியன்ற நூல். இதனை ஆக்கியவர் காரியாசான் என்பவர்.

> "மல்லிவர்தோண் மாக்காயன் மாணாக்கன் மாநிலத்துப்
> பல்லவர்நோய் நீக்கும் பாங்கினாற்—கல்லா
> மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
> சிறுபஞ்ச மூலம் செய்தான்"

என்னும் இந்நூலின் இறுதி வெண்பாவால் இவர் மாக்கா யனார் மாணாக்கர் என்பதும், முதற் செய்யுட்கணுள்ள கடவுள் வாழ்த்தால் அருக மதத்தைச் சார்ந்தவர் என்றும் துணியலாம். ஐந்து சிறந்த மூலிகைகளைப் போன்ற ஐந் தைந்து அரிய நீதிகளைத் தன்னகத்துக் கொண்ட நூல். ஐந்து மூலிகைகளாவன: சிறுவழுதுணை, சிறுநெருஞ்சி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி என் பனவாம்.

### திணைமாலை நூற்றைம்பது

இதனை இயற்றியவர் ஏலாதி ஆசிரியராகிய கணி மேதாவியார். இது அகத் துறைகளை விரிப்பது. இதில் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற முறை வைப்பைக் காணலாம். பாவலரும் நாவலரும் பரிந்து கொண்டாடும் பான்மையது. இதனாலன்றே பாயிரத்தின் கண்ணும்

> "முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
> கனிந்தார்"

எனக் காணப்பட்டுள்ளது.

> "வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
> பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
> மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
> கையார் பிரிவித்தல் காண்" (திணைமாலை. 5)

அகத் துறையில் அமைந்த இச்செய்யுள், "தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பறிவுறீஇயதாக அமைந்தது.

நல்வினையின் காரணமாகச் செல்வம் விளைவது போன்று, பாத்தியின் கட்டினை விளைந்ததென்றும், தினை விளைந்து முதிரவே, அதனைக் கொய்ய நாட் சொல்லி, கணி என்ற வேங்கையார், தினைப்புனம் காக்கும் மகளிரை அப்புனத்திலிருந்து பிரித்ததென்றும் கூறுமுகத் தான், தோழி சிறைப்புறத்திருந்த தலைவற்குத் தலைவி யின் கூட்டுறவு அதன்மேல் கிடைப்பது அரிதென்றும், புனத்தினின்றும் அழைத்துச் சென்று தலைவியை இற் செறிப்பாரென்றும் கூறியது. மற்றும், சுரத்திடைத் தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய் குரவொடு புலம்பியதாகக் கூறும் துறையில் அமைந்த செய்யுள் மகிழ்வைத் தருவதொன்று. அ∴து பின்வருமாறு:—

"தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய் நீ பாவை யிருங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து" (திணைமாலை. 65)

இச்செய்யுட்கண் குராமரமும், அதன் பாவை போன்ற மலரும், குராவிற்படர்ந்த கோங்குக்கொடி பாவை போன்ற குராமலரை யூட்டி வளர்ப்பதாகக் கூறும் நயமும், ஈன்ற அத்துணையேயன்றித் தான் பயந்த பாவைபோன்ற அலரைக் கோங்கு வளர்க்குமாறு விடுத்து நிற்கும், அம்மரத்தின் இரக்கமற்ற செய்தியும், தலைவியைக் காணாது சுரம் சென்ற செவிலியின் மகட் பாசமும் பிறவும் காணப்படும். இயற்கையெழிலும் மகள் மனப்பாங்கும் தோன்ற நிற்பது இச்செய்யுள். இத் தகைய செய்யுட்கள் 150-ஆல் ஆகியது இச்சீரிய நூல்.

### அறநெறிச்சாரம்

ஓர் நீதிநூல். 226 வெண்பாக்களையுடையது. முனைப்

பாடியார் என்ற புலவராலியற்றப்பெற்றது. இதன் ஆசிரியர் சமண சமயத்தவர் என்ப. இதனை

" தாமரைப் பூவின்மேற் சென்றான் புகழடியை
நாவாற் றுதித்து"

" சிவன்றானும் நின்று கால்சீக்கும் நிழறிகழும்
பிண்டிக்கீழ் "

" நின்ற முக்குடையான் வேந்து."

என்ற வரிகளான் அறியலாம்.

இந்நூல் நச்சினார்க்கினியர் முதலியவர்களால் எடுத்தாளப்படவில்லை. சுமார் 600 ஆண்டுகட்குமுன் எழுந்த நூல் என்னலாம். இவரைப்பற்றிக் காலஞ்சென்ற கா. சுப்பிரமணிய பிள்ளை தமது தமிழிலக்கிய வரலாற்றிற் பின் வருமாறு கூறியுள்ளார். "இவர் தீபங்குடியிற் றிகழ்ந்த அருங்கலான் வயத்தாரால் இயற்றப்பட்ட 'அருங்கலச்செப்பு' என்னும் அறநூலின் வைப்பினைப் பின்பற்றிக் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பெரும்பகுதிகளையுடைத்தாயும் இருநூற்றிருபத்திரண்டு வெண்பாக்கள்கொண்டதாயுமுள்ள இந்நூலை இயற்றினர். இந்நூலுள் அருகனைச் சிவனென்று சொல்லிய முறை மிக வியப்பைத் தரும்.

" அவன்கொல் இவன்கொ லென்றையப் படாதே
சிவன் கண்ணே செய்ம்மின்கள் சிந்தை—சிவன்றானும்
நின்று கால் சீக்கும் நிழல்திகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து "

மற்றும்,

" தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப் பயன் றுய்த்தலால்
தானே தனக்குக் கரி "

என்ற வெண்பாவும் இந்நூற்கணுள்ள தொன்றாம்.

**நரிவிருத்தம்**

சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் இயற்றியது. ஓர் வேடன் கதைவாயிலாக உலகநிலையாமை, யாக்கை நிலையாமை முதலியவற்றை அழகுபட விளக்குவது. தனது ஆசிரியரிடம் ஓர் காப்பியம் இயற்றப் போவதாகத் தெரிவித்தபோது, அவர், அவரது ஆற்றலைச் சோதிப்பதற்காக அருகில் ஓடிய நரியைச் சுட்டிக்காட்டி, அதன் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறு நூல் செய்யுமாறு கூறியதாகவும், அவர் உடனே இந் நூலைச் செய்ததாகவும் வரலாறுண்டு. ''நரிவிருத்தமதாகுவர் நாடரே'' என்பதுபோன்ற அப்பர்சுவாமிகளின் வாக்குகளைக்கொண்டு, இந்நூலும், சிந்தாமணியும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றனவாகக் கொள்ளலாம். ''பல்லவதேயநண்ணி'' என்று இரண்டிடங்கள் சிந்தாமணியிற் காணப்படுவது கொண்டு, பல்லவர் ஆட்சியில். அதாவது சமணப் பல்லவர் ஆதிக்கத்தில் இந்நூல் எழுந்திருக்கக்கூடும் என்று கருத இடமுண்டு.

**சூளாமணி**

இஃது ஓர் சமணபுராண வழிநூல். தோலாமொழித் தேவரியற்றியது. சுரமை நாட்டின்கண் போதநமா நகரத்திலிருந்து அரசுபுரிந்த பயாபதி என்னுமரசன் தன் குமாரனை அவனியாளவைத்து, தான் றுறந்து தன் தேவியுடன் நிர்வாணமுத்தி யெய்திய வரலாற்றை விரித்துக் கூறுவது.

**காலம்**

இந்நூல் யாப்பருங்கல விருத்தியிலும், காரிகைவிருத்தியிலும், சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலும், எடுத்தாளப்பட்டுள்ளது. சோழநாட்டில் கார்வேட் நகரத்திலிருந்து அரசு செய்த விசய மன்னன் காலமே இச்சூளாமணியின் காலம் என்பது நூற்சிறப்பில்,

'' திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன் ''

என்ற தொடக்கத்துச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. கார்வேட்நகரின் காலம் உறந்தைக்கு முந்தியதாகலான், இந்நூல் 1500 ஆண்டுகட்கு முந்தியது என்பர். திரு. தாமோதரம் பிள்ளை. திரு. எம். சீநிவாசையங்கார் அவர்கள் தமது தமிழ் ஆராய்ச்சி என்ற நூலில் (Tamil Studies) பின்வருமாறு எழுதியுள்ளார்.

"தோலா மொழித்தேவர் அரசனுகிய சயந்தன் மாறவர்மன் அவனி சூளாமணியாகிய தந்தையை நினைவுகூரச் சூளாமணி யென்னும் காவியத்தை இயற்றினர் என்று கூறி அவனி சூளாமணி காலம் கி. பி. 620 என்றும், சயந்தன் காலம் கி. பி. 650 என்றும் சுட்டிச் சூளாமணி தோன்றிய காலம் கி.பி. 650 என்பர். இங்கே குறிக்கப்பட்ட மாறவன்மன் ஏழாம் நூற்றுண்டினன். எனவே திருஞானசம்பந்தவர் காலத்தவனும், 63 நாயன்மாருள் ஒருவனுமான நின்றசீர் நெடுமாறன். இவனே சமண சமயத்திலிருந்து சம்பந்தப்பெருமாளுல் சைவத்துக்கு மாற்றப்பட்டவன். இவன் சமணுயிருந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம்.

இந்நூலில் இனிய ஓசையுடன்கூடிய சந்த விருத்தங்கள் பல காணப்படும். அவற்றுட் சில வருமாறு :—

"வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடுமௌவல்
நளிர்கொடியன நறுவிரையக நறுமலரன நறவங்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கொகுடி
ஒளிர்கொடியன உயர்திரளினெ டொழுகிணரன ஓடை"

"வேரிமாலை விம்மவும் விளங்குபூண் டுளும்பவும்
தாரொடார மின்னவுந் தயங்குசோதி கண்கொள
வாரநோக்க கில்லலன் னரசநம்பி மார்களைச்
சாரவாங்கொர் கற்றலத் திருந்துதான் விளம்பினன்."

இந்நூல் சேந்தனது அவைக்களத்தில் அரங்கேற்றப் பட்டதென்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. சூளாமணி என்பது சூடாமணி என்பதன் திரிபென்பர். அஃது ஓர்

தலையணி. சொன்னயம்பொருணயங்களால் எல்லோரும் தலைமேற் கொள்ளத் தக்கது என்ற கருத்தில் இந்நூற் கிப்பெயரிடப்பட்டதுபோலும். சூளாமணி ஓர் தெய்வ மணியெனப் பிங்கல நிகண்டு கூறும். அத்தெய்வமணி யைப்போன்றது என்னும் கருத்தால் இப்பெயரிடப்பட்ட தென்று சிலர் கூறுவர். இனிச் சீவகனைச் "சிந்தாமணியே கிடத்தியால்" என்று பாராட்டியது பற்றி அவன் சரிதை யைக் கூறும் நூற்குச் சிந்தாமணி என்று பெயர் வந்தாற் போன்று, இக்காப்பியத் தலைவனாகிய திவிட்டனைத்,

> "துளங்கா துயர்ந்துலகின் முடிக்கோர்
> சூளாமணியானான்" (முத்திச் சருக்கம். 59)

என்று பாராட்டியது பற்றி இந்நூலுக்குச் சூளாமணி என்று பெயரிட்டிருக்கக்கூடும். இந்நூலின் பெருமையை,

> "பொழிந்து பொருள்விளக்கும் போழ்ந்திருள்கால் சீக்கும்
> இழிந்தவரை யேற்றி நிறுத்தும்—செழுந்தரளத்
> தோளாமணியை நகுந் தோலாமொழீ தொடுத்த
> சூளாமணி யகத்துச் சொல்"

என்னும் வெண்பாவான் உணரலாம். இந்நூலில் சமண சமயக் கொள்கைகள் பலவற்றைக் காணலாம். பழைய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பெறும் பெருமை சான்றது இச்சீரிய பனுவல்.

சுரமை நாட்டையாண்ட பயாபதி மன்னனுக்கு, மிருகாபதி, சசி என்று இரண்டு மனைவியர்கள் இருந்தனர். இவர்கள் வயிற்றில் முறையே விசயன், திவிட்டன் என்ற இரு மக்கள் உதித்தனர். வீரனாகிய திவிட்டன், தனது தந்தை அசுவக்கிரீவன் என்ற வித்யாதர மன்னனுக்குச் செலுத்தி வந்த திறையை நிறுத்தினான். அதுபற்றி அவனை ஓர் மாயச் சிங்கத்தின் மூலமாகக் கொல்ல அச்சக்கிர வர்த்தியின் மந்திரி கருதினான். ஆனால் அவன் எண்ணம் பலிக்கவில்லை. திவிட்டன் வென்றான். இவனது ஆண் மையை வியந்து இரதநூபுரச் சக்கரவாள நகரத்தரசனான

சுவலசனடி என்பவன் தன் மகள் சுயம்பிரபை என்பாளை அவனுக்கு மணம் புரிவித்தான். திவிட்டனுக்கும் சுயம் பிரபைக்கும் ஓர் மகனும் மகளும் பிறந்தனர்.

### உதயணகுமார காவியம்

இஃது ஓர் சிறு காப்பியம். பெருங்கதையின் சுருக்கம் என்பர். சொன்னயம் பொருணயங்களை நோக்க இந்நூல் ஓர் சிறந்த நூல் என்று ஏற்றற்கில்லை. இது காலஞ் சென்ற மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரால் 1935-இல் பதிப்பிக்கப்பெற்றது.

### மேரு மந்தர புராணம்

சமண சமயத்தைப்பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் கூறும் ஓர் சிறந்த தமிழ் நூல். இதன் ஆசிரியர் வாமநாசாரியர். இவரை மல்லிசேனுசாரியர் என்றும் கூறுப. 13-ஆம் தீர்த்தங்கரராகிய விமல தீர்த்தங்கர ருடைய கணநாதர்களாகிய மேரு, மந்தரர் என்னும் இருவர் சரிதங்களைக் கூறுதலின் இப்பெயர் பெற்ற தென்ப. இந்நூல் 12 சருக்கங்களாலாயது.

> "ஆயிரத்து நானூற்று மேலுமிரு மூன்றும்
> பாயபுகழ் மேருக்கண் மந்தரர்பாற்—றூய
> தவராச ராசன் குறுமுனிவன் றந்த
> பவரோக மந்திரமாம் பாட்டு"

என்னும் வெண்பாவானிதன் வரலாற்றை அறியலாகும். இந்நூலாசிரியர் வடமொழி, பிராகிருதம் (பாகதம்) என்ற இரு மொழிகளிலும் வல்லுநர். சமண சமயமன்றிப் பிற தரிசனங்களையும் நன்குணர்ந்தவர் என்பது இந்நூலா னறியக்கூடும். மற்றும் இந்நூலில் சிற்சில இடங்களில், குறள், நாலடியார் முதலிய தமிழ் நூல்களிற் போந்துள்ள சொற்களும், சொற்றொடர்களும் ஆளப்பட்டுள்ளமையின், தமிழிலும் இவ்வாசிரியர் பெரும் புலமை யெய்தியவர் என்பது பெறப்படும். இவர் கச்சிக்கணித்தாயுள்ள திருப் பருத்திக்குன்றமென்னும் சமணர் பதியில் இருந்தவர்.

இதனை வலியுறுத்த அவ்வூர் ஆலயத்தில் போதிய சிலா சாசனங்கள் உண்டென்பர் அ. சக்கரவர்த்தி நயினர்.

அவண் ஓர் கோரா மரத்தடியில் இருவர் பாதங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்றும், அவைகள் குரு சீடரான மல்லிசேன புட்பசேனர்களின் பாதங்கள் என்றும் கூறுவர். இந்த மல்லிசேனர் வடமொழியிற் பல நூல்கட்கு விரிவுரை எழுதியுள்ளார். தமிழில் நீலகேசித் தெருட்டு என்னும் நூலுக்குச் சமய திவாகரம் என்னும் உரை வகுத்தவரும் இவரே என்ப. இவர்க்கு உபயபாஷா சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயர் உண்டு. இதற்குச் சான்றாக இந் நூற்றொடக்கத்திலேயே இவர்,

"தமிழாலொன்று சொல்லலுற்றேன்"

என்று பாடியுள்ளது கவனிக்கத் தக்கது.

**காலம்**

திருப்பருத்திக்குன்றக்கோயில் கல்வெட்டு ஒன்றிலிருந்து இருசப்பன் என்னும் புக்கராய சேநாபதி, சமண பக்தன் என்றும், புட்பசேன முனிவனது சீடன் என்றும் உணரலாம். சாசன ஆராய்ச்சியில் வல்லவரான ஹூல்ஷ் என்பவர் (Epigraphia Indica, Vol. VII and VIII) இருசப்பனும் அவன் பிதா சைசப்பனும் விசயநகர மன்னனை ஹரிஹரனுடைய மந்திரிகள் என்றும், இங்குச் சாசனங்களிற் குறிப்பிட்ட காலம் முறையே 1382-ஆக இருக்கலாம் என்றும் நிச்சயித்திருக்கிறார். ஹரிஹரன், அவன் அமைச்சன் இருசப்பன், அவன் குரு புட்பசேன முனி, அவர் குரு மல்லிசேனர் என்ற இவர்கள் அனைவரும் ஒரு காலத்தவராவர். ஆகலின் மேரு, மந்தர நூலாசிரியரான மல்லிசேன வாமந முனிவர் ஏறக்குறைய 600 ஆண்டுகட்கு முன்பிருந்தவர் ஆவர்.

**யசோதர காவியம்**

சங்க மருவிய சிறு காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று. இதனை வடமொழியிலியற்றியவர் ஸ்ரீ வாதிராஜ முனிவர்.

இவரே தமிழ்மொழியிலும் செய்திருக்கக்கூடும். இது போன்றே நாககுமார காவியத்தை வடமொழியில் ஆக்கிய முனிவரே தமிழிலும் செய்யுளாகச் செய்திருக்கிறார். இஃது ஐந்து சருக்கங்களாலாயது.

**கதை வரலாறு**

இராசமாபுர மன்னன் காளிக்குப் பலியிடத் துணிந்தான். அபயருசி, அபயமதி என்ற இரண்டு பிக்ஷுகர் காளிமுன்பு கொணரப்பட்டனர். வெட்டுவதற்கு வாளுருவி வந்த மன்னன் இருவர் தோற்றப் பொலிவையும் கண்டு மயங்கி நின்றான். அப்பொழுது அவர்கள் நகையுடன் '' அரசன் உயிர்க்கொலை முதலிய பாவத்தினீங்கி அறநெறி வழுவாது நீடு வாழ்க'' என்றார். அரசன் அவர்களைப் பார்த்து நகைத்ததன் காரணம் வினவ அவர்கள் கூறும் விடையே இச்சரித்திரமாக அமைந்தது.

இவ்விருவரும் சிராவகர். வெட்டப்படுவது உடலேயன்றி உயிரன்றென்றுணர்ந்தவர். தம்மைக்கொல்வதால் அரசன் எந்நரகத்து வருந்த நேருமோ என்று அவனை வாழ்த்தினர்.

யசோதரன் என்னும் உச்சயினி மன்னன் மனைவி அமிர்தமதி கெட்ட நடத்தை யுள்ளவளாய்த் தன் கணவனையும் அவன் தாயையும் விடம் வைத்துக் கொன்றாள். மகன் யசோமதியை அரசன் ஆக்கினாள். யசோமதிக்குப் புட்பாவலியிடம் பிறந்த குழந்தைகள் தாம் ஷை அபயருசி, அபயமதி என்பவர். யசோமதி ஓர் முனிவரைக் கொல்லப் போய் அம்முனிவரின் உபதேசத்தாலேயே நற்கதி எய்தினன். அமிர்தருசி, அமிர்தமதி இருவரும் சுதத்த முனிவரிடம் ஒழுக்க நெறி தெரிந்து பின்னர் தேவ கதியில் விளங்கினர்.

**நாககுமார காவியம்**

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று. இதன் ஆசிரியர் ஓர் சமண முனிவர்.

**நீலகேசி**

சிறு காப்பியங்கள் ஐந்தும் சமண நூல்களே. அவற்றுள் நீலகேசி ஒன்று. கி. பி. 10-ஆம் நூற்றூண்டில் எழுந்த யாப்பருங்கல விருத்திகாரர் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். சித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியாரின் உரைகாரர் ஞானப் பிரகாசர் இந்நூலிலிருந்து பல மேற்கோள்கள் காட்டியுள்ளார். இதன் ஆசிரியரைப்பற்றி யாதொன்றும் அறியக்கூடவில்லை. தொல்காப்பியம், நாலடியார், திருக்குறள் என்ற சிறந்த இலக்கண இலக்கியங்களிலிருந்து இவ்வாசிரியர் எடுத்தாளுகின்றனர். திருக்குறள் இயற்றப்பட்ட காலம் கி. பி. முதல் நூற்றூண்டென்பர். நீலகேசி ஆசிரியர் அக்காலத்திற்குப் பின்னரே இருந்திருத்தல் வேண்டும். இவ்வாசிரியர், அத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவிதம் என்ற மதங்களை முறையே நிலைபெறுத்திய ஸ்ரீசங்கரர், இராமாநுசர், மத்வர் என்ற இவர்களைக் குறித்திலர் ஆகலின் இவர்கட்கு முற்பட்டவராதல் வேண்டும். ஸ்ரீசங்கரர் காலம் கி. பி. எட்டாம் நூற்றூண்டென்ப. ஆகவே அதற்கு முன்பு இந்நூல் தோன்றியிருத்தல் வேண்டும். சர்வதரிசன சங்கிரகம் இவர் காலத்து இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. நீலகேசியில் ஆசீவகரைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர்களைப்பற்றிய குறிப்புப் பின்னூல்களில் இல்லை. மணிமேகலையில் இவ்வாசீவக மதம் கூறப்பட்டுள்ளது. அசோகன் சாசனங்களிலும், இவ்வாசீவகரைப்பற்றிய குறிப்புக் காணலாம். புத்த சமண மதங்களோடு இந்த மதமும் வழங்கி வந்ததென்ப. ஆசீவக மத போதகர் மற்கலி என்பவர் உறையூர்ப் புறத்துச் சமதண்டத்திலிருந்ததாகக் கூறுவர். சைவ சமயாசாரியர் புத்த சமண சமயங்களைக் கண்டிப்பது போன்று இம்மதத்தைக் குறிப்பிட்டுக் கண்டிக்கவில்லை. அவர்கள் காலத்திற்கு இரண்டொரு நூற்றூண்டின்முன்னரே இம்மதம் நிலைகுலைந்தழிந்ததுபோலும். மேற்கூறியனகொண்டு நீலகேசி கி.பி. ஐந்தாம் நூற்றூண்டின் முன்னரே தோன்றியிருக்க வேண்டும் எனத் துணியலாம்.

அறிஞர் சக்கரவர்த்தி நயினுர் தமது நீலகேசி முகவுரையில் அதன் ஆசிரியர் தேவரிடம் பல கொள்கைகளையும் அறிந்து கொண்டதாகவும், தேவர் திருவள்ளுவர்தான் என்றும், நீலகேசி ஆசிரியர் அவரது மாணவர் என்றும் வரைந்துள்ளனர். அவர் கொள்கைப்படி திருவள்ளுவர் சமணராவர். ஆனுல் பல காரணங்களால் திருவள்ளுவர் சமணர் அன்று என்று கண்டு அறிஞர் எழுதியுள்ளனர். சமணர் கொள்கைப்படி பூதங்கள் நான்கே. ஆகாயம் ஓர் பூதமென்று அவர் கொள்ளவில்லை. பௌத்தர்க்கும் அஃதுடன்பாடன்று. மேலும் இல்வாழ்க்கையையே தீவினையச்சம் என்ற அதிகாரத்தின்பாற்படுத்துக் கூறும் சமணரில் ஒருவர், காமத்துப்பாலை விரித்து 25 அதிகாரங்களிற் கூறினர் என்பது பொருந்துவதன்று. மற்றும் 'அந்தணர் நூற்கும்,' 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' முதலிய திருக்குறட்டொடர்கள் வேதங்களையும், பிராம்மணங்களையும் அறவே வெறுத்த அவைதீகராகிய சமணரில் ஒருவராகார் என்பதை நன்கு விளக்கும்.

நீலகேசி என்பது பழையனுர் நீலியின் பெயர். பழையனூர் நீலி கதை திருத்தொண்டர் புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமானுற் கூறப்பட்டுள்ளது. ஓர் பிராமணன் பரத்தையின் வயப்பட்டுத் தன் மனைவியைத் துறந்து பின்பு வறுமையாளனுன அளவில், மீட்டும் மனைவியிடம் போந்து, அவளதணிகலங்களை வஞ்சித்துக் கவர்ந்து, அவளை ஓர் பாழுங்கிணற்றில் தள்ளிச் சென்ருன். மறு பிறப்பில், இப்பனவன் ஓர் வணிகனுகப் பிறந்து பெருநிதி படைத்தான். ஒரு நாள் ஓர் முனிவன் இவனை எந்நிமித்தங் கொண்டும் வடபுறம் செல்லலாகாது என்று பணித்து, எந்த வகைத் துன்பத்தினின்றும் இவனைக் காக்கக்கூடிய ஓர் வாளை யீந்தான். பின்னர் ஊழ்வினை தூண்ட எவ்வகையாகவோ, இவன் பழையனூர் செல்ல நேர்ந்தது. இவ்வூரிற்றுன் இறந்த இவனது மனைவி பேய் வடிவமாக வுலாவி நின்ற இடம். இப்பேய் ஓர் பெண்ணுருவந் தாங்கி, ஓர் குழவியைக் கரத்திலேந்திக்கொண்டு, 70 வெள்ளாள

ரிடம் சென்று, இவ்வணிகன் தனது கணவன் என்றும், குழந்தை அவனுக்குத்தான் பிறந்ததென்றும், அவனிடம் தன்னைச் சேர்ப்பிக்க வேண்டும் என்றும் வேண்டினள். செய்தி முழுவதும் அறிந்து அவ்வேளாண் மக்கள் அவ் வணிகனை நோக்கி அம்மடந்தையை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினர். அவன் மறுத்தான். ஏதாவது துன்பம் நேர்ந்தால் தாங்களே அதற்குப் பொறுப்பாளியாவதாகக் கூறவே அவனியைந்தான். பின்னர் அவன் அப்பெண்ணுற் கொலை யுண்டான். நிகழ்ந்ததற்கிரங்கி அவ்வேளாண் மக்களும் உயிர் நீத்தனர் என்ப.

சமணர் தமிழ் நாட்டில் தமிழருடன் நெருங்கிப் பழகித் தமிழ் நூல்களைக் கற்றுப் பல நீதி நூல்களும் காவியங் களும் தமிழிலேயே இயற்றினர். சக்கரவர்த்தி நயினுர் கருத்துப்படி, சிலப்பதிகாரம், சிந்தாமணி, தொல்காப் பியம், நன்னூல், யாப்பருங்கலம், திருக்குறள், நாலடியார் முதலிய எல்லாத் தமிழ் நூல்களும் சமணர் இயற்றி யனவே. அவர் தமது நீலகேசி முகவுரையில் சமணரில்லா விடின் பெருந்தமிழ் இலக்கண இலக்கியங்களே இருந் திருக்க முடியாது என்று கூறியுள்ளார். ஆனுல் அவர் சமண சமயி ஆகலின் ஆழ்ந்த பற்றுக் காரணமாக அவ் வாறு கூறிச் செய்வதியல்பே எனினும் சமணர் தமிழ்க்குச் செய்த உண்மைத் தொண்டுகள் பல என்பது யாவரும் மறுத்தற்கில்லை.

### சமணர் இயற்றிய நிகண்டுகள்

நிகண்டுகள் என்பன சொற்களின் பொருள்களை விளக் கும் நூல்கள். வடமொழியில் நிருக்தம் என்ப.

### திவாகரம்

இது நிகண்டுகளின் முன்னது. இதில் சங்கச் சான்ருேர் வழக்கு மிகுதியுங் காணப்படும். திவாகரம், சேந்தன் என்னும் சிற்றரசன் விருப்பத்திற்கிணங்கத் திவாகரர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இச்சேந்தன்

அம்பர்கிழான் என்றும், செய்யுளியற்றும் வன்மை உடையவன் என்றும், கொடை வள்ளல் என்றும் திவாகரம் கொண்டறியப்படும். ஔவையாராற் புகழப்பட்ட சேந்த னும், புறநானூற்றில் "வெள்ளி தோன்றிய" என்னும் பாட்டிற் புகழப்பெற்றவனும் இவன் என்னில் இவன் காலம் 1800 ஆண்டுகட்கு முன்னதாகலாம்.

பிற்பட்ட நிகண்டுகளிற்போலத் தமிழ் வள்ளல்கள் எழுவர் பெயர் இதிற் குறிக்கப்படவில்லை. எனவே இவ் வள்ளல்கள் இந்நிகண்டிற்குக் காலத்தாற் பிற்பட்டவராக லாம். மேலும் பல்லவர் என்ற சொல் வழக்கு இந்நூலிற் காணப்படவில்லை. பின்னர்த் தோன்றிய நிகண்டுகளில் அஃது காணப்படும் "பல்லவர் பதகர் நீசர்" என்றது காண்க. ஆயினும் சளுக்கிய அரசரைப்பற்றி "வேள் புலவரசர் சளுக்க வேந்தர்" என இந்நூல் குறிக்கும். பூழியன் என்னும் பெயர் பாண்டியனுக்கன்றி சேரன் ஒருவனுக்குத் திவாகரத்திற் காணப்படுகிறது. சங்க நூலினும் இதே வழக்குக் காணலாம்.

**பிங்கல நிகண்டு**

பிங்கல முனிவர் இயற்றியது. இதன் ஆசிரியர் திவாகர புத்திரர் எனக் கூறப்படுவர். ஆயினும் திவாகரர் வழிவந் தவர் எனக் கோடலே முறை. ஏனெனில், இந்நூல் திவா கரத்திற்குக் காலத்தால் மிகவும் பிந்தியதென்று தெரி கிறது. உதாரணமாகப் பல்லவர் என்னும் பெயர் இழிசி னர்க்கு இதில் கூறப்படுகிறது. "பல்லவர் பதகர் நீசர்" என்பது காண்க. இதனாற் பல்லவ மன்னர் அரசு கெட்டு, நிலைமாறி இழிவுற்ற காலத்தே பிங்கலந்தை ஆக்கப்பட் டதுபோலும். இந்நூல் 800 ஆண்டுகட்கு முற்பட்டது எனத் தெளியப்பட்ட நன்னூலுக்கு முந்தியதென்பது.

"பிங்கல முதலா, நல்லோருரிச்சொலி னயந்தனர் கொளலே" என்பதனாற் றெளியப்படும். "குடம்பை தனித்தொழிய" என்ற குறளுக்குப் பரிமேலழகர் கூறிய

உரையில், குடம்பை-முட்டை என்று எழுதப்பட்டதை அவ்வாறு முந்நூல்களில் பொருள் வழக்கில்லை என மறுத்தாரும் உளர். ''குடம்பை முட்டையுங் கூடுமாகும்'' என்பது பிங்கலந்தைச் சூத்திரம். இதன் காலம் 10-ஆம் நூற்றுண்டெனக் கொள்ளலாம்.

## சூடாமணி நிகண்டு

வீரை மண்டல புருடர் என்னும் சமண முனிவரியற்றியது. திருநறுங்குன்றைக் குணபத்திராசாரியர் என்பவர் இவர் ஆசிரியர். மண்டலபுருடர் விசயநகர் மன்னன் கிருட்டின தேவராயர் காலத்தவர் என்பது.

''கெடிமன்னர் வணங்குந் தாளான்
கிருட்டின ராயன் கைபோற்
கொடை மட மென் பதம்ம
வரையாது கொடுத்தலாமே.''

எனக் கூறுதலான் அறியப்படும். பாயிரங் கொண்டு இவ்வாசிரியரே அருகதேவன் புராணமியற்றினர் என்று தெளியலாம். குணபத்திராசிரியர் 530 ஆண்டுகட்கு முன்பிருந்தவர் என்ப.

இனி, குணபத்திரர் சமண புராணத்தை வடமொழியில் இயற்றினர் என்றும், அதன் காலம் கி.பி. 898-என்றும், அப்பொழுது ஆண்ட அகாலவர்ஷன் என்னும் அரசனுக்குக் கிருட்டினராயன் என்று பெயருண்டென்றும், கா. சுப்பிரமணிய பிள்ளை தமது தமிழிலக்கிய வரலாற்றிற் குறிப்பர். சிலர் சூடாமணி நிகண்டு 12-ஆம் தொகுதியுள் பாஸ்கரன் செய்த நூலைக் குறிப்பதாலும், அது 12-ஆம் நூற்றுண்டு நூலாதலாலும், 10-ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட செய்திகள் அதில் காணப்படுவதாலும், சூடாமணி 1508-இலிருந்து 1530-வரை அரசுசெய்த கிருட்டின தேவராயர் காலம் என்ப.

## நம்பி அகப்பொருள்

'அகப்பொருள் விளக்க' மென்னும் இந்நூல் நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்திலும் வேறு இலக்கணங்களிலும் விரிந்து பரந்து கிடந்த அகப்பொருளிலக்கணங்களைத் தற்காலத்துச் சான்றோ ரிலக்கணங்கட்கியையத் தொகுக்கப்பெற்றது. எளிதில் விளங்கக்கூடிய சூத்திரங்களும், உரையும்பெற்று விளங்குவது. இலக்கண விளக்கமுடையார் இந்நூற் சூத்திரங்களை மிகுதியும் எடுத்தாண்டுள்ளனர்.

இந்நூலாசிரியரது ஊர் பாண்டிநாட்டுப் பொருநையின் வடகரையிலுள்ள திருப்புளிங்குடி என்னும் திருப்பதி என்ப. இவரது பெயர் நம்பி நயினுர் என்பதே. இவரது சமயம் சமணம். வடமொழிப் பயிற்சியும் இவர்க்குண்டு. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நான்குவகைக் கவிகளும் பாடவல்லவராகலின் நாற்கவிராச நம்பி எனப் புகழப்பட்டனர். இவரது தந்தையார் முத்தமிழ்ப் புலமையும் ஒருங்கே அமைந்த உய்ய வந்த நயினுர் என்ப. இந்நூல் அரங்கேறிய இடம் குலசேகரன் அவைக்களம் என்ப. இந்நூல் சிறப்புப் பாயிரத்தானும் அதனுரைகொண்டும் இச்செய்திகள் அறியப்படும். இந்நூலில் உதாரணச் செய்யுட்களாக அமைந்தவை பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்கள்.

இந்நூலுள் அகத்திணை, புறத்திணை, களவு, வரைவு, ஒழிபு என்ற ஐந்து பிரிவுகளைக் காணலாம். இதற்குப் பழையவுரை ஒன்றுண்டு.

## யாப்பருங்கல விருத்தி

தொல்காப்பியம் முதலிய நூல்களிற்கண்ட யாப்பிலக்கணங்களைப் பிற்கால வழக்குநோக்கி விரித்து இந்நூல் அமிதசாகரரால் இயற்றப்பெற்றது. இதனை இயற்றினுர் குணசாகரர் என்றும் கூறுப. இவர் தீபங்குடியிலிருந்த சமண சங்கப்பிரிவாகிய "அருங்கலான்வயம்" என்னும்

குழுவினைச் சேர்ந்தவர் என்ப. நிற்க, 'செந்தமிழ்'த் தொகுதி 17-இல் காலஞ்சென்ற ந. மு. வேங்கிடசாமி நாட்டாரவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார். "யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை," என்னும் இருநூலும் இயற்றிய ஆசிரியர் ஒருவரே யாவர். இது, 'இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோவெனின்......அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது' என்று யாப்பருங்கலக்காரிகையுரை செய்தார் கூறிய காரிகை நூலாசிரியர் பெயரும், வீர சோழிய உரையில் அவ்வுரை செய்தார் "மாலைமாற்றே சக்கரம் சுழிகுளம்" என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்தை எடுத்துக்காட்டி, 'என்று அமுத சாகரனுர் கூறியன கொள்க' என்றமையாற் பெறப்பட்ட யாப்பருங்கல நூலாசிரியர் பெயரும் ஒன்ருயிருத்தலானும், யாப்பருங்கல விருத்தியுரையில், அவ்வுரையாசிரியர், இந்நூலுடையாரும் 'மாஞ்சீர்கலியுட்புகா' எனவும்.........பிறவாற்ருனும் விளங்கக் கூறினர்; என்று காரிகைச் செய்யுளையெடுத்துக்காட்டி, யாப்பருங்கல ஆசிரியரே காரிகை செய்தாராகக் கூறியிருத்தலானும் துணியப்படும். இங்ஙனம் துணியப்பெற்ற இவ்விரு நூல்களையுமியற்றிய ஆசிரியர் பெயர் 'அமிர்தசாகரர்' என்றும், 'அமுத சாகரர் என்றும் யாப்பருங்கல விருத்தியுரைப் புத்தகத்திலும், நன்னூல் மயிலை நாதர் உரைப் புத்தகத்திலும் காணப்படுகிறது.'

ஆனல் யாப்பருங்கலச் சிறப்புப் பாயிரத்துள்,

"யாப்பருங்கல நனியாப்புற வகுத்தோன்
.......................................................
அளப்பருங் கடற்பெய ரருந்தவத்தோனே"

என்று காணப்படுகிறது. இதில் உள்ள 'அளப்பருங் கடல்' என்னும் தமிழ்ச் சொற்ருெடரும், 'அமிதசாகரம்' என்னும் வடசொற்ருெடரும் ஒரு பொருளனவாகலின் ஆசிரியர் பெயர் 'அமிதசாகரர்' என்பதாம் என்றும்,

அதுவே அமிர்தசாகரர், அமுதசாகரர் எனத்திரிந்து வழங்கிற்றென்றும் கருதலாகும்.

### யாப்பருங்கலக் காரிகை

யாப்பருங்கல விருத்தியிலுள்ள இலக்கணங்களைச் சுருக்கி 'யாப்பருங்கலக் காரிகை' யென்னும் யாப்புநூல் ஒன்று அமிதசாகரராற் செய்யப்பட்டது. இதனை,

"ஆரிய மென்னும் பாரிரும் பௌவத்தைக்
காரிகை யாக்கிக் கொடுத்த தபோதநர்
பாரினும் பெரிய அமித சாகரரே"

என்ற வரிகளான் அறியலாம்.

### நேமிநாதம்

குணவீரபண்டிதர் இயற்றியது. சின்னூல் எனவும் இது வழங்கும். இஃது எழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும் 96 சூத்திரங்களில் அடக்கிக்கூறும்.

இதன் பெருமையைத்

"தொல் காப்பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற் கொண்டாடும் படவென்ப—பல்கோட்டுக்
கோமிகாமற் புலனை வெல்லுங் குணவீரன்
நேமிநா தத்தி னெறி"

என்ற வெண்பாவானறியலாம். இந்நூலியற்றியவர் தொண்டைநாட்டிற் களத்தூரிற் றோன்றியவர்.

### குண்டலகேசி

தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந்நூல் இப்பொழுது இறந்தது.

அகளங்கசோழனுக்கும் காவேரி என்ற வணிகனுக்கும் விளையாட்டுப் போட்டி நிகழ்கின்றது. இந்தக் காவேரி என்பவன் பாண்டியனுடனும் போட்டி விளையாடி வென்றான். வென்று மீளும் வழியில் பாண்டியனது சேனாதிபதி

கொல்லத்தாயன் இவனை எதிர்த்தான். எனினும் காவேரி அவனைக் கொன்று, அவன் தலையைச் சோழனிடம் கொண்டு சமர்ப்பித்தான். இவ்வரலாறு வைசிய புராணத்திற் கண்டது.

மற்றும் மகாபோதிச் சங்கப் பத்திரிகையில் இந்நூல் வரலாறு வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. ஓர் செல்வ வாணிகன் மகளான குண்டலகேசி என்பவள் தனது மாடத்திலிருந்து, தெருவழியே கைதியாகச் செல்லும் காலன் என்ற ஒரு சிறுவனைக் கண்டாள். அவன் அரசனது மந்திரிகளில் ஒருவனது புதல்வன். அவன்மீது இப்பெண் காதல்கொள்ளவே, அவனை விடுதலை செய்தனர். இருவரும் மணந்தனர். ஒருநாள் அப்பெண், அவனை நோக்கி "நீ ஓர் கள்வனல்லவா" என்று விளையாட்டாகக் கூறினாள். இக்கடுஞ்சொல் பொறுமல், அவள் கணவன், அவளை ஓர் மலையுச்சிக்கு அழைத்துச் செல்கின்றான். அங்கே அவள் நகையெல்லாம் கழற்றிக்கொண்டு, அவளைக் கொல்வதாகக் கூறினன். அவள் உடனே தந்திரமாக அவனைச் சுற்றி வருவதுபோன்று பாசாங்கு செய்து, அவனை மலைச் சிகரத்தினின்றும் கீழே தள்ளிவிடுகின்றாள். பின்னர் வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு சமணர் கூட்டத்தில் சேர்கின்றாள். பின்னர் அதனையும் விடுத்து சிராவத்தியடைந்து பிக்குணியாகி நிர்வாணம் எய்தினள். இவளது குரு அருக்கசந்திரன் என்றும், பௌத்தமதத்தின் சார்பாகப் பலருடன் இவள் வாதுசெய்ததாகவும் நீலகேசித் தெருட்டுகூறும். இத்தெருட்டு ஷை குண்டலகேசிக்கு எதிரிடையாக எழுந்த சமண காவியம் என்ப.

**நன்னூல்**

> "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள்
> நன்னூலாருக் கெந்நூலாகும்
> இணையோ வென்னுந் துணிபே மன்னுக"

என்று புகழப்பட்ட இச்சீரிய இலக்கணநூல் பவணந்தி என்னும் முனிவரால் இயற்றப்பட்டது. 'பல்கலைக் குரிசில்

பவணந்தி என்னும் புலவர் பெருமான் சமணமதத்தினர் என்பது,

" பூமலி யசோகின் புனை நிழலமர்ந்த
நான்முகற் ருெழுது நன்கியம்புவ னெழுத்தே"

என்றும்,

" முச்சக நிழற்று முழுமதி முக்குடை
யச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே"

என்றும்,

இவர் கூறிய கடவுள் வாழ்த்துக்களாலும், மொழிக்கு முதற்காரணம் அணுத்திரள் என்ற இவரது கொள்கையாலும், உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் இறுதியாக இவர் அமைத்திருக்கும் முறைகொண்டும், பவணந்தி என்னும் இவர் பெயராலும், நன்கு விளங்கும். சுப்பிரமணிய வேதியர் இயற்றிய பிரயோக விவேக உரையில், 'செயப்படுபொருளை ஆக்கல், அழித்தல், அடைதல் முதலாகச் சினேந்திரன் மதம்பற்றி நன்னூலார் பலவாகக் கூறுவர்.' நன்னூலார் வாமனன் சினேந்திரன் செய்த சத்த நூல்பற்றிக் கூறுவர் என்று வந்துள்ள சொற்ருெடர்களும் இங்கே நினையத்தக்கன. இவர் துறவுபூண்டொழுகியவர் என்பது "பவணந்தி யென்னு நாமத்திருந் தவத்தோனே" என்ற சிறப்புப் பாயிர வரிகொண்டுணரலாம். சமணருள் துறவிகள் நந்தி என்று வழங்கப்படுவர். இதனை, அச்சணந்தி, வச்சணந்தி என்னும் பெயர் வழக்குக் கொண்டும், "கனகநந்தியும். புட்பநந்தியும், பவணந்தியும்" என்னும் தேவாரத்தானும் அறியலாகும்.

இவருடைய ஆசிரியர் சனகாபுரம் என்னும் ஊரிலிருந்த சன்மதி முனிவர் என்பார். இதனை, "பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள். பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி" என்ற சிறப்புப் பாயிரத் தொடர்களாலும்,

"தன்னூர் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூ புரத்திரு வன்ன மின்னே தொண்டை
மண்டலமே"

என்னும் தொண்டை மண்டல சதகச் செய்யுளாலும் அறிக. இவரது ஊராகிய சனகையைப்பற்றி நன்னூல் சங்கர நமச்சிவாயருரைப் பதிப்பு முகவுரையில், மகா மகோபாத்யாய வே. சாமிநாதையர் பின்வருமாறு எழுதுகின்றார்.

"தொண்டை நாட்டிற் சனகாபுரமென்று இக்காலத்து வழங்கப்படுகின்ற ஊர் இச்சனகையாக இருக்கலாம் என்பது சிலருடைய கொள்கை. இந்நூலைச் செய்வித்த சீயகங்கன் மனைவியாகிய அரியபிள்ளை என்பவள் திருவல்லத்தில் திருவல்லமுடைய நாயனாருக்கும் அம்பிகைக்கும் சந்தி விளக்கு வைத்ததைத் தெரிவிக்கும் சாஸனமும், திருவேகம்பமுடையார்க்கு அவன் திருநுந்தா விளக்கு வைத்ததைத் தெரிவிக்கும் காஞ்சீபுரத்துச் சாஸனமும் இதற்கு அனுகூலமாக இருக்கின்றன."

மற்றும், "கொங்கு மண்டலத்திலிருந்த இருபத்து நான்கு நாடுகளுள் ஒன்றாகிய குறும்பு நாட்டில் இக்காலத்தில் சீனாபுரம் என்று வழங்கப்படுவதும், முதல்தீர்த்தங்கரராகிய ஆதிநாதருடைய கோயில் உள்ளதுமான சனகாபுரம் இந்நூலாசிரியருடைய ஊரென்று பின்னுள்ள செய்யுளைக் கொண்டு நிச்சயிப்பாரும் உளர்."

"கங்கக் குருசி லுவக்க நன்னூலைக் கனிந்து புகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனி லாதிநாத குருவிளங்கும்
மங்குற் பொழிற் சனகாபுர முங்கொங்கு மண்டலமே"

பவணந்தியும் அவரது ஆசிரியரும் இருந்த இடம் கங்க நாடென்ப.

அமராபரணன் என்ற சிறப்புப் பெயர் வாய்ந்த சீயகங்கன் என்னும் செங்கோன் மன்னன், பரந்து கிடந்த தொல்காப்பியத்தைச் சுருக்கி யொரு நூலாகச் செய்தளிக்குமாறு வேண்ட, இம்முனிவர் இந்நூலை இயற்றினர் என்ப. இவரியற்றிய சூத்திரங்களிற் பல குட்டித் தொல்காப்பியம் என வழங்கும், இலக்கண விளக்கத்திற் சேர்க்கப்பட்டுள்ளமை கொண்டே, இந்நூலின் பெருமை நன்கு விளங்கும்.

இந்நூலுக்கு முதன்முதல் உரை வகுத்தவர் மயிலைநாதர் என்னும் சமணமுனிவர் என்ப. இவர் தமது உரையிற் சீயகங்கனைப் புகழ்வதிலிருந்து, அம்மன்னனாலோ அல்லது அவன் வழிவந்த குறுநில மன்னராலோ ஆதரிக்கப் பெற்றிருக்க வேண்டும் என்றுணரலாம். இதனை யடுத்துச் சிறந்து வழங்கும் உரை சங்கர நமச்சிவாயருரை.

**நூலாசிரியர் காலம்**

பிள்ளை லோகார்ய ஜீயர்,

> ''நெஞ்சுக் கிருள்கடி தீபம் அடங்கா நெடும் பிறவி
> நஞ்சுக்கு நல்ல வமுதம் தமிழ நன்னூற் றுறைக
> ளஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம் பரசமயப்
> பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே''

என்ற பெரிய திருமொழிச் சிறப்புப் பாயிரத்தில், ''தமிழ நன்னூல் துறைகளஞ்சுக்கு'' என்பதன் பொருளை விளக்குமிடத்து ''தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்திரமுண்டு'' என்று எழுதியிருத்தலால் இப்பெரியார் காலத்தில் இந்த நன்னூல் விளக்கமுற்றிருந்த செய்தி தெளியலாம். அவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பென்று அறியப்படுகிறது. இன்னும் மேற்கண்ட பெரிய திருமொழிப் பாயிரச் செய்யுள் கூரத்தாழ்வான் செய்ததாதலால், இற்றைக்கு எண்ணூற்றைம்பது ஆண்டுகட்கு முந்தியது இந்

நூல் என்னலாகும். இவ்வாறு அவர் கூறினரெனினும், இப்பொழுது நன்னூலில் வழங்குவது எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமுமேதான். ஏனைய பகுதிகள் இறந்தனபோலும்.

### வச்சணந்திமாலை

இஃது வெண்பாப் பாட்டியல் எனவும் வழங்கும். பாட்டியன் மரபை வெண்பாவாற் கூறலின் வெண்பாப் பாட்டியல் எனப் பெயர் பெற்றது. இந்நூலைச் செய்தவர் குணவீர பண்டிதர். இந்நூற் பாயிர வுரையில் "இஃது எந்நூல் வழித்தோ எனின் இந்திரகாளியென்னும் பாட்டியன் மரபின்வழித்து என்று கூறப்படுதலின் இந்நூற்கு முதனூல் இந்திரகாளியென்பது பெறப்படும்." இந்நூலின் காலம் தெளிவாக விளங்கவில்லை. ஆயினும் இது திரிபுவனதேவன் (குலோத்துங்கன் III) என்னும் அரசன் காலத்ததெனவும் சங்கத்தாராற் கேட்கப்பட்டதெனவும் உரையிற் கூறப்பட்டுள்ளது. சங்கம் என்பது சமண சங்கம்.

"மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தாள்
துதிகொண்டு நாளும் தொழுது—"

என்ற கடவுள் வாழ்த்துக்கொண்டு, இந்நூலாசிரியர் சமணர் என உணரலாகும்.

### சமணர் இயற்றிய உரைகள்

#### இளம்பூரணர்

தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை செய்தவர். அதுபற்றி இவரை உரையாசிரியர் என்றும் வழங்குப. இளம்பூரண அடிகள் என்றும், புலவுத் துறந்த பெரியோர் என்றும், பேராசிரியர் அடியார்க்குநல்லார் முதலியோரால் இவர் பாராட்டப்பெறுவர். நன்னூல் மயிலைநாதர் உரை இவருரையைப் பின்பற்றியே எழுதப்பட்டது என்று விளங்குகின்றது. மயிலைநாதர் "பெயர் வினையும்மை" என்னும் சூத்திர வுரையிற் பத்தெச்சங்களை

யும் கூறிவிட்டு, இஃது,

"ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள்
உளங்கூர் கேள்வி யிளம்பூரண ரெனு
மேதமின் மாதவ ரேந்திய வுரை"

என்றுணர்க என எழுதியிருத்தலால், இவரது புலமையின் பெருமை உணரப்படும். இளம்பூரணர் 11-வது நூற்றுண்டின் இறுதியிலாவது, பன்னிரண்டாவது நூற்ருண்டின் தொடக்கத்திலாவது வாழ்ந்திருத்தல் கூடும் என்பர் கா. சுப்பிரமணிய பிள்ளை. இளம்பூரணர் உரை தொல்காப்பியம் முழுவதிற்கும் கிடைத்துள்ளது. இவரது உரையைச் சிற்சில இடங்களில் மறுப்பர் நச்சினர்க்கினியர்.

## திருஞானசம்பந்தரும் சமணரும்

கூன் பாண்டியன் என்றும் நின்றசீர் நெடுமாறன் என்றும் புகழ் பெற்றவனும், கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் ஆட்சி புரிந்தவனுமான தென்னவன், தான் முன்பிறப்பிற் செய்த தீவினைப் பயத்தினுல், தனது குலப் பெருமக்கள் வழிவழியாகத் தழுவி நின்ற சைவ சமயத்தை விடுத்து அவைதீகப் புறச்சமயமான சமணத்தைத் தழுவி நின்ருன். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற மூதுரைக்கேற்ப, நாடெங்கும் சமணப் பாழிகளும், பள்ளிகளும் நிறைந்து, இருட் கூட்டங்கள் போன்று மயிற் பீலிக் கையினராய்ப் பறித்த மயிர்த் தலையராய், பாயும், பீலியும், தடுக்கும் ஏந்திக்கொண்டு சமணர் பல்கினர். அவ்வரசன் மனைவி பாண்டிமாதேவியென்ற மங்கையர்க்கரசியார் சோழர்குலப்பெண். அவனது அமைச்சன் வெற்றவே சிவனடியாரடியின் மீது விழுந்திறைஞ்சும் நலத்தகையான குலச்சிறையார். இருவரும் சைவப்பற்று மிக்கவர். இவர்கள் தாம் மேலைப்புரிந்த நல்வினை வயத்தால் சைவம் உய்யத் தவ வுருவாய் வந்த பாலருவாயர் திருமறைக் காட்டிடை யிருப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்தார். உடனே சிவனடியார்களை அத்தலத்திற்கு விடுத்துத் தமது கருத்தைத் தெரிவித்தனர். அந்நிலையில் மதுரைக்

கெழுந்தருளச் சம்பந்தப் பெருமான் இயைந்தார். உடனே அண்மையிலிருந்த அப்பர் சுவாமிகள் "அந்த அமண் கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லை" என்றும், உறு கோள் தீதாகலின், அவண் செல்லுதல் தகாதென்றும், கூறித் தடுப்ப, சம்பந்தப் பெருமான், "பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றாற் பழுதணையாது" எனப் பகர்ந்து, "வேயுறு தோளி பங்கன்" என்ற கோளறு பதிகம் பாடிப் புறப்பட்டார். வழியிற் பல தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடிச் சென்றார். இவர் கூடலின் எல்லையைச் சென்றடைந்தபோதே அமணர்க்குப் பல தீய நிமித்தங்கள் நிகழ்ந்தன. இவற்றைச் சேக்கிழார்,

"பள்ளிகள் மேலும்மாடு பயிலமண் பாழிமேலும்
ஒள்ளிதழ் அசோகின்மேலும் உணவுசெய் கவளங்கையில்
கொள்ளுமண் டபங்கள்மேலும் கூகையோ டாந்தைதீய
புள்ளினமான தம்மிற் பூசலிட் டழிவுசாற்றும்."

"பீலியுந் தடுக்கும்பாயும் பிடித்தகை வழுவிவீழக்
கால்களுந் தடுமாறிக் கண்களும் இடமேஆடி
மேல்வரும் அழிவுக்காக வேறுகா ரணமுங்காணார்
மாலுழந் தறிவுகெட்டு மயங்கினர் அமணர்எல்லாம்."

என்று கூறினர். மயங்கிப் பின்னர் தெளிந்து மன்னனிடம் கூட்டமாகச் சென்று,

"சீர்மலி அசோகுதன்கீழ் இருந்தநந் தேவர்மேலே
வேரொடு சாய்ந்துவீழக் கண்டனம் அதன்பின்னுகை
ஏர்கொள் முக்குடையும் தாமும் எழுந்து கைநாற்றிப் போக
ஊருளோர் ஓடிக்காணக் கண்டனம்"

என்றுரைத்தார். இம்மட்டோ, 'கண்ணுதலின் தொண்டரெல்லாம் மதுரையில் வந்து கூடக் கண்டோம். மன்னனும் வெய்ய கொடுந்தழல் மூழ்கக்கண்டோம். ஆனபின் எழவும் கண்டோம்' என்றார். மழவிடை இளங்கன்றொன்று வந்து தங்கள் கழகத்தைச் சிதறி ஓட, எவரும் தடுக்க அஞ்சி, நிழலில்லா மரங்களிலேறி நின்றிடக் கண்டோம் என்றும் கூறினர். இந்நிலையில் பாண்டிமாதேவியார்க்கும் அமைச்சர்

குலச்சிறையார்க்கும் நன்னிமித்தங்கள் தோன்றின. தேவியார் அமைச்சரைப் பணிப்ப அவர் குழாத்தொடும் சென்று, சம்பந்தப்பெருமானை நல்வரவேற்றுச் சிவிகையின் ஏற்றி ஓர் சைவ மடத்தில் அமரச் செய்தனர். அமண்கையர் நிலைகலங்கித் தமது காவலனும் வேம்பனிடம் சென்று, மதுரையிற் சைவ வேதியர் மேவலால் 'கண்டு முட்டு' என்று கூற, அரசன் தான் 'கேட்டு முட்டு' என்ருன். அரசன் சம்பந்தர் இருந்த மடத்திற்குத் தீயிடுமாறு ஏவப் பணியாளர் அவ்வாறே செய்தனர். காழிக் கவுணியர் பெருமான் அதனைக் கண்டு,

"செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே அஞ்சலென் றருள்செய்யெனைத்
தெய்யரா மமணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே"

என்று பாட அத்தீ அந்தப் பூழியன் உடலில் வெப்பு நோயாகச் சென்று வருத்தியது. நோயால் வருந்திய பஞ்சவனை அணைந்து, அவன் கோப்பெருந்தேவி, அவனது துயரத்தின் காரணத்தை வினவி யறிந்து,

"நின்னிலை யிதுவேயாகில் நீடிய தெய்வத்தன்மை
அன்னவர் வாதுசெய்தால் வென்றவர் பக்கம்சேர்ந்து
துன்றுவ துறுதியாகும் சூழிவுறேல் மன்னவென்ருர்"

நிற்க, அரசன் ஏவலால் சமணர் ஒருபுறமும் சம்பந்தர் ஒருபுறமுமாக அமர்ந்து மன்னனது வெப்பு நோயை மாற்ற முயன்றனர். சம்பந்தர்,

"மந்திர மாவது நீறு"

என்ற திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீற்றை அரசன் மேனியில் அணிந்த அளவில், அவர் அமர்ந்த பக்கத்திலிருந்த வெப்பு நோய் சமணர் மந்திரித்து நின்ற பக்கத்துச் சென்று சார மன்னன் மிகவும் அயர்ந்து,

"என்னே மதித்த இக்காலம் ஒன்றில்
வெந்நரகொரு பாலாகும் வீட்டின்பம் ஒருபாலாகும்
துன்னுநஞ்சொரு பாலாகும் சுவையமுதொரு பாலாகும்
என்வடி வொன்றிலுற்றேன் இருதிறத் தியல்பும்"

என்ருன். மன்னன் பிணி தீர்ந்தது. பின்னர்ச் சமணர் அனல் வாதம், புனல் வாதம் செய்ய வெண்ணி அவரவர் சமய வுண்மை தீட்டிய ஏட்டை நெருப்பிலிட்டு, அனற்கண் வேவாது நிற்பது எவர் தம் ஏடோ அவரே வென்றவர் என்ருர். திருமுறைக் கட்டை அவிழ்த்துக் கையினுல் ஓர் ஏட்டை எடுத்தார். அது "போகமார்த்த பூண்முலையார்" என்ற திருநள்ளாற்றுப் பதிகமாக இருந்தது. அதனை அனலிலிட்டார். அவ்வளவில்,

"இட்டஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டுலாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்டமூர்த்தியைப் பொருளென உடைமையின் அமர்ந்து
பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே"

அமணர் இட்ட ஏடு நெருப்பில் வெந்தொழிந்தது. அவர்கள் பெரிதும் கவன்று திகைப்பினுல் திரண்ட சாம்பலைக் கையினுற் பிசைந்து தூற்றிப் பார்ப்பதைக் கண்ட மன்னன் "எய்திய நகையினேடும் ஏடின்னும் அரித்துக் காணும், பொய்யினுல் மெய்ம்மையாக்கப் புகுந்த நீர் போமின்" என்ருன். அவ்வளவிலும் அமையாராய்ச் சமணர் அரசனை நோக்கி, "நீடுமெய்ப் பொருளின் உண்மை நிலைபெறுந் தன்மை எல்லாம், ஏடுற வெழுதி மற்றவ் வேட்டினை யிருவரும் ஒரு ஆற்றிலிட்டு, ஆற்ருே டொழுகுதல் செய்யாது அங்கு நாடி முன் தங்கும் ஏடு நற்பொருள்பரிப்ப"தென்ருர். பின்னும்கூறுவாராய்த் தங்கள் வாய் சோர்ந்து தாமே "தனி வாதில் அழிந்தோமாகில் வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே" என்று சொன்னுர். இருவர் தமேடும் வைகையாற்றி லிடப்பெற்றன. சமணர் இட்ட ஏடு வேகவதியால் அடித்துக்கொண்டு போகப் பட்டது.

"திருவுடைப் பிள்ளையார்தந்
 திருக்கையா லிட்டவேடு
மருவுறும் பிறவியாற்றில்
 மாதவர்மனம் சென்ருற்போல்
பொருபுனல் வையையாற்றில்

எதிர்த்துநீர் கிழித்துப்போகும்
இருநிலத் தோர்கட்கெல்லாம்
இதுபொருள் என்றுகாட்டி.''

''எம்பிரான் சிவனேயெல்லாப்
பொருளுமென் றெழுதுமேட்டில்
தம்பிரான் அருளால்வேந்தன்
தன்னைமுன் ஓங்கப்பாட
அம்புய மலராள்மார்பன்
அநபாயன் என்னும்சீர்த்திச்
செம்பியன் செங்கோலென்னத்
தென்னன் கூனிமிர்ந்தது.''

எண்ணுயிரம் சமணர் கழுவேறினர். பலர் சைவராயினர்.

## சிவஞான சித்தியார் பரபக்கம்

### சமணரில் நிகண்டவாதி

பூமலி அசோகினைத் தெய்வம்போலப் பேணி, வேத மார்க்கத்தோடு மாறுபட்டுத் தவத்தினை மேற்கொண்டு, உடுக்கையைக் கைவிட்டு, குளியாமையின் அழுக்கேறிய மேனியராய், பிரமசரியம் முதலாகிய ஆச்ரமம் மூன்றுக்கும் பற்ருயிருக்கிற இல்வாழ்க்கையை வெறுத்து, வயிறு பருக்க உண்டு, பாயுடுத்துப் பீலிகைப் பிடித்து நிற்பவர் இவர்கள்.

## இவர்களின் கோட்பாடு

அநந்தஞான முதலிய எட்டையும் இயற்கையாகவே தோற்றுவித்து, பரந்த தீக்குணங்களென்று சொல்லப்பட்ட ஞானுவரணீய முதலிய எண்குணங்களையும் விடுத்த வழகினையுடையனுய், இந்திராதி தேவர்கள் போற்றவாழும் அருகன் அவர்களின் கர்த்தா. இந்திரிய விடயத்தால்வரும் துடக்கத்தைத் தன்னிடத்து நின்றுங் கைவிட்டு முக்காலத்திலுமுள்ள காரியங்களை ஒரு கணத்திலே யநந்தஞானத்தாலே யறியத்தக்க பெருந்தவமுடையவன் அருகதேவன். மேலும் பசி, தாகம், ஆசை, பயம், செற்றம், உவகை,

மோகம் முதலிய பதினெட்டையும் கைவிட்டு அட்டகுண பூதனுய் விளங்குபவன். இவர் கருத்துப்படி, காலம், ஆன்மா, தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், ஆகாயம், அணுவாய்த் திரண்டு ஆன்மத் தன்மை பொருந்தின புற்கலம், பந்தம் வீடொடுகூடப் பத்தும் ஒருவராற் படைக்கப்படாதனவா யநாதியேயுள்ளன.

பரந்து மீது தருமாத்திகாய மழிவித்த நித்தமது பண்ணி விடும். கீழாகத் தரப்பட்ட வதன் மாத்தி காயமானது ஆன்மாவோடு கூடி நித்தமாய் மிகவு நிலைபெறுத்தி விடும். தன்ம முதலாகச் செய்யப்பட்ட புண்ணியமான துவே இந்தத் தன்மாத்தி காயத்தைத் தருவதற்கு நன்மை யாவது, சொல்லப்பட்ட மன வாக்குக் காயங்களாலுண் டான பாவமானதுவே தீமைகளையே தருமதன்மாத்தி காயத்துக்கேதுவாம். பொருட்கிடமாயிருப்பது வானம். இதனிடம் தோன்றும் புற்கலப் பொருள்கள். தன்மாத்தி காயமாவது புண்ணியத்தாலெடுக்கும் தேகம். அதன் மாத்திகாயமாவது பாவத்தாலெடுக்கும் தேகம். எவ் விடத்திலு முருவாய்த் திரண்டு இரும்புகள் மரங்கள் முத லியனவுமாமிவை யொழிந்தெடுத்துக் கொள்ளப்பட்ட உருக்களெல்லாமுமாய் நிற்பவை புற்கலப் பொருள்கள். பொல்லாங்காகிக் காணப்பட்டுள்ள கந்த, ரச, ரூப, பரிச, சத்த, பரிணமம் என்ற அறுவகைத் தொழில்களே பந்தம், அதனைவிட்ட ஒழுங்கே தவம். இத்தவத்தால் உடல் மாட்சி பெருகி நிலைபெற்று வளரும். ஆன்மாவுக்கு முன்பே புசிப்பதாக உண்டாக்கப்பட்ட புண்ணிய பாவங்கள் தொலையப் புசித்துவிட்ட மாட்சிமையே வீட்டையளிக் கும். இந்த சமணர்க்குப் பிரமாணமாவன. காண்டல், பிரத்தியக்ஷமல்லது பரோக்ஷம். இக்கோட்பாடுகள் ஷி சித்தியாரில் மறுக்கப்பட்டுள்ளன.

## ஆசீவகர் மதம்

அநந்தஞானனுகிய வருகபரம ஞதியிலே யுண்டாக்கிய நூலின் பொருடானும் ஆன்மாக்க ளேந்தென்று கூறும்.

அவையாவன : கடினமாகிய பார், சீதந்தரும் புனல், சுடுந் தீ, சலித்திடும் வாயு, உயிர் என்பன. அளவிலாத அறி விணயுடைய மற்கலியென்பா னவர்க்காப்தன். ஆன்மா வானது காயத்தோடும் சேரும் சேர்க்கையை நீங்கிஞல் மண், புனல், அனல், வளியாகிய நாலான்மாக்களோடும் கூடி நிற்கும். வேறு சார்வது பெற்றபோது சார்ந்தவப் பொருளின் தன்மையை நேர்ந்து நிற்கும். உயிரை யொழிந்த நான்கான்மாக்களும் ஒன்றையொன்றறியுந் தன்மையனவல்ல; ஒன்று கெட்டொன்றுமாகா. ஓரான் மாவினுள்ளே புக்கோரான்மா கூடி நில்லாது. ஆகிலும் இயைந்து வாழும். அப்படிக் கூடாவாயினும் காயமா மிடத்துப் பொருந்தியு நிற்கும். அவை கூடுமிடத்துச் சேரக் கூடுவதொழிந்து ஓரொன்ருகக் கூடுவதும் செய்யா. இவைகளின் செய்தி ஒருக்காலும் ஒழிவதில்லை.

இவ்வணுக்கள் ஒருவரா னியமிக்கப்பட்டதல்ல. முற் கூறிய அணுக்க ளைந்தனில் ஆன்மா என்னும் அணுப் பொருள் காண்டற்கரிதாகி அக்கன்மத்தாலே உற்பத்தி யாகி உருக்களாகப் பொருந்தி நிற்கும். அக்கன்ம வுரு வொடு நின்றபின் யாவரும் காணற்கில்லை. விண்ணினிற் றேவரே காண்பர். ஆன்மாவொழிந்து நிலஞதியான வணுக்கள் நான்கும் தம்மிற் கூடுமிடத்து ஓரணுவைவிட்டு மூன்றணுத் தம்மிற்கூடிநில்லா. இரண்டணுவிட்டு இரண் டணுக் கூடா. ஆஞல் கூடி நிற்பதெவ்வாறெனில். பிருதிவி யில் கந்த ரச ரூப பரிச நான்கும், அப்புவில் ரச ரூப பரிச மூன்றும், அனலில் ரூப பரிசமிரண்டும், வளியிற் பரிச மொன்றுமாகிய குணங்கள் பொருந்தி நிற்கும். மற்றும் வெண்மை, பொன்மை, செம்மை, நீல், கழிவெண்மை, பச்சை என்ற ஆறு வன்னமுள. இவற்றுள் மிக்க வெண்மையென்று கூறிய வன்னம் வீட்டுலகின் வன்னம். ஒழிந்த வைந்து நிறப் பொருளையு மறிவது பெத்தம். தெரிந்து தெளியப்பட்ட முற்பிறப்பிற் செய்த விணயி லகப்பட்டுச் செல்வ திவ்வுலகம். மேற்கூறிய அணுக்க ளைந்துடன் புண்ணிய பாவங்களையும் கூட்டிப் பூமி இந்த

ஏழனுவாயிருக்கு முறைமையதென்றெண்ணிய அறிவுடையோரே மோட்சத்தை அறிவார்கள்.

இந்தக் கொள்கைகள் யாவும் முறையே சித்தியாரில் மறுக்கப்பட்டமை காண்க.

## சமணரியற்றிய சத்திய நூல்கள்

வடமொழியிலும் பாகதத்திலும் வல்ல சமணர், தமிழ் நாட்டிற் புகுந்து தமிழ் மொழியைக் கற்று நீதி நூல்களும், நிகண்டுகளும், காப்பியங்களும் செய்தனர் என்றே மேலே கூறப்பட்டது. இருமொழி வன்மையும் இருமொழி நூற் புலமையும் அவர்க்கமைந்திருந்தமையின், அவர்கள் தமது வசனநடை நூல்களை மணிப்பிரவாளம் என்ற ஒரு வகை நடையில் எழுதினர். இந்த விரவு நடையை ஓர் ஆபாச நடை என்பர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். குற்றமற்ற சொல்லைப்பற்றிக் கூறவந்த இடத்தில் வீர சோழியமுடையார் "வழக்கதிகாரத்தொடும் பொருந்தித் தமிழினோடுங்கூடி வடவெழுத்தைத் தவிர்ந்து பெரிதுமின் பந்தந்து பெரியோராற் செய்யப்பட்ட செய்யுட்களினும் வந்து திரிதற்பொருட் கோளின்றியே நிரலே பொருள் விளங்க நிற்கும் சொற்கள் என்று கூறி மணிப்ரவாளத்தினுக்கும் விரவியல் செய்யுட்களுக்கும் வடவெழுத்து வருகவென்று சிறப்பிலக்கண முண்மையாலவற்றில் வடவெழுத்து குற்றமன்று" என்றும் உரைத்தார். இந்நடை சமணராலும் வைணவராலும் பெரிதும் கையாளப்பட்டது. சமணராலியற்றப்பட்ட மணிப்பிரவாளநடை நூல்களில் ஸ்ரீபுராணமே மிகவும் பெரியதும் சிறந்ததுமாகும். இந் நூல் பல குறிப்புக்களுடன், சென்னைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சியாளராக இருந்த திருவாளர் வேங்கடராஜ ரெட்டியாரவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அப்புலவர் அதில் பின்வருமாறு எழுதுகிறார்: "ஸ்ரீபுராணம் அளவிற் பெரியது. இதன் வரலாறுகளுள் ஒவ்வொன்றனையே சீவக சிந்தாமணி, சூளாமணி என்னும் சிறந்த காப்பியங்களும் மேரு மந்தர புராணமும் விரித்துக் கூறுகின்றன. ஆகலின்

இந்நூல்களைக் கற்றற்கு ஸ்ரீபுராணம் உறுதுணையாகும். இவையேயன்றி ஏலாதி, அறநெறிச்சாரம் முதலிய சிறு நூல் பயில்வார்க்கும் இந்நூல் உதவி புரியும். சமண சமய வழக்காறுகளை அறிதற்கு இப்புராணத்தைப் போன்ற தொரு சிறந்த நூல் தமிழில் இல்லை. சமயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்பவருக்கும் இப்புராணம் வேண்டற்பால தாகும்.''

மற்றும் இவ்வாசிரியர் தமது நூன்முகத்தில் பின்வருமாறு கூறுகின்றார்: ''புறநானூற்றில் கடவுளரை எண்ணுமிடத்துக் கண்ணபிரானொடு பலராமனை ஒருங்கு எண்ணியிருத்தலும், பரிபாடலில் பலராமனது விக்கிரக வழிபாட்டைக் கூறியிருத்தலும் காண்க. பலராமனுக்குக் கோயில் எடுத்து வழிபட்டிருப்பது சமண சமயக் கொள்கையே யாகும். ஏலாதி என்ற நூலில் 'இருளோடிருள்' என்றது இருள் வட்டமான தம: பிரபை, என்ற நரகத்தையும், மிக்க இருள் வட்டமான தமஸ்தமா: பிரபை என்ற நரகத்தையும் குறிக்கும். திருக்குறளில் 'உண்ணாமையுள்ள துயிர்நிலை ஊனுண்ண, அண்ணாத்தல் செய்யாதளறு' என்னும் செய்யுளிற் கூறப்பட்டுள்ள நரகம், நிகோதம் என்று சமண மதத்தில் வழங்குவதாகும். இஃது அம்மதத்திற் கூறப்படும் ஏழு நரகங்கட்குக் கீழ்ப்பட்டது. அவ்வேழு நரகங்களிலும் துன்பம் அநுபவிப்போர்க்குக் காலவரை யறையுண்டு. நிகோதத்திற்கு அவ்வாறு காலவரையறை யில்லை. ஆதலின் அதனை மீளாநரகம் என்ப. அந்நரகத்தை யடைந்தோர் மீளுதலின்மையையே 'அளறு அண்ணாத்தல் செய்யாது' என்பதனால் வள்ளுவர் தெரிவித்துள்ளாராவர். சூளாமணி சமண சமயத்துப் பலதேவ வாசுதேவர்களின் சரிதத்தை கூறுவதுவே. சிற்றிலக்கியங்களுள் திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி முதலியன சமண சமயத்தன.''

இந்நூலாசிரியர் முக்கியமான சமணக் கொள்கைகளாகக் குறித்தவை பின்வருமாறு :—

"இவ்வுலகம் முதலும் முடிவுமில்லாததாகலின் இதற்குப் படைப்புக்கடவுள் இல்லை. மக்கள் தவத்தால் வினைகளைக் கெடுத்து அநந்த சதுஷ்டயங்களை அடைந்து இறைநிலை பெறலாம். மகளிர்க்கு வீடுபேறில்லை. ஆன்மாக்களுள் மோக்ஷமடையும்பேறு இல்லாதவர் சிலர் உளர். அவர் எத்துணைநேரம் வேகவைக்கினும் வேகாத பயறு போன்றவர், 'பயற்று கீறி வேவாதற்ருல்' என்று அறநெறிச்சாரம் கூறுவது காண்க. அஃறிணையுயிர்களும் அறவுரை கேட்பதனுனும், நோன்பு மேற்கொள்ளுதலானும், ஸ்வர்க்கபதம் எய்துதல் கூடும். நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்னும் ரத்தினத்திரயத்தை (மும்மணியை) அனைவரும் மேற்கொள்ளுதல் வேண்டும். பஞ்சபரமேட்டிகளை வணக்கம் செய்தல் வேண்டும். யாகம் முதலியவற்றிலும் உயிர்க்கொலையும் பாவனையும் கூடா. கதிரவன் மறைந்த பின்னர் உணவுட்கொள்ளுதல் ஆகாது. பிறர் செய்யும் தீங்குகளைத் தங்கர்மபரிபாகம் என்றெண்ணுதலே யன்றி அவர்கட்கு தீங்கு செய்ய எண்ணுதல் தீமைதரும்.

இல்வாழ்வோர் ஸ்ராவகர் என்றும் வழங்கப்படுவர். அவர்கள் பதினெரு நிலையினராவர். அவர்கட்குச் சில நோன்புகளும், அணுவிரதம் முதலிய விரதங்களும் விதிக்கப்பட்டுள்ளன. இந்நூல் 24 தீர்த்தங்கரர்களின் சரித்திரத்தை விரிவாகக் கூறுவது. மணிப்பிரவாள நடையில் அமைந்தது. அதாவது இருமொழிச் சொற்கள் விரவி, கற்போர்க்கு இன்பம் பயக்குமாறு அமைந்ததோர் நடை என்ப. ஆயினும் தமிழின் சிறப்பியல்பைக் கெடுக்கும். நடை என்று, இதனை ஓர் ஆபாசநடை என்பர் வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார். முத்தும் பவழமுங் கோத்தாற்போன்று வடமொழி தென்மொழிச் சொற்கள் விரவிய நடையை மணிப்ரவாளம் என்ப. வீரசோழியம் என்னும் நூலில்,

"இடையே வடவெழுத் தெய்தில் விரவியல் ஈண்டெதுகை
நடையேது மில்லா மணிப்ரவாளநற் றெய்வச் சொல்லின்
இடையே முடியும் பதமுடைத்தாம்"

என்று கூறப்பட்டிருத்தலின் மணிப்ரவாள நடையில் வட சொற்கள் விரவுதல் இலக்கணவமைதி ஆயிற்று.

உதாரணமாக,

"அதற்பின் ஒருநாள், அசோகவனம் என்னும் உத்யானவனத்து, சந்திரகாந்த சிலாதலத்து ஏகாந்தமாக விருந்து, ஸ்ரீமதியை நோக்கி, பண்டிதை உபலாளித்துச் சொல்லுவாள்" என்ற வரிகளைக் காண்க.

இந்நூலாசிரியர் சூடாமணி நிகண்டினை யியற்றிய மண்டல புருடர் என்பர் சிலர். ஆனால் தக்க காரணங்கள் கொண்டு, அக்கொள்கையை திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் மறுத்துள்ளார். இந்நூல் 15-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்பர்.

### திருக்கலம்பகம்

உதீசித்தேவர் என்னும் சமண முனிவரியற்றியது. இதில் உள்ள செய்யுட்கள் செம்பாகமானவை. பல சமண சமயக் கருத்துக்கள் இதில் காணப்படும்.

"ஆறுரைத்தான் பொருளைந்துரைத்தான்கதி நான்குரைத்தான்
மாறுரைத்தாரை முருக்கு மறைவைய மூன்றினுக்கும்
வேறுரைத்தான் தொல்லற மிரண்டவ் விரண்டாலும் வீடு
பேறுரைத்தான் நமக்கொன்றுரையாத பெருந்தகையே"

என்ற செய்யுளில் அருகன் பெருமை கூறப்பட்டது. இவர் மறந்தும் புறந்தொழா மாந்தர் என்பது.

"இறந்து தாம் பொன்றுதலே வீடென்பாரு
மிறவாது கல்லாத வியல்பென்பாரும்
பிறந்து கோனுட னொன்றுகுத லென்பாரும்
பிறவாது சித்தள வென்பாருமென்க
வறஞ் செய்வான் திகிரியாலகில மாண்ட
வறவாழி யசஞ்சலர் தாமறைந்த நூலின்

திறங்கொள்வானச் சுதாநந்த மல்லாற்
செய்தவத்தா லுறநிலை யார்தேர்கிற்பாரே"

என்ற பாசுரத்தால் விளங்கும்.

இந்நூற் சிறப்புப் பாயிரத்திலிருந்து இதன் ஆசிரியர் தொண்டை நாட்டிற் பையூர்க் கோட்டத்தார்ப் பாகைக் கோன் என்றும், "தாவில் வடபான்மொழி தலை மணந்த தேவன்" (அதாவது உதீசித்தேவன். உதீச்சி என்பது வடதிசைப்பெயர்) என்றும், சாவக நிலையோன் என்றும், சாக்கிய குடாரன் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியரே சமண சமய ஒழுக்க நெறிகளைத் தொகுத்துக்கூறும் "அருங்கலச் செப்பு" என்னும் அரிய நூலையாக்கியவர். இந்நூல் 180 குறட்பாக்களினாலாயது. சமணராற் பெரிதும் போற்றப்படுவது.

"நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந்
தொக்க வறச் சொற்பொருள்"

"கடையி லறிவின்பம் வீரியங் காட்சி
யுடையா னுலகுக் கிறை"

"அச்சிலேற் பண்டியுமில்லை சுவரின்றேற்
சித்திரமு மில்லாதே போன்று"

"விரத மிலரெனினும் காட்சி யுடையார்
நரகம் புகுத லிலர்"

"தீரா வினைதீருஞ் சித்திப்பத முண்டாகும்
பாராயருங் கலச் செப்பு"

என்ற குறட்பாக்களைக் காண்க.

### சமணம் தேய்ந்து குன்றிய வரலாறு

சம்பந்தப்பெருமானால் பாண்டியநாட்டிற் சமணம் மறைந்தது. அப்பமூர்த்திகளால் பல்லவநாட்டைவிட்டுச் சமணர் நீங்க நேர்ந்தது. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் சமணரை எதிர்த்து நின்றதும், சங்கரர் திக்விசயமும், மாணிக்கவாசகர் பௌத்த சமணத்தை

எதிர்த்ததும், சைவ சமயத் தாபனங்களும் எல்லாம்கூடி 9-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் சமணம் தென்னிந்தியாவில் நில்லாமல் ஓடச்செய்தன.

அத்தகைய எதிர்ப்புக்களிஞல் தமிழ்நாட்டிற் சமணர் எண்ணிக்கை குறைய நேர்ந்தது. ஆயினும் அவர்கள் இலக்கண இலக்கிய நூல்களேயும், நிகண்டுகளேயும், வானநூலேயும், சோதிட நூலேயும் இயற்றினர். சிந்தாமணி, சூளாமணி முதலிய இலக்கியங்களும், சூடாமணி முதலிய நிகண்டுகளும், நாலடியார், அறநெறிச்சாரம், பழமொழி முதலிய நீதிநூல்களும், சிநேந்திரமாலே முதலிய சோதிட நூல்களும், ஸ்ரீபுராணம் முதலிய கத்திய நூல்களும் அவர்கள் இயற்றியனவே, மேலூர், பெரியகுளம், பழனி, மதுரைத் தாலூக்காக்களில் உள்ள சாசனங்களிலிருந்து, சமணர் ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த செய்தி புலஞகும். மற்றும் குணசேகரர், நாகநந்தி, அரிஷ்டநேமி, அச்சணந்தி முதலியவர்களின் பெயர்கள் சீவகசிந்தாமணி முதலிய நூல்களிற் காணலாம். சைவ வைணவர் ஆதிக்கம் ஓங்கவே சமணர்கள் கங்கவாடிப் பக்கம் சென்று, சிரவண வேள்குளத்திற்றங்கினர்.

கங்கமன்னரின் பேராதரவு சமணர்க்கிருந்தது. நீதிமார்க்கன், பூதுகன், மாறசிம்மன் முதலியோர் சமண நூல்களில் வல்லவர். சமணத்தில் விடாப்பற்றுள்ளவர். பஸ்திகளும், மடங்களும், பாலங்களும், மகாஸ்தம்பங்களும், குளங்களும், கிராமதானங்களும் நிகழ்ந்தன. சிரவணவேள் குளத்தில் கோமதேஸ்வரரின் பெரிய உருவம் நிறுத்தப்பட்டது. தலேக்காட்டுக் கோயிலும் குளமும் சமண அரசர்களாற் கட்டப்பட்டன. பௌத்தரைப்போலன்றிப் பெண்பாலார்க்கும் உரிமையளித்ததஞல் சமணம் இந்நாட்டில் சிறிது நிலேபெற நேர்ந்தது. தற்காலம் சமணர் பலர் பம்பாய், கத்தியாவார் முதலிய இடங்களில் வாணிகத்தாற் பெருநிதி படைத்து விளங்குகின்றனர்.

## தேவாரமும் சமணமும்

தேவார ஆசிரியர்கள் மூவரும், பௌத்த சமணத்தைத் தமது பாசுரங்களிற் கண்டித்தும் பழித்தும் இருக்கின்றனர். சம்பந்தர், அப்பர் என்ற இவர்கள் பதிகந்தோறும் சமணருடைய பழக்க வழக்கங்களைக் கண்டித்துள்ளார். சில உதாரணங்கள் கீழே தருகிறோம்.

'' மோடுடைய சமணர் '' (சுந்தரர். தேவா. பக். 17)

'' அந்தமண்டோய் துவராரமண் குண்டர் யாது மல்லா
வுரையே வுரைத்துப்
பொய்த்தவம் பேசுவதல்லாற் புறனுரையா
தொன்றுங் கொள்ளேன் '' (தேவா. சம். பக். 19)

'' குண்ட மண்டுவர்க் கூறை மூடர்சொற்
பண்டமாக வையாத பண்பினர்
விண்டயங்கு நெல்வாயில் '' (ஷை சம். 22)

'' தவர் கொண்ட தொழிற் சமண் வேடரொடுந்
துவர் கொண்டன நுண்டுகிலாடை யரும் '' (ஷை சம். 23)

'' செய்ய நுண்டுவரா டையினரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக்
கையர் கேண்மை யெனோ '' (ஷை சம். 25)

'' ஆதர மணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறுவீர் '' (ஷை சம். 33)

'' உடை துறந்தவர்களு முடைதுவ ராடையரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமினீர் '' (ஷை சம். 35)

'' தேராமண் '' (ஷை சம். 37)

'' மாசு பிறங்கிய மேனியாரு மருவுந் துவராடை
மீசு பிறக்கிய மெய்யினோரு மறியாரவர் தோற்றம் ''
(ஷை சம். 38)

'' ஊத்தைவாய்ச் சமண் கையர்க் கென்றும்
ஆத்தமாக அறிவறி தாயவன் '' (ஷை சம். 40)

'' குறங்காட்டு நால்விரலிற் கோவணத்துக் கோளேவிப்
[போய்
அறங்காட்டும் சமணரும் சாக்கியரும் அலர்தூற்றும்
திறங் காட்டல் கேளாதே '' (ஷை சம். 41)

" உண்டுடுக்கை யின்றியே நின்றார் நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற் போர்த்தார் கண்டறியாதவிடம்"
(தேவா. சம். 46)

" அறிவின்றி
மூடமுடைய சமண் சாக்கியர்கள் உணராத
வேடமுடைய பெருமான்" (ஷை சம். 51)

" ஒண்டுவரார் துகிலாடை மெய்போர்த்துச்சி கொளாமை
யுண்டேயுரைக்கும் குண்டர்கள் ஒரைக் கூறையில்லார்
கூறுவதாங் குணமல்ல கண்டீர்" (ஷை சம். 58)

" உண்டுடுக்கை விட்டார்களும் உயிர்க்கஞ்சி மண்டை
கொள் தேரரும்
பண்டங்கு சொற்பேசும் பிரிவொன் றில்லார்கள்
சொற் கொள்ளன்மின்" (ஷை சம். 67)

" துவருறு மாடையினர் தொக்க பீலியார் நக்கரையர்
அவரவர் தன்மைகள் கண்டணு கேன்மின்" (ஷை சம். 68)

" மாசேறிய உடலார் அமண்குழுக்க ளோடுதேரர்
தேசெறிய பாதம் வணங்கார்" (ஷை சம். 69)

" நிலையார்ந்த உண்டியினர் நெடுங்குண்டர்கள்
[சாக்கியர்கள்
புலையாளர் அறவுரையைப் போற்றுது" (ஷை சம். 72)

" நின்று துய்ப்பவர் நீசர் தேரர்" (ஷை சம். 76)

" நெடிதாய் வன்சமணு நிறைவொன்றில்லாச்
[சாக்கியரும்" (ஷை சம். 78)

" தடுக்குடுத்துத் தலையைப் பறிப்பாரொடு சாக்கியர்
இடுக்க ணுய்ப்பார்" (ஷை சம். 81)

" கையினில் உண்பவர் கணிகை நோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவ ருரைகளைப் பொருள்எனுதை" (ஷை சம். 81)

" குண்டிகைபீலி தட்டோடுநின்று கோசரங் கொள்ளியரும்
மண்டை கையேந்தி மனங்கொள் காஞ்சியூரரும்"
(ஷை சம். 91)

" வேறுரையால்
அலவை சொல்லுவார் தேரம ணுதர்கள்" (ஷை சம். 95)

"வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றிலார் அறவுரை புறனுரைக்க" (தேவா. சம். 100)

"பறித்த புன்றலைக் குண்டிகைச் சமணரும்
பார்மிசைத் துவர்த்தோய்ந்த
செறித்த சீவரத்தோரும் தேர்கிலாத தேவர்கள்
பெருமானூர்" (ஷை சம். 101)

"ஆலும் மயிலின் பீலியமணர் அறிவில் சிறுதேரர்
கோலும் மொழிகள் ஒழிய" (ஷை சம். 103)

"கோசர நுகர்பவர் கொழுகிய துவரன துகிலினர்
பாசுர வினைதரு பளகர்கள் பழிதரு மொழியினர்
நீசரை விடுமினி" (ஷை சம். 105)

"சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்" (ஷை சம். 114)

"அஞ்சி யல்லன மொழிந்து திரிவோர் அமணுதர்
கஞ்சி காலையுண்பார்க் கரியான்" (ஷை சம் 116)

"உருவ நீத்தவர் தாமு முறுதுவர்
தருவலாடை யினூர்" (தேவா. சம். பக். 123)

"தட்டிட்டே முட்டிக் கைத்தடுக்கி நின்றுணுத்
தாமே பேணுதே" (ஷை சம். 132)

"ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழியி லமர்ந்தான்" (ஷை சம். 142)

"குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர்" (ஷை சம். 171)

"அயமுக வெயினிலை யமணருங் கண்டரும் சாக்கியரும்
நயமுக வுரையினர்" (ஷை சம். 183)

"அற்ற மறையா வமணர்" (ஷை சம். 194)

"மண்டை கொண்டுழல் தேரர் மாசுடை மேனி
வன் சமணர்" (ஷை சம். 200)

"இருந் துண் தேரரும் நின்றுண் சமணரும்"
(ஷை சம். 203)

"தெள்ளிய ரல்லாத் தேரரொ டமணர் தடுக்கொடு
சீவர ருடுக்கும்" (ஷை சம். 209)

"தடுக்காலுடன் மறைப்பா ரவர்தவர் சீவர மூடிப்
பிடக்கே யுரை செய்வார்" (தேவா. சம். 245)

"பல்லுரைச் சமணரோடே **பலபலகாலமெல்லாம்**
சொல்லிய செலவு செய்தேன்" (ஷை அப்பர். பக். 288)

"உறிபிடித் தூத்தை வாயிற் சமணேடு சாக்கியர்
நெறிபிடித்த அறிவிலா நீசர்" (ஷை சம். 316)

"மொட்டையமணுதர் துகின்மூடு விரிதேரர்"
(ஷை சம். 325)

"பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர் களச் சாதியாத" (ஷை சம். 346)

"வெண்புலான் மார்படு துகிலினர் வெற்றரை யுழல்பவர்
..............மொழியூனமதாக்கிஞர்" (ஷை சம். 367)

"வெஞ் சொற்றஞ் சொல்லாக்கி வேடமில்லாச் சமணும்
தஞ்ச மில்லாச் சாக்கியரும்" (ஷை சம். 374)

"புத்தர்கள் தத்துவர் மொய்த்துறி புல்கியகையர் பொய்ம்
மொழிந்த தழிவில் வெற்றியுற்ற நற்றவர்" (ஷை 537)

"தடுக்குடைக் கையரும் சாக்கியரும் சாதியி
னீங்கியராத் தவத்தர்
நடுக்குற நின்ற நம்பெருமான்" (ஷை 539)

"மாசுமெய்யர் மண்டைத் தேரர்......குணமிலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி
யந்நெறிச் செல்லன்மின்" (ஷை 540)

"சிந்தை திருகற் சமணர் தேரர்" (ஷை 543)

"உடையிலா துழல்கின்ற குண்டரு மூணரும் தவத்தாய
சாக்கியர்
கொடையிலா மனத்தார்" (ஷை 551)

"கடுக் கொடுத்த துவராடையர் காட்சியில்லாததோர்
தடுக் கிடுக்கிச் சமணே திரிவார் கட்குத் தண்ணருள்
கொடுக் கிலாக் குழகன்" (ஷை 552)

"வழிதலை பறிதலை யவர்கள் கட்டிய
மொழிதலைப் பயனென மொழியல்" (ஷை 553)

"மாசூர் வடி வின்ஞர் மண்டையுணல் கொள்வார்
கூசா துரைக்கும் சொல்" (ஷை 555)

" பிண்டி பாலரும் மண்டைகொ டோரும் பீலி
கொண்டுழல் வாரும்
கண்ட நூலரும் கடுந்தொழி லாளரும் கழற நின்றவர் "
(தேவா. சம். 557)

" கஞ்சியைக் குலவு கையரே கலக்கமா ரமணர் கையரே
அஞ்ச வாதிலருள் செய்யநீ யணைந்திடும் பரிசு செய்ய நீ
வஞ்சனே வரவும் வல்லையே மதித்தெனைச்
சிறிதும் வல்லையே " (ஷை 583)

" கஞ்சிப் போதுடையார் கையினிற் கோசரர் கலதிகள்
கட்டுரை விட்டு " (ஷை 584)

" வேர்த்த மெய்ய ருருவத் துடைவிட்டு ழல்வார்களும்
போர்த்த கூறைப் போதி நிழலாரும் " (ஷை 640)

" செடி நுகரும் சமணர்களும் சீவரத்த சாக்கியரும் "
(ஷை 655)

" மனை துறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
மாண்புரைக்கு மனக் குண்டர் தங்கள் பொய்யும்
சினை பொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்
மெய்யென்று கருதாதே பேதை நெஞ்சே "
(அப்பர். 675)

" மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் றுடொழாதே
உய்யலாம் என்றெண்ணி யுறி தூக்கி
யுழிதந்தே னுள்ளம் விட்டுப்
பெருகுவித்தென் பாவத்தை பண்டெலாம்
குண்டர் கடஞ் சொல்லே கேட்டு
உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்
துள்ளத்தைத் தள்ளிப் போக்கி " (ஷை 697)

" குண்டனாய்த்தலை பறித்துக் குவிமுலையார்
நகை நாண துழிதர் வேனைப்
பண்டமாய் படுத்தென்னை ப்பாறலையிற்
றெளித் துகத்த—காட்டித்
தொண்டெலாம் இசைபாடத் தூமுறுவலருள்
செய்யு மாரூரரைப்
பண்டெலா மறியாதே பனிநீராற்
பரவை செயல் பாவித்தேனே " (ஷை 697)

" துன்னுகத் தோலுரித்துத் துர்ச்சனவர் சொற்கேட்டுத்
துவர் வாய்க் கொண்டு
என்னுகத் திரிதந்தீங் கிருகை யேற்றிட
வுண்ட வேழையேன் " (தேவா. அப்பர். 697)

" பப்போதிப் பவணுய்ப் பறித்ததொரு
தலையோடே திரிதர்வேனை
ஒப்போட வோதுவித்தென் னுள்ளத்தி
னுள்ளிருந் தங் குறுதி காட்டி
அப்போதைக் கப்போது மடியவர்கட்
காரமுத மாரூரரை
எப்போதும் நினையாதே யிருட்டறையில்
மாடுகறந் தெய்த்தவாறே " (ஷை 697)

" கதியொன்று மறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையிலுண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காண
நகை நாணு துழிதர்வேற்கு (ஷை 698)

" பூவையாய்த் தலை பறித்துப் பொறியற்ற
சமணீசர் சொல்லக் கேட்டுக்
காவிசேர் கண்மடவார் கண்டோடிக்
கதவடைக்குங் கள்வனேன் " (ஷை 698)

" குலம்பலம் பாவருகுண்டர் முன்னே நமக்குண்டுகொலோ
மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணு வல்லமணர்
சொற்றிட மென்று துரிசு பட்டேனுக்கு முண்டுகொலோ "
(ஷை 705)

" ஒருவடி வின்றி நின்றுண் குண்டர் முன்னமக்
குண்டுகொலோ
......தொண்டராம் புண்ணியமே " (ஷை 705)

" மாசினை யேறிய மேனியர் வன்கண்ணர் மொண்ணரை
விட்டீ சனையே நினை " (ஷை 705)

" வீங்கிய தோள்களும் தாள்களுமாய்
நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன்னே
நமக்குண்டு கொலோ
தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே " (ஷை 705)

" ஏவ மேதுமிலா வமணேதிலர்
பாவகாரிகள் சொல்வயப்பட்டு நான் " (ஷை 785)

" நின்றுனுஞ் சமணும் இருந்துணும் தேரரும்"
(தேவா. அப்பர் 852)

" ஓதியோத்தறியா வமணுதரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" (ஷை 860)

" பொய்யரா மமணர் கொளுவும் தீரர் எத்தர் எக்கர்
துட்டர்" (ஷை 861)

" உறித்தலைச் **சுரையொடு** குண்டிகை பிடித்துச்சி
பறித்தலும் போர்த்தலும்" (ஷை 897)

" போதியார் பிண்டியா ரென்றிவர்கள் புறங்கூறும்
பொய்ந்நூல் ஓதிய கட்டுரை" (ஷை 923)

" இருபிறப்பும் வெறுவியரா யிருந்தார் **சொற்கேட்டு**
ஏழையேன் நான் பண்டிகழ்ந்த வாறே"
(ஷை அப். 962)

" குண்டர்களா யுழன்று கையிலுண்டு
குவிமுலையார் தம்முன்னே நாணமின்றி
உண்டி யுகந்தமணே நின்ருர் சொற்கேட்
டுடனுகி யுழிதந்தே னுணர்வொன் றின்றி"
(ஷை அப். 962)

" உறிமுடித்த குண்டிகை தங்கையிற் றூக்கி
யூத்தை வாய்ச் சமணர்க்கோர் குண்டரக்கனுய்க்
கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு
கண்டார்க்கும் பொல்லாத காட்சியானேன்"
(ஷை அப். 963)

" முலை மறைக்கப்பட்டு நீராடாப் பெண்கள்
முறைமுறை யானநஞ் தெய்வமென்று தீண்டித்
தலை பறிக்கும் தன்மையர்களாகி நின்று
தவமே யென்றவஞ் செய்து தக்க தோரார்"
(ஷை 963)

" சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர்
சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர்
பேய்த் தேர்ப்பின்
குடங் கொண்டு நீர்க்குச் செல்லார்
போதுமின் குஞ்சரத்தின்
படங் கொண்ட போர்வையினுர்
பருப்பதம் பராவுதுமே" (பக். 1145)

## தேவாரப் பாசுரங்களில் கண்ட சமணரின் நடையுடைக் குறிப்புகள்

சமணர் இருவகைப்படுவர். திகம்பரர் அல்லது உடை யில்லாதவர். சுவேதாம்பரர் அல்லது வெள்ளை யுடை யுடுத்தவர்கள். அவர்கள் துவராடை யணிபவர். நீராட் டின்மையின் மாசேறிய உடலினர். ஊத்தை வாயர். தடுக் குடுத்து மயிற் பீலிகை யேந்தித் திரிபவர். உறிபுல்லிய கையினர். கையார் சோறு கவர் குண்டர். அருந்தும் பொழுதுரையாடாமல் மூங்கைகள்போல் உண்ணுபவர். குடை பிடித்துச் செல்வர். அவர்களில் சமணர் நின்றுண் பவர். தேரர் இருந்துண்பவர். அவரை விருது பகரும் வெஞ்சொற் சமணர் என்றும், வீடுணரா வெற்றரையர் என்றும், சாவாயும் வாது செய்பவர் என்றும் கூறுவர். பெரும்பாலும் காஞ்சி நகரிலும் சிறுகுடியிலுமிருந்தவர். தேரர் அறுவகையினர் என்ற குறிப்பும் காணலாம். அவரைக் கோசாம் நுகர்பவர் என்ப. கோசாம் எனில் பூந்தாது. திருநாவுக்கரசர் சைவ சமயம் தழுவு முன்பு சமணரொடுழன்றதாய்ப் பாசுரங்களில் கூறியுள்ளார். சிற்றுயிர்க்குமிரங்கி, அவைக்கூறு நேராதபடி பார்த்துக் கொள்வர். தலையை மழித்தால் ஈரு பேன்கள் இறக்க நேரும் என்று தலை மயிரைத் தாமே ஒவ்வொன்றாகப் பறிப்பார். உலோச்சர் என்ற சங்கப் புலவர் ஒருவருண்டு. அவர் நெய்தல் வளம் பாடுவதிற் சிறந்தவர். சமணர் பிண்டி நீழற் பெருமானை வணங்குபவர். வேதத்தில் நம்பிக்கை யில்லாதவர்.

சமணத் துறவிகள் நினகல்பரென்றும் ஸ்தவீரகல்பர் என்றும் இருவகைப்படுவர். பாணிபத்திரம் அதாவது கையிலே உணவு பெற்றுண்பவரும் கப்பறையில் பெற் றுண்பவரும் என இருதிறத்தினராவர். இவர்களும் உடை தரித்தவரும் தரியாரும் என இருபிரிவுண்டு. உடை தரியா அமணர் கையில் ஒரு சோதினி கொள்வர். கனிஷ்க மன்னன் காலத்திய சாசனங்களிலிருந்து கி. பி. முதல் நூற்றாண்டிலேயே சமண மதம் சிறந்து விளங்கிற்றென்

றறிகிறோம். இவற்றிற் கூறப்படும் கணதரர்கள் முதலானவர்களும் பத்திர பாகுவின் கல்ப சூத்திரங்களில் காணப்படும் பெயர்களும் ஒத்திருக்கின்றன. ஆயினும் சமண ஆகமங்கள் அவ்வப்பொழுது மாறுதல் அடைந்து வந்துள்ளன என்பர்.

சமண ஆகமங்களில் மக்களின் பழக்க வழக்கங்கள், திருவிழாக்கள், சமயங்கள் முதலிய பல செய்திகள் காணப்படும். பழங்கால இந்தியாவில் அரசன் இன்றியமையாதவனுகக் கருதப்பட்டான். இருவழியும். தூய்மையனுக அரசன் இருத்தல் வேண்டும். 10-இல் ஒரு பங்குதான் அவன் குடிகளிடம் இறையாகப் பெறுதல் வேண்டும். அரசர்க்குப் பரம்பரை உரிமை உண்டு. மக்கள் பலரெனின் அவர்கட்குட் சண்டையுமுண்டு. சண்டையிடும் மக்களை யழைத்து ஓர் மன்னன் அவர்கட்குணவு பரிமாறச் செய்து அவர்கள் உண்ணவிருக்கும்போது நாய்களை அங்குப் புகவிட்டான். முதல் மகன் உண்ணுமல் வெளியேறினன். இரண்டாவது மகன் தடியால் நாய்களை அடக்கி உணவுட்கொண்டான். மூன்ருமவன் நாய்களையும் உண்ணச் செய்து தானும் உண்டான். மூன்ருமவனே அரசன் ஆனுன். மூத்தவனே சட்டப்படி அரசிற்குரியவன். மகவின்றி மன்னனிறந்தால் சமணத் துறவிகளைக் கொண்டு மகவைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சர் கூறுவர். இணங்காத துறவிகள் கொலையுண்டனர். (51) மக்களில்லாவிடில் சில சமயங்களில் மருமகனுக்கு அரசு கிடைத்ததும் உண்டு. சிற்சில சமயங்களில் பெண்களும் அரசுரிமை யெய்தினர். உடன்கட்டையேறுதல் அக்காலத்தில் இல்லை.

## சாசனமும் சமணரும்

### தென்னிந்திய சாசனம் வாலியம் 5.

திருநெல்வேலி சில்லா கோயிற்பட்டித் தாலூக்கா கழுகுமலை ஐயனுர் கோயில்.

*313.* ஸ்ரீ கோட்டாற்றுப்பாதமூலத்தான் சன்மம் புட்ப நந்தி செய்வித்த திருமேனி.

*316.* கோட்டாற்று உத்தணந்திக் குருவடிகள் மாணுக்கர் செய்வித்த திருமேனி.

*317.* ஸ்ரீ திருநறுங்கொண்டை பவதேவ குரவடிகள் மாணுக்கர் கனகவீர அடிகள் செய்வித்த திருமேனி.

*315.* ஸ்ரீ குரண்டி தீர்த்த படாரர் மாணுக்கர் கனக நந்திப் பெரியார் செய்வித்த திருமேனி.

*321-405.* சைநத் திருமேனிப் பிரதிட்டை.

**Vol. IV.** *368.* சயங்கொண்ட சோழ மண்டலத்து எயிலி நாட்டு நகரம் காஞ்சிபுரம் திருப்பருத்திக் குன்று நயினர் திரைலோக்யநாதர் கோயில் ஸ்ரீ பண்டாரத்துக் குருக்கள் அநந்தவீரிய வாமநமுனிவரும்.

**Vol. III.** பாகம் *3. 92.* வேடலில் உள்ள ஓர் இயற்கைக் குகையில் ஓர் தூணில் இராசகேசரிவன்மனது *14*-வது ஆட்சி யாண்டில் குணகீர்த்தி பட்டரின் சீடையான கனகவீரக் குரத்தியார் என்ற சைன முனிக்கும் அவளது மாணுக்கர்கட்கும் உணவளிப்பதற்காகச் சாசனம். வேடல் அல்லது விடால் என்பது மாதேவி ஆராண்டி மங்கலம் என்ற பெயரால் சிங்கபுர நாட்டின் கீழ்பாலுள்ளது. இராசகேசரிவன்மன் முதலாவது ஆதித்யன் என்ப.

*38* of *1901.* விசயநகர் மன்னன் விரூபாக்கராயன்—இச்சாசனத்தில் தீர்த்தங்கரரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் நான்கு காணப்படுகின்றன.

*44* of *1901.* சந்திரகீர்த்தி என்ற ஆசார்யனுக்கு பஸ்தி அமைத்தல்.

*79* of *1901*. சக ஆண்டு *1459*-இல் சாந்தீஸ்வர பஸ்தியில் *24* தீர்த்தங்கரரின் பிரதிட்டை.

*82*. மூல்கி (Mulki) பஸ்தியில் அமைந்த பெரிய தூணின் தென்பாகத்தில் சக ஆண்டு *1333*-இல், *25* சதுரங்களாக எழுதப்பட்ட தீர்த்தங்கரர் துதிகள்.

*238* of *1904*. சிங்கவரம் பனையலூர் அருகில் உள்ள திருநாதர்புரம் பாறையொன்றில், *30* நாட்கள் பட்டினி யிருந்து நிர்வாணமெய்திய ஒருவரின் நிசீதிகை.

*39* of *1904*. திருநாதர் குன்றம் பாறையில் வட்டெழுத்தில் *57* நாட்கள் பட்டினி யிருந்த சந்திர நந்தியின் நிசீதிகை.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட திருச்சி, வல்லம், சீயமங்கலம், மகேந்திரவதி, தளவானூர் முதலிய இடங்களில் உள்ள கற்குகைகளே தென்னிந்தியாவில் முதன் முதல் காணப்படும் கட்டிடங்கள். தென்பாலுள்ள பாறைக் குகைக் கோயில்கள் இவற்றிற்குக் காலத்தால் முற்பட்டவை. மலைச்சரிவுகளில் உள்ள இயற்கைக் குகைக் கோயில்கள், ஒருகற்கோயிலுக்கு முந்தியன. எளிதில் அழியாத கல் முதலியவைகளைக் கொண்டு கட்டிடங்களும் கோயிலும், முதன் முதல் அமைத்தவர் பௌத்தரே என அறிஞர் கருதுவர். சமணரும் பிறசமயத்தாரும் அவரைப் பின்பற்றினர். பாறைகளில் சிறு பிளவுகள் செய்து மக்கள் வதியுமாறு செய்தபோதுதான் சல்லேகனப் படுக்கைகள் உண்டாகி யிருத்தல் வேண்டும். மருகல் தாழையில் உள்ள இயற்கைக் குகை மேலே கூறியபடி யுள்ளது. இஃது திருநெல்வேலி சில்லாவில் பாளையங் கோட்டையிலிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது. வலது புறம் உச்சியில் அசோகன் லிபி போன்ற லிபியில் பாலி மொழியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இடது புறம் அடியில் ஏழு படுக்கைகள் உள்ளன. ஆனைமலையி

லுள்ள பஞ்ச பாண்டவர் மலையில் இரட்டைப் படுக்கைகள் மூன்றும், ஒற்றைப் படுக்கை ஒன்றும் உள்ளன.

மேலூரை அடுத்த மாங்குளத்தின் அருகில் கழுகுமலை யுள்ளது. அதில் ஓர் சாசனமும் உண்டு. அவண் பஞ்ச பாண்டவப் படுக்கை என்ற ஓர் பாறை உண்டு. இதில் உள்ள எழுத்தும் அசோக லிபியைப் போன்றுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டினதாக இருத்தல் கூடும். படுக்கைகள் அகழ்ந்த காலமும் லிபி எழுதிய காலமும் ஒன்றாக இருப்பின், இதுவே தமிழ்நாட்டில் மிகவும் பழைய கற் சாசனம் ஆகும். தமிழ் எழுத்து வட்டெழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைக் காட்டுதலின், இது மிகவும் பயன் படக்கூடியதொன்று. கல்வெட்டெழுத்துக்கள் பாலியில் இருப்பது கொண்டு, அத்துணைப் பழங்காலத்திலேயே பாண்டிய நாட்டார் பாலி எழுத்தைப் படிக்க அறிந்திருந்த செய்தி புலனும்.

குகைகளில் உள்ள அறைகளில் காணப்படும் படுக்கை களும், உட்புறத்தில் தூண்களின்மையும், குகைக் கோயில் களின் தொடக்கத்தில் அவை உண்டாயின என்று அறி விக்கும். மேலும் புத்த சமயிகள் அதிக ஆடம்பரமில்லாத இயற்கைக் குகைகளையே பெரிதும் விழைந்தவராவர்.

*38* of *1907-8*. மதுரை சில்லா வஞ்சியூர் பஞ்ச பாண் டவர் படுக்கை. பிராமி லிபி.

*42* of *1907-8*. திருநெல்வேலி சில்லா வீரசேகரம் பாறை யருகில் சகஜ நந்தியின் பாதச் சுவடுகள்.

*45* of *1907-8*. மதுரை சில்லா மல்லியப்பட்டி. சகச நந்தியின் பாதச் சுவடுகளைப் பஞ்ச பாண்டவர் படுக்கை யிற் பொறித்தது.

நாகர்கோயில் நாகராசர் ஆலயம். கல்வெட்டுக்கள். கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள் குணவீர பண்டிதர் மாட்டும், கமலவாகன பண்டிதர் மாட்டும் ஒப்படைக்கப் பட்டன. நாகர்கோயில் 23-வது தீர்த்தங்கரர் பார்சுவ நாதர் வதிந்த இடம் என்பர்.

மயிலையில் நேமிநாதர் விக்கிரகம். சமண நூலாகிய திரு நூற்றந்தாதி முகவுரையில் மூன்றரை நூற்றுண்டுகட்கு முன்பு, கடல் பெருகி, மயிலையில் இருந்த நேமிசந்திரர் கோயிலை இடித்து விட்டதாகவும், ஆனால் அதில் இருந்த தீர்த்தங்கரர் திருவான்மியூர்க்குக் கொண்டுபோகப்பட்டா ரென்றும் கூறப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள மயிலைக் கபாலீச்சுரர் கோயில் கடற்கரையில் இருந்ததாகவும் கடற் பெருக்கிற்கஞ்சி 350 ஆண்டுகளுக்குமுன் உள்ளே தள்ளிக் கட்டப்பட்டதென்றும் ஒருரை வழங்குகின்றது. சென்னை மயிலை சாந்தோமுக்கு (San Thome) அருகில் இப்பொழு தும் காணப்படும் சமணச் சிலையும், தூண்களும் இதனை வலியுறுத்தும். இந்த சைனாலயம் கி. பி. 7-ஆம் நூற் றுண்டிலிருந்திருக்க வேண்டும்.

நிற்க, 1922-ஆம் ஆண்டு அக்டோபர் மாதச் செந் தமிழ்ப் பத்திரிகையில், பண்டித மு. இராகவையங்கார் சூடாமணி நிகண்டாசிரியன் மண்டல புருடர், கிருட்டின தேவராயர் காலத்தவர் (1509-30) என்பர். மேலும் அவர் காலத்திலேயே குணபத்திரர் இருந்தனர் என்றும், மன்னன் தமிழ்நாட்டிலிருந்த சில சினகரங்களைச் சீர் திருத்த, சில அறிஞர்களை அனுப்பியதாகவும் கூறுவர். ஆனால் மண்டல புருடரின் ஆசிரியரான குணபத்திரரும், இலக்கண ஆசிரியரான குணவீரரும், நாகர்கோயில் சாச னத்திற் காணும் குணவீரரும் ஒருவரே என்பதற்குப் போதிய சான்றில்லை என்பர் காலஞ்சென்ற டி. எ. கோபி நாதராவ். முதற்கண் கூறப்பட்டவர் திருநறுங்கொண்டை வாசி. இலக்கண ஆசிரியரது ஊரோ களந்தை. நாகர்கோ யிலிற் காணப்படும் குணவீரர் ஊர் விளங்கவில்லை.

118 of 1907-8 குணவீர பண்டிதரின் பள்ளிச் சந்தத்திற்கு விடப்பட்ட நிலம்.

ஒரு காலத்தில் பௌத்தமும் சமணமும் இந்தியா முழுதும் பலரால் தழுவப்பட்டுப் பின்னர் நாளடைவில் பௌத்தம் தான் பிறந்த நாட்டில் அறவே அழிந்தும், சமணம் சிற்சில இடங்களில் தங்கியும் நின்றன. இப்பொழுது அவைகளைப்பற்றி யறிவதற்குச் சாதனங்களாயுள்ளன அவர்களால் அமைக்கப்பட்ட கட்டிடங்களே. அசோகர் காலத்தில்தான் தென்தமிழ்நாட்டில் பௌத்தம் பரவியது. திராவிடநாட்டு மன்னர்கள் பௌத்தம், சமணம் என்ற இரு சமயங்களையும் ஆதரித்து வந்தனர். அண்மையில் பௌத்தத்தைப்பற்றிய குறிப்பு தென்னாற்காடு சில்லாவைச் சேர்ந்த விரிஞ்சிபுரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதில் சாத்திரப் பண்டிதரும் சங்கத்தாரும் குறிப்பிடப்படுகின்றனர். இதற்கு முன்னரே பல தென்னாட்டு அரசர்கள் இந்த அவைதிக சமயங்களை ஆதரித்தனர் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் உண்டு. பாண்டியன் இராசசிம்மன் இம்மதங்கட்கு அநேக பள்ளிச் சந்தங்களும், நிலமும் அளித்தனன். பழுத்த சைவனான இராசராசன் கூட மாறன் விசயோத்துங்கவன்மன் என்ற பர்மா மன்னன் நாகைப்பட்டினத்தில் அமைத்த பௌத்த விகாரத்திற்கு ஆனைமங்கலத்தை முற்றூட்டாக அளித்தான். திருநறுங்கொண்டைச் சமண ஆலயத்துக்கும் அவனளித்த நிலம் அக்கோயிற் சாசனத்திற் குறிக்கப்பட்டுள்ளது.

விக்ரமராசன் ஆட்சியில் கடல்கோள் ஏற்படப் பல கற்களையிட்டுச் சமணக் கோயிலைக் காத்ததாக வரலாறுண்டு. இந்தக் கோயில் ஸ்ரீமூலவாசம் கோயில் என்றும், அதைத் தென்னாட்டிற் சோழன்மீது படையெடுத்துச் சென்றபோது கம்பீரன் மகன் வல்லபன் கண்டதாகவும் மூஷிக வமிச வரலாறு கூறும். விளவங்கோட்டுத் தாலூக்காவில், உள்ள சித்திரா என்னும் மிகவும் புகழ் பெற்ற சமண ஆலயத்துக்கும், இவன் இறையிலி நிலங்கள்

அளித்துள்ளான். ஆனால் மூஷிக மன்னவன் வல்லபன் காலத்தில் இந்தப் பௌத்தாலயமும், சீமூலவாசமும் கடல் கோளால் அழியும் தறுவாயிலிருந்தன. இது கி.பி. 868-க்குப் பல ஆண்டுகட்கு முன் நிகழ்ந்திருத்தல் வேண்டும். சோழ மன்னரால் எதிர்க்கப்பட்ட கேரள மன்னனுடன் வல்லபன் சென்றான். கேரள மன்னரை எதிர்த்தவராக இதுகாறும் நாம் கண்ட சோழ மன்னர்கள் முதல் ராசராசனும் அவன் மகன் ராஜேந்திர சோழனும்தான் ராசராசன் வெற்றிகள் தென்கேரளத்துடனிற்க, ராசேந்திரன் வெற்றி இலாமுரி தேசம் முதலிய கேரள நாடுகளிலும் காணலாம். ஆகவே மேலேகுறித்த கேரளர் பகைவன் ராசேந்திரனாக இருந்திருத்தல் கூடும். எனவே 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஸ்ரீமூலவாசம் கோயில் அழிந்துபட்டிருக்க வேண்டும். இதே சமயத்தில்தான் சூடாமணி விகாரம் என்ற புதிய பௌத்தாலயம் நாகையில் ஏற்பட்டது. விக்ரமாதித்யன் மகன் வரகுணன் இந்து மதத்தினனாயிருந்தும் தனது சாசனத்தில் பௌத்தரையும் அவரது முச்சங்கங்களையும் வணங்கியுள்ளான். காந்தாரத்தில் எங். பௌச்சர் (M. Foucher) கண்டுபிடித்த உலோகேச்சுவர விக்கிரகத்தின் அடியில், "தட்சிணாபதம் ஸ்ரீமூலவாசலோகநாத:" என்று தீட்டியிருப்பது கொண்டு, ஸ்ரீ மூலவாசம் மிகப் பெருமை வாய்ந்ததென உணரலாகும். தென்னாட்டில் இருந்த இச்சிலையைப்போல், வடக்கண் காந்தாரத்தியற்றப்பட்டிருப்பது கொண்டு பௌத்தரால் இஃது கொண்டாடப்பட்ட விவரம் அறியலாம். இதை ஒட்டிப் பல சிலைகள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரும் கேரள மன்னனுமான சேரமான் பெருமான் பௌத்தனானதாக மலையாளத்தில் வழங்குகின்றது. ஸ்ரீமூலவாசம் பௌத்த முனிவரால் இம்மன்னர் அச்சமயத்தினராக மாறியிருக்கக் கூடும். அராபியர்க்கு முன் சீனர்கள் கையில் இந்திய வாணிக மிருந்தது. மலையாளப் பக்கத்தில் சீனர்கள் வாணிகத்தின் பொருட்டு அடிக்கடி போந்தனராகலின் பௌத்தம்

ஆங்குப் பரவ ஏதுவாயிற்று.

சமண தீர்த்தங்கரரின் சிலையினளவு மான சாரத்திற் காணலாம். இ஼து தென்னாட்டில் எழுந்த நூல் எனினும், இதிற்கூறும் அளவே பிற இடங்களிலும் ஏற்கப்பட்டது. சமணச் சிலைக்கு இரண்டு கைகள், இரண்டு கண்கள், முண்டிதசிரங்களுடன், நின்றும், இருந்தும், பதுமாசனத்தும் ஆழ்ந்த நிட்டையில் இருப்பது போன்று சிலைகள் ஆக்கப்படவேண்டும் என்பர்.

மத்திய திருவாங்கூரில் ஐந்து சமணச் சிலைகள் உள்ளன. கடும்படிக்குட்டான் என்று வழங்குவர். கால் நடைகட்கு நோய்கண்டாலும், அவைகள் காணுமற் போனலும் மக்கள் இச்சிலைகளை வணங்குவர்.

சித்ராவில் இயற்கைக் குகைகளும் தீர்த்தங்கரரின் உருவங்களும் உள்ளன. திருநறுங்கொண்டை, குடவாயில் முதலிய இடங்களிலிருந்து கி.பி. 1250-இல் இவ்வூர்க்குப் பல சமணர் போந்தனர்.

அடுத்து முக்கியமான திருவாங்கூர்ப்புறத்துச் சமணர் கோயில், நாகர் கோயிலிலுள்ள, நாகராசர் கோயிலாகும். திருவாங்கூர் மன்னன் சுடலைவீர உதயமார்த்தாண்ட மன்னன் இதற்கு நிலம் உதவியிருக்கின்றான். அதன் பூசாரிகள் கமலநாத பண்டிதர், குணவீர பண்டிதர் ஆவர். அரசன் அளித்த பள்ளிச் சந்தங்கள் பல. இவ்வரசனை அடுத்து அது இந்து ஆலயமாயிற்று. இவண் ஆறு சமணச் சிலைகள் உள்ளன. மூன்று மகாவீரர் சிலைகள். ஒன்று பார்சுவநாதர். நின்ற திருக்கோலம், ஒன்று பார்சுவநாதர் இருந்த திருக்கோலம். ஆறாவது பத்மலோகிதர், பார்சுவநாதரின் லாஞ்சனை ஐந்தலை நாகம் என்ப. அடுத்து வட திருவாங்கூரில் பெரும்பாவூர் அருகில் கல்லிலுள்ளது. இங்கே பாறைக் குகையில், பார்சுவநாதர், மகாவீரர், பத்மலோகிதர் என்ற இவர்களின் சிலைகள் உண்டு.

சித்ரால் சமணக் கோயிலே இந்துக் கோயிலாக மாறியது. எனினும் அது சமணக்கோயிலாக இருந்ததற்குப் போதிய சான்றுகள் கழுகுமலைச் சாசனங்களில் உண்டு. திருச்சாரணம்குரண்டி (E. Travancore) யில் பல சமணரிருந்தனர். சாரணன்-சமணத் துறவியின் பெயர்.

இனி புதுக்கோட்டைச் சீர்மையில் பல சமண சாசனங்கள் உள்ளன.

*4.* திருமயம் தாலூக்கா மலையக் கோயிலில் சமணாசாரியன் குணசேனர் பெயர் காணப்படும். இதில் பரிவாதிநாதர் பெயரைக் காணலாம்.

*10.* திருமயம் தாலூக்காவில் ஸ்ரீவல்ல உதான சிறுவொட்டி அமைத்த சமண தீர்த்தங்கரர் உருவம் உள்ளது.

*158.* நார்த்தாமலை திருமலைக் கடம்பர் கோயிலில் திருமானைமலை அருகர் தேவரைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

புதுக்கோட்டைச் சீர்மை சிற்றணியல் வாயிலில் ஓர் பாறையில் குகையுள்ளது. உள்ளே சென்றால், முக்குடைக்கீழ் சமணச் சிலையைக் காணலாம். உச்சியில், உட்புறத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தீட்டப்பெற்ற சித்திரம் இன்றும் வருணம் அழியாது விளங்குகிறது. அதில் ஓர் குளமும், அதில் தாமரை மலர்கள், அன்னங்கள் முதலியனவும், தீட்டப்பட்டுள்ளன. ஏழடிப்பட்டம் என்ற ஓர் குறுகிய வழியே சென்றால், முதலை வாயங்காந்தாற் போன்ற ஓர் பாறையுண்டு. அதில் 17 சல்லேகனப் படுக்கைகள் உண்டு.

தீபங்குடி என்ற ஊர் சமணர் நிறைந்த ஊராகக் கூறப்பட்டுள்ளது. ஒரு சமயம் கலிங்கத்துப் பரணி பாடிய கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டாரை அபயன் "உமதூர்

யாது'' என்று கேட்டபோது அவர்,

'' செய்யும் வினையு மிருளுண் பதுவுந்
    தேனுந் நறவும் ஊனுங் களவும்
பொய்யுங் கொலையு மறமுந் தவிரப்
    பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழுங் விழியுங்
    காலுந் நிறமும் போலுங் கமலம்
கொய்யும் மடவார் கனிவாய தரங்
    கோபங் கமழுந் தீபங் குடியே''

என்று கூறியதாக வரலாறுண்டு. மு. ராகவையங்கார் தொகுத்துள்ள பெருந்தொகையில் பழையாற்றுமாதவன் என்ற ஓர் சமண முனிவன் பெயர் காணப்படுகிறது.

### சமணர்க்குச் சிறந்த மலைகள்

'' பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
யருங்குன்றம் பேராந்தை யானை—யிருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத் தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு''

தீபங்குடி என்பது தஞ்சை சில்லா நன்னிலம் தாலூக்காவில் உள்ள ஊர்.

### அருகக் கடவுள் துதிகள் சில

''போதார் நறும்பிண்டிப் பொன்னூர் மணிய னையான்
தாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்
தீதார் வினை கெடுப்பார் சிறந்து. (யாப். வி. 66)

'' அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ விரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே. (யாப். வி. 8)

'' உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே''
(இலக். வி. 52)

சமணர் ஆதிக்கக் காலத்தில் அரசரின் முடிசூட்டுவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. அரசர், சேனுபதி, புரோகிதர் 18 தொழிற் கூட்டத்தார் இவர்கள் புடைசூழ நடந்தேறியது. அரசரது உவளகமும் சிறப்பாக ஒளிர்ந்தது. அதில் மூன்று பிரிவுகள் உண்டு. ஒன்றில் முதுபெண்டிரும் இரண்டாவது அறையில் இளம்பருவப் பெண்களும், மூன்ருவதில் வயது வராத இளஞ்சிறுமிகளும் இருந்தனர். அந்தப்புரங்களில் கோஜாக்கள் உண்டு. கல்ப சூத்திரங்களிலும் பாடியங்களிலும் இவர்களைப்பற்றிய செய்திகள் காணப்படும். அவர்கள் சமண சங்கத்தின் உறுப்பினராக முடியாது.

**உவளகக் காவன்மாக்கள்**

*(1)* **கஞ்சுகி** : அரசரிடமும் உவளகத்தும் தாராளமாக இவர் செல்லலாம். உவளகச் செய்திகளை அரசற்கு அறிவுறுத்துவோர் இவர். *(2)* **வரிசைதாரன்** : இவனை ஆண்மை யிழக்கும்படி செய்தே காவலனுகச் செய்வர். *(3)* **மகத்தரன்** : இவன் பிறிதொரு அதிகாரி; உவளகத்தினின்று மகளிரை அரசரிடம் அழைத்துச் செல்வான். அவர்கட்குக் கதைகள் கூறுவான். அரசர்க்கும் அவர்கட்கும் நேர்ந்த பிணக்குகளைத் தீர்ப்பான். மகளிரின் சினத்திற்குக் காரணம் இன்னதென அரசர்க்கறைவான்.

அரசனை யடுத்து இளவரசர் உண்டு. மந்திரி, புரோகிதரும் உண்டு. அரசர்க்கு ஐந்துவிதச் சபைகள் உண்டு. அதில் பிணக்கம் கொண்ட அல்லது ஊடலைமேற்கொண்ட இராணியைச் சமாதானம் செய்வது; இராணிகள் பலர் தீண்டாமல் இருந்து முழுகிய நாளை அரசர்க்கு அறிவுறுத்துவது, அரசன் மகளிரில் மணப்பருவம் எய்தியவரின் பெயர்களை அரசர்க்கறிவிப்பது முதலியன அவர்களின் பணி. தூதரும் ஒற்றரும் இருந்தனர். இத்தொழில்களில் இருபாலாரும் உண்டு. அவர்கள் எல்லைப்புற நாடுகளிலும், நகரங்களிலும் உவளகங்களிலும் பணியாற்றினர்.

நிலவரியை அடுத்து மற்றையவரிகள் 18 வகையென்பர். சுவான்தாரில்லாத சொத்தும், புதையல் தொகையும் அரசர்க்கே உரியன. அபராதம், பறிமுதல் என்ற இந்த வழிகளிலும் நிதி சேர்ந்தது. திருடினவனுக்குச் சிறை வாசமும், மரண தண்டனையுமுண்டு. சதுரங்க சேனையு மிருந்தது.

''உறுபொருளும் உல்குபொருளும் ஒன்னார்
தெறுபொருளும் வேந்தன் பொருள்''

என்றார் திருவள்ளுவர்.

மகளிர்க்குரிமை அக்காலத்தில் இல்லை. மூன்றாண்டுச் சமணத் துறவி 30 ஆண்டுப் பிக்குணிக்கு ஆசாரியனாக லாம். சுயம்வரமும் காந்தர்வ மணமும் அப்பொழுது நிகழ்ந்தன.

### கச்சி நகரிற் கண்ட சமண சின்னங்கள்

இரண்டாவது புலிகேசி, விசயாதித்தன் இரண்டாவது விக்கிரமாதித்தன் என்ற மேலைச் சளுக்கிய மன்னர்கள் பல சமணக் கோயில்களை மராமத்துச் செய்தும் அவைகளுக் காக முற்றூட்டாகக் கிராமங்களை அளித்தும் உதவினர். சளுக்கியரது ஆட்சியில் சமணம் நன்கு திகழ்ந்தது. இரட்ட மன்னர் ஆட்சியிலும் வளர்ச்சியுற்றது. இரட்ட அரசனை முதலாவது அமோகவர்ஷன் புகழ்பெற்ற ஜினசேனரின் சீடன். இராசமல்லன் என்ற கங்க அரசன் வடாற்காடு சில்லா வள்ளிமலையில் ஓர் சமணக்கோயில் அமைத்தான். (Epi. Ind. Vol. IV. 140) பிற்காலத்தில் வைணவராக மாறியபோதிலும் ஹொய்சளர் ஆதியில் சமண மதத் தினரேயாவர். (Bombay Gazetteer Vol. I. Part II. P. 491)

காஞ்சீபுரம் தாலூக்காவில் திருப்பருத்திக்குன்றம், ஆர்ப்பாக்கம், மாகறல், ஆரியப்பெரும்பாக்கம், சிரீவாக்கம் முதலிய இடங்களில் சமணச் சின்னங்கள் காணப்படுகின் றன. இதில் உள்ள வர்த்தமானர் கோயிலுக்கு அண்மை யிற் தீர்த்தகரர் பிரதிட்டை செய்யப்பட்ட ஒரு கோயில்

உண்டு. இந்தச் சினகரம், சமணத் துறவிகளான வாமனு சாரியர், மகிசேனுச்சாரியர் என்ற இவர்களால் கட்டப்பட்ட தென்பர். மூன்ருவது குலோத்துங்கனும் கிருட்டினதேவ ராயரும் இக்கோயில்களை ஆதரித்தனர். ஜினகாஞ்சி திரை லோக்யநாதசுவாமி கோயிலுக்கு 2000 குழி நிலத்தைச் சர்வமானியமாக அளித்த விஷயம் ஓர் கல்வெட்டிற் காண லாம். ஆர்ப்பாக்கம் கோயில் ஆதிபட்டாரகர்க்கு அமைக் கப்பட்டது. சம்பந்தர் மாகறலுக்கு எழுந்தருளியபொழுது சமணத்தை அறவே ஒழித்தனர் என்ப. சம்பந்தர் தரிசித் தருளிய தலங்களில் மாகறலும் ஒன்ருகலின் இது நிகழ்ந் திருக்கக்கூடும்.

கச்சி, கயிலைநாதர் கோயிலின் உட்புறப் பிரகாரத்தில் கீழே பலவித நரகவாதனைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின் றன. அங்குள்ள சமணர்கள் அந்தச் சுற்றுப் பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்தவர்க்கு யமபயம் இல்லை என்று கூறுகின்றனர்.

# பௌத்தமும் தமிழும்

## இலக்கிய வரலாறு

ஒரு நாட்டின் இலக்கிய வளர்ச்சி தளர்ச்சிகட்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் சமயம் ஒன்று. சமயம் எனினும் மதம் எனினும் ஒக்கும். ஒவ்வொரு சமயத் தாரும் தமது சமயக் கோட்பாடுகளை இலக்கியங்களிற் புகுத்த எண்ணுவதியல்பு. கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத் தில் ஆரிய வேதங்களொடு முரணிச் சில சீரிய ஒழுக்கங் களைத் தம்மிடங்கொண்டு விளங்கிய புறச்சமயங்களுள் பௌத்தமும் சமணமும் தலைசிறந்தனவாம். பௌத்தம் என்பது புத்தரால் உண்டாக்கப்பட்ட மதம் என்பர். இது வடநாட்டில் எழுந்த ஓர் மதம். தென்றமிழ்நாட்டிலும் கி.பி. ஒன்று முதல் 600 வரை நிலவி நின்றதென்று வரலாறு கூறும். அவ்வாறெனில் தமிழ் இலக்கிய இலக்கணங் களிலோ சமய நூல்களிலோ, இச்சமயத்தானிகழ்ந்துள்ள வேறுபாடுகள் உண்டா என்பதே ஈண்டு ஆராயற்பாலது.

இம்மதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வடநாட்டில் தோன்றியது. கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத்திற்கு முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகட்கு முன்னர் எழுந் ததும், ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியனரியற்றியது மான தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணத்தில் இச் சமயத்தைப்பற்றிய குறிப்பில்லை. மற்றும் கி. பி. முதல் ஆறு நூற்றாண்டுகட்குள்ளாக எழுந்தனவும், இன்றளவும் நின்று நிலவுவனவுமான தமிழ் நூல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பன ஆம். சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டு பெருங்காப் பியங்களும் இக்காலத்தனவே. இனி இந்நூல்களில் பௌத்தத் தொடர்பு உண்டா என்று ஆராய்வதன் முன், தொல்காப்பியத்திற் கூறப்பெறும் சமய நிலை சிறிது ஆராயற்பாற்று.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்து,

'' கால முலக முயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ
மாயீ ரைந்தொடு '' (தொல். சொல். 57)

என்ற சூத்திரத்து, உரையாசிரியர் சேனாவரையர், காலம் என்றது காலக்கடவுளை என்றும், பால்வரை தெய்வம் என்பது எல்லோர்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரண மாகிய இருவினையை வகுப்பது என்றும், வினை என்பது அறத்தெய்வம் என்றும், சொல் என்பது நாமகளாகிய தெய்வம் என்றும் எழுதிச் சென்றனர். மேலும் தமிழ் மக்கள் நிலங்களை ஐவேறு வகையாகப் பகுத்தனர் என்றும், ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தேவதை யுண் டென்றும், அவ்வந்நிலத்தார் அவ்வத்தெய்வங்களை உரிய முறையில் வழிபட்டனர் என்றும் அந்நூல் நுவலா நிற்கும். மாயோன், சேயோன், இந்திரன், வருணன் என்பார் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்ற நிலப் பகுதிகட்கு இறைமை தாங்கினர். பாலை நிலத்திறைவி யாகிய கொற்றவையும், திருமால் மகனாகிய காமனும் வழிபாட்டிற்குரியராக விளங்கினர் என்றும் அறிகின் றோம். தொல்காப்பியம் புறத்திணை இயல் 33-ஆம் சூத்தி ரத்து நூலாசிரியர் 'கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற பெயர்களைக் குறிக்கின்றனர். உரையாசிரியர், இவற்றைக் கீழ்த்திசையில் உதிக்கும் ஒளிக் கதிரோன் என்றும், சுதந் தரனாய், உருவிலியாய்ச் சகல தத்துவங்களையும் கடந்து நிற்கும் பராபரன் என்றும், தண்ணிய கதிர்களுடன் கூடிய மதியென்றும் முறையே கொண்டு அவைகளைத் தெய்வமாகக் கூறிப்போந்தனர். ஆகவே, கந்தழி என்ற சொல்லாற் பண்டை மக்கள் ஒரு நாமம் ஓருருவமற்ற கடவுளை இன்ன வகையிற் பாவித்திருந்தனர் என்பது புலனாகின்றது.

இத்தெய்வங்களை வழிபட்டு வந்த தமிழ் மக்களிடத்தும், ஆரிய மக்களிடம் காணப்பட்ட நால்வகை வருணப் பாகுபாடு இருந்ததென்பது,

"நூலே கரக முக்கோன் மணையே
ஆயுங் காலை யந்தணர் குரிய"

"படையுங் கொடியு மரசர்க் குரிய"

"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"

"வேளாண் மாந்தர்க் குழு தூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்ற தொல்காப்பியம் மரபியற் சூத்திரங்களான் அறியப்படும். அந்தணர் அறுதொழிலும், வேள்வியும் முறையே குறிக்கப்பெற்றுள்ளன. இவைகளிலிருந்தே அந்த மிகப்பழங் காலத்திலேயே தமிழர் பழக்க வழக்கங்களில் ஆரிய வழக்கங்கள் பரவி யிருந்தன என்பதை உணரலாம். தெய்வங் கொள்கையும், வேள்வி புரிதலும் தொல்காப்பியனார்க்குடம்பாடாகலின், அவரைப்பௌத்தர் என்று கூறுதற்கில்லை. மற்றும் அவ்வாசிரியர்,

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்க முலக மாதலின்"

என்று தமது மரபியலிற் கிளத்தலின், விசும்பொழிந்த நான்கு பூதமே உடன்பட்ட பௌத்த சமயத்தராகார். மற்றும்,

"அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே"
(தொல். எழுத். பிறப். 20)

"மறைமொழி கிளந்த மந்திரத் தான"
(தொல். சொல். 166)

என்ற பகுதிகள் கொண்டு தொல்காப்பியர் நான்மறைகளைப் போற்றி நின்றமை உணரலாகும். மேற்கூறியன கொண்டு தொல்காப்பியனார் வைதிக சமயத்தவர் என்றும், பௌத்த சமயக் கொள்கைகள் அந்நூற்கண் யாண்டும் இடம் பெறற்கில்லையென்றும் அறியலாம். மேலும்,

பௌத்த சமயம் தென்றமிழ்நாட்டிற் பரவத் தொடங்கியதே, தொல்காப்பியனுர் காலத்துக்கு முந்நூறு ஆண்டுகட்குப் பின்னர் என்ப.

இனி, கி.பி. இரண்டாம் நூற்ருண்டிற்குப் பின் எழுந்த பத்துப்பாட்டை ஆராய்வோம். முதற்கண் திருமுருகாற்றுப்படையில், முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளும் குறிக்கப்படுகின்றன. திருவேரகத்திற் கோயில்கொண்டமர்ந்த பெருமானின் வழிபாடு வைதிகமுறையைத் தழுவி நிற்பப் பழமுதிர் சோலையில் அதே பெருமான் வழிபாடு தமிழ் முறைக்கேற்ப மிளிர்கின்றது. பழமுதிர் சோலையில், தினையும் அரிசியும் படைப்பதும், ஆட்டுக்கிடாய்கள் பலியூட்டுவதும், வேலன் வெறியாடுதலும் உண்டென்று அந்நூல் கூறும். இவ்வாறு உயிர்க்கொலைபுரிதல் பௌத்தத்திற்கு முற்றும் முரணுன கோட்பாடு. எட்டுத்தொகையுள் ஒன்ருகிய பதிற்றுப்பத்தில் சேரவரசர் பலர் பல வேள்விகளை யியற்றினர் என்றும், அவற்றிற்குப் பல பிராமணப் புரோகிதர் உதவி நின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. புறநானூற்றிலும் சில இடங்களில் தமிழ் மன்னர்கள் வேள்விபுரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நோக்கி நெட்டிமையார் என்ற புலவர் பெருமான்,

"விளங்கு பொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னர்
ஒண்படைக் கருந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்
நற்பனுவ னல் வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யா பல கொல்லோ"

என்று வினவுவதினின்று, வேள்விகள் மலிந்த காலம் அக் காலம் என்றுணரலாம். பல்யாகசாலை முதுகுடுமி என்ற பெயர்கொண்டே, அவன் இயற்றிய வேள்விகள் பல என்பதும், அவன் காலத்து, மறைகளுக்கும், மறையவர்க்கும், வேள்விகட்கும் மிக்க பெருமையும் சிறப்பும் இருந்ததெனவும் கருதலாம். ஆகவே இந்நூல்களிலும் பௌத்தக் கொள்கைகள் புகுதற்கில்லை.

இனி, பதினெண் கீழ்க்கணக்காவன,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி—மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலை யவாங் கீழ்க் கணக்கு"

என்ற இவையாகும். நாலடியார் சமணமுனிவராலியற்றப்பட்ட நூல் என்பர். எனினும் அதிற் கூறப்படும் பல அறங்கள் பௌத்த நூல்களில் கூறப்படுவனவே. இது போன்றே நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலிய நூல்களிலும், எம்மதத்திற்கும் பொதுவான அறங்களே கூறப்படுதலின், அந் நூல்களில் எதுவும், பௌத்தப் புலவர் இயற்றினர் எனக் கூற இயலாது. மேலும் மேலே குறித்த நூல்களின் ஆசிரியர்கள் தாம் மேற்கொண்டொழுகிய சமயக் கடவுளரையே தமது கடவுள் வாழ்த்துட் கூறியமைந்தமையின், அவைகள் பௌத்தப் புலவராலியற்றபபட்டனவாகா என்பது ஒருதலை.

### சமயத் தோற்றமும் வளர்ச்சியும்

சமயக்கோட்பாடென்பது எந்நாட்டினர்க்குள்ளும் எஞ்ஞான்றும் இருந்துவருகின்றது. மாறிமாறி நிகழும் பிறப்பிறக்கள், யாக்கை நிலையாமை, ஆன்மா அல்லது உயிரைப் பற்றிய பல்வேறு கொள்கைகள், உயிர்த்தோற்றத்தின் உண்மைக் காரணம். இயற்கையிற் காணப்படும் ஒருவித

கருதினர். ஆனல் ரிக்வேதத்தில் சூரியனுக்கு முதன்மை தரப்படவில்லே. வெகுகாலமாக நிலேத்திருந்த வருணனது தலேமைமாறி, இந்திரன் முதல்வனுகக் கருதப்பட்டான். இந்நிலேயில், இந்தியாவில் பலவகை வழிபாடுகள் நடை பெற்றுவந்தன. சிலர் நீரைத் தெய்வமாக வணங்கினர்; சிலர் அரசு முதலிய மரங்களே வணங்கினர். விருத்திரன் என்ற பாம்பும் பிற பூதங்களும் வழிபாட்டிற்குரிய வாயின. இந்திரனேடுகூட வாயு, உருத்திரன் என்ற இவர்களும் வணங்கப்பட்டனர். ரிக்வேதத்தில் உருத்திரன் ஓர் சாமான்ய தெய்வமாகக் காணப்பட்டான். பிறகு அருள் வடிவமாக உருத்திரன் மாறினன். நாளடைவில், பல தெய்வங்களும் ஒன்றுபடுத்தப்பட்டுக் கடவுள் ஒருவனே என்ற கொள்கை உறுதிப்பட்டது. வருணன் வழிபாட்டால் வெளிப்பட்ட கடவுட்கொள்கையும், பல்வேறு தெய்வங்களே ஒன்றுபடுத்தும் சமயஉணர்ச்சியும், இயற்கையிற் காணப் பட்ட ஒழுங்கும், யாவும் சேர்ந்து, கடவுளர் பலர் என்ற கொள்கையை ஒழித்துத் தெய்வம் ஒன்றே என உணரு மாறு செய்தன. உலகத் தோற்றத்திற்கு முக்கிய காரண ஞன ஒருவன் யாரென்பதைப்பற்றி வேதகால அறிஞர் ஆராய்ந்தனர்.

எது உண்மையான தெய்வம் என்ற விஞ எழுந்தது. மேலே கூறிய தீக்கடவுள், இந்திரன், வருணன் என்ற பெயர்கள் ஓர் கடவுளின் பல பெயர்கள்தாம் என்றுணரப் பட்டது. இக்கடவுளே உலகின் பரமான்மா, இயற்கையின் மூலகாரணன். என்றும் அழியாது நிலவும் சக்தி.

மனிதன் எப்பொழுதும் தன்னேத் தாங்கக்கூடிய ஓர் சக்தியை அவாவி நிற்கின்ருன். அது தன்னேவிட உயர்ந் தவனும், தான் எப்பொழுதும் சார்ந்திருக்கக் கூடியது மான ஓர் பரம்பொருளேயே அவாவுகிறது. தனது முறை யீடுகளேச் செவிமடுத்து, தான் அளிக்கும் படைப்புப் பொருள்களே ஏற்றருளக் கூடிய கடவுளேயே மனிதன் விரும்புகிருன். அவ்வாறே ஆற்றக்கூடிய தெய்வங்களும்

இல்லாமற் போகவில்லை. கிரேக்கர் அல்லது உரோமாபுரி வாசிகளின் பழைய சரிதத்தைக் கற்கும்பொழுது, அவர்களுக்கும் அவர்கள் வழிபட்ட கடவுளர்க்கும் இடையே இருந்த ஒப்பந்த முறை நன்கு அறியப்படும். ஒருவன் ஒரு நன்மையை விரும்பி ஓர் தெய்வத்தை வழிபடுவதும், அதற்கு யாதேனும் ஓர் பொருளை படைப்பதாகக் கூறுவதும், அவ்விருப்பம் நிறைவேருவிடின் படையாதொழிவதும் உண்டென்று அச்சரிதம் கூருநிற்கும். இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டே வேள்விகள் எழுந்தன. எவ்வளவுக்கெவ்வளவு தன் உரிமைகளை இறைவன்பால் அளிக்கின்ருனே, அந்த அளவிற்குக் கடவுள் தன்பால் அருளுடையராய்த் தான் வேட்டதை அளிப்பார் என்ற எண்ணமே, மக்களை வேள்விபுரியுமாறு தூண்டியது. பசுமேதமட்டுமன்று நரமேதமும் நடைமுறையில் இருந்து வந்தது என்பதற்கு வேதத்திற் சான்றுண்டு.

வேதத்தில் உருவ வழிபாடு காணப்படவில்லை. வேதகாலத்தில் கடவுளர்க்குக் கோயில் இல்லை. மக்கள் கடவுளுடன் நேர்முகமாகவே பேசிவந்தனர்.

மக்கள் மனத்தாற் சிந்தித்து ஆக்கிய பழமையான சாசனங்கள் ரிக்வேத யஜுர்வேதங்களே. எகிப்திய வமிசங்களின் வரலாறுகளை அடுத்து மிகப் பழமையான இந்திய நாகரீகம், இந்த மறைகளால் அறியப்படுவன. ரிக்வேத காலத்திற்கும், பிராமணங்களின் காலத்திற்கும் இடையே யாகம், எக்ஞம் முதலிய கிரியைகள் ஏற்பட்டபோது சாமவேதமும் அதர்வண வேதமும் தோன்றின என்பர். ஆரியர் தென்புறம் போந்தபோது, நாட்டுப் பழ மக்களுடன் கலந்து, அவர்களின் தெய்வங்களையும் சமயங்களையும் அறிய நேர்ந்தது. எனவே ஆரியர் கொள்கைகளில் சில மாறுதல்கள் உண்டாயின.

வேதங்களில், மந்திரம், பிராமணம், உபநிடதம் என்ற மூன்று பிரிவுண்டு. கிறிஸ்து ஆண்டு 1500-கட்கு முன்பே

மறைகள் வழக்கிலிருந்தன என்ப. கி.மு. 500-க்கு முன் இந்தியாவிற் பரவிய புத்தமதம் வேத இலக்கியங்களைக் குறிக்கின்றன. காலஞ்சென்ற லோகமாந்ய திலகர் ரிக்வேத மந்திரங்கள் கி மு. 4500-க்கு முந்தியதென்பர். ஜேகொபி என்ற அறிஞரும் அக்கருத்தினரேயாவர். "ஆயினும் ஒருவாறு கி.மு. 1500 அதன் காலம் என்று துணியலாம்" என்பர் அறிஞர் இராதாகிருட்டினன் அவர்கள்.

ஆரியரிடம் நால்வகை வருணப் பாகுபாடுண்டு. இப் பாகுபாடு முதன்முதல் புருடசூக்தம் என்ற வேதப் பகுதி யிற் கேட்கப்படுகிறது. இதன் விவரத்தை நன்கு அறிய வேண்டுமெனின், ஆரியருக்கும் அவரால் அடிப்படுத்தப் பட்ட உள்நாட்டு மக்களுக்கும் இருந்த தொடர்பை நாம் அறிதல் இன்றியமையாதது. உதிரத்தூய்மை, பரம்பரைப் பெருமை என்ற வகைகளில் பல்வகை வேறுபாடுகள் கருதப்பட்டு வந்தன. ஆதி ஆரியர் ஒரே வகுப்பினர். அவருள் ஒவ்வொருவனும் ஆசாரியன், வீரன், வாணிகன், உழவன். இவர்கள் ஒவ்வொருவரும் கடவுளரைக் குறித்து வேள்வி இயற்றக்கூடுமேனும், அந்தணரைக்கொண்டே அவற்றை இயற்றிவந்தனர். எனவே அவர்கள் சாதாரண மக்களிடமிருந்துவிலகிச் சிறிதுயர்ந்தவராகக் கருதப்பட்டு வந்தனர். தமது பரம்பரை உரிமைகளைக் காத்துவந்த வகையில், ஆரிய மக்கள் எவ்வித உழைப்பும் மேற் கொள்ள வேண்டிய அவசியமின்றி வாழ்ந்து வந்தனர். முதற்கண் ஓர் தொழிலாக இருந்து பிறகு இந்த வேள்வி ஆசான் உரிமை, பரம்பரை உரிமையாக மாறிவிட்டது. ஆனால் வேதமந்திரகாலத்தில் ஒவ்வொரு சாதியினரும் அவரவர் கருதிய தொழிலையே மேற்கொண்டொழுகினர். சாதிப்பாகுபாடு என்பது ஆரியர் கண்ட முறையுமன்று தமிழர்கண்ட முறையுமன்று. பலதிற மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்காகத் தாற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஓர் முறை. ஆனால் நாளடைவில் அது பலவித விபரீதங்களை விளைத்துவிட்டது.

இருக்கு வேதத்தில் "ரிதம்" என்ற கொள்கை மிகவும் சிறந்ததாகக் காணப்படுகிறது. அது கன்மத்தை முதன்மையாகக் கூறும். இந்தச் சட்டம் உலகிற்கே ஒரு பெரிய சட்டமாகும். மக்கள்மட்டுமல்ல கடவுளரும் இச்சட்டத்திற் குட்பட்டவரே. இந்தச் சட்டத்தின் விளைவுகள் இங்கே அல்லது இப்பிறப்பில் வெளிப்படாவிடின் வேறு எங்கேனும் எப்பிறப்பிலேனும் விளைந்தே தீரும். ரிதம் என்பது சத்தியம். மேலே குறிக்கப்பட்ட வருணன்தான் இந்த ரிதத்தை நன்கு பின்பற்றியொழுகியவன்.

வேதங்களின் இரண்டாவது பிரிவான பிராமணங்கள் வேள்வியாசான் கைக்கொள்ள வேண்டிய முறைகளை நெறிப்படுத்துக்கூறும். எல்லோரும் வேள்விகளில் ஈடுபடவே வேள்வி ஆசிரியர்களாகிய பிராமணர்கள் தலைமையுற்று விளங்கினர். ஆசிரியப் பரம்பரைகள் ஏற்பட்டன. கடவுளருக்கும் மக்களுக்கும் இடைநின்று இறைவன் அருள் மக்கட்கெய்துமாறு செய்பவர்களாக அவர்கள் விளங்கினர். மேலும் மறைகளின் காப்பாளர் என்றவகையில் இந்தப் பிராமணர்கள் உயர்ந்து விளங்கினர். எழுத்து வழக்கில்லாததாலும், அச்சில்லாததாலும் மனப்பாடமாகவே மறைகளைப் பயின்ற அந்தணர்களுக்கு அளவு கடந்த பெருமை இருந்துவந்தது. ஆசிரம தர்மமும் இக்காலத்தில்தான் எழுந்தது.

பிராமணத்தில் வெவ்வேறு கடவுளரை அடைவதற்கு வெவ்வேறு வேள்விகள் குறிக்கப்பட்டன. நட்சத்திர மண்டலங்களில்கூட இறந்த உயிர்கள் சென்று தங்கலாம் என்று கருதப்பட்டுவந்தது. மறைகளின் கருத்துப்படி பாவிக்கு உய்தியில்லை. புண்ணியம் செய்தவன் இன்ப உலகடைவான். ஆனால் இருவரும் தமது செயலின் விளைவைத் துய்ப்பதற்கு வேறு பிறவி யெடுத்தாக வேண்டும். இப்பிறப்பின் பின்னர்த் தொடர்வது ஒரே பிறப்பென்றும், அதன் இயல்பு இவ்வுலகில் அவர் மேற்கொண்ட ஒழுக்கத்தைப் பொறுத்ததென்றும் கருதப்பட்டது. மனிதன்

எந்த உணவை இந்த உலகத்தில் உண்கின்றானோ, அதே உணவால் அவன் மறு உலகத்தில் உண்ணப்படுகிறான் என்ற கொள்கையும் உண்டு. இதிலிருந்து நியாய உணர்ச்சி தோன்றிற்று.

மறைகளின் மூன்றாவது பிரிவே உபநிடதமாகும். அதனையே வேதாந்த மென்ப. பிற்காலத்தில் இந்திய தத்துவங்களும் மதங்களும் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது இந்த உபநிடதமேயாகும். வேதத்தைப் புறக்கணித்த பௌத்த மதத்திற்கும் இதுவே மூலம் என்பர். சில மதங்கள் புத்த மதத்திற்குக் காலத்தால் முற்பட்டவை. சில பௌத்தருக்குப்பின் தோன்றியவைகள். அவைகள் வேதமந்திர காலத்திற்கும், புத்தமதம் தோன்றிய கி.மு. ஆறும் நூற்றாண்டிற்கும் இடையில் எழுந்தவை என்னலாம். ஆதி உபநிடதங்கள் தோன்றியகாலம் கி.மு. 1000-முதல் கி.மு. 300-க்குள் என்பர் ஆராய்ச்சியாளர். உபநிடதங்களின்படி இறைவன் ஒருவனே. அவனே ஆதி நடு முடிவில்லாதவன். Deussen என்ற ஆங்கில அறிஞர் உபநிடதம் கூறும் சிருட்டியைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார் :—(1) கடவுளைப்போலவே அநாதியாக வஸ்து ஒன்று உண்டு, அந்த வஸ்துவை அவர் தொழிற்படுத்துகிறாரேயன்றி, அஃது அவர் படைத்ததல்ல. (2) கடவுள் சூன்யம் அல்லது வெறுமையிலிருந்து உலகைப் படைக்கின்றார். (3) கடவுள் தன்னைத் தான் உலகினுள்ளே செலுத்திக்கொண்டு உலகைப்படைக்கின்றார். (4) கடவுள் ஒருவர்தான் உண்மை, சிருட்டி உண்மையல்ல. உபநிடதங்கள் மறுபிறப்பைப்பற்றிப் பல பட ஆராய்ந்துள்ளன. வீடு பெறாத உயிர் மீட்டும் பிறப் பிறப்புக்குள்ளாகிறது. இன்ன பிறப்பென்பது அந்த உயிர் புரிந்துள்ள நன்மை தீமை, அறம் மறம் இவற்றைப் பொறுத்தது. பிரகதாரணிய உபநிடதத்தில் ஓரிடத்தில் மக்கள் உயிர் விலங்குகளாகப் பிறக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இஃது ஆரியர் கொள்கையன்று. அவர்கள் தெற்கு நோக்கி வரும்போது கலக்கும்படிநேர்ந்த இந்தியப்

பழங்குடி மக்களிடமிருந்து பெற்றதாக இருத்தல் கூடும். ஒவ்வோருயிரும் தான் செய்த பாவ புண்ணியங்களுக் கேற்ப இறுதியடையும் வழிகள் தேவவழி, பிதிர்வழி என இரண்டாகும். முதல்வழி ஒளிவழி மற்றது இருள்வழி. முதல் வழியே சென்ருல் பிரமலோகம் அல்லது சத்திய லோகத்தை அடையலாம். அடைந்தவன் மீள்வதில்லை. ஆனுல் பிதிர்வழி சந்திரலோகத்திற் கொண்டு சேர்க் கின்றது. அவ்வழியாகச் செல்பவன் தான் புரிந்த நல் வினையின் பயனைத் துய்த்துப் பிறகு பூவிற் பிறக்கின்ருன். நரகம் அல்லது இருள் உலகிற்கொண்டு செலுத்துவது மூன்ருவது வழி.

உயிர்கள் இறந்து பிறக்கும் தன்மைய. ஒருவன் தான் புரிந்த நல்வினையின் காரணமாக நல்ல பிறப்படைவதும் தீவினை காரணமாக இழிபிறப்படைவதும் உண்டென்று நூல்கள் நுவலும். "வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதா னொழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண் டாய்" என்ருர் பட்டினத்தடிகள். நல்வினை தீவினை என்ற இரண்டும் பிறப்பைத் தருதலால் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போல்வன என்பர். நாம் செய்த தீவினைக்காக நமக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தத் தண்டனை நமது தீவினைகளைப்போக்கி நம்மைத் தூய்மை செய் கின்றது. இவ்வாறு உபநிடதங்கள் பல அரிய கொள்கை களைப்பரப்பியபோதும் சாதாரணக் குருட்டுப் பழக்கவழக் கங்கள் அகலவில்லை. பார்ப்பனக் குருக்கள்மாரின் செல் வாக்கு ஓங்கி நின்றது. பல தெய்வ வழிபாடு, ஒரு தெய்வ வழிபாடு, வேள்விகள் முதலிய பலவும் கலந்து விளங்கின. சாதிக்கட்டுப்பாடும் இருந்தது. மக்கள் மன அமைதிபெற முடியவில்லை. ஒன்றற்கொன்று மாருன பல கொள்கைகள் நிலவின. உபநிடதம் கூறும் ஒரு தெய்வக் கொள்கையும் மறைகள் கூறும் பல தெய்வக் கொள்கைகளும் கலந்து வழங்கின. சாதாரண மக்கள் ஆய்ந்து கைக்கொள்ளக் கூடியதாய் அதிகச் சிக்கலற்ற ஓர் சமயத்தை எல்லோரும் அவாவி நின்றனர். பௌத்தர் சமணர் சார்வாகர் முதலிய

பல சமயத்தினரும் பொதுவாக வைதிக சமயத்தில் உள்ள குறைகளை யெடுத்தியம்பினர். முதற்கண் கூறிய இரு மதங்களும் மக்கள் ஒழுக்லாற்றையே வற்புறுத்தி நின்றன. ஆனல் அவைகள் தொடங்கும்போதே புரட்சிமுறையிற் றொடங்கின.

## மணிமேகலையும் பௌத்தமும்

"மந்தாகினியணி வேணிப்பிரான் வெங்கை மன்னவநீ, கொந்தார் குழல்மணி மேகலைநூல் நுட்பம் கொள்வதெங் ஙன்" என்று கற்பனைக் களஞ்சியம் எனப் புகழப்பெற்ற சிவப்பிரகாசரும், "மாதவி பெற்ற மணிமேகலை என்னை வாழ்விப்பதே" என்று கம்பநாடர் மகன் அம்பிகாபதியும் சிலேடையில் அமைத்துப் பாராட்டிய இந்நூல் தமிழில் விளங்கும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. மதுரைக் கூலவாணிகன் சாத்தனர்என்ற புலவர்பெருமானல் இயற் றப்பெற்றது. இவரைச் சீத்தலைச் சாத்தனர் எனவும் வழங்குப. கூலம்என வழங்கும் நவதானியவணிகன் ஆனது பற்றிக் கூலவாணிகன் எனப்பட்டார். மற்றும் சீத்தலை என்பதை ஓர் ஊரென்றுணராது சீயொழுகியதலையென்று கொண்டு "வள்ளுவர் முப்பாலாற் றலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" எனக் கதை வகுத்தாரும் உண்டு. அது பொருந்தாக் கூற்று.

இந்நூல் 30 காதைகளைத் தன்னகத்துக் கொண்டது. இனிய ஆசிரியத்தானியன்றது. மணிமேகலை துறவு என வும் இதை வழங்குவர். கோவலன் அரசன் கட்டளையால் வெட்டுண்டிறந்தபின் தவக்கோலம் பூண்ட மாதவி, தன் மகள் மணிமேகலையையும் தவவழியிற் செலுத்த நினைந் தாள். ஓர் நாள் சுதமதியென்ற தோழியோடு உவவனத் தில் மலர் பறிக்கச் சென்ற மணிமேகலை புகார் நகரத்தர சிளங்குமரன், உதயகுமரன் என்பவனுற் காதலிக்கப்பட் டுப் பின்னர் அவன் கையினின்றும் பிழைத்து, மணி மேகலா தெய்வம் கொண்டு செலுத்த மணிபல்லவத்தை யடைந்து அங்கே யிருந்த புத்த பீடிகையால் தன் பிறப்

புக்களை யுணர்ந்து, அத்தெய்வத்தினிடம் பசி நீங்கவும், நினைந்த உருவம் எய்தவும் உதவக்கூடிய மந்திர சித்தி பெற்றுப் பின்னர், அத்தீவகத்திருந்த தீவதிலகை யின் உதவியால், கோமுகிஎன்னும் பொய்கைக்கணிருந்த அமுதசுரபி யென்னும் அட்சயபாத்திரத்தைப் பெற்று, அறவணவடிகளை வணங்கி, இடையில் ஊழ்வினைவயத் தால், உதயகுமரன் இறந்துபட, முற்பிறப்பில் தனக்குக் கணவனாகை இருந்த அவனுக்கு இரங்கி யழுது, பின்னர்த் தேறி, இராசமாதேவியாரால் சிறைப்படுத்தப்பட்டு, ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்து, பின்னர் வஞ்சி மாநகர் புகுந்து, அவண் சமயக் கணக்கர் தம் திறங்களைக் கேட்டுப் பின்பு கச்சிமாநகர் புகுந்து பல அறங்களைச் செய்து, தவத்திறம்பூண்டு தருமங்கேட்டுப் பவத்திறம் அறுகென நோற்றாள் என்று கதை இனிது முடியும். புத்தர் பெருமானைப்பற்றியும் அவரது சமயச்செய்திகளைக் குறித் தும், அவரது வழிபாடு பற்றியும் பல செய்திகளை இந் நூலிற் காணலாம்.

இதன் ஆசிரியர் சாத்தனாரும் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளும் ஒரே காலத்திருந்தவர்.

"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
ஆறைம் பாட்டில் அறிய வைத்தனன்"

என்ற இந்நூலிற் பதிக வரிகளைக் கொண்டும்,

"இவ்வாறைந்தும்
உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரை சாலடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"

என்ற சிலப்பதிகாரப் பதிக வரிகளைக் கொண்டும் இஃது உணரப்படும். இவ்விரு பெருநூல்களும் ஆறைந்து காதை களால் ஆக்கப்பட்டமையும், மேற்கூறிய செய்தியை விளக்குதல் கூடும்.

## நூலியற்றப்பெற்ற காலம்

மணிமேகலை ஆசிரியரும் சிலப்பதிகார ஆசிரியரும் ஒரு காலத்தவர் என முன்பு கூறப்பட்டது. சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளின் முன்னோன் சேரன் செங்குட்டுவன் ஆவன். இவனது அரசியலைப்பற்றியும், இவன் கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்ததைக் குறித்தும் வெகு விரிவாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். கடவுள் மங்கலம் செய்தபொழுது கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் இன்னும் சில அரசர்களும் சேரர் தலைநகர்க்கு வந்திருந்தார்கள் என அந்நூல் கூறுநிற்கும். இந்தக் கயவாகு முதற் கயவாகு என்றும், இவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுவில் இருந்தவன் என்றும், சரிதங்களும், இலங்கைச் சரித்திரக் குறிப்புக்களாகிய மகாவமிசம் தீபவமிசங்களும் கூறும். மற்றும் இச்செங்குட்டுவனைப் பரணர் என்னும் புலவர்பெருமான் தாம் பாடிய பதிற்றுப் பத்துள் ஐந்தாம்பத்துட் பாடியுள்ளார். பரணர், கபிலர், ஔவையார் இவர்கள் அனைவரும் வேள் பேகனைப் பாடியுள்ளனர். இவர்கள் அனைவரும் கடைச்சங்கக் காலத்தை யொட்டியிருந்தவர்கள் என்றும் அறிஞர் ஆராய்ச்சியாற் கண்டதொன்று. எனவே மணிமேகலை ஆசிரியர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். மற்றும் இதன் விரிவை இளங்கோவடிகளின் கால ஆராய்ச்சி என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

இந்நூற்கண் இனிய இயற்கை வருணனைப் பகுதிகள் பலவற்றைக் காணலாம். மலர் வனம் புக்க காதையில் உவவனத்தைப்பற்றிப் புகழுங்கால்,

"குரவமு மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தவளமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ் சண்பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி

வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய உவவனம்''

என்பர். மற்றும் அதே காதையில், மணிமேகலை சுதமதியுடன் கூடி மலர்வனம் செல்லுங்கால், காணும் காட்சிகள் மிகச் சிறந்த வகையில் அமைந்தவை. துயிலெழுப்பிய காதையில், புலரிப்போதை வருணிக்குங்கால்,

''காவலாளர் கண்டுயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
புகர்முக வாரணம் நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்பப்
பணைநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணைநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
வூர்துயி லெடுப்ப வுரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தலும்''

என அழகுபெறக்கூறுவர். மேற்கூறிய பகுதியில் விளிப்ப, ஆல, புள்ளொலி சிறப்ப, பூப்பலிகடைகொள, பண்ணியம் பரந்தெழ என்ற சொற்களும் சொற்றொடர்களும் சிலேடையில் அமைந்து இன்புறுத்துவதைக் காணலாம்.

மற்றும் அக்காலத்து இறந்தவர்களை இன்ன இன்ன வகையில் அடக்கம் செய்தனர் என்று ஆசிரியர் கூறும் பகுதி, அக்காலத்துத் தமிழ் மக்களுடைய வழக்காற்றைக் காட்டும்:

''சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்''

என்பது அப்பகுதியாகும். நிற்க. மணிமேகலை ஆசிரியரும் இளங்கோவடிகளும் ஒரே காலத்தவர் என்பது அவ்விரு பெரும் புலவருடைய நூல்களிற் காணப்படும் ஒற்றுமை கொண்டுணரப்படும். உதாரணமாக,

" வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி "
(மணி. 27-28; சிலம்பு. இந்திர. 141-42)

" நுதல்விழி நாட்டத் திறையோன் "
(மணி. 1, 54; சிலம்பு. ஊர்காண் காதை. 7)

" பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி "
(மணி. 1, 70.71; சிலம்பு. இந்திர. 72-73)

" அரும்பெறல் மாமணி யோங்குதிரைப்
பெருங்கடல் வீழ்த்தோர் போன்று "
(மணி. 2, 72-74; சிலம்பு. வரந்தரு. 29-30)

" தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணுப் பலர்தொழு படிமையன் "
(மணி. 36-37; சிலம். அடைக்கல. 157-58)

" பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகி "
(மணி. 3, 44-45; சிலம்பு. நாடுகாண். 30-31)

இந்நூலில் பல அரிய குறட் கருத்துக்களையும் ஆங்காங்கே காணலாகும். உதாரணமாக,

" காரெனத் தோன்றிக் காத்தனின் கடன்என "
(மணி. 28, 161)

" கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு " (குறள் 211)

" வேட்கை விரும்பி நுகர்ச்சி யாராமை " (மணி. 30, 61)

" ஆரா வியற்கை யவா " (குறள் 370)

" யாமேலுரைத்த பொருள்கட்கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம் " (மணி. 30, 252-3)

"காமம் வெகுளி மயக்க மிவைமூன் றின்
நாமங் கெடக் கெடும் நோய்" (குறள் 360)

"உன் றனக் கொல்லு நெறியற முரைக்கேன்
(மணி. 16, 113)

"ஒல்லும் வகையான் அறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்" (குறள் 33)

"நாடாது துணிந்து நாநல் கூர்ந்தனை" (மணி. 19, 4)

"எண்ணித் துணிக கருமம்" (குறள் 467)

"குமரி மூத்த வென் பாத்திரம்" (மணி. 14, 77)

"அற்றாற்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றாட மியள்மூத் தற்று" (குறள் 1007)

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென் றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"
(மணி. 22, 59-61)

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை" (குறள் 65)

மற்றும்,

"பெருந்தவர்க் கைப்பெய் பிச்சையின் பயன்"
(மணி, 28, 229)

என்ற வரியில்,

"அறப்பயனும்
தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்"

என்ற நாலடியார்க் கருத்தைக் காணலாம். இனி, இந் நூலில் இசை நாடகத் தொடர்புள்ள பல அரிய செய்திகளும், மகளிர்க்குரிய 64 கலைகளும் கூறப்பட்டுள்ளன. பல அறிஞர்கள்கூடி நற்பொருள்களைப்பற்றி விவாதிக்கும் பட்டி மண்டபத்தை மணிமேகலை 1, 61-இல் காணலாம். மணிவாசகப்பெருமான் "பட்டி மண்டபம் ஏற்றினை யேற்றினையென்பர்" கணவன் மடிந்தவிடத்து அவனது மனைவிமார் மேற்கொள்ளும் ஒழுக்கங்களை,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயி
னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்" (மணி. 2, 42-48)

என்ற வரிகளிற் காண்க. நிலையாமையைப்பற்றியும், ஊழ்வினையைப்பற்றியும் பல இடங்களில் உவமைமுகத்தானும் பிறவகையானும் கூறுவர் இவ்வாசிரியர். இவர் கூறும் சிறந்த உவமைகளிற் சில பின்வருமாறு:—

"சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல"
(மணி. 6, 3-4)

"ஆசற விளங்கிய அந்திரு தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்
கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச் சொரிய"
(மணி. 6, 6-8)

"ஊதுலைக் குருகின் உயிர்த்துயிர்த் தடங்கி" (மணி. 2, 43)

மற்றும் இப்பெரு நூலிற் கூறப்பட்ட புத்தமதக் கொள்கைகள், புத்தர்பிரான் வரலாறு முதலியவற்றை இதன்கண்ணுள்ள, புத்தர்பிரான் வாழ்க்கை வரலாறு, புத்தமதக் கொள்கைகள் என்ற பிரிவுகளிற் காண்க. நாவலர் சோமசுந்தரபாரதியார் சிலப்பதிகாரம் இயற்றப் பெற்றபோது புகார் நகரம் செல்வ வளங் கொழித்துத் திகழ்ந்தது என்றும், மணிமேகலை யியற்றப்பட்டபோது அஃது கடல்கோளால் அழிந்தது என்றும், எனவே சிலம்பும் மேகலையும் ஒரே காலத்தெழுந்த நூல்கள் அன்றென்றும், பதிகம் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பெற்றிருக்கலாம் என்றும் கருதுவர். காலஞ்சென்ற வையாபுரிப் பிள்ளை அவர்கள் மணிமேகலை இயற்றப்பட்டது இரண்டாம் நூற்றாண்டிலன்றென்றும், சில பல நூற்றாண்டுகள் கழிந்தே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் எழுதுவர்.

**புத்தர்பிரான் வாழ்க்கை வரலாறு**

புத்தர் வாழ்க்கையை விரிவாகக் கூறும் நூல்கள் (1) கி. மு. 3-ஆம் நூற்ருண்டில் இயற்றப்பட்ட லலித விஸ்தாரம் (2) கி. பி. முதல் நூற்ருண்டில் அசுவகோஷர் எழுதிய புத்த சரித்திரம் என்பன ஆம்.

கிறிஸ்து பிறப்பதற்கு 600 ஆண்டுகட்குமுன் சாக்கியர் என்ற ஓர் ஆரிய வகுப்பினர் நேப்பாளத்தருகிற் குடியேறினர். அவர்கள் அரசர் மரபினர். கபிலவாத்து என்ற நகரில் சுத்தோதனர் என்ற ஓர் மன்னர் இருந்தார். அவர்க்கு மாயை கௌதமி என்ற இருமனைவிமார் உண்டு. அரசர்க்கு மாயையிடம் அன்பதிகம். ஒருநாள் இரவில் அரசி கனவில் போதிசத்துவர் தோன்றி மறைந்தார். அதன் பயனுக **லம்பினி**ப் பூங்காவில் மாயாதேவி புத்திரனைப் பெற்ருள். அஸிதன் என்னும் முனிவர் வந்து கௌதமரைக் கண்டு பரிபூர்ண புத்தர்களுக்குரிய ஸகஸ்ரார சக்கர ரேகை (ஆயிரம் ஆரக்கால் கொண்டது) முதலிய அங்க இலக்கணங்கள் பலவும் அவர்பால் உளவாதலை யறிந்து வியந்து "மானிடராகிய மரத்தில் பல நூற்ருண்டுகட்கு ஒரு முறை மலருமலர் இக்குழந்தை; உமது குலப்பெருமையை என்னென்றுரைப்பேன். இவன் துறவு பூண்டு உலக ரக்ஷகனுக இருப்பான்" என்று அரசனுக்குக் கூறினுர். அவர் அவதரித்த நாள்,

"இருதிள வேனி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன் று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவன் பொருந்தித் தோன்றும்"
(மணி. 1, 40, 43)

அஞ்ஞான்று தோன்றிய நன்னிமித்தங்களைக் குறித்து அதே நூலில்,

"புத்த ஞாயிறு தோன்றுங் காலை
திங்களுஞ் ஞாயிறுந் தீங்குறு விளங்கத்
தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும்

வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்
ஊனுடை யுயிர்க ளுறுதுயிர் காணு
வளிவளங் கொட்கு மாதிரம் வளம்படு
நனியிரு முந்நீர் நலம்பல தரூஉங்
கறவைகன் றூர்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களு வெரூஉப்பகை நீங்கும்
கலங்கஞர் நரகமும் பேயுங் கைவிடுங்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ
வந்நாட் பிறந்தவ னருளறங் கேட்டோ
ரின்னுப் பிறவி யிகந்தோர்''

என்று கூறப்பட்டது. மணிமேகலை அமுதசுரபி யென்னும் பாத்திரத்தைப் பெற்றபோது புத்தர்பிரானது பல பெருமைகளையுங் கூறிப் புகழ்ந்தனள். அந்த வரிகள் பின் வருமாறு:—

''மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னுவிற்
கடங்காது.''

இந்த அரும்பெருஞ் செயல்கள் யாவும் புத்தரது பல பிறப்புக்களைத் தொடுத்துக்கூறும் புத்த சாதகக் கதைகள் கொண்டுணரலாம். பிறர்க்குக் கண்ணளிக்கும் கண்ணோய் என்றது புத்தன் பலர்க்கும் அறமுரைத்து அறிவுக்கண் அருளியதுபற்றி. இனி உலகத்திற்குதவிபுரியப் புத்த னெடுத்த பல சாதகங்களுள், ஒன்றில் இவன் கொடைத் திறத்தைப் பரிசோதிக்க எண்ணி, இந்திரன் போந்து

இரண்டு கண்களையும் கேட்டபொழுது, இவன் அவற்றைக் கொடுத்ததுபற்றியுமாம்.

குழந்தையைக் கருவுயிர்த்த ஏழாம் நாளில் மாயாதேவி மறைந்தாள். பிறந்த சிறுவன் சிறுபிராயத்திலேயே துறவு நிலை எய்தும் எனக் கூறக் கேட்டு, வெளியுலக நிகழ்ச்சிகளுள் அவன் அறியாதபடி புத்தர்பிரானைக் காவல்செய்து வந்தனர். புத்தர் 19-வது ஆண்டில் யசோதரையென்பவளை மணந்து இராகுலன் என்ற ஓர் ஆண்மகவைப் பெற்றான். ஒருநாள் புத்தர்பிரான் ஒரு நோயாளியையும், ஒரு வயது முதிர்ந்த கிழவனையும், ஓர் பிணத்தையும் காண நேர்ந்தது. உடனே உலக வாழ்க்கையின் நிலையாமையை யுணர்ந்து, உலகத் துன்பங்களினின்றும், விடுதலை யெய்துமாறு கடுந் தவம் புரியக் கருதினர். சந்தகனை அழைத்துத் தம்முடைய கண்டகம் என்னும் குதிரையை விரைவிற் கொண்டு வருமாறு அவனுக்குக் கட்டளையிட்டார். புத்தர் தம் மனைவி மக்களைத் துறந்து வெளியேறிய தினம் பூர்ணிமை என்பர். அப்பொழுது அவருக்கு வயது 29. ஓர் நாளிரவில் தன் மனையாளையும் அரிதிற் பெற்ற புதல்வனையும் விட்டுப் புறப்பட்டு, ஓர் நாவல் மரத்தடியில் அமர்ந்து உலக வாழ்க்கையின் பல்வேறு துன்பங்களைப்பற்றிச் சிந்தனை செய்தார். இப்பிணி மூப்புச் சாக்காட்டிற்குக் காரணமாகிய இறப்பிற்கு இடங்கொடாத நல்வழியை அறிந்து நாமும் உய்ந்து உலகையும் உய்வித்தல் எப்பொழுது கூடுமோ” என்று கவலை யடைந்து, அதைக் குறித்தே ஆலோசித்தார். பல தவ முனிவர்களிடம் துக்க நிவாரண மார்க்கத்தைப்பற்றிக் கேட்டார். அராளராம முனிவரிடம் உபதேசம் பெற்றார்.

இவ்வாறிருக்க அரண்மனையிற் பலரும் விதனமுற்றனர். அரசன் துயர்க்கடலில் ஆழ்ந்தான். அரண்மனைப் புரோகிதர் சென்று எவ்வளவோ அறிவுரை கூறியும் புத்தர் மனம் மாறவில்லை. அவர் நாட்டுக்குள் வர மறுத்தார். பின்னர் 24 ஆண்டுகள் தனிமையாக உறைந்து உண்மையை அறிய

விழைந்தார். போதிமர நிழலில் அமர்ந்தார். அப்பொழுது மாரன் நேரில் வந்து இவர் உள்ளத்தை உலக வழியில் திருப்ப நினைத்தான். அவன் அவரைத் தன் வசமாக்க எண்ணிப் பின் தொடர்ந்து நான்கு தீவுகளின் தலைமைப் பதவியை நாள் ஏழில் அளிப்பதாகக் கூறினான். ஆனால் புத்தர் அவ்வலையில் அகப்படவில்லை. பார்க்கவ முனிவரது ஆசிரமத்தை எய்தியவுடன் தன் உடன் வந்த சந்தகனை நோக்கி "அடைய வேண்டும் என்று பல நாளாக நினைத் துக் கொண்டே யிருந்த இடத்தை இப்பொழுது அடைந் தேன். நம் உறவு இன்றோடு முடிவு பெற்றது" என்று கூறித் தமது கழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக் கழற்றி அவனுக்கு நன்கொடையாகக் கொடுத்துப் பின் தமது மணிமுடியையெடுத்து அவன் கையில் வைத்து "இதனை நான் அன்புடன் தந்ததாகச் சொல்லி அரசனுக் குக் கொடு. என்னிடமுள்ள காதலை முற்றும் மறக்கும்படி நான் சொன்னதாகத் தெரிவி. இல்வாழ்க்கையின் வழி யாகத் துக்கக் கடலை நீந்துதற்குரிய தெப்பம் எனக்குக் கிடையாமையினாலேயே நான் பிரிந்தேனென்று சொன்ன தாகவும் விண்ணப்பம் செய்" என்றும் கூறினார்.

பின்னர் இருபத்துநான்கு ஆண்டுகள் வனத்திலுறைந்து தமது 29-வது ஆண்டில் பூரண ஞானம் கைவரப்பெற்றார் என நூல்கள் கூறும். முதற்கண் இவர்க்கு ஐந்து சீடர்கள் இருந்தனர். புத்த தரும சங்கம் என்ற மூன்று ஸ்தாப னங்கள் ஏற்பட்டன. தம்மிடமிருந்த பல மாணவர்களைப் பலவிடங்களிலும் அனுப்பித் தான் கண்ட உண்மைகளைப் பரப்புமாறு ஏவினர். பின்னர் கபிலவாத்து சென்றார். அங்கே மறுகில் இரந்தார். மன்னன் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறியும் அவர் கேட்கவில்லை. தன் மனைவி யசோதரைக்கும் மகன் இராகுலனுக்கும் அற முரைத்தருளினர். அந்த நல்லறங்களைச் செவிமடுத்து இராகுலன் சங்கத்தின் உறுப்பினருள் ஒருவன் ஆனான். ஆயினும் ஆட்சி நடைபெற வேண்டி இராகுலன் சங்கத்தி னின்றும் விலகினான். பின்னர் புத்தர் வைசாலிநகர்

சென்று அறவுரை நிகழ்த்தினர். அவ்வமயம் சுத்தோதனன் நோய்வாய்ப்பட்டுத் துயருறுவது கேட்டு, அவ்விடமிருந்து கபிலவாத்துவுக்குச் சென்று, அவன் இறக்கும் பொழுதுடனிருந்து அவனுக்குரிய ஈமச்சடங்குகளைத் தாமே செய்து முடித்தார். பின்னர் பல தலங்கட்குச் சென்று அறமுரைத்தருளினர். தன் தாயின் வேண்டுகோட்கிணங்கிப் பெண்பாலாரும் பிக்குணிகளாகிச் சங்கத்திற் சேரலாம் என்று கட்டளை யிட்டார். பின்னர் இராசகிருக நகரம் சென்று பிம்பசாரன் மனைவியாகிய க்ஷேமை (சேமை) என்பவளுக்கு உபதேசித்தார். ஓரமயம் இராசகிருக நகரின் அண்மையில் வதிபவனும் உழுதொழில் புரிந்து பிழைப்பவனுமான பாரத்துவாசன் என்னும் அந்தணனை அடைந்து அமுதிரந்தார். அப்பொழுது அவரது தோற்றப் பொலிவைக்கண்ட பலர் வந்து அவரை வணங்கினர். பாரத்துவாசன் அவர் தன்பால் இரத்தற்கு வந்ததை நினைந்து வெகுண்டு, "பிக்குவே, நான் உழுது விதைத்து அதனலெய்தும் பயனையுண்டு இன்புற்று வாழ்கின்றேன். நீரும் அவ்வண்ணமே செய்வீராயின், உமக்கெய்தும் குறையாது" என்ருன். புத்தர் "நானும் உழுகின்றேன், விதைக்கின்றேன், அதனல் உளதாகும் பயனை நுகர்ந்தின்புற்றிருக்கின்றேன்" என்ருர். அதற்கு அவன், "நீர் உழுபவர் என்பதுண்மையாயின், மாடு, கலப்பை, விதை முதலியன எங்கே? காட்டுக" என்ருன். அதற்குப் புத்தர் "விதை சிரத்தை, அதை முளைத்து வளரும்படி செய்வதாகிய மழை நற்காரியம், வயல் தரும நூல், உழுதற்குரிய கலப்பையின் அங்கங்கள் அறிவும் வணக்கமும், தருமம் அக்கலப்பையின் பிடி, உழும் எருது விடாமுயற்சி, அவ்வெருத்தைத் தன்வயமாக்கிச் செலுத்தும் கயிறு மனம், தாற்றுக்கோல் ஊக்கம், பயிர்க்கு இடையூருகிய களை மயக்கமாம்" என்றும், "இத்தகைய வேளாண்மை நிர்வாணமாகிய பயத்தை அளித்துப் பலவகைத் துக்கங்களையும் போக்குகின்றது" என்றும் கூறினர். இவ்வினிய மொழிகளைக் கேட்ட பாரத்துவாசன், தனது வீண் செய்கைகளைக் கைவிட்டுத் துறந்து அவர்க்குச் சீடனுனன்.

பின்பு புத்தர் பலவிடங்களிலும் சென்று அவரவர்களுடைய குணம், தொழில், அறிவு முதலியவற்றிற்கு ஏற்பப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தினர். ஓரமயம் அவர் எல்லா உயிர்களையும் நல்வழிப்படுத்த நினைந்து கிருத்திரகூடமலையுச்சியில் ஏறிநின்று கேட்பவர் மனங்கனிய அறம் உரைத்தபொழுது, ஆயிரம் ஆரம் அமைந்த அவரது திருவடிகள் அழுந்தினமையின் அம் மலைச்சிமையில் ஆயிரவார வாழிச்சுவடுகளும் அவற்றையுடைய பாதச்சுவடுகளும் உண்டாயின. அதுபற்றி அது பாதபங்கயமலை எனப் பெயர் பெற்றது.

'' ஆதி முதல்வன் அறவாழி யாள்வோன்
மாதுய ரெவ்வ மக்களை நீக்கி
விலங்கும் தம்முள் வெரூஉம் பகை நீக்கி
உடங்குயிர் வாழ்கவென் றுள்ளம் கசிந்துகத்
தொன்று காலத்து நின்றற முரைத்த
குன்ற மருங்கிற் குற்றங் கெடுக்கும்
பாதபங்கயங் கிடத்தலி னீங்கிது
பாதபங்கய மலையெனும் பெயர்த்தாயது ''

(மணி. 10, 61-68)

என்றது காண்க. அம்மலைக்கு அழகிய படிகள் பிம்பசாரனாற் செய்விக்கப்பட்டன என்பர்.

ததாகதர் என்ற புத்தர் ஆண்டு தோறும், மது அருந்துதல், பிறன்மனை விழைதல், பொய் கூறுதல், திருடுதல் முதலிய தீய பழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்றும், பிறர்க்குக் கொடுத்துதவ வேண்டும் என்றும், நன்றி மறத்தல் பெரும் பாவம் என்றும், கூறிச் செய்த சொற்பொழிவுகள் பல. இவைகள் யாவும் பாலிமொழியில் இருந்தன. பிறகு வேறு மொழியிற் பெயர்த்தெடுக்கப்பட்டன என்பர். பின்னர் தமது நிருவாணகாலம் நெருங்கியதை உணர்ந்து, வைசாலியினின்றும்நீங்கி, போகநகரம் சென்று, அவண் சிலநாள் தங்கியிருந்து, பிறகு பாவா நகரம் சென்று தங்கினர். அங்கே சந்தன் என்னும் தட்டான் மனையில் உணவுட்கொண்டார். அவ்வுணவில்

எளிதில் சீரணிக்கமுடியாத உணவு கலக்கப்பட்டிருந்தமையால், அவர்க்கு நோயுண்டாயிற்றென்றும், அதுவே அவருக்கு ஈற்றுணவென்றும் கூறுப. அப்போது புத்தருக்குப் பிராயம் 80. பின்னர் குசீ நகரடைந்து அங்கே ஓர் ஆற்றங் கரையில் இளைப்பாறி ஆநந்தனைப் பார்த்து "ஓர் இரட்டைச் சாலமரத்தின் நடுவிடத்தைப் பெருக்கி நீர் தெளித்துப் பாயை விரிப்பீராக, நான் இன்று நடுயாமத்தே நிருவாணமடைவேன்" என்றார். உடனே ததாகதர் அந்த இடத்தை அணுகித் தலையை வடக்கே வைத்து, வலக் கரத்தைத் தலையணையாகக்கொண்டு, மேற்றிசையை நோக்கி வலப்புறமாக ஒருக்கணித்துப் படுத்துக்கொண்டார். பின்னர் இன்னவாறு அடக்கம் செய்ய வேண்டும் என்பதையும், தமக்குப் பின்பு சீடர்கள் யாவரும் கைக்கொண்டொழுக வேண்டிய விதிகள் சிலவற்றையும் அப்பொழுது ஆநந்தனுக்குச் சொன்னார். சொன்னவர் ஆநந்தன் வருந்துவதறிந்து "இவ்வுலகில் யாதும் நிலையுள்ளதன்று. மிகவும் நெருங்கியுள்ள ஒவ்வொரு பொருளினின்றும் நாம் நீங்க வேண்டும். அதுவே பேரின்பம் எய்தும் வழி" என்று சொல்லி விட்டுச் சிறிது துயின்றார். அந்நிலையிலேயே நிர்வாணம் எய்தினர். புத்தர் நிர்வாணமடைந்த காலம் ஈசான சகாப்தம் 148-ஆம் ஆண்டு வைசாக மாதத்தின் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய செவ்வாய்கிழமை என்ப. புத்தர்பிரான் இறப்புக் காட்சி சாங்கியத் தோப்பின் வாயிலிற் பொறிக்கப்பட்டுள்ளது. அவரது எரிந்த என்புகள் இராசக்கிருகம் முதலிய எட்டு நகர்கட்குப் பிரித்தளிக்கப்பட்டன. எரி வாய்ப்பட்டழியாத நான்கு கடைவாய்ப் பற்கள், இரண்டு கழுத்தெலும்புகள், ஒரு முன்னெலும்பு என்பன அவை என்ப. பற்களில் ஒன்று காந்தாரத்திலும், மற்றொன்று கலிங்க நாட்டில் கந்தபுரத்திலும் பிரதிட்டை செய்யப்பட்டன.

ஈமச் சடங்குகள் நிகழ்ந்தன. அவரது வைரம் போன்ற என்புகள் மட்டும் எஞ்சின. ததாகதர் நிருவாணத்தைக் கேட்ட மகதநாட்டு மன்னன் முதலிய எழுவர் போந்து

அவரது அங்கத்திற் பங்குதரும்படிகேட்டு, அரிதிற்பெற்று அவற்றிற்குத் தாதுகோபங்கட்டி வழிபாடாற்றினர். குசீ நகரத்துமாந்தர்கள் புத்தருடைய தேகச் சாம்பரைத் தொகுத்து வைத்து அதற்குச் சைத்தியமொன்று கட்டு வித்து, அந்தச் சைத்தியத்திற்குப் பஸ்மதாது கோப மென்று பெயரிட்டனர். இவ்வாறு சம்புத்தீவில் ஆதி காலத்தில் பத்து தாது கோபங்களிருந்தன. அவை ஒவ் வொன்றிலும் பௌத்தர்கள் நிருத்த கீதத்துடன் புத்தரை வழிபட்டு வருவாராயினர். அவதார புருடர் எனப் போற் றத்தக்க பெரியோர்கள் மறைந்த நிலையில், அவரது உறுப்புக்களைப் பங்கிட்டுப் பெருமைப்படுத்துவது இந் நாட்டில் தொன்றுதொட்டவழக்கு. அண்மையில் மகாத்மா காந்தியவர்கள் மறைந்த நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்றைப் பின்வரும் செய்யுளிற் குறித்துள்ளேன்.

''புத்தர் பிரான் பல்முதலாம் பலவுறுப்பும்
பெறத் தம்முட் போட்டியிட்டார்
இத்தரணி மக்களென முன்னுளிந்
தியசரித மியம்பிற்றம்மா
வித்தகனும் காந்திமகான் வியனுடல
நீறதனை விழைந்து வாரித்
தத்தனநர் கொடுபுக்கார் தரணிபரேல்
அவன் பெருமை சாற்றலாமே''

## தமிழ் நாட்டிற் பௌத்தம் தோன்றிய வரலாறு

பௌத்த மதம் கி.மு. ஐந்தாம் நூற்றுண்டிற் கௌதம புத்தரால் வட இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மதம் தென்னுட்டில் எப்பொழுதுவந்தது, எவ்வாறு புகுந்தது என்று விளக்கக் கூடிய சான்றுகள் தமிழ் நூல் களில் இல்லை. ஆயினும் மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ்க் காப்பியங்களில் இந்த மதத்தைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. சங்கச் செய்யுட்கள் இயற்றிய புலவர்களிற் சிலர் பௌத்த சமயத்தினர் என அறிகின்றோம். இளம்போதியார் பௌத்தப் புலவர் போலும், போதி என்ற பெயர் அவர்

அச்சமயத்தினர் என்று காட்டும். எனினும் இச்சமயம் தென்னாட்டிற் பரவிய வரலாற்றைப் புறச்சான்றுகள் கொண்டு நிறுவலாம். அசோகரது கல்வெட்டுக்களும், இலங்கைச் சரிதத்தைக் கூறும் மகாவமிசம் தீபவமிசம் என்ற நூல்களும், சீன யாத்திரீகராகிய ஹியூன்ஸ்தாங் முதலியோர்களின் நாட்குறிப்புக்களும், தென்றமிழ் நாட்டுச் சாசனங்களும், மைசூர்ச் சிலாசாசனங்களும் புத்த சமய சரிதத்தைத் தொகுப்பதற்குதவும். சிங்கள சரித்திரமான மகாவமிசம், புத்தர் நிருவாணம் எய்திய கி.மு. 478-இல் இலங்கையின் முதல் மன்னனாகிய விசயன் அத்தீவில் வந்திறங்கியதாகக் குறிக்கும். அம்மன்னன் ஓர் பாண்டியன் மகளை மணந்தான். கி.மு. இரண்டாம் நூற்றாண்டினதான சில பௌத்தச் சின்னங்கள் பாண்டி நாட்டின் பல பகுதிகளிலும் விரவியுள்ளன. அவைகள் பெரும்பாலும் இயற்கையா யமைந்த குகைகளாய் நிட்டை புரிதற்குத் தகுந்த இடங்களாய் ஒளிர்வன. அவைகள் மக்களின் போக்குவரவு மிகுதியாயில்லாத இடங்களில் அமைந்துள்ளன. சில இடங்கள் இருப்புக்கம்பி வேலி களால் பலப்படுத்தப்பட்டன. பல பாறைகளில் கற் படுக்கை காணலாம். அந்தப் படுக்கைகளிலிருந்தே அக் குகைகளில் வதிந்தவர் தொகையை அறிதல்கூடும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே பாண்டிநாட்டில் ஆயிரக் கணக்கான மக்கள் புத்த மதத்தைத் தழுவியிருந்தனர். பௌத்த சமயம் பரவுவதற்குத் சிங்களப் பாதிரிகளே முதற் காரணம். இதற்கு முன்னமேயே அதாவது கி.மு. நாலாம் நூற்றாண்டிலிருந்த பாண்டியர்கள் புத்தமதக் கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்கக்கூடும் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு.

கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்து சகாத்தம் வரையில் இடைப்பட்டுள்ள காலத்தில்தான் பௌத்தம் தென்னாட்டில் பரவியிருத்தல் வேண்டும். அசோக மன்னரது கல்வெட்டுக்களிலிருந்து, சேர, சோழ, பாண்டிய கேரள நாடுகள் மௌரிய ஆட்சிக்குட்படவில்லை யென்றும்,

அவை தனி அரசுகளாக விளங்கின என்றும், அசோக மன்னர், கட்டாயமன்றிச் சமாதான முறையிலேயே பௌத்த மதக் கொள்கைகள் பரவுமாறு செய்தனர் என்றும் அறிகிறோம். அசோகரது மகள் சங்கமித்திரையும் மகனும், இலங்கைக்குப் பௌத்த மதம் பரப்புமாறு ஏவப் பட்டனர் என்று வரலாறுண்டு. தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கணத்தில் பௌத்தமதத்தைப்பற்றிய குறிப்பில்லை. திருக்குறளிலும், சில குறட்பாக்களை வலிந்து பொருள் கொண்டாலன்றி, பௌத்தக் குறிப் புண்டு என்று கூற இயலாது. 'அறவாழி யந்தணர்' போன்ற சொற்றொடர்கள் ஒருதலையாகப் பௌத்தரையே குறிக்கும் என்று கூறற்கில்லை. வள்ளுவரைப் பௌத்தர் என்பார் சிலர்; அது பொருந்தாது. அகநானூறு, புற நானூறு, பத்துப்பாட்டு முதலிய தொகை நூல்களிலும் நேர்முகமான குறிப்புக்கள் இல்லை. தானப்பள்ளி முதலிய சொற்றொடர்கள் ஒரு சமயம் பௌத்தப் பள்ளிகளைக் குறிக்கலாம். 166-ஆம் புறப்பாட்டில் "தொன்றுபுரிந்த ஈரிரண்டின், ஆறுணர்ந்த வொரு முது நூல், இகல் கண்டோர் மிகல் சாய்மார், மெய்யன்ன பொய்யுணர்ந்து," என்ற இடத்தில் உரைகாரர் "நான்கு கூற்றையுடைத்தாய் ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்கவேண்டி அவரது மெய்போன்ற பொய்யை உளப் பட்டறிந்து அப்பொய்ம்மையை மெய்யென்று கருதாமல் உண்மைப் பொருளை அவர்களுக்கு ஏற்பச்சொல்லி," என் றெழுதிச் செல்வர். மேலே கூறிய மூலச் செய்யுளும் அதன் உரையும் கொண்டு கடைச் சங்க காலம் அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே, வேதத்திற்கு முரண் பட்ட சமயங்கள் தென்றமிழ் நாட்டில் இருந்தனவென்றும், அவைகளை வேருடன் களைய முயன்றனர் மறையைக் கடைப்பிடித்தொழுகும் மன்னர்கள் என்றும் தெளியலாம், மெய்யன்ன பொய்யுணர்ந்து என்பது கொண்டு பௌத்த சமணர்களின் வாத சக்தியும் சொல்வன்மையும் நன்கு

புலனாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட விசயன், சாக்கியர் வழிவந்த ஓர் மன்னன். அவன் மூலமாகத்தான் இலங்கையிற் பௌத்தம் பரவிற்றென்ப. ஆனால் அசோகர் காலத்தில் தான் தென்னிந்திய நாடுகளில் பௌத்தம் அதிகமாகப் பரவிற்று. அசோகரும் அவர் பெயரன் தசரதன் முதலிய மௌரிய மன்னரும் பௌத்தத்தையே பெரிதும் ஆதரித்தனர் என்பதற்குப் போதிய சான்றுகளுண்டு. அசோகர் சாசனத்தில் நிக்ரந்தர் என்ற பெயர் காணப்படினும், சமணர் மௌரிய மன்னரால் ஆதரிக்கப்பெற்றார் என்பதற்குச் சரித்திரச் சான்றுகளில்லை. கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலேயே சாக்கியரும் பாண்டியருமாகக்கூடி இலங்கையிற் குடியேறியிருக்கக் கூடும். தேவாநாம்பிரியர், அநிருத்தர் என்ற இவர்களால் பௌத்தம் பரவியிருக்கலாம்.

மருகல்தாழை யென்ற இடத்தில் பிராமி எழுத்துக்களோடுகூடிய குகைகள், மேலூர் அரிட்டாபட்டியில் உள்ள குகைகள், ஆனைமலை, திருப்பரங்குன்றம், அழகர்மலை, அம்மனைமலை முதலிய இடங்களிலுள்ள குகைகள் ஆகிய இவை யாவும் இயற்கைக் குகைகளே. அசோகரது 18-ஆவது ஆட்சி யாண்டிற்குப் பிறகே பௌத்தம் இலங்கையிற் பரவியிருத்தல் வேண்டும் என்பர் அறிஞர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பௌத்த மதமும் பிராமண மதமும் ஒரு நிகராக இருந்தனவென்று ஹியூன்ஸ்தாங் குறித்திருக்கிறார். இவர் பாண்டிய நாட்டு மதுரைமாநகரின் கீழ்ப்புறத்தில் அசோகர் உறவினரான மகேந்திரரால் கட்டப்பட்ட ஒரு பௌத்தப் பள்ளியும், அசோகரால் கட்டப்பட்ட ஒரு விகாரையும் இருந்ததாகத் தமது குறிப்பிற் கண்டிருக்கிறார். மேலும் அசோகர் அமைத்த ஒரு தூபி காஞ்சீபுரத்தில் இருந்ததாகவும் கூறுவர். அசோகர் தூதரை அனுப்பிய இடங்களாகக் குறிக்கப்பட்டவைகளில், மகிஷமண்டலம் (மைசூர்) வனவாசி, அபராந்தம், மகாராட்டிரம் என்பன சில இடங்கள். உலகில்

வாழும் மக்களுள் நான்கில் ஒரு பாகத்தார் பௌத்த மதத்தைத் தழுவினர் என்ப.

மேற்கூறிய நகரங்கள் இந்தியாவின் தென்பாகத்தைச் சார்ந்தவை. ஆனால் அந்தச் சீன யாத்திரிகர் குறிப்பிட்ட பௌத்த தூபிகள் மேலே காட்டிய இடங்களில் இப்பொழுது காணப்படவில்லை. ஆயினும் புகாரில் ஓர் பௌத்தப் பள்ளியும் கச்சிமாநகரில் பல பௌத்தபிக்ஷுக்களும், பௌத்தாலயங்களும் இருந்தனவாக மணிமேகலை கூறும். சோழமன்னர்களான தொடுகழற்கிள்ளியும், துணையிளங்கிள்ளியும், காஞ்சியில் ஓர் பௌத்தமடம் அமைத்ததாக அந்நூல் நுவலாநிற்கும். தான்யகடகம் அல்லது அமராவதியில் பூர்வசீல அபரசீல சங்கிராமங்கள் இருந்தன என்று ஹியூன்ஸ்தாங் கூறுவர். பல்லவ வமிசத்தின் ஆதிமன்னர்களிற் சிலர் பௌத்தராக இருந்திருக்கலாம்; அவர்களது கொடிவழியில் அசோகவர்மன் என்ற பெயர் காணப்படுகிறது. சோழ மன்னன் கிள்ளி பௌத்த வளைவாணன் மகள் பீலி வளையை மணம் புரிந்ததாக மணிமேகலை கூறும்.

## இலங்கையிற் பௌத்தம்

சங்க காலத்தில் தென்றமிழ் நாட்டிற்கும் இலங்கை அல்லது ஈழத்திற்கும் நல்ல தொடர்பிருந்து வந்தது. பாண்டிநாடும் இலங்கையும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்ததென்று தெரிகின்றது. ஈழத்துப் பூதன் தேவனார் முதலிய சங்கப் புலவர்கள் பாண்டிமன்னர் போற்றி வளர்த்த சங்கத்தில் இருந்து வந்தனர். புத்தரது காலத்திலேயே தென்னிந்தியாவிலிருந்து கொணரப்பட்ட பிக்குகளால் புத்தமதக் கொள்கைகள் பரப்பப்பட்டு வந்தன. ஆதலின் புத்தரின் நிர்வாணத்திலிருந்து புத்த சகாத்தம் கணக்கிடப்பட்டதென்றும், தென்னிந்தியாவில் அஃது வழங்கிற்றென்றும் உணரலாம். கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து பௌத்தம் சிங்களவர் மதமாக வழங்கியது. விசயன் இலங்கையிற் புக்கு அரசு புரிவதற்கு

முன் அஃது யக்ஷர்க (இயக்கர்கள்) ளால் ஆளப்பட்ட தென்ப. விசயன் 38 ஆண்டுகள் அரசியற்றி யிறந்தான். அதன் பின்னர்ப் பௌத்தம் பரவியது. பௌத்தம் பரவுவதற்குமுன் அத்தீவில் மத உரிமை, அதாவது ஒவ்வொருவரும் தமக்குகந்த மதத்தைப் பின்பற்றி ஒழுகலாம் என்ற முறை இருந்து வந்தது. மதச் சார்பான கூட்டங்கள் நிகழும் முக்கிய நகரங்களில் கோயில்களோ பெரிய கட்டிடங்களோ இல்லை. வேதத்தை அடிப்படையாகக்கொண்ட கிரியைகளும் இல்லை.

விசயனை அடுத்து அரசுபுரிந்தவன் தேவாநாம்பிரியன். C. 247-207 B. C. அவன் அசோக மன்னர் காலத்திருந்தவன். அவன் ஆட்சியில்தான் பௌத்தமதம் முதன் முதல் பரவத் தொடங்கியதென்ப. அதுவும் அசோகனது மகன் மாகிந்தனால் நிகழ்ந்ததென்ப. தேவாநாம்பிரியன் அசோகன்பால் தூதனுப்பிப் பரிசுகளும் விடுத்தான் என்று சரித்திரக் குறிப்புகள் கூறும். அம்மன்னனும் தேவாநாம்பிரியனிடம் தூதனுப்பினன். புத்தர் அறவுரை கூறி நின்ற இடத்தில் ஓர் ‘தோப்பு’ அமைக்கத் தேவாநாம்பிரியர் கருதினர். ஆனால் துத்தகாமினி தான் அதைச் செய்தற்குரியவர் என மகேந்திரர் சொல்ல, தேவாநாம்பிரியர் ஒரு கற்றூணைமட்டும் நிறுத்தினர். அசோகன் கல்வெட்டுக்களில் ஈழம் தாம்பப்பன்னி என்று குறிப்பிடப்படுதல் காணலாம். அறிஞர் வி. ஆர். இராமச்சந்திர தீக்கிதர் பின்வருமாறு எழுதுகிறார்.[1]

“சமந்தபாசாதிகாவின்படி அசோகரது ஆட்சியில் கி.மு. 236-இல் நிகழ்ந்த புத்த மகாசபையின் முடிவிற்கேற்ப தேரர் மாஹிந்தர் இலங்கையைப் பௌத்தமாக ஆக்குமாறு அனுப்பப்பட்டார். அவரை அடுத்துத் தேரர் சங்கமித்திரை அனுப்பப்பட்டார். தேவாநாம்பிரியர் டிஸ்ஸாவின் வேண்டுகோட்கிணங்கப் போதிமரத்தின் ஓர்

1. Prof. C. S. Srinivasachariar’s 61st Birthday, Volume. P. 83.

கிளையை அந்தணர், அரசர் முதலியோர் காவலில் அனுப்ப, அஃது அநுராதபுரத்தில் நடப்பட்டது. இவ்வாறு அனுப்பியவர் அசோகர். ஆனால் இதற்கு இலக்கிய ஆதரவன்றிச் சாசன ஆதரவில்லை. இராசாவளி, டிஸ்ஸாவும் அசோகரும் மௌரிய வங்கிசத்தவரெனக் கூறும். ஓர் சீன நூலிலிருந்து, டிஸ்ஸாவும் அசோகரும் முன்பிறப்பிற் சோதரர் என்றும், அப்பொழுது அவர் இரண்டாவது புத்தரைக் கண்டனர் என்றும், புத்தர்பிரான் அவர்களைக் கண்டு, அசோகர் இந்தியப் பேரரசர் ஆகவும் டிஸ்ஸா ஈழத்தரசராகவும் ஆவார் எனக் கூறியருளியதாகவும் கூறும். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இச்செய்தியை ஏற்றுக் கொள்ளார்.''

ஆராயும் கால் அசோகர் ஆட்சி தொடங்கு முன்னரே, விசயன் ஈழம் புக்கதிலிருந்தே பௌத்தம் இலங்கையிற் பரவியது எனக் கோடல் தகும். தேவாநாம்பிரியரின் ஆட்சி இச்சமயம் பரவுவதற்குப் பல்வகையினும் ஏற்றதாக இருந்தது. மாஹிந்தரும் அவரது சோதரியும் அரசனால் வரவேற்கப்பட்டார்கள். ஆனால் மாஹிந்தர் உஜ்ஜயினியிலிருந்து தென்னிந்தியத் துறைமுகமோ, உள்நாட்டுத் தலைநகரமோ இவற்றில் ஒன்றினும் புகுதாமல் நேராக இலங்கை சேர்ந்தனர் என்ற செய்தி, மாஹிந்தர் தஞ்சையிலிருந்து இலங்கை சென்றனர் என்ற செய்தியுடன் மாறுபடுகின்றது.

ஒரு சீன ஆசிரியர் கூற்றின்படி மகேந்திர இளவரசர் துறவு பூண்டு, சோழநாட்டைச் சார்ந்த தஞ்சையில் இருந்தனர். அங்கிருந்து புத்த மதத்தைப் பரப்புவதற்கு இலங்கை சென்றனர். பௌத்த வரலாறுகளை ஏற்றுக் கொண்டால், அசோகர் ஆணையின்மேலேதான் இவர் ஈழம் புக்கனர் என்று தெரிகின்றது. மகேந்திரர் நால்வருடன் ஈழம் சென்றனர் என்றும், தேவாநாம்பிரியர் அவர்களை நல்வரவேற்றனர் என்றும் கூறுப. அரசன் பௌத்தத்தைத் தழுவினான். மக்களும் அவனைப் பின்பற்றிப்

பௌத்தராயினர். பௌத்தாலயம் மகேந்திரரால் கட்டப்பட்டது. நன்கொடையாக அளிக்கப்பட்ட மேகவனம் என்ற பூங்காவே, மகாவிகாரத்திற்கு அடிப்படையாக அமைந்தது. டிஸ்ஸாவின் சோதரரும், அவரை அடுத்துப் பட்டமெய்தினவருமா உத்தீயர் என்ற அரசரின் 8-ஆவது ஆட்சி யாண்டில் மகேந்திரர் நிருவாணமெய்தினர் என்றும் கூறுப.

மகேந்திரர் சோணுடாகிய தஞ்சையில்தங்கிப் பின் ஈழம் சென்ருர் என்பதற்குப் போதிய சான்றுகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இல்லே. காஞ்சியில் வழங்கிய புத்த சமயத்தைப்பற்றி மணிமேகலேயிற் குறிப்புக் காணலாம். இதுகொண்டு புத்தமதம் தென்ஞட்டில் அசோக மன்னன் ஆட்சிக்குப் பல ஆண்டுகளின் பின் பரவியிருத்தல் வேண்டுமென்றே துணியலாம். வேதங்கள் சம்ஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டிருந்ததால் பலரும் கையாளக் கூடவில்லே. புத்தர், நாட்டு மொழியாகிய பாலியிலேயே தமது மதத்தைப் பரப்பினர். நிற்க, அசோகரே புத்த மதத்தைப் பரப்புமாறு மகேந்திரரையும் சங்கமித்திரையையும் ஈழநாட்டிற்கு அனுப்பினர் என்று ஒரு சாரார் கூறுப. கி.பி. 5-ஆம் நூற்ருண்டில் பாஹியான் தமது யாத்திரைக் குறிப்பில் மகேந்திரன் பெயரைக் குறிப்பிடுகின்ருர். இலங்கைப் பௌத்தத்தைப்பற்றி முதல் முதலாகக் கூறுபவர் இந்த யாத்திரிகரே யாவர் (305-416 A. C.) ஒரு நன்னெறியில் 5000 பிக்குக்களேக் கண்டதாகவும், இலங்கைத் தீவிலேயே மொத்தம் 50000 துறவிகள் இருந்ததாகவும், இவர் வரைந்துள்ளார். இந்தியாவிலிருந்தே இச்சமயம் இலங்கைக்குச் சென்றிருந்தபோதிலும், இது இலங்கையில்தான் வேரூன்றி நின்றது என்பதற்கு இப்பாஹியான் குறிப்புகள் பெரிதும் ஆதரவளிக்கும். இவர் வந்து சென்று சில ஆண்டுகட்குப் பின்னர்தான், மகாநாமா என்பவர் மகாவமிசத்தை எழுதினர். ஹியூன்ஸ்த்ஸாங் என்பவர் இலங்கைக்குச் சென்றதில்லே என்பர். இவர் நிர்வாணம் எய்தி நூருண்டு

கள் கழிந்த பின்னர் புத்தர் வணங்கப்பட்டு வந்தனர் என்பர். அப்பொழுது ஆயிரக்கணக்கான பள்ளிகளும் பதினாயிரம் பிக்குகளும் திகழ்ந்தனர் என்றும், ஆனால் அவர்கள் கறுப்பாடையே தரித்தனர் என்றும் மஞ்சள் ஆடை தரிக்கவில்லை யென்றும் எழுதினர். பெரும்பாலும் அவர்கள் மகாயானத்தைத் தழுவினர் என்ப. புத்தர் பல் பிரதிட்டிக்கப்பெற்ற விகாரம் அரசன் அரண்மனைக்கருகில் இருந்தது. புத்தர் நிர்வாணம் எய்திய கி.மு. 543-லிருந்து கி.பி. 301 வரையில் உள்ள இலங்கைச் சரிதத்தை மகா வமிசத்திற் காணலாம்.

இனி, பாண்டி நாட்டுப் பாறைகளில் பல படுக்கைகள் காணப்படுவதைக் கொண்டும் அவைகளில் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட சாசனங்களைக் கொண்டும், அவை கள் கி.மு. மூன்றும் நூற்றாண்டினவாக இருத்தல் வேண்டும் என்றும், அந்தப் பாறைகளில் ஒன்று அரிட்டா பட்டிக்கருகில் உள்ளதென்றும், அஃது மகேந்திரருக்கு உதவியாயிருந்த அரிட்டர் என்னும் பிக்குவின் பெயரால் தோன்றியிருத்தல் வேண்டும் என்றும், அவரே மித்திர ருடன் சேர்ந்து தமிழ் நாட்டில் புத்த சமயத்தைப் பரப்பி யிருத்தல் வேண்டும் என்றும் அறிஞர் மயிலை. சீனி. வேங் கிடசாமி என்பவர் எழுதியுள்ளார். (பௌத்தமும் தமிழும். பக். 9) மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசுவித் துப் புத்த மதம் தழுவிய அரசனைச் சைவனாக்கினர் என்றும், அந்த மன்னன் ஈழநாட்டு மன்னன் என்றும் வரலாறுண்டு. ஞானசம்பந்தரது சீடரில் ஒருவர் சம்பந்தரது தேவாரப் பாசுரத்தைப் பாடி ஓர் புத்த வாதியின் தலை துணிந்து விழுமாறு செய்தனர் என்று சேக்கிழார் பெரிய புராணத்திற் குறிப்பர். இனி மகா வமிசத்தில் கூறப்பட்ட அசோகரின் பாதிரி வேலை காஞ்சியிற் கிடைத்த சில பழைய புதையற் சின்னங் களால் உறுதிப்படுகின்றது. அதில் ''மகாவமிசம்'' தீபவமிசங்களில் வரும் பெயர்கள் காணப்படுகின்றன. இலங்கைக்கு மதப் பரப்பிற்காக விடுக்கப்பட்ட

மாகிந்தர் பெயரை ஹியூன்த்ஸாங் குறிப்பிடுகிறார். ஆனால் அசோகரின் உடன் பிறந்தவராக அவரைச் சொல்வர். அநுராதபுரத்தில் நாட்டப்பட்ட அரசும் சரித்திர வரலாற்றிற்குட்பட்டதாகலாம். ஏனெனில் காஞ்சித் தோப்பில் கீழ்வாசலில் உள்ள ஓவியங்களும், சிலைகளும் அந்த அரியசெயலை நினைவூட்டுவனவாக உள்ளன. புத்தர் பரி நிர்வாணத்திலிருந்து 236-ஆண்டுகட்குப்பின் தேவாநாம்பிரியன் முடிசூட்டுவிழா நடைபெற்றது. இலங்கைச் சரித்திர நூல்களிலிருந்து நெடுங்காலமாக ஈழத்திற்கும் கலிங்க அரசுக்கும் நெருங்கிய தொடர்புண்டென்றும், இலங்கை சென்ற விசயன் கலிங்க அரசன் என்றும், இலங்கை அரசவழியே பெண் வழியாகத் தோன்றியதென்றும், இலங்கையில் அரசுரிமைச் சந்ததிகள் இல்லையாகில் கலிங்க நாட்டிலிருந்தே தேர்ந்து கொள்ளவேண்டும் என்ற நியதி இருந்ததென்றும் அறிகின்றோம்.

தேவாநாம்பிரியரை அடுத்து **ஏலாரா** என்ற தமிழர் அரசு புரிந்தனர். அவர் சோழநாட்டிலிருந்து போந்து இலங்கை யரசைக் கைப்பற்றியவர். இவரும் ஏலேலசிங்கரும் ஒருவரே என்றும், திருவள்ளுவரின் ஆருயிர் அன்பரும் அவரை ஆதரித்தவரும் இவரே என்றும் சிலர் கூறுவர். கப்பலுடைந்து இழந்த பொருள் மீண்டும் கிட்டிய போது ''ஏலேலசிங்கர் பொருள் தானேபோய்த் தானே வரும்'' என்று கூறினர் வள்ளுவர் என்ப.

இவரை அடுத்து அரசு கட்டிலேறியவர் துத்தகாமணி. இவர் பெரிய வீரர். வடக்கிலங்கையையும் அநுராத புரத்தையும் கைப்பற்றிய தமிழருடன் பொருதவர். ஏலாரா என்பவர் துத்தகாமணியுடன் பொருது மாய்ந்தார் என்ப. துத்தகாமணி ஆட்சியில் புத்த மதம் நன்கு பரவியதென்ப.

இவ்வரசன் புத்த மதத்தைத் தழுவாத மன்னர் பலரையும் பன்முறை எதிர்த்தான். பின்னர் பலசைத்தியங்களைக்

கட்டித் திருவிழாக்கள் வகுத்தான். புத்த பிக்குகள் வதியுமாறு நிறைந்த காற்றோட்டமுள்ள ஆயிரம் அறைகளாலான உலோகபாசடை என்ற இடத்தை அமைத்தான். போதி மரத்திற்குப் பல நன்கொடைகள் செய்தான். இவனே மகாஸ்தூபி அமைத்தவன் என்ப.

துத்தகாமணிக்குப் பிறகு அவன் மகன் அரசு கட்டில் ஏறினன். ஆனல் அவன் போகத்தில் விழைவில்லாமலிருந்ததால், அவன் சிற்றப்பன் டிஸ்ஸா என்பவன் 18 ஆண்டுகள் ஆண்டான். (77-59 B. C.) இவன் தன் அண்ணன் கட்டத் தொடங்கிய மகாஸ்தூபியைக் கட்டி முடித்தான்.

நிற்க. இலங்கைச் சரிதமாகிய மகாவமிசத்தில் தேரர் சங்க மித்திரை சோணாட்டிலிருந்து போந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலே துத்தகாமணி என்ற ஈழ மன்னன் பௌத்த மகாவிகாரத்தை அமைத்தபொழுது 14 நாடுகளிலிருந்து மன்னர்களின் பிரதிநிதிகள் அங்கு வந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அந்தப் பதினான்கு நாடுகளில் வனவாசி ஒன்றாகக் காணலாம். இவ்வூர் வடகன்னடம் சில்லாவில் உள்ளது. எனவே தமிழ் நாட்டில் அக்காலத்தில் பௌத்தம் பரவவில்லை என்று ஒருவாறுணரலாம். மாகிந்தரின் இரண்டு சீடர்கள் பௌத்தத்தைப் பரப்புதற்குப் பிறநாடு சென்றனர் என மகாவமிசம் கூறும். மதுரை சில்லாவைச் சேர்ந்த பஞ்சபாண்டவர் மலையில் பைசாச பாஷையில் சில பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளை மலைக்குகைகளிற் காணலாம். இந்தக் குகைகளில் ஈழத்திலிருந்து சில பௌத்தப் பிக்குகள் வந்து தங்கியிருக்கலாம். எனவே கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே ஈழத்திற்கும் பாண்டி நாட்டிற்கும் சிறிது தொடர்பிருந்ததென்று தெரிகிறது. மற்றும் கி. மு. முதல் நூற்றாண்டிலேயே காவிரிப்பட்டினத்தில் சில பௌத்தர் சென்று தங்கினர் என்ப. இதிலிருந்து நாளடைவில் சோழ பாண்டியர் நாடுகளில் பௌத்தம் பரவியிருத்தல் கூடும்.

இலங்கையரசன் பராக்கிரமபாகு என்பவர் பேரரசர் என்று இலங்கைச் சரிதம் கூறும். ஆனால் சாசனங்களி லிருந்து ஆராயுங்கால் பராக்கிரமபாகு இலங்கை முழுதை யும் தன்னாட்சியிற் கொண்டிருக்க முடியாது என்பது தேற்றம்.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டினரான பராக்கிரமபாகு விடம் அரசர்க்குரிய பல நற்பண்புகளும் இருந்தனவென்று தருமகீர்த்தி கூறுவர். நீதி நூல்களில் அவர் நிபுணர் என்றும் இசைப்பர். அவன் கயவாகு, மானாபரணன் என்ற இருவருடன் தன் அரசுக்காகப் பொருததும் அவனது பல்வேறு படையெடுப்புக்களும் சரித்திரம் எழுதுவோராற் குறிக்கப்பட்டுள்ளன. சங்கராசாரியாரின் வேதாந்த சூத்திர பாடியத்தில் பூர்ணவர்மன் என்ற ஓர் அரசன் குறிப்பிடப்படுகின்றான். அவன் புத்தகயையில் ஓர் போதி மரத்தைப் போற்றியதாகத் தெரிகின்றது. சீன யாத்திரிகர் ஹியூன்த்ஸாங் (A. D. 629-645) மகத ராஜ்யத்தில் இரண்டாண்டுகள் தங்கியிருந்தனர். அவர், பூர்ணவர்மன் அசோகன் வழியில் வந்தவன் என்றுமட்டும் கூறியுள்ளார். சசாங்கன் என்ற ஓர் மன்னன் இந்தப் போதி மரத்தை வெட்ட முயன்றான் என்பது வரலாறு.

இந்தச் சசாங்கன்றான் ஹர்ஷவர்த்தன சிலாதித்யனின் அண்ணனை ராஜ்யவர்த்தனனைக் கொன்றவன் என்று, மேற்கூறிய யாத்திரிகர் குறிப்பிட்டுள்ளனர். டாக்டர் பெர்சன் கருத்துப்படி ராஜ்யவர்த்தனனும் அவன் தந்தை யான பிரபாகரவர்த்தனனும் கி.பி. 580-600-க்குள் இருந் தவர் ஆவர். பூர்ணவர்மன் அச்செயலை எதிர்க்க முயன் றான். இஃது ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந் தது. சங்கரரும் பூர்ணவர்மனும் சமகாலத்தவர்.

இனிக் 'கொங்குதேச ராஜாக்கள்' என்ற நூலில் திரு விக்ரமதேவன் என்னும் அரசனைச் சைவத்திற்குச் சங்கரா சாரியார் மாற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இவன் இரண்

டாவது திருவிக்கிரமன் ஆகில் 6-ஆம் நூற்றூண்டினனுவன் என்பர் டாக்டர் பந்தாரகர். சங்கராசாரியருடைய நான்கு சீடரில் ஒருவரான குமரிலபட்டர் கி. பி. 650-இலிருந்து 700-க்குள் இருந்தவர். சங்கராசாரியரைப்பற்றி மத்வாசார்யர் எழுதிய வரலாற்றில், பாணன், தண்டி என்ற இவர்கள் ஆசார்யர் காலத்திருந்தவரெனக் கூறப்பட்டது. ஆனல் ஆராய்ச்சியாளர்கள் இச்செய்திகளை ஒப்புக்கொள்ளார். பேரறிஞர் வீபர் (Weber), Burnad முதலிய அறிஞர்கள் இவர்கள் எல்லோரும் கி.பி. 6-ம் நூற்றூண்டில் இருந்ததாகக் கூறுவர். நிற்க, பீல் (Beal) என்னும் அறிஞர் கி.பி. 557-583-இல் ஈஸ்வர கிருஷ்ணன் இயற்றிய சாங்கிய காரிகைக்குக் கௌடபாதர் பாடியம் இயற்றியதாகச் சீன சரிதம் கூறும் என்பர். இந்தக் கௌடபாதர் சங்கராசாரியாரின் ஆசிரியரான கோவிந்த பகவத்பாதருக்கு ஆசாரியர் என்ப. சங்கராசாரியார் தமது மாண்டூக்கிய உபநிடதத்தின் பாடியத்தில் தமது பரம குருவுக்கு வணக்கம் கூறுகின்றூர். இது இயற்றப்பட்ட காலம் கி.பி. 570-ஆக இருக்கக்கூடும். ஆன்மா இன்றென்பதும், எல்லாப் பொருள்களும் கணப்பொழுதில் அழியுந் தன்மையுள்ளன என்பதும், புத்த மதக் கொள்கை. பூர்வ ஞானம் உத்தரஞானத்தை உண்டுபண்ணித் தான்கெட்டுப் பின்னதுள் ஆதியாய் நிற்பது வாசனை எனப்படும். கிலேசமற்ற சித்தவியல்பே நிரோதமென்றும், முக்தி என்றும் அறியப்படும்.

இனிச் சௌகத மதத்தில் சம்சாரத்தினியல்பு கூறப்படும். பிணி, மூப்பு, சாக்காடு இம்மூன்றும் பொருந்திய சம்சாரம் துக்கமேயாம். இவற்றிற்குக் காரணம் பிறப்பு. இதற்கு மூலகாரணம் அவித்தை. அவித்தையொழியப் பவத்திறம் விலகும். இது நீங்கப் பிணி, மூப்பு, சாக்காடுகள் ஒழியும். இவை பற்றற ஒழிதலே வீடாம். சௌகதர் இல்லறத்தாராகிய சிராவகர் என்றும், துறவிகளான பிக்ஷுக்கள் என்றும், இரு பிரிவினர். மாமிசம் உண்பர்.

பௌத்தர் நான்கு வகையினர்; சௌத்திராந்திகர், வைபாடிகர், மாத்தியமிகர், யோகசாரர் என. இதில் யோகசாரர் சர்வம் விஞ்ஞானமயம் என்றும், ஆலய விஞ்ஞானம் என்னும் மூலப்பொருளில் ஐக்கியமாதலே மோட்சம் என்றும், இதைப் பெறும் வழிகள் யோக முறைகள் என்றும் கூறுவர். இவர்களது தத்துவவுரை சங்கர அத்வைதத்துடன் முற்றும் பொருந்தும். இது குறித்தே சங்கராசாரியாரை 'பிரச்சன்ன பௌத்தர்' எனப் பகர்வர்.

நிற்க, கி.மு. ஆறும் நூற்றாண்டிற் பல சமயங்கள் தோன்றின. கௌதமபுத்தர், மகாவீரருக்குப் பல ஆண்டு கட்கு முன்பே பிராமணக் கொள்கைகட்கு எதிர்ப்புண்டு. இந்து மதாசாரியாரின் வேதப்பிரமாணத்தையும், யாகக் கிரியைகளையும், பிராமணரின் தலைமையையும் சிலர் மறுத் தனர். ஆனால் அவர்கள் விரோதிகளான பிராம்மணர் களால் ஏற்படுத்தப்பட்ட யோகமுறைகளையும், வாழ்க்கை நடைமுறைகளையும் மேற்கொள்ளாமலில்லை. பௌத்த நூல்களில் வருணாசிரமத்தைப்பற்றிய குறிப்பில்லை.

பௌத்த நூல்களில் 27 நூல்கள் மத ஒழுங்கை வரை யறுத்துக் கூறுவன. தருமம் என்றும் விநயம் என்றும் இரு பெரும் பிரிவுகள் உண்டு. தருமம் மதத்தைப்பற்றிக் கூறுவது. விநயம் ஒழுக்கத்தை விரிப்பது. பின்னர் விநயம், சுத்தம், அபிதன்மம் என்ற மூன்று பிடகங்கள் (கடமைகள்) காணப்படுகின்றன. பௌத்த சரிதத்திற்குப் பேராதரவாக நிற்பன புத்த நிகாயங்கள். நிகாயத்திற் காணப்படும் உரையாடல்கள் புத்தர்பிரான் இறந்து இரண்டு மூன்று ஆண்டுகட்குள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பர். அந்நூல் களில் கலிங்கத்திற்குத் தெற்கேயுள்ள ஊராவது, மேற்கிந் தியாவில் கோதாவரிக்குத் தெற்கேயுள்ள ஊராவது குறிப் பிடப்படவில்லை. ஆனால் அசோகர் கல்வெட்டிலிருந்து தென்னிந்திய அரசுகளையும் இலங்கையையும் பற்றி அறிகின்றோம். புத்த சாதகத்திலும் சூக்தத்திலும் பிரா

மணர்கள் உழவு, பசு மேய்த்தல், ஆடு வளர்த்தல், தச்சு வேலை செய்தல், நெசவுத் தொழில் புரிதல் என்ற இவற்றில் ஈடுபட்டனரெனத் தெரிகிறது. இவ்வாறு அவர்கள் செய்ததைக் குறைவாகவோ இழிவாகவோ பிறர் கருதிலர். புத்தரும் தமது கல்வெட்டில் "எல்லோரும் என் குழந்தைகள். என் குழந்தைகள் இகபர சுகத்தை எய்த வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவ்வாறே எல்லா மக்களும் பெற வேண்டும் என்பது எனது அவா" என்று குறித்திருக்கிறார்.

## பௌத்தர் கொள்கைகள்

பண்டைப் பௌத்தரின் கொள்கைகட்கும் சாங்கியத்திற்கும் பெரிதும் ஒற்றுமை உண்டு. சாங்கியம் நிரீச்சுர சாங்கிய மென்றும் சேசுவர சாங்கியம் என்றும் இரு வகைப்படும். கடவுள் இல்லையென்று வாதிக்கும் சாங்கியத் தலைவர் கபிலர். கடவுள் உண்டென்று வாதிப்பவர் பதஞ்சலியா ரென்ப. பௌத்தத் துறவிகள் ஆடனையர், மானனையர், ஆனேறனையர் என முத்திறத்தாராவர். அஞ்சியோடும் ஆடு ஸ்ராவகனைப்போன்று தன் உயிரைக் காத்துக்கொள்வதிலேயே கருத்தாயிருக்கும். மான் தன் பின்னர் வரும் தன் இனத்தைத் திரும்பிப் பார்த்துப் பிரத்யேகன் போன்று தன் விடுதலையைக் கோரும்போதே தன் இனத்தையும் கவனித்துக்கொள்ளும். ஆனேறோ தன்மேலிட்ட சுமை முழுவதையும் தாங்கிக்கொண்டு தன்னலம் கருதாது போதிசத்துவன் போன்று பிறர்க்குரிமை பூண்டு நிற்கும் என்ப.

பௌத்தத் துறவிகளுள் போதிசத்துவரே சாலச் சிறந்தவர். ஏனெனில் அவர்க்கு மறுபிறப்பில்லை. அவர் தெய்வத்தன்மை யெய்தியவர். அதன்மேல் அவர்க்குத் தனி நிலையில்லை. பௌத்தத் துறவிகள் நாடோறும் ஐயமேற்றுண்ணுதல் வேண்டும். அவ்வாறு பெற்ற உணவை மூன்று பகுதியாக்கி ஒரு பகுதியைப் பசித்தார்க்கும், மற்றொன்றைப் பறவை விலங்குகட்கும், அளித்து மூன்றாவது

கூற்றைத் தனக்கு ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும். உச்சிப் போதிற்குப்பின் உணவு கொள்ளுதல் ஆகாது, பணத்தில் ஆசை வைத்தல் கூடாது. கிழிந்த ஆடையே உடுத்தல் வேண்டும். எவ்வகை அணியும் அணிதல் கூடாது. ஒரு பிக்குவின் இன்றியமையாத உடைமைகள் ஆவன: (1) திருவோடு, (2) ஒரு சிறு கரகம், (3) ஒரு தடி, (4) மழிக்கும் கத்தி, (5) தைக்கும் ஊசி, (6) ஓர் அரைக் கயிறு.

புத்தர் கூறியதாவது:—"நான் விதைப்பது அன்பு. தூய பணிகளே அதனை வளம் செய்யும் மழை. ஞானமும் அடக்கமுமே உழுபடைகள்." புத்தர் வெற்றி பெற்றதற்குக் காரணம், அவர் சாதிபேதமின்றி எல்லோரும் விடுதலை பெறுமாறு உழைத்த உழைப்பே யாகும். ஆண் பெண்களனைவரும் முத்தியெய்தற்குரியாரென்றும், அஃது மனதிற் கருதிய தேவதைகட்குப் பலியூட்டுவதால் எய்தப் படுவதன்றென்றும், ஆனால் அவரவரது நல்லொழுக்கத் தான் அடையப்படுவது என்றும் கூறுவர். இவ்வாறு சாதிக்கட்டுப்பாட்டை யொழித்து, வேள்விகளை யிழித்துக் கடவுட்கும் மக்கட்கும் நடுநின்று மக்கட்கு முத்தியளிப் பவராக இறுமாந்திருந்த பிராமணர் தலைமையைத் தவிர்த் தார் புத்தர்பிரான். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளை யும்" "வினை விளைத்தவன் வினையறுப்பான், தினை விளைத் தவன் தினையறுப்பான்" என்ற முதுமொழிகளின் உண்மைக் கருத்தை அவர் வலியுறுத்தி மொழிந்தார். பொருளற்ற சடங்குகளை யிழித்து நீக்கினர். ஆண் பெண்கள் சமமென்ற கொள்கையை ஆதரித்தார். சொல் லியபடி நடந்து காட்டினர்.

மாறிமாறிப் பிறக்கும் பிறவிகள் பல உள என்பது பௌத்தரின் கொள்கை. உலகமே துன்பமயம். அதிலிருந்து ஒருவன் உய்வதே நிருவாணம், துக்கம், துக்கநிவாரணம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம். இவை பிக்குகள் மேற்கொண்ட நால்வகை வாய்மை. இதனை

மணிமேகலையில்,

“பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது”

என்று கூறுவதால் முறையே உணரலாம். (மணி. 2, 64-67). இந்தப் பிறப்பிறப்பினின்றும் தப்புதற்கான வழிகள் நால்வகை வாய்மையும் ஐவகைச் சீலமுமாம்.

“உணர்வே யருவுரு வாயி லூறே
நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாக்காடு
யவல மாற்றுக் கவலைகை யாறென
நுவலப் படுவன”

நோயாகும். இதற்குப் பேதைமை, செய்கை, அவா, பற்று, கருமவீட்டம் இவை காரணமாகும். ஆதலால் தோன்றுதல் துன்பம், அதற்குக் காரணம் பற்று, வீடு, இன்பம், அதற்குக் காரணம் பற்றின்மையே என்கிற நான்குரைகளும் நால்வகைவாய்மைகளாகும். இவற்றைச் சத்திய சதுஷ்டயம் என்பர் நீலகேசியுரையாசிரியர். இந் நான்கினுள் துக்க நிவாரணமார்க்கம் எட்டுவகைப்படும். அவை நற்சாட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுரை தேரர் தலைப்பாடு என்பன. “பழித்திடாப் பழுதில் வாழ்க்கை யெட்டையும் பாரித்து” என்பது (சீவ-சித்தி-பரபக்கம்). கன்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோன்றுதல் ஏது நிகழ்ச்சி என்பர். மணிமேகலையில்,

“வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூப்பு விளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன் பா லுடையது
மக்கள் யாக்கை யிது”

மக்கள் யாக்கை ஊழ்வினை காரணமாகத் தோன்றுவது. மேலும் வினைக்கு விளைவாவது. மேலே அணிசெய்யும் பொருள் நீங்கில் புலால் மணம் கமழும் உடலம் புறத்தே இடப்படுவது. முதிர்ந்து அழியும் மாலைத்து. கொடிய நோய்கட்கு இருப்பிடம். பற்றுகள் யாவும் பொருந்து மிடம். குற்றங்கள் பொதிந்த ஓர் பாண்டம். சினத்தின் துயிலிடம். கவலைகட்கிருப்பிடம்.

பிறிதோரிடத்தில்,

" பிணங்குநூன் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்திவ னுயிருண்டு கழிந்து"

(மணி. 6, 151-2)[1]

என்று ஊழ்வினையின் வன்மை கூறப்பட்டது. மணி மேகலையில் கருமத்தின் விளைவு கூறப்பட்டது.

" மறஞ்செய் துளமெனின் வல்வினை யொழியாது
ஆங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறு முயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும்"

சோழன் மனைவி இராசமாதேவி தனது மகன் இறந்த தற்கு அழுதபோது, மணிமேகலை அவளை நோக்கி,

" பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
யெடுத்துப் புறங்காட் டிட்டவர் யாரே
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயினுய் தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்"

என்று கூறியதிலிருந்து உயிர் மறுபிறப்பெய்து மென் பதும், ஆனல் அதே உயிர் பிறக்குமிடம் தெரியாதென்பது முணரலாம். மற்றும்,

1. மணி. 21, 66-69.

" அறனு மறனு மநித்தமு நித்தத்
திறனுந் துக்கமுஞ் செயலும் புக்கிலும்
சார்பிற் றோற்றமும் சார்பறுத் துய்தியும்
ஆரிய னமைதியும் அமைவுறக் கேட்டு "

(மணி. 25, 4)

அறமும் பாவமும் அநித்தியமல்லது நிலையில் பொருளின் வகையும், நிலையுறுபொருளின் வகையும், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, விரும்பியன பெறுமை, வேண்டாதன பெறுதல் என்ற ஆறும், பேதைமை முதலிய 12 நிதானம். பேதைமை என்பது அறியாமை. செய்கை என்பது கருமம், உணர்வு என்பது விஞ்ஞானம், அருவுருவென்பது நாமரூபம். வாயில் ஆவது ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனமும், ஊறு என்பது ஸ்பரிசம், அதாவது இந்திரிய விடயத் தொடர்பு. நுகர்வு என்பது வேதனை. அஃதாவது இன்ப துன்ப அநுபவம். வேட்கையாவது விரும்பியதை அடையவேண்டும் என்றும், துன்பத்தைப்போக்க வேண்டும் என்றும் உண்டாகும் ஆர்வம். பற்று என்பது உபாதானம். அஃதாவது இன்பத்தைக் கொடுக்கும் பொருள்களோடு ஒட்டிக்கொள்ளுதல், வினைப்பயன் கன்மபலன், இயல்பு, இயற்கை, பெரும்பேறு, நிர்வாணம். இவற்றை என்பது நான்கு வாய்மைகளையும் பன்னிரு நிதானங்களையும்.

" விலங்கும் நரகரும் பேய்களும் ஆக்கும்
கலங்க ஞர்தீவினை கடிமின் "

(மணி. 25, 40)

விலங்குகளும் நரகரும் பேய்களும் ஆகின்ற கலங்குதற்குக் காரணமாகிய துன்பத்தையுண்டாக்கும் கொலை முதலிய பத்துவகையினதாகிய பாவத்தை ஒழிமின். தசசீலமாவன: கொல்லாமை, பொய்சொல்லாமை, களவின்மை, காமமின்மை, இரவாமை, உயர்ந்த இருக்கையினிருத்தல், கிடத்தலின்மை, சந்தனம், மாலை முதலியன தரியாமை, பொன் வெள்ளிகளைத் தீண்டாமை, பாடலாடல் விரும்பாமை, உதயத்திற்கு முன்பு புசியாமை என்பன.

" கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவு மென்றுர வோர் துறந்தவை "
(மணி. 24, 77–78)

ஒரு பிறப்பில் உற்ற சாபத்திஞல் மறுபிறப்பில் அவகதி நேரிடும் என்பது அவர்களது பிறிதொரு கொள்கை. கண்ணகி தனக்கு நேர்ந்ததை,

" இட்ட சாபங் கட்டிய தாகும்
உம்மை விஜனவந் துருத்தல் ஒழியாதெனும்
சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
மேற்செய் நல்விஜனயில் விண்ணவர்ச் சென்றேம்
அவ்விஜன யிறுதியி னடுசினப் பாவம்
எவ்வகை யானு மெய்துதல் ஒழியா
தும்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்
பியாங்கணு மிருவிஜன யுய்த்துமைப் போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்து முழல்வோம்."

இவண் ஒவ்வொரு புத்தத் துறவியும் எனக் கூறியது காண்க. பிக்குணி மேற்கொள்ள வேண்டிய கருமமும் பின் வருமாறு கூறப்பட்டது.

" துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம் பொருந்தி வந்தருளித்
தீதறு நால்வகை வாய்மையுந் தெரிந்து
பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமும்
அந்நிலை யெல்லாம் அழிவுறு வகையும்
இற்றென இயம்பிக் குற்றவீ டெய்தி
எண்ணரும் சக்கர வாளம் எங்கணும்
அண்ணல் அருங்கதிர் விரிக்கும் காலைப்
பைந்தொடி தந்தை யுடனே பகவன்
இந்திர விகாரம் ஏழுமேத் துதலிற்
றுன்பக் கதியிற் றேற்றர வின்றி
யன்புறு மனத்தோ டவனறங் கேட்டுத்
துறவி யுள்ளம் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றிய மாகவும்
அத்திற மாயினும் அநேக காலம்
எத்திறத் தார்க்கும் அருந்திறம் செய்குவம் "
(மணி. 26.46)

புத்த தேவனது ஆயிரக்கணக்கான பெயர்களுள் இந் நூலில் வழங்கும் பெயர்கள் அறவாழியாள்வோன், ஆதி முதல்வன், ஆதிமுனிவன், இயல் குணன், உரகர் துயரம் ஒழிப்போன், கண் பிறர்க்களிக்கும் கண்ணோன், சினேந் திரன், தயாவீரன், தீமொழிக்கடைத்த செவியோன், பிறவிப்பிணி மருத்துவன், போதித் தலைவன், மாரனை வென்ற வீரன், முழுதுமுணர்ந்தோன் முதலியன.

இந்நூலாலறியப்படும் பல சரித்திர நிகழ்ச்சிகளும், புராண வரலாறுகளும் உண்டு. சம்பு என்பவள் சம்புத் தீவத்தெய்வம் என்பதும், அவள் பூமிதேவிக்கு அரக்கரால் நேர்ந்த துன்பத்தைப் போக்குவான் நாவல் மரத்தின் கீழே நின்று தவம் புரிந்ததும், கவந்தன் என்னும் சோழ னது வேண்டுகோட்கிணங்கி அகத்திய முனிவர் தமது கமண்டலத்திலிருந்த காவிரியைப் பெருகச் செய்ததும், அகத்திய முனிவர் கட்டளையின்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழன் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனுக்கு விழாச் செய்ததும், கண்ணகி மதுரைப் பதியை அழித்ததும், கதிரோன் கிரணத்தால் சிறையிழந்த சம்பாதி புகார் நகரத்தைச் சார்ந்த ஒரு வனத்தில் இருந்தமையால் அவ்வனம் சம்பாதிவனம் என்று பெயர் பெற்றதும், அருச்சுனன் பேடி வடிவங் கொண்டு விராடநகரம் சென்றதும், கரிகாற்பெருவளத் தான் முதுமை வேடம் பூண்டு வழக்குத் தீர்த்ததும், பல முனிவர்களின் பிறப்புவரலாறும், பிரச்சோதனனாற் சிறை வைக்கப்பட்ட உதயணனைச் சிறைமீட்டற்கு யூகிஎன்பவன் வேறு வடிவம்கொண்டு சென்றதும், அணைகட்டும்பொருட் டுக் குரங்குப்படைகள் மலைகளைக் கொணர்ந்து கடலில் போட்டதும், அகலிகையை விழைந்த இந்திரன் கௌதம முனிவருடைய சாபத்தால் ஆயிரங்கண் பெற்றதும், திருமால் குறளுருவங்கொண்டு மாவலிபாலிரந்து பின்பு பேருருவெய்தி அடியிற் படியை அடக்கியதும், பரசுராமர் அரசரது பரம்பரைகளை வேரறுத்ததும், மனுநீதிச் சோழன் தன் மகன் மார்பில் தேர்க்காலைச் செலுத்தி

முறை செய்ததும், தேவகணிகையர் நூற்றிருபத்தொருவர் பூம்புகார் நகரில் மானிடக் கணிகையர் மரபில் முன்பு பிறந்தார்கள் என்பதும், கற்பின் மிக்க நீலி என்பவள், சாபத்தால் கோவிலில் கொலையுண்டிறந்தாள் என்பதும், சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் படிமஞ்சமைத்தற்கு வடநாட்டரசர்களை வென்று இமயமலையிலிருந்து கற் கொணர்ந்ததும் பிறவுமாம். இவ்வரலாறுகளில் பல தமிழ் நாட்டு வரலாறுகளே. அவற்றை நன்குணர்ந்த மணி மேகலையாசிரியர் வேண்டுமிடங்களில் அவைகளை எடுத்து வழங்கியுள்ளார்.

புத்தர்பிரான் சரித்திரக் குறிப்புக்களாக இந்நூலிற் காணப்படுவன சில உண்டு. 11-வது காதையில் "கண் பிறர்க்கருளும் கண்ணோய்" என்று புத்தர்பிரான் புகழப் படுகின்றார். இங்கே பலர்க்கும் தமது அரிய அறஉரையால் ஞானக்கண் அளித்தோன் என்று கொள்ளலாம். ஆயினும் உலக உபகாரத்திற்காகப் புத்தர் எடுத்த பல பிறப்புக்களுள், ஒன்றில் இவன் கொடையைப் பரிசோதிக்க எண்ணி, இந்திரன் போந்து இரண்டு கண்களையும் கேட்டபொழுது இவன் அவற்றைக் கொடுத்த வரலாற்றையும் இது குறிக்கும் என்பர். 24-வது காதை 46-வது வரியில்,

> "நிலத்திற் குளித்து, நெடுவிசும் பேறிச்
> சலத்திற் றிரியுமோர் சாரணன்"

என்ற வரிகளின் அரும்பதவுரையில் "தனது தந்தையாகிய சுத்தோதனனுக்கு ஞானமுண்டாக்குதற்பொருட்டு நிலத்திற் குளித்தல் முதலிய பல அற்புதங்களைப் புத்தன் காட்டினன் என்ற புத்த சரித வரலாறு கூறப்படுகிறது. மற்றும்,

> "பெரியோன் பிடகநெறி" (26, 66)

என்று புத்தர் அருளிச் செய்த ஆகமங்களின் வழிகள் கூறப்பட்டுள்ளன. புத்த கன்ம சங்கம் என்னும் மும்மணி

களும் இருத்தற்கிடமாய்க் கூடைபோறலின், பௌத்தாகமங்கள் பிடகம் எனப்படும். இவற்றின் உட்பிரிவுகள் பலவுண்டென்பர். புத்தன் என்பது முழுதுணர்ந்தோனாகிய தேவனைக் குறிக்கும். தருமம் அவன் கூறிய அறங்கள், சங்கம் என்பது பௌத்தத் துறவிகளின் கூட்டம். இதில் துறவு பூண்ட இருபாலாரும் கலத்தலின்றித் தனித்தனி இடங்களில் இருத்தல் வேண்டும் என்பதும், அவர்களில் பிக்ஷுக்களுக்குப் பிக்ஷுணிகள் அடங்கி நடத்தல் வேண்டும் என்றும் கூறுப. "புத்தன் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, ஸங்கம் சரணம் கச்சாமி" என்பனவற்றை மூன்று முறை ஜபித்து மூன்று முறை பணிதல் மும்மையின் வணங்கல் எனப்படும். புத்தரது பழம் பிறப்புக்களை முறையே கூறும் நூல் புத்த ஜாதகங்கள். கருணையாற் புத்தர் பல பிறப்புக்களை யெடுத்தனர். என்ப. இதனை,

"வானுடும் பரியாயு மரிண மாயும்
வன்கேழற் களிறுயு மென்காற் புண்மான்
றானும் பணையெருமை யொருத்த லாயும்
தடக்கையிளங் களிறும் சடங்க மாயும்
மீனுயு முயலாயு மாமை யாயும்
மயிலாயும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க
மானுயுங் கொலைகளவு கட்பொய் காமம்
வரைந்த வர்தா முறைந்தபதி மானுவூரே"

என்ற நீலகேசித் தெருட்டானறியலாம். புத்தர்பிரான் தான் உயிர்த்திருத்தல் தனக்கென நினையாமல், தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனுகி விளங்கியவர் என்பதை,

"முன்றுன் பெருமைக்க ணின்றுன் முடிவெய்துகாறு
நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் தனக்கென்
றென்றுனு முள்ளான் பிறர்க்கே யுறுதிக் குழந்தான்
நன்றே யிறைவன் அவன்றுள் சரணங்க ளன்றே"

என்ற குண்டலகேசியானுணரலாம்.

"இருட்பார விணைநீக்கி யெவ்வுயிர்க்கும் காவலென
வருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவு

மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் றிருமேனி.''

'' தீதியல் புலியது பசிகெடு வகைநின
திருவுரு வருளிய திறமலி பெருமையை ''

என்றவீரசோழியவரிகளும் இவ்வுண்மையை வலிறுத்தும்.

## புத்த பீடிகை

அருளுமன்பும் ஆருயிரோம்பும் ஒருபெரு மேற்கோளும் என்றும் நீங்காத பகவானுன புத்தரது ஆணையிற் பல மரங்களும் மலரும்படியான உவவனம்என்பது பூம்புகாரில் உள்ள ஓர் பூஞ்சோலை. அதனகத்துத் தன் ஓசை அறை போகாமல் தன்னைச் சார்ந்தார் உடலை மட்டும் புறத்தே தோற்றுவிக்கும் பளிக்கு மண்டபம் ஒன்றுண்டு. அதனுள்ளே '' தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த தாமரைப் பீடிகை ஒன்றுண்டு. அதன்மேல் இடும் அரும்புகள் மலரும். மலர்ந்த மலர்கள் வாடா. அவை தெய்வத்தன்மையுடையன ஆகலின் அவற்றில் வண்டினம் மொய்ப்பதில்லை. முறைமையால் நியமம் பூண்டு ஓர் தெய்வத்தை மனத்திற் கருதி ஆதிதேவருடைய அடியின் பொருட்டு அம்மலரை அப்பீடத்தே இட்டால் அம்மலர் அத்தேவருடைய அடியைச் சென்றடையும். ஒரு நினைப்புமின்றியிடின் அம்மலர் அவ்விடத்திலேயே கிடக்கும். இஃது மனமில்லாத வழியும் அறமும் பாவமும் உளவாகும் என்று பகர்கின்ற கடுந்திறலையுடைய விரதிகள் வருத்தம் எய்தவும், மனமின்ருயின் அறமும் மறமும் சிறிதும் உளவாகா வென்று கூறுவோர்க்கு அடையாளமாகவும், பயனைக் குறிக்கும் மலரையிட்டுக் காட்ட மயன் என்னும் தேவ சிற்பியால் பண்டை நாளில் இழைக்கப்பட்டது. பௌத்தரில் இருத்தி பெற்ருேர் அதாவது அட்டமாசித்திகளிலும் வல்லவர், ஆகாய வழியே சென்று ஆங்காங்கிறங்கிப் புத்தனுடைய பாதபீடிகை முதலியவற்றைத் தரிசித்தலும், பரிபக்குவமுற்ருர்க்கு அறமுரைத்தலும், ஏனையோர்க்கு எண்ணியவற்றை யளித்தலும் மரபு. இத்தன்மையர்

சாரணர் என்றும் வழங்கப்படுவர். இந்திரன் ஏவலாற் புத்தர்பிரானுடைய பாதபீடிகையைப் பாதுகாத்துக் கொண்டு மணிபல்லவத் தீவிலிருந்தவள் தீவதிலகை என்பவள். இதனைத் தேவர்கோனிட்ட மாமணிப்பீடிகை என்பர் மணிமேகலை ஆசிரியர்.

இனிப் புத்தர் பலர் முன்பு அவதரித்தனர் என்றும், அவர்கள் இருபத்துமூவர் என்று சிலரும், இருபத்தெழுவர் எனச் சிலரும் கூறுவர். அவர் எடுத்த பல பிறவிகளும், பிறவுயிர்கள்மாட்டு எழுந்த கருணையால் என்று கூறும்.

### சமய வாதங்கள்

மணிமேகலை முதற்கண் தருக்கவாதியை அவனது மதக்கொள்கையைக் கூறுமாறு கேட்டாள். அவன் தான் வைதிக மதத்தவன் என்றும், வேதவியாசர், கிருதகோடி, ஜைமினி என்ற மூவரும் இதன் ஆசிரியர் என்றும், அவர்கள் அநுசரிக்கும் பிரமாணங்கள் முறையே 10, 8, 6 என்றும், அதில் பிரத்தியக்ஷம் ஐந்து வகைப்படும் என்றும், அதாவது ஞானேந்திரியங்களினால் உணரப்படுபவை என்றும் கூறிப் பின்னர் பலவகைப் பிரமாணங்களைப்பற்றிப் பேசினன். பின்னர் உலோகாயதன், சைவன், பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி என்ற இவர்கள் கூற்றையும்கேட்டு, அவர்களின் கொள்கைகளை முறையே மறுத்தனள். முடிவாக ஆசீவகர் மற்கலி என்பவர் தங்கள் கடவுள் என்றும், அவர் அநந்த ஞானமுடையவர் என்றும், நவகதிர் என்ற தங்களது வேத நூலில் ஐந்து விஷயங்கள் கூறப்பட்டுள்ளனவென்றும், சீவன் நால்வகை அணுக்களுடன் கலந்து வளர்கின்றதென்றும், நிலம், நீர், தீ, வளி என்ற நான்கு அணுக்களும் ஒன்றோடொன்று கலப்பதால் மலை, மரம் முதலிய எல்லாம் உண்டாகின்றன என்றும், இந்த அணுக்களுக்கு ஆதியந்தமில்லை என்றும், இவைகளைப் பிரிக்க இயலாது என்றும், இந்த அணுக்களே பஞ்ச பூதங்களாக மாறும் என்றும், இத்தன்மைகள் யாவும் தெய்வீக உணர்ச்சியுள்ள ஞானி

களால்தான் அறிய முடியும் என்றும், பக்குவமில்லாதவர் பூதங்களின் சேர்க்கைத் திறத்தை அறியமுடியாமல் மயங்குவர் என்றும், மக்கள் கரும் பிறப்பு முதலிய அறுவகைப் பிறப்பும் பிறந்து பின்னர் நிர்வாணம் எய்துவர் என்றும், அவனவன் செய்த புண்ணிய பாவங்கள் பல பிறப்புக்களிலும் தொடரும் என்றும், வினையை வெல்ல முடியாது என்றும் கூறியமர்ந்தான்.

மணிமேகலை முழுதுங் கேட்டாள். ஆசீவகன் கொள்கைகளை அவள் ஏற்க முடியவில்லை. பிறகு அவள் நிகண்ட வாதியைக் கண்டு அவனுடன் வாதித்தாள்.

## குண்டலகேசி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய நீலகேசி என்னும் சமண சமய நூலாற் கண்டிக்கப்பட்ட இந்நூல் இறந்துபட்ட ஐம்பெருங்காப்பியங்கள் இரண்டில் ஒன்றென்ப. இது கொண்டு இதனைப் பௌத்த சமய நூல் என்று கொள்ளலாம். நீலகேசி உரையாசிரியர் இவளைப்பற்றிப் பின்வருமாறு கூறுவர்.

" குண்டலகேசி என்பாள் ஓர் வைசிய கன்னிகை. இவள் ஓர் நாள் பிராஸாத ஸ்தலத்து விளையாடுகின்றாளாக ஒரு வைசிய புத்திரன் காளன் என்பான், பௌத்த தரிசனம் கொண்டு, பலவழியும் சோர விருத்தி பண்ணிச் செல்வானை, அரசன் வதிக்கவென் றேவிச் சிறைப்பட்டுப் போகின்றானை, முன் சொன்ன குண்டலகேசி கண்டு காம பரவசையாக, அதனை யறிந்து அவளுடைய பிதா ராஜாவைக் கண்டு யாதானும் ஓர் உபாயத்தால் மீட்டு இவனுக்குக் குண்டலகேசியென்னும் கன்னியினை விவாகவிதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து ஓர் நாள் பிரளய கலகத்து நர்மோக்தி முகத்தால் நீகள்வனன்றோ என்று குண்டலகேசி சொல்லக் காளனும், தன்னுள்ளத்தே சினங்கொண்டு பின்பொரு நாள் வித்யாசாத வியாஜத்தால் இவளைத் தனிக்கொண்டு ஒரு பர்வதத்தேறி "நீ

என்னை யிவ்வாறு சொல்லுதலில் யானுன்னைக் கொல்லத் துணிந்தேன் எனக் குண்டலகேசியும் "தற்கொல்லியை முற்கொல்லி யென்பதன்றே, இவனை யான் கொல்வேன்" என நினைந்து "யான் சாகிறேனாகி நும்மை வலங்கொண்டு சாவல்" என அதற்கிசைந்த காளனை வலங்கொள்கின் ருள், வரையினின்றும் வீழ நூக்கினள். நூக்கக் காளனும் புத்த ஸ்மரணத்தால் மோட்சித்தனன். குண்டலகேசியும் பர்த்ருவிரஹ துக்கிதையாகித் துறப்பன் என நினைந்து பரசமயங்கள் எல்லாம் நாவல் நட்டு ஜயித்துப் பௌத் தர்கணம் கொண்டு முத்தி பெற்றனள்.[1]

இப்பகுதி நீலகேசியில் கண்ட மணிப் பிரவாளத்தியன்ற குண்டலகேசி வரலாறு. இக்கதைக்கு மூலப்பிரமாணம் மூன்று நூல்கள். அவை புத்த கோஷர் தம் பதவுரையில் கூறிய வரலாறு, தர்மபாலர் தம் தேரிகதாவுரையில் கூறிய கதை முதலியன. இவ்வரலாறுகளும் குண்டல கேசியைப்பற்றிப் பலவிதமாகக் கூறுகின்றன. தர்ம பாலர் கூறியபடி குண்டலகேசி காதல் கொண்ட கள்வன் ஒரு புரோஹிதன் புதல்வன் ஆவான். புத்தகோஷர் வரலாற்றின்படி அவன் ஓர் வைசியன். பௌத்த நூல்கள் அவளது அணிகட்காக அவள் கணவன் கொல்லக் கருதி ணன் என்று கூறும். புத்த கோஷர் அவள் கணவன் கொல் லப்பட்டவுடன், புத்த மதத்தை நேராகத் தழுவினதாகக் கூறுவர். தர்மபாலர், அவள் சமணத் துறவியாகிப் பின்னர் புத்த பிக்குணியானாள் என்பர். மேலும் தென்னாட்டு நாத குத்தருடன் வாதிட்டுத் தோற்றுப் பௌத்த சமயத்தைத் தழுவினதாகவும் கூறுவர். (செந்தமிழ் 40 தொகுதி).

குண்டலகேசிஎன்பாள் பௌத்தபிக்குணிகளுள் ஒருத்தி. ராஜகிருகத்தில் அரசகுடும்பத்திற் பிறந்தவள். அவளது இயற்பெயர் பத்திரை. ஒரு நாள் அரண்மனைச் சாளரத் தின் வழியாகத் தெருவை நோக்கும்போது சத்துகன்

---

1. நீலகேசி. ஸ்ரீ சக்கிரவர்த்தி நயினர் பதிப்பு.

என்ற ஒருவன் கைதிசெய்யப்பட்டுக் கொலைக்களத்திற்கு அழைத்துச்செல்லப்படுவதைக் கண்டாள். அவனைக் கண்டவுடனே அவளுக்கு அவன் மீது காதல் உண்டாயிற்று. அவனை மணக்க எண்ணிப் பெருநிதி கொடுத்து, அவனை மீட்டு அவனையே மணந்துகொண்டாள். ஒருநாள் அவர்கட்குள் சண்டை உண்டாயிற்று. உடனே சத்துகன் அவளது அணிகளைக் கவர்ந்துசெல்லஎண்ணித் தான் ஓர் மலைச்சிகரத்திலிருந்து காளிக்குச் செய்யவேண்டிய பலிக்கடன் உண்டென்று கூறி, அவளையும் ஒரு காட்டு வழியே அழைத்துச் சென்றான். மலைச்சிகரம் வந்தவுடன் அவளிடம் அவன் தனது கொடிய கருத்தை உரைத்தான். தன்னைக் கொல்ல நினைந்தான் என்று கண்ட பத்திரை, அவனை நோக்கித் தான் கடைசிமுறையாக அவனைப் பிரதட்சிணம் செய்யவேண்டும் என்று வேண்டினாள். அவன் அதற்கிணங்கவே அவள் பின்புறம் சென்று அவனைக் கீழே தள்ளி விட்டாள். பின்னர் அவள் தன் ஊர்க்குச் செல்ல விரும்பவில்லை. நிக்ரந்தக் கோட்டியிற் சேர்ந்தாள். அவள் தலைமயிர் பறிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் வளர்ந்தபோது சுருள் சுருளாக வளர்ந்தமையின் அவள் குண்டலகேசி என வழங்கப்பட்டாள். நிகண்ட வாதிகளின் கொள்கைகளை யறிந்து, பின்னர் பல சமயங்களையும் ஆராய்ந்து கையில் ஓர் நாவல் மரக் கிளையைக் கொண்டு சென்று அதனை ஊர்தோறும் ஊன்றிப் பிறரை வாதுக்கழைத்தாள்.[1] வெற்றிபெற்றவர் நாவலோ நாவல் என்று கூவுவதுண்டு. இந்தப் பரதகண்டத்துக்கே நாவலம் தீவு என்று ஒரு பெயர் உண்டு. இமயமலையின் வடக்கே ஓர் நாவல்மரம் உண்டெனப் புராணம் கூறும். இவ்வாறு வாதம் புரிந்துகொண்டு சிராவஸ்தியடைந்து அங்கே சாரிபுத்தர் என்ற பிக்குவுக்குத் தோற்றுப் பௌத்த மதப் பிக்குணியானாள் இந்த வரலாறு பாலி கதையில் காணப்படும்.

---

1. அக்காலத்தில் சமயவாதம் செய்வோர், ஒரு நாவற் கிளையை ஓரூரில் ஊன்றி வாதுக்கழைப்பது வழக்கம். எதிர் வாதம் புரிவோர், வாதத்தில் வெற்றி பெற்றுத்தான் அக்கிளையைப் பிடுங்க வேண்டும்.

பாஞ்சால தேசத்தில் புண்டரவர்த்தனம் என்ற நகரில் சமுத்திரசாரன் என்ெருரு மன்னன் இருந்தான். அந்த ஊர்ப்புறத்தில் ஒரு நன்காடு உண்டு. அங்கே ஓர் காளி கோயில் அருகில் முனிசந்திரன் என்ற ஓர் சமண முனிவர் வதிந்து வந்தார். ஒருநாள் பல மக்கள் அந்தக் காளிக்குப் பலியிட வந்தனர். கொல்லாமை விரதத்தை மேற்கொண் டொழுகும் முனிவர் அவர்களது கொடிய முயற்சிக்கு வருந்திப் பிறப்புக்குக் காரணம் அநாதியான கருமமே என்றும் கடவுளுக்கும் அதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை யென்றும் கொல்லுதல் பாவம் என்றும், அப்படி அவசியம் பலியிட வேண்டும் எனின் "மாவினுல் உருவம் செய்து அதனைப் பலியிடலாம் என்றும் சொல்ல, அம் மக்கள் அந்நல்லுரைகளைக் கேட்டுப் பலியிடாமல் சென் றனர்." தனக்குச் சேர வேண்டிய பலிகளை விலக்கிய முனிவனைப் பழிவாங்கக்கருதிக் காளி நீலகேசியை அழைக்க அவளும் உதவிபுரிவதாக இணங்கினுள். உடனே முனிசந்திரற்குத் தோற்று அவரிடம் சமண மத உண்மைகளை யறிந்தாள். பிறகு குண்டலகேசி என்பவள் பௌத்த மதத்தைப் பரப்புவதற்குப் பல இடங்களிலும் செல்வதைத் தனது ஞானக்கண்ணுல் உணர்ந்து அவ ளிருந்த சம்பரி நகர் சென்ருள். குண்டலகேசியை வாதத் திற்கழைத்தாள். இருவரும் வாதம் புரிந்தனர். முடிவிற் குண்டலகேசி தோற்ருள் என்பது வரலாறு. திருஞான சம்பந்தர் வரலாற்றில், அவரது சீடராற் சபிக்கப்பட்டு இறந்த ஓர் சாரிபுத்தரைப்பற்றிப் பெரியபுராணம் கூறும். இந்தச் சாரிபுத்தரும் மேலே குறிக்கப்பட்ட சாரி புத்தரும் ஒருவரோ வேருே தெரியவில்லை.

நிற்க, சித்தாந்தத் தொகை என்ற ஓர் நூலின் பெயர் மட்டும் உரைகளிற் காணப்படுகின்றது. ஒன்றிரண்டு செய்யுட்கள் சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரையகத்தில் காணப்படும். திருப்பதிகம் என்ற ஓர் அரிய நூல் ஒன்றிருந்ததாகச் சித்தியார் உரைகொண்டு அறிகின்ருேம்.

**விம்பசார கதை**

நீலகேசி உரையாசிரியர் இந்நூலிலிருந்து சில அடிகளை மேற்கோள்காட்டி, 'இதுவிம்பசாரகதை' என்று எழுதுவர். சிவஞானசித்தியார் உரையிலும் ஞானப்பிரகாசர் இவ் வடிகளை எடுத்துக்காட்டுவர். புத்தர் காலத்திருந்தவனும், அவரை ஆதரித்தவனுமான விம்பசாரன் என்னும் மன்ன னது வரலாற்றைக் கூறும் இக்காவியம் என்பர்.

விம்பசாரன் என்பவன் கி.மு. 540-முதல் 490-வரை யில் அரசாண்ட ஓர் மகத மன்னன். ஒரு நாள் சித்தார்த் தரை அவர் புத்தராவதற்கு முன் தன் அரண்மனையில் வந்திருக்குமாறு வேண்டினன். அவர் துன்பத்தை நீக்கும் வழி அறிவதற்காகத் தாம் ஏகுவதாகவும் தமது எண்ணம் நிறைவேறியவுடன் வருவதாகவும் சொல்லிச்சென்றார். சொல்லியவண்ணமே தமது சீடர்களுடன் வந்து விம்ப சாரனது அரண்மனையிற்றங்கினார். புத்தரைக்கண்டு வணங்கி அவரிடம் உபதேசம் பெற்று அரசன் புத்த மதத் தைத் தழுவினான். அரசன் தான் இறக்கும்வரையில், புத்தருக்கும் அவரது சீடருக்கும் வேண்டிய உதவிகளைப் புரிந்தான். புத்தர் மைத்துனன் தேவதத்தன் என்பவன் புத்தர்மீது பொறாமை கொண்டு அவரையும் அவருக்கு உதவியாக நின்றவிம்பசாரனையும் கொலைசெய்யத் துணிந் தான். துணிந்து விம்பசாரன் மகனை அஜாதசத்துரு வென்பவனைத் தன் வயமாக்கிக்கொண்டு, அரசனைக் கொல்லுமாறும், புத்தசங்கத் தலைமையைத் தனக்களிக்கு மாறும் வேண்டினன். அஜாதசத்துருவும் உடன்பட்டார். தேவதத்தன் சிலரை ஏவி, புத்தர்மீது அம்பெய்யுமாறு பணித்தான். ஆனால் புத்தரது தவவன்மையால், அவ் வம்புகள் அவரை ஒன்றும் ஊறுபடுத்தக் கூடவில்லை. ஒரு சமயம் அவர் நடந்து செல்லும்போது பெரும் பாறைகளை மலைமீதிருந்து அவர்மேல் உருட்டினான். அவற்றால் அவர் காலிற் சிறிது காயம் ஏற்பட்டது. பின்னர் இரு மதங் கொண்ட யானைகளை ஏவிக்கொல்லுமாறு செய்தான். அவை, அப்பர் சுவாமிகளைக்கண்ட வேழம்போன்று

அவரைப் பணிந்து அப்புறம் சென்றன.

நிற்க, தன் தந்தையைக் கொல்லத் துணிந்த அஜாத சத்துரு தந்தையைச் சிறையிலிட்டு, அரசன் மனைவி தவிரச் சிறைக்கூடத்திற்கு எவரும் செல்லக்கூடாது என்று பணித்தான். அரசன் மனைவி பிறரறியாதபடி தன் கணவனுக்கு உணவுதவிவந்தாள். முன்றானைத் தலைப்பில் அவள் உணவு கொண்டு செல்வதைக் கண்டு, காவலாளர் தடுக்கத் தன் தலை மயிரில் ஒளித்துவைத்து உணவுதவினாள். இதனையும் கண்டு அவர்கள் தடுக்க நான்கு இனிப்புவகைகளைப் பூசிக்கொண்டு அரசனிடம் சென்றாள். அரசன் அவ்வினிப்புக்களை நக்கி உயிர் வாழ்ந் தான். இதுவும் கண்டு பிடிக்கப்பட்டபோது, அரசி அரசனைப் பார்க்கக்கூடாது என்ற கட்டளை எழுந்தது. முடிவில் விம்பசாரன் அவன் மகனாலேயே கொல்லப்பட்டு உயிர் துறந்தான்.

நாளடைவில் அஜாத சத்துருவிற்கு ஓர் மகன் பிறந் தான். தந்தைக்குத் தனயன்மீது ஆராத காதல் எழுந்தது. உடனே தன்னால் கொல்லப்பட்ட தந்தையும் தன்னை அப் படித் தானே நேசித்திருக்க வேண்டும் என்று எண்ணி வருந்தினான். இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த காப்பியமே விம்பசார கதையென்ப. இஃது ஆசிரியப்பாவின் இயன்ற ஓர் நூல் என்று கூறுவர்.

### வளையாபதி

இதுவும் ஐம்பெருங் காப்பியத்துள் ஒன்றென்பர். இந் நூலும் இப்பொழுது கிடைக்கவில்லை. இதனைப் புத்த நூல் என்று சிலரும், சமண நூல் என்று சிலரும் கூறுவர். ஆனால் உறுதியாக எச்சமய நூல் என்று கூறற்கில்லை. இந்நூலிலிருந்து சில செய்யுட்கள் புறத்திரட்டிற் சேர்க் கப்பட்டுள்ளன. இச்செய்யுட்கள் சிறந்த அறங்களையே வற்புறுத்திச் செல்வன. இவற்றினின்று இந் நூல் பௌத்தம் என்று துணிதற்கில்லை. சில செய்யுட்கள்

இங்கே தரப்பெற்றுள்ளன.

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்ருர்க் குடம்புமிகை யிவையுள் வழிப்
பற்ரு வினையாய்ப் பலபல யோனிகள்
அற்ரு யுழலு மறுத்தற் கரிதே"

"பொறையிலா அறிவு போகப் புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனசவாவி, துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை, கல்வி நலமிலாப் புலமை, நன்னர்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே"

இவற்றுள் முதற்செய்யுளின் முதலிரண்டடிகள் திருக்குறள் அடிகள் என்று யாவரும் அறிவர். அடுத்த செய்யுளில் உள்ள துகிலிலாக் கோலத் தூய்மை என்ற தொடர் கொண்டே, இந்நூல் சமண நூல் அன்று என்று கொள்ளலாம். ஏனெனில் அவர்களில் திகம்பரர் என்ற பெரும் பகுப்பு உண்டு.

"தொழு மகனுயினும் துற்றுடை யானைப்
பழுமரம் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தால்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போல"

இச்செய்யுள்,

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர் புடையேம் என்பார் சிலர்"

என்ற நாலடிச் செய்யுளை நினைவூட்டுகின்றது.

இனி புத்தருக்குரிய பல திருப்பெயர்களுள் சாத்தன் என்பதும் ஒன்ருகும். சாத்தன், கொற்றன், என்னும் பெயர்கள் பழைய உரைகளில் உதாரணம் கூறுமிடத்து வழங்கக் காணலாம். இது சாஸ்தா என்ற வடமொழித் திரிபென்பர் அறிஞர். மணிமேகலை ஆசிரியர்க்குத் தண்டமிழ்ச் சாத்தன் என்ற பெயருண்டு. "சொன்னவித்

தொழில்கள் என்ன காரணம் தோற்றவென்னில், முன்ன வன் விளையாட்டென்று மொழியலாம்'' என்ற சிவஞான சித்தியார் பாசுரத்தின் உரையில் "விளையாட்டு என்பது சிறுவர் விளையாட்டன்று, ஐங்கலம் நெல் சுமப்பது சாத் தற்கெளிதென்றாற் போலக் கொள்க'' என்றெழுதினர் சிவஞானமுனிவர். கோவலன் தந்தையாகிய மாசாத்து வான் என்ற பெயரும் மகாசாத்தன் திரிபு என்பர். மற்றும், கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், வடமவண்ணக்கர் பெருஞ்சாத்தனார். பெருந்தலைச் சாத்தனார் முதலிய சங்கப் புலவர்களும், பௌத்தராக இருந்திருத்தல் கூடும் என்பர் மயிலைச் சீனி. வெங்கடசாமி என்பார். ஆனால் அவர் பாடல்களிற் பௌத்தமதக் குறிப்புகள் ஒன்றும் காண்டற்கில்லை. சாஸ்தாகுடி முதலிய ஊர்கள் துளுவநாட்டில் உண் டென்றும், இன்றும் மலையாளத்தில் பல சாத்தர் கோயில் கள் உண்டென்றும், இவை முதலில் பௌத்தக் கோயில்க ளாக இருந்திருக்கக் கூடுமென்றும் இப்பொழுது மலையா ளத்தார் பெரிதும் போற்றுகின்ற "ஐயப்பன்'' சாத்தனே என்றும், புத்தராகிய சாத்தனாரைத் திருமாலுக்கும் சிவ னுக்கும் பிறந்த மகன் என்று சைவர் கூறுவர் என்றும், சீனி. வெங்கடசாமி கூறுவர் "சாத்தனை மகனாக வைத்தார்'' என்று அப்பர் சுவாமிகள், சாத்தனைச் சிவனார் மகனாகவே குறித்தார். இந்தச் சாத்தனார் ஐயனார் என்னும் பெயரால் கிராமங்களில் வழிபடப்பெறுவர்.

இனி, சாத்தன் அல்லது சாஸ்தா என்பதற்குச் சகல சாத்திரங்களையும் ஐயம் திரிபற ஓதி உணர்ந்தவன் என்பது "பாசண்டச் சாத்தன்'' என்னும் தொடர்க்கு அடியார்க்கு நல்லார் எழுதும் உரைக் குறிப்பால் உணரப் படும். அக் குறிப்புப் பின் வருமாறு:—

"பாசண்டம் தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவை. இவற்றிற்கு முதலாயுள்ள சாத்திரங் களைப் பயின்றவனாகலின் மகாசாத்திரன் என்பது அவ

னுக்குப் பெயராயிற்று" என்பது. புத்தரை "நண்ணிய கலைகட்கெல்லாம் நாதன்" என்று சூடாமணி நிகண்டு கூறும். திவாகரமும் "அருங்கலைநாதன்" என்று கூறுவது காண்க. மற்றும் ஓர் அரிய செய்தியைச் சீனி. வெங்கிடசாமி தமது "பௌத்தமும் தமிழும்" என்ற நூலிற் குறித்துள்ளனர். அஃது யாதெனில் கச்சிக் காமாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள புத்தர் சிலை சாஸ்தா என்று வழங்கப் படுவதுதான். காமக்கோட்டப் பிரபாவத்தில் சாஸ்தா காமாட்சியம்மனது மகவாகவே கூறப்பட்டுள்ளது என்று அந்த அறிஞர் கூறுவர். இன்னும், தருமராசர் கோயில்களும் புத்தர் கோயில்களே என்றும், தாராதேவி, மங்களாதேவி, சிந்தாதேவி முதலான பௌத்த தெய்வங்களின் கோயில்களும் நாளடைவில் இந்துக்கோயில்களாக மாறிவிட்டன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். தாராதேவி கோயிலை இப்பொழுது துரௌபதை கோயில் என வழங்குவர்.

இனி, சிவபெருமான் அகத்தியர்க்குத் தமிழறிவுறுத்ததாக நூல்கள் கூறும். பௌத்த நூலிலும், அவலோகிதர் என்பார் அகத்தியருக்குத் தமிழ் உபதேசித்ததாகக் கூறப் பட்டது. புத்த மித்திரனும் இதனை வலியுறுத்துவர்.

> "ஆயும் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு
> ஏயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்"

என்றது காண்க. அகத்தியர் பொதியமலையில் இருப்பதாகக் கூறுவதுபோலவே அவலோகிதரும் இருப்பதாக நூல்கள் கூறும். யுவான்சுவாங்கும் தென்பொதியமலைச் சார்பில் போதிசத்துவரான அவலோகிதர் வாழ்வதாகக் குறித்துள்ளார். இந்தப்பொதிகைமலைதிரிந்து பொடலாகா என வழங்குகிறது. மணிமேகலை அகத்தியரைப்பற்றிக் கூறும். ஆனால் அவலோகிதரைப்பற்றி ஒன்றும் கூற வில்லை. கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டில் பாண்டிநாட்டு மகாயானபுத்தரால் பொதிகைமலையில் அவலோகிதருக்கு ஆலயம் அமைக்கப்பெற்றிருக்கக்கூடும் என்பது அறிஞர் கருத்து. இப்பொழுது அந்த அவலோகி

தர் கோயில் இல்லை. பிறசமயத்தாரால் அழிக்கப்பட்டிருக் கக்கூடும்.

### வீரசோழியம்

புத்த மித்திரர் என்ற பௌத்த முனிவரால் இயற்றப் பட்ட நூல். இவரை ஆதரித்த சோழவரசன் வீரசோழன் பெயர் புனைந்து நிற்பது. அந்த அரசனது ஆட்சிக் காலம் கி. பி. 1078 முதல் 1088 வரை என்ப. நூலாசிரியர் பொன்பற்றி என்னும் ஊரினர். இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் உணர்த்தும் சிறு நூல். இதற்குப் பெருந்தேவனார் உரை யியற்றியுள்ளார். இவர் வேறு, பாரதம் பாடிய பெருந் தேவனார் வேறு.

இந்நூற் பாயிரத்தில்,

"மிக்கவன் போதியின் மேதக்கிருந்தவன்
 மெய்த்தவத்தாற்
றொக்கவன் யார்க்குந்தொடர வொண்ணுதவன்
 தூயனெனத்
தக்கவன் பாதந்தலைமேற் புனைந்து
 தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றிமன்
 புத்தமித்திரனே"

என்று கூறப்படுவது கொண்டு இவ்வாசிரியர் அருகதேவ னிடம் பேரன்பு பூண்டவர் என்பதும் பொன்பற்றியென்ற ஊரில் இருந்தவர் என்பதும் அறியப்படும். மற்றும் இவ் வாசிரியரே,

"நாமே வெழுத்துச்சொ னற்பொருள் யாப்பலங்கார
பாமேவு பஞ்சவதிகார மாம்பரப்பைச் சுருக்கித் [மெனும்
தேமேவிய தொங்கற் றேர்வீரசோழன் திருப்பெயராற்
பூமே லுரைப்பன் வட நூன்மரபும் புகன்று கொண்டே"

என்று கூறுதலின் இந்நூல் ஐந்திலக்கணங்களையும் கூறுவது என்பதும், முன்னூல்களிற் பரந்து கிடந்த இலக்

கணக் கருத்துக்களைச் சுருக்கி வெளியிடுவது என்றும், தானியற்றி யிருப்பினும் தன்னை ஆதரித்த மன்னனாகிய வீரசோழன் பெயரால் இதனை வெளியிடுவதாகவும், தமிழ் மரபு மட்டுமன்றி, வடநூன் மரபும் கலந்து கூறுவதாகவும் அறியப்படும்.

இந்நூல் முதற்கண் சந்திப்படலம் காணப்படும். இரண்டாவது பகுதி சொல்லதிகாரத்தில் வேற்றுமைப் படல முதலாகக் கிரியாபதப் படலம் ஈறாக ஆறு பிரிவுகள் காணப்படும். இறுதியில் பொருள், யாப்பு, அணிகள் காணலாம். கிரியாபதப் படலத்தின் இறுதியில், இவ்வாசிரியர்,

"மதத்திற் பொலியும் வடசொற்கிடப்புந் தமிழ்மரபு
முதத்திற் பொலியேமை சொற்களின் குற்றமுமோங்கு
பதத்திற் சினவு மறிந்தேமுழக்கப் பன்னூருயிரம் [வினைப்
விதத்திற் பொலியும் புகழவலோகிதன் மெய்த்தமிழே"

என்று கூறுவது கொண்டும்,

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்"

என்ற பாயிரங் கொண்டும், அவலோகிதன்பால் அகத்தியர் கேட்டு முத்தமிழிலக்கணமும் செய்தனர் என்பது பெறப்படும். இதனை,

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தமிழ்மொழியை யுலகமெலாம் தொழு
[தேத்தக்
குடமுனிக்கு வற்புறுத்தார்கொல் லேற்றுப்பாகர்"

என்ற செய்யுளோடும், 'அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு' "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" முதலிய சொற்றொடர்களோடும் ஒப்பிட்டு நோக்குங்கால், தமிழ் மொழியின் பழமை தெளியப்படும். இவண் அருகதேவனும், சிவபிரானும் முறையே அகத்தியற்கறிவுறுத்தினர் என்பது உபசார வழக்கு. மொழி, மக்கள் ஆக்கப் பொருளன்றி இறைவனால் உண்டாக்கப்

படுவதன்று என்பது மொழி நூல் வல்லார் கொள்கை. தந்த தமிழ் தந்தான் என்னுமிடத்தும், தமிழ் என்பது தமிழிலக்கணம் என்றுணரற்பாற்று.

## கிறித்துவமும் பௌத்தமும்

ஒவ்வொரு அறிவுடை யுயிரும் மறுவுலகத்தில் தனது உருவைப்பெற்று நிற்குமென்றும், அஃது என்றும் அழியாதென்றும் கருதுப. ஆனல் பௌத்தன், ஆன்மா அழியாதென்று கொண்டாலும், அதற்கு ஓர் முடிவுண்டென்றும், அநேக உருக்களாக மாறி முடிவில் மேகத்தால் ஆழியிலிருந்து இழுக்கப்படும் நீர் பின்னர் ஆறுகளாகவும் சிற்ருறுகளாகவும் மீண்டும் வருவது போன்றும், மலைகளிலிருந்து கடல் அடிக்கு அடித்துச் செல்லப்படும் மணற்றுகள் பின்னர்ப் பாறைகளாகவும், மலைகளாகவும், பரிணமிப்பது போன்றும், தான் எதிலிருந்து தோன்றியதோ அதிலேயே ஒடுங்குமென்றும் கூறுவன்.

## பௌத்தமும் சைவ, வைணவப் பாசுரங்களும்

தமிழ் நாட்டில் பௌத்தம் குன்றியதற்குரிய பல காரணங்களுள் சைவ, வைணவ சமயங்களின் முன்னேற்றமே முக்கியமானது. வேதத்திற்குப் புறம்பான மதம் என்று பௌத்தமும் சமணமும் பலவாருக இழித்துரைக்கப்பட்டன. அந்தச் சமயிகள் பலவாறு ஏசப்பட்டனர். திருஞான சம்பந்தரும், அப்பரும் தமது பதிகங்கடோறும், பௌத்தரையோ, சமணரையோ நிந்தித்துப் பேசியிருக்கின்றனர். சுந்தரரும் பல இடங்களில் அவர்களைப் பழித்துள்ளார்.

> '' பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
> முட்டைக் கட்டுரை '' (தேவா. பக். 1)

> '' வெற்றரை யுழல்வார் துவராடைய வேடத்தார் '' (பக். 3)

> '' முடையுடைய சாக்கியர் '' (சுந்தரர் பக். 17)

> '' ஆதரமனெடு சாக்கியர் தாஞ்சொல்லும்
> பேதைமை கேட்டுப் பிணக்குறுவீர் '' (சம். 83)

"போதியார்கள் பிண்டியார்கள் மீண்டுமொழி
பொருளென்னும் பேதையர்கள்" (தேவா. சம். 49)

"போதியர் பிண்டியர் பொருத்த மில்லிகள்" (சம். 52)

"பிண்டியும் போதியும் பேணுவார்" (சம். 83)

"சாவாயும் வாதுசெய் சாவக சாக்கியர்" (சம். 114)

"வழிதலை பறிதலை யவர்கள் காட்டிய
மொழிதலைப் பயனென மொழியில்" (பக். 553)

"சாக்கியக் கயவர்" (பக். 558)

"குண்டர் சாக்கியர் குணமிலாதாரும்" (564)

"செடிநுகரும் சமணர்களும் சீவரத்த சாக்கியரும்" (655)

"மனைதுறந்த வல்லமணர் தங்கள் பொய்யு
மாண்புரைக்கு மனக்குண்டர் தங்கள் பொய்யும்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்
மெய்யென்று கருதாதே போதநெஞ்சே" (அப். 675)

"விருதுபகரும் வெஞ்சொற்சமணர், வஞ்சச்சாக்கியர்"
(1156)

## பௌத்தத் திருப்பதிகள்

புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம் என்பது சோழரது புகழ்பெற்ற துறைமுகமும் அவரது தலைநகரமுமாம். பௌத்தர்கள் அந்நகரில் ஒரு காலத்துச் சிறப்புற்று விளங்கினர் என்று மணிமேகலை முதலிய காவியங்களினால் அறிகிறோம். புத்த சாதகக் கதைகளிலேயே இப் பெயர் காணப்படுகிறது. அரித்தி என்ற ஓர் முனிவர் அந் நகரின் அருகில் தவம் புரிந்தனர் என்று வரலாறுண்டு. இவர் ஓர் பௌத்த முனிவர். அசோக மன்னரின் உறவினரான மகிந்தர் என்பவர் இலங்கைக்குப் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்குச் செல்லும் வழியில் இந்நகரிற்றங்கி ஏழு புத்த விகாரங்களைக் கட்டின வரலாறு முன்னரே குறிக்கப்பட்டது. மற்றும் அறவண அடிகள், புத்த பீடிகை, சம்பாபதி, தீவதிலகை முதலியவற்றின் வரலாறுகளும் கூறப்பட்டன.

கி.பி. 2-ஆம் நூற்றுண்டில் சோழநாட்டை அரசு புரிந்த கிள்ளிவளவன் மகன் பௌத்தத் துறவியாகிய மணிமேகலை வேண்டுகோட்கிணங்கச் சிறைச்சாலையை அறச்சாலையாக்கியதாக மணிமேகலை கூறும்.

போதிமங்கை :—இது சோழநாட்டுத் தலம். பௌத்தர்கள் பலர் இதில் இருந்தனர் என்ப. 'சாக்கியர்தம் போதிமங்கை' எனப் பெரிய புராணத்திற் கூறப்பட்டது இத்தலமேயாகும். இவ்வூரில் புத்தநந்தி, சாரிபுத்தர் என்ற பௌத்த தேரர்களுடன், திருஞானசம்பந்தர் வாதம் புரிந்து வென்றதாகப் பெரிய புராணம் கூறும்.

பொன்பற்றி :—இதுவும் சோழநாட்டுத் தலமே. புகழ் பெற்ற பௌத்த நூலாகிய வீரசோழியம் செய்த புத்தமித்திரனுர் வாழ்ந்த ஊர் என்ப.

நாகைப்பட்டினம் :—இஃது ஓர் சோழன் துறைமுகப் பட்டினம். பௌத்தர்கள் பல்லாண்டுகளாக இந்நகர்க்கண் இருந்து வந்தனர். பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் காலத்தில் வர்த்தகத்தின் பொருட்டுச் சீனுவிலிருந்து நாகைக்கு வரும் பௌத்தர்க்காக இஃது கட்டப்பட்டது. வெனிஸ் நகரிலிருந்து சீனுவுக்கு யாத்திரை சென்ற மார்க்கோ-போலோ என்பவர் நாகைப்பட்டினத்தில் "சீனு கோயில்" என்னும் பெயருள்ள ஒரு கோயில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றுர்.

கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் இருந்த திருமங்கையாழ்வார், நாகையிலிருந்த பௌத்தரது பொற்சிலையைக் கவர்ந்து சென்று, அதனை உருக்கித் திருவரங்கத் திருப்பதியில் மதில் கட்டுவதற்குப் பயன்படுத்தினர் என்று வைணவ நூல்கள் கூறும். "ஈயத்தாலாகாதோ" என்று தொடங்கும் திருமங்கையாழ்வாரின் ஓர் தனிப்பாடல் இந்த வரலாற்றை ஒட்டியதேயாகும்.

நிற்க, சோழமன்னன் இராசராசன் உத்தரவின் பேரில் (A. D. 985-1014) ஸ்ரீ சைலேந்திர சூடாமணி விகாரம் கடார அரசன் மாற விசயோத்துங்கவர்மனல் கட்டப்பட்ட தென்றும், அம்மன்னன் தன் தந்தை பெயரால் அதனைச் சூடாமணி விகாரம் என்று அழைத்ததாகவும், அதற்குப் பள்ளிச்சந்தமாக யானைமங்கலம் முதலிய ஊர்களை ராசராசன் அளித்ததாகவும், இதுபற்றி அவன் மகன் இராசேந்திரன் எழுதிய சாசனங்கள் ஸ்வீடன் நகரத்துப் பொருட்காட்சிச்சாலையில் இன்றும் உள்ளன என்றும் கூறுவர்.

உறையூர் :—இங்நகரிலும் பல சிறந்த பௌத்தர்கள் இருந்தனர் என்று புராண வரலாறுகளால் தெரிகின்றது.

காஞ்சீபுரம் :—அசோகமன்னர் இங்நகரில் ஒரு பௌத்த தூபி அமைத்ததாக யுவான்சுவாங் கூறுகின்றனர். ஆனல் மணிமேகலையில் இதைப்பற்றிய குறிப்பு இல்லை. கிள்ளி வளவன் தம்பி இளங்கிள்ளி "பைம்பூம்போதிப்பகவற்கு" ஓர் சைத்தியம் அமைத்ததாக அங்நூல் கூறும். இவ்வூர்க்குத் தென்மேற்கில் தருமதவனம் என்ற இடத்தில் இளங்கிள்ளி ஓர் புத்த பீடிகையை அமைத்துச் சிறப்புச் செய்ததாக மணிமேகலை கூறும். புகார் நகரில் இருந்த அறவண அடிகள் பின்னர்க் காஞ்சீபுரம் சென்று பௌத்த மதத்தைப் போதித்தனர் என்றும், அவர் இருந்த இடம் அறப்பளாஞ்சேரி என்றும் வழங்குவதாகவும் வரலாறுண்டு. மணிமேகலை தான் நிருவாணம் எய்தும் வரை இங்நகரிலேயே இருந்தனள் என்று அங்நூல் நுவலும்.

சங்கமங்கை :—ஓர் பௌத்தத் தலம். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான சாக்கியர் பிறந்த ஊர். மற்றும் பத்துப்பாட்டில் ஒன்ருகிய மதுரைக்காஞ்சியிலிருந்து பாண்டியன் தலைநகரில் பௌத்தப்பள்ளிகள் இருந்தனவென்று அறிகின்ருேம்.

## பௌத்தம் குன்றிய வரலாறு

பிராமணர்கள் மேற்கொண்ட வேள்விச் சடங்குகளை வெறுத்திகழ்ந்த அவைதீக மதமாகிய பௌத்தம் தமிழ் நாட்டில், வேரூன்ற முடியவில்லை. கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் சமணரின் ஆதிக்கம் ஓங்கவே பௌத்தம் நிலைகுலைந்தது. பல்லவ அரசர்களில் சிலர் பௌத்த சமயப் பற்றுள்ளவராயிருந்திருத்தல் கூடும். புத்தவர்மன் என்ற பெயர், அவர்களின் கொடி வழியில் காணப்படுகிறது. ஆனால் நாளடைவில் அரசியல் ஆதரவு அச்சமயத்திற்கில்லாது போயிற்று. எஞ்சி நின்ற சில பௌத்தர்களும், சைவ, வைணவ ஆசாரியர்களால் முறியடிக்கப்பட்டு மைசூர்ப்பக்கத்திலும் பிறஇடங்களிலும் ஓடி மறைந்தனர். மேலும் சமணரைப் போன்று தமிழ் நாட்டு மக்களுடன் அளவளாவிப் பழகாமலிருந்து விட்டனர் பௌத்தர். சமணர் பாலி, வடமொழிகளோடு, தமிழும் கற்று, அதில் வல்லுநராய்ச் சிறந்த இலக்கண இலக்கியங்கள் இயற்றி யிருக்கின்றனர். தமிழ் மக்களிடையே நெருங்கிப் பழக வேண்டுமெனின் அவரது தாய்மொழியைக் கற்றாக வேண்டும் என்ற உண்மையைச் சமணர் நன்கு அறிந்து, அதற்கேற்ப நடந்துகொண்டனர். பௌத்தர்கள் அவ்வாறு செய்யவில்லை. மற்றும் புத்தர்பிரான் மறைந்த பின்னர், அவரது சங்கத்தார்க்குள் கலகமும் உட்பிரிவும் உண்டாகி மதம் சீர்குலைந்தது. கொல்லாமை விரதத்தைப் பிறர்க்குப் போதித்துத் தாம் விலங்குக் கறியுணவை உண்ணத் தொடங்கினர். பௌத்த பிக்குகள் இரந்துண்பதை வெறுத்துப் பள்ளிகட்குச் சொந்தமான நிலங்களைக் கொண்டு வாழ்ந்தனர். தவவொழுக்கங் குன்றியதால் மக்களின் நன்மதிப்பை யிழந்து நின்றனர். சமயம் பரப்புவதில் ஊக்கம் காட்டிற்றிலர். இவ்வாறு சொல்லொன்று செயலொன்றாக நடந்து கொண்டதால் பொதுமக்களின் நம்பிக்கையை அவர்கள் இழக்க நேர்ந்தது. மற்றும் உபநிடதக் கருத்துப்படி விவாகம் சாஸ்திரீயமானது. இல்லாளுடன் கூடிய மனை மிகவும் தூய்மை வாய்ந்தது. தலைவன் செய்யும் எந்தச் சடங்கும் மனையாளின்றி நடைபெறுதற்கில்லை

இவ்வாறு மனையறத்திலிருந்து, அன்பு பூண்டொழுகி முடிவில், அன்பு அருளாக மாறி உலகத்துயிர்மாட்டுக் கருணை நிகழும். இதனையே தொல்காப்பியர் "அருளொடு புணர்ந்த அகற்சியானும்" என்றார். புத்தமதக் கொள்கைகள் மக்கள் மனதில் நன்கு பதியாமைக்குக் காரணம் அம்மதம், மனைவாழ்க்கையைப் புறக்கணித்துப் பிரமசரியத்தை உயர்த்தியதும், பக்குவத்தை நன்கு தேராது நினைந்தவாறே பலரையும், துறவு மார்க்கத்துச் செலுத்தியதுமாம். கி. பி. 13-ஆம் ஆண்டு வரை பௌத்தம் ஆங்காங்கு நிலைபெற்றுப் பின்னர், மறைந்ததென்றே சொல்லலாம். பௌத்த மதத்தை அடியோடு களைதற்காகப் பிராமண மதம், தன்னிடமிருந்த சில அடிப்படையான கொள்கைகளை மாற்றிக்கொண்டது. வேள்விகளில் உயிர்க் கொலை புரிவதை நிறுத்தி மாவினால் செய்த உருக்களை உபயோகித்து வந்தது. மற்றும் தமிழ் நாட்டுத் தெய்வங்களை வழிபடத் தொடங்கித் தமிழருடன் ஒன்றுபட்ட வாழ்க்கையையும் பிராமணர் எய்தவே, புத்த மதம் தலையெடுக்க முடியாமல் மறைந்தது. எனினும், அச்சமயத்தில் உள்ள பெருமை சான்ற கொள்கைகள் இன்றும் தமிழ் நாட்டில் நிலவுகின்றன. அவைதிகர் எனக் கருதப்பட்ட புத்தரே வைணவரால் திருமாலின் ஒன்பதாம் அவதாரமாகக் கருதப்பட்டு வழிபாட்டிற்குரியராக விளங்குகின்றனர்.

### புத்தர்பிரான் துதிகளாகப் பண்டை நூல்களிற் கண்டவை

"முன்றான் பெருமைக்க ணின்றான் முடிவெய்துகாறு
நன்றே நினைந்தான் குணமொழிந்தான் றனக்கென்
றென்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதிசூழ்ந்தான்
நன்றே மறைவன் அவன்றாள் சரணங்களன்றே"

(வீரசோ. பக். 61)

"தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாடு நீடு துணர் சேர்
வாடாத போதி நெறி நீழன் மேய
வரதன் பயந்த வறநூல்

கோடாத சீல விதமேவி வாய்மை
குணனுக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்தல் நாளு மிலரே'' (வீரசோ. பக். 61)

''எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதளிர்கள் சோதி முழுதுலக நாறி
வண்டிசைகள் பாடி மது மலர்கள் வேய்ந்து
மழையருவி போதி யுழை நிழல் கொள்வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர்க ளுன
வெறிகழல் கொள்மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக பாத நம சரண மாகு
மென முனிவர் தீமை புணர் பிறவி காணுர்''

''கூரார் வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலை யுழுவை காய் பசியாற் கூர்ந்தவென் னுேய்
வோரா யிரங்கதிர்வேண் வாள்விரிந்த மேனி [நீங்க
யுளம் விரும்பிச் சென்ருங் கியைந்தனை நீ யென்ருங்
காரார் திரைமுளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ் தண்சினைய காமரு பூம்போதி
யேரார் முனிவரர் வானவர்தங் கோவே
யெந்தாய ரோநின்னை யேத்தாதார் யாரே''

''பைங்கண்வா ளெயிற்றினப் பகட்டெருத்தின் வள்ளுகிர்ப்
பரூஉத்திரட் குழூஉக் கொடாஅட் பாலுடைக் கெளு
[வுடைச்
சிங்கவேறு நான்குதாங்க மீதுயர்ந்த சேயொளிச்
சித்திரங் குயிற்றிளி செம்பொ னுசனத்தின்மேற்
கொங்குநாறு போதுசிந்தி வானுளோ ரிறைஞ்சிடக்
கோதிலா வறம்பகர்ந் தமர்ந்தகோன் குளிர்நிழற்
பொங்குதாது கொப்புளித்து வண்டுபாடு தேமலர்ப்
போதியெம் பிரானடிக்கண் போற்றில்வீட தாகுமே''

''வீடுகொண்ட நல்லறம் பகர்ந்தமன் பதைக்கெலாம்
விளங்குதிங்க ணீர்மையால் விரிந்திலங்கும் வன்பினேன்
மோடுகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர்
முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதியி
னுடுகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான
வைந்தொடங்கொர் மூன்றறுத்த நாதனுன் மலர்த்துணர்ப்
பீடுகொண்ட வார்தளிர்ப் பிறங்குபோதி யானையெம்
பிரானை நாளு மேத்துவார் பிறப்பிறப் பிலார்களே''

"பூமகளே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையுந்
 தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவிய நாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
 தீமைசால் கட்டுரைக்குத் திறற் கருவியாய் கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினிதுரைத்துச்
 சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளிலேயே"

இஃது ஆறடித் தரவு

"தானமே முதலாகத் தசைபார நிறைத்தருளி
 யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே
எண்பத் தொன்பது சித்தி யியல்பினு னுளவென்று
 பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே
துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
 முப்பதின்மே லிரண்டுகலை முறைமையான் மொழிந்
 தனையே"

இவையிரண்டடி மூன்று தாழிசை

"ஆதியு மிடையினோ டிறுதியு மறிகுவ
 தமரரு முனிவரு மரிது நின்னிலைமையை
மீதியல் கருடனை விடவர வொடுபகை
 விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை
தீதியல் புலியது பசிகெடுவகை நின
 திருவுரு வருளிய திறமலி பெருமையை
போதியினலமணி திருநிழ லதுநனி
 பொலிவுற வடியவ ரிடர்கெட வருளினை"

இவை நாலடி யராகம்

"திசைமுகன் மருவிய கமலநன் னிறமென
 வசையறு முனிவொடு மலியு நின்னடி;
உயர்வுறு பெருமையொ டயரறு மயர்வொடு
 புரையறு நலனொடு பொலியு நின்புகழ்"

இவை யீரடி யிரண்டாய் வந்த பேரெண்

"கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை
 பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை
மீனுருவாகி மெய்ம்மையிற் படிந்தனை
 மானுருவாகி வான்குண மியற்றினை"

இவை ஓரடி நான்காய் வந்த சிற்றெண்

" எண்ணிறந்த குணத்தோய்நீ மெய்ப்பொருளை யறிந்தோய்நீ
யாவர்க்கு மரியோய்நீ மெய்யறமிங் களித்தோய்நீ
உண்ணிறைந்த வருளோய்நீ செப்பரிய தவத்தோய்நீ
யுயர்பார நிறத்தோய்நீ சேர்வார்க்குச் சார்வுநீ "

இவை முச்சீரினால் வந்த இடையெண்

" நன்மைநீஇ வன்மைநீஇ இம்மைநீஇ செம்மைநீஇ
தின்மைநீஇ மென்மைநீஇ மறுமைநீஇ கருமைநீஇ
நனவுநீஇ மதியுநீஇ இரவுநீஇ சேர்வுநீஇ
கனவுநீஇ விதியுநீஇ பகலுநீஇ சார்வுநீஇ "

இவை யிருசீர் பதினாறாய் வந்த அளவெண்

எனவாங்கு,

" அகலிலா நின் அடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டைமான் விறற் சேனாபதி
சிங்களத் தரையன் வெண்குடை யதனொடு
பொங்குபுகழ் வில்லவன்றன் புறக்கொடை கொண்டு
பொலிதகு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே "

இது சுரிதகம் இது ஆறுறுப்பாலும் வந்தமையால்
வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா

" திருமேவு பதுமஞ் சேர்திசைமுகனே முதலாக
வுருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வா
னிவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருணீங்க
வெவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்த செழுஞ் சுடரென்ன
விலங்கு கதிரோ ரினீடு விலங்கி வலங் கொண்டுலவ
வலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ;

தரவு

"மேருகிரி யிரண்டா மெனப் பணைத்த விருபுயங்கண்
மாரனிதை யாவேட்டு மன்னுபுர மறுத்தனையே
வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலைநாட்
பூண்ட வருளாள நின்புகழ் புதிதாய்க் காட்டாதோ;

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறி யோர் நெறியழுங்கப்
புலவு நசைப் பெருஞ் சினத்துப் புலிக்குடம்பு
கொடுத்தனையே;
பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவனீ யென்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ;

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பாந்த
ளழலடைந்த பணத்திடையிட் டன்றுதுலே யேறினையே:
மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதியநின்
னருள்பாரா வதமுயிர்க ளனைத்திற்கு மொன்ருமோ''

தாழிசை

''அருவினை சிலகெட வொருபெரு நரகிடை
யெரிசுடர் சுடர்மரை மலரென விடுமடியிணை:
அகலிட முழுவது மழல்கெட வமிழ்துமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை;

அராகம்

''அன்பென்கோ வொப்புரவென் கோவொருவ னயில்கொண்டு
முந்திவிழித் தெறியப்பால் போந்த முழுக் கருணைய:
நானென்கோ நரகமென்கோ நன்றில் லான்பூணுங்
தீயினைப் பாய்படுத்த சிறுதுயில்கொண் டருளினை;''

இவை யீரடி யிரண்டம்போதரங்கம்

''கைநாகத்தார்க் காழிகை கொண் டளித்தனையே
பைநாகர் குலமுய்ய வாயமீழ்தம் பகர்ந்தனையே
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே ;''

இவையோரடி நான்கம்போதரங்கம்

''எனவாங்கு,
அருள்வீற்றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதும் தொழுதக
வொருமன மெய்தி யிருவினைப் பிணிவிட
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்
தோங்குநீ ருலகிடை யாவரு
நீங்கா வின்பமொடு நீடுவாழ் கெனவே ;''

சுரிதகம்

''மேதகு நந்திபுரிமன்ன **சுந்தரசோழர்** வண்மையும்
தின்மையு முலகிற் சிறந்து வாழ்கெனவே''  [வனப்பும்

''போதிமேவினை புன்மை யகற்றினை
சோதிவானவர் தொழ வெழுந் தருளினை
யாதிநாத னடியிணை பரவுதும்''

வீரசோழியம்பொருட்படலத்தில், 'அருளொடு புணர்ந்த அகற்சி' க்கு மேற்கோளாகப்,

" புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனது
முலைமாறுஅக் குழவி யாதுக
வாய்ப்படுத் திரையெனக் கவர்ந்தது நோக்கி
யாங்கவ ளேரிளங் குழவிதான் சென்று
கூருகிர் வயமான் புலவு வேட்டுத்
துடங்கிய வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கின
னதுவப் பாசிலைப் போதி மேவிய
பெருந்தகை யாருயிர் காவல் பூண்ட,
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே "

என்ற செய்யுள் காணப்படுகின்றது. இவண், புத்தர் ஓர் வெம்பசியுழந்த புலி தனது இளங்குட்டியையே தின்று பசியாறக் கருதித் தன் வாயிடை அதனை வைத்ததைக் கண்டு, தான் ஓர் குழவியென அதன் வாயிடைப் புகுந்து தனது அருளைக் காட்டிய வரலாற்றைக் குறித்து நிற்பது காண்க.

" மண்வாழும் பல்லுயிரும் வான் வாழு மிமையவரும்
கண் வாழு மாநகர் கிளையனைத்துங் களிகூர
வந்தர துந்துமி யியங்க வமரர்க டைமாட
விந்திரர் பூ மழை பொழிய விமையவர் சாமரை யிரட்ட
முத்த நெடுங்குடை நிழற்கீழ் மூரியாசரி யணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொரு
[பெரியோய்

தரவு

" எறும்புகடை யயன் முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி
யெவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று லிடரெய்தி
லவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்;
அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரைகதிருஞ் செழுங்கமல நனிநாண
ஒருமைக்க ணீரொன்பா னுரைவிரிப்ப வுணர் பொருளா
லருமைக்கண் மலைவின்றி யடைந்ததுநின் றிருவார்த்தை;
இருட்பார வினைநீக்கி, யெவ்வுயிர்க்குங் காவலென
வருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவு

மதுவொன்று மலரடிக் கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக் குரித்தோ புண்ணியநின் திருமேனி;"
இவை மூன்றுந் தாழிசை

"ஆருயிர்க ளனைத்தினையும் காப்பதற்கே யருள்பூண்டா
லோருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்
தாம நறுங் குழன் மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனைந்துலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்
[கொல்"
பேரெண்

"பேரரக்க ரோரைவர்க் கறவமிழ்தீம் பொழிந்தனையே
ஆரமிழ்த மணிநரகர் குலமுய்ய வருளினையே
வார்சிறைப்புள் ளரையர்க்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே"
சிற்றெண்

"அருளாழி பயந்தோய் நீ; அறவாழி பயந்தோய் நீ
மருளாழி துறந்தோய் நீ; மறையாழி புரிந்தோய் நீ
மாதவரின் மாதவனீஇ; வானவருள் வானவனீஇ;
போதனரிற் போதனனீஇ; புண்ணியருட் புண்ணியனீஇ"
இடையெண்

"ஆதிநீஇ; அமலனீஇ; அயனுநீஇ அரியுநீஇ:
சோதிநீஇ நாதனீஇ துறைவனீஇ இறைவனீஇ
அருளுநீஇ; பொருளுநீஇ அறிவனீஇ அநகனீஇ
தெருளுநீஇ திருவுநீஇ செறிவுநீஇ செம்மனீஇ"
அளவெண்

"எனவாங்கு, தனிச்சொல்
பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர்ச் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும் திண்மையு
உலகிற் சிறந்து வாழ்கெனவே"
சுரிதகம்

"போதி நீழற் சோதி பாதங்
காத லானின் றோத னன்றே"

" அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார் "

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களில், நடுவணதாகிய காப்புத் தொழிலைப் புரிபவர் திருமால் என்ப. இவரே வைணவர் வழிபடுந் தெய்வம். ஒல்காப் புகழுறும் தொல்காப்பியம் என்னும் ஆதித் தமிழ் இலக்கணம், இத்திருமாலை மாயோன் என்று வழங்கும். மாயோன் என்னும் பெயர் மாமை நிறமுள்ளவன். அஃதாவது கரியோன் எனப் பொருள்படுமென்பர். கிருஷ்ணன் என்ற திருமாலின் திருநாமமும் கரியோன் எனப் பொருள்படும். தொல்காப்பியம், இம்மாயோன் முல்லை நிலத்திற்கும் முல்லை சார்ந்த இடங்கட்கும் தெய்வம் என்று கூறும்.

'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்றது காண்க. இத்தெய்வத்தைக் குறித்துக் காலஞ்சென்ற டி. ஏ. கோபிநாதராவ், தமது "இந்திய விக்ரகம்" என்ற நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"திருமால் அல்லது மகாவிஷ்ணு நான்கு மறைகளிலும் கூறப்பெற்ற வேதகாலக்கடவுளே. அவனைச் சூரியனாகவும், மூவுலகையும் ஈரடியால் அளந்தவன் என்றும் நூல்கள் பகரும். சதபதப்ராம்மணத்தில் அவன் பனிரெண்டு ஆதித்தர்களில் ஒருவனாகக் கூறப்பட்டுள்ளான். மகாபாரதமும் பதினொரு ஆதித்தனைக் கூறிப் பன்னிரண்டாவதாக விஷ்ணுவைக் குறிக்கின்றது. இதனால் ஆதித்தனே விஷ்ணுவாக மாறியிருத்தல் கூடும் என்று ஊகிக்க இடனுண்டு. இதே விஷ்ணு யக்ஞ ஸ்வரூபம் என்றே மறைகளாற் புகழப்பட்டு, அம்முறையில் யக்ஞ நாராயணன் வடிவில் வணங்கப்பட்டு வருகிறான். இதிகாச புராணங்களில் விஷ்ணுவே பரதேவதையாகவும், திருமூர்த்திகளில் ஒருவனாகவும் காணப்படுகின்றான்."

மேற்கூறியவற்ருல் விஷ்ணு ஆரியக்கடவுள் எனத் தெரி கின்றது. அவ்வாறிருந்தும் அவன் திருநாமங்களும், திரு விளையாடல்களும், தொல்காப்பியர் காலத்திலேயே பெரி தும் தமிழ் நாட்டிற் பயின்றனவாக அறிகின்ருேம். அவ ரைக் குறித்தாற்றும் வழிபாடு முதலியன ஆரிய முறைப் படியேதான் இன்றும் நடைபெறுகின்றன.

மேனுட்டாசிரியர் ஹாவெல் (**Havell**) என்பவர் பின்வரு மாறு எழுதுகிருர் :—

"இந்தியாவில் சமயம் அல்லது மதம் என்பது கேவலம் ஓர் பிடிவாதமான கொள்கை மட்டுமல்ல. ஆன்மா வினது வளர்ச்சியின் பல நிலைகட்கும், வாழ்க்கையின் பல் வேறு படிகட்கும் ஏற்றபடி அமைக்கப்படும் மக்கள் ஒழுக் காற்றின் அடிப்படை." "தத்துவ சாத்திரத்தின் உண்மைக் கும் மக்களின் அன்ருட வாழ்க்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினுல்தான் சமயத்தின் உண்மையும் உயிர்ப்பும் உள்ளன" என்ருர் பேரறிஞர் இராதாகிருட்டினன் அவர்கள். அவரே விஷ்ணுவைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிருர்.

"விஷ்ணு வடிவிற் சூரியன் உலகனைத்தும் தாங்குகின் ருன். அவர் மூவுலகினையும் மூன்றடியில் அளந்தவர். அவர் மண், விண் முதலிய பல உலகங்களிலும் பரவி நிற்கின் ருர். இருக்கு என்னு மறையில் விஷ்ணு முக்கியமான தெய்வமாகக் கருதப்படவில்லை. ஆயினும் அந்த ஆதி மறையிலேயே விஷ்ணு பேருடலம் உடையவராயும், அன்பர் வேண்டுகோட்கிணங்க அவ்வப்பொழுது அவதரிப் பவராகவும் கூறப்படுதலின், வைணவ சமயத்திற்கு அடிப் படையை அங்கேயே காணலாம். பர்ஜன்யு என்பவர் மழைக்கடவுள். இவரே, ஆரியர் இந்தியாவிற் புகுந்தவுடன் இந்திரனுகை மாறினர். இந்தியாவிற் புக்கவரைத்தவிர வேறு ஆரியர் பிரிவுகளுள், இந்திரன் பெயர் காணப்படவில்லை. ஆரியர் இந்தியாவில் நுழைந்தபோது அந்நாட்டிற் பல

தெய்வங்கள் வழிபடப்பட்டுவந்தன. இத்தெய்வதங்களோடு இந்திரன் போராட நேர்ந்தது. நாட்டில் நீரைத் தெய்வமெனக் கொள்வோரும், அரசமரத்தை வணங்குவோரும் பலரிருந்தனர். விருத்திராசுரன் முதலிய இந்திரன் பகைஞர்கள், இந்தியப் பழமக்களின் தெய்வங்களே. இருக்கு வேத காலத்தில் கிருஷ்ணன் என்ற ஓர் பெரிய எதிரி இந்திரனுக்கிருந்தான். இந்திரனுக்கும் கிருஷ்ணனுக்குமுள்ள பகைமையைப்பற்றிப் புராணங்களும் கூறுகின்றன. ஒரு சமயம் இருக்கு வேத காலத்தில் இந்திரனல் வெல்லப்பட்ட முல்லை நிலத்திறைவன் ஆக இந்தக் கிருட்டினன் இருந்திருக்கக்கூடும். ஆயினும் பகவற்கீதை எழுதப்பட்ட காலத்தில் கிருட்டினன் தெய்வீகப் பெருமை கொண்டு விளங்கினன். இந்நிலையில் வைணவர்கள் அவனை விஷ்ணுவென்றும், பாகவதர்கள் வாசுதேவன் என்றும் கொண்டாடினர்.'' இந்த வரலாற்றிலிருந்துதான், பகவற்கீதை உரைத்தவரான இந்தக்கிருட்டினனை இறைவனது அவதாரம்என்றும், யமுனை நதிக்கரையில் வேய்ங்குழல் ஊதி விளையாடிய கோபாலனுகவும் மக்கள் கருதினர்.

வேதங்களை மூலமாகக் கொண்ட சமயங்களில் உருவ வழிபாடு குறிக்கப்படவில்லை. அக்காலத்தில் கடவுளர்க்கு ஆலயமில்லை. ஓர் இடைச் சாதனமின்றி மக்கள் கடவுளருடன் நேரே தொடர்புகொண்டு விளங்கினர். தெய்வங்கள் வழிபாடாற்றும் மக்களின் நண்பினராகவும் உறவினராகவும் கருதப்பட்டன. பரலோகப்பிதா, புவித்தாய், அங்கி சகோதரன் என்ற வழக்குக் காண்க.

வருணப் பாகுபாடு என்பது முதன் முதல் புருட சூக்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன் முதற் புகுந்த ஆரியர்கள் ஒரே வகுப்பைச் சார்ந்தவர். அவர்கட்குள்ளேயே குருமாரும், போர் வீரனும், வாணிகனும், உழவனும் உண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் இறைவன் வழிபாடு தாமே செய்யக் கூடுமேனும், நாளடைவில், குருமார் ஏனையோரினின்றும் பிரிந்து தம்மை உயர்ந்தவராகக் கருதி

வந்தனர். பண்டை ஆரியரது பழந் தருமத்தையும் மரபினையும் போற்றி நின்றமைபற்றி, இவர்கட்கு ஏனையோர் வேண்டியன கொடுத்துதவினர். எனவே தங்கள் பிழைப்புக்காக அவர்கள் உழைக்க வேண்டிய அவசியமில்லாது போயிற்று. ஆகவே தொடக்கத்தில் தொழில் மரபு பற்றி வந்த இந்தத் தன்மை மாறிப் பரம்பரை உரிமை ஏற்பட்டது. ஆனால் இருக்கு வேத காலத்தில் தொழில்கட்கும் வருணப் பாகுபாடுகட்கும் தொடர்பில்லை. ஒரு சூத்திரத்துள் "நான் ஓர் கவிஞன், என் தந்தை வைத்தியன், எனது அன்னை மாவறுப்பவள்" என்ற சொற்றொடர் காணப்படுகிறது.

இருக்கு மறையை யடுத்துப் பிராம்மணங்கள் தோன்றின. இவைகள் குருமார்க்கும் யாகாதிகாரிகட்கும் வேண்டிய யாகவிதிகளையும் முறைகளையும் தம்முட்கொண்டவை. இக்காலத்தில் யசுர் வேதத்தில் விஷ்ணு முதன்மை பெற்று விளங்கினர். சதபதப்ராம்மணத்தில் எக்ஞ வடிவாகவே விஷ்ணு கூறப்பட்டுள்ளனர். நாராயணன் என்ற பதத்தையும் முதன் முதலாக இதிற் காணலாம். இந்த நாராயணனும் விஷ்ணுவும் தைத்திரிய ஆரண்யகத்திற்றான் ஒன்றுபடுத்திப் பேசப்படுகின்றனர். இருக்கு வேத காலத்திலிருந்த செய்யுட்டிறம் மறைந்தது. இனி ஜபம் என்றால் சிலமந்திரங்களையும் குறிகளையும் உச்சரிப்பது. யாகங்கள் முதன்மை பெற்றன. பெறவே குருமார்கட்கும் முதன்மை ஏற்பட்டது. பரம்பரை ஆச்சாரியர்கள் தோன்றினர். அவர்களே மறைகட்கதிகாரிகள். அவர்கள் உதவியின்றி யாகங்கள் நடைபெற முடியாது. ஆகவே பிராமணர்களின் தலைமை ஓங்கிநின்றது. ஆனால் இருபிறப்பாளராகிய பிராமணர், அரசர், வணிகர் என்ற மூவரும், யாகம் புரிதற்குரியராகத் திகழ்ந்தனர்.

நிற்க, பிரகதாரணியக உபநிடதம் நான்காம் பாகத்தில் யாக்ஞவல்கியர் உபதேசத்தில் விலங்குகளைப்பற்றியும், விலங்குகளாகவும் ஆன்மா உருவெடுத்தல் கூடும் என்ப

தைப்பற்றியும் யாதொரு குறிப்புமில்லை. ஆரியர் புதுவ தாகக் கலந்த இந்திய நாட்டுப் பழமக்களிடமிருந்துதான் இந்தக் கொள்கையை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். உலகில் உள்ள எல்லா மதங்களிலும், நூலறிவில்லாத காட்டுமிராண்டிகள், மக்கள் ஆன்மா விலங்குருவம் எய்தக் கூடும் என்று நம்பி யிருந்தனர். ஆரியரும் இந்தியாவி லிருந்த பழமக்களிடமிருந்து விலங்குகட்கும், தாவரங்கட் கும் ஆன்மா உண்டென்றும், அவைகளினிடையில் மக்கள் ஆன்மா புகுந்து வதிவதுண்டென்றும் கூறும் கொள்கை யைத் தழுவினர். ஆணிப்பொன் அம்பலத்தாடும் பரம ஞெடும் இரண்டறக் கலந்தவரும், அறிவாற் சிவனே எனப் புகழப்பட்டவருமான மாணிக்கவாசகர் தமது திருவாசகத் தில், 'புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி...எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேனென்றும்' கூறினர். பண்டை நூலாகிய தொல்காப்பியத்திலும், 'ஒன்றறிவதுவே' எனத் தொடங்கும் சூத்திரத்தில், ஆசிரியர் ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிரீருகத் தாவர முதல் மக்களீருகவுள்ள எல்லா வற்றையும் வகுத்துள்ளனர்.

"புல்லும் மரனு மோரறிவினவே" என்று தொடங்கும் சூத்திரங்களைக் காண்க.

விஷ்ணுவை இருக்குவேதத்திலேயே உபேந்திரன் என்று கூறியிருக்கிறது. சதபதப்ராம்மணத்தில் முதல்வர் ஆமை யாகவும் வன்றியாகவும் உருவெடுத்தார் என்று கூறப்படு கிறது. இந்த உருவங்களையே விஷ்ணு எடுத்ததாகப் பின் னூல்கள் கூறும். மன்பதைகளைப் புரப்பதற்காக இந்த அவ தாரங்கள் நிகழ்ந்தன என்பர். "துட்டர்களை அழிப்பதற் கும் நல்லோரைக் காப்பாற்றுதற்கும் நான் யுகந்தோறும் அவதாரம் செய்கின்றேன்" என்று கண்ணபிரான் கீதை யிற் கூறியிருக்கின்றனர். நாராயணனே புருடோத்தமன் என்றும், அவனே விஷ்ணுவென்றும் பின் கருதப்பட்டது.

பாகவத மதம் என்பது கிருட்டினனால் புத்தர் காலத்துக்கு முன்பே உண்டாக்கப்பட்டதென்ப. இதன் கொள்கைகளில் முக்கியமானது எதுவெனில், வாசுதேவனே பரதெய்வம் என்பதும், அவனிடம் பத்தி செய்வதே முத்தியளிக்கும் என்பதூஉமாம். நாளடைவில், இந்த மதத்தைப் பிரசாரம் செய்த வீரனே தெய்வமாக ஆக்கப்பட்டு, மேலான தெய்வமாகக் கருதப்பட்டான். எனவே பகவற்கீதை தொகுத்த காலத்திலேயே, கண்ண பிரான் பரதெய்வமாக வணங்கப்பட்டான். இதே கிருஷ்ணனே விஷ்ணு நாராயணனாகவும் கருதப்பட்டான். ஆனால் பகவற்கீதையைப் பொறுத்த அளவில், கிருஷ்ணனும் விஷ்ணு நாராயணனும் ஒன்றாக்கப்படவில்லை. சமண மதம் தொடங்கியபோது கிருட்டினன் பலரும் கொண்டாடும் தெய்வமாக விளங்கினர்.

பாணினி சூத்திரப்பாடியத்தில் பதஞ்சலியார் வாசுதேவனைப் பரதெய்வமாகக் கூறுவர். எனவே வாசுதேவ வணக்கம் பாணினி காலத்திலேயே இருந்திருக்கிறது என்று கொள்ளலாம். கோசண்டி என்ற இடத்தில் கிடைத்த ஓர் பழைய கல்வெட்டில், சங்கருடண வாசுதேவர்களின் கோயில்களைச் சுற்றி ஓர் சுவர் எழுப்பப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதில் உள்ள எழுத்துக்களின் வடிவைக் கொண்டு, இது கி.மு. 200-இல் பொறிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று கூறுவர் அறிஞர் ஆர். ஜி. பண்டாரகர்.[1] மற்றும் அதே நூற்றாண்டின் முற்பகுதியில் (Besnagar) பெஸ்நகர் என்ற ஊரில் உள்ள எழுத்தைக் கொண்டு (Heliodorus) ஹெலியோடொரஸ் என்பவர் தேவாதி தேவனாகிய வாசுதேவனுக்கு ஓர் கருடக்கொடி அமைத்தான். அச்சமயம் வாசுதேவனை முக்கிய தெய்வமாகவும், அவனை வழிபடுவோரைப் பாகவதர் என்றும் கூறினர். நாநாகாட் என்ற ஊரில் உள்ள ஓர் குகையில் இருக்கும் ஓர் துதிப் பகுதியில் சங்கருடண வாசுதேவர்

1. Vaishnavaism Saivaism and other religions.

பெயர்கள் காணப்படுகின்றன. இந்த வாசுதேவன் விருஷ்ணி வமிசத்தில் தோன்றியவர். மகாபாரதம் சாந்தி பருவம் நாராயணீயத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது என்று ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறுகின்றனர். 'வாசுதேவனே பரமான்மா. அவனே உயிர்க்குயிராக உள்ளவன். அவனே படைப்புக் கடவுள். உலகில் உள்ள எல்லா உயிர்களும் வாசுதேவனது ஓரம்சமான சங்கருடண வடிவே. சங்கருடணத்திலிருந்து பிரத்தியும்நனும், பிரத்தியும்நனிலிருந்து அநிருத்தனும் தோன்றினர். என்பாற் பத்தியுள்ளவர் என்னை அடைகின்றனர். அவர்கட்கு முத்தியளிக்கின்றேன்' சங்கருடணன் முதலிய நால்வரும் இறைவன் திருமாலினுடைய மூர்த்தங்கள்.

பாரதம் 344-ஆம் அத்தியாயத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'சூரியன்தான் வாயில், அதில் நுழைந்தவுடன் பிரகிருதி சம்பந்தமுள்ளன யாவும் எரிக்கப்படுகின்றன. பின்னர் சூரிய மண்டலத்தில் அணுக்களாக ஆன்மா விளங்குகின்றது. அங்கிருந்து விடுதலை பெற்று, அநிருத்தன் உருவாக மாறி மனதாகப் பரிணமிக்கும். பின்னர் பிரத்யும்நன் வடிவினை யடையும். அந்த வடிவும் முடிவில் நீங்கப்பெற்றுச் சங்கருடணனாக மாறும், இதுவே உயிர் அல்லது ஜீவன். பின்னர் முக்குணங்களும் நீங்கப்பெற்று, வாசுதேவனாகிய பாமான்மாவோடு கலக்கும்'

புத்தர்பிரான் காலத்தும் சற்று முன்பாகவும் க்ஷத்திரியர்கள் சமய உணர்ச்சி பெற்று விளங்கினர். சித்தார்த்தரும் மகாவீரரும், மகத நாட்டிற் புதிய சமயங்களைத் தோற்றுவித்தனர். இவர்கள் கடவுட்கொள்கையையே கவனிக்கவில்லை. சீரிய ஒழுக்கமும் தன்னல மறுப்புமே முத்தியை அளிக்கும் என்று இச்சமயங்கள் பறையறைந்தன. இவ்விருவரும் அரசர் மரபினிற் சாக்கியர், ஜந்திரிகர் என்ற வகுப்பினரைச் சேர்ந்தவர். இம்மதங்கள் பெரும்பாலும் பகவற்கீதைக் கொள்கைகளைக்கொண்டெழுந்தன என்பர். இந்நூலாசிரியரே அரசர் மரபினர். பாரதம் ஆதிபரு

வத்தில் வாசுதேவனைச் சாத்துவதராகக் கூறப்பட்டது. இந்தச் சாத்துவதர்களும் அவர்களது வாசுதேவ வழிபாடும் கி.மு. நான்காம் நூற்றாண்டில் மௌரிய மன்னன் சந்திரகுத்தன் காலத்தில் கிரேக்கர் தூதுவனாக வந்த மெகஸ்தனீஸ் என்பவரால் குறிக்கப்பட்டுள்ளன.

இனி, கிருஷ்ணன் என்ற பதம் எவ்வாறு வந்தது. வேத காலத்து இருடிகளில் ஒருவர்க்குக் கிருஷ்ணன் என்று பெயர். அவர் இருக்கு வேதம் 8-ஆவது மண்டலத்தில் 74-ஆவது சூத்திரத்தைச் செய்தனர். அவரே தம்மைக் கிருஷ்ணன் எனக் கூறிக்கொள்கின்றனர். இவரை ஆங்கிரச முனிவரின் வழிப் போந்தவர் என்ப.

மகாபாரதம் வீடும பருவம் 65-ஆவது அத்தியாயத்தில் பிரமதேவன் பரமான்மாவைத் துதித்து யது வங்கிசத்தைப் பெருக்கும்படி, பின்வருமாறு வேண்டுகின்றார்.

"வாசுதேவனே! சங்கருடணனாக நீர் மாறிப் பிரத்தியுமனனைப் பெற்றீர். அவர் விஷ்ணுவாகிய அநிருத்தனைப் பெற்றார். அநிருத்தன் என்னை உண்டுபண்ணினார். இவ்வண்ணமே நீங்கள் மறுபடியும் உலகில் உற்பவிக்க வேண்டும்." வாசுதேவமதம் என்ற பாகவத சமயம் தோன்றியபொழுது பரமான்மாவே வாசுதேவன் என்றழைக்கப்பட்டார். சாந்தோக்கிய உபநிடதத்தில் தேவகி மகனாகக் கிருட்டினன் கூறப்படுகிறான். நாராயணீயத்தில் பாஞ்சராத்திர முறை வருணிக்கப்பட்டுள்ளது. மிகவும் பழமையான கல்வெட்டுக்களில் வாசுதேவனும் சங்கருடணனுமேதான் கூறப்படுகின்றனர்.

நிற்க, பகவற்கீதை கி.மு. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகாது. இந்நூல் தோன்றியபொழுது வாசுதேவனும் நாராயணனும் ஒன்றுபடுத்திக் கூறப்படவில்லை. அந்நூலிலிருந்து கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரம் என்றும் அறிதற்கில்லை என்பர் பந்தாரகர். (Bhandarkar)

ஆனல் அருச்சுனனிடம் தானும், பார்த்தனும் முன்னர் எத்தனையோ பிறப்புக்கள் நரநாராயணராகப் பிறந்ததுண்டு என்று கூறுவதானும், துட்டர்களை ஒழிப்பதற்கும் நல்லோர்களைப் புரப்பதற்கும் யுகந்தோறும் வந்து அவதாரம் செய்கின்றேன்' என்று கூறுவது கொண்டும், திருமாலின் அவதாரமே கண்ணன் என்று கூறத் தடையில்லை.

பதஞ்சலியார் காலத்தில் வாசுதேவன், சங்கருடணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற நான்கு வியூகாவதாரங்கள் நன்கு தெளியப்பட்டன. ஆனல் கி.மு. முதல் நூற்ருண்டில் காணப்பட்ட கல்வெட்டில் வாசுதேவ சங்கருடண வியூகங்கள்தான் பிரசித்தமாக உள்ளன. இக்கொள்கை ஏற்கப்பட்டால் வியூகாவதாரம் ஒன்றையும் எடுத்துக் கூருத பகவற்கீதை, மேற்கூறிய கல்வெட்டுக்கள், பதஞ்சலியார் காலம் என்ற இவற்றிற்குக் காலத்தால் முற்பட்டதாகலாம். எத்துணைக்காலம் முந்தியது என்பது ஒருதலையாகக் கூறற்கில்லை. கீதை இயற்றப்பட்டபோது, நாராயணனும் வாசுதேவனும் ஒன்ருகத் தெளிவுபடுத்திக் கூறப்படவில்லை. ஆனல் பகவற்கீதை 11-ஆவது அத்தியாயத்தில் பார்த்தற்கு விசுவரூபம் காட்டப்பட்டபொழுது கிருட்டினன் விஷ்ணுவெனப் புகழப்படுகின்ருன்.

பகவற்கீதை செவிவாயிலாகப் பல நூற்ருண்டுகள் கேட்கப்பட்டு வந்த பின்னரே எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறு எழுத்து வடிவுறுதற்கு முன்னரே வாசுதேவன் தெய்வமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

### வாசுதேவ நாராயண ஒற்றுமை

வாயுபுராணத்தில் நாராயணன் அவ்வியக்தம் அல்லது பிரகிருதிக்கு முன்பிருந்தவர் என்றும், அவ்வியக்தத்திலிருந்து அண்டம் தோன்றிய தென்றும், அதிலிருந்து பிரமன் போந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்த நாராயணன் பாஞ்சராத்திர யாகம் செய்து மேலான கடவுட்டன்மையைப் பெற்ருர். இவரே புருட சூக்த ஆசிரி

யர் என்ப. புராண காலத்திற்ருன் நாராயணனும் வாசுதேவனும் ஒன்றுபடுத்தப்பட்டனர். அருச்சுனனும் வாசுதேவனும் நரநாராயணரோடு ஒன்றுபடுத்தப்பட்டனர். புராண காலத்தில் விஷ்ணு பரதெய்வமாக விளங்கினர். பகவற்கீதை காலத்திற்குப்பின் வாசுதேவன் கிருட்டினன் என்ற இவர்கள் விஷ்ணுவுடன் பரதெய்வமாகக் கருதப்பட்டு வந்தனர்.

இனி, இதுகாறும் கூறப்பட்ட நூல்களில் கோபாலனைப் பற்றிய பேச்சில்லை. பதஞ்சலி நூல் நாராயணீயம், கல்வெட்டுக்கள் என்ற இவைகளில் ஆயர் குலத்தவனாக இவர் கூறப்படவில்லை. நாராயணீயத்தில் கம்சனைக் கொல்வதற்காக வாசுதேவ அவதாரம் நிகழ்ந்தது என்று கூறப்பட்டதன்றி, கண்ணனால் ஆயர்பாடியிற் கொல்லப்பட்ட மற்ற அரக்கர்களைப்பற்றிய பேச்சில்லை. ஆனல் பின்னர்த் தோன்றிய அரிவம்சம், வாயுபுராணம், பாகவத முதலிய புராணங்களில் கம்சன் மட்டுமன்றிப் பிற அரக்கர்களையும் கொல்வதற்காகவே வாசுதேவன் உதித்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்நூல்கள் இயற்றப்பட்டபோது, வாசுதேவனும் ஆயர்பாடிக் கண்ணனும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். சிசுபாலன் கண்ணனது ஆயர்பாடிச்செயல்கள் சிலவற்றைக் கூறியிகழ்தல் பிற்சேர்க்கை என்பர் பண்டாரகர். பகவற்கீதையிலும் மகாபாரதத்தும் கோவிந்தன் என்ற பெயர் காணப்படுகிறது. ஆனல் மகாபாரதம் சாந்தி பருவத்திலேயே வாசுதேவன் ''என்னைக் கடவுளர் கோவிந்தன் என் அழைக்கின்றனர். ஏனெனில் மறைந்து போய்ப் பாதலத்தில் ஓர் குகைக்கண் அடைபட்டிருந்த பூமிதேவியை நான் விடுவித்துக் கொணர்ந்ததால்'' என்பர். எனவே கோவர்த்தனமலையைத் தூக்கிக் கோக்களைக் காத்தவன் என்ற பொருள் பிற்காலத்ததென்க.

மேற்கூறியன கொண்டு கிறித்து ஆண்டுத் தொடக்கம் வரையில் கோகுலத்திற் கிருட்டினன் வளர்ந்த செய்தி விளக்கமாக இல்லை என்பது பெறப்படும். இச்செய்தி அரி

வம்சத்திற் கூறப்படுகிறது. அரிவம்சம் கி. பி. மூன்ரும் நூற்ருண்டில் இயற்றப்பட்ட நூல்.

## பாஞ்சராத்திரம் அல்லது பாகவத மதம்

இந்த மதம் 3-ம் நூற்ருண்டிலேயே தோன்றி யிருக்க வேண்டும். ஆகவே ஆயர்பாடிக் கண்ணனது திருவிளையாடல்கள் இதிற்குறிக்கப்படவில்லை. இராமாநுச மாதவர் தாபித்த மதங்களிலும் இவ்விளையாடல்கள் காணப்படவில்லை.

கவிச்சிரேட்டன் எனப் புகழ்பெற்ற காளிதாசன் தமது மேகதூதத்தில் வானவில்லுடன் கூடிய மேகத்தை, மயிலிறகைத் தரித்து நின்ற ஆயர் தலைவன் கிருட்டினனுக்கு ஒப்பிடுகிருன். எனவே விஷ்ணுவும் ஆயர்பாடிக் கண்ணனும் ஒன்றுபடுத்தப்பட்டனர். இரண்டாவது சந்திரகுத்தனை விக்கிரமாதித்தன் காலத்தில் இந்தக் கவிஞன் இருந்திருப்பின், அவன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டாகும். இதே நூற்ருண்டு நூல்களிற் சகடாசுரனைக் கண்ணன் கொன்றது, கோவர்த்தனமலையைக் குடையாகக் கொண்டது முதலிய செயல்களையும் காணலாம். பாகவதர் கொள்கைப்படி நடைபெறும் விஷ்ணு வழிபாடு கி. பி. 4-ம் நூற்ருண்டிலிருந்து 11-ம் நூற்ருண்டு வரை வழக்கிலிருந்ததற்குப் போதிய சான்றுகளுண்டு.

## தமிழ்நாட்டில் வாசுதேவ வைணவ மதங்கள்

கி.மு. முதல் நூற்ருண்டிலேயே சங்கரருடன் வாசுதேவர்கள் மகாராட்டிர தேசத்தில் வழிபடப்பட்டனர் என்று பார்த்தோம். இதே சமயத்தில் இவ்வழிபாடு தெற்கிலும் பரவியிருத்தல் வேண்டும். ஆனுல் இவை அவண் எப்பொழுது ஏற்பட்டது என்று குறிப்பிட்டுக் கூறற்கில்லை. இனி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பாயிரத்தில் உரையாசிரியர் நச்சினுர்க்கினியர் "அகத்தியனுர் தென்றிசைக்கட் போதுகின்றவர்—துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும்

பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொடுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி" என்று எழுதப்பட்டிருப்பது காணலாம். இனி அகத்தியனாரைப்பற்றிப் பல அறிஞர் பலவாறு எழுதிச் சென்றனர். அவர் முக்காலுமுணர்ந்த முதுபெருமிருடியென்றும் யோக சித்தியாற் பல்லாண்டுகள் வாழ்ந்தவரென்றும் கூறுப. அவர் இராமாயண காலத்திலேயே தென்றிசைக்கட் போந்தவர் என்றும் இராமபிரான் அவரைக் கண்டதாகவும் வான்மீகி இராமாயணமும் கம்ப ராமாயணமும் கூறும். இங்குக் கூறப்பட்ட அகத்தியனார் இராமாயண காலத்தவர் எனக் கொண்டால், அக்காலத்திலேயே அவர் தென்றிசைக்கட் போந்தபோது திருமால் வழிபாடும் பரவிற்று என்பது நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசரை அவர் அழைத்து வந்தார் என்ற செய்தி கொண்டுணரலாகும். நிலங்கடந்த நெடுமுடியண்ணல் திருமாலாகிய கண்ணபிரான் என்பது பெறப்படும். ஆகவே இராமாயண காலத்திலேயே தென்தமிழ்நாட்டில் திருமால் வழிபாடு சிறந்திருந்ததென்பதுணர்தல்கூடும். பாகவதபுராணத்திற் பின்வருமாறு வரையப்பட்டுள்ளது. "கலியுகத்தில் நாராயண வழிபாடு மிகுதியும் காணப்படும். ஆனால் அந்தப் பத்தர்கள் பெரும்பாலும் தெற்கில், தாமிரபரணி, காவேரி முதலிய நதிக்கரைகளிற்றான் காணப்படுவர்" என்பது அங்கே கண்டது. முதலாழ்வார்கள் காலம் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டென்பர் பண்டாரகர். ஆயினும் வைணவம் கி. பி. முதல் நூற்றாண்டின் முன்னரே தமிழ்நாட்டிற் புகுந்து விட்டது என்பதை மறுத்தற்கில்லை. இதுகாறும் கூறியன கொண்டு திருமால் வழிபாடு தொன்று தொட்டே தமிழ்நாட்டில் உண்டென்றும், ஆயினும் அவனது வியூகாவதாரங்களும், அவன் கோகுலத்திற் பிறந்து வளர்ந்த செய்திகளும், தமிழ்நாட்டில் கி. மு. முதல் நூற்றாண்டின்பின்னரே வழங்கலாயிற்றென்றும் ஒருவாறறியக்

கூடும்.

இனிப் பண்டைத்தமிழில் ஆதிநூலென்று போற்றப் படும் தொல்காப்பியத்துள் மாயோனைப்பற்றிய குறிப் புக்கள் உள்ளன. தெய்வமும் ஓர் நிலக் கருப்பொருள் என்றும், முல்லைநிலத் தெய்வம் மாயோன் என்றும்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகத். 5)

என்ற சூத்திரங்கொண்டுணரப்படும். நிற்க,

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ்ப் பூவைநிலையும்" (புறத். 60)

என்ற வரிகளில், உரையாசிரியர் இளம்பூரணர் "மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவைநிலையைக் கூறுதலும், பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோனிறத்தை யொத்ததெனப் புகழ்தல். நாடெல்லை காடாதலின் அக் காட்டிடைச் செல்வார் அப்பூவ்வையைக் கண்டு கூறுதல் என்று எழுதிப் பின்னர் "இஃது உரையன்றென்பார், மாயோன் முதலாகிய தேவர்களோடுவமித்தலே பூவை நிலையென்ப" என்று கூறுவர். இவண், "மாயோனுடைய காத்தற் புகழை மன்னர்க்குவமையாகக் கூறும் பூவை நிலை" என்று வரைந்து, நச்சினார்க்கினியர்,

"கடல்வளர் புரிவளை புரையு மேனி
யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்"

என்ற புறநானூற்றுச் (56) செய்யுளை மேற்கோள் காட்டுவர். இங்கே 'கடலின் வளர்கின்ற கங்கை நிகர்த்த திருமேனியையும், வன்மைவாய்ந்த வெய்ய நாஞ்சிற்படையையும் உடைய பலராமனையும், நீலமணியை நிகர்க்கும் திருமேனியையும், ஆகாயத்திற் பறக்கும் கருடப்புள்ளை யெழுதிய கொடியையுடைய மாயோனையும்' என்று கூறப்பட்டது. மற்றும் மானிடராகிய பெண்மக்கள் ஆண்மக்களிட

மும் ஆண்குழவிகளிடமுமேயன்றிக் கடவுளரிடத்தும் கட வுட்குழவிகளிடத்தும் காமப்பகுதி செலுத்துதற்குரியர் என்பதனைத் தொல்காப்பியர் "காமப்பகுதி கடவுளும் வரையார், ஏனோர் மருங்கினுமென்மனார் புலவர்" (தொல். பொருள். 83). "குழவி மருங்கினும் கிழவதாகும்" (ஷை 84) என்ற சூத்திரங்களாற் கூறுவர். இஃது தெய்வக்குழவி யாகிய கண்ணனிடம் ஆயமகளிர் கொண்ட காதலையும், கண்ணனிடம் ஆழ்வாராதியர் ஈடுபட்டதாக அருளிச்செய் யப்பட்ட காதற் பாக்களையும் உட்கொண்டே எழுந்த தாகும் என்று கூறலாம். இனிக் கண்ணபிரான் வழிபாடே யன்றி அவன் அண்ணனை நம்பிமூத்தபிரான் வழிபாடும் தமிழ்நாட்டிற் பண்டைக்காலத்து இருந்ததென்றும், அதற் குத் தொல்காப்பியர் பனைக்கொடிக்குத் தனியே சூத்திரம் தமது எழுத்ததிகாரத்திற் கூறியிருத்தல் கொண்டும் உணரலாம் என்பர் ராவ்சாகிப் மு. இராகவையங்கார் (ஆராய்ச்சித் தொகுதி பக். 54) பனைக்கொடிப் பலராமற் கன்றிப் பிறர் எவர்க்கும் இருந்ததில்லை என்பது அறிஞர் அறிந்ததொன்று.

நிற்க, தொல்காப்பியத்தை அடுத்துச் சங்க காலத்துப் பத்துப்பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் எழுந்தன. இவைகள் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின்கண் தோன் றின என்பர் அறிஞர். முதற்கண்கூறிய பத்துப்பாட்டில், மாயோனைப்பற்றிய குறிப்புக்கள் பல காணலாம்.

"கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்" (மதுரைக். 591)

"நீயிரு மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை" (பெரும்பாண். 29-31)

"புள்ளணி நீள்கொடிச் செல்வன்" (திருமுருகு. 149)

"நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கு மொன்றுபுரி கொள்கை" (ஷை 160-61)

"அவ்வயின் அருந்திறற் கடவுள் வாழ்த்தி"—அத்
திருவெஃகாவணையில் அரிய திறலையுடைய **திருமாலை**
வாழ்த்தி" (பெரும்பாண். 290-91)

"நேமியொடு, வலம்புரி தாங்கும் தடக்கை மாஅப்
மாபொறித்த மாஅப்—திருமார்பிடத்தே திருமகளை
வைத்த மால்"

"நீர்செல நிமிர்ந்த மாஅப் போல"—மாவலி வார்த்த நீர்
தன் கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல"

"நீடுகுலைக்
காந்தளம் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்" (பெரும்பாண்.)

"வழங்குநர்த் தடுத்த
அடையா வாயின் மிளைசூழ் படப்பை
நினிற வுருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பெரகுட்டிற் காண்வரத் தோன்றி" (பெரும்.)

இம்மேற்கோள்களிலிருந்து, மாயோன் பிறந்த நாள் திருவோணம் என்றும், அவன் ஈரடியால் மூன்றுலகமும் அளந்தவன் என்றும், அவனது கொடி கருடக்கொடியென்றும், அவன் காப்புக் கடவுள் என்றும், திருவெ·காவிற் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்றான் என்றும், அவன் அவுணர்களையழித்தவன் என்றும், அவன் ஆழிப் படையையும் வலம்புரிச் சங்கையும் கைகளில் தாங்கியவன் என்றும், அவன் திருமார்பகத்தே திருமகள் வதிவள் என்றும், மாவலியினிடம் மூன்றடிமண் வேண்டிச்சென்று, அவன் அவர் கேட்ட பொருளை நீரட்டிக்கொடுக்கப் பேருருவம் கொண்டு அவற்குக் காட்சி யளித்தவன் என்றும் அறியலாகும்.

இவைகளேயன்றி, திருமால் கண்ணனாக அவதாரம் செய்து ஆயர்பாடியில் ஆய்ச்சியர் மருங்கு புரிந்த பல் வேறு செயல்கள் குறிக்கப்படவில்லை.

இனிப் பரிபாடலை நோக்குவோம். இந்நூல் கிறிஸ்து ஆண்டிற்குச் சற்று முந்தியது எனச் சிலரும், கி. பி. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதியிற் றோன்றியதெனச் சிலரும் கூறுவர். இத்தொகைநூல் 70 பாடல்களைத் தன்னகத்துக்

கொண்டிருந்ததென்றும், நாளடைவிற் பல பாடல்கள் அழிந்தன என்றும், எஞ்சியுள்ள பாடல்கள் சிலவே என்றும் கூறுநிற்பர். கிடைத்துள்ள பாடல்களில் திருமாலைப்பற்றிய குறிப்புக்கள் பின்வருமாறு.

### முதலாவது பரிபாடல்

திருமால் ஆயிரம் தலைகொண்ட ஆதிசேடன்மீது பள்ளிகொண்டவன் என்பதும், பூவைப்பூ வண்ணன் என்பதும், திருஞெமர்ந்தமர்ந்த மார்பினன் என்பதும், மார்பிற் கவுத்துவமணியுடையவன் என்பதும், பொன்னுடை புனைந்தவன் என்பதும், கலுழக்கொடியுடையோன் என்பதும், பிரமனுக்கும் காமனுக்கும் தாதை என்பதும், ஆழிப்படையை வலக்கரத்தேந்தியவன் என்பதும் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது பாடல் அவனது கேழல் உருவைக் குறிக்கும்.

> "கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
> ஊழி" (2, 16-17)

> "செய்யோன் சேர்ந்தநின் மாசில் அகலம்
> வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்
> வைவான் மருப்பிற் களிறு மண்ணயர்பு" (2, 31-35)

> "உருகெழு கேழலாய் மருப்பின் உழுதோய்" (2, 21-24)

என்பவற்றைக் காண்க.

மூன்ருவது பாடல் அவனது நீலமணிபோன்ற திருமேனியையும், அவனது மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடியையும் புகழாநிற்கும். அவனது அட்டமூர்த்தமும் அப்பாடலிற் காணலாம். மற்றும் கலுழனின் அன்னையாகிய விந்தையின் இடுக்கண் தீர்த்தவன் என்றும், கேசியென்னும் அரக்கனைக் கொன்றவன் என்றும், மோகினி உருக்கொண்டு அமரர்க்கு அமுதளித்தவன் என்றும், புகழ்வதுடன், மாயோனை உபேந்திரன் என்றும் கூறும்.

மற்றும்,

> ''செங்கட் காரி கருங்கண் வெள்ளை
> பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்''

என, வாசுதேவன், சங்கருடணன், காமன் அதாவது பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற திருமாலினது நான்கு வகை வ்யூகத்தையும் கூறும். பின்னர் 'இடவல' என்று ஆய்ச்சியரோடு குரவை கோத்தலில், அவர்க்கு இடமும் வலமும் ஆனவன் என்றும், கூத்தாடுதற்கெடுத்த குடத்தை யுடையவன் என்றும், பிரமனைத் தனது உந்திக்கமலத்துத் தோற்றியவன் என்றும் கூறும்.

> ''கீழேழ் உலகமும் உற்ற அடியினை''

என்று, திருமால் திருவிக்கிரமனாக உலகளந்த அருஞ் செயல் குறிக்கப்பட்டது. இந்த அவதாரம் கூறவே, இவன் எடுத்த குறள் வடிவான வாமனாவதாரமும் கூறப்பெற்ற தாகும். மற்றும் திருமால் அன்ன வடிவெடுத்த செய்தி,

> ''மாவிசும்பு ஒழுகுபுனல் வறள அன்னச்
> சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய்''

என்பதனாற் பெறப்படும். நான்காவது பரிபாடலில்,

> ''செயிர்தீர் செங்கட் செல்வநிற் புகழ''

என்று தொடங்கும் வரிகளில், இரணியன் மகன் பிருங்க லாதன் செய்தி தெளிவாகக் கூறப்பட்டது. இஃது திருமால் நரஹரியாகத் தோன்றிப் புரிந்த அருஞ்செயல். 15-வது பரிபாடலில் திருமாலிருங்குன்றமாகிய அவனது திருக்கோயிலும், சிலம்பாறும், ஐம்படையும் கூறப்படும். திருமால் சத்துவம், ரஜஸ், தாமதம் என்ற முக்குண வேறு பாட்டான் மும்மூர்த்தியானதும் நூற்கண் கூறப்பட்டுள் ளது. இடையே ''நாஞ்சிலான்'' என்ற அலாயுதனை பலராமன் பெயரும் காணலாம். நான்காம் பரிபாடலில்,

> ''நின் தோற்றமும் அகலமும் நீரினுள''

என்ற சொற்றொடர்க்கு, உரைகாரர், ''நாராயணன் என்னும் திருப்பெயர் நீரின்கட் காணப்படுதலாகிய இக் காரணம்பற்றி வந்தது என எழுதுவர். எனவே நாரா

யணன் என்ற பெயர் வழக்குக் காணலாகும்.

மற்றும் திருமாலினது பல அருட் செயல்களும், அவனைப் போற்றி வழிபடுவார் எய்தும் நலங்களும், அவனைப் போற்றும் விதமும் பலவாறு கூறப்பட்டுள்ளன. முதற் பரிபாடலில் 44-வது வரியில் "**மடங்கலுநீ**" என்ற தொடர்க்கு,

"அவனிஞகிய உலகுயிர்களினது ஒடுக்கம்"

எனப் பரிமேலழகர் கூறுவர், மற்றும்,

"கருவளர் வானத் திசையிற் ருேன்றி
உருவறி வாரா வொன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த வூழு மூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்" (2, 5, 9)

என்றஇடத்தில் பரம்பொருளினின்றும் ஆகாயம் தோன்றி, அதனினின்றும் காற்றுத் தோன்றி, அதனினின்றும் தீத் தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி, அதனினின்றும் நிலம் தோன்றிற்றென்று வேதத்திற் கூறப்படும் செய்தி தெளிவாகக் கூறப்பட்டது. "ஆகாசாத்வாயு" என்று தொடங்கும் மறைப் பகுதியைக் காண்க. செய்யோன் சேர்ந்த "திருமாலின் மாசில் மார்பு" குறிக்கப்பட்டது. திருமால் காப்புக் கடவுள் ஆகலின், அன்பர்கள்,

"கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா டறியற்க எம்மறி வெனவே"

என எஞ்ஞான்றும் மனத் துயரின்றித் தாம் வாழ வேண்டும் என வேண்டுதல் காணலாம்.

இனி, மூன்ரும் பாடலில், "நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை" என்பது முதலாக, பெயர் உருவில்லாத ஈசற்குப் பல பெயர்களும் உருக்களும் தந்தமைக்கும் உலகியல் முறை அணிபெறக் கூறப்பட்டது. இங்கு, உரைகாரர், "தனக்கோர் வடிவும் பெயருமின்றி, அன்பராயினேர் கருதிய வடிவே வடிவமாகவும், அவர் இட்ட பெயரே பெய

ராகவும் உடையனுதலின் 'முக்கை முனிவ' என்பது முதலாக, 'நூறுயிரங்கையாறறி கடவுள்' என்பது ஈருக, வடிவு வேற்றுமையும் பெயர்ப் பன்மையும் சொல்லப் பட்டன."

"ஒருநாமம் ஓருருவ மில்லாதாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்ற திருவாசகக் கருத்து இங்கே அறியத் தக்கது. இந்தக் கைகளின் வருணனை திருமுருகாற்றுப்படையிற் காணப்படும் முருகப்பெருமானது கர வருணனையை ஒத்து விளங்குதல் காணலாம். இனி,

"தீயினுட் டெறலுநீ பூவினுள் நாற்றனீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
அனைத்துநீ அனைத்தினுட் பொருளுநீ" (3, 63-68)

என்ற பகுதியில், திருமால் எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய் விளங்கி நிற்கும் தன்மையைக் கூறினர். பகவற்கீதையிற் கண்ணபிரான் பார்த்தனிடம், தான் இந்த இந்தப் பொருள்களாக இருக்கிறேன் எனக் குறிக்கும் பகுதி இத்துடன் ஒப்பு நோக்கி உணரத் தக்கது.

"பிறவாப் பிறப்பிலை, பிறப்பித்தோ ரிலையே"

என்ற வரியும்,

"பிறப்பில் பல்பிறவிப் பெம்மான்"

என்ற வரியும்,

"அஜாய மானே பகுதா விஜாயதே"

என்ற புருடசூக்த வரியை நினைவுறுத்துகின்றன.

"நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலும் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலு நோன்மையு ஞாலத்துள"

என்ற பகுதியில் இறைவனது பல தன்மைகளும் நன்கு கூறப்பட்டன.

"அவன் மடிமேல் வலந்தது பாம்பு, பாம்பு தொடி, பாம்பு முடிமேலன, பாம்பு பூண், பாம்பு தலைமேலது, பாம்பு சிறை" என்ற வரிகள், ஆதிசேடன் திருமாலுக்குப் புரியும் பல சேவைகளையும் தொகுத்துக் கூறும்.

"சென்றாற் குடையா மிருந்தாற் சிங்காதனமாம்,
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்,
என்றும் புணையா மணி விளக்காம் பூம்பட்டாம்
புல்கும், அணையாம் திருமாற் கரவு"

என்ற செய்யுளில், சேஷத்துவம் என்ற இச்சேவைத் திறனைக் காணலாகும். இன்னும், "மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே" என்ற இடத்து, "அன்பர் மனத்திற் கொண்டன வன்றி நினக்கென வேறு வடிவுடையை யல்லை" என்றது காண்க. "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்றார் பிறரும். மற்றும் பல தெய்வங்களை மக்கள் பாவித்தாலும், அத்தெய்வங்களாகவே திருமால் திகழ்வன் என்பது,

"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலக் குன்றமும் பிறவும்
அங்ஙனமேய வேறு வேறு பெயரோய்"

என்ற அடிகளிற் குறிக்கப்பட்டுள்ளன. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையுள் முருகன் உறையும் இடங்களாக இவை குறிக்கப்பெற்றுள்ளமை காண்க. இக்கருத்தே,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

என்ற இடத்தும் காணலாம். மேலும் குணங்களால் உணரப்படுவனவாகிய பூதங்களும் அவனே என்பதை,

"முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணரும் தீயு நீயே
நான்கி னுணரும் நீரு நீயே
ஐந்துடன் முற்றிய நிலனு நீயே"

என்ற வரிகளிற் குறித்தல் காணலாம். பரிபாடற்றிரட்டில் "திருமாலைப்பற்றிய செய்திகள் சில கூறப்படுதல் காணலாம். "இருந்தையூர் அமர்ந்த செல்வ" எனத் திரு மாலை விளிப்பர். இதனை இருந்தவளமுடையார் கோயில் என்ப. (சிலப். 18, 4 அ. ப.) சங்கப் புலவர்களின் பெயர் களுள் இவ்வூரை அடுத்த பெயர்களாக இருந்தையூர்க் கருங்கோழி மோசியார், இருந்தையூர்க் கொற்றப் புலவ னென இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன என்பர் டாக்டர் வே. சாமிநாதையர். இனி,

> "பாழெனக் காலெனப் பாகென ஒன்றென
> இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
> ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
> நால்வகை யூழியென் நவிற்றும் சிறப்பினை" (3, 77-80)

இங்கே பாழ் என்பது புருடன் அல்லது ஆன்மா. கால், ஆகாயமுதற் பூதங்களைந்தும். பாகு என்பது வாக்கும், காலும், கையும், பாயுவும், உபத்தமும் என்ற கன்மேந்திரி யங்கள் ஐந்து. ஒன்றென்பது ஆகாயத்தில் உண்டாகிய ஓசை, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து முறையே ஊறு, ஒளி, சுவை, ஓசை, நாற்றம் என்றவற்றைக் குறிக்கும். ஆறு செவி, தோல்கள், நா, மூக்கு என்ற ஞானேந்திரியங்களும் மனமும். ஏழு, அகங்காரம். எட்டு, மான். தொண்டு மூலப் பகுதி. எனவே, பூதங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், புலன்களைந்தும், மன முதலிய அந்தக்கரணங்கள் மூன்றும், மூலப்பகுதியும், புருடனும் எனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனுலும் எக்காலத்தும் ஆராயப்படும் பெருமையையுடையன் என்று கூறப் பட்டது. மற்றும் திருமாலின் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை எனக் கூறும் ஐவை நிலைகளும் உண்டு. இவற்றுள் பரத்துவம் திருமால் பரம பதத்தில் உள்ளநிலை, வியூகம் படைத்தல் ஆதித் தொழில் களை நடத்துதற்கு மேற்கொள்ளும் நிலை; விபவம் என்பது அவதாரங்கள்; அந்தர்யாமித்துவம் என்பது எள்ளுநறு நறு நெய்போல் பொருள்கள் தோறும் விரவி நிற்கும்

நிலே; அர்ச்சை திருக்கோயில்களில் காணப்படும் உருவ வடிவம்; இவ்வைந்து நிலேகளும் இப்பரிபாடலிற் கூறப்பட்டுள்ளன.

'' நாறிணர்த் துழாயோன் நல்கி னல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்''

இதில் திருமாலின் பரத்துவ நிலேயைக் காணலாம்.

'' செங்கட் காரி கருங்கண் வெள்ளே
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்'' (3, 81-82)

இவ்வடிகளில் சங்கருடணன் முதலாய வியூகநிலேயைக் காணலாம். அவரது விபவ நிலே மேலே கூறப்பட்ட அவரது அவதாரங்கள் கொண்டுணரலாம். மற்றும்,

'' புலமும் பூவினுள் நாற்றமுநீ
வடுவில் கொள்கையி னுயர்ந் தோராய்ந்து
கெடுவில் கேள்வியுள் நடுவாகுதலும்''

என்ற வரிகளில், அவரது அந்தர்யாமிநிலே கூறப்பட்டது. திருமாலிருஞ்சோலே மலேயில் கண்ணன் உருவமும் பலராமன் உருவமும் இருந்தனவாகக் கூறுதலின் அவரது அர்ச்சாவதாரம் உணரலாம்.

இனி, கலித்தொகையில் உள்ள திருமாலேப் பற்றிய குறிப்புக்களே நோக்குவோம். கலித்தொகை 26-இல்,

'' ஒரு குழை யொருவன் போலிணர் சேர்ந்த மராஅமும்''

என்று பலராமனுகிய நம்பி மூத்தபிரான் குறிப்பிடப்பட்டனர். ''கொடு மிட ஞஞ் சிலான்'' என்று இந்நூல் 36-ஆவது செய்யுளில் இவர் கூறப்படுவர். கலி. 52-இல் மல்லரை மறஞ் சாய்த்த மால் என்று மாயோன் குறிப்பிடப்படுகின்ருன்.

முல்லேக்கலி. 3-ஆவது பாட்டில் மாயோன் என்ற பதம் காணலாம். நான்காவது பாடலில்,

'' வானுற வோங்கிய வயங்கொளிர் பனேக்கொடிப்
பானிற வண்ணன் போற் பழிதீர்ந்த வெள்ளேயும்''

என்றும்,

"பொருமுரண்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன் போற்றிறல் சான்ற காரியும்"

என்றும் வருகின்றன. மற்றும் அதே செய்யுட்கண்,

"பான்மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும்
நீனிற வண்ணன்"

என்ற தொடரைக் காணலாம்.

முல்லைக்கலி 5-ஆவது பாடலில்,

"வள்ளுருணேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்கும் சுரிநெற்றிக் காரியும்"

என்ற இடத்தில், மாயோன் ஆழி தாங்கிய கையன் என்றும், அவன் வாய்வைத்தூதுஞ் சங்குபோலச் சுரி கொண்ட நெற்றியையுடைய காரி என்றும் காணப்படுகிறது. மற்றும்,

"சுரும்பிமிர் கானம் பாடினம் பரவுதும்
ஏற்றவர்புலங் கெடத்திறை கொண்டு
மாற்றாரைக் கடக்க வெம்மறங் கெழுகோவே"
(முல்லைக்கலி. 6)

"பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொள் நேமியாற் பரவுதும்" (ஷ 5)

"தொல் கதிர்த் திகிரியாற் பரவுதும்" (ஷ 4)

"தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்"

என்றவற்றையும் காண்க.

நெய்தற்கலி 7-ஆம் பாட்டில்,

"ஞால மூன் றடித்தாய முதல்வற்கு முதுமறைப்
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய"

என்ற அடிகளைக் காணலாம்.

10-ஆவது பாடலில்,

"செருமிகு நேமியான் தார் போல"

என்றும் காணலாம்.

நெய்தல் 17-இல்,

"மறஞ் சாய்த்த மலர்த் தண்டா ரகலத் தோன்
ஒல்லாதா ருடன்றோட வுருத்துட னெறிதலிற்
கொல்யானை அணிநுத லழுத்திய வாழிபோல்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்"

என்ற வரிகள் காணப்படும்.

இனித் திருமாலின் அவதாரச் செயல்களைக்கூறும் பாரத இராமாயணக் குறிப்புக்கள் பலவற்றைக் கலித் தொகையிற் காணலாம். உதாரணமாக,

"அஞ்சீரசை யியல் கூந்தற்கைந் நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்"

என்ற வரிகளில், வீமன் பாஞ்சாலியின் கூந்தலைத் தொட்டிழுத்த துச்சாதனனைப் போரிற் கொன்று தன் சபத முடித்த செயலைக் காணலாம்.

இங்ஙனம் யானை அணி நுதலின் ஆழி யழுத்திய வரலாறும், மேலே பான்மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுத்த வரலாறும், தெளிவாக அறியப்படவில்லை. "பான்மதிக் கிடர்தீர்த்தான்" என்றும், "பான்மதிக்கோள் விடுத்தான்" என்றும், திருமங்கை யாழ்வாரும் குறிப்பர்

மற்றும்,

"ஆரிருள் என்னுன் அருங்கங்குல் வந்துதன்
தாளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம்"

என்ற முல்லைக்கலியில், அசுவத்தாமன் திட்டத்துய்மனைக் கொன்ற செய்தியும்,

"புரிவு மேற்சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவரட்ட
பொருகளம் போலும் தொழூஉ" (முல்லைக்)

என்ற பகுதியில் பாரதப் போர்க்களமும், "மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத்திடுவான்

போல்'' (குறிஞ்சிக். 16) என்ற பாடலில், வீமன் துரியோதனனைக் கொன்ற செய்தியும் கூறப்பட்டன. இனிக் குறிஞ்சிக் கலியில்,

'' இமையவில் வாங்கிய ''

என்ற 2-ஆம் பாடலில், சிவபிரான் வீற்றிருந்த கைலை மலையை இராவணன் எடுக்க முயன்று உழந்த செய்தியும் குறிக்கப்பட்டது.

நிற்க, புறநானூற்றில்,

'' அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள்கண் கெடுத்த பரிதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீரக் கடுந்திறல்
அஞ்சன வுருவன் தந்து நிறுத் தாங்கு '' (புறம். 174)

என்ற இடத்தில், அசுரர் சூரியனை ஒளித்ததும் திருமால் அதனை மீட்டதும் கூறப்பட்டுள்ளன. இதன் வரலாறு அறியக்கூடவில்லை. மற்றும் குறிஞ்சிக் கலியில்,

'' கதிர்விரி கனை சுடர் ''

என்ற பாட்டில், இருபுறமும் மலையருவிகள் வீழ, மாணிக்கப் பாறையில் மலர்ந்த வேங்கையின் தோற்றம், இருபுறமும் வேழம் தன் புழைக்கையினின்றும் நீர் சொரிதரத் தாமரை மலரில் வீற்றிருந்த திருமகள் போன்று விளங்கும் என்பர். இங்கே திருவைப்பற்றிய செய்தியுண்மை காணலாம். இந்தக் கஜலட்சுமியைப் பற்றிய குறிப்பு நெடுநல்வாடையினும் காணப்படும்.

இனி, அகநானூற்றில் பின்வருங் குறிப்புக்கள் காணப்படும்.

'' வடாஅது,
வண்புனற் றொழுநை வார்மண லகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போல '' (அகம். 59)

என்ற இடத்தில்,

"ஆயர் பெண்கள் குளியா நின்ருர்களாக. அவர் இட்டு வைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக்கொண்டு குருந்த மரத் தேற்ருராக, அவ்வளவில் நம்பி மூத்தபிரான் வந்தா ராக, அவர்க்கு ஒரு காலத்தேகூட மறைதற்கு மற்ருெரு வழியின்மையின் ஏறிநின்ற குருந்த மரத்துக் கொம்பைத் தாழ்த்துக் கொடுத்தார். அதற்குள்ளே அடங்கி மறை வாராக, அவர் போமளவும் தானையாகவுடுக்கத் தாழ்த்தா ரென்பாரு முளர்," என்று எழுதுவர் உரைக்குறிப்பாசி ரியர். இக்கதையை,

"நீனிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண ஞேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானைவேந்தே விரிபுனற் ருெழுநை யாற்றுட்
கோனிறை வளையினுர்க்குக் குருந்தவன் ஒசித்த
தென்ருன்"

என்று சிந்தாமணியிலும் (209) கூறப்பட்டது காண்க. பாகவதத்தில் இவ்வாறு கோவியர் ஆடையைக் கண்ணன் கவர்ந்த வரலாறு சிறிது வேறுபட்டுக் காணப்படும். மற்றும் இதே நூலில்,

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராமன் அருமுறைக் குவித்த
வல்வீழாலம்போல, ஒலியவிந்தன்றிவ் வழுங்கலூரே"
(அகம். 70)

இங்கே, இராமபிரான் கோடிக்கரையில் தாமும் பரிகர மும் விசாரிக்கப்புக்க மறையின் பொருட்டுப் புள்ளினங்கள் ஓசை அவிந்து நின்ற வரலாறு குறிக்கப்பட்டது. பரிகரம், இங்கே, அநுமான் சுக்ரீவன் முதலானேர். தென்கடற் கரையில் சென்று தங்கிய இராமபிரான், மேல் இராவண வதத்திற்கான காரியத்தை ஆராய்ந்த வரலாறு இது. இச்செய்தி தமிழ்நாட்டு வழக்கு. இராமாயணங்களிற் காணப்படவில்லை. மற்றும்,

"மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்வி

கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல'' (அகம். 220)

என்ற பகுதியில், பரசுராமர் தம் தந்தையான யாமதங்கியைக் கொன்ற கார்த்தவீரியனை மட்டுமல்லாது, 21 தலைமுறை மன்னர் மரபினரை வதைப்பதாக மேற்கொண்ட கொடுஞ்சூளுறவு குறிக்கப்பட்டுள்ளது. பரசுராமர் திருமாலின் 10 அவதாரங்களுள் ஒன்றென்பர். மேலும் அகம். 137 திருவரங்கத்தில் நடைபெறும் பங்குனி விழாவைக் குறிக்கின்றது. இவ்விழா, திருவரங்கத் தண்மையிற் காவிரியின் தென்கரையில் உள்ள உறையூர் என்ற திவ்யதேசத்தில் இன்றும் நடைபெறுகின்றது. ''உறையூர்ப் பங்குனி உத்திரமே கருவூர் உள்ளி விழாவே'' என்று கூறப்பட்டது காண்க.

இனி, பதிற்றுப் பத்தில், களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய நான்காவதுபத்துள் திருவனந்தபுரத்துக் கோயில்கொண்டுள்ள திருமாலின் வழிபாட்டுச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. மற்றும், நற்றிணைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் திருமால் மறைகளாற் போற்றப்படும் நிலையும், அவர் எங்கும் பரந்து நிற்கும் நிலையும், எள்ளுக்குள் எண்ணெய் போல் எவ்வுயிர்மாட்டும் நிற்கும் நிலையும், அவர் ஆழி தாங்கி நிற்பதும், பிறவும் கூறப்பட்டுள்ளன.

இனி, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் ''தாமரைக் கண்ணான்'' என்றும், ''அடியளந்தான்'' என்றும், திருமாலை யுணர்த்துஞ் சொற்களைக் காணலாம்.

நிற்க, கி.பி. முதல் நூற்றாண்டுவரையில் திருமாலின் வியூகாவதாரங்களாகிய சங்கருடணன் முதலியவை பேசப்படவில்லை யென்றும், பதஞ்சலியார் பாடியத்திலும், கல்வெட்டுக்களிலும், இவைகளைப்பற்றிய குறிப்புக்கள் இல்லையென்றும் மேலே கூறப்பட்டது. எனவே, இவைகளைப்பற்றிய குறிப்புக்களைத் தம்மகத்தே கொண்ட

நூல்கள் கிறித்து ஆண்டுத் தொடக்கத்தின் பின்னரே தோன்றியிருத்தல்வேண்டும் என்றும் ஒருவாறு கருதலாம். பரிபாடலில் இந்த வியூகாவதாரங்கள் விளக்கமாகக் கூறப் பட்டுள்ளன. இனி விஷ்ணுவும், ஆயர்பாடிக் கண்ணனும் ஒன்றுபடுத்தப்பட்டதும் பிற்காலத்தேதான் என்ப. கிறித்து சகாத்தத்திற்கு முன்பு அவ்வித ஒற்றுமை குறிக் கப்படவில்லை என்று கூறிக் கோவிந்தன் என்ற சொல் பகவற்கீதையிலும், மகாபாரதம் சாந்திபருவத்தும் நிகழ் கின்றதென்றும். ஆயினும், அதற்குப் பாதாளத்தில் அடைபட்டிருந்த பூமகளை விடுவித்ததுபற்றித் திருமாற்கு வழங்கிய பெயர் என்றும், கண்ணனுக அவதரித்த ஞான்று, கோவர்த்தனகிரியைக் குடையாகக் கொண்டு கோக்களைக் காத்த அருட்செயலே அப்பெயர் குறியா தென்றும், கூறுவர் பண்டாரகர். மற்றும், கண்ணனைப் பற்றிய செய்திகள் கி.பி. 3-ஆம் நூற்றுண்டிலியற்றப் பட்டதாகக்கூறும் அரிவம்சம் என்ற நூலிற் காணப்படும். பாஞ்சராத்திரம் என்ற பாகவத மதத்திலும், ஆயர்பாடிக் கண்ணனது திருவிளையாடல்கள் குறிக்கப்பெறவில்லை. இராமானுசரும், மத்வாச்சாரியாரும், கண்ணனது ஆயர் பாடிக் கதைகளை ஏற்கவில்லை. கண்ணனது பல வீரச் செயல்களும் அவன் ஆய்ச்சியரோடு ஆடிய ஆடல்களும், பாகவதம் முதலிய புராணங்களில் விரிவாகக் கூறப் பட்டன. எனவே இக்குறிப்புக்கள் அடங்கிய நூல்கள் கி.பி. 3-ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டன ஆகலாம். கி.மு. முதல் நூற்றுண்டிலேயே சங்கருடண வாசுதேவர் கள் மராத்தியரால் வழிபடப்பட்டனர் என்று குறித்தோம். இதே காலத்தில் இம்மதம் தெற்கிலும் பரவியிருத்தல் வேண்டும். அக்காலத் தெழுந்தனவாகலாம் பரிபாடல் முதலிய நூல்கள்.

இனிப் பத்துப்பாட்டில் மாயோன் கண்ணனுகத் தோன்றி ஆயர்பாடியில் ஆய்ச்சியர் மருங்கு புரிந்த பல் வேறு செயல்கள் குறிக்கப்படவில்லை. எனவே தொகை நூல்களில் இதனை முற்கூறலாம். மற்றும் எட்டுத்தொகை

யில் ஒன்ருன கற்றறிந்தார் ஏத்தும் கலியில்,

" மல்லரை மறஞ் சாய்த்த மலர்த் தண்டா ரகலத்தோன் "

என்ற (நெய்தற்கலி) வரியின் உரையில்,

"பகையாய் வந்த மல்லர் என்றது, கஞ்சனேவலால் தன்னைக் கொல்லவந்த சாணூரன், சலன், கௌசலன் முதலியவரை" என்று எழுதப்பெற்றுள்ளது கொண்டு எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகை இறுதியில் தோன்றியிருக்கக்கூடும் என்று கருதலாம். வரலாற்றறிஞரும் தொகை நூல்கள் ஏற்பட்ட காலம் கி.பி. 2-ஆம் நூற்ருண்டு என்று கருதுவதும் காண்க.

இனி, பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்ருகிய திரிகடுகத்தில்,

" கண்ணகன் ஞால மளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததும்—நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப் பூவண்ணனடி "

என்ற வெண்பா காணப்படுகின்றது.

இனிச் சிலப்பதிகாரத்தில்,

" நீல மேக நெடும் பொற் குன்றத்துப்
பால் விரிந் தகலாது படிந்தது போல
வாயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் "

எனத் திருமாலின் கிடந்த திருக்கோலமும்,

" வீங்கு நீரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலயத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு

நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால் வெண் சங்கமுந்
தகை பெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்''

என்ற திருமால் நின்ற திருக்கோலமும் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து உயர்ந்த பொன்மலையின் மீது நீலமுகில் படிந்ததுபோல ஆயிரந்தலைகளுடைய ஆதி சேடனாகிய பாயன்மீது காவிரியின் ஆற்றிடைக் குறையாகிய திருவரங்க மென்னும் திருப்பதியில், திருமகள் அமரும் மார்பனாகிய திருமால் பள்ளிகொண்டருளும் செய்தியும், ஒலிக்கின்ற அருவிகள் மலிந்த திருவேங்கடம் என்னும் திருமலையில் ஞாயிறும் திங்களும் இருமருங்கும் ஓங்கி விளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீல நிறத்தையுடைய மேகம் தன் மின்னாகிய புதுப் புடைவையை யுடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றாற்போல, ஆழியையும் சங்கையும் அழகிய தாமரைக் கையகத்தே வலனு மிடனு மேந்தி அழகிய ஆரத்தைத் திருமார்பிற் பூண்டு பொற்பூவாடையையுடுத்து அவன் நின்றருளும் செய்தியும் அறியப்படும். வேங்கடமலை தமிழ்நாட்டின் வடவெல்லையென்பது தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் செய்த பாயிரத்தினின்றும் உணரப்படும். மற்றும் வேங்கடத்தைப்பற்றிய செய்திகளைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்களிற் காணலாம். எனினும் திருமால் வேங்கடத்தில் நின்றருளும் செய்தி இந்நூல்களிற் கூறப்படவில்லை. திருவரங்கத்தைப்பற்றிய செய்தி முதன்முதலாகச் சிலப்பதிகாரத்திற்றான் கூறப்படுகிறது. சங்கப் பனுவல்களாகிய தொகைநூல்களில் அத்தலத்தைப்பற்றிய செய்திகள் இல்லை. புல்லி என்ற ஓர் சிற்றூர்த் தலைவன் வேங்கடத்தை ஆண்டதாகத் தெரிகின்றது. சிலப்பதிகார காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாயின் திருவரங்கத் தலவழிபாடும் அந்நூற்றாண்டிலிருந்தே தோன்றியிருக்கவேண்டும் என ஊகிக்கலாம். ஆயினும் ஓர் தலம்

புகழும் பெருமையும் பெற்று விளங்கிய காலத்துக்குச் சில பல ஆண்டுகட்கு முன்பே தோன்றியிருக்கவேண்டும் என்ற கொள்கைக்கிணங்கக் கிறித்து ஆண்டுத் தொடக்கத்திலேயே திருவரங்கத்தலம்வழிபாட்டிற்குரியதாக இருந்திருத்தல் வேண்டும். மற்றும் திருவரங்கத்திற் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதப்பெருமான் வீடணன் பிரதிட்டையென்று அத்தலபுராணம் கூறும். அவ்வாறெனின் இராமாயண காலத்திலேயே திருவரங்கம் தலமாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு இராமாயண காலத்திலிருந்தே திருமால் வழிபாடு தென்னாட்டிலிருந்து வந்தமை தெரியலாம்.

இனிச் சிலப்பதிகாரத்தில் திருமால் குன்றமும் அதன்கண் உள்ள பிலத்துவாரமும் அவணிருந்த பவகாரணி முதலிய மூன்று பொய்கைகளும் கூறப்பட்டுள்ளன. திருமால்குன்றம் என்பது அழகர்மலை. இதே மலையைத் திருமாலிருஞ்சோலைமலையென்றும் அது முருகற்குரிய படைவீடுகள் ஆறனுள் ஒன்றென்றும், நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையான் அறியப்படும். இது கடைச் சங்கப் புலவரான நக்கீரர் பாட்டாதலின், அவர் காலத்திலேயே இம்மலை முருகற்குரிய தலமாகவும் விளங்கியதென்பது தெரிகின்றது. மற்றும் திருமால் கடல் கடைந்ததும், இலங்கையிற் போர் நிகழ்த்தியதும், அவன் பாரதப் போரிற் றேரூர்ந்ததும், அவனது பத்து வகை ஆடல்களும், பிறவும் இக்காப்பியத்திற் குறிக்கப்பட்டுள்ளன. மற்றும் திருமால் கண்ணனாக அவதாரம் செய்த செய்தியு, அவன் கஞ்சனது வஞ்சம் கடந்தது, கன்றாற் கனியுகுத்தது, அருச்சுனன் மகன் அபிமன்யுவின் பொருட்டு ஆதவனை ஆழியான் மறைத்தது, பாண்டவர்க்காகத் தூது சென்றது, யானையின் கோட்டை ஒசித்தது, வாணனை வென்றது ஆகிய இவைகள் அவனது வால சரித நாடகங்களாகக் கூறப்பட்டுள்ளன. ஆய்ச்சியர் குரவையில், கண்ணன் ஆயர்பாடி மகளிருடன் குரவையாடிய செய்தி

யையும் காணலாம். ஷை குரவையில்,

"ஆங்கு,
தொழுவிடை யேறுகுறித்து வளர்த்தார்
எழுவரிளங் கோதையார்
என்றுதன் மகளை நோக்கித்
தொன்றுபடு முறையால் நிறுத்தி
இடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்
குடமுதலிட முறையாக் குரல் துத்தம்
கைக்கிளை யுழையிளி விளரிதாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே."

"மாயவன் என்றாள் குரலை விறல் வெள்ளை
ஆயவன் என்றாள் இளிதன்னை—ஆய்மகள்
பின்னையாம் என்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையாம் என்றாள் முறை."

"மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்
வால்வெள்ளைசீரார் உழையும் விளரியும்
கைக்கிளை பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாள்
முத்தைக்கு நல்விளரிதான்."

"அவருள்
வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதான் உள்படுவாள்—கொண்டசீர்
வையம் அளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாள் நம்பின்னைதா னென்றே
ஐயென்றா ளாயர் மகள்."

இதன் கருத்து. ஏழு இளம்பெண்கள் தமது மணங் குறித்து வளர்த்த ஏழுவகை ஏற்றினை அடக்கியவனையே மணப்பேம் எனக் குறித்து வளர்த்தனர். இம்மகளிரைப் பழைய நரம்புகள் நிற்கும் முறைமைகளிலே நிறுத்தி இடையர் குலத்து மாதரி இவர்கட்குப் பனத்துக்கோட் பெயரிவாளாயினள். பன்னிரண்டு ராசிகளுள்ளே இடபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம் என்னு மேழினும் குரல் முதலாய ஏழும் முறையே நிற்பது ஓர் முறை. துலாம், தனுசு, கும்பம், மீனம், இடபம், கடகம்,

சிங்கம் என்னும் ஏழினும் குரல் முதலாய ஏழும் முறையே நிற்பது மற்றோர் முறை. இவ்விரு முறையானும் எழுவரும் நின்று கைகோத்துப் பாடுகின்றனர். ஆகலின் ஒருகால் இடத்தில் நின்றவர் மற்றொருகால் வலத்திலும், வலத்தில் நின்றவர் இடத்திலுமாக மாறி நிற்றல் இயல்பு. இவ்வாறு குரவை யாடினர். இக்கூத்து பெரும்பாலும் இராசக் கிரீடை என வடமொழியாளர் கூறும் ஆட்டத்தை யொத் திருப்பது காணலாம். அதே பகுதியில் திருமால் கடல் கடைந்ததும், உலகுண்டதும், ஈரடியால் மூவுலகும் அளந் ததும், இராமனாக அவதரித்தனான்று தம்பியொடு கான் போந்ததும், இலங்கையைக் கட்டழித்ததும், பஞ்சவர்க் குத் தூதானதும் காணப்படும். அதிலேயே, திருமால், கரியவன், நாராயணன், மாயோன் என்ற நாமங்களைக் காணலாம்.

மேற்கூறியதிலிருந்து நாராயணனும், திருமாலும் ஆயர் பாடி மாயக்கண்ணனும், ஒன்றுபட்டு மக்களால் வணங் கப்பட்ட காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் பின்னரே யென்று ஏற்படும். பரிபாடலிலும்,

"புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருள் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்தும் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
நலம்புரிஇ யஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென வுரைத்தனெ முள்ளமர்ந் திசைத்திறை
இருங்குன்றத் தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே" (பரி. 15)

என்ற வரிகள் திருமாலையும் அவன் அண்ணனாகிய பல தேவனையும் குறிக்கும். இவற்றிலிருந்து கண்ணபிரானும் அவன் பிராட்டி நப்பின்னையும், பலதேவனும் வணங்கப் பட்ட செய்தி நன்கு விளங்கும். பலதேவற்குத் தனிக் கோயில்கள் அக்காலத்திருந்தன என்பதற்குச் சங்கத் தொகை நூல்களிற் போதிய சான்றுகள் உள்ளன.

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்" (சிலப். 5, 171-2)

"உவணச் சேவ லுயர்த்தோ னிமயமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்"

என்ற வரிகளைக் காண்க. திருமால் வணக்கம் இவ்வாறு தென்னிந்தியாவில் மிகப்பழங் காலத்திலிருந்தே உள்ளது. சிலப்பதிகாரத்துடன் எழுந்த காப்பியம் எனப் புகழப் படும் மணிமேகலையில், சமயக்கணக்கர் தந் திறங்கேட்ட காதையுள் வைணவ வாதம் கூறப்படுதலானும், வைணவ சமயத்தின் முதன்மை அறியப்படும். "பூவிற்குத் தாமரை பொன்னுக்குச் சாம்புநதம், ஆவிற்கருமுனியா யானைக்கம ரும்பல்போன்று, தேவிற்றிருமால்" என்பது திருவள்ளுவ மாலை.

புலவர்கள் மட்டுமன்றிப் பண்டைத் தமிழ் அரசர் பலரும் திருமால் பத்தியிற் சிறந்து விளங்கினர் என்பதற் கும் பண்டை நூல்களிற் சான்றுகள் உண்டு. செல்வக் கடுங்கோவாழியாதன் என்ற சேரமன்னன், "மாயவண் ணனை மனனுறப் பெற்றவன்" என்று பதிற்றுப்பத்துக் கூறும். சேரமன்னனாகிய செங்குட்டுவனும் பரமசைவனான நிலையிலும், திருமாலிடமும் அன்பு பூண்டிருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறும். கோச்செங்கண்ணன் என்ற சோழ மன்னன் திருநறையூர்த் திருமாலிடம் விழுமிய அன்பு பூண்டிருந்ததாகத் திருமங்கையாழ்வார் கூறுவர். பரிபாடல் 15-ஆம் செய்யுளிலிருந்து இளம்பெருவழுதி என்ற பாண் டியன் திருமாலிடம் அன்பு பூண்டவன் எனத் தெரிய லாகும். இவ்வாறு திருமால் வழிபாடும் வணக்கமும் நிகழ்ந்தபோதிலும், மதவைராக்கியமும், மதச்சண்டை களும் சங்க காலத்திலில்லை. சமயத்தைப் பொறுத்த வரை யில் மக்கட்குப் பொதுநோக்கம் இருந்தது. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் சமணப் பற்றுள்ளவர். அவரது உடன் பிறந்தோன் செங்குட்டுவன் சைவன். மேலும் சங்க காலத்தில் அரசரின் ஆதரவாற் சமயங்கள் நன்கு தழைத்தன.

ஆனால் சங்க காலத்தை யடுத்து அதாவது கி. பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் சமண பௌத்தங்களாகிய அவைதீக சமயங்கள் தென்னாட்டிற்புகுந்தன. இச்சமயத்தினர் சமண பௌத்தப் பள்ளிகள் பல அமைத்ததோடு, தங்களுடைய சமயக் கொள்கைகளையும் பரப்பி வந்தனர். அவர்கள் சமய வாதங்களில் வல்லவர். அவர்களிற் பலர் நாட்டு மொழிகளைப் பயின்று அம்மொழியிலேயே பல காப்பியங் களும் நீதி நூல்களும், நிகண்டுகளும் ஆக்கினர். பல்லவர் முதலிய மன்னர் பலரின் ஆதரவு அவர்கட்கு ஏற்படவே, அவர்கள் முதன்மைபெற்று விளங்கினர். அவர்கள் சமயம் தலையெடுத்த அளவில், சைவம், வைணவம் முதலிய வைதீக சமயங்கள் குன்றத் தொடங்கின. கி. பி. 600 லிருந்து 625 வரை அரசு புரிந்த பல்லவ மன்னனான மகேந் திரவன்மனும், அதேகாலத்தில் மதுரைமாநகரத்து அரசு செலுத்திய கூன் பாண்டியன் என்ற, நின்றசீர்நெடுமாற னும் சமண சமயத்தைத் தழுவி நின்றனர். சைவத்தினின் றும் வழுவி, பிற சமயத்தைத் தழுவி நின்ற இவ்விருவரும் அப்பர் என்ற திருநாவுக்கரையரானும், திருஞானசம்பந் தப்பெருமானாலும், முறையே சைவராக மாறிய வரலாறு சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராண வாயிலாக வும், கல்வெட்டுக்களின் வாயிலாகவும் அறியலாம். அனல் வாதம், புனல் வாதம் முதலிய வாதங்களினும் சமணரை வெற்றி கொண்டு, ஆளுடையபிள்ளையார் பாண்டியநாட் டிற் சைவத்தை நிலைநாட்டினர். இவ்விரு சைவப் பெரி யாரும் தாம் இயற்றியருளிய தேவாரப்பதிகங்களிற் பதிகந்தோறும் பௌத்த சமணர்களை யிகழ்ந்தும் அவரது கொள்கைகளைக் கடிந்தும் வந்திருக்கின்றனர். சைவ அடியார்களைப்போன்றே வைணவ அடியார்களாகிய ஆழ்வார்களும் இந்த அவைதீக சமயங்களைக் கண்டிக்கத் தலைப்பட்டனர். பல கோயில்கள் ஆங்காங்கே கட்டப்பட் டுத் திருமால் வழிபாடு செவ்வனே நடைபெற்றது. சைவ சமயாசாரியர்போன்றே ஆழ்வார்களும் திவ்யதேசங்களை நேரிற்சென்று தரிசித்துப் பலபாசுரங்கள் பாடியுள்ளனர். இவைகளிற் பல செய்யுட்களுக்குப் பண் அமைக்கப்பெற்

றுள்ளது. இப்பாசுரங்களிற் பல இடங்களில் சமண பௌத்த சமயங்களை இகழ்வதைக் காணலாம். இந்த அருளிச் செயல்கள் எல்லாவற்றிற்கும் நாலாயிரப் பிரபந்தம் எனப் பெயர் வழங்குகின்றது.

கிறித்து சகாத்தத் தொடக்கத்திற் சில நூற்றுண்டுகளில் சமயப் பற்றுகளும் மதப் போர்களும் அதிகமாக இல்லை. சங்க நூல்களிற் கிடைக்கும் புலவர் பெயர்களும் அரசர் பெயர்களும் பெரும்பாலும் சமயக் கடவுளரின் பெயர்களைப் பின்பற்றி யிடப்படவில்லை.

> "ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
> யாரும் சார்த்தி யவையவை பெறுமே"

என்ற தொல்காப்பியம் மரபியற் சூத்திரத்தில் (தொல். மரபி. 74) உரைகாரர், "நான்கு சாதியாரும் பிறந்த ஊரும் அவர்தம் பெயரும், அவர் சாதிக்குரித்தென்றற்கேற்ற கருவியும், யாரும் சார்த்தப் பெற்றவை அவை பெறுப" என்று எழுதிப் போந்தனர். மேலும் எழுதத் தொடங்கிப் பேராசிரியர், "இம்மூன்றும் வரையறுத்துச் சொல்லப்படா" எல்லாச் சாதியார்க்கும் ஒப்பச் செல்லுமென்பது கருத்து; எற்றுக்கு? இவை சாதிபற்றி வேறுபடாப் பொருளாகலின் ஊரும் பெயருமென்பன; "உறையூர் ஏணிச்சேரி முடமோசி, உறையூர்ச் சோழன், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டன், அம்பர்கிழான் மாறன்" என உதாரணம் காட்டுவர். எனவே கடவுளர் பெயர்களை மக்கட்கிட்டு வழங்கும் முறை அக்காலத்துப் பெரும்பான்மையும் இருந்ததில்லையென்றே கூறலாம். வைணவ ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் எனப்பட்ட பொய்கையார், பூதத்தார், பேயார் என்றவர்களின் பெயர்கள் அவர்களால் வழிபடப்பட்ட திருமாலின் பெயர்கள் அன்று. கி. பி. 7-ம் நூற்றுண்டினராகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர் என்ற பெயர்களும் காரணப்பெயர்களே. பெரியாழ்வார் தமது திருமொழியில்

"மானிட சாதியிற் ரோன்றினோர் மானிட சாதியை
மானிட சாதியின் பேரிட்டால் மறுமைக் கில்லை
வானுடை மாதவா கோவிந்தா வென்றழைத் தக்கால்
நானுடை நாரணன் தம்மன்னை நரகம் புகான்"
(பெரியாழ். திருமொழி 4, 6, 4)

"மலமுடை யூத்தையில் தோன்றிற் றோர்மல வூத்தையை
மலமுடை யூத்தையின் பேரிட்டால் மறுமைக் கில்லை"

"மண்ணிற் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டங்கு
எண்ண மொன்றின்றி யிருக்கு மேழை மனிதர்காள்"

"நம்பிபிம்பி யென்று நாட்டு மானிடப் பேரிட்டால்
நம்பும்பிம்பு மெல்லாம் நாலுநாளி லழுங்கிப்போம்"

"ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வதுபோல் உங்கள்
மூத்திரப் பிள்ளையை யென்முகில் வண்ணன் பேரிட்டுக்
கோத்துக் குழைத்துக் குணலமாடித் திரிமினோ
நாத்தகு நாரணன் தம்மன்னை நரகம் புகான்"

என்ற பாசுரங்களிலிருந்து மக்கட்கு இறைவன் பெயரை யிட்டு வழங்குவதை அறியலாம். பாட்டன் பெயரைப் பெயரனுக்கிட்டு வழங்குமுறை கலித்தொகை முதலிய சங்கப் பனுவல்களிலேயே காணலாம். மருதக்கலி 16-வது பாடலில்,

"மேதக்க எந்தை பெயரனை யாங்கொள்வேம்"

என்றும், 'அகன்பெருஞ்சிறப்பிற் றந்தைபெயரன்' என்று ஐங்குறுநூற்றிலும் பாட்டன் பெயரை மகற்கிடுதல் காண்க. மற்றும் அந்தப் பாட்டன் பெயரும் இறைவன் திருநாமங்களில் ஒன்ருக இருந்தால் பின்னும் சிறப்புடைத் தென்று பெரியோர் கருதி, இப்பொழுதும் அம்முறையை மக்கள் பின்பற்றுகின்றனர். "முதல்வற் பெயரை முறையுளி பெற்ற புதல்வன்" என்ற கலித்தொகையிலிருந்து பாட்டன் பெயரைச் சிறு குழந்தைகட்கிடுதல் மரபென்பது தெளியப்படும். இவை கொண்டு மக்கள் பொது நோக்கின ராக இருந்தனர் என்றும், சமய வெறி அக்காலத்திருந்த தில்லையென்றும் கூறலாம். ஆனல் அவைதீக சமயங்க ளான புத்தமதம், ஆருகதமதம் என்ற இவைகள் தலை

யெடுத்த பின்னரே சமயப்பற்று மிகுதியாகத் திகழ்ந்தது. கடவுள் வழிபாடு சிறந்து விளங்கியது. கடவுள் பெயர் மக்கட்கிடப்பட்டது.

இனிச் சிவபிரானுக்கும் திருமாலுக்கும் வேறுபாடு கற்பியாது இருவரும் ஒன்றென்ற கொள்கையை முதலாழ்வார்களின் பாசுரங்கள் கொண்டுணரலாம். உதாரணமாக,

"அரனாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கருமமழிப் பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று"

என்ற பொய்கையாழ்வார் வாக்கை யெடுத்துக்கொள்வோம். இவரே 'முதலாழ்வார் மூவரே' என்றும் அம் மூவருள்ளும் 'முதலாவான் மூரிநீர் வண்ணன்' என்றும் கூறி 'வாயவனையல்லாது வாழ்த்தாது' என்றும் பாடினர். எனினும் பிறமத நிந்தனையென்பது இவர் பாசுரங்களிற் காணற்கில்லை. மற்றும்,

"ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
கங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு"

என்ற வெண்பாவிலும் இவ்வாழ்வார் சிவபிரானையும் திருமாலையும் ஒன்றாகக் கருதுவது காணலாம். இவர் காலத்து வாழ்ந்தவர் எனக் கருதப்படும் பூதத்தாழ்வார் தமது இரண்டாம் திருவந்தாதியில்,

"அத்தியூரான் புள்ளையூர்வா னணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வானான திருமால்—
மாகடல் நஞ்சுண்டானாகிய சிவபெருமானுக்கும்
இறையாவான்"

என்று கூறினர். பேயாழ்வாரும்,

"தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்

திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்ரு யிசைந்து"

என்று கூறினர். ஏறக்குறைய இவ்வாழ்வார் காலத்திலே யிருந்தவராகக் கருதப்படுபவரும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் மிகவும் பழைமையானவரும் ஆன காரைக்காற் பேயார் தமது அற்புதத் திருவந்தாதியில், இறைவனைப் பாடுமிடத்து,

"ஒருபா லுலகளந்த மாலவனு மற்றை
யொருபா லுமையவளா மென்ரு—லிருபாலு
நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டேமால்"

என்று கூறுதல் காணலாம். பிற்காலத்தும், சம்பந்தப் பெருமான் "அரியலாற் றேவியில்லை யையனையாற ஞற்கே" என்று கூறியதும் அரியும் சிவனும் ஒன்றென்ற உண்மையை வலியுறுத்தும்.

இனி இவ்வாழ்வார்கள் மூவராலும் குறிக்கப்பட்ட திருமால் திருவிளையாடல்கள் பின்வருவன. திருமால் உலகையுண்டது, பேய்முலை நஞ்சுண்டது, ஏனமாய் மண்ணிடந்தது, உலகளந்தது, இரணியன் ஆகம் கீண்டது, புள்ளின் வாய் கிழித்தது, மருதிடைத் தவழ்ந்தது, ஆலிலை யிற் கண்வளர்ந்தது, பெற்ருேர் தளை கழலச் செய்தது, தாம்பாற் கட்டுண்டது, மலையாற் குடை கவிழ்த்துக் கன்றைக் காத்தது, மராமரமெய்தது, யானைக்கோடிறுத் தது, யானைக்கருளியது, சகடமுதைத்தது, ஏழு ஏறடர்த் தது, கன்ருல் விளவெறிந்தது முதலியன.

சங்க காலத்து நூல்களில் திருமால் கண்ணனைகத் தோன்றிச் செய்தருளிய திருவிளையாடல்கள் இல்லை. ஆய்ச்சியர் குரவை முதலியன சிலப்பதிகாரத்திற்ருன் காணலாம். மற்றும் மாமல்லை, திருக்கோவலூர், திருக் குடந்தை முதலியன திருமால் எழுந்தருளியுள்ள தலங்க ளாகப் பண்டைத் தமிழ் நூல்களிற் காண்டற்கில்லை. மாமல்லை என்பது மகாபலிபுரம். இது கி. பி. 7-ஆம் நூற்

ருண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த பல்லவர் காலத்திற் ருன் சிறப்புற்றுத் திகழ்ந்தது. பல்லவவேந்தனுன நரசிங்க வன்மன் இலங்கைமீது படையெடுத்துச் செல்லுங்கால் கடற்கரைத் துறைமுகமாக இருந்ததென்று சரித்திரம் கூறும். அந்நகர்க்கே மகாமல்லபுரம்என்று பெயர்என்றும், மகாமல்லன் என்பது நரசிம்மவன்மனது விருதுப் பெயர் களில் ஒன்றென்றும் தெரிகின்றது. இனி, முதலாழ் வார்கள் எனப்படும் மூவரது வரலாற்றையும் ஆராய்வாம்.

வைணவ சம்பிரதாயத்தின்படி அம்மதத்தைச் சிறப்பித் தவராகக் கருதப்படும் பெரியோர்கள் ஆழ்வார்கள் என்றும் ஆசார்யர்கள் என்றும் இருவகைப்படுவர். ஆழ்வார் என்பதற்கே "இறைவன் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்" என்பது பொருள் என்பர். வைணவர்கள் இவர்களே அவதார புருஷர்கள் எனக் கருதி வழிபடுவர். இந்த ஆழ்வார் என்ற பெயர் சிலாசாசனங்களிற் பல இடங்களில் வழங்கக் காணலாம். அங்கே வைணவ மூர்த் தங்கள் மட்டுமன்றிச் சிவ மூர்த்தங்கட்கும், அரசர்க்கும் வழங்கியுள்ளது இப்பெயர். ஆசார்யர் என்பவர் அவ்வாழ் வார்கட்குப் பிற்காலத்தே அவர்களுடைய சொற்செயல் களேப் பின்பற்றி வைணவ மதக்கொள்கைகளேப் பரப்பி நாட்டை உய்யக்கொண்ட பெரியார் ஆவர். இவர்கட்குத் தலேவர் ஸ்ரீமத் நாதமுனிகள் என்ப.

இப்பெரியார்களின் வரலாறு கூறும் சரித்திர நூல்கள் பல. அவற்றுள் ஸ்ரீ இராமாநுசர் காலத்திருந்த கருட வாகன பண்டிதர் செய்யுள் உருவிலியற்றிய திவ்யசூரி சரிதையும், ஸ்ரீ நம்பிள்ளே காலத்தவரான பின்பழகிய பெருமாள் ஜீயர் மணிப்பிரவாள நடையிலியற்றிய ஆறுயிரப்படி குருபரம்பரையும், காலத்தால் முற்பட்டவை. இவையன்றி, பிரபந்நாமிருதம், பிரமதந்திர சுவதந்திர ஜீயர் இயற்றிய குருபரம்பரை முதலிய நூல்களும் உண்டு. திவ்யசூரி சரிதம், நம்மாழ்வாருக்கும் ஆசாரியத் தலேவரான நாதமுனிகட்கும் நேரான தொடர்பிருந்ததாகக்

கூறும். உண்மையில் நேரான தொடர்பிருந்திருப்பின், ஆழ்வார் ஆசாரியர் என்ற பகுப்பிற்கே இடமில்லை. ஆனல் ஆழ்வார்கட்கும் ஆசாரியர்கட்கும் இடையே இரண்டொரு நூற்றுண்டுகள் இடைவிட்டிருந்தது என்று கோடலே முறை. நேர்த் தொடர்பிருந்திருப்பின் ஆழ்வார்களே ஆசாரியர்களாய் நாதமுனிகட்குத் தலைமையெய்தியிராது.

இனி, குருபரம்பரை ஆழ்வார்கட்குக் கூறும் காலத்தை அவ்வாறே ஏற்றுக்கோடற்கில்லை. ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களினின்றும், தமிழ் நடையின் போக்கைக் கொண்டும் அவர்கள் கடைச்சங்கத்துக்குப் பிறகே விளங்கியவர்கள் என்று கூற வேண்டி வருகின்றது. அப் பெரியார்களே,

"சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்"

"சங்கத் தமிழ்மாலை முப்பதும்"

எனக் கடைச்சங்கத்தைக் குறிப்பிடுதல் காணலாம். மற்றும் அவர்கட்குச் சங்கநூற் பயிற்சி மிகுதியும் உண்டு என்பதற்கு அவர்கள் அந்நூற்கணின்று எடுத்தாளும் சொற்றொடர்களே போதிய சான்ருகும். இவ்வாழ்வார்கள் தம் காலத்தரசு செய்த மன்னர்களையும், அவரது வீரச் செயல்களையும் தமது பாசுரங்களிற் புகழ்ந்துள்ளார். அவருள் கோச்செங்கணன் செய்த ஆலயத் திருப்பணிகளும், பல்லவமன்னன் என்ற நந்திவர்மன் புரிந்த போர்ச் செயல்களும், திருமங்கையாழ்வாராற் பாராட்டப்பெற்றுள்ளன. பல்லவமன்னன் கி. பி. எட்டாம் நூற்றுண்டில் அரசுபுரிந்தவன். இவைகொண்டு ஆழ்வார்களின் காலம் பெரும்பாலும் 7-ஆம் நூற்றுண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டிற்குள்ளிருத்தல் கூடும் என்று ஒருவாறு கருதலாம். நாதமுனிகள் கி.பி. 825-இல் அவதரித்தவர் என்று பிரபந் நாமிருதம், கோயிலொழுகு முதலிய நூல்கள் கூறுகின்றன. இவர் 93-ஆண்டுகள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. எனவே கி.பி. 825-க்கு முன்னர் வாழ்ந்தவர்கள் ஆழ்வார்களனைவரும் என்பது பெறப்படும்.

மீது நெருக்கிக்கொண்டு நின்றதுபோற்பட்டது. அப்பொழுது அவர்கள் திருமாலே தம்மிடம் போந்தனர் என்று கருதி ஒவ்வொருவரும் ஓர் வெண்பா அப்பெருமானைக் குறித்தியற்றினர். உடனே திருமால் மறைந்தனர். இம் மூவரும், அவரது பெருமையைப் பற்றி நூறு நூறுபாடல்கள் இயற்றினர். அவைகள் இயற்பா திருவந்தாதி என வழங்கும். இந்நிகழ்ச்சியின் பின்னர், இம்மூவரும் திருவல்லிக்கேணியில் திருமழிசையாழ்வாரைப் பார்த்து அளவளாவியதாகச் சரித்திரம் கூறும். இவ்வாழ்வார் பாசுரங்களில் திருக்குறட் கருத்துகள் காணலாம்.

"வித்துமிடல் வேண்டுங்கொல்லோ விடையடர்த்த
பத்தியுழவன் பழம் புனத்து" (திருமழிசையாழ்வார்)

"வித்துமிடல் வேண்டும் கொல்லோ" (திருக்குறள்)

"ஊரவர் கவ்வை யெருவிட் டன்னை சொன்னீர்
மடுத்தீர நெல்வித்தி" (நம்மாழ்வார்)

"ஊரவர் கவ்வை யெருவாக அன்னை சொல் நீராக"
முதலியன காண்க. (திருக்குறள்)

## பொய்கையாழ்வார்

ஆழ்வார்களின் வரன்முறையும் அவர்கள் வதிந்த காலமும் குருபரம்பரையிலுள்ளவாறே வைணவர்களில் தென்கலை வடகலை யென்ற இருபாலாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றன. பொய்கையாழ்வார் கி.மு. 4303-இல் அவதரித்ததாக ஷை நூல் கூறும்,

இவர் துவாபரயுகத்தில் சித்தார்த்தி ஆண்டில் ஐப்பசி மாதம் பூர்வபக்கத்தில் திருவோண நக்ஷத்திரத்தில், சனி வாரத்தில், காஞ்சீபுரத்தில் ஓர் மலரில் அவதாரம் செய்ததாகப் பரம்பரை வரலாற்றுச் செய்தி. இவரது குலம் பிராமண குலம் என்ப.

இவ் வாழ்வாரும் சோழன் கோச்செங்கணனைப் பாடிச் சேரனைச் சிறைமீட்ட பொய்கையாழ்வாரும் ஒருவரே

என்றும், யாப்பருங்கல விருத்திஉரை மேற்கோளிற்கண்ட செய்தி. ஆரிடக் கவியாகிய பொய்கையார் இவ்வாழ்வாரே யென்று கூறுவர் ராவ்சாகிப். மு. இராகவையங்கார். இக் கொள்கையை மறுத்துப் பொய்கையார் வேறு, பொய்கை யாழ்வார் வேறு என்பர் காலஞ்சென்ற நாவலர். ந. மு. வேங்கிடசாமி நாட்டார்.

நிற்க, திருமழிசையாழ்வாருக்குப் பக்திசாரர் என்ற சீடன் உண்டு. அவர்தம் காலத்திற் கச்சியில் அரசு செய்த ஓர் பல்லவ மன்னனைப் பாட மறுத்ததாகவும், அரசன் வெகுண்டு அவரை ஊரைவிட்டேகும்படி சொல்ல, அவ் ஊர்க் கோயிலில் எழுந்தருளியிருந்த திருமாலும் அவரைப் பின்பற்றிச் சென்று பின்னர் அரசன் வேண்டப் பக்திசார ருடன் திரும்பியதாகவும் வரலாறுண்டு. அப்பெருமானின் திருநாமம் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்பது. இந்த ஊர் கச்சியின் புறத்துள்ள திருவெஃகாவென்பது. இது கடியலூர் உருத்திரங்கண்ணனாற் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப் படையிற் கூறப்படுகிறது. இந்த ஆற்றுப்படை தொண்டைமான் இளந்திரையன்மீது பாடப் பட்டது. எனவே பக்திசாரர் பாடற்கு மறுத்த காஞ்சி மன்னன் இவனாக இருந்திருத்தல் கூடும். இந்த வெஃகா வென்பது பொய்கையாழ்வாரின் அவதாரத்தலம். இவ் வாழ்வாரும் இவர் காலத்திருந்த பூதத்தாழ்வாரும், தமது இயற்பாத் திருவந்தாதியில்,

> "வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
> பூங்கிடங்கின் நீள்கோவற் பொன்னகரும்—நான்கிடத்தும்
> நின்று னிருந்தான் கிடந்தான் நடந்தானே
> என்றாற் கெடுமா மிடர்" (இயற்பா-முதல். 77)

என்றும்,

> "விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம்
> மண்ணகரம் மாமாட வேளுக்கை—மண்ணகத்த
> தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
> தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு"

என்றும் பாடியிருக்கின்றனர். இந்த விண்ணகரத்தைப் பரமேச்சுர விண்ணகரம் என்றும், பல்லவபரமேச்சுரன் அதனைக் கட்டியதாகவும் கூறுவர்.

இனி, யாப்பருங்கல விருத்தி என்ற செய்யுளிலக்கண நூலில் பொய்கையார் வாக்காகக் கூறப்பட்ட செய்யுட்கள் உள்ளன. அவை பின்வருமாறு :—

'' ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாம்
தோழி துணையாத் துயர் தீரும்—வாழி
நறுமாலை தாராஅய் திரையவோஒ வென்னும்
சிறுமாலை சென்றடையும் போழ்து ''

'' அவிழ்ந்த துணியசைக்கு மம்பலமுஞ் சீக்கும்
மகிழ்ந்திடுவார் முன்ன மலரும்—கவிழ்ந்து
நிழறுழா யானை நெடுமான் **றேர்க் கிள்ளி**
கழறொழா மன்னவர் தங்கை ''

இவற்றுள் முதற் செய்யுளில் திரையன் பெயரும் மற்றொன்றில் நலங்கிள்ளியின் பெயரும் வருகின்றன. இருவர் பெயரும் ஒரு புலவராலேயே குறிக்கப்பெற்றுள்ளன. செய்யுள்களின் போக்கிலிருந்து, இருமன்னருடைய வாழ்நாளிலேயே பாடப்பட்டவை என்றுணரலாம். திரையனை இளந்திரையன் என்றும், தேர்க்கிள்ளியைக் கரிகாற் சோழனை அடுத்து அரசுபுரிந்த நலங்கிள்ளியாகவும் பொய்கையாரை இவர்கள் காலத்திருந்த புலவராகவும் கொள்வர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார். மேலும் பேராசிரியர் தமது தொல்காப்பிய உரையில் பொய்கையாரின் அந்தாதிப் பாடல்களைக்கூறி அவற்றை முத்தொள்ளாயிரத்தோடு பொருத்திக் காட்டுவர். மற்றும் இப் பெரியார் பாடல்கள் ஆரிடம் என்றும், அவை இலக்கண வரம்பிற்குட்பட்டனவன்று என்றும் கூறுவர். தொல்காப்பியம் 94-ஆம் சூத்திரத்தில் பொய்கையார் திருவந்தாதியிலிருந்து இரண்டு வெண்பாக்களை இவ்வுரையாசிரியர் காட்டுவர். இவற்றினின்று ஐயங்கார் பொய்கையாழ்வாரும் பொய்கையாரும் ஒருவரே என்பர். மேலும் பதி

னெண்கீழ்க்கணக்குத் தொகுதியுள் ஒன்ருகிய 'இன்னிலை' யும் இப்பொய்கையாழ்வார் செய்ததே. இதிலும் இலக்கணவரம்புக்குட்படாத செய்யுட்கள் உள்ளனவாகலின் இ∴து ஓர் பழைய நூலாகும்.

நிற்க, இந்தப் பொய்கையாழ்வாரும் சோழன் கோச்செங்கணைப் பாடிய பொய்கையாரும் ஒருவர்தானே வேருே என்று நோக்குமிடத்துச் சில இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. புறநானூற்றில் சேரமான் கோக்கோதை மார்பனைப் பற்றிப் பாடிய பாடலில், புலவர் தமது ஊர் சேரநாட்டுத் தொண்டி என்பர். ஆனல் இவர் பிறந்த ஊர் காஞ்சி. ஒருக்கால் தான் புகழ்ந்து பாடிய தலைவன் தலைநகரைத் தன் நகரமாகக் கருதி அவ்வாறு கூறியிருக்கக்கூடும் என்று சிலர் கருதுவர். இவர் இருவரும் ஒரே காலத்தவர் எனத் துணியின் பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார் என்ற நால்வரும் சங்க காலத்தை யடுத்து அதாவது கி.பி. 2-ஆம் நூற்ருண்டிலிருந்தவராவர் என்பர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.

ஆனல், கி.பி. இரண்டாம் நூற்ருண்டை யடுத்து இரண்டு நூற்ருண்டுகள் சரித்திரப்போக்கில் இருண்ட காலம் என்று கூறப்படும். அக்காலத்தில் களப்பிரர் என்ற அரசர்கள் ஆண்டதாகத் தெரிகின்றது. சமய வளர்ச்சிக்கோ பற்றுக்கோ அந்த ஆட்சியில் இடமில்லை. பல்லவ மன்னர்கள் கி.பி. ஐந்தாம் நூற்ருண்டினிறுதியிலோ ஆரும் நூற்ருண்டின் தொடக்கத்திலோதான், தமிழ் நாட்டில் அரசு செய்யத் தொடங்கினர். அவர்கள் ஆட்சிக்கு முன்பு பௌத்தமும் சமணமும் தலையெடுத்து நின்றன. எனவே இந்த முதலாழ்வார்கள் காலம் கி.பி. 6-ஆம் நூற்ருண்டென்று ஒருவாறு கொள்ளலாம்.

நிற்க, திருஞானசம்பந்தரும் அப்பரும் செங்கணனைப் பாடியிருக்கின்றனர்.[1] திருமங்கை மன்னனும் இவ்வரசனை,

> "இருக் கிலங்கு மெண்டோ ளீசர்க்கு எழுவது
> மாடக்கோயில் செய்துலகாண்ட, திருக்குலத்து
> வளச்சோழன்"

என்று இவரைப் புகழ்வர். 'உலகாண்ட' என இறந்த காலத்துக் கூறுவதால், இவ்வாழ்வார் காலத்து அவ்வரசன் இருந்ததில்லை என்பது தெளிவாம். மேலும் இப்பெரியார்கள் புனைந்துரைக்கும் அத்துணைப் புகழ் எய்தற்கு இரண்டொரு நூற்றாண்டுகளேனும் வேண்டும். எனவே செங்கணன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டெனக் கோடல்தகும்.

நிற்க, பொய்கையார், "விண்ணகரம் வெஃகாவிரி திரை நீர் வேங்கடம்" என்று குறித்த விண்ணகரம் கச்சியிலுள்ள பரமேச்சுர விண்ணகரம் ஆகுமென்றும், அஃது கி.பி. 715-இல் ஆண்ட பரமேச்சுவர பல்லவனால் அமைக்கப் பட்டதாகலின், இப்பெரியார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்றும் குறிப்பர். ஆனால் விண்ணகரம் என்பது விஷ்ணுகிரகம் எனப் பொருள் பட்டு ஆலயங்கட்குப் பொதுப் பெயராகலின், இவ்வாறு கோடற்கில்லை. இவ்வாறே பூதத்தாழ்வாரும் மாமல்லை கோவல் மதில் குடந்தை" என்ற தொடரில் மகாமல்லபுரத்தைக் குறித்தனர் என்றும், அஃது கி.பி. 625-லிருந்து 660-வரை அரசுபுரிந்த பல்லவநரசிம்மவன்மனால் அமைக்கப்பட்டதாகலின் ஆழ்வார் அக்காலத்தவர் என்றும் கூறுவர். இஃது ஒருவாறு பொருந்தும். ஆயினும் மகாமல்லபுரம் என்பது நரசிம்மவர்மனால் புதுக்கப்பட்டதன்றி அமைக்கப்பட்டதன்றென்பார் சிலர். எனவே ஆறும் நூற்றாண்டினிறுதியே இவ்வாழ்வார் காலம் எனக் கருதலாம். மேலும்,

---

1. அப்பர் திருக்குறுக்கைப் பதிகம். சம்பந்தர்-திருவானைக் காப் பதிகம்.

''வாரி சுருக்கி மதக்களி றைந்தனையும்
சேரி திரியாமல் செந் நிறீஇக்—கூரிய
மெய்ஞ் ஞானத் தாலுணர்வார் காண்பரே மேலொருநாள்
கைந்நாகம் காத்தான் கழல்''

''சொல்லுந் தனையும் தொழுமின் விழுமுடம்பு
செல்லுந் தனையும் திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று''

என்று இவர் கூறிய பாசுரங்களால், ஐந்திந்திரியங்களையும் புறஞ்செல்லாமல் அடக்கித், தம்மை யறிந்து தலைவனை யறியு மெய்யுணர்வினரே அப்பெருமானைக் காணுதல் கூடும் என அறிவிக்கின்றார். நன்கு தொடுக்கப்பட்ட நறு மணமாலை சாத்தியும், அவனைக் குறித்து வேள்விகள் ஆற்றியும், தந்திர மந்திரங்களாலும், அவனை வழிபடுதல் நலம் என்று வழிபாட்டு முறையை அவர் அறிவிப்பது காணலாம்.

இவ்வாறு வழிபடுவதாலும் இறைவன் திருநாமத்தை உச்சரிப்பதாலும் அடையும் பலனையும் பல பாசுரங்களில் அருளிச்செய்துள்ளார் இப்பெரியார். மனமாசு தீரும் என்றும், அருவினைகள் சாரா வென்றும், குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும் பொன்னாழிக் கையான் ஆவன் என்றும், ஆறிய வன்பிலடியார் தமார் வத்தால் கூறிய குற்றச் சொற்களை புகழ்ச்சொற்களாக ஏற்பவன் என்றும், எனவே அவனை வழிபடுவதே சிறப் பென்றும் கூறுவர். பெருமானுக்குப் பலவகையிலும் பணி செய்வதே மக்கட்கு மேலான கடமை என்பதை உணர்த்த ஆதிசேடன் திருமாலுக்குப் பலவகையினும் புரியும் சேவையை எடுத்துக்காட்டும்.

''சென்றாற் குடையா மிருந்தாற் சிங்காதனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் என்றும்
அணையாம் திருமாற் கரவு''

என்ற பாசுரம் படித்து மகிழத்தக்கது. இனி,

> " நீயுந் திருமகளும் நின்றுயால்......வாசற்
> கடைகழியா வுட்புகாக் காமர்பூங் கோயில்
> இடை கழியே பற்றி யினி "

என்ற இவரது பாசுரம் இவரது வாழ்நாளில், திருக்கோவலூரில் ஓர் வீட்டிடைகழியில் இவர்க்கும், பூதத்தாழ்வார் பேயாழ்வார்க்கும், திருமால் அளித்த காட்சியைக் குறிக்கும் அகச்சான்ருகக் கொள்ளலாம்.

இவ்வாழ்வார் பாடலும் இவர் காலத்திருந்த பெரியாராகிய பூதத்தார் பேயார் என்ற இவர்களது பாடல்களும் ஓசை அமைதிபெற்ற செம்பாகமான வெண்பாக்கள். சொற்செறிவும், உயர்ந்த கருத்துக்களும் பொருந்தியவை. முதற்றிருவந்தாதியில்,

> " ஊரும் வரியரவம் ஒண்குறவர் மால்யானை
> பேர வெறிந்த பெருமணியைக்—காருடைய
> மின்னென்று புற்றடையும் வேங்கடமே "

என்ற செய்யுளிலும்,

> " பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
> வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பின்
> மீன்வீழக் கண் டஞ்சும் வேங்கடம் "

என்ற பாசுரத்திலும், ஆழ்வார் இயற்கை யெழிலைக் கூறுவது காணலாம். மாணிக்கத்தை மின்னலொளி போலும் கருதி, ஊர்ந்து செல்லும் அரவம், தனது புற்றினைச் சென்று சேரும் வேங்கடம் என்பதும், குறவர் கையிற் பிடிக்கும் சுளுந்துத்தீயை அஞ்சி ஓடுகின்ற யானை ஆகாயத்தினின்று விழும் உடுவைக்கண்டஞ்சும் வேங்கடம் என்பதும், இங்கே குறிக்கப்பட்ட பொருள்.

பூதத்தாழ்வாரும் திருமாலைச் சுட்டும்போது "ஒருருவனல்லை, யொளியுருவம் நின்னுருவம், ஈருருவன் என்பர் இருநிலத்தோர்" என, சிவபிரானும் திருமாலும் இயைந்த

திருக்கோலத்தைக் குறிப்பர். மற்றும் செந்தமிழாற் றிரு மாலைப் புனைந்துபாடும் பெரும்பேறு தனக்கு வாய்த்ததை யெண்ணி மகிழ்ந்துரையாடுவார்.

> " யானேயே தவஞ் செய்தேன் ஏழ்பிறப்பு
> ..............................................................
> இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்'
> பெருந் தமிழில் நல்லேன் பெரிது "

என்ற இப் பாசுரத்தைக் காண்க.

இவரது பாசுரங்களிலும் இயற்கை வருணனையைக் காணலாம்.

> " பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
> இருக ணிளமூங்கில் வாங்கி—அருகிருந்த
> தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
> வான்கலந்த வண்ணன் வரை "

என்ற செய்யுளில், மதமிகுந்த யானை தனது பெண் யானைக்கு முன்னிருந்துகொண்டு இரண்டே கணுக்களை யுடைய இளமூங்கிலை வளைத்து, அதன் அண்மையிலே நின்றுகொண்டு அதனைத் தேனிற்றோய்த்து ஊட்டும் திரு வேங்கடம் என்றது காண்க. உண்பதற்குக் கடினமாகாத படி இரண்டே கணுவுடைய மூங்கிலைக் கூறினர். மற்றும், அப்பிடிக்கு வருத்தமுருதபடி ஆண்யானை அதனை வளைத் தளிப்பதைச் சொன்னர். பின்னர் மூங்கில் உருசியை இன்னும் அதிகப்படுத்துதற்காகவும், அதற்குப் பதம் ஏற்படுமாறும், தேனில் அதைத் தோய்த்தளிப்பதைக் கூறினர். இத்துணையும் செய்தமையாது, அப்பிடி குனிந்து அதனைக் கவரவேண்டிய நிமித்தமின்றித் தானே துதிக்கையில் எடுத்து நீட்டியதைப் பகர்ந்தார். இயற்கை யெழிலை எத்துணைக் கவனமாக இவர் துய்த்துள்ளனர் என்பதும், அதனை அவர் இனிமைபெற எடுத்துரைக்கும் ஆற்றலும் இச்செய்யுள்கொண்டுணரலாம். இது போன்ற கருத்துக்களைப் பாலைக்கலியிலும் குறுந்தொகையிலும் காணலாம்.

இப்பெரியார் தமது பாசுரங்களிற் புகழ்ந்துள்ள திவ்ய தேசங்கள், திருவேங்கடம், திருவரங்கம், திருப்பாடகம், திருவத்தியூர், திருக்குடமூக்கு முதலியன.

மூன்றாவதான பேயாழ்வாரும் இறைவன் திருவடிவைக் குறிக்குமிடத்தில்,

> "பேசுவா ரெவ்வளவு பேசுவார் அவ்வளவே—அக்கரனைக்
> கொன்றான் வடிவு"

என்பர். பிறிதோரிடத்தில்,

> "நிறம் வெளிது செய்யதிது கரிதென்று
> இறையுருவம் யாமறியோ மென்னில்—நிறைவுடைய
> நாமங்கை தானும் நலம் புகழ வல்லளோ
> பூமங்கை கேள்வன் பொலிவு"

என்பர்.

> "வண்ணந்தான் சேய தன்று வெளிதே யன்று
> எண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்ட மெய்துமா
> றறியாத வெந்தாய்"

என்ற திருவாசகப் பாசுரத்தை இச்செய்யுள் நினைவூட்டு கின்றது. ஓரிடத்தில், திருவெஃகாவில் கோயில்கொண் டுள்ள திருமாலைத் தொழுவதே அமைவதாகப், பொருப் பிடையே நின்றும், புனல் குளித்தும், ஐந்து நெருப்பிடையே நின்றும், தவம் புரிவது மிகையன்றோ எனவினவு கின்றனர்.

இவரது பாசுரங்களிலும், இயற்கை யெழில் மிளிரக் காணலாம். இயற்பா 3-ஆம் திருவந்தாதி 58-ஆம் பாசு ரத்தில்,

> "தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
> அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய
> வெண்மதியந் தாவென்னும் வேங்கடமே"

என்றும்,

> ஆங்கு மலருங் குவியு மாலுந்திவாய்
> ஒங்கு கமலத்தி ணெண்போது—ஆங்கைத்

திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானிற்
பகரு மதி யென்றும் பார்த்து''

என்றும் கூறுவது காண்க. பெண்குரங்கு ஓர் சிலாதலத்தின் அமர்ந்திருக்க, அதன்கண் பிரதிபலித்த மதியைக் கண்டது. விண்ணில் இயங்கு மதியை வேண்டிப் பெறுதல் கூடாது என நினைந்த அம்மந்தி, தனக்கு அண்மையில் தான் அமர்ந்திருந்த சிலாதலத்தில் அதனைக் கண்டு அதனைத் தருமாறு வேண்டிற்று என்றார். கண்ணடியிற் கண்ட தன் உருவத்தைப் பேதைப்பெண் விளையாடற் கழைத்ததாக உலாக்கள் கூறும். இரண்டாவது பாசுரத்தில், மயக்க வணியைக் காணலாம். இவ்வணி மிக அழகு பெற இப்பாசுரத்தில் அமைந்துள்ளது காண்க. திருமாலுடைய உந்திக்கமலம், அப்பெருமான் இருகரங்களிற் கொண்டுள்ள சுதரிசனம் என்ற திருவாழியையும், பாஞ்சசன்யம் என்ற சங்கத்தையும் முறையே கண்டு, கதிரவன் என்றும், மதியென்றும் மாருகக் கருதி, மலர்ந்தும், குவிந்தும் நின்றது என்றார்.

இவ்வாழ்வார்கள் மூவரும் ஏறக்குறைய சங்க காலத்தை அடுத்திருந்த ஆண்டுகளில் விளங்கியவர் ஆகலின், சங்க யாப்பைப் போன்றே உயர்ந்த வெண்பாப் பாசுரங்களைப் பாடியருளினர் என்பது மேற்கூறியன கொண்டு தெளியலாம்.

பொய்கையாழ்வார் அருளிய பாசுரங்களில் பாரினைத் திருமால் படைத்திடந் துண்டுமிழ்ந்ததும் அவனது அவதார விசேடங்களும், அந்தவந்த அவதாரங்களில் அவன் ஆற்றிய அரிய செயல்கள் பலவும் குறிக்கப்படுகின்றன. பார்த்தன் பொருட்டு ஆழியாற்கதிரவனை மறைத்தது, ஏனமாய் மண்ணிடந்தது, இரணியன் ஆகம் கீண்டது, மாவலிபாலிரந்தது, சகடம் சாடியது, விளவெறிந்தது, குன்றைக்குடையாக்கியது, இராவணனைச் செற்றது முதலியன காண்க. மற்றும் திருமாலே ஐம்பெரும் பூதங்களாவான் என்றும் ஒரு நாம மோருருவ மில்லாதார்க்

காயிரம் திருநாமம் மக்கள் அவற்குச்சூட்டுவர் என்றும்,

" தமருவந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருவந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்த
தெவ்வண்ணம் சிந்தித்திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும் "

என்றும் கூறுவர். ஏறக்குறைய இவர் காலத்தவராகக் கருதப்படுபவரும், பேயார் என்று யாப்பருங்கல விருத்தியுரையிற் குறிக்கப்படுபவருமான காரைக்காலம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில்,

" அன்று முனதுருவம் காணுமே யாட்பட்டேன்
இன்றும் உனதுருவம் காண்கிலேன்—
எவ்வுருவோ நின்னுருவ மேது "

என இறைவனுக்கென ஓர் உருவில்லாமையை விளக்கினர்.

" இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவனென்
றெழுதிக் காட்டொணுதே "

என்ருர் அப்பர் பெருமான். திருமாலும் சிவபெருமானும் ஒருவரே என்பது இவ்வாழ்வார் கருத்து என்பது பல மேற்கோள்களால் முன்னரே விளக்கப்பட்டது. எனினும், இப்பெரியார் மறந்தும் புறந்தொழா மாந்தர் வரிசையிற் சேர்ந்தவராவர் என்பது அவரது பாடல் கொண்டே தெளியலாம்.

" வாயவனை யல்லாது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லாது தான்ருெழா "

என்ற வரிகளில் காண்க.

மற்றும் பெருமானை வழிபடு முறையைப் பல பாசுரங்களில் அழகுபெறக் கூறியுள்ளார்.

" புகை விளக்கும் பூம்புனலு மேற்றி "

" புனமேய பூந்துழா யானடிக்கே போதோடு
நீரேந்தித் தாந்தொழா நிற்பார் தமர் "

என்ற பாசுரங்களைக் கண்டு தெளிக.

### திருமழிசையாழ்வார்

பார்க்கவர் என்னும் ஓர் முனிவர் காஞ்சீபுரத்தின் அண்மையிலுள்ள மகீசாரம் என்னும் வனத்தில் தவம்

செய்து கொண்டிருந்தார். அவர்க்கும் ஒரு தேவகன்னி கைக்கும் ஓர் மகவு பிறந்தது. இந்தக் குழந்தை பிரம்பு விற்றுப் பிழைக்கும் குலத்தினனுன திருவாளன் என்பவர் மனையில் வளர்ந்தது. இதேசமயத்தில் கணிகண்ணன் என்ற ஒருவன் நான்காம் வருணத்தவர் குலத்திற் பிறந்து வளர்ந்து வந்தான். நாளடைவில் இவன் திருமழிசையாரின் சீடனுமானுன். ஓரமையம், பக்திசாரர் என்ற திருமழிசை யார் ஓர் வயது முதிர்ந்த கிழவியை இளம்பெண்ணுக மாற்றியமை கண்டு, அவ்வூர் மன்னன் அவரை யழைத்துத் தன்னையும் இளைஞனுக்குமாறு வேண்டினன். கணிகண் ணன் இணங்க மறுத்தாஞக, அரசன் வெகுண்டு, அவர்க ளிருவரையும் ஊரைவிடுத்தேகுமாறு பணித்தான். உடனே பக்திசாரர் திருமாலிடம் சென்று,

“கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப்புலவன் யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்”

என்று பாடியதாகவும், அவர் சொன்னவண்ணம் செய் ததுபற்றி அப்பெருமானும் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என அழைக்கப்பட்டதாகவும் வரலாறுண்டு. பின்னர் அரசர் அப்பெரியார்களின் பெருமை யுணர்ந்து அழைக்க மூவரும் காஞ்சி யடைந்தனர் என்ப.

திருமழிசையார் தாம் சீரிய வைணவராதற்குமுன் பல் வேறு சமய வுண்மைகளைக் கண்டறிந்ததாக அவரது பாசு ரங்களினின்றும் வெளியாகின்றது. அவரே,

“சாக்கியங் கற்ருேம் சமண்கற்ருேம் சங்கரனர்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்—பாக்கியத்தாற்
செங்கட் கரியானைச் சேர்ந்துயாம் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்”

என்று கூறுகின்ருர். இவர் கொங்கணரென்ற சித்தருடன் வாதுபுரிந்ததாகவும் 700 ஆண்டுகள் நிலவுலகில் தவம்

புரிந்து வந்ததாகவும் கூறுவர். வாழ்நாளின் கடைப்பகுதியில் திருக்குடந்தையில் இருந்தாரென வரலாறு கூறும். இவரும் சிவவாக்கியர் என்ற சித்தரும் ஒருவரே என்றும் சிலர் கருதுவர். ஆனால் அதற்குப் போதிய ஆதாரமின்று.

இவ்வாழ்வார் சமணர், புத்தர்களையும், சிவபட்டாரகர்களையும் தமது பாசுரங்களிற் குறித்திருக்கின்றனர். மற்றும், "வித்துமிடல் வேண்டுங்கொல்லோ விடையடர்த்த பத்தியுழவன் பழம்புனத்து" என்ற இவரது பாசுர வரிகள், "வித்துமிடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி, மிச்சில் மிசைவான் புலம்" என்ற திருக்குறளைப் பின்பற்றியுள்ளது. எனவே குருபரம்பரைகளிற் கூறுவது போன்று இவ்வாழ்வாரையும் பிறரையும் துவாபரயுகத்தில் இருந்தவராகக் கருதற்கில்லை. சிலர் பல்லவ மன்னர்களில் சிறந்த வைணவராக விளங்கிய பரமேச்சுரவன்மன், நந்திவன்மன் என்ற இவர்களின் காலமே இவ்வாழ்வார் வதிந்த காலம் என்பர். அவ்வாறெனின் அஃது எட்டாம் நூற்றூண்டின் தொடக்கமாகும். திவான்பகதூர் எல்.டி. சுவாமிக்கண்ணுபிள்ளையவர்களும் கால ஆராய்ச்சி செய்து இந்த நான்கு ஆழ்வார்களின் காலமும் கி. பி. 720 என்பர்.

இவர் காலத்தவரான பூதத்தாழ்வார் கடன்மல்லையிற் பிறந்தவர் என்று முன்னர்க் குறிப்பிடப்பட்டது. இக்கடன்மல்லை பல்லவமல்லன் பெயரான் எழுந்ததென்பர் கோபிநாதராவ். ஆனால் ராவ்சாகிப் எம். இராகவையங்கார் இதனை மறுத்துக் கடன்மல்லை நரசிம்மவன்மனுக்கு முன்னரே சிறந்த துறைமுகமாக விளங்கியதென்றும், அவ்வூர் ஆலயத்தில் நரசிங்கனின் தந்தையான மகேந்திரவன்மன் சிலையும், அவனது பாட்டனை சிங்கவிஷ்ணுவின் சிலையும் காணப்படுவதால் கி. பி. 7-ஆம் நூற்றூண்டின் முன்பே அந்தக் கடன்மல்லை இருந்ததென்றும், ஆகவே கடன்மல்லையில் இருந்த பூதத்தார் பல்லவராட்சிக்குமுன் இருந்தவராவர் என்றும் கூறுவர்.

இனி, "ஆக்கை கொடுத்தளித்த கோனே குணபரனே" என்று திருமழிசையாருடைய நான்முகத்திருவந்தாதியைக் கொண்டும் குணபரன் என்ற புனைபெயர் கி. பி. 600 லிருந்து 625 வரை ஆண்ட மகேந்திரவன்மனுக்கிருந்ததைக் கொண்டும், இவ்வாழ்வார் அவர் காலத்தரசனை பல்லவனையே கருதியிருக்கக்கூடும் எனக்கொண்டு, மகேந்திரவன்மன் காலத்தவராக இவ்வாழ்வாரைக் கருதுவர் சிலர். இதனை டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் மறுப்பர். மேலும் கொடுத்தளித்தகோன் என்ற தொடர் சிறப்பாகப் பெருமானையே குறிக்குமன்றி அரசனைக் குறித்தற்கேது வில்லை.

இனி முதலாழ்வார்கள்போலன்றி திருமழிசைப்பிரான் சமய வாதத்தில் ஈடுபட்டவராக அவர்தம் செய்யுட்கொண்டுணரலாம்.

> "அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர்
> சிறியார் சிவப்பட் டார்கள்"

என்ற வரிகளையும்,

> "திருமால்தன் பேரான
> பேசப்பெறாத பிணச்சமயர் பேசக்கேட்
> டாசைப்பட் டாழ்வார் பலர்"

என்ற வரிகளையும் கண்டு தெளிக. இவ்வாறு வைணவத்தைப் பெருமைப்படுத்தியும் ஏனைய சமயங்களை யிகழ்ந்தும் வந்த காலம் மகேந்திரவன்மனுக்குப் பிற்பட்ட காலம். இம்மகேந்திரவன்மன் முதலிற் சமணனாகஇருந்து பின்னர்ச் சமண சமயத்தினின்றும் சிவபிரான் திருவருளால் சைவத்தைத் தழுவி யுய்ந்த திருநாவுக்கரசரால் சைவனாக்கப் பட்டவன். அவன் சைவனாக மாறிய நிலையில் சமணப் பாழிகளை யழித்ததும், சிவாலயங்களும் குகைக்கோயில்களும் அமைத்ததும் சரித்திரத்திற் பரக்கக் காணலாம். இந்தக் காலமே திருமழிசையார் காலம் எனக் கூறத்தகும். அவ்வாறேல் முதலாழ்வார்கள் காலம் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் அதாவது 6-ஆம் நூற்றாண்டென்று கூறலாம்.

திருமழிசையார் முதலாழ்வார்களைத் திருவல்லிக்கேணியிற் சந்தித்த வரலாறு இக்கொள்கைக்குத் தடையாயிருத்தல் கூடும் எனினும் பெருந்தவ முனிவனான திருமழிசையாழ் வார் 700 ஆண்டுகள் வாழ்ந்தனர் என்ற திவ்யசூரி சரித வரலாறு கொண்டு இவர்கள் சந்திப்பும் ஒருவாறேற்கக் கூடும்.

நிற்க, மு. இராகவையங்கார் தமது "ஆழ்வார்கள் கால நிலை" என்னும் நூலில் "குடமூக்கிற் பகவர்" என்ற பெயர் யாப்பருங்கல விருத்தியில் வருவதாகவும், அவரை ஆக்கவும் கெடுக்கவும் பாடவல்ல ஆற்றலுடையவராகப் பொய்கையார், பூதத்தார், காரைக்காற் பேயார் என்றவ ரோடு ஒப்புக் கூறப்பட்டுள்ளதாகவும் கூறி, அவர்களது செய்யுட்கள் மிக்கும் குறைந்தும் வரும் ஆரிடம் என்று அவ்விருத்திகாரர் குறிப்பிடுவதையும் கூறுவர். அவர் மேலும் குடமூக்கிற் பகவர் இயற்றிய 'வாசுதேவனார் சிந்தம்' என்ற நூலே திருமழிசையாரின் திருச்சந்தவிருத் தம் என்பர். பரம பாகவதனான சிம்மவிஷ்ணு (கி. பி. 590) வின் காலமும், பல்லவ மகேந்திரவன்மன் கால மாகிய கி. பி. 700-ம் முறையே முதலாழ்வார்களும் திரு மழிசையாழ்வாரும் வதிந்த காலம் என்பது மு. இராக வையங்கார் கொள்கை.

குடமூக்கிற் பகவர் என்று கூறப்படும் ஓர் சிலை இன்றும் திருக்குடந்தை நாகேச்சுரர் ஆலயத்தில் உள்ளது. அது பகவற் சந்நிதியென்று வழங்குகிறது. மற்றும் அந்நகர்க் கண் உள்ள திருமால் ஆலயங்களில் இப்பெயரோ சிலையோ காணப்படவில்லை. மேலும் வாசுதேவனார் சிந்தத் திற்கும் திருமழிசையார் சந்தத்திற்கும் இயைபு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே திருமழிசையாழ் வாரும் குடமூக்கிற் பகவரும் ஒருவரே எனக் கோடற்கில்லை.

இனித் திருமழிசையார் அருளிச் செய்தன நான்முகன் திருவந்தாதியும், திருச்சந்த விருத்தமும் ஆம். இவரை வீர

வைணவர் என்று சொல்லத் தகும். நான்முகனை நாராயணன் படைத்தான் என்றும் அவனும் நான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான் என்றும் கூறித் திருமாற்கே பரத்வம் கூறுவர் இவர். ஒரு பாசுரத்தில் திருமாலை முன்னிலைப்படுத்தி "நானுன்னையன்றி யிலேன் கண்டாய் நாரணனே, நீயென்னையன்றியிலை" என்று கூறினர். பிறிதோரிடத்தில் பிரமன் திருமாலின் திருவடியைக் கழுவினதாகவும், அந்நீரைச் சிவபிரான் புனித நீரென்று தம் சடைக்கணேற்றதாகவும் கூறுவர். ஓரிடத்தில்,

"தேவராய் நிற்குமத் தேவும் அத்தேவரில்
மூவராய் நிற்கு முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாங் கடை"

என்று இவர் பாடுவதினின்று இவர் மறந்தும் புறந்தொழாமாந்தர் வகுப்பிற் சேர்க்கப்படுவர். இவர்க்குத் தமிழ் மொழியிற் பெரும் பற்றுண்டென்பது, "விதையாக, நல் தமிழை வித்தி யென்னுள்ளத்தை நீ விளைத்தாய், கற்ற மொழியாகிக் கலந்து" என்று கூறுவதான் உணரப்படும். பல பாசுரங்களில் திருமாலையே பரதெய்வமாகச் சிறப்பித்தும், பிரமன் சிவன் முதலியோரை இழித்தும் பாடுவர். முதலாழ்வார்களின் பாட்டுக்களில் சிவபிரான் முதலியோரை யிழித்துப் பாடிய பாட்டுக்கள் இல்லை. சம்பந்தரும், அப்பரும் சிவனை யுயர்த்திக் கூறும் முறையில் இவ்வாறு பாடியுள்ளனர். எனவே கி. பி. ஆறும் நூற்றாண்டினிறுதியில் இவர் இருந்ததாகக் கொள்ளுதல் பொருந்தும். இவரியற்றிய திருச்சந்த விருத்தம் அரிதின் உணரற்பாலது. திருமாலின் பல்வேறு அவதாரங்களும் அவற்றிற் புரிந்த திருவிளையாடல்களும் இவரது பாசுரங்களிற் காணலாம்.

இவரது வெண்பாக்கள் ஓசை அமைதியுடன் கூடிச் செம்பாகமானவை. திருமாலின் ஏழு திருவிளையாடல்களை அழகுபெற ஓர் வெண்பாவில் அமைத்துள்ளார். அது

பின்வருமாறு :—

'' அடிச்சகடம் சாடி யரவாட்டி யானை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு—வடிப்பவள
வாய்ப்பின்னை தோளிக்கா வல்லேற் றெருத்திறுத்துக்
கோப்பின்னு மானுன் குறிப்பு.''

இவர் பாடிப் புகழ்ந்த திவ்ய தேசங்களில் முக்கிய மானவை திருவல்லிக்கேணி, திருக்குடந்தை, திருவெ.:கா, திருவெவ்வுள், திருவரங்கம் முதலியன. இன்னும் இவரது பெருமையைக் கூறவெழுந்த பல வரலாறுகள் உண்டு. அவற்றைக் குருபரம்பரை முதலிய நூல்களிற் காணலாம். ஒரு நாள் இவர் தமது ஆடையைத் தைத்துக் கொண் டிருந்தபொழுது சிவபெருமானும் பார்வதியும் ஆகாய வீதியிற் சென்றனர். அச்சமயம், அவர்களது நிழல் தம் மேற்படாமல் ஒதுங்கினர் ஆழ்வார். உமை வெகுண்டு ஈசனிடம் விண்ணப்பிக்க, இறைவன் ஆழ்வாரது பெருமை யைப் பிராட்டிக்குக் காண்பதற்காகப் பூமியில் இறங்கி, ஆழ்வாரை அவர் அவ்வாறு செய்ததேன் என்று வினவ, அவர், அவர்களால் தமக்கு ஆகவேண்டுவதொன்றுமில்லை யாகலின் அவ்வாறு செய்ததாகக் கூறினர். உடனே சிவ பிரான் எது வேண்டுமென்றாலும் தருவதாகக் கூற, அவர் மோக்ஷம் வேண்டுமென்றார். அதற்குச் சிவன் திருமாலே அ.:து அருளுதற்குரியன் என மக்களின் வாழ்க்கையை ஒரு நாளேனும் நீட்டிக்க முடியுமா என்று கேட்டார். அதற்கு, அதுவும் இயலாதென்றார். உடனே துடுக்காக, நூல்வழி யூசி செல்லுமாறு செய்தற்கேலுமா, எனப் பெருமான் வெகுண்டு தமது நெற்றிக்கண்ணைத் திறக்க, ஆழ்வார் தமது கால் கடைவிரலிலிருந்து கண் உண்டாக் கித் தீயைப் பொழிந்தார். உலகம் எரியால் நிலைகுலைந்தது. சிவபிரான் மேகங்களை அழைத்தார். மேகங்கள் முதலில் மறுத்தன. பின்னர், திருமழிசையார் சினம் தணியச் சிவபிரான் தளர்ச்சி நீங்கினர். பின்னர், சிவபெருமான் அவரது அசையாத பத்தியைக் கண்டு பக்திசாரர் எனப் பெயரிட்டார் என்று வரலாறு வழங்குகிறது.

மற்ருேர் சமயம் சூக்திகாசானென்ற ஓர் சித்தன் ஓர் புலிமீதேறிக் ககனமார்க்கமாகச் செல்லும்போது திருமழிசையார் தவச்சாலைக்கு நேரில் வர அவனது புலி நகராமல் நின்றது. உடனே கீழிறங்கித் திருமழிசையாரிடம் சென்று, ஓர் புத்தாடை நல்குவதாகக் கூறினன். திருமழிசையார் அதைவிடச் சிறந்த ஆடையைக் காட்டினர். அவன் ஓர் அரிய அரதன மாலையைக் காட்ட அவர் தமது துளசிமணி மாலையைப் பேரொளியுடையதாகச் செய்து காட்டினர். சித்தன் அவர் பெருமையை வியந்து சென்ருன். மற்றும் ஓர் இரசவாதி தன் மகிமையைத் தெரிவித்துத் தன்னைவிடப் பெரிய இரசவாதியாக ஆழ்வாரிருக்கக் கண்டு, வாளா சென்றனன் என்ப. இதன் பின்னர்த்தான் இப்பெரியார் முதலாழ்வார் மூவரையும் கண்டது.

பல காலம் சென்று, குடந்தைக்குச் செல்லும்போது வழியில் பெரும்புலியூரில் ஓர் வீட்டுத் திண்ணையில் தங்கினர். அங்கே சில பிராமணர்கள் வேதம் ஓதிக்கொண்டிருந்தவர், இவரைக் கண்டவுடன் சூத்திரனெனக் கருதி ஓதுவதை நிறுத்தினர். பின்னர், அவர்களுக்கு விட்ட இடம் மறந்து போகவே அவர்கள் வியந்து பின்னர், திருமழிசையாரிடம், திருமால் திருவுருவைக் கண்டு அதிசயித்தனர். இவ்வாழ்வார், கும்பகோணம் சென்று நம்மாழ்வார் இயற்றியருளிய திருவாய்மொழியைக் கேட்டு அப்பாசுரங்கட்கு எவ்வகையிலும் தம்பாசுரங்கள் நிகராகா என்று எண்ணி அவற்றைக் கிழித்துக் காவிரியில் எறிந்தனர் என்றும், இரண்டு பதிகங்களே மிதந்தன என்றும் வரலாறுண்டு. இவர் 4700 ஆண்டுகள் உலகில் இருந்தனர்.

**திருச்சந்தவிருத்தம்**

இது திவ்ய ப்ரபந்தத்தில் 3-வது ஆயிரமாகிய "இயற்பாவின் ஓர் பகுதி. திருமாலே ஐம்பூதங்கட்கும் உபாதாந காரணம் என்றும், உயிர்கள் அல்லது சீவான்மாக்கள் இறைவன் காட்டக் காண்பன என்றும், அவன் கருணை

மூர்த்தியென்றும், எல்லா உயிர்களும் அவனிடமே தோன்றி அவனிடம் ஒடுங்கும் என்றும், வேதங்களாலும் அவன் அறியப்படாதவன் என்றும், மக்களிடையே அவன் பலகாற் பிறந்தமை அவன் பத்துடையவர்க்கு எளியன் என்பதை விளக்குமென்றும், அவனே மூவகைக் காரண மும் ஆவான் என்றும், பலபட இறைவன் பெருமை இதில் கூறப்படுதல் காணலாம். ஐம்புலன்களை யடக்கி, நல்ல புலத்தின் வழிகளைத் திறந்து ஞானச் சுடரைக் கொளுவி என்பெலாம் நெக்குருக உரோமஞ் சிலிர்ப்ப, உள்ளத் துள்ளே கனிந்தெழுந்ததோர் அன்பினாலேயே இறைவனைக் காணலாம் என்ற உயரிய கருத்துப்பட,

"புன்புல வழியடைத்து அரக்கி லச்சனைசெய்து
நன்புல வழிதிறந்து ஞானச் சுடர்கொளீஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந் தெழுந்ததோர்
அன்பிலன்றி யாழியானை யாவர்காண வல்லரே"

என அருளிச் செய்துள்ளார்.

"பத்திவலையிற் படுவோன் காண்க"

என மணிவாசகர் கூறியது காண்க. சில பாடல்களில் எண்ணிக்கைகளை அடுத்தடுத்து வைத்துப் பாடுவது இவர்க்கியல்பு.

"எட்டுமெட்டு மெட்டுமாயொ ரேழுமேழு மேழுமாய்
எட்டுமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனை
எட்டினாய வேதமோ டிறைஞ்சிநின்ற வன்பெயர்
எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே"

என்ற விருத்தத்தைக் காண்க.

24 தத்வங்களாகி ஏழு தீவு ஏழு குலகிரிகள், ஏழு கடல் என்ற இவைகளாகி, 12 ஆதித்தர்களாகி, நின்ற ஆதி தேவனை எட்டு அங்கங்களும் புவியிற் படும்படி வணங்கி நின்று அவனது எட்டக்கரங்களாலாய பெயரை ஓதுகின்ற வர்கள் வானமாள வல்லவர் என்பது இதன் பொருள்.

90-வது செய்யுளில் "குலங்களாய வீரிரெண்டில் ஒன் றிலும் பிறந்திலேன்" என்றும், "புலன்களை வென்றி

லேன்'' என்றும், தம்மைப்பற்றி இவர் கூறியுள்ளனர். சந்த விருத்தங்களின் கருத்தமைதி ஒற்றுமை பற்றி, இவரையே சிவவாக்யர் என்பர் சிலர். இவர் பாடல்களில் சில இயற்கை வருணனைகளையும் காணலாம்.

'' நண்டையுண்டு நாரைபேர வாளைபாய நீலமே
அண்டைகொண்டு கெண்டைமேயும் அந்தணீ ரரங்கமே''

என்ற பாசுரத்தின் உள்ளுறையைக் குறிக்குங்கால் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

''இத்தால், ஸம்ஸாரிகளை நலிகிற அஹங்காரத்தைக் கண்டு பீதராய் முமுக்ஷுக்களாய் உபாஸனத்திலே யிழிந்த ஸாதகரைக் கண்டு இவையிரண்டும் பயஸ்தான மென்று ஸர்வேச்வரனையே உபாயமாகப்பற்றி நிற்பாராய் ஸ்வரூபா நுரூபமான பகவத்குணா நுபவமே யாத்திரையாய் வர்த்திக்கும் ப்ரபந்நர்க்கு ஸ்மாரசமாயிருக்கிற தாய்த்து கெண்டைகளுடைய யாத்திரை யென்க'' என்று நண்டைக் கபளீகரித்த நாரையின் ஸ்தானத்திலே ஸம்சாரிகளைக் கபளீகரிக்கும் அஹங்காரம், நாரையைக் கண்டு அஞ்சித் துவளுகிற வாளையின் ஸ்தானத்திலே, அகங்காரத்திற்கு இருய்த்த உபாஸகர்; நாரையையும் வாளையையும் கண்டு அஞ்சி நெய்தல் நிழலிலே பதுங்கின கெண்டையின் ஸ்தானத்திலே அகங்காரத்துக்கும்உபாஸனத்திற்கும் இருய்த்த பகவத் பாதாரவிந்த நிழலிலே யொதுங்கி அச்சம் கொண்டு வாழ்கின்ற பிரபந்நர்கள் என்றது காண்க. முத்தும் பவளமும் விரவுவது போன்று வடமொழி தென்மொழிகள் விரவி வரத் தொடுக்கும் மணிப் பிரவாள நடையை ஷை உள்ளுறையில் காணலாம். மற்றும் வான்மீகி கூருத ஓர் நிகழ்ச்சியை இப்பெரியார் தமது பாசுரத்திற் குறித்துள்ளார். திருமாலைக் ''கூனகம் புகத் தெறித்த கொற்ற வில்லி'' என்றும் '' கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு கூனிகூன் உண்டை கொண்ட ரங்கவோட்டி யுள்மகிழ்ந்த நாதனுர்'' என்றது காண்க. இக்கருத்தையே கம்பநாட்டாழ்வார் தமது இராம காதையில் எடுத்தாண்டார். (கம்பரா-மந்தரை. 41; கிட்கிந்தா. அரசியல். 32.)

*350 (1916-17)* திருவிடைகழியாழ்வார் ஆலயத்தைச் சேர்ந்த திருமழிசை ஆழ்வார் திருமாளிகை மடத்தில், ஸ்ரீ வைணவர் திருவமுது செய்தற்காக நிலச் சாசனம். இது விக்ரமசோழன் ஆட்சிக்காலம்.

*1922 (195)* ஸ்ரீரங்கராயதேவ மகாராசா—திருமழிசையாழ்வாரின் பிறந்த நாட்காக.

*1923 (168)* ராசகேசரிவர்மன் குலோத்துங்கசோழன் 46-வது ஆட்சி ஆண்டு ஓர் சபை நிறுவத் **திருமழிசை வள்ள**லும், வீற்றிருந்த தாசரும் 30 பதாகை நிலம் அளிப்பு.

எட்டாம் நூற்றூண்டு

**பெரியாழ்வார்**

இவர் பெரிய திருவடியின் அவதாரமாகச் சீவிலிபுத்தூரிற் பிறந்தவர் என்றும், சீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்திருந்தவர் என்றும் கூறுப. திருமாலின் பரத்வத்தைப் பலரும் மகிழுமாறு வாதஞ்செய்து நிறுத்தியதற்காக மன்னனிடம் கிழி பெற்றுப் பட்டர்பிரான் எனப் பட்டம் எய்தியவர். விஷ்ணுசித்தர் என்பது இவர்தமியற்பெயர். ஓர் அழகிய நந்தவனம் வைத்து மலர்களை விளைத்து அவைகளை மாலையாகத் தொடுத்துத் திருமாற்குச் சாத்தும் திருப்பணியை மேற்கொண்டவர். ஓர் நாள் தோட்டத்தில் ஓர் பெண்மகவைக் கண்டெடுத்து வளர்த்து வந்தார். "இப்பெண்குழந்தையே ஆண்டாள்" என வழங்கப்பட்டாள். செல்வமாக வளர்ந்த குழந்தை தனது தந்தையின் பணியில் ஈடுபட்டது. ஆயினும், இறைவனுக்காகத் தொடுக்கப்பட்ட மாலையைத் தான் அணிந்து பெருமானுக்குத் தானேற்றவள்தானே என்று நோக்கிப் பின் அளிப்பது வழக்கம். இச்செய்தியறியாராய்ப் பெரியாழ்வார் அதனை இறைவற்குச் சூட்டி வந்தார். ஒரு நாள் தன் மகளின் அடாத செயலைக் கண்டு வெகுண்டு, வேறு

மாலை தொடுக்குமாறு செய்து, இறைவற்குப் புனைய, இறைவன் இரவில் அவரது கனவிற் றோன்றி அவள் அணிந்து விடுத்தமாலையே தமக்கு மகிழ்ச்சி விளைப்பதாகக் கூறினர். பெரியாழ்வாரும் அம்மாலையையே அளித்து வந்தார். இது காரணமாக ஆண்டாளுக்குச் சூடிக்கொடுத்தவள் என்ற பெயர் எய்தியது. இவள் மணப்பருவம் அடைந்தவுடன் பிறர் எவரையும் மணக்க எண்ணமின்றித் திருவரங்கப்பெருமாற்கே தான் உரியவள் எனக் கூறி வந்தாள். இவ்வாறு அவள் கருதியதற்கு அவளது அருளிச் செயல்களிலேயே அகச் சான்றுகள் காணலாம். இவளது தந்தை பலபட முயன்றும் இவட்கு மணமுடிக்கக் கூடவில்லை. திருவரங்கப்பெருமான் கட்டளையின்பேரில், ஆண்டாளம்மையை திருவரங்கத்தலத்திற் கொண்டு சேர்த்ததாகவும், அங்கே அவள் இறைவனை அடைந்ததாகவும் வரலாறு கூறும். பெரியாழ்வார் வேயர் குலத்தவராகலின் சூடிக்கொடுத்தாளை வேயர் பயந்த விளக்கென்பர்.

இனி இவர் வதிந்த காலத்தை ஆராய்வோம். இவர் காலத்திருந்த ஸ்ரீவல்லபற்கு மாறன் என்ற பெயருண்டென்பது இவ்வாழ்வாரருளிச் செய்த,

"கொன்னவில் கூர்வேற் கோனெடுமாறன் தென்கூடற் [கோன்
தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ்சோலையே"

என்ற வரிகளான் அறியலாம். இந்த ஸ்ரீவல்லபன் வரகுண பாண்டியன் மகன் என்றும், அவன் 9-ஆம் நூற்றாண்டினிடையில் வாழ்ந்தவன் என்றும் குருபரம்பரை கூறும். இப்பெரியாரின் பிறப்பு நாள் கி. பி. 725-ஆக ஏற்படுதலின் ஸ்ரீவல்லபனோடு இவரை ஒரு காலத்தவராக எண்ணற்கில்லையென்றும், இவர் காலம் 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிதான் என்றும் கூறுவர் கோபிநாதராவ் அவர்கள்.

இப்பெரியார் நந்தவனம் வைத்துப் பெருமானுக்கு மலர்மாலை யளித்து வந்தவர் என்பதும், சீவில்லிபுத்தூர்க்

கோயில் மரியாதைகளைப் பெற்ற பெரியார் என்பதும் இவர் பாடிய பாசுரங்கள் கொண்டுணரலாம். உதாரணமாக,

" நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும்
அத்தாணிச் சேவகமும்
மெய்யிடை நல்லதோர் சாந்தமும் தந்தென்னை
வெள்ளுயி ராக்க வல்ல"

என்ற திருப்பல்லாண்டும்,

" தோட்டமில்லவன் ஆத்தொழுஓடை துடைவையும்
கிணறும் இவை யெல்லாம்
வாட்டமின்றி யுன்பொன் னடிக்கீழே
வளைப்பகம் வகுத்துக் கொண்டிருந்தேன்"

என்ற பெரியாழ்வார் திருமொழியுங் கண்டு தெளிக.

நிற்க, தமது "ஆழ்வார்கள் காலநிலை" என்ற நூலில் மு. இராகவையங்கார் பின்வருமாறு கூறியுள்ளார். "இப் பெரியார் காலத்தே மிகுந்த செல்வாக்குடன் இராச புரோகிதராக விளங்கியவர் திருக்கோட்டியூர் நம்பி என்பதும், திருமாலடியனாக விளங்கிய மன்னன் இன்னான் என்பதும் தெரிவிப்பதாக,

" அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர் கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும்
உனக்குப் பழவடியேன்" (திருப்பல்.)

என்றும்,

" நளிர்ந்தசீலன் நயாசலன் அபிமான துங்கனை
நாடோறும்
தெளிந்தசெல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால்
திருக்கோட்டியூர்" (பெரியாழ்.)

என்றும்,

" தென்கூடற்கோன் தென்னன் கொண்டாடும்
தென்றிருமாலிருஞ் சோலையே" (திருப்பல்.)

என்றும் சில வரிகளைக் காட்டுவர்.

வைணவம் உயர்ந்ததா சைவம் உயர்ந்ததா என்ற வாதம் நிகழ்ந்ததும், வைணவக் கடவுளாகிய திருமாற்குப் பரத்வம் கூறிப் பெரியாழ்வார் பொற்கிழி யறுத்ததும் மேலே கூறப்பட்டன. இந்நூற்றாண்டில் அரசு புரிந்த பல்லவர்கள் பெரும்பாலும் வைணவர்கள். பாண்டியர்களோ பரம்பரைச் சைவர்கள். இந்நிலையில் மதுரைத் தென்னவன் எச்சமயம் உண்மையின் உயர்ந்ததென அறிய அவாவுவதியல்பே. இனி அப்பாண்டியன் யாவன் என ஆராய்வோம். இப்பெரியார் தமது திருமொழி 4-ஆம் பத்து, இரண்டாம் பதிகத்துள்,

> ''மன்னவன் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்
> முன்னங்குச் சென்று மோழை யெழுவித்தவன் மலை
> கொன்னவில்கூர்வேற் கோநெடுமாறன்தென்கூடற்கோன்
> தென்னன் கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே''

என்று கூறுவர். இதில் அப்பாண்டியன் கோநெடுமாறன் எனக் கூறுதல் காணலாம். இந்நெடுமாறன் யாவன்? இவனைக் குறித்து ஆராயுமிடத்து மு. இராகவையங்கார்[1] வேள்விக்குடி சின்னமனூர்ச் சாசனங்களிற் கூறப்படும் நான்கு மாறவர்மர்களைத் தனித்தனி ஆராய்ந்து, கடுங்கோனையடுத்து அரசுசெய்த மாறவர்மன் திருமழிசையார் காலத்தவன் என்றும், அவனையடுத்துக் கூறப்படும் அரிகேசரி மாறவன்மன் திருஞானசம்பந்தராற் சமணத்தினின்றும் சைவ சமயத்திற்கு மாற்றப்பெற்றுப் பரம சைவனான கூன்பாண்டியன் என்றும் இவர்கள் இருவரும் பெரியாழ்வாரால் வைணவராக்கப்பட்டவர்என்று கோடற்கில்லையென்றும், இந்த நெடுமாறனது பெயரன் கி. பி. 830-867-ல் அரசு புரிந்த இராசசிம்மன் என்றும், இவனும் பரம சைவனாயினும், பெரியாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப் பெற்றவனாக இருத்தல் அமையும்

1. ஆழ்வார்கள் காலநிலை.

என்றும் கருதுவர் மேலும் இவன் மகன் பராந்தகன் நெடுஞ்சடையனிடம் உத்தர மந்திரியாக இருந்தவன் மாறன் காரி என்பதும், இவ்வமைச்சனே நெடுஞ்சடையன் தந்தையாகிய மாறவன்மனுக்குக் கங்கராசன் மகள் பூசுந்தரியை மணம் புரிவித்தவன் என்பதும்,

> '' கொங்கரவ நறுங்கண்ணிக் கங்கராசனுெடு
> சம்பந்தஞ் செய்தும் ''

என்ற சாசனம் கொண்டுணரப்படும். மாறன் காரிக்குப் பின்னர் அமைச்சர் பதவியிலிருந்தவன் மாறன் எயினன். இச்செய்திகள், இவர்கள் ஆனைமலை அடிவாரத்திற் பிரதிட்டிப்பித்த நரசிங்கன் ஆலயங்கொண்டு தெளியப்படும், இம்மந்திரியின் ஊர் களக்குடி. இது சீவில்லிபுத்தூர்க் கண்மையில் உள்ளது. இந்த வைணவர்களின் முயற்சியாலேயே மாறவன்மன் என்ற நெடுஞ்சடையன் தந்தை வைணவனுக மாறியிருத்தல் கூடும் என்பர். இந்நெடுஞ் சடையன் கி. பி. 769-ல் பட்டமெய்தியவன். எனவே, இதற்கு முன்னரே நெடுமாறன் வைணவத்தைத் தழுவி யிருத்தல் வேண்டும்.

நிற்க, கோபிநாதராவ் கருத்தின்படி, பெரியாழ்வார் காலத்து மன்னன் சீமாறன் சீவல்லபன் ஆவன். இவன் கி. பி. 862-ல் அரசு கட்டில் ஏறியதாக அவன் மகன் வரகுணனது சாசனம் கூறும். இவனது ஆட்சிக் காலத் தொடக்கம் தான் வைணவ ஆசாரியத் தலைவரான ஸ்ரீநாத முனிகள் வாழ்ந்த காலம். இந்தக் காலத்திலேயே பெரியாழ்வார் இருந்திருப்பின், வைணவப் பெரியார்களான இவ்விருவரும் அளவளாவிய செய்திகள் குறிக்கப்பட்டிருக்கும். அத்தகைய செய்திகள் ஒன்றும் இல்லையாகலானும், வைணவ ஆழ்வார்கட்கும் ஆச்சார்யார்கட்கும் இடைப்பட்டகாலம் குறைந்தது ஒன்றிரண்டு நூற்றுண்டுகளேனும் இருந்திருக்க வேண்டும் என்பது முன்னரே தெளியப்பட்டதாகலானும், கி. பி. 9-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவரெனப் பெரியாழ்வாரைக் கருதற்கில்லையென்பர் மு. இராகவையங்கார். இக்கொள்கையே சாலவலியுடைத்து

என்பது ஆழ்ந்து நோக்கிற் புலனாகும்.

இனிப் பெரியாழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இவரியற்றியன பெரியாழ்வார் திருமொழி என வழங்கப்பட்டு நாலாயிரப் பிரபந்தத்தில் முதலாயிரத்திற் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் தமது பதிகங்கள்தோறும் திருக்கடைக்காப்பில், திருஞானசம்பந்தரும், சுந்தரரும் கூறுவதுபோல, தென்புதுவைப் பட்டன், விட்டுசித்தன், வில்லிபுத்தூர்ப்பட்டன், வேயர் புகழ் விட்டு சித்தன், பட்டர்பிரான், புதுவைக்கோன் பட்டர்பிரான், புதுவை மன்னன், வேயர்தங்குலத்துதித்த விட்டுசித்தன் எனத் தம்மைக் கூறிக்கொள்வர். இவற்றினின்று இவர் வேயர்குலத் தோன்றல் என்றும், அக்குடிகட்குத்தலைமை பெற்று விளங்கிய ஓர் சிற்றரசன் என்றும், இவர் சீவில்லிபுத்தூரிற் பிறந்தவர் என்றும், இவர்க்கு விட்டுசித்தன் முதலிய பல பெயர்கள் உண்டென்றும் உணரலாம். இவரது பாசுரங்களில், இவர் முழுமனதுடன் வழிபட்டுவந்த திருமாலின் பல்வேறு அவதாரச் செய்திகளும், பிறவும் நன்கு கூறப்பட்டுள்ளன. முதற்பத்து எட்டாவது பாசுரத்தினின்று இவர் அத்தாணிச் சேவகம் செய்தவரலாறு விளங்கும். திருமால் திருவோணத்திற் பிறந்தது. இரணியனையும், வாணனையும் அழித்தது, காலிங்கனைக்கொன்றது, சார்ங்கம்முதலிய ஐந்து ஆயுதங்களைத் தாங்கி நிற்பது, பூதனையுயிரை மாய்த்தது, வசுதேவற்கும் தேவகிக்கும் மகவாகக் கண்ணன் உதித்தது, கண்ணன் மருதிடைத் தவழ்ந்தது, சகடுதைத்தது, யசோதையால் வளர்க்கப்பட்டது, ஆலிலைமேற் பள்ளி கொண்டது, கோவர்த்தனகிரியைக் குடையாக்கியது, ஏழு விடைகளை யடர்த்து நப்பின்னையை மணந்தது, விளவெறிந்தது, தேனுக நரகாசுரர்களைக் கொன்றது, பத்து அவதாரங்கள் திருமால் எடுத்தது, பாரதப்போரில் பார்த்தற்குத் தேர் செலுத்தியது, பாற்கடல் கடைந்தது, இராவணனைக் கொன்றது, மாவலிபாலிரந்தது, பஞ்சவர்தூதனாயது. குப்ஜையின் கூனிமிர்த்தது, பாரிசாதம் கொணர்ந்

தது, கஞ்சனைக்கொன்றது, யானையைக்காத்தது, புள்ளின் வாய் கீண்டது, வீடணற்கரசளித்தது, குடக்கூத்தாடியது முதலிய செய்திகள் இவரது பாசுரங்களிற் காணலாம்.

இப்பெரியார் தமது பாசுரங்களாற் புகழ்ந்த திவ்ய தேசங்களாவன :—திருவரங்கம், திருப்பேர்நகர், திருக் குடந்தை, திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருக் கோட்டியூர், சீவில்லிபுத்தூர், திருக்குறுங்குடி, திருவேங் கடம், திருவயோத்தி, சாளக்கிராமம், வதரியாச்சிரமம், திருக்கண்டங்குடிநகர் (தேவப்பிரயாகை), துவாரகை (துவரை), வடமதுரை, திருவாய்ப்பாடி (கோகுலம்), திருப்பாற்கடல், பரமபதம் முதலியன. இத்தலங்களைப் பற்றிய பாடல்கள் காணப்படினும், இவர் இக்கூறப்பட்ட எல்லாத் தலங்களையும் நேரிற் சென்று கண்டு பாடினர் என்பதற்கு அவரைப்பற்றிய வரலாறுகளிற் சான்றில்லை. சில திவ்ய தேசங்களை நேரிற்கண்டிருக்கக்கூடும். பிற வற்றைத் தமது நகரிலிருந்துகொண்டே புகழ்ந்து பாடி யிருத்தல் கூடும்.

இவர் முதற்கண் மொழிந்த பல்லாண்டு, வைணவர் களால் நாடோறும் ஓதப்பட்டு வருகின்றது. மற்றும் இவரது பாடல்களில் சிறப்பான அம்சம் யாதெனில், கண்ணபிரானை ஓர் சிறு குழவியாகப் பாவித்துப் பல விதமாகப் பாராட்டுதல் ஆகும். செந்தமிழில் 96-வகைச் சில்லரைப் பிரபந்தங்களில் பிள்ளைத்தமிழ் என்பதொன்று. இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இருபிரிவினது. பாட்டுடைத் தலைவனையோர் குழந்தையாகப் பாவித்து காப்புப்பருவம் முதலாகப் பாடிப் புகழ்வது. இம்முறையில் ஆழ்வார் கண்ணனைப் பாடியுள்ள பாசுரங்கள் மிகவும் இனிமை வாய்ந்தவை. பாசுரங்களில் குழந்தையைத் தாலாட்டுதல், குழந்தை சந்திரனை யழைத்தல், செங்கீரையாடுதல், சப் பாணி கொட்டுதல், தளர்நடை நடத்தல், அப்பூச்சி காட்டுதல், காக்கையை விளித்தல், சிற்றில் சிதைத்தல்

முதலியன காணலாம்.

நாட்டுப் பழமொழிகள் பல இவரது பாசுரங்களில் ஆங்காங்கு விரவியிருக்கக் காணலாம். 1, 2, 3-இல் "ஓணத்தான் உலகாளும்" என்பதும், "காக்கைவாயிலுங் கட்டுரை கொள்வர்" என்பதும், "புண்ணிற் புளிப் பெய்தாற் போல்" என்பதும் காண்க.

"காக்கை வாயிலுங் கட்டுரை கொள்வர்"

என்றதொடர்,

"பல்லியின் சொல்லுமோர் சொல்லாக் கொள்வர்
பண்டு பண்டே"

என்ற நம்மாழ்வார் பாசுரத்தொடரை நினைவூட்டுகின்றது.

அன்பு கனிந்த சில பாடல்கள் இங்கே உதாரணமாகக் காட்டலாம்.

"மெச்சூது சங்க மிடத்தான் நல் வேயூதி
பொய்ச்சூதிற் றோற்ற பொறையுடை மன்னர்க்காப்
பத்தூர் பெருதன்று பாரதம் கைசெய்த
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்"

"இருமாலைபோ லெதிர்ந்த மல்லரிரு வரங்க மெரி [செய்தாயதன்
திருமலிந்து திகழ் மார்வு தேக்கவந் தெனல்குலேறி
ஒரு முலையை வாய்மடுத் தொருமுலையை நெருடிக் [கொண்டு
இருமுலையும் முறைமுறையா யேங்கி யிருந் துணையே"

"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண் கோடச்
செய்யவாய் கொப்பளிப்பக்
குறுவியர்ப் புருவங் கூடலிப்பக் கோவிந்தன் குழல்
கொண்டூதின பொது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்து சூழ்ந்து
படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந் திறங்கிச்
செவியாட் டகில்லாதே"

இப்பாடற் கருத்துச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்து ஆனாயர் வேய்ங்குழ லூதியபோது நிகழ்ந்த தாகக் கூறிய செய்யுட்களுடன் ஒப்பு நோக்கி அறியத் தக்கது.

மூன்றும்பத்தில் சீதாப்பிராட்டியார்க்கு அநுமான் தெரி வித்த அடையாளங்களைக் கூறும் ஆழ்வார் பாசுரங்களின் கருத்தைக் கம்பநாட்டாழ்வார் தமது பெருங்காப்பியத் தில் எடுத்தாண்டிருப்பது கற்றோர் அறிவர். அதில் "சித்திரகூடத்திருப்ப" எனத்தொடங்குவதும் காகாசுரன் செய்தியைக் கூறுவதுமான செய்யுள் ஆராயத்தக்கது.

இன்னும் பத்தியையூட்டும் சிறந்த வரிகள் பல இவரது திருமொழியிற் காணலாம். உதாரணமாக,

"மார்வ மென்ப தோர் கோயிலமைத்து மாதவன் என்னும்
தெய்வத்தை நாட்டி
ஆர்வ மென்பதோர் பூவிட வல்லார்க் காவதண்டத்தி
லுய்யலு மாமே"

என்ற பாசுரங் காண்க. இதுபோன்ற கருத்துக்களை அப்பர் பாசுரங்களிலும் காணலாம்.

இவ்வாழ்வார் பெரும்புலவர் மட்டுமல்ல. உலக அறிவும், அநுபவமும், சாலச் சிறந்து விளங்கியவர் என்பதை அவர்தம் அருளிச் செயல்களினின்றே தெளியலாம். தமக்குயிரன்னனிறந்தநிலையில், மக்கள்,

"மடிவழி வந்து நீர்புலன் சோர வாயிலட்டிய
கஞ்சியு மீண்டே
கடைவழி வாரக் கண்ட மடைப்பக்கண்ணு றக்க
மதாவதன் முன்னம்"

என்றும்,

"அங்கம் விட்டவை யைந்து மகற்றி யாவிமூக் கினிற்
சோதித்த பின்னைச்

சங்கம் விட்டவர் கையை மறித்துப் பையவே
தலை சாய்ப்பதன் முன்னம்''

''வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப
வார்ந்த நீரில் குழிக் கண்கள் மிழற்றத்
தாயொரு பக்கம் தந்தையொரு பக்கம்
தாரமொரு பக்கம் அரற்றத்
தீயொரு பக்கம் சேர்வதன் முன்னம்
செங்கண் மாலைச் சேர்மின்''

என்றும் உலக நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற உணர்ச்சிகள் மனதிற்றைக்குமாறு வற்புறுத்தினர். சமணர்கள் இயற்றிய காப்பியங்களினும் இத்தகைய பாசுரங்களைக் காணலாம்.

இப்பெரியார் பாசுரங்களில் தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள் சிலவற்றைக் காணலாம். அவை பிறந்த குழவியை நீராட்டி, சிறுமஞ்சளால் நாக்குவழித்தல், தொட்டிலிடுதல், மகளிர் சிற்றில் இழைத்தல் (1, 3, 19) குழவிகட்கு திருமாலின் ஐம்படைத் தாலிகட்டுதல், அம்புலி காட்டுதல், அரசிலை அணிதல், குடக்கூத்தாடுதல் முதலியன.

சங்க காலத்துச் செய்யுட்கள் போலாது பலவகைச் சந்தங்களில், இசையின் அமைத்துப் பாடற்கேற்ப இவரது பாசுரங்கள் மிளிரும். பெரும்பாலும், கலி விருத்தம், கொச்சைக்கலி என்றவகையில் இவைகளை அடக்கலாம்.

**ஆண்டாள்**

திருத்தொண்டர் புராணத்துச் சிவனடியார் வரிசையிற் சிறப்புறத்திகழும் மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் போன்று, வைணவ ஆழ்வார் வரிசையிலும் விளக்கமுற்றொளிரும். இந்நல்லிசைப் புலமை மெல்லியலார் சரிதை தெய்வத்தன்மை வாய்ந்ததொன்று. இவர் தாய் வயிற்றிற் கருவிலிருந்து தோன்றியவரல்லர் என்ப. விண்டுசித்தர், பட்டர்பிரான் என வழங்கும் பெரியாழ்வார்

நந்தவனத்திற்றிருப்பணி செய்யும்போது, திருத்துழாய்க் காட்டில் ஓர் அழகிய குழவியகப்பட, அதனை அன்புடன் எடுத்துச்சென்று கோதை யென்னும் திருநாமமிட்டு அக் குழவியை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமு மாக வளர்த்து வந்தனர். நாடோறும் ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலிற் குடிகொண்டிருக்கும் திருமாற்கு மலர்மாலை தொடுக்கும்போது, இப்பெண் அம்மாலையைத் தன் குழலி லணிந்து "என் அழகு எம்பெருமான் ஏற்கக் கூடிய தாகுமோ" என்று கண்ணுடியிற் கண்டுகளித்து வந்தாள். இச்செய்தியை உணராத ஆழ்வார், அம்மாலைகளை எம் பெருமானுக்குச் சாத்தி வந்தனர். ஒருநாள் அம்மாலையில் ஓர் கேசமிருக்கக்கண்டு தன் மகளை வினவி உண்மை யுணர்ந்த அப்பெரியார், வேறு ஒலியல் தொடுக்கச்செய்து பெருமானுக்குதவினர். ஆனால் அன்றிரவில் திருமால் விட்டுணுசித்தரின் கனவிற்றோன்றி, கோதை சூடிய தொடையலே தமக்கு மகிழ்ச்சியைத் தருவதென்று கூறிப் பின்னர், அவரது மகளைத் தாம் வைகும் பூலோக வைகுந்த மாகிய திருவரங்கத்திற் றம்மிடம் சேர்க்கும்படி கட்டளை யிட்டனர். இதுபற்றி அவர் சூடிக்கொடுத்தவள் எனப் புகழப்பட்டார்.

பெரியாழ்வாரின் மகளான இக்குழந்தை "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" என்று மொழிந்த காரைக்கா லம்மையார் போன்றே "வண்டல் பயில்வன வெல்லாம் வளர்சங்கம் புனைந்தகரக் கொண்டல்வணன் திருவார்த்தை கூட வருவன பயின்று" வந்து, கருமாலிலிருந்து காக்கும் திருமாலிடம் பேரன்புகொண்டு, அவனையே மணம் புரிதல் வேண்டும் என்று கருதிநின்றார். இவர் மணப் பருவம் எய்திய அளவில் இவரது தந்தையார் தக்கவரனுக்கு இவரை மணமுடிக்கக் கருதினர். ஆனால் திருவரங்கப் பெருமானல்லாது வேறு எவரையும் தாம் மணப்பதில்லை யெனப் பிடிவாதமாகக் கூறினர் கோதை நாய்ச்சியார். பெரியாழ்வார் மிகவும் நொந்து,

"ஒருமகடன்னை யுடையே னுலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான்
கொண்டு போனன்"

"நாடும் நகரமு மறிய நல்லதோர் கண்ணலம் செய்து
சாடிறப் பாய்ந்த பெருமான் தக்க வர்கைப் பற்றுங்
[கொல்லோ"

என்றும்,

"நாடு மூரு மறியவே போய் நல்ல துழா யலங்கல்
சூடி நாரணன் போமிட மெல்லாம் சோதித் துழிதர்
[கின்ருள்
கேடு வேண்டுகின்ருர் பலருள்ளார் கேசவனே டிவளைப்
பாடி காவலிடுமி னென்று பார் தடுமாறினதே"

"காறை பூணும் கண்ணுடி காணும்
தன்கையில் வளைகுலுக்கும்
கூறை யுடுக்கும் அயர்க்கும் தன் கொவ்வைச்
செவ்வாய் திருத்தும்
தேறித் தேறி நின்ருயிரம் பேர்த்
தேவர்திறம் பிதற்றும்
மாறின் மாமணி வண்ணன்
மேலிவள் மாலுறு கின்ருளே"

"பெருப் பெருத்த கண்ணலங்கள் செய்து
பேணிநம் மில்லத் துள்ளே
இருத்துவா னெண்ணி நாமிருக்க
இவளுமொன் றெண்ணு கின்ருள்"

(பெரியாழ். 3, 7)

என்றும் மனமிரங்கிப் பாடுவதுகொண்டு காண்க. தமது அருளிச் செயல்களிலேயே, இம்மாதரசி, அநங்கனை நோக்கி "வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" என்றும், "மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன் கண்டா" யென்றும் பாடுதல் காணலாம். தெய்வீகத் தன்மையுடைய குழந்தையாதலின் இறைவனை யென்றும் மறவாது அவனிடமே பத்தி பூண்டு, அவனுற்றடுத்தாட் கொள்ளப்பட்ட நிலையே மேற்கூறியவாறு கூறப்பட்டது.

### கோதையார் வாழ்ந்த காலம்

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை யெனவே கோதையார் வாழ்ந்த காலம் புலனாகும். பெற்றெடுத்த என்பது திருத்துழாய் வனத்தில் கண்டெடுத்த எனப் பொருள்படும். இனி, "வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று" என்ற கோதை பாசுரவரியைக்கொண்டு குருவின் அத்தமனமும் சுக்கிரன் தோற்றமும் உடனிகழ்ந்த காலத்தை அந்த வரி குறிப்பிடுவதாகவும், அவ்வாறு நிகழ்ந்த காலம் கணித நூற்கணக்கின்படி 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் நான்குமுறை நிகழ்ந்ததாகவும், அவற்றுள் கி.பி. 731-இல் மார்கழிப் பூரணை யன்று வெள்ளி யெழுச்சியும் வியாழன் வீழ்ச்சியும் அடிவானங்களிற் கூறியவாறு அதிகாலையில் 3-50-மணிக்கு ஒப்ப நிகழ்ந்ததாகவும், அந்நேரம் மார்கழி நீராட்டத்துக்காக மகளிர் துயிலெழுதற்குப் பெரிதும் ஏற்றகாலமென்றும் ஆகவே அவ்வாறு நிகழ்ந்த காலப்பகுதி, அதாவது எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியே ஆண்டாள் காலம் என்றும் கூறுவர்.

மேலும் "வெள்ளியெழுந்தது வியாழமுறங்கிற்று" என்ற தொடர்க்கு எழுச்சியும் உறக்கமும் சேரநிகழ்ந்ததென்று கொண்டு பண்டிதர் மு. இராகவையங்கார் அவர்கள், பெரியாழ்வார் காலமாகப் பெறப்பட்ட 8-ஆம் நூற்றுண்டில் இந்நிகழ்ச்சி ஒரேமுறைதான் வந்துள்ளதென்றும், அஃது 731-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18உ அதிகாலை 3-50 மணியில் நிகழ்ந்ததென்றும் கூறுவர். இதன் முன்னரும் கி.பி. 600-இல் அத்தகைய நிகழ்ச்சி யிருந்ததேனும், அக்காலம் திருமழிசைப்பிரான் விளங்கிய காலமென்றும், பெரியாழ்வார் செய்திக்கேற்றவாறு பரமபாகவதர்களான பாண்டியரின் ஆட்சி அப்போது நிகழவில்லை என்றும் கூறுவர். எனவே கி.பி. 716-இல் ஸ்ரீ ஆண்டாள் தோன்றினர் எனக்கொண்டால், திருப்பாவை பாடும் பொழுது அவர்க்குப் பதினைந்து வயதாக இருக்கலாம். அப்பிராட்டியார் தமது திருமொழியில்,

"அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்
ஆதரித் தெழுந்த வென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தே னொல்லை விதிக் கிற்றியே"

என்றும்,

"ஊனுடை யாழி சங்குத் தமர்க்கென்
றுன்னித் தெழுந்த வென் தட முலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

என்று தாமே கூறுவதுகொண்டு இஃது தெளியப்படும். மேலே கூறியன கொண்டு ஸ்ரீ ஆண்டாள் விளங்கிய காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியெனக்கோடல்தகும்.

இவரது அருளிச் செயல்கள் ஆவன: திருப்பாவை முப்பதும், நாய்ச்சியார் திருமொழி நூற்று நாற்பத்து மூன்றுமாகும். இவை பெரியாழ்வார் திருமொழியை யடுத்து நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் சேர்க்கப்பட்டுள்ளன.

**திருப்பாவை**

இதன்கண் அடங்கிய 30 பாடல்களும் மிகவும் இன்புறத்தக்க சொன்னயம் பொருணயம் வாய்ந்தவை. "மார்கழித்தைந் நீராடல்" என்ற தமது அரிய கட்டுரையில் பண்டிதர் மு. இராகவையங்கார் அவர்கள் பாவை நோன்பின் வரலாற்றை விரிவாகக் கூறியுள்ளார். "பாவை நோன்பு என்பது கன்னிப்பெண்களால் மார்கழிமாதத்தில் தொடங்கப்பெற்று அம்மாதத்துப் பௌர்ணமியோடு முடிக்கப்பெறும் ஒரு விரதமாகும். நல்ல நாயகரை அடையவும் நாடு செழிக்கவும் காத்தியாயினீ தேவியை நோக்கிக் கன்னிப் பெண்களால் இந்நோன்பு அம்மாதத்தே நடத்தப் பெறுவதென்பதும் சங்கநாளிலே சாந்திரமான முறைப்படி "தைந்நீராடல்" என்ற பெயர்பெற்று வழங்கி வந்ததென்பதும், மலையாள நாட்டாரால் "திருவாதிரைத் திருவிழா" என்றும், சைவரால் "ஆருத்திரா தரிசனம்

என்றும் கொண்டாடப்படும் திருநாள் இவ்விரத முடிவு தினமே'' என்றும், அப்பேரறிஞர் தமது ஆழ்வார்கள் கால் நிலையில் எழுதிப் போந்தனர். கலித்தொகை என்ற சங்க நூலிலும் தலைவியை நோக்கித் தோழி ''தைந்நீராடும் தவம் தலைப்பட்டாயோ'' என்பது வினவுதல் காணலாம்.

''சுவரிற் புராணநின் பேரெழுதிச்
சுறவநற் கொடிகளும் துரங்கங்களும்
கவரிப் பிணுக்களும் கருப்பு வில்லும்
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா''

''வானிடை வாழு மவ்வானவர்க் கென்று
மறையவர் வேள்வியில் வகுத்த வவி
கானிடை திரிவதோர் நரிபுகுந்து
கடப்பது மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழி சங்குத் தமர்க்கென்
றுன்னித் தெழுந்த வென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே''

''தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூவித் தொழுதேத்து கின்றேன்
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே
பணி செய்து வாழப் பெறுவிடில் யான்
அழுதழு தலமந் தம்மா வழங்க
ஆற்றவு மஃதுனக் குறைக்கும் கண்டாய்
உழுவதோ ரெருத்தினை நுகங் கொடு பாய்த்து
ஊட்ட மின்றித் துரந்தா லொக்குமே''

என்பது போன்ற செய்யுட்களிலிருந்து காமன் நோன்பின் நிகழ்ச்சிகளை அறியலாம். மகளிர் தமது 12-ஆவது வயதில் காமன் நோன்புநோற்பர் எனப் பன்னிருபாட்டியல் கூறும். சீவகன் மனைவியருள் ஒருத்தியான சுரமஞ்சரியும் உதயணன் மனைவி பதுமாபதியும் இந்நோன்பு மேற்கொண்ட செய்தி சீவகசிந்தாமணி (2057), பெருங்கதை (3, 5, 27-33) என்பன கொண்டுணரலாம். மற்றும் இந்நோன்பின் நிகழ்ச்சிகள் திருப்பாவையில் விளக்கப்பட்டுள்ளன. பாற்கடலில் பையத்துயின்ற பரமனடிபாடி,

நாட்காலே நீராடி நெய் பாலுண்ணுமலும், விழிக்கு மையெழுதாமலும், கூந்தலில் மலர் முடியாமலும், செய்யத் தகாதவற்றை நீக்கியும், தீக்குறளை கூறுமலும் அறச் செயல்கள் ஆற்றுவதிலேயே மனமூன்றி நிற்பர். ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி நீராடினுல், நாட்டிற்கு ஓர் தீங்கும் நிகழாது என்றும், திங்கள்தோறும் மும்மாரி பெய்யு மென்றும் பல வளங்களும் நாட்டிற் சிறந்து விளங்கும் என்றும் கூறப்பட்டன.

இனிச் சூடிக்கொடுத்தாள் அருளிச்செய்த நூல்களில் காணும் நயங்கள் பலவாகும். இவர் தமது பாசுரங்களைச் "சங்கத் தமிழ் மாலை முப்பதும்" எனக் குறிப்பர். சிறந்த இயற்கை வருணனைகளை இப்பாடல்களிற் காணலாம். நான்காவது பாசுரத்தில், முகிலை முன்னிலைப்படுத்தி,

"ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோ னின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய்"

என்று கார்மேகத்தைக் கார்மேகவண்ணனுகை உருவகித்துப் பாடுதல் அறிந்து மகிழத் தக்கது. அதிகாலையில் நிகழும் நிகழ்ச்சிகளை அழகுபெறப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் இந்நல்லிசைப் புலமை மெல்லியலார். அவற்றைப் பின் வரும் பகுதிகள் கொண்டு தெரியலாம்.

"கீசுகீ சென்றெங்கு மானைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ"

"வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினுல்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ"

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்"

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே"

"கும்பகருணனும்
தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ"

"உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்

"செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்"

"ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்"

முதலியன காண்க. நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளை அழகுபெறக் கூறுவர் இப்பெண்பாற் புலவர்.

"சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து"

என்ற வரிகளில் மக்கள் அக்காரவடிசில் பருகுங்கால் அப் பாற்சோறு முழங்கையில் வழிவதைக் குறிக்கின்றார். இந் நிகழ்ச்சி இன்றும் காண்பதொன்று. மற்றும் இவரது அருளிச்செயல்களில் உவமை உருவகம் முதலிய அணி களைக் காணலாம்.

"கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்"

"அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழ்
சங்க மிருப்பார் போல்வந்து தலைப்பெய்தோம்"

"கிண்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ"

"திங்களு மாதித்யனு மெழுந்தாற்போல்
அங்கணிரண்டும் கொண்டெங்கள் மேல்நோக்குதியால்"

"மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி

மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளி''

''பாலன்ன வண்ணத்தான் பாஞ்ச சன்னியமே''

இன்னும் இவரது பாசுரங்களில் கண்ணபிரான் வரலாறுகள் ஆங்காங்கே காணலாம். உதாரணமாக,

''யசோதை இளஞ்சிங்கம்''

''பாற்கடலுட் பையத் துயின்ற பரமன்''

''ஓங்கி யுலகளந்த உத்தமன்''

''மாயனை மன்னும் வடமதுரை மைந்தனை''

''தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை''

''வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை''

''மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனை''

''நாற்றத் துழாய்முடி நாரணன்''

''சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற''

''சங்கொடு சக்கர மேந்து தடக்கையின்''

''வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை''

''அன்றிவ்வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி''

''பொன்றச் சகட முதைத்தாய்
கன்று குணிலா வெறிந்தாய்''

''குன்று குடையா வெடுத்தாய்''

''ஒருத்தி மகனாய்ப் பிறந்து''

மற்றும் சூடிக்கொடுத்தாளது திருமொழியில், அவர் கண்ணனைத் தம்முடன் இணைக்குமாறு காமனைத் தொழுததாக அமைந்த பாசுரங்களைக் காணலாம்.

தை மாதத்தில் தரையை விளக்கித் தண் மண்டலமிட்டு மாசி பிறப்பதற்கு முன்னுளிலே நுண் மணற் கொண்டு தெருவிற் பரவி அலங்கரித்து, காமனையும் அவன் தம்பி சாமனையும், தொழுது, தன்னை வேங்கடவற்கு மணம் முடித்துத் தருமாறு வேண்டுகின்றாள். நாட்காலையில் எழுந்து கீழ்வானம் வெள்ளெனுமுன் நீர்த்துறை படிந்து முள்ளில்லாச் சுள்ளி எரி மடுத்து அநங்கன் நோன்பு மேற் கொள்வது வழக்கம் என்று ஷை பாசுரங்கள் கொண்டுணரலாம். மற்றும் சுவரில் மன்மதன் பெயரெழுதி அவனுக்குரிய மீனக் கொடியையும், கிள்ளைப் பரியையும், அவன் படைகளாகிய மகளிரையும், அவனது வில்லாகிய கரும்பையும் எழுதி வணங்கிப் பின் ''அவரைப் பிராயம் தொடங்கி என்று மாதரித்தெழுந்தவென் தடமுலைகள். துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுதுவைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே'' எனப் பாடுவர். மேலும் காயுடை நெல்லொடு, கரும்பும் கட்டியரிசியும் அவலுமமைத்து மறையவர் மந்திரத்தால் மன்மதனை வணங்கித் திருவிக்கிரமனுக்குத் தம்மை விதிக்கும்படிக்கு வேண்டுவர். உடலெல்லாம் மாசடையத் தலை எண்ணெயிட்டுச் சீவாமல் உலரத் தாம்பூலம் தரியாமையால் வாய் வெளுப்ப, ஒரு போதே ஆகாரம் கொண்டு காமநோன்பு நோற்றுக் கேசவ நம்பியைக் கால் பிடிப்பார் என்னும் பேற்றைத் தமக்கருளும்படி மாரனை வேண்டுவர்.

இரண்டாம் திருமொழியில் மாரனை விளித்துத் தாம் இழைக்கும் சிற்றிலைச் சிதையாதிருக்குமாறு வேண்டுவர். பிற்காலத்தெழுந்த பிள்ளைத்தமிழ் நூல்களில் ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பத்துப் பருவத்தில் சிற்றிலிழைத்தல் ஒன்றாயிருப்பது அறிஞர் உணர்வர். மகளிர் வட்டவாய்ச் சிறுதூதையொடு சிறுசுளகும் மணலும் கொண்டு சிற்றிலிழைப்பர்.

3-ம் திருமொழியில் கண்ணன் கன்னியருடன் விளையாடுவதாகக் கூறும் பாசுரங்கள் உள. கோவியர் தமது

துகிலைத் தந்தருளுமாறு கண்ணபிரானை வேண்டுதல் இவற்றிற் காணலாம்.

4-ம் திருமொழியிற் கூடலிழைத்தல், நாயகன் வரவை எதிர்நோக்கி நிற்கும் மகளிர், அவன் வருதல் வாராமையை அறிவதற்காக மணலில் ஒரு வட்டமிட்டு, அதன் இரு முனையும் நேராகச் சேருமானால், அவன் வருவான் என்றும், அங்ஙனம் கூடாவிடின் வாரான் என்றும் அறிதல் கூடலிழைத்தல் எனப்படும். மற்றும், கண்ணை மூடிக்கொண்டு சிறுசிறு சுழிகளாக மணலில் அமைத்து, அவற்றைக் கூட்டி வந்த தொகை இரட்டைப்படையானால் நாயகன் வருவான் என்றும், ஒற்றைப்படையானால் அவன் வாரானென்றும் அறியலுமாம்.

''நாடுவென் சிற்றிலுட் கண்டாங்கே'' (கலித். 142)

5-ம் பத்து குயிலினை நோக்கிப் பாடுவது.

6-ம் பத்தில் வாரணமாயிரம் எனத்தொடங்கும் பதிகம் காணலாம். இஃது இப்பொழுதும் வைணவர் விவாகச் சடங்குகளிற் பாடப்படுவது. பொற்குடம் வைத்துத் தோரணம் நாட்டுதல், பந்தரிடுதல், மந்திரக்கோடி யுடுத்தல், நாற்றிசைத் தீர்த்தமாடுதல், தீபம் கலசமேந்திச் சதிரிளமங்கையர் எதிர்கொள்ளுதல், மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத்தாம—பந்தற்கீழ் மைத்துன நம்பி மதுசூதன் கைத்தலம்பற்றல், நாணல்படுத்துப் பரிதிவைத்துக் கைப்பற்றித் தீவலம் செய்தல், அம்மி மிதித்தல், பொரிமுகம் தட்டுதல், மங்கலவீதி வலஞ்செய்தல், மஞ்சனமாட்டல்முதலிய விவாகச் சடங்குகளை இங்குக் காணலாம். இத்தனை சடங்குகளும் இப்பொழுதும் பிராமணர் விவாகத்திற் காணலாம். இச்சடங்குகளினிடையே மங்கலநாண் கட்டுதல் என்ற செய்தி காணப்படவில்லை.

7-ஆம் பத்தில் திருமால் கையிற்றாங்கிய பாஞ்சசன்னியம் என்ற சங்கைப் பார்த்துப் பாடும் பாசுரங்கள்

மிகவும் இனிமை வாய்ந்தவை. சங்கை நோக்கி, திருமாலினது வாய்ச்சுவையும் நாற்றமும் கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ என்று வினவுவர். மற்றும் "மதுசூதன் வாயமுதம் பன்னாளு முண்கின்றாய்" என்றும், "செங்கண் மால் தன்னுடைய வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்" என்றும், "பதினாறுமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப மதுவாயிற் கொண்டாற்போல், மாதவன்றன் வாயமுதம் பொதுவாக வுண்பதனைப் புக்குநீ யுண்டக்கால், சிதை யாரோவுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே" என்றும் பாடப் பட்ட பகுதிகள் ஆண்டாளது அளவு கடந்த பத்தித் திறத் தையும் காதலையும் விளக்கும்.

## திருப்பாவையும் திருவெம்பாவையும்

சூடிக்கொடுத்தாரும் திருவெம்பாவை பாடியருளிய மாணிக்கவாசகரும் ஏறக்குறைய ஒரு காலத்தவர் எனக் கருத இடமுண்டு. திருப்பாவையிலும் திருவெம்பாவை யிலும் பல ஒற்றுமைப் பகுதிகளைக் காணலாம். கருத் தொற்றுமை மட்டுமன்று பாசுர வரிகளிலும் ஒற்றுமை காணலாம்.

"எல்லாரும் போந்தாரோ
போந்தார்போந் தெண்ணிக்கொள்" (திருப். 15)

"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம்"
(திருவெம். 4)

"எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய்" (திருப். 14)

"மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும்" (திருவெம். 6)

"எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோ
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்"
(திருப். 29)

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம் [வோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
அன்னவரே எங்கணவ ராவார்" (திருவெம். 9)

ஆண்டாள் பாசுரத்தின் நடை மிக இனிமை வாய்ந்தது. கற்பனை நயங்களும் உவமை, உருவகம் முதலிய அணிகளும் நிறைந்து விளங்குவது. திருப்பாவையையும் திருவெம்பாவையையும் ஆராயுங்கால், இவ்விரு நூல்களின் ஆசிரியரும் ஒருவர் நூலை மற்றொருவர் பார்த்திருக்கக் கூடுமோ என்ற ஐயம் எழுதல் இயல்பு. ஆண்டாள் தந்தையான பெரியாழ்வார் பாசுரங்கட்கும் மாணிக்கவாசகர் இயற்றியருளிய திருவாசகப் பகுதிகட்கும் பல ஒற்றுமைகளைக் காணலாம். "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பிய சூத்திரத்தின் படிப் புதிது புதிதாக எழுந்த பிள்ளைத்தமிழ், அந்தாதி முதலியவற்றை ஆண்டாள் நூலிலும் பெரியாழ்வார் நூலிலும் காணலாம். கிரிசைகள், பற்பநாபன், விதிக்கிற்றியே, சங்கற்பித்து, வாழகில்லேன் என்ற சில பதங்கள் ஆண்டாள் பாசுரங்களிற் காணலாம்.

## கல்வெட்டுக் குறிப்புகள்

*354 (1916-17).* திருக்கோயிலூர். குலோத்துங்கனது 29-வது ஆட்சி யாண்டு. திருப்பாவை ஓதும்போது ஏற்படுத்தப்பட்ட சில நிவேதனங்கள்.

*475 (1923).* சூடிக்கொடுத்தாள் கோயில் அமைப்பு. ஐயா நாய்க்கன் செய்தது. பரகேசரிவன்மனது 9-வது ஆண்டு.

*535* of *1925.* ஸ்ரீவில்லிபுத்தூர் சூடிக்கொடுத்தாளுக்காகக் கொநேரின்மை கொண்டான் பெருமாள் குலசேகரன். *20+1* year.

*577* of *1926.* ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில். ஓர் பிரணய பத்திரிகை. ஸ்ரீரங்கநாதர் கோதைக்கனுப்பியருளியது. ஆரிய ராயர் கட்டிலிலமர்ந்து அரங்கப் பெருநகரில், சேனைவென்றான் மண்டபத்து. இதில் திருப்பாவையிலிருந்தும், நாச்சியார் திருமொழியிலிருந்தும்

பல சொற்றொடர்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. 7, 10, 13-ஆம் திருமொழித் தொடர்களைக் காண்க.

**நம்மாழ்வார்**

வைணவர்கள் மிகச் சிறப்பாகப் போற்றிக் கொண்டாடும் இவ்வாழ்வாரைப்பற்றிக் குருபரம்பரை கூறுவது பின்வருமாறு :—

நம்மாழ்வார் குருகைப்பற்றுத் திருநகரியில் காரிக்கும் மலையநாட்டுத் திருவண்பரிசாரத்திலிருந்த திருவாழ் மார்பன் என்ற பெரியாரின் புதல்வியாரான உடைய நங்கைக்கும் மகவாக (கலியுக முதலாண்டு 43-வது நாளில்) கி. மு. 3102 பகுதான்ய வைசாகச் சுத்த பூர்ணிமையில் அவதாரம் செய்தார். பிறக்கும்போது யோகியாகவே பிறந்தார். சிறு வயதில் ஒரு புளியமரத்தடியில் சமாதி நிலையில் 16 ஆண்டுகள் இருந்தனர்.

பிறக்கும்பொழுது குழந்தைகளைக் கவரும் சடம் என்ற வாயுவை அணுகவொட்டாமற் றடுத்ததுபற்றி இவர்க்குச் சடகோபன் என்றும், உலக நடைக்கு முற்றும் மாறாக அழாமலும், பாலுண்ணாமலும் இருந்ததுபற்றி மாறன் என்றும் பெயர்கள் வழங்கின. ஸ்ரீவைகுண்டத்தில் நித்திய சூரிகளின் தலைவராகவுள்ள சேனை முதலியாரே இவ்வாழ்வார்க்கு உண்மைப் பொருள்களை உபதேசித்தனர் என்ப.

ஓரமயம் திருக்கோயிலூர் அந்தணரான மதுரகவிகள் அயோத்தியில் இருக்கும்போது நம்மாழ்வார் தமது கண்ணுக்குப் புலனாக, வியப்புடன் விரைந்து தென்றிசை நோக்கிப் படர்ந்து திருநகரி சேர்ந்து ஆழ்வார்க்குச் சேவை செய்ய நினைந்தார். சுமார் நாலரை ஆண்டுகள் ஆழ்வாரது அருளிச்செயலான திருவாய்மொழியை ஓலையில் எழுதினார். மூன்றாவது பிரமதந்திர சுதந்தரஸ்வாமிகளின் குருபரம்பரைப்படி நம்மாழ்வார் 35 ஆண்டுகள் இந்நிலவுலகில் இருந்ததாகத் தெரிகின்றோம். ஆழ்வார்

அருளிய திருவாய்மொழி, திருவாசிரியம், திருவிருத்தம், திருவந்தாதி என்பன முறையே சாமவேதம், எசுர்வேதம், இருக்குவேதம், அதர்வணவேதங்களின் சாரம் எனக் கூறுப. காரிமாறன், சடகோபன், வகுளாபரணன், பராங்குசன் என்ற பெயர்களும் இவர்க்குண்டு.

நிற்க, மதுரை சில்லாவைச் சேர்ந்த ஆனைமலைக் கல்வெட்டுக்கள் பாண்டியன் சடாவர்மன் காலத்திற் பொறிக்கப்பட்டவை. இவற்றில் ஒன்று வடமொழியிலும் மற்றொன்று தென்மொழியிலும் உள்ளன. முதல் கல்வெட்டில் கலியாண்டு 3871-இல் பாண்டியன், பராந்தகனது ஆட்சியில் மாறன் மகனும், கரவந்தபுர வாசியும், மருத்துவ வழியினனுமான உத்தர மந்திரி திருமால் ஆலயம் கட்டிப் பிரதிட்டித்ததாகவும், அந்த மாறன் மகனுக்கு மதுரகவி என்பது பெயர் என்றும் கண்டிருக்கிறது. இரண்டாவது சாசனத்தில் உத்தர மந்திரி பூர்த்தி செய்யாமல் விடுத்த கோயில் திருப்பணியை எயினன் என்பவன் செய்து முடித்ததாகத் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சாசனப் பதிவுக் காலம் மாறன் சடையன் ஆட்சி.

இக்கல்வெட்டுக்களை ஆராய்ந்து பின்வருமாறு ஒருவர் கூறியுள்ளார் :—

"மேலே கூறிய கலியுக ஆண்டிற்கு நேரான கிறித்துவ ஆண்டு கி. பி. 770 என்றும் அது பராந்தக பாண்டியன் அரசு கட்டிலேறிய காலம் என்றும், கி. பி. 760-இல் சங்கரமங்கையில் பல்லவமல்லனுடன் பொருத இவனது தந்தையான பராங்குச பாண்டியன் கி. பி. 790-க்குச் சற்று முன்பு வாழ்ந்திருத்தல் வேண்டுமென்றும் கூறுவர். மேலும் பராந்தகன் ஆட்சியில் மாறன்காரி உத்தர மந்திரியாகச் சில ஆண்டுகள் இருந்தான். 770-க்கு ஈரைந்தாண்டுகட்கு முன்பு அவன் இறந்திருத்தல் கூடும். குருபரம்பரையில் கூறப்படும் ஆண்டும் இத்துடன் ஒத்துள்ளது. காரிமாறன் என்ற பெயர் காரியின் மகன் மாறன்

எனப் பொருள்படும். நம்மாழ்வாருக்கும் பராங்குசன் என்ற பெயருண்டு. பராந்தகன் தந்தை பெயரும் பராங் குசன். மற்றும் நம்மாழ்வாரின் சீடர் மதுரகவி. உத்தர மந்திரி மாறன் காரியின் புனைபெயரும் மதுரகவி. நம்மாழ் வாரின் தாயின் பிறந்த இடமும் கரவந்தபுரத்தண்மையி லுள்ள திருவண்பரிசாரம். இச்செய்திகளைக்கொண்டு நம்மாழ்வாரை உத்தர மந்திரி மாறன்காரியின் மகன் என்ப. இஃதுண்மையெனில் நம்மாழ்வார் தமது பாட்டன் பெய ரான மாறன் என்ற பெயரை ஏற்றார் எனக் கொள்ளலாம். மற்றும் அரசன் பெயரை அவரிடம் பணியாற்றும் மக்கள் தரிக்கும் வழக்கம் அக்காலத்துண்டு. அவரது தாதை மந்திரிப்பதவி யேற்ற காலத்துத் திருக்குருகூரில் பிறந் திருக்கக்கூடும். மாறன் காரியின் ஊர் களக்காடென்ப. இனி, பராந்தகன் வீர வைணவன் என்று மியூஸியம் பிளேட்டுகளின் மூலம் அறிகின்றோம். அதில்,

'' பராந்தகன் பரமவைணவன் றாகி ''

என்றும்,

'' பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப்
பேரூர்புக்குத் திருமாலுக் கமர்ந்துறையக் குன்ற
மன்னதோர் கோயிலாக்கியும் ''

என்றும் கூறப்பட்டிருக்கிறது. மற்றும் 'வைணவ தருமம்' என்னும் நூலிலிருந்து நான்கு ஸ்லோகங்கள் வேள்விக் குடிச் சாசனத்திறுதியில் காணப்படுகின்றன. இஃது வைணவராற் பெரிதும் போற்றப்படும் ஓர் பழைய நூல். இதே நூலில் 17-வது அதிகாரத்தில், தொண்டரடிப் பொடி ஆழ்வாரது திருமாலையில் குறிக்கப் பெற்றுள்ள க்ஷத்திரபந்துவின் வரலாறுள்ளது. பராந்தகனும் அவனது அமைச்சர் முதலானோரும் காட்டிய வைணவ மதப்பற்றிற் குத் தொண்டைமண்டலத்தில் உதித்த முதலாழ்வார்களும் பாண்டிமண்டலத்துதித்த நம்மாழ்வாருமே மூலகாரண மாவர்.

நிற்க, பிற ஆழ்வார்களாற் பாடப்பெறாதனவும், நம்மாழ் வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றனவுமான பதின்

மூன்று திவ்ய தேசங்கள் மலை நாட்டில் உள்ளன. இந்தத் தலங்கள் மலைச் சரிவுகளில் இருப்பதாலும், அவைகட்குச் செல்லும் வழி காட்டுப்பாதை யானதாலும் பிறர் இவற்றைப் பாடவில்லை எனத் தெரிகின்றது. நம்மாழ்வார் அமைச்சர் மகனுதலின், அதிகாரமுறையில் உரிய வாகனங்கள் கொண்டு அத்தலங்கட்குச் சென்றிருத்தல் கூடும் என்பர் சிலர். மேலும், இறைவன் பத்திமேலீட்டால், அவன் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகட்குச் சென்ற ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாசாரியர்கள், செல்லுதற்கரிய பல இடங்கட்கும் வாகனங்களின்றியே சென்றுள்ளனர் என்பது, அவர்கள் சரிதைகொண்டறியப்படும். ஆழ்வாரும் அங்ஙனம் சென்றிருத்தலியல்பே. குருபரம்பரைப்படி நம்மாழ்வார் காலம் கி.பி. 798. இதுவே பராந்தக பாண்டியன் ஆட்சிக்காலம்.

இனி, நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் "புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கையிலிருந்து" என்பதால் வரகுணன் பெயராலேற்பட்ட திருப்பதியை நம்மாழ்வார் பாடியதாகக் கொள்ளலாம். கி.பி. 770-இல் ஆண்ட மாறன் நெடுஞ்சடையன் காலத்திற்குப் பின்பே பிற்காலத்து முதலாவது வரகுணன் அரசாண்டவன் ஆவன். மற்றும் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் மிகுதியும் பயின்றுள்ள வடசொற்களாலும், சொன்னடையினுலும், அவர் அருளிச் செயல்களை கி.பி. 8-ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்டன வென்று கூறற்கில்லை. மாறன் நெடுஞ்சடையன் காலத்திற்குப் பின் உண்டான சீவர மங்கை என்னும் தலத்தையும் நம்மாழ்வார் பாடியிருத்தலின் அவர் 8-ஆம் நூற்றுண்டினிறுதியிலாதல் 9-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆதல் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பர் சிலர். மேலும் நம்மாழ்வார்,

"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்"

என்று கூறி, இலிங்க புராணத்தைக் குறிப்பர். இப்புராணம் அண்மையில் தோன்றியது. எனவே அவைதிக

மத்தைப்பற்றிய இக்குறிப்பு, ஆழ்வார் சரித்திரகாலத் திருந்தவர் என்பதையே குறிக்கும்.

இனி, திருக்கண்ணபுரம் சவுரிராசப் பெருமாள்கோயிற் சுற்றுச் சுவரில் சடகோபன் என்ற பெயர் காணப்படு கின்றது. நம்மாழ்வாருக்குமுன் இப்பெயர் எவர்க்கும் இடப்படவில்லை. ஷை சாசனம் தோன்றிய கி.பி. 908-இல் நம்மாழ்வாரது பெயரை ஒருவர் பெற்றிருந்தனர் எனின், ஆழ்வார் அவ்வாண்டிற்குப் பல ஆண்டுகள் முன்னரே வாழ்ந்தவராதல் வேண்டும். அவரது பெயரைப் பிறர் மகிழ்ந்து தரிக்குமாறு ஆழ்வாரின் பெயரும் புகழும் பரவு வதற்குச் சுமார் ஓர் அரை நூற்றுண்டாவது வேண்டுவ தவசியம். ஆகவே ஆழ்வார் 9-ஆம் நூற்றுண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம்.

நிற்க, காலஞ் சென்ற எம். சீநிவாசய்யங்கார் தமது "தமிழ்க் கட்டுரைகள்" (Tamil Studies) என்ற நூலில் பின்வருமாறு கூறுவர் :—

"நம்மாழ்வார் திருமாலின் முக்கிய பத்தரான சேனை முதலியாரின் அமிசம். ஆழ்வார் திருநகரி என்று மறு பெய ருள்ள திருக்குருகூரில் காரிக்கும் உடைய நங்கைக்கும் மகவாய்த் தோன்றியவர். திருவாய்மொழி முதலிய பிர பந்தங்களை இயற்றியருளியவர். அவரால் மங்களா சாசனம் பெற்ற 30 திவ்ய தேசங்களில், 24 தலங்கள் பாண்டி நாட்டிலும், பிறதலங்கள் சேரநாட்டிலும் உள்ளன. அவர்க்கு நாதமுனிகள் என்றும் மதுரகவி என்றும் இரண்டு சீடர்களுண்டு. முன்னவர் வைணவ ஆசாரியர் களுள் முதல்வர், பின்னவர் ஆழ்வாருள் ஒருவர்.

இப்பெரியார் 10-ஆவது நூற்றுண்டின் தொடக்கத்து வாழ்ந்தவர் என்பதற்கும், ஆழ்வார்களில் கடைசி என்ப தற்கும் பல காரணங்கள் உள்ளன. அவையாவன :—

(1) சங்ககாலச் செய்யுட்கும், இப்பெரியார் பாசுரங்கட்கும் பெரிதும் வேற்றுமை யுண்டு. கிருமி, வாசகம், கன்மம், உபகாரம், கதி, மூடம் முதலிய பல வடமொழிப் பதங்களை இவர் கையாள்வர். சங்கப் பனுவல்களில் இச்சொற்களைக் காண்டற்கில்லை. "காண்கின்றனகள்" என்ற சொல்லும், கேட்கிறார் என்ற நிகழ்கால இடைநிலைச் சொல்லும் பிற்காலத்தன. ஏழாம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்தன என்றே சொல்லலாம்.

(2) நம்மாழ்வார் காலத்துப் பலவகைப் புராணங்களும் தோன்றிநின்றன. இலிங்கபுராணத்தைப்பற்றி ஆழ்வார் குறிப்பிடுகின்றார். மற்றும்,

"ஞான விதி பிழையாமே
பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழுமடியாரும் பகவரு மிக்க துலகே"

என்று புராணங்களில் கூறியபடி இறைவன் வழிபாடு குறிக்கப்பெறுதல் காணலாம்.

(3) கி.பி. 500-க்குப் பின்பு தென்னாட்டு மக்கள் வெற்றிலையுட்கொள்ளும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. ஆறும் நூற்றாண்டிற்கு முன்னர், அப்பெயர் இலக்கிய வழக்கிலேயேயில்லை. சிலப்பதிகாரத்தில் "அம்மென் றிரையலோ டடைக் காயீந்து" என்று கூறப்பட்டிருப்பினும் வெற்றிலை போடும் வழக்கம் பிற்காலத்துப் போல மிகுதியாக இருந்ததில்லை.

(4) திருமழிசையாழ்வார், திருமங்கை மன்னன், தொண்டரடிப்பொடியார் முதலிய ஆழ்வார்களைப் போன்று பிறமதச்சார்பினரைக் கடுமையாகத் தாக்கவில்லை நம்மாழ்வார் என்பதும் அவர் பிற தெய்வங்களையும் பொது நோக்கால் நோக்கினர் என்பதும் அவரது அருளிச் செயல்களால் உணரலாம்.

(அ) இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும் வலிந்து வாது செய்வீர்களும் மற்றும் தெய்வமுமாகி நின்ருன்.

(ஆ) கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும், நான்முகக்கடவுளே என்னும், வடிவுடைய வானோர் தலைவனே என்னும் வண்திருவரங்கனே என்னும் என்ற வரிகளைக் காண்க.

(5) திருமங்கை யாழ்வாராற் பாடப்பெருத திருக்குருகூர், வரகுணமங்கை, ஸ்ரீவர மங்கலம் என்ற திவ்ய தேசங்கள் நம்மாழ்வாராற் பாடப்பெற்றுள்ளன. திருவரங்கத்துத் திருவாய்மொழி ஓதுவதற்குத் திருமங்கை மன்னன் ஏற்பாடு செய்திருந்தனர் என்ற கன்ன பரம்பரை வரலாறு உண்மையெனின், திருமங்கை ஆழ்வார், ஆழ்வார் திருநகரி சென்று நம்மாழ்வாரைப் புகழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்ததாக வரலாறில்லை. மேலும் வரகுண மங்கை என்ற பெயர் பாண்டியன் வரகுணன் பெயரை ஒட்டி யெழுந்ததாகும். இருவர் வரகுணர் உண்டு. ஒருவர் கி.பி. 820-இல் வாழ்ந்தவராவர். சீவரமங்கலம் அல்லது வானமாமலை என்ற ஊர் கி.பி. 880-இல் அரசுபுரிந்த கோமாறன் சடையன் என்ற பாண்டிய மன்னன் காலத்துத் தோன்றிய தென்பர். இதனை அம்மன்னனுல் அளிக்கப்பட்ட ஓர் செப்புப்பட்டயத்தினின்று அறியலாம். அதில், " திருமால் அடியாராகிய நெடுஞ்செழியன் ஆட்சிக் காலத்து அம்மன்னன் தென்களவழி நாட்டில் உள்ள வேலங்குடி என்ற ஊரின் பெயரைச் சீவரமங்கலம் என மாற்றி அதனை சுஜ்ஜாதபட்டர் என்பவர்க்கு முற்றூட்டாக நீரட்டிக் கொடுத்தான் " என்று கூறப்பட்டுள்ளது. இவ்வூர்க் கோயிலும் மடமும் 9-ஆம் நூற்றூண்டின் இறுதியில் தோன்றியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. மேலும் இவ்வூர் திருமங்கையாழ்வார் தமது இறுதிக் காலத்தைக் கழித்ததாகக் கூறப்படும் திருக்குறுங்குடியின் அண்மையில் உள்ளது. அவ்வாறிருந்தும், சீவரமங்கலத்தைப்

பற்றிய எவ்விதக் குறிப்பும் கவியின் வாக்கிற் காணப்படவில்லை.

(6) சீவில்லிபுத்தூரைத் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்ற இருவரும் பாடவில்லை.

(7) நம்மாழ்வாரின் பாசுரங்கட்கெல்லாம் பண்ணடைவுண்டு. பிற ஆழ்வார்களின் பாசுரங்கட்குப் பண் அடைவில்லை. நம்மாழ்வார் காலத்திற்குப் பின்னர், நம்பி ஆண்டார் நம்பி திருமுறை தொகுத்ததைப் பின்பற்றி, வைணவரும் நாலாயிரப் பிரபந்தத்தைத் தொகுத்திருத்தல் கூடும்.

(8) ஆனைமலைச் சாசனத்திலிருந்து திருமால் ஆலயம் அமைத்தவன் மதுரகவி என்ற காரி என்றும், அவன் மாறன் மகன் என்றும், பாண்டியன் அமைச்சன் என்றும், அறிகிறோம். குருபரம்பரையோ, நம்மாழ்வாருக்கு மாறன் என்பது பெயர் என்றும், பிறவியிலே யிருந்து அவர் யோகி யென்றும், காரி என்ற வேளாளர் மகன் என்றும், மதுரகவி அவரது சீடர் என்றும் கூறும். எனவே, காரி, மாறன், மதுரகவி என்று ஈரிடத்தும் வருவன கொண்டு, காரியும் மதுரகவியும் திருமங்கையாழ்வார் காலத்திருந்தவர் என்று ஒருவர் கூறினர். இவ்வாறு கொண்டால் நம்மாழ்வார் கி.பி. 770-இல் இருந்தவராவர். கோயில் ஒழுகு என்ற ஒரு நூலைக்கொண்டு இவ்வாறு கூறுவர். குருபரம்பரையைவிடக் கோயில் ஒழுகு எவ்வகையில் சிறந்ததோ அன்றி நம்புதற்குரியதோ என்று தெளிவாகப் புலப்படவில்லை. குருபரம்பரையோ மதுரகவி பிராமணன் என்றும், நம்மாழ்வார் பிரமசரியம் பூண்ட துறவி என்றும் தெளிவாகக் கூறும்.

மற்றும் நம்மாழ்வார் திருமோகூர்ப்பிரான்மீது பதிகம் பாடியுள்ளார். ஆனால் ஆனைமலையடிவாரத்தில் இருக்கும் திருமால் கோயிலைப் பாடவில்லை. ஆதலின் அவர் கி.பி.

770-க்குப் பல ஆண்டுகள் முன்போ அல்லது பின்போ வாழ்ந்திருத்தல் வேண்டும். முன்னர் இருந்தவர் என்பது மேலே காட்டப்பட்டது.

(9) தென்னூர்க்காடு சில்லா வீரநாராயணபுரத்தில் ஸ்ரீ நாத முனிகள் பிறந்தார். கங்கைகொண்ட சோழ புரத்தில் இறைவன் திருவடி சேர்ந்தார். ஸ்ரீ இராமாநுசர் 25 அல்லது 30 ஆண்டினராக இருந்தபோது இறைவன் திருவடி சேர்ந்த ஆளவந்தாரின் பாட்டனூர் நாதமுனிகள் என்ப.

வீரநாராயணபுரம், பராந்தகன் (1) (906-946)என்ற வீரநாராயணனூல் உண்டாக்கப்பட்டது. அவன் திருமா லிடம் திடபத்தி பூண்டவன். (2) ஸ்ரீ நாதமுனிகள் கங்கை கொண்ட சோழபுரத்தில் இறைவன் திருவடி நீழலை எய்தி யவர். இந்நகர் இராசேந்திரசோழன் தலைநகராக இருந்தது. நாதமுனிகள் 1025-இல் திருமால் திருவடியை அடைந் திருப்பின், சுமார் 915-இல் பிறந்திருக்கக் கூடும். (3) மைசூரில் உள்ள பிட்டிதேவன் அல்லது விஷ்ணுவர்த் தனனுடைய சாசனத்தின்படி ஸ்ரீ இராமாநுசர் 1134-இல் உயிர் வாழ்ந்திருந்தார். ஆழ்வார் திருநாட்டை அலங்க ரித்த காலம் 1049-எனக் கொண்டால் ஸ்ரீ இராமாநுசர் அக்காலத்து 30 ஆண்டினர் ஆவர். ஆகவே நாதமுனிகள் நம்மாழ்வாரின் நேர் சீடராவதோடு, அவரிடம் திருவாய் மொழியையும் யோக முறையையும் கற்றவராகக்கூடும். எனவே நம்மாழ்வார் 935-இல் வதிந்தவராவர்.

(10) கி.பி. 1004-இல் எழுந்த ராசராசசோழன் சாசனம் ஒன்றில் ஓர் தேவரடியாரின் பெயர் குருகூர் எனக் கூறப்பட்டுள்ளது. நம்மாழ்வார் பிறந்த நகரைத் தனது பெயராகக்கொள்ளவேண்டும் என்று ஒருவர் கருது வராயின், அவரது பெயரும் பிறந்த ஊரும் அதற்குச் சில ஆண்டுகட்கு முன்பே பெரும் புகழெய்தி யிருத்தல் வேண்டும். மற்றொரு ராசராசசோழன் சாசனத்தில்

உக்கல் பெருமான் பெயர் திருவாய்மொழித் தேவர் எனக் கண்டிருக்கிறது.

இனி, நம்மாழ்வாரைப் பற்றி டாக்டர் எஸ். கிருட்டின சாமி ஐயங்கார் கருத்து :—

"ஸ்ரீ நிகமாந்த தேசிகரின் பிரபந்த சாரத்தில் முதலாழ் வார்கள் திருமழிசையாரை யடுத்து நம்மாழ்வாரது பெயர் காணப்படுகிறது. குருபரம்பரை இவ்வாழ்வாரைப்பற்றிக் கூறுவது பின்வருமாறு:—

காரிக்கும் உடைய நங்கைக்கும் மகவாயுதித்த இவ் வாழ்வார் பிறந்தநாள்தொட்டு உணவு கொள்ளாமலும், குழந்தைச் சேட்டைகள் ஒருசிறிதும் இல்லாமலும் இருந் தனர். உலகியற்கு மாருக இருந்ததுபற்றி இவர்க்கு மாறன் எனப் பெயர்தந்து மிக்க கவலையுடன் திருமால் ஆலயத்தில் விடுத்தனர். சிறு குழந்தை அங்கே ஓர் புளிய மரத்தின் முன்பு இருந்த ஓர் கோயிலுக்குட் சென்று யோக முத்திரை பூண்டிருந்தது. 16-ஆண்டுகள் இவ்வாறிருந்து பின் இறைவன் அருளால் பாசுரம் இயற்றும் ஆற்றல் எய்தினர். தமது சிறந்த கருத்துக்களை உலகிடைப் பரப்ப மதுரகவியைச் சீடராகக் கொண்டார். நான்கு மறைகளின் உட்கருத்தமைந்த பாசுரங்களையும் அவற்றின் உட் பொருளையும் அவர்க்குபதேசம் செய்தார். நம்மாழ்வார் திருநாட்டை அலங்கரித்த பின்னர், 50 ஆண்டுகள் இந் நிலவுலகில் வதிந்து வைணவக் கொள்கைகளைப் பரப்பினர் மதுரகவி என்ப."

இவ்வாறு கூறி, மேலே விரிவாகச் சீநிவாசய்யங்கார் கூறுவனவற்றை முறையே மறுத்து டாக்டர் பின்வருமாறு எழுதுவர் :—

"முதற்கண் நாதமுனிகளை நம்மாழ்வாரின் நேர் சீடர் என்ருர். நம்மாழ்வார் ஆழ்வார் வரிசையிற் சேர்ந்தவர்.

நாதமுனிகள் ஆசாரியரின் முதல்வர். இருதிறத்தார்க்கும் இடையே ஒரு நூற்றாண்டேனும் இருந்திருத்தல் வேண்டும். புராணங்கள் தோன்றிய காலம் இதுதான் என்று நிச்சயமாகக் கூறுதற்கில்லை. நீர், மலர், தீபம் முதலியன கொண்டு திருமாலை வழிபடுதல் புராணத்தில் மட்டுமல்ல, பாஞ்சராத்திர ஆகமத்திலேயே காணலாம். வெற்றிலையைப்பற்றி அவர் கூறிய கூற்றில் அவரே அதைப்பற்றிய குறிப்புச் சிலப்பதிகாரத்திலேயே உண்டென்று கூறுகின்றனர். மற்றும் அவர் கூறுவதற்கு மாறாக, பௌத்த சமயம், சமண சமயம் என்ற இவற்றொடு நேராகப் போர் புரிய வேண்டியிருந்த காலமே நம்மாழ்வார் வதிந்தகாலம். திருமங்கையாழ்வார் திருவாய்மொழி ஓதுதற்குத் திருவரங்கத்தில் ஏற்பாடு செய்தார் என்ப. இவ்வாறு அவர் செய்தற்கு நம்மாழ்வார் திருவரங்கம் சென்றிருக்க வேண்டும் என்ற நியதியில்லை. அடுத்து வரகுணமங்கை என்ற பெயர் வரகுணபாண்டியனைப்பற்றித்தான் எழுந்தது என்பதற்கு ஆதாரம் யாது? பதிகப்பண்ணடைவு கொண்டு நாம் ஒன்றும் ஒருதலையாக முடிவு செய்தல் ஆகாது. தேவாரப் பாசுரங்கட்கே பண் அடைவு, பாடியவர் செய்ததன்று; பிற்காலத்துத் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வழிவந்த ஓர் மாது வகுத்ததென்ப. மற்றும் நாதமுனிகள் பிறந்த இடம் வீரநாராயணபுரம் அன்று, குருகை காவலப்பர் கோயில். ஆகவே பராந்தகன் பெயர் கொண்ட வீரநாராயணபுரத்தில் பிறந்தவர் அல்லர்.'' ஆகவே டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரின் கருத்துப்படி நம்மாழ்வார் கி.பி. ஆறும் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தவர் ஆவர்.

எனினும், காரிமாறன் என்ற பெயரொற்றுமையும், மாறன்காரி, மாறன் எயினன் என்ற இவர்களின் வைணவச் சார்பும், பராந்தகனது வைணவப் பற்றும், பிற ஆழ்வார்களாற் பாடப்பெறாத பல திவ்ய தேசங்கள் நம்மாழ்வாராற் பாடப்பெற்றிருப்பதும், நம்மாழ்வாரது திருவாய்மொழியில் மிகுதியும் பயின்றுள்ள வடமொழிப்

பகுதிகளும், சொன்னடைகளும், இவரது பாடலிற் காணப் படும் இலிங்கபுராணக் குறிப்பும், இப்பெரியார் 8-ஆம் நூற்றுண்டின் இறுதியிலோ அல்லது 9-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலோ இருந்தார் என்பதைக் காட்டும். மற்றும் திருமங்கை மன்னன் திருவாய்மொழி ஓதுதற்கு ஏற்பாடு செய்தனர் என்பது கொண்டு, இப்பெரியார்கள் இரு வருமே ஏறக்குறைய சமகாலத்தவரோ எனக் கருதவும் இடனுண்டு. தேவாரச் சொற்றொடர்களும் கருத்தும், திருவாசகப் பிரபந்த முறைமையும் நம்மாழ்வாரது பிரபந் தங்களிற் காணலாம். எனவே ஆழ்வார்களை வரிசைப் படுத்துமிடத்து முதலாழ்வார்கள், திருமழிசையார், குல சேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணழ்வார், திருமங்கை மன்னன், நம் மாழ்வார், மதுரகவி என்பதே காலவரையறைபற்றிய முறை எனக் கொள்ளலாம்.

**கல்வெட்டுக்கள்**

உக்கல் என்ற புவன மாணிக்க விஷ்ணுக் கிருகத்தில் இராசராசசோழன் காலத்துச் சாசனம் ஒன்றில், அவ் வூர்ப் பெருமானின் பெயர் திருவாய்மொழித்தேவர் என்று காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் இவ்வூர் உட்கல் என வழங்கிய தென்பர். இஃது தொண்டைமண் டலம் காளியூர்க்கோட்டத்தில் பாகூர் நாட்டில் உள்ளது. இராசராசன் ஆட்சிக்காலம் கி.பி. 985-1016. இவனே முதல்முதலாகத் தன் ஆட்சியில் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சி களைக் கல்லிற் பொறித்தவன் என்பர். இவன் காலத்தி லேயே நம்மாழ்வாரது திருவாய்மொழி சிறப்புற்றிருந்த தற்கு இக்கல்வெட்டே சிறந்த சான்றாகும்.

உத்தரமேரூரில் கிடைத்த முதல் ராசேந்திரன் காலத் துச் சாசனத்தில் கோயிலில் திருவாய்மொழி ஓதும் மூவர்க்கு வேண்டிய உணவு வசதிகட்காக நிபந்தம் ஏற் படுத்தப்பட்டது. கி.பி. 1085-இல், திருப்பள்ளி யெழுச்சி யமயத்துத் திருவரங்கம் கோயிலில் திருவாய்மொழி ஓது

தற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. ஐப்பசி, வைகாசி மாதங்களில் திருக்கோயிலூரில், திருவாய்மொழி ஓதுதற்காக 1171-இல் இரண்டாவது இராசராசன் காலத்துத் திருவாய்மொழி ஏற்பாடு என்றது காண்க.

## நம்மாழ்வாரின் அருளிச் செயல்கள்

பெரிய திருவந்தாதி: இதனை அதர்வண வேதசாரம் என்பர். சிறந்த கருத்துக்கள் அமைந்த இனிய வெண்பாக்களாலாயது. இறைவனது அருவுருவங்களும், அவனை வாழ்த்தி வழிபடும் முறைகளும், வினைகள் நீங்கப்பெற்றுப் பிறவியொழிய வேண்டுமெனில், அவனது திருவடித் தாமரைகளை வணங்க வேண்டிய அவசியமும், வீடு பேற்றை அளித்துதவுபவன் திருமாலே யென்பதும், அவனை வாழ்த்தி வழிபடும் முறைகளும் பிறவும் இந்நூலில் விளங்கக்காணலாம். ஒரு வெண்பாவில், "பாருநீ வானுநீ காலுநீ தீயுநீ" என்று கூறி "உன் தொல்லுருவை யாரறிவார் சொல்லு" என்று கேட்கின்றார். இறைவனை ஏசியே யாயினும் வாழ்த்துமாறு நெஞ்சைப் பணிக்கின்றார். "இறைவன் புகழை வைகும் சிந்தையிலும் மற்றினிதோ அவன் அவர்க்கு வைகுந்தமென் றருளும் வான்" என்பர். பத்திப்பிரபத்தி வழிகள் ஆங்காங்கே உரைக்கப் பெற்றிருப்பதை இந்நூலிற் காணலாம்.

"இப்போது மின்னு மினிச்சிறிது நின்றாலும்
எப்போது மீதே சொல் என்னெஞ்சே—எப்போதும்
கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்
மொய்கழலே யேத்த முயல்"

என்றது காண்க.

## திருவிருத்தம்

இதனை இருக்கு வேதத்தின் சாரம் என்ப. நூறு பாசுரங்களாலாயது. மணிவாசகர் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக்கோவைபோன்று, அகப்பொருள் இலக்கணம் அமையப்பெற்றது. வெளிப்படைப் பொருள், உள்ளுறை

பொருள் (அந்நியாபதேசம், ஸ்வாபதேசம்) என்ற இரு வகைப் பொருளும் அமையப் பாடப்பெற்றது. வெளிப் படையாய்ச் சிற்றின்பக் கருத்துக்கள் தோன்றச் செய்யப் பட்டுக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தலைவன் தலைவியர், களவு முறையிற் கலந்து துய்க்கும் இன்பக் கருத்துக்களைக் கொண்ட செய்யுட்களில், பேரின்பக் கருத்துக்களையும் தந்து, உயிர் என்ற சீவான்மா, இறைவனுகிய பரமான்மாவுடன் ஒன்றும் நிலையை விளக்குவது. கடுத்தின்னுதானைக் கட்டி பூசிக் கடுவுண் பிப்பதுபோன்று, சிற்றின்பக் கருத்துக்களைக் காட்டி, அறிஞர் கருத்தைப் பேரின்ப வழியில் ஈடுபடுமாறு செய்யும் உயரிய நூல். உயிர்க்குச் சுதந்தரமில்லை. இறைவனை நோக்க, சீவான்மா அனைத்தும் பெண்பாலர் என்றே கருதலாம். தண்டகாரணியவாசிகளான இருடிகள் இராமபிரானிடம்மோகங்கொண்டதும், கோபிகள் கண்ணனைக் காதலித்ததும் இம்முறைபற்றியே யென்பர். "இராம பிரானைப் பும்ஸாம் மோகன ரூபன்" என்றும், "ஆடவர் பெண்மையை யவாவும் தோளினுய்" என்றும் பெரியார் புகழ்ந்துள்ளது காண்க. "திருக்கோவைபாடிச் சிரிப்பிப் பரே" என்ற பிற்காலத்தாசிரியர் வாக்கு அகப்பொருட் டுறைகள் யாவும் ஒருசேர அமையப்பெற்றுச் செம்பாக மாக மணிவாசகப் பெருமானுல் இயற்றப்பெற்ற திருச் சிற்றம்பலக் கோவையாரைப்பின்பற்றி எழுதப்பட்டது இந்நூல் என்பதைக் குறிக்கும். அகப்பொருள் துறைகள் சிலவற்றையே இந்நூலிற் காணலாம். ஒரு துறைக்கே இரண்டு மூன்று செய்யுட்களும் இதில் காணப்படும்.

இந்நூற்கு நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வாதி கேசரி அழகியமணவாள ஜீயர், அப்பிள்ளை, பெரிய பரகால ஸ்வாமிகள் என்ற இவர்கள் பேருரை வகுத்துள் ளனர். கோளப்பையங்காருடைய அரும்பதவுரையும் உண்டு.

வடமொழியில் ஜயதேவர் இயற்றிய கீதகோவிந்தம் தீர்த்தநாராயணஸ்வாமி பாடிய கிருஷ்ணலீலே தரங்கிணி, தெலுங்கின் இயன்ற க்ஷேத்திரஞ்ஞபதம், கிறித்துவ சமயத்தில் உள்ள சாலமன் கீதம் என்ற நூல்கள், இத் திருவிருத்தம் போன்றே இறைவனிடம் காமத்தைச் செலுத்தி, அதன் மூலமாகக் கைவல்யம் கிடைக்கும் வகையைப் போதிப்பனவாகும். நூற்கண் பெரும்பாலும் ஆழ்வார் தம்மைப் பிராட்டியாகக் கருதி இறைவனைப் பல வகையிற் புகழ்ந்து கூறுவதைக் காணலாம்.

## திருவாய்மொழி

இதனைச் சாமவேதத்தின் சாரமென்பர். இறைவன் தன்மையையும், இறைவன்பாற் சென்றெடுங்கும் உயிர்களின் தன்மையையும், பத்திப் பிரபத்திகளின் பெருமைகளையும் இந்நூலிற் பரக்கக் காணலாம்.

முதற்பத்தில் இறைவன் கருணைக்கடல் என்றும், அவன் திருவடிகளிலே சேவையாற்றிக் கடைத்தேறுவது ஆன்மாக்களின் கடன் என்றும், அவனை அறிந்து ஆராதிப்பது மிகவும் எளிதென்றும், அவன் அடியவர்க்கு எளியன் என்றும், அவன் தானே வந்தாட்கொள்ளும் தன்மையன் என்றும், ஒன்றுக்கும் பற்றாததன்னை அருளான் ஆண்டு கொண்டது அவனது பெருந்தன்மையைக் காட்டும் என்றும் கூறுவர் ஆழ்வார்.

> "ஆரா வியற்கை யவா நீப்பின் அந்நிலையே
> பேரா வியற்கை தரும்" (திருக்குறள் 370)

> "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு" (ஷை. 350)

என்ற திருக்குறட் கருத்துக்களை,

> "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்
> செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே" (1, 2, 5)

என்ற வரிகளிற் காணலாம். மன மொழி மெய்களாகிய முக்கரணங்களையும் அடக்கி அவற்றைத் திருமாலின்

திருவடிக்கே யாக்குதல் வேண்டும் என்பதை,

> '' உள்ள முரை செயல் உள்ள விம் மூன்றையும்
> உள்ளின் கெடுத்திறை யுள்ளி யொடுங்கே '' (1, 2, 8)

என்ற அடிகளிற் காணலாம். இறைவன் அடியார்க் கெளியன் என்ற கருத்தைப்,

> '' பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
> வித்தகன் ''

> '' மண் கொள் ஞாலத் துயிர்க் கெல்லாம் அருள் செய்யும்
> வானவன் '' (3, 6, 11)

> '' பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமை
> [கொண்டாய்
> அருள்செய் தங்கிருந்தாய் அறியேனோர் கைம்மாறே''

என்ற பாசுர வரிகளிற் புகல்வர். திருமாலின் பல்வேறு பெருமைகளைப் பலவடிகளிற் பலபடப் புகழ்வர்.

> '' யாருமோர் நிலைமைய னெனவறிவரிய வெம்பெருமான்
> யாருமோர் நிலைமைய னெனவறிவெளியவெம்பெருமான்
> பேருமோ ராயிரம் பிறபலவுடைய வெம்பெருமான் ''

> '' ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
> நன்றெழில் நாரணன் '' (1, 1, 7)

> '' யாவையும் அவரும்தானு யவரவர் சமயந்தோறும்
> தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படா னுணர்வின்
> மூர்த்தி '' (3, 4, 10)

> '' கண்கள் காண்டற் கரியனுய்க் கருத்துக்கு நன்று
> மெளியனுய் '' (3, 6)

என்ற வரிகள் கண்டு தெளிக. பெருமானது அர்ச்சாவ தாரங்களையும், அவற்றில் அவன் நிகழ்த்திய அரிய செயல்களையும் பல பாசுரங்களில் அழகுறக் கூறுவர்.

> '' உண்டும் உமிழ்ந்தும் கடந்து மிடந்தும் கிடந்தும் நின்றும்
> கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும் மணங் கூடியும்
> கண்ட வாற்ருல் தனதே யுலகென நின்ருன் றன்னை ''
> (4, 5, 10)

"மாயக் கூத்தா வாமனா வினையென் கண்ணா கண்கைகால்
தூய செய்ய மலர்களா சோதிச் செவ்வாய் முகிழதா
சாயல் சாமத் திருமேனி தண்பாசடையாத் தாமரைநீள்
வாசத் தடம்போல் வருவானே யொருநாள் காண
வாராயோ" (8, 5, 1)

என்ற வரிகளை காண்க. பூமகளை ஊழிக்காலத்தில் தன் வயிற்றின் அடக்கியும், ஆமையுருக்கொண்டனன்று பாதலத்தினின்று ஏற்றுமிழ்ந்தும், திருவிக்கிரமனாய் மூன்றடியாற் கடந்தும், பூமிமேற் பள்ளிகொண்டும், நின்ற திருக்கோலத்துடன் திருமலை முதலிய திருப்பதிகளில் விளங்கியும், பூமகளை மணந்தும், திருமால் திருவிளையாடல் புரிந்தமை முதற் பாசுரத்திற் குறித்தது காண்க. அடுத்த பாசுரத்தில், திருமாலின் திருமேனி யுறுப்புக்கள் யாவும் தாமரைபோன்றும், அவனது நீலத்திருமேனி பாசடைபோன்றுமிருப்பதால், அவனைப் பொற்றாமரைப் பொய்கையெனப் புகழ்ந்தார். இக்கருத்தையே பிற்காலத்துக் கம்பநாட்டாழ்வார் இராமனைப்பற்றிக் கூறும்போது,

"கார்க்கடல் கமலம்பூத்ததெனப் பொலிவானைக்
கண்டான்" (கம்பரா. வீடணன். 132)

என்ற வரியில் அமைத்தனர். ஆழ்வார் பல இடங்களில் திருமாலுக்கே பரத்துவம் கூறிச் சிவபிரான், பிரமன் முதலியோர் நிலையைத் தாழ்த்துக் கூறுவர். பிரமன் திருமாலினது உந்தியில் தோன்றியவன் என்பதைப் பல இடங்களிலும் குறிப்பதுடன், சிவபிரானது சாபத்தைத் திருமால் போக்கியதாகவும், சிவபிரான் திருமாலின் இடத்தமர்ந்துள்ளதாகவும் மொழிவர்.

"வலத்தனன் திரிபுரமெரித்தவ னிடம்பெற வுந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்த நல்லுலகம்" (1, 1, 9)

"நீயோனிகளைப் படையென்று நின்றநான்முகனைப்
படைத்தவன்" (1, 5, 1)

"மூவராகிய மூர்த்தியை முதல்மூவர்க்கு முதல்வன்
றன்னை" (3, 6, 2)

"நான்முகனும் சடைமுடி யண்ணலும் ஏத்தித் திரிவரே"
(3, 6, 4)

" என்றுமொன்ருகி யொத்தார்களு மிக்கார்களும் தன் றனக்
கின்றிநின்ருனை யெல்லாவுலகு முடையான்றன்னை"
(4, 5, 7)

" ஆயே யிவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும்
நீயே மற்றெரு பொருளுமின்றிநீ நின்றமையால்"
(4, 9, 7)

" பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே கபாலநன் மோக்கத்துக் கண்டுகொள்
மின்" (4, 9, 4)

என்றவரிகளைக் காண்க. மற்றும் சிவபிரானும், பிரமனும், திருமாலும் ஒன்றே என்றும் கூறுவர்,

" முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா"

" வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடைவே றகலாமை
விளங்க நின்றதும்"

என்ற தொடர்கள் இதனை வலியுறுத்தும், ஆழ்வார், பெருமானது உருவத் திருமேனியின் பொலிவில் ஈடுபட்டுப் புகழ்ந்துள்ள பாசுரங்கள் எண்ணிறந்தன. அவை இவரது தியானப் பெருமையையும் அன்புப் பெருக்கையும் காட்டும்.

" கோலமே தாமரைக் கண்ணதோ ரஞ்சன
நீலமே நின்றெனை தாவியை ............
சீலமே" (3, 8, 8)

" கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங் கண்ணன்" (4, 5, 5)

" ஆணிச் செம்பொன் மேனியெந்தாய்" (4, 7, 4)

" நீலவரை யிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்பக்
கோலவராக மொன்ருய் நிலங்கோட்டிடைக் கொண்ட
வெந்தாய்" (10, 10, 7)

என்றது காண்க. இனி, அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவித் தலைவனைப்பிரிந்து தலைவி வருந்தும் முறையிலும், பறவைகளைத் தூதாக விடுக்கும் முறையிலும் பல இனிய

பாசுரங்கள் இவரது அருளிச் செயல்களிற் காணக்கூடும். முதற் பத்து, நான்காம் பதிகத்தில், நாரை, குயில், அன்னம், அன்றில், குருகு, வண்டு, கிளி, பூவை முதலிய புட்களைத் தூதாக விடுத்துப் பெருமானிடம் தன்மாமை யழிவையும், மனக்குறைவையும் தெரிவித்துப் பெருமாள் அருளை வேண்டுதல் காணலாம். இவ்வாறு பறவைகளைத் தூதாக அனுப்புதல், தமிழ்நாட்டுப் பழைமையான வழக்கு. பிசிராந்தையார், அன்னச்சேவலைத் தன் ஆருயிர் நண்பனை கோப்பெருஞ்சோழனிடம் தூதாக விடுத்த தைப் புறநானூற்றுச் செய்யுள் கொண்டுணரலாம்.

'' நீயலையே சிறுபூவாய் நெடுமாலார்க் கென்றூதாய்
நோயெனது நுவலென்ன நுவலாதே யிருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேனு னினியுனது
வாயலகி லின்னடிசில் வைப்பாரை நாடாயே''

என்றது போன்ற செய்யுட்களைக் காண்க. இரண்டாம் பத்தில் நாரை, அன்றில் முதலிய புள்ளினங்களை முன்னிலைப்படுத்தித் தன் துயரைக் கூறுவதுடன், அவை களும் தன்னைப்போன்று துயருறுவதாகக் கூறப்படும் பகுதிகள் அவலச்சுவை மிகுந்து தோன்றுவன. ''கேட்குந போலவும், கிளக்குந போலவும், இயங்குந போலவும், இயற்றுந போலவும், அஃறிணை மருங்கினு மறையப் படுமே'' என்ற இலக்கணத்தைப் பின்பற்றி, அஃறிணைப் பொருள்கள் இவ்வாறு முன்னிலைப்படுத்திப் பேசப்பட்டன. எட்டுத் தொகையில் கற்றறிந்தோ ரேத்தும் கலியில் நெய்தற் பகுதியில், இவ்வாறு அவலச்சுவை நிறைந்த செய்யுட்களைத் தலைவி கூற்றாகக் காணலாம்.

'' வாவும் திரையுகளும் கானல் மடநாராய்
ஆயும் அமருலகம் துஞ்சிலுநீ துஞ்சாயால்
நோயும் பயலைமையு மீதூர வெம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம்நோ் பட்டாயோ''

என்ற பாசுரத்தைக் காண்க. துன்பமுழப்பவர்கள் தம் மைப்போலத் துயருழப்பாரைக் காணின், சிறிது தேறு தலுண்டு. மற்றும்,

"அன்றிலே
ஆட்பட்ட வெம்மேபோல் நீயும் அரவணையான்
தாட்பட்ட தண்டுழாய்த் தாமம்கா முற்றாயே"

"காமுற்ற கையறவோ டெல்லே இராப்பகல்
நீமுற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி யேங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் தான்நயந்த
யாமுற்ற துற்றாயோ வாழி கனைகடலே"

"நாண்மதியே
மைவா னிருளகற்றாய் மாழாந்து தேம்புதியால்
ஐவா யரவணை மேலாழிப் பெருமானார்
மெய் வாசகங் கேட்டுன் மெய்நீர்மை தோற்றாயே"

என்றும் அருளிச் செய்துள்ள பாசுரங்கள் அவலச்சுவை ததும்பி நிற்கும் அரிய செய்யுட்களாம். ஆழ்வார் செந்தமிழ்ப் பற்றுமிக்கவர் என்பதும், சங்கச் சான்றோர்களின் பாக்களில் மிகவும் தேர்ந்தவர் என்பதும் அவரது பாசுரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்:—

"பாலேய் தமிழ ரிசைகாரர் பத்தர்" (1, 5, 11)

"நின்றான் றன்னை
வண்டமிழ் நூற்க நோற்றேன்" (4, 5, 10)

"என்றைக்கு மென்னை யுய்யக் கொண்டு போகிய
அன்றைக் கன்றென்னைத் தன்னாக்கி யென்னால் தன்னை
இன்றமிழ் பாடிய வீசனை" (7, 9, 1)

"என்சொல்லால் யான்சொன்ன வின்கவி யென்பத்துத்
தன்சொல்லால் தான்தன்னைச் சீர்த்தித்த மாமாயன்"

"ஏர்விலா வென்னைத் தன்னாக்கி யென்னால் தன்னைச்
சீர்பெற வின்கவி சொன்ன திறத்துக்கே"

"என்னெஞ்சத் துள்ளிருந்து இருந்தமிழ்நூ லவை
மொழிந்து"

"பண்ணார்படையின் கவிகள் யானாய்த்தன்னைத் தான்பாடித்
தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலை
மலையானே" (10, 7, 5)

என்ற பாசுரங்களால், அவர் பாடியருளிய இன்றமிழ்ப் பாசுரங்களும், பெருமாள் அருளால் பாடப்பெற்றன

வென்று அவர் அடக்கமுடன் கூறுதலைக் காணலாம். இப் பெரியார் பாசுரங்கள் யாவும், அந்தாதித் தொடையி லமைந்தன என்பது, "சடகோபன் சொன்ன அவாவிலந் தாதிகளிவை ஆயிரமும் முடிந்தன" என்பது கொண் டுணரலாம்.

தமது பத்தி நின்ற உள்ளத்தில் இறைவனது சகல கலியாண குணங்களையும், அவன் அடியார்க்கெளியனும் தன்மையையும், நினைந்து, அவனது பேரருளைத் துய்ப்ப தாகக் கூறும் பாசுரங்கள் படிப்போர் உளத்தை யுருக்கும் தன்மையனவாம்.

"மிக்கார் வேதவிமலர் விழுங்குமென் அக்காரக் கனியே"
(2, 9, 8)

"நாற்றத் தோற்றச் சுவையொலி யுறவாகி நின்ற
வெம்மான்" (3, 6, 6)

"கண்ணபிரானை விண்ணோர் கருமாணிக்கத்தை யமுதை"

"கறந்தபால் நெய்யே நெய்யின் சுவையே
கடலினு மமுதமே அமுதில்
பிறந்தவின் சுவையே சுவையது பயனே
பின்னைதோண் மணந்தபேராயா" (8, 1, 7)

"தேனும் பாலும் கன்னலு மமுதுமாகி தித்தித்தென்
ஊனிலுயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை" (8, 8, 4)

என்ற பாசுரங்கள் இக்கருத்தை வலியுறுத்தும். ஒருவனும் இறைவன் உயிர்களின் பொருட்டுப் பலவகையாகத் திகழ் கின்ற தன்மையை நன்கு எடுத்துரைப்பார் இப்பெரியார்,

"ஆணல்லன் பெண்ணல்ல னல்லா அலியு மல்லன்
காணலுமாகா னுளனல்லன் இல்லையல்லன்
பேணுங்காற் பேணுமுருவொடு மல்லனுமாம்
கோணை பெரிதுடைத்தெம் பெருமானைக் கூறுதலே"
(4, 1, 1)

"பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" (2, 9, 5)

இத்தொடரைப் பரிபாடலிலும் காணலாம்.

"ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத் தெவ்வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லாற் பிறிதில்லை"
(3, 1, 6)

"என்று மொன்ருகி யொத்தாரு மிக்கார்களும் தன்றனக்
கின்றி நின்ருனை யெல்லா வுலகு முடையான் றன்னை"
(4, 5, 7)

"விளம்புமாறு சமயமுமாகி யவையாகியு மற்றும்"
(4, 9, 9)

"உறங்குவான்போல் யோகுசெய்த பெருமான்" (5, 4, 8)

"இறந்ததும் நீயே யெதிர்ந்ததும் நீயே
நிகழ்வது நீயேயாறல்
சிறந்த நின்றன்மை யிதுவுது வென்றறி வென்றும்
சங்கிப்பேன் வினையேன்" (8, 1, 7)

"வணங்குமாறறியேன் மனமும் வாசகமும் செய்கையும்
யானும் நீதானே" (8, 1, 1)

"மெய்யனுகும் விரும்பித் தொழுவார்க் கெல்லாம்
பொய்யனுகும் புறமே தொழுவார்க் கெல்லாம்"
(9, 10, 7)

என்ற வரிகளைக் காண்க. தலைவி வருந்துவதைக் கண்ட தாய் கூற்ருகச் சில செய்யுட்கள் அமைந்துள்ளன. இரண்டாம் பத்து நான்காம் திருமொழியின் 10 பாசுரங்களும் இவ்வாறியன்றன.

"ஆடியாடி யகங் கரைந்திசை
பாடிப்பாடிக் கண்ணீர் மல்கியிங்கும்
நாடிநாடி நரசிங்கா வென்று
வாடிவாடு மிவ்வாணுதலே"

"ஏழைபேதை யிராப்பகல்தன
கேழிலான் கண்ணநீர் கொண்டான் கிளர்
வாழ்வைவேவ விலங்கை செற்றீர் இவன்
மாழைநோக் கென்றும் வாட்டேன்மினே"

என்ற பாசுரங்களைக் காண்க. மற்றும் நாலாம் பத்தில்,

"கூத்தர் குடமெடுத்தாடில்
கோவிந்தனுமெனு வோடும்
வாய்த்த குழலோசை கேட்கில்
மாயவனென்றுமை யாக்கும்
ஆய்ச்சியார் வெண்ணெய்கள்காணி
லவனுண்ட வெண்ணெயீதென்னும்
பேய்ச்சிமுலை சுவைத்தார்க்கென்
பெண்கொடிய பித்தே"

"ஏறியபித்தினே டெல்லாவுலகும்
கண்ணன் படைப்பென்னும்
நீறுசெவ்வே யிடக்காணில்
நெடுமாலடியா ரென்றோடும்
நாறுதுழாய் மலர்க்காணில்
நாரணன் கண்ணி யீதென்னும்
தேறியும் தேறுது மாயோன்
றிறத்தனளே யித்திருவே"

என்ற பாசுரங்கள் கொண்டு தலைவி திருமாலிடம் ஈடுபட்ட வகையைக் காணலாம். மாயோனையே எஞ்ஞான்றும் பாவித்து நின்ற நிலையில் எவரும் எப்பொருளும் மாயோனும் அவன் கையாளும் பொருளுமாகவே தோன்று முறையை யிங்கே காணலாம். காமுகர்க்குக் 'கோடும் குளமும் குளத்தருகேநின்ற குன்றுகளும், காடும், செடியும் அவர்கள் காமுற்ற மகளிராகவே தோன்றுவது போன்று, தலைவிக்கும் எப்பொருளும் கண்ணனுகவே காணப்படுகிறது. இவ்வாழ்வாரே 'உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் என் கண்ணனெம்பெருமான்' என்பர்.

மற்றும், இவர் பாசுரங்களில் பண்டைத் தமிழ் வழக்கங்கள் சிலவற்றைக் காணலாம். களவொழுக்கத்தில் நின்ற தலைவியின் மன வருத்தத்தின் உண்மைக் காரணமுணராளாய் நற்றாய் கட்டுவிச்சியைக் கொண்டு கட்டுங் கழங்குமிட்டுக் குறி பார்த்தல் ஓர் வழக்கு. தலைவி இதையுணர்ந்து அதைத் தடுக்கும் வழியை மேற்கொண்டு தோழியிடம் உண்மையை யுரைப்பாள். இச்செய்தியை,

"இதுகாண்மின் அன்னைமீர் கட்டுவிச்சி சொற்கொண்டுநீர்
எதுவானும் செய்தங்கோர் கள்ளுமிறைச்சியும்
தூவேன்மின்
மதுவார் துழாய்முடி மாயப்பிரான் கழல்வாழ்த்தினல்
அதுவே யிவளுற்ற நோய்க்கு மருந்தாகுமே"

"மருந்தாகு மென்றங்கோர் மாயவகை
வைசொற் கொண்டுநீர்
கருஞ்சோறு மற்றைச் செஞ்சோறும்
களனிழைத் தென்பயன்"

என்ற இனிய வரிகளில் வெறியாட்டுக் களத்தில் கள்ளும் ஆட்டிறைச்சியும் தூவுதலும், உதிரம் கலந்த பிரப்பரிசிச் சோறு முதலியன படைத்தலும் குறிக்கப்படுதல் காண லாம். மற்றும் ஓர் பழந்தமிழ் வழக்கம் "மடலூர்தல்" என்பது. தோழியாற் றழை மறுக்கப்பட்ட தலைவன் மடலூர்வேன் என்று கூறுவது மரபு. பனங்கருக்கா னியன்ற பரியில் தலைவன் ஆடையின்றி எருக்கு, பூளை முதலிய பூக்களை யணிந்து தன்னுற் காதலிக்கப்பட்ட தலைவியின் உருவத்தைத் தானே தீட்டித் தன் முன்னே வைத்துக் கொண்டு மறுகிற் செல்வது இம்மடலூர்தல் என்னும் வழக்கென்பர்.

"மாமடலூர்ந்து மெம்மொழி பிரானுடை தூமடல்
தண்ணந் துழாய் மலர் கொண்டு சூடுவோம்" (5, 3, 4)

என்றது காண்க.

மேலும் இப்பெரியார் பாசுரங்களில் தொன்றுதொட்ட பழமொழிகள் பல விரவி நிற்பதைக் காணலாம்.

"திருவுடை மன்னரைக் காணின்
திருமாலைக் கண்டேனே என்னும்" (4, 4, 8)

"உணங்கல் கெடக்கழுதை
யுதடாட்டங் கண்டென் பயன்" (4, 6, 7)

"இட்டகா லிட்டகைகளா யிருக்கும்" (7, 2, 4)

"பல்லியின் சொல்லொடு சொல்லைக் கொள்வர்
பண்டு பண்டே"

முதலியன கண்டு தெளிக.

மற்றும் அரிய கருத்துக்களைச் சிறந்த உவமைகளின் மூலம் எடுத்து மொழிவர் பராங்குசர்.

"அரக்கு மெழுகு மொக்கு மிவள்" (4, 1, 1)

"கறந்தபால் நெய்யே கடலினு ளமுதமே" (8, 1, 7)

"தாமரைநீள் வாசத்தடம்போல் வருவானே" (8, 5, 1)

"கறந்தபாலுள் நெய்யேபோ லிவற்றுளெங்கும்
கண்டுகொள்"

"துணையும் சார்வு மாடுவார்போல் சுற்றத்தவர்பிற
அணையவந்த ஆக்கமுண்டேல் அட்டைகள் போல்
சுவைப்பர்" (9, 1, 2)

"அழைக்கின்ற அடிநாயேன் நாய்கூழை வாலால்
குழைக்கின்றது போலவென் னுள்ளம் குழையும்"
(9, 4, 3)

"பெரியார்கட் பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு
வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்ருள் காட்டினளே"
(10, 6, 10)

"தீரவிரும்புண்ட நீரதுபோல வென்னுருயிரை
ஆரப்பருகவெனக் காராவமுத மானுயே" (10, 10, 5)

"நீலவரை யிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்பக்
கோலவராக மொன்ருய் நிலங்கோட்டிடைக் கொண்ட
வெந்தாய்"

இறுதியிற் கூறிய இவ்வுவமை இல்பொருள் உவமை யென்பர். எனினும் இறைவன் கொண்ட பேருருவத்திற் கேற்ப அவனது அரிய செயல் இங்கே வருணிக்கப்பட் டிருப்பது காணலாம். பெருமானை யுருவகப்படுத்திப் பல இடங்களிலும் பேசுவர்.

"தீதவம் கெடுக்குமமுதம் செந்தாமரைக் கட்குன்றம்
கோதவம்இலன் கன்னற்கட்டி யெம்மானென்
கோவிந்தனே" (2, 7, 3)

என்றது காண்க. நிற்க, இவர் வதிந்த காலத்திற்கு முன்ன ரும் இவர் காலத்தும் திகழ்ந்த பல நூல்களின் சொற்

றொடர்களும், அரிய கருத்துக்களும் இவரது அருளிச் செயல்களிற் காணலாம். "முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றுதல் புலவர் மரபு" என்ப. உதாரணமாக,

"பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" (2, 9, 5)

"பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" (பரிபாடல்)

"பிறவாப் பிறப்பிலை பிறப்பித் தோரிலையே" (ஷ. 3, 72)

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந் தெத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாள ராகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற் காளென்
கலந்தா ரடியார் தமடியா ரெம்மடிகளே" [னும்

என்ற பாசுரம்,

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானளத் தருவரேனும்
.... ... .... .... ...
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாவார்"

என்ற அப்பர் பாசுரத்தையும்,

"பாதியா யழுகியகால் கையரேனும்
... ... ... ... ...
ஆதியா யரவணையா யென்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் அடிகளாவார்"

என்ற திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் பாடலையும் நினைவூட்டுகின்றது.

"ஒருநாயகமா யோடவுலகுட னண்டார்
கருநாய் கவர்ந்தகாலர் சிதைஇய பானையர்
பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ"

என்ற பாசுரம்,

" மண்ணார்சட்டி கரத்தேந்தி
மரநாய்கௌவும் காலினராய்
அண்ணாந்தேங்கி யிரப்பாரை
யறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பண்ணார்மொழியார் பாலடிசில்
பரிந்தங்கூட்ட முகம்திருப்பி
உண்ணாநின்ற போதொருவர்க்
குதவாமாந்த ரிவர்தாமே "

என்ற சிந்தாமணிச் செய்யுட்கருத்தை நினைவூட்டுகின்றது.

" கற்பார் இராமபிரானை யல்லால்மற்றும் கற்பரோ "
(7, 5, 1)

" கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும்
கேட்பரோ " (7, 5, 3)

என்ற வரிகள்,

" கேசவன்சீர் கேளாத செவியென்ன செவியே
நாராயணா வென்னா நாவென்ன நாவே " (சிலப்.)

என்ற சிலப்பதிகாரத் தொடர்களை நினைவூட்டும்.

" கரியநாழிகை யூழியிற்பெரியன கழியுமாறறியேனே "
(8, 5, 6)

என்ற வரி,

" யாமத்தெல்லையொ ராண்டொத்திறந்ததே "

என்ற வரியை ஒத்திருக்கக் காணலாம். ஆழ்வார் பாடற் கருத்துக்களோடு ஒற்றுமை கொண்ட பகுதிகளைத் திருவாசகத்தும் பிற நூல்களிலும் காணலாம். பல இடங்களில் சொற்றொடர் ஒற்றுமையும் காணுதல் கூடும்.

" கிறிக்கொண்டிப் பிறப்பே " (2, 3, 8)

" கிறியென நினையின் " (2, 9, 6)

" கிறிசெய்தனை " (திருவாசகம்)

" செய்குந்தா வுன்னைநான் பிடித்தேன் **சிக்கெனவே** "
(2, 6, 1)

" ஆராவயிற்றானை யடங்கப் பிடித்தேனே " (10, 8, 2)

"இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே" (திருவாசகம் 37, 3)

"செடியார் நோய்" (2, 6, 7)

"செடியார் ஆக்கை" (திருவாசகம் 25, 9)

"மிக்கார் வேதவிமலர் விழுங்கும்என் அக்காரக்கனியே"
(2, 9, 8)

"விழுமியவமரர் முனிவர்விழுங்கும் கன்னற்கனியை"
(3, 6, 7)

"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை" (திருவிசைப்பா)

"வந்தாய்போல வந்தென் மனத்தினை நீ" (3, 2, 5)

"வந்தாய்போல வாராதாய் வாராதாய்போல்
வருவோனே" (திருவாய்.)

"வாராதே வரவல்லாய்" (கம்பரா. விராதன் 55)

"வேங்கடத் தெந்தை
பேர்பலசொல்லிப் பிதற்றிப்பித்த ரென்றேபலர்கூற
ஊர்பலபுக்கும் புகாதுமுலோகர் சிரிக்கநின்றாடி
ஆர்வம்பெருகிக் குனிப்பாரமரர் தொழப்படுவாரே"
(3, 5, 8)

"உத்தமனத்த னடியானடியே நினைந்துருகி
மத்தமனத்தொடு மாலிவனென்ன மனநினைவிற்
கொத்தனவொத்தன சொல்லிடவூரூர் திரிந்தெவரும்
தத்தமனத்தன பேசவெஞ்ஞான்றுகொல் சாவதுவே"
(திருவாசகம் 5, 3)

"ஊரமிலைக்கக் குருட்டா மிலைப்பதுபோல்" (திருவிருத்.)

"கண்கெட்ட ஊரேறாய்" (திருவாசகம் 5, 53)

"வேரிமாறாத பூவிலிருப்பாள்" (4. 5, 11)

"வேரியங் கமலை" (கம்பரா.)

"இடரிலே னென்றட்ட கில்லேன்
ஐம்புலன்கள் வெல்லகில்லேன்
கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித் தேத்தகில்லேன்"
(4, 7, 9)

" ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந் துரையேன் "
(திருவாச. 2, 14)

" கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி "
(4, 9, 10)

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலன் "
(குறள் 111, 1)

" ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய் " (குறள் 115, 7)

" ஊரவர்கவ்வை யெருவிட்டன்னை சொல்நீர்ப்படுத்து
ஈரநெல் வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ் செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர்மேனி நங்கண்ணன் " (5, 3, 4)

" பொருளல்லாத வென்னைப்
பொருளாக்கி யடிமைகொண்டாய்
அருள்செய் தங்கிருந்தா
யறியேனோர் கைம்மாறே " (5, 7, 3)

" பொருளாவென்னைப் புகுந்தாண்டு
புரந்தரன் மாலயன்பால்
இருளாயிருக்கும் " (திருக்கோ. 78)

" உன்னு சுவையொளி யூறோசை
நாற்றமுற்றும் நீயே " (7, 8, 9)

" சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் " (குறள் 3, 7)

" முள்ளெயிற் றேந்தில கூழை முடிகொடா " (8, 1, 9)

" முருகுதலைச்சென்ற கூழைமுடியா முலைபொடியா
(திருக்கோ. 104)

" முலையோமுழுமுற்றும் போந்திலமொய்பூம் குழல்குறிய "
(திருவிருத்தம்)

" கோலநறுந்துழாய் கொண்டூதாய் கோத்தும்பி " (8, 1, 8)

" குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி "
(திருவாசகம் 10, 3)

" பெரியார்கட் பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு "
(10, 1, 10)

"தெருண்ட மேலவர்ச் சிறியவர்ச்சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே"
(கம்பரா. வரைக். 8)

மற்றும் உலகநிலையாமை, யாக்கைநிலையாமை, செல்வ நிலையாமை முதலியவற்றை அழகிய பாசுரங்களில் விளக்குவர் :—

"உய்ம்மின் திறைகொணர்ந் தென்
றுலகாண்டவர் இம்மையே
தம்மின் சுவைமடவாரைப் பிறர்
கொள்ளத் தாம்விட்டு
வெம்மின் ஒளி வெயிலில் கானகம்
போய்க் குமை தின்பர்கள்
செம்மின் முடித் திருமாலை
விரைந்தடி சேர்மினே" (4, 1, 7)

"வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை
மொக்குளில் மாய்ந்து மாய்ந்து
ஆழ்ந்தா ரென்றல்லா லன்று
முதலின்றறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்ப
ரென்பதில்லை, நிற்குறில்" (4, 1, 6)

"வினை யுலப்ப வேறாகி
மனையாளை மாற்றார் கொள" (நாலடி. 3)

"பேரு மோராயிரம் பிறபல வுடைய வெம்பெருமான்
பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே"
(1, 1, 4)

"ஒருநாம மோருருவ மில்லாதார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமே"
(திருவாச திருத்தெள். 1)

ஆழ்வார் திருமாலின் அடியாரிடம் பேரன்பு பூண்டவர் என்பது.

"தூமணி வண்ண னெம்மான் றன்னைத்
தாளும் தடக்கையும் கூப்பிப் பணியு மவர் கண்டீர்
நாளும் பிறப்பிடை தோறெம்மை யாளுடை நாதனே"
(3, 7, 2)

"தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்
சடகோபன்" (7, 1, 11)

என்பது கொண்டுணரலாம்.

"ஆதியாய ரவணையா யென்பாராகில் அவர்கண்டீர்
யாம் வணங்கும் அடிகளாரே"

என்பது பிள்ளைப் பெருமாளையங்கார் வாக்கு.

"கங்கை வார் சடைக் கரந்தாற் கன்பராகில் அவர் கண்டீர்
நாம் வணங்கும் கடவுளாரே"

என்பது அப்பர் தேவாரம் மற்றும் சங்க நூல்களில் நெற்றிக்கணணிவது திலகமெனப் பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ளது.

"திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்" (திருமுருகு)

சமயக் குறியாகிய திருநீற்றைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்திற் காண்கின்றோம்.

"மண்டமர் பல கடந்து மதுகை யாணீறணிந்து"

என்றது காண்க. ஆயினும் 5-ஆம் நூற்றுண்டிற்குப் பின்னர்த்தான் இத்தகைய சமயக் குறிகள் மிகவும் வழங்கக் காண்கின்றோம். நான்காம் திருவாய்மொழி 5-ஆம் பத்து 5-ஆம் பாசுரத்தில்,

"கரிய மேனி மிசை வெளிய நீறு சிறிதே யிடும்
பெரிய கோலத் தடங் கண்ணன்"

என்று காணப்படுகிறது. இந்த வெளிய நீற்றைத் திருநீறெனக் கொண்டு திருமால் பெருமை சான்ற சிவபத்தன் எனக் கூறுவர் சிலர். ஆனால், இங்கே கூறப்பட்ட நீறு வெண்திருமண்ணாகும் என்பர் வைணவர்.

தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவியின் விரகத்தைப் பெருக்கி வருத்தக் கூடியவற்றுள், ஆவின் மணியோசையும், அன்றிலின் குரலும் கூட்டிக்கூறுப.

"சினஞ்செய் மால்விடைச் சிறுமணியோசை யென்
சிந்தையைச் சிந்துவிக்கும்
அனந்த லன்றி லினக்குரல் பாவியேனாவி யடுகின்றதே"
(8, 5, 9)

சம்பந்தப் பெருமான் சுந்தரமூர்த்திகள் என்ற இவரைப் போன்றே ஆழ்வாரும் ஒவ்வொரு பதிகத்திறுதியிலும் தம் பெயரைக் குறிப்பர்.

'' தென் குருகூர்ச் சடகோபன் சொல் இப்பத்தே ''
(1, 2, 11)

'' மாலேயேறி மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவு மாயிரத்தின் ''
(1, 5, 11)

'' வாமனனை யிசைகூட்டி வண்சட கோபன் சொல் ''
(2, 4, 11)

'' தென் குருகூர்ச் சடகோபன் மாறன் சொன்ன ''
(2, 6, 11)

'' வழுதி வளநாடன்
பண்டலையில் சொன்ன தமிழாயிரத்துப்
பத்தும் வல்லார் '' (2, 8, 11)

'' சடகோபன் சொல், பண்கொ ளாயிரத்துப்
பத்தால் பத்தராகக் கூடும் '' (3, 6, 11)

'' சடகோபன்
சொன்னபாடல் ஆயிரத் துளிவை பத்தும்
நல்வினையென்று கற்பார்கள்
நலனிடை வைகுந்தம் நண்ணித்
தொல்வினைதீர வெல்லாரும்
தொழுதெழ வீற்றிருப்பாரே ''

'' காரி மாறன் சடகோபன் சொல்லாயிரத்திப் பத்தால்
வேரி மாருத பூமேலிருப்பாள் வினைதீர்க் கும்மே ''
(4, 5, 11)

'' குருகூர்ச் சடகோபன் சொன்ன
நிரை கொளந்தாதி யோராயிரத் துளிவை பத்தும் ''
(5, 3, 11)

'' குருகூர்ச் சடகோபன்
செய்த வாயிரத் துள்ளிவை '' (5, 7, 11)

'' வண் குருகூர்ச் சடகோபன்
செந்தமிழ் பத்தும் வல்லார் '' (6, 5, 11)

" சடகோபன்
அறிந்துரைத்த வொண்டமிழ்க ளாயிரத் துளிப்பத்தும்"
(7, 8, 11)

" சடகோபன் சொல்
பாலோ டமுதன்ன வாயிரத்திப் பத்தும்" (8, 6, 11)

" திருமாலால்
அருளப்பட்ட சடகோபன் ஓராயிரத் துளிப்பத்தால்"
(8, 8, 11)

" குருகூர்ச் சடகோபன் சொல்
சந்தங்க ளாயிரத் திவை வல்லார் முனிவரோ"
(10, 9, 11)

" அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவிலந் தாதிகள்" (10, 10, 11)

இம்மேற்கோள்களிலிருந்து நம்மாழ்வார் தென்திருக்குருகூரிற் பிறந்தவர் என்பதும், இவரது தந்தையார் காரி என்பதும், இவர்க்கு மாறன், சடகோபன் என்ற பெயர்கள் உண்டென்பதும், இவர் பாண்டிநாட்டார் என்பதும், இவர் பாடிய பாசுரங்கள் இசைப்பாடல்கள் என்பதும், பாசுரத்தொகை ஆயிரத்துப்பத்தென்பதும், தொடங்கும் போதே ஆயிரம் கவிகளாகப்பாட எண்ணினர் என்பதும், இப்பாசுரங்களை அன்புடன் ஓதுவோர் வினைநீங்கப் பெற்றுத் திருமாலின் திருவடியை அடைந்துய்வர் என்பதும், பாசுரங்கள் அனைத்தும் செந்தமிழ்ப் பாடல்கள் என்பதும், ஆழ்வார் ஆராவியற்கை அவாநீத்துப் பேராவியற்கை பெற்ற பெரியார் என்பதும், தெளிவாம். ஆழ்வாரே ஓரிடத்தில்,

" நன்றாய் ஞானம் கடந்து போய்"

என்ற பாசுரத்தில்,

பசையற்றால், அன்றே வீடு அதுவே வீடு வீடாமே,

என்பர்,

" அற்றவர் என்பார் அவாவற்றார்" (குறள் 37, 5)
" ஆராவியற்கை யவா நீப்பின் அந்நிலையே,
பேரா வியற்கை தரும்" (குறள் 37, 10)

"பற்றுக பற்றற்ருன் பற்றினை" (ஷை. 35, 10)

முதலிய திருக்குறள் வரிகளை இவரது பாசுரங்களுடன் ஒப்பு நோக்கிக் காண்க.

## கல்வெட்டுக் குறிப்புகள்

923 (144) திரிபுவன சக்கிரவர்த்தி இராசராசதேவன் சகம் (1500) i. e., கி.பி. 1578. நம்மாழ்வார் கருடாழ்வார்களின் பிரதிட்டை.

திருக்கண்ணபுரத்தில் சித்திரை மாதம் திருக்கலியாணத் திருவிழாவில் ஐந்தாம் நாள் நம்மாழ்வாரின் அருளிச் செயல்கள் ஓதப்பட்டன.

526 of 1922. நரசிங்கதேவனுடைய 21-ஆவது ஆண்டு. இவன் திருவாய்மொழியில் வல்லவனுதல் கொண்டு திருவாய்மொழிப் பரீட்சை யெனப்பட்டான்.

16 of 1931-32. அழகர் கோயில். திருபுவன சக்கிரவர்த்தி கோநேரின்மை கொண்டான் 21-ஆவது ஆண்டு. எம்பெருமானுர் சிலை பிரதிட்டிப்பித்தது.

14 of 1931-32 அழகர் கோயில்-கோநேரின்மைகொண்டான் 20-ஆவது ஆண்டு ஆடித் திருவிழா 9-ஆம் நாள். சடகோபர் அருளிச் செயலைப் பெருமாள் செவியேற்றருளும்போது.

## ஸ்ரீகுலசேகராழ்வார்

ஸ்ரீ நாதமுனிகளின் சீடரான ஸ்ரீ மணக்கால் நம்பிகள் இவ்வாழ்வாரைப்பற்றிக் கூறவந்த இடத்தில்,

"ஆரங் கெடப் பரனன்பர் கொள்ளா ரென்றவர்களுக்கே
வாரங் கொடு குடப் பாம்பிற் கையிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்த செங்கோற் கொல்லி காவலன் [வில்லவர் கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே"

என்று புகழ்ந்தனர். இது கொண்டு இவ்வாழ்வார் முடியுடை மன்னன் என்றும், கொல்லிநாட்டை ஆண்டவர் என்றும், சேரர் வழித் தோன்றல்' என்றும், குலசேகரன் என்பது அவர் இயற்பெயர் என்றும், திருமாலிடத்து மெய் யன்பு பூண்டவர் என்றும், பகைவரைப் போரில் வெற்றி கொள்ளும் ஆற்றலுடையர் என்றும், தெளியலாம். மேலும் முதலிரண்டடிகள் இவர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் வியத் தகு நிகழ்ச்சியைக் குறிக்கும். அரண்மனைப் பணியாளர் சிலர் இவர்க்கும் இவரிடம் அன்புகொண்ட சிலர்க்கும் பகைமையுண்டாக்க நினைந்து, அரண்மனையில் களவு போன முத்தாரங்களைக் களவாடியவர்கள் அரண்மனையிற் புழங்கும் சில அடியார்களே என்று கூற, இம்மன்னர், அவ்வடியார்கள் அவ்வாறு செய்யார் என்று சூளுறவு செய்ததோடு நில்லாமல், அரவம் அடங்கியிருந்த ஓர் குடத்திற் கையிட்டனர் என்ப. இதனுல் இவர்க்கு வைண வத்திலும், வைணவர் மீதும் இருந்த பேரன்பு வெளியாகும்.

இப்பெரியாரே பல இடங்களிலும், தம்மைக் "கொல்லி காவலன்" என்றும், "கூடல் நாயகன்" என்றும், "கோழிக் கோன்" என்றும் கூறுவது கொண்டு, இவர் சேர, சோழ, பாண்டியம் என்ற மூன்று நாடுகளையும் அரசு புரிந்தவர் எனக் கருதலாம். குருபரம்பரைப்படி இவர் கலி. 28-ஆவது ஆண்டில் (கி.மு. 3075)-இல் கேரள இளவரசராகக் கொல்லி நகரில் பிறந்தா ரென்றும், சிறுபிராயத்திலேயே தமது அரசுரிமையை வெறுத்துத் திருவரங்கம் சென்று திருக்கோயிற் றிருப்பணியில் ஈடுபட்டிருந்தாரென்றும் கூறுப. தமிழில் பெருமாள் திருமொழிக்கும், வடமொழியில் முகுந்த மாலைக்கும் இவர் ஆசிரியர். இராம சரிதத்தில் மிகவும் ஈடுபட்டவர். ஒரு சமயம் ஓர் புராணிகர் இராமா யணம் வாசிக்கும்போது, "கரதூடணர் பதினுயிரக் கணக் கான அரக்கர்களுடன் ஜனஸ்தானத்தில் ஸ்ரீ இராமபிரானை வளைந்து கொண்டனர் என்று மொழிந்தவளவில், அந் நிகழ்ச்சியை அப்பொழுது நிகழ்வதாகவே கருதி, வில் லேந்தி இராகவனுக்குதவிபுரிய எழுந்தனர் என்றும், இந்

நிலையைக் கண்ட புராணிகர், உடனே, இராமபிரான் தனியனாக இருந்தும், அப்பெருஞ் சேனையுடன் கரனைக் கொன்றனர் என்று கூறியவளவில், வீராவேசம் அடங்கி, ஆழ்வார் அமர்ந்தனர் என்றும் வரலாறு கூறும்.

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில்,

'' பரனே பஞ்சவன் பூழியன் சோழன்
பார் மன்னர் முன்னர் தாம் பணிந் தேத்தும் வரனே ''

என்று கூறுவது கொண்டு, பூழியன் என்றது இவ்வாழ்வாரையே எனக் கருத இடமுண்டு என்பர் சிலர். இனி, திருமங்கைமன்னனும் சுந்தரமூர்த்திகளும் ஒரு காலத்தவர் ஆதல் கூடும். சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனார் காலத்தவர் என்பது பெரியபுராணத்தான் அறியப்படுவது. சேரர் மரபில் வந்த பெருமாக் கோதையார் திருவஞ்சைக் களத்துச் சிவபிரான்மீது அன்பு செலுத்தித் தொண்டாற்றினர் என்றும், அக்காலத்துச் சேரவரசன் தவம் பூண்ட அளவில் கோதையாரை அரசுபுரியுமாறு வேண்ட, அவர் அதற்கியைந்து நெறிவழுவாது அரசியற்றினர் என்றும், இச்சேரர்தான் சுந்தரருடன் கயிலை சேர்ந்தனர் என்றும் வரலாறுண்டு. இச்சேரமான் பெருமாளுக்கு முன்பு தவத்தை மேற்கொண்டு அரசுகட்டில் நீத்த சேரமன்னன் குலசேகரன் என்பர் மு. இராகவையங்கார்.

'' மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந்தன் னொடுங் கூடுவதில்லை யான் ''

'' கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து
இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான் வேண்டேன்
எம்பெருமா னீசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே ''

என்ற பாசுரங்களைக் காண்க. இவ்வாழ்வார் தம் குமாரர்க்குப் பட்டங்கட்டிவிட்டுத் துறவு பூண்டனர் என்று கூறும் திவ்ய சூரி சரிதம். இவர் கேரள தேசத்தவரேனும், சோணாட்டுத் திவ்ய தேசங்களாகிய திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லைத் திருச்சித்திரகூடம் என்பனவற்

றிற்கு மங்களாசாசனம் செய்துள்ளனர். இவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வித்துவக்கோடு நம்மாழ்வாரால் பாடப்பெறவில்லை. ஆகவே குலசேகரர்க்குப் பரிசயமுள்ளதும், நம்மாழ்வார்க்குப் பரிசயமில்லாததுமான பிரதேசத்தில் உள்ளதே பெருமாள் மொழியிற் காணப்படும் வித்துவக்கோடு என்பர் மு. இராகவையங்கார். மற்றும், வஞ்சிமாநகர் ஆம்ராவதிக்கரையிலுள்ள கருவூர் எனக் கொண்ட காலஞ்சென்ற மகாவித்துவான் ரா. இராகவையங்காரது கருத்தைப் பின்பற்றி இன்றும் வித்துவக் கோட்டக் கிரகாரம் என வழங்கும் கருவூரில் உள்ள ஓர் பகுதியை மேற்கூறிய வித்துவக்கோடு என்பர் சிலர். இதற்கு மணிமேகலை வஞ்சிமாநகர் புக்ககாதையினின்று மேற்கோளும் காட்டுவர். ஆழ்வார் வித்துவக் கோட்டுப் பெருமானிடம் மிகவும் ஈடுபட்டவர் என்பது "தருதுயரந் தடாயேல்" "அரிசினத்தாலீன்றதாய்" முதலிய பாசுரங்கள் கொண்டு நன்குணரலாம். தற்காலம் கொடுங்கோளூரில் இருப்பதாகக் கூறும் வித்துவக்கோடு, கரூர்க்கண் உள்ளதையொட்டிப் பிற்காலத்தேற்பட்டது என்பது மு. இராகவையங்கார் கருத்து. ஆயினும், சேரர் தலைநகரம் இன்னது என்று இன்னும் குறிப்பிடக்கூடாத நிலையில், இக்கூற்று ஆராய்ச்சிக்குரியது.

நிற்க, இவ்வாழ்வாரைப்பற்றி எம். சீநிவாசய்யங்கார் தமது (Tamil Studies) என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார். கி.பி. 890-இல் விஜயாலயன் சோழ நாட்டைப் பலப்படுத்தினன். அவனும், அவன் மகன் முதலாம் ஆதித்தனும், இழந்த ராஜ்யத்தை மீண்டும் பெற்றதுடன், தற்காலம் சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களைத் தம்முள் அடக்கியுள்ள கொங்குநாட்டை அடிப்படுத்தினர் எனச் சரிதம் கூறும். குலசேகரர் திருவாலியைப் பாடியிருக்கிறார். இந்தத் திருவாலி திருமங்கையாரால் கட்டப்பட்ட ஆலயம் போலும். கேரளோத்பத்தி என்னும் நூல், குலசேகரர் கி.பி. 125-இல் இறந்த சேரமான் பெருமாளுர்க்குப் பின் அரசாண்டார் எனக் கூறும் என்றும், இவர்

கி.பி. 780-க்கும் 890-க்கும் இடையில் வாழ்ந்தவர் என்றும், மருமக்கள்தாய முறையில், கேரள அரசிற்குரிமை பெற்ற ஓர் பாண்டிய அரசராக இருந்திருக்கக்கூடும் என்றும், சேரநாட்டில், இவர், பாண்டிய குலசேகரப் பெருமாள் என வழங்கப்பட்டனர் என்றும் எழுதுவர்.

இனி, ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமது பிரபந்தத்தில், கீழே காட்டியபடி ஆழ்வார்களை முறைப்படுத்திக் காட்டுவர்.

(1) பொய்கையார், (2) பூதத்தார், (3) பேயார், (4) திருமழிசையார், (5) நம்மாழ்வார், (6) பெரியாழ்வார், (7) குலசேகரர், (8) திருப்பாணாழ்வார், (9) தொண்டரடிப்பொடியார், (10) திருமங்கையாழ்வார்.

குருபரம்பரைப்படி குலசேகராழ்வார் திருமாலின் மார்பிலுள்ள கௌத்துப மணியின் அவதாரம் ஆவர். திருவஞ்சைக்களத்திற் பிறந்தவர். திருடவிருதர் என்ற அரசனது மகன் என்றும், இளமையிலேயே அரசுரிமை எய்தினர் என்றும், விஷ்ணு பக்தியில் ஈடுபட்டவர் என்றும் அந்நூல் கூறும். திருவரங்கம் சென்று, இறைவனை வழிபட்டு, முகுந்தமாலையும், பெருமாள் மொழியும் இயற்றியவர். காஞ்சி, திருப்பதி முதலிய திவ்ய தேசங்கட்குச் சென்று இறுதியில் காட்டுமன்னார் கோயிலில் முத்தி பெற்றனர் என்ப. வேதாந்த தேசிகர் இவ்வாழ்வார் பிறந்த ஊர் வஞ்சைக்களம் என்பர். ஆனால் இவ்வாழ்வாரே, தம்மைக் கொல்லிக்கோன் எனக் கூறுவர்.

## குலசேகரர் காலம்

அறிஞர் பந்தர்காரின் கருத்துப்படி ஆழ்வார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினராவர். இதனை ஆதாரங்காட்டி மறுத்து டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் பின்வருமாறு கூறுகிறார்.[1] 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிற்றான் நாலா

1. Early History of Vaishnavaism in S. India. P. 27. etseq

யிரப்பிரபந்தம் ஸ்ரீ இராமாநுஜாச்சாரியாரால் தொகுக்கப் பட்டது. இதில் காணப்படும் இராமாநுஜ நூற்றந்தாதி குலசேகரரை, ஆழ்வாராகக்கூறும். ஒவ்வொரு ஆழ்வாரைப் பற்றியும் சிறப்புக் கவிகள் உண்டு. ஆதி ஆசாரியார் மணக்கால்நம்பி குலசேகரரைப் புகழ்ந்துள்ளார். இந்நம்பி நாதமுனிகளின் சீடரின் சீடரும் ஸ்ரீ இராமாநுஜரின் மூதாதையருமான ஆளவந்தாரின் ஆசார்ய குமாரர். இராமாநுஜர் இளைஞராயிருந்தபொழுது ஆளவந்தார் முதுமைப் பருவம் எய்தி விளங்கினர் என்ப. ஆகவே அவரது ஆசார்யரான மணக்கால் நம்பியார், ஸ்ரீ ஆளவந்தாரைக் காட்டிலும் வயது முதிர்ந்தவராவர். எனவே 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், அதனை அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியுமே மணக்கால் நம்பியின் காலமென்று கூறுதல் பொருந்தும், குலசேகரர் இந்நம்பியால் துதிக்கப்பட்டவராதலின், அவர்க்கு முந்தியவராவர்.

நிற்க, கி.பி. 1088-இல் அரசுபுரிந்த குலோத்துங்க சோழனது 18-ஆவது ஆட்சியாண்டில் குலசேகரர் அருளிச்செய்த "தேட்டருந்திறல்" என்ற பதிகத்தைக் கோயிலில் பாடுமாறு ஏற்பாடு செய்த ஓர் சாசனம் காணப்படுகிறது. ஆழ்வார் அருளிய இப்பதிகத்தின் சிறப்பை உணர்ந்து, இவ்வாறு அதனைப் பாடுமாறு ஏற்பாடு செய்யவேண்டுமெனில், ஆழ்வாரது பெருமை நன்குணரப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறுணர்தற்குச் சில பல ஆண்டுகள் அவசியம் வேண்டுமாகலின், குலசேகராழ்வார் காலம் கி.பி. 950-க்கு முன்னர்த்தான் இருந்திருக்கவேண்டும் என்று ஒருவாறு துணியலாம்.

குலசேகரர் தம்மைக் கொல்லிக்காவலன் எனக் கூறிக் கொள்வர். கி.பி. 900-க்குப் பின், கேரள மன்னரது ஆதிக்கம் குறைந்துவிட்டது. தஞ்சைச் சோழரான பராந்தகன் காலமாதலின், கேரள மன்னர் தலையெடுத்தற்கில்லை. இக்காரணம்பற்றி, பல்லவநரசிம்மவர்மன் காலமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்பேனும், பல்லவ

அரசு முடிவெய்திய காலமான கி.பி. 800-க்குப் பின் பேனும், இவ்வாழ்வார் இருந்திருக்கலாம் என்றும், திருமங்கை மன்னன் காலம் கி.பி. 800 எனின், குலசேகரர் காலம் கி.பி. ஆறும் நூற்ருண்டாகலாம் என்றும் கூறுவர். டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள். கி.பி. 6-ஆம் நூற்ருண்டினிறுதியும் 7-ஆம் நூற்ருண்டின் தொடக்கமும் முதலாழ்வார்களின் காலம். எனவே இவ்வாழ்வார் காலம் கி.பி. 8-ஆம் நூற்ருண்டாகவும் சோழ மன்னன் விசயாலயன் காலமாகிய 9-ஆம் நூற்ருண்டின் நடுவுக்கு (கி.பி. 849) முன்னும், 3-ஆம் நந்திவர்மனுல் தெள்ளாற்றி வெல்லப்பட்ட வரகுணனுக்குப் பின்னும் இவ்வாழ்வார் திகழ்ந்திருத்தல் வேண்டும். (825-849).

## கல்வெட்டுக் குறிப்புகள்

கி.பி. 1216-இல் திருநெல்வேலி சில்லா அம்பா சமுத்திரம் தாலுக்காவில் குலசேகராழ்வார் கோயில் இருந்தது. செங்கோல் வேளைக்காரர்களைச் சேர்ந்த காரணவர்கள் வேலன்சோலை என்ற கிராமத்தை முற்றூட்டாக அளித்தனர் என்று S. I. E. 1916-17 அறிக்கை கூறும். (398) இ∴து மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலம்.

(400) மாறவன்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி ஐந்தாவது ஆண்டுக் கல்வெட்டில் பின்வருமாறு காணப்படுகிறது. மலை மண்டலத்தைச் சேர்ந்த முல்லைப் பள்ளிச் செண்டலங்காரதாசர் என்பவர் குலசேகரப் பெருமாள் கோயிலை நிறுவினர். இவரே குறுமுறை நாட்டுவிந்தனூரைத் திருவிடையாட்டமாக விட்டு, எல்லைத்தகராறையும் தீர்த்தார். இக்கிராமம் ராசேந்திரசோழ தேவனின் 9-ஆவது ஆட்சி ஆண்டில் சர்வே செய்யப்பட்டது.

(401) சந்ததியற்ற இரண்டு விதவைகள் தோட்ட நிலத்தைக் குலசேகரப் பெருமாள் கோயிலுக்கு விற்றனர். (1916-17).

(402) ஜடாவர்மன் குலசேகர தேவனது 13+6-ஆவது ஆண்டில் அவன் நாலாயிரவன் திருமண்டபத்தில் திருப்பாவை கேட்டருளியிருந்தபோது ராஜராஜ சதுர்வேதிமங்கலத்து ராசேந்திர விண்ணகர் ஸ்ரீ வைணவர்கள் குலசேகரப் பெருமாள் கோயிற் செண்டலங்கார தாசர்க்குப் பிடிபாடளித்தனர்.

(403) ஷை ஆலயத்தின் தலைமைத் தேவதையான கோபால சுவாமியின் உத்திரவு. மகரமாதம் திருவாதிரை நாளில், பெருமாள் எழுந்தருளிக் குலசேகராழ்வார் கோயில் முன் நிற்கும்போது நடக்க வேண்டியதற்காகச் செண்டலங்காரதாசர்க்கு அளிக்கப்பட்டது.

(404) செண்டலங்காரமௌனி மடத்திற்காக, திரு புவனச்சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டாரது 5-ஆவது ஆண்டில் இரண்டு மாநிலம் சாசனம் செய்யப்பட்டது.

(405) சுந்தரபாண்டியன் காலத்துச் செண்டலங்காரர் புதுக் குளத்திலிருந்து நீர் கொண்டு செல்வதற்காகச் சில உரிமைகள் பதிவு செய்யப்பட்டன.

**தொண்டரடிப்பொடியாழ்வார்**

இவர் நீர்வளம், நிலவளம் பொருந்திய சோழநாட்டில் மண்டங்குடி என்ற ஊரில் முன்குடுமிச் சோழியப் பிராமணர் குலத்தில் பிறந்தவர். விப்பிரநாராயணர் என்பது இவரது பிள்ளைத்திருநாமம். சிறுவயதிலேயே நன்கு கற்றுத் தேர்ந்து விளங்கினர். திருவரங்கத்தில் ஓர் துளசி நந்தவனம் வைத்து நாடோறும் அரங்கநாதப் பெருமானுக்குத் திருமாலைக் கைங்கரியம் செய்து வந்தார். இவர் கலி வருடம் 289(கி. மு. 2814)-ல் பிறந்தவர் என்று குருபரம்பரை கூறும். ஒரு நாள் உறையூர்ச் சோழனது நாளோலக்கந் தரிசித்து விட்டு, மனைக்குத் தன் தமக்கையுடன் திரும்பிய ஓர் தாசி தான் யாவரையும் தன் வயமாக்கும் திறமை

படைத்தவள் என்றும், வேண்டுமெனில் அரிய திருமால் தொண்டராகிய விப்பிரநாராயணரை வசப்படுத்திக் காட்டுவதாகவும் கூறி, அப்பெரியாரிடம் பணி செய்யத் தொடங்கினுள். நாளடைவில் அவர் பத்தித்திறம் மாறிக் காமுகராக விளங்கினுர். பின்னர் அவரிடம் இருந்த செல்வம் குறையவே அவ்விலைமகள் அவரைப் புறக்கணித்தாள். இந்நிலையில் அரங்கப்பெருமாள் அவரை ஆட்கொள்ள எண்ணி ஓர் பிராமணர் வடிவாகிக் கோயிலில் உள்ள ஓர் பொற்கிண்ணத்தை ஆழ்வாரது காதற்கிழத்தி மனையில் வைத்து விட்டுச் சென்றுர். பிறகு, விப்பிரநாராயணரும், விலைமகளும் சந்திக்கும்படி செய்தார். மறுநாள் கிண்ணம் காணுமல் தேடி வந்தவர்கள் விலைமகள் இல்லத்தில் அதனைக் கண்டனர். முடிவில் அரங்கப்பெருமாள் தமக்கருள்புரியச் செய்த நிகழ்ச்சி என்று விப்பிரநாராயணர் உணர்ந்து மீட்டும் திருமாற் கடிமை பூண்டொழுகினர். இவர் அருளியவை திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்க.

இவரது பாசுரங்களிலிருந்தே இவரது வாழ்க்கை வரலாற்றிற் சில செய்திகளை யுணரலாம். இவர் தமது திருமாலையில்,

"சூதனுய்க் கள்வனுகித் தூர்த்தரோ டிசைந்தகாலம்
மாதரார் கயல்கண்என்னும் வலையுட்பட் டழுந்துவேனைப்
போதரா யென்றுசொல்லிப் புந்தியில் புகுந்துதன்பால்
ஆதரம் பெருகவைத்த அழகனுர் அரங்கமன்றே"

என்றும்,

"மெய்யெலாம் போகவிட்டு
விரிகுழ லாரில்பட்டுப்
பொய்யெலாம் பொதிந்துகொண்ட
போட்கனேன் வந்துநின்றேன்
ஐயனே அரங்கனேயுன்
னருளென்னு மாசைதன்னுல்
பொய்யனேன் வந்துநின்றேன்
பொய்யனேன் பொய்யனேனே"

என்றும் கூறியது கொண்டு இவர் வாலிபதிசையில் மாதர் வயம் சிக்கி யுழன்றதும் திருமால் அவரை உய்யக் கொண்டதும் தெளியலாம். இவர் கள்ளத் தொண்டு பூண் டொழுகியதும், பின்னர், திருமாலின் அருள் பெற்று நின்ற நிலையில் "உள்குவாருள்கிற்றெல்லாம் உடனிருந் தறிவான் இறைவன்" என்று உணர்ந்து வெள்கித் தன் செயலை நினைந்து விலாவறச் சிரித்திட்டதும்; இவராலேயே கூறப்பட்டது. இதே வரிகள் அப்பர் சுவாமிகளின் வாக் கிலும் காணலாம். இதினின்று அப்பர் தேவாரத்தை இவர் கற்றிருக்கக்கூடும் என்றும் உணரலாம். இவர் பெருமானுக் குத் துளவுத் தொண்டு புரிந்த செய்தியைத்,

"தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடி"(திருப்பள்ளி.10)

என்றும்,

"துளவுத்தொண்டராய தொல்சீர்த்தொண்டரடிப்பொடி"

என்றும் காணப்படும் அடிகள் கொண்டுணரலாம். இவர் காலத்தில் திருவரங்கம் பெரியகோயில் முற்றத்துப் பல அடியார்கள் விளங்கினர் என்பதை,

"மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து
ஆம்பரி சறிந்துகொண்டு ஐம்புல னகத்தடக்கிக்
காம்பறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும்
சோம்பரை யுகத்திபோலும் சூழ்புன லரங்கத்தானே"
(திருமாலை. 32)

என்று இவ்வாழ்வார் பாடும் வஞ்சப் புகழ்ச்சி கொண்டு அறிதல் கூடும். இவர் மறந்தும் புறந்தொழா மாந்தர். பிற மதங்களைக் கண்டித்துப் பேசுவர் என்பதை,

"புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதாம்
தலையறுப்புண்டும் சாவேன் சத்தியம் காண்மின் ஐயா
சிலையினு லிலங்கை செற்ற தேவனே தேவனுவான்"

"வெறுப்பொடு சமண்முண்டர் விதியிலி சாக்கியர்கள்நின்
பொறுப்பரியனகள் பேசில்போவதே நோயதாகிக்[பால்

குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டா யரங்கமா நகருளானே''
(திருமாலை. 8)

என்றும்,

'' மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலா மானிடங்காள்
அற்றமே லொன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை''
(ஷை. 9)

என்றும் கூறுவன கொண்டு தேறலாம். பத்தித் திறமும் ஞானமுமே சாதியைக் காட்டிலும் சிறந்ததென்பது அவர் கொள்கை. இதனைப்,

'' பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேனு மெம்மடியரர்களாகில் [மொக்க
தொழுமினிர் கொடுமின் கொண்மின் என்று நின்னோடு
வழிபட வருளினுய்போல் மதிள் திருவரங்கத்தானே''
(திருமாலை. 42)

'' அமரவோ ரங்கமாறும் வேதமோர் நான்குமோதித்
தமரர்கள் தலைவராய சாதியந்தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர்போலு மரங்கமா நகருளானே''
(ஷை. 43)

என வரும் அடிகள் கொண்டறியலாம்.

இவரது பாசுரங்களில் பச்சைமாமலைபோல்மேனி, வேத நூற்பிராயம் நூறு, வண்டினமுரலும் சோலை, வடதிசை முடியை வைத்து, ஊரிலேன் காணியில்லை முதலிய பாசுரங்கள் அன்பர்களால் அடிக்கடி பாடப்படுவதுண்டு. இவரது திருப்பள்ளியெழுச்சி திருவரங்கம் கோயிலில் இன்றும் காலையில் ஓதப்பட்டு வருகின்றது.

நிற்க, திருமங்கை மன்னன் திருவரங்கத் திருமதிலைக் கட்டும்போது தொண்டரடிப்பொடியாழ்வாரின் துளசி நந்தவனம் இடையிட்டதாக ஆழ்வார் அந்த இடத்தை நீக்கி மதிலை யமைத்தார் என்றும் இந்த நன்றியை மறவாது தொண்டரடிப்பொடியார் தாம் திருமாலை செய்கிற கருவிக்கு அருண்மாரி எனப் பெயரிட்டனர் என்றும் குருபரம்பரை கூறும். இது கொண்டு இருவரும் ஒரு காலத்தவர்

எனக் கொள்ளலாம். மற்றும்,

"சுரும்பமர் சோலைசூழ்ந்த அரங்கமே கோயில்கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டென் கண்ணிணை
களிக்குமாறே" (திருமாலை. 17)

என்ற திருமங்கை மன்னனது பெரிய திருமொழி வரிகள் தொண்டரடிப்பொடியார் பாசுரத்தும் காணப்படுகிறது. இதுவும் அவர்கள் இருவரும் ஒரு காலத்தவரென்பதைக் காட்டும்.

## திருப்பாணாழ்வார்

சோழர் நாட்டில் உறையூரில் பாணர் குலத்திற் றோன்றியவர். திருவரங்கப் பெருமான்மீது பாடிய தமது பாடல்களை இனிமையாக யாழில் வைத்துப் பாடினார். அந்த யாழினிமையைக் கண்டு, பெருமான் அவரை ஆலயத்திற் கழைத்து வருமாறு லோகசாரங்க முனிவர்க்குக் கட்டளையிட்டனர். ஆழ்வாரருளிச் செய்த திருப்பாசுரம் 'அமலனாதிபிரான்' என்ற பதிகம். அவர் காலம் நிச்சயமாகத் தெரியவில்லை.

சோறுடைத்தென்று ஔவைப்பிராட்டியாற் புகழப் பெற்றதும், சோழர் தலைநகராகப் பண்டைக் காலத்து விளங்கியதுமான உறையூர் என்னும் பதியில் பாணர் வகுப்பிற் பிறந்தவர். இளம்பருவத்திலிருந்தே திருவரங்கப் பெருமான் மீது பத்தி மிகுந்தவராய், ஓர் யாழை வைத்துக்கொண்டு, கோயில் உட்புறம் செல்வதற்குப் பிறப்பான் அருகரன்மையின், புறத்திலமர்ந்தே பாசுரங்கள் பாடி வந்தார். அவரது பத்தித் திறத்தைக் கண்டு திருவரங்கப்பெருமான் லோகசாரங்கர் என்ற முனிவரைக் கொண்டு, அவரைத் தமது சந்நிதிக் கழைத்தருளினார். பெருமானுடைய பேரருளை நினைந்து ஆழ்வார் "அமலனாதிபிரான்" என்ற பத்துப் பாடல்களை அருளிச் செய்தார். அவர் வதிந்த காலம் இன்னதென வரையறுத்தற்குப் போதிய ஆதாரங்களில்லையெனினும், தொண்டரடிப்பொடிகள், திருமங்கையார் முதலிய ஆழ்வார்களின்

காலமாக இருந்திருத்தல் கூடும் என்பது சில அறிஞர் முடிவு. "பழுதிலாவொழுகலாற்று" என்ற தொண்டரடிப் பொடியார் பாசுரம், பாணராகிய இப்பெரியாரைக் குறிக் கக்கூடுமோ என்னச் சிலர் கருதுவர். அவ்வாறெனின், ஆழ்வார் தொண்டரடிப்பொடியார் காலத்திருந்தவர் எனக் கொள்ளலாம்.

500 (1916-17) கோப்பெருஞ்சிங்கன் 33-வது ஆண்டு. மிழலைத்திருவாய்க் குலத்துப்பிள்ளை திருப்பாணாழ்வாரின் விக்ரகத்தின்முன் நுந்தாவிளக்கு. (திருநாமநல்லூர்).

### திருமங்கையாழ்வார்

செம்பாகமான செந்தமிழ் நடையில் பெரிய திருமொழி என்ற ஆயிரம் பாசுரங்களை யருளிச் செய்த இப்பெரியார் சோழ மண்டலத்தே திருவாலி நாட்டைச் சேர்ந்த திருக் குறையலூரில் நான்காவது வருணத்தில் சோழ மன்ன னது சேனைத் தலைவனான நீலன் என்பவர்க்குத் திருமக வாகக் கலியுகம் 398-வதான நள ஆண்டு கார்த்திகை மாதம் பௌர்ணமி கிருத்திகை நாள் கூடிய நன்னாளில் அவதரித்தார் என்ப. கலியன் என்ற திருப்பெயருடன் ஆலி நாட்டின் தலைவராகவும், சோழ மன்னனது சேனைத் தலைவராகவும் விளங்கியவர். மருத்துவத் தொழிலை மேற் கொண்ட ஓர் சீவைணவரின் மகளான குமுதவல்லியாரை மணந்தவர். வைணவப்பற்று மிகுந்த இவ்வாழ்வார், அரச னுக்குச் சேரவேண்டிய தொகைகளைக்கொண்டு வைணவ அடியார்கட்குணவளித்து வந்தனர். நாளடைவில் இவரது செயல் வெளிப்பட அரசன் இவரைக் காவலில் இட்டா னென்றும், பின்னர் திருமாலின் அருளால் இவர் பெரும் பொருள் கச்சியிற் பெற்று, அரசற்குரிய கடனைத் தீர்த் தனர் என்றும் குருபரம்பரை முதலிய வரலாறுகள் கூறும். இந்நிகழ்ச்சியின் பின்னரும் பொருள் முட்டுப்பாடு காரண மாக இவர் ஆறலைத்துப் பொருளீட்டி அப்பொருளைக் கொண்டு அடியாரை அமுது செய்வித்து வரு நாட்களில் ஓர் நாள் திருமணங்கொல்லையென்ற ஊர்ப்புறத்தில்

ஒருவர் தமது மனைவியுடன் வரக்கண்டு, தமது பரிவாரங்களுடன் சென்றெதிர்த்துப் பொருளைக் கவர்ந்து மூட்டையாகக் கட்டியெடுத்துச்செல்ல எழும்போது, மூட்டையைத் தூக்கமாட்டாமல் வருந்தி, அம்மறையவரை நோக்கி "நீர் ஏதோ மந்திரம் செய்தீர்" என்று கூற, அவர் "ஆம், அந்த மந்திரத்தை உமக்கும் உபதேசிக்கின்றேன்" என்று கூறி ஓதிய அளவில், வாட்கலிகன்றியார் ஞானம் பெற்றுத் திருமால் மீது பல பாசுரங்களைப் பாடினர் என்ப. ஆழ்வார்களைப்பற்றிக் கூறும் திவ்யசூரி சரிதம், இவ்வாறு வழிப்பறி செய்யப்பட்டவர் ஸ்ரீ ஆண்டாளை மணம் செய்து வந்த திருவரங்கப் பெருமானே என்றும், இவ்வாழ்வார்க்குபதேசிக்கப்பட்டது "திருவெட்டெழுத்"தென்றும் கூறும்.

இப்பெரியாரது பாசுரங்களிலிருந்து இவரது வாழ்க்கையைப்பற்றிய பல செய்திகளை அறியலாம்.

இவர் ஆலி நாட்டுக்கும், திருமங்கை, குறையல் என்ற திருப்பதிகட்கும் தலைவர் என்றும்,[1] இவர்க்குக் கலிகன்றி முதலாகப் பல திருநாமங்கள் உண்டென்றும்,[2] அமரில் போர் செய வல்ல யானைப்படை, குதிரைப்படைகளைப் படைத்தவர் என்றும்,[3] பெருங்கொடையாளியென்றும்,[4]

---

1. கூரணிந்த வேல்வலவனாலிநாடன், மங்கையர்கோன் குறையலாளி (பெரியதிரு. 4, 4, 10); மங்கைவேந்தன் (ஷை 1, 3, 10); ஆலிநாடன் (7, 3, 10); புலமங்கைக்குலவேந்தன் (6, 6, 10); வயலாலி நன்னுடன், மங்கையர் தலைவன் (9, 8, 10).

2. அருண்மாரி யரட்டமுக்கி யடையார்சீயம் பரகாலன் கலியன் (ஷை 3, 4, 10); கலிகன்றி ஷை (3, 2, 10).

3. அமரிற் கடமாகளியானை வல்லான் (2, 4, 10); கடமாருங் கருங்களிறு வல்லான் வெல்போர்க் கலிகன்றி (2, 5, 10); ஆடன்மா வலவன் (5, 8, 10); வாமான்றேர்ப் பரகாலன் (7, 4, 10); ஆலுமாவலவன் கலிகன்றி (9, 10, 10).

4. காரார் புயற்கைக் கலிகன்றி (3, 2, 10); அருண்மாரி (4, 2, 10).

திண்ணிய தோள் வலி மிக்கார் என்றும்,[5] தேர்ப்படை காலாட்படைகளையுடையார் என்றும்,[6] வேல் வல்லார் என்றும்,[7] போர்த்திறம் வாய்ந்த பெருவீரர் என்றும்,[8] செந்தமிழ்ப் புலமை வாய்ந்த சீரியோரென்றும்,[9] திரு மங்கையென்பது பல மாடமாளிகைகள் நிரம்பிய பெரும் பதியென்றும்,[10] இவரது பாசுரங்களினின்றும் அறியப் படும். இவர் திருமால் அடிமையிற் சிறந்து விளங்கிய அடியாரென்றும், மறந்தும் புறந்தொழா மாண்புடை யாளர் என்றும் பின்வரும் அவரது திருவாக்கினைக் கொண்டே தெளியலாம்.[11] இப்பெரியார் திருமாற்கே பரத்வம் கூறுவர். அவரது அவதாரங்களையும், அவற்றில் அவர் நிகழ்த்திய அரும்பெருஞ் செயல்களையும் நயம்படப்

---

5. கன்னவிலும் தோளான் (6, 8, 10); கன்னிர மால்வரைத் தோட்கலிகன்றி (7, 2, 10).

6. வாமான்றேர்ப் பரகாலன் (7, 4, 10); வாட்டிறட்டானை மங்கையர் தலைவன் (10, 9, 10).

7. கூரணிந்த வேல்வலவன் (4, 4, 10); கூரார்ந்த வேற் கலியன் (3, 4, 10).

8. மருவலர்தமுடல்துணிய வாள்வீசும் பரகாலன் (3,9,10); அடையார் சீயம் (3, 4, 10).

9. கோவைத்தமிழாற் கலியன்சொன்ன (5,2,10); சொன்ன வின்றமிழ் நன்மணிக்கோவை (7, 7, 10); கலையார் பனுவல் வல்லான் கலியன் (9, 6, 10); கற்றநூல் கலிகன்றி (10,1,10).

10. திண்ணார் மாடங்கள் சூழ் திருமங்கை (1, 9, 10).

11. நறையூர் நம்பிக்கென்றும் தொண்டாய கலியன் சொன்ன (7, 1, 10); பேரருளாளன் பெருமை பேசக் கற்றவன் (9, 6, 10);. நேசமறிய வுமக்கே யாளாய்த் திரிகின்றோமுக்கு (4, 9, 4); வேம்பின் புழுவேம் பன்றி யுண்ணாது அடியேன் நான் பின்னுமுன் சேவடியன்றி நயவேன் (10, 8, 7); மற்றோர் தெய்வமெண்ணேன் உன்னையென் மனத்து வைத்துப்பெற்றேன் பெற்றதுவும் பிறவாமை (6, 3, 5); கூறேன் நெஞ்சு தன்னால் குணங்கொண்டு மற்றோர்தெய்வம், தேறேனுன்னையல்லால் திரு விண்ணகரானே (6, 3, 7).

பாராட்டுவர்.[12] பிரமன், சிவபிரான், முருகன் இவர்களுக்கு மேலான தெய்வம் திருமால் என்பர்.

'' பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியான் ஆழியான் ''
(1, 1, 4)

'' ஒருவன்றானே யிருசுடராய் வானாய்த்தீயாய் மாருதமாய்
மலையா யலைநீர் உலகனைத்தும் தானாய் '' (1, 5, 7)

'' முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த
புனிதன் '' (2, 2, 8)

'' உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா
யுலகுய்ய நின்றானை '' (2, 5, 3)

'' காரணங்களாலுலகம் கலந்தங்கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானை '' (2, 10, 10)

'' மூவராகிய ஒருவனை '' (3, 1, 10)

'' யாவருமா யாவையுமா யெழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தி '' (4, 1, 2)

'' வானாடும் மண்ணாடும் மற்றுமுள்ள பல்லுயிரும்
தானாய வெம்பெருமான் '' (4, 1, 3)

'' ஓரெழுத் தோருரு வானவனே '' (6, 1, 5)

'' தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகும் தானாய் வானாய்த்
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்
தானாயனையினான் சரணென்றுய்வீர் '' (6, 6, 6)

---

12. 'பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியான்' (1, 1, 4); 'கலையுங் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்து போய்ச் சிலையும் கணையும் துணையாகச் சென்றான்' (1, 5, 1); 'கொண்டாய் குறளாய் நிலமீரடியாலே' (1, 10, 4); 'பந்தார் குழலாள் பாஞ்சாலி கூந்தன்முடிக்கப் பாரதத்துக், கந்தார்களிற்று கழன் மன்னர் கலங்கச் சங்கம் வாய் வைத்தான்' (6, 7, 8); 'கான வெண்கும் குரங்குமுசுவும் படையா வடலரக்கர், மானமழித்து நின்ற வென்றி யெம்மான்' (6, 10, 6); 'மீனோடாமை கேழலரி குறளாய் முன்னு மிராமனாய்த் தானாய்ப், பின்னு மிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியு மானான் றன்னை'; 'பாராளன் பாரிடந்து பாரையுண்டு பாருமிழ்ந்து பாரளந்து பாரையாண்ட பேராளன்.'
(திருநெடுந். 20)

" பிறையாரும் சடையானும் பிரமனுமுன் தொழுதேத்த
இறையாகி நின்றான் " (6, 9, 9)

" ஆடுதாமரையோனும் மீசனுமமரர்கோனும் நின்றேத்தும்
வேங்கடத்தாடு கூத்தனை " (2, 1, 9)

" உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறா
யுலகுய்ய நின்றானை " (2, 5, 3)

" பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத் தன்உந்தியிலே தோற்றுவித்து " (3, 4, 9)

பெருமான் நப்பின்னையை மணப்பதற்காக ஏழு விடைகளை யடர்த்தது (1, 4, 6), விளங்கனி யெறிந்தது (1, 6, 9), பேய்முலை யுண்டது, மருதிடந்தது (1, 3, 1; 1, 8, 3), குன்றெடுத்தது (1, 8, 3), அங்கையாலடிமூன்று நீரேற்றது (1, 8, 5), அன்னமாயன்றங்கருமறை பயந்தது (5, 7, 3), ஆழியாலன்றங்காழியைமறைத்தது (5, 7, 8), அந்தணன் பிள்ளையை யந்நாளளித்தது (6, 5, 7) முதலிய அரும் செயல்கள் பல இவரது பாசுரங்களில் ஆங்காங்குக் குறிக்கப் பெற்றுள்ளன. இவர் ஏனைய தெய்வங்களைக் குறித்துப் பேசிய விடங்கள் பல. அவை பின்வருமாறு :—

" புரமெரிசெய்த சிவனுறு துயர்களை தேவை " (2, 3, 1)

" அரன்கொண்டு திரியுமுண்டமது நிறைத்தவன் கண்சாப
மதுநீக்கும் முதல்வனவன் " (3, 9, 3)

" இந்துவார்சடை யீசனைப்பயந்த
நான்முகனைத் தனனெழிலாரும்
உந்திமாமலர் மிசைப்படைத்தவ
னுகந்தினி துறைகோயில் " (பெரியதிரு. 4, 2, 9)

" இறையான் கையினிறையாத முண்டம் நிறைத்த
வெந்தை " (5, 1, 8)

" வெந்தாரென்பும் சுடுநீறு மெய்யிற்பூசிக் கையகத்தோர்
சந்தார்தலைகொண் டுலகேழும் திரியும் பெரியோன்றான்
எந்தாய் சாபந்தீரென்ன இலங்கு" (1, 5, 8) [சென்றென்

" பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க்கிடம் "
(2, 6, 9)

" ஊன்முகமார் தலையோட்டூணொழித்த வெந்தை" (3, 4, 2)

" யாவருமா யாவையுமா யெழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தி" (4, 1, 2)

" சடையானோடே வடல்வாணன் தடந்தோள் துணித்த
தலைவன் " (5, 1, 7)

" தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்
துக்கம் துடைத்த துணைவனூர்" (5, 2, 6)

" ஊனமர் தலையொன்றேந்தி யுலகெலாம் திரியுமீசன்
ஈனமர் சாபம்நீக்கா யென்னவொண் புனலையீந்தான்"
(5, 9, 4)

" குழல்நிறவண்ண நின்கூறுகொண்ட தழல்நிறவண்ணன்
நண்ணார் நகரம்விழ நனிமலைசிலை வளைவுசெய்து
அங்கழல்நிற அம்பதுவானவனே " (6, 1, 3)

" வள்ளிகொழுநன் முதலாய மக்களோடு முக்கணான்
வெள்கியோட விறல்வாணன் வியன்தோள் வனத்தைத்
துணித்தான் " (6, 7, 6)

" வானார் மதிபொதியுஞ் சடைமழுவாளியொ டொருபால்
தானாகிய தலைவனவ னமரர்க்கதிபதி" (7, 9, 4)

இம்மேற்கோள்களிலிருந்து சிவபிரான் திரிபுரமெரித்த ஞான்று, திருமால் அம்பாக வுதவிய வரலாறும், பிரமன் தலையைக் கிள்ளியதாற் றன் கரத்தொட்டிய கபாலத்தை ஒண்ணுதிரப் புனலால் நிறைத்துச் சிவபிரான் சாபத்தைத் திருமால் போக்கிய கதையும், அரி தனதுடலிற் சிவபிரானைக் கொண்டதும், தன் மகள் உழையின் பொருட்டு வாணன் எதிர்த்து வர அவனுக்குப் பரிந்துதவி வந்த முருகன், சிவபிரான் முதலியவர்களை நாராயணமூர்த்தி வென்று துரத்தியதும், திருமால் நான்முகனைப் பெற அந்நான்முகன் சிவபெருமானை யீன்றதாக வழங்கும் சரிதையும், திருமால் எல்லாப் பொருள்களாகவும், அயனாதி மூவர்க்கும் முதலாய மூர்த்தியாகவும் உளான் என்ற செய்தியும் பிறவும் அறியக்கூடும். திருமாலுருவிற் பாதியெனச் சிவபிரானைக் கூறினர் இவர். சைவர்கட்கும் இஃது ஓர் வகையில் உடன் பாடேயெனினும், அவர்கள் திருமால்

பராசத்தியேயென்றும், அவர் சிவபிரானது மேனியிற் பாதியென்றும் கொள்வர். "அரியலாற் றேவியில்லை ஐயனையாறனுற்கே" என்றார் அப்பரடிகள். திருமால் மோகினிப்பெண் வடிவாகத் தோன்றி வானவர்க்கமு தூட்டியதை, "வானவரைப் பெண்ணாக்கி யமுதூட்டும் பெருமானார்" எனக் கூறுவர் இவ்வாழ்வார். இறைவனை "இருக்கிலின்னிசையானவனே" (6, 1, 7) என்றும் "ஓரெழுத்தோருருவானவனே" யஃதாவது பிரணவ ஸ்வ ரூபியே என்றும் புகழ்வர். திருமால் பத்தியில் ஈடுபட்டு அவனுக்குத் தான் தொண்டு பூண்ட தன்மையையும், தன்னை அவன் ஆட்கொண்ட பெருமையையும், அழியும் மாலைத்தாகிய பல்வகை யுறவினைக் காட்டிலும், என்றும் அழியாது பவக் கடலினின் றேற்றவல்ல அழியா உற வாகிய கோவிந்தனது அருட்டிறத்தையும், பலவிடங்களி லும் உள்ளுருகிப் பாடியுள்ளார். தான் இன்பத் துறையில் எளியவனாகிப் பலவாறு வருந்தி நின்றதும் பலவிடங்களி லும் குறிக்கப்பெறும். "வாடினேன் வாடி" என்று தொடங் கும் பாசுரத்தில், மகளிர் கலவியே கருதி அவர் ஓடியதும் பின்னர் இறைவன் அருளைத் தேறித் தெளிந்ததும் அழகு படக் கூறுவர். இறைவனை "எம்பிரானெந்தை யென்னு டைச் சுற்றமெனக்கரசென்னுடைவாணாள்" (1, 1, 6) என்பர். மற்றும்,

"சிலம்படி யுருவிற் கருநெடுங் கண்ணார்
திறத்தனா யறத்தையே மறந்து
புலம்படிந் துண்ணும் போகமே பெருக்கி" (1, 6, 2)

என்ற வரிகளும் இவர் மகளிர் வலையிற் சிக்கிக் கலங்கிய தைத் தெரிவிக்கும். இப்பெரியார் இளமை, செல்வம், யாக்கை யென்ற மூன்றின் நிலையாமையையும் நன் குணர்ந்து, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண் டும் என்ற கருத்தினராய்ப் பிறர்க்கும், அந்நிலையாமையை வற்புறுத்தி யருளிய பாசுரங்கள் பலவாகும்.

"உறிகள்போல் மெய்ந்நரம்பெழுந் தூன்தளர்ந்துள்ள
மெள்கி" (1, 3, 3)

'' பண்டுகாம ரானவாறும் பாவையர்வா யமுதுண்ட
வாறும்'' (1, 3, 5)

'' ஊனிடைச் சுவர்வைத் தென்பு தூண் நாட்டி
உரோமமேய்ந் தொன்பதுவாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போ துன்றன்
சரணமே சரணம்'' (1, 6, 9)

'' கனிசேர்ந் திலங்குநல் வாயவர் காதன்மை விட்டிடக்
குனிசேர்ந் துடலம் கோலில்தளர்ந் திளையாதமுன்''
(1, 4, 9)

'' ஆவியேயமுதே யெனநினைந் துருகியவரவர் பணைமுலை
துணையா.........பழுதுபோ யொழிந்தன நாள்கள்''
**(1, 1, 2)**

என்ற வரிகளைக் காண்க.

'' என்னுவ தெத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்,
மன்னு மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்''

ஆகவே, விண்ணவர் தாதையாகிய மண்ணளந்த மாயனையே பாடுமின் என்று பணித்தார் ஒரு பெரியார். அவர் போன்றே இவ்வாழ்வாரும்,

'' இற்பிறப்பறியீ ரிவரவ ரென்னீ
ரின்னதோர் தன்மை யென்றுணரீர்
கற்பகம் புலவர் களைக ணென் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்'' (1, 1, 7)

என்பர். காளைப் பருவத்தில் தான்றோன்றியாகக் கயவருடன் திரிந்துழந்ததையும் பின்னர்ப் பெருமான் அருளால் தாமுய்ந்ததையும் பல பாசுரங்களில் குறித்துச் செல்வர்.

'' கள்வனே னுவேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தேன்'' (1, 1, 5)

'' கோடிய மனத்தாற் சினத் தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடும் திளைத்திட்
டோடியு முழன்று முயிர்களே கொன்றேன்
உணர்விலேன்'' (1, 6, 6)

'' நானே நானுவித நரகம் புகும் பாவம் செய்தேன்''
(1, 9, 2)

" கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோ
ளொன்றிலாமை யிஞல்" (1, 9, 3)

" தெரியேன் பாலகனுய்ப் பல தீமைகள்
செய்துமிட்டேன் " (1, 9, 7)

என்ற வரிகள் இவரது வாழ்க்கை வரலாற்றின் சிலபகுதிகளை விளக்கக்கூடும். வேட்டம் செய்துயிருண்ணுதல் மட்டுமன்றி ஆறலைத்துப் பொருளீட்டியதாக இவர் சரிதையிற் காணப்படும். திருவெட்டெழுத்தின் பெருமை அழகுபட இவரால், பெரிய திருமொழி முதற்பத்துத் தொடக்கத்திற் கூறப்பட்டது. இறைவனே,

" வேதத்தை வேதத்தின் சுவைப்பயனே, விழுமிய முனிவரர்
விழுங்கும் கோதிலின் கனியை என்பர் " (2, 2, 3)

" கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை "

என்ருர் பிறரும், மற்றும்,

" காரணங்க ளாலுலகம் கலந்தங் கேத்தக்
கரந் தெங்கும் பரந்தானே " (2, 10, 10)

என்று, திருமாலின் எங்கும் நிறைந்த நிலேயை யியம்புவர்.

" சிந்தை தன்னுள் நீங்கா திருந்தே திருவே "

" நந்தா விளக்கின் சுடரே "

" தாம் தம் பெருமை யறியார் தூது
வேந்தர்க் காய வேந்தர் " (5, 2, 1)

" சேயனு யடியார்க் கெளியன் " (5, 7, 9)

" கடன் மல்லேக் கிடந்த கரும்பே " (7, 1, 4)

" என்னே யுள்ளங் கொண்ட கள்வா " (7, 2, 1)

" எம்மானு மெம்மனேயு மென்னேப்பெற் ருெழிந்த திற்பின்
அம்மானு மம்மனேயு மடியேனுக் காகிநின்ற
நன்மான வொண் சுடரே " (7, 2, 3)

" தாய் நினேந்த கன்றே யொக்க வென்னேயும்
தன்னேயே நினேக்கச் செய்து தானெனக்
காய்நினேந் தருள் செய்யு மப்பனே " (7, 3, 2)

" பண்ணினின் மொழியாய் நரம்பிற் பெற்ற
பாலேயாகி யிங்கே புகுந்து " (7, 3, 7)

"பத்தர்தா நுகர்கின்றதோர் கனியை" (7, 3, 8)

"நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்" (9, 9, 6)

"ஒரு நல் சுற்றமெனக் குயிரொண் பொருள்
வருநல் தொல்கதியாகிய மைந்தன்" (10, 1, 1)

"அந்தணனை யந்தணர்தஞ் சிந்தையானை"

"பாரும் நீரெரி காற்றினோ டாகாசமு மிவை யாயினான்
பேரு மாயிரம் பேச நின்ற" (1, 8, 7)

"முனிவன் மூர்த்தி மூவராகி வேதம்
விரித்துரைத்த புனிதன்" (2, 2, 8)

இவ்வாறு கற்றவர் உண்ணும் கனிபோல் வான் என்றும், அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் உள்ளவன் என்றும், அடியார் உள்ளத்திலேயே எஞ்ஞான்றும் குடியிருப்பவன் என்றும், ஞானவிளக்காயுள்ளான் என்றும், தன் பெருமை தானறியாத் தன்மையன் என்றும், நினையார்க்குச் சேய்மையன் என்றும், நேசமுடன் நினைவார்க்கு எளியன் என்றும், அவன் கரும்பு போன்றடியார்க்குத் தித்திப்பவன் என்றும், அன்பர் உள்ளத்தைக் கவரும் கள்வன் என்றும், அவன் அன்னையும் அத்தனும் ஆவான் என்றும், பலபடத் திருமாலைப் புகழா நிற்பர் இவ்வாழ்வார்.

மற்றும் இப்பெரியார் அருளிச் செயல்களில் சிறந்த இயற்கை வருணனைகளைக் காணலாம். திவ்ய தேசங்களை வருணிக்கும்போது இன்றும் காணக்கூடிய பல இயற்கை நிகழ்ச்சிகளைக் கூறுவர். உதாரணமாக,

"ஆலிமா முகிலூர் தரவருவரை யகடுற முகடேறிப்
பீலி மாமயில் நடஞ் செயும் தடஞ்சுனைப் பிருதி"

என்பர்.

இவண் உயர்வு நவிற்சி யாதும் இல்லை. வானம் இடித்து மழை பொழிய மலைச் சிகரங்களில் அமர்ந்து மயில்கள் தோகை விரித்தாடும் பிரதி என்பது இதன்

பொருள். "கார் பெற்ற தோகையோ" என்றபடி காரைக் கண்டு களிப்பது மஞ்ஞையாகலின் இங்ஙனம் கூறினர். பின்னரும்,

"தாது மல்கிய பிண்டிவிண் டலர்கின்ற தழல்புரை
[யெழில் நோக்கிப்
பேதை வண்டுகள் எரியென வெருவரு பிரதி" (1, 2, 9)

என்று கூறுவர். அசோகின் மலர்கள் எரிபுரையு மாகலின், அதனைக் கண்டு வண்டுகள் அஞ்சும் என்ருர். அஞ்சும் திறனேக்கிப் பேதை வண்டுகள் என்ருர். அசோகமலர் தீவண்ணமாக விளங்குவது இன்றும் காணப்படும் காட்சி, அசோக மலரை வண்டுகள் மூசா வென்று கூறுவர் அறிஞர். வதரி யென்ற திவ்ய தேசத் தைப் புகழும்போது,

"விலங்கலிலுரிஞ்சி மேல் நின்ற விசும்பில் வெண்டுகிற்
கொடியென வரிந்து
வலந்தரு மணிநீர்க் கங்கையின் கரைமேல் வதரி"

என்பர்.

மலையிலிருந்திழிதரும் கங்கையின் வெள்ளிய அருவி வெண்டுகிற்கொடி போன்றிருந்த தென்ருர். கடன் மல்லையை வருணிக்கும்போது,

"புலன்கொள் நிதிக் குவையோடு புழைக்கை
மாக்களிற் றினமும்
நலங்கொள் நவமணிக் குவையும் சுமந் தெங்கும்
நான் றொசிந்து
கலங் களியங்கு மல்லைக் கடன் மல்லை"

என்பர். கடன்மல்லை ஒரு சிறந்த துறைமுகமாக இருந்த தாகலின், அங்கே வந்து இறக்குமதியான பல பண்டங் களை இங்கே குறித்தார். திருக்கோவலூர் என்னும் திவ்ய தேச வருணனை இயற்கைப் பொலிவுடன் ஒளிர்தல் காணலாம்.

"எழுந்த மலர்க் கருநீல மிருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்டச்
செழுந் தடநீர்க் கமலம் தீவிகை போல் காட்டும்
திருக்கோவலூர்"

என்றது காண்க.

"வரைசெய் மாக்களி றிளவெதிர் வளர்முளை யளை
மிகுதேன் றோய்த்துப்
பிரசவா ரிதன்னிளம் பிடிக்கருள் செய்யும் பிரதி"
(1, 2, 5)

"நூற்றிதழ் கொளரவிந்தம் நுழைந்த பள்ளத்
திளங் கமுகின்—பகுவாய் நண்டின்,
சேற்றளையில் வெண்முத்தம் சிந்துநாங்கூர்த்
திருத்தெற் றியம்பலத்து" (4, 4, 1)

என்ற இடங்களிலும் இயற்கை வருணனை காணலாம். தீவிகை என்பது விளக்கு. மற்றும்,

"கருங் கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்டச்
செருநிதிமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவலூர்" (2, 10, 7)

என்ற இடத்தும் இயற்கை வருணனையே யெழில் பெறக் காணலாம். சீராம விண்ணகரத்தைப் புகழும்போது, ஆழ்வார்,

"உழுசேயோடச்
சூன்முகமார் வளையளை வாயு குத்த முத்தைத்
தொல்குருகு சினையென்னச் சூழ்ந் தியங்க"

என்று கூறினர். ஒன்றை யொன்றாக மாறுபடக் கருதிய மயக்கவணியில் அமைந்த இச்செய்யுள் ஆராய்ந்து மகிழத்தக்கது. அதே பதிகத்தில்,

"அவ்வாயவாள் நெடுங்கண் குவளை காட்ட
அரவிந்த முகங்காட்ட அருகே யாம்பல்
செவ்வாயின் திரள் காட்டும் வயல் சூழ் காழிச்
சீராம விண்ணகரம்"

என்று அழகு மிளிரக் கூறுவர். தாம் தோன்றிய திவ்ய தேசமாகிய திருவாலியின் பெருமையைக் கூறும்போது,

" சோலை தலைக்கண மாமயில் நடமாட மழை முகில்போன்
றெழுந் தெங்கும்
ஆலைப் புகை கமழும் வயலாலி "

என்பர். இத்தலத்தும், இதனைச் சூழ்ந்துள்ள இடங்களிலும், இன்றும் கரும்பு மிகுதியாகக் காணலாம். கரும்பினை அடும் ஆலையினின்று மேல் எழும் புகை நீர் கொண்ட கார்மேகம்போல் தோன்றச் சோலைக்கணுள்ள தோகைமயில் ஆலும் என்று கூறியது உணர்ந்து மகிழ்தற்குரியது. திருக்கண்ணங்குடிப் பாசுரத்தில்,

" அன்னமென் கமலத் தணிமலர்ப் பீடத் தலைபுனலிலைக்
குடைநீழல்
செந்நெலொண் கவரி யசைய வீற்றிருக்கும்
திருக்கண்ணங் குடி"

அன்னமா மலரரவிந்தத் தமளியில் பெடையொடு மிளிரச்
செந்நெலார் கவரிக்குலை வீசும்
திருவெயிந்திர புரமே" (3, 1, 7)

என்றார். இங்கே செங்கால் மடவன்னம் தாமரையாகிய தவிசில் இலையாகிய குடைநிழலில், செந்நெற் கதிர்கள் சாமரம்போட, அரசுவீற்றிருப்பதாகக் கூறியதுணர்க. இன்னும் இவரது நூற்றுக்கணக்கான பாசுரங்களில், பல இயற்கை வருணனைகளைக் காணலாம்.

இனி, அப்பர், சம்பந்தர் முதலியோருடைய தேவாரத் திருப்பாட்டுக்களிற் காண்பதுபோல, இவரது பாசுரங்களிலும், புத்தர், சமணர் முதலிய பிற சமயத்தாரைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

" பொங்கு போதியும் பிண்டியு முடைய
பத்தர் நோன்பியர் பள்ளி" (2, 1, 5)

" துவரியாடையர் மட்டையர் சமண் தொண்டர்கள்
மண்டியுண்டு" (2, 1, 6)

" பிச்சச் சிறுபீலிச் சமண் குண்டர் முதலாயோர்
விச்சைக் குறை யென்னு மவ்விறையைப்
பிணியாதே" (2, 6, 5)

" துவரித்த வுடையவர்க்கும் தூய்மை யில்லாச்
சமணர்க்கும்" (5, 6, 8)

" மாசுடம்பில் வல்லமணர் தமக்கு மல்லேன்" (7, 4, 5)

" வெள்ளியார் பிண்டியார் போதியா
ரென்றிவ ரோதுகின்ற
கள்ள நூல் தன்னையும் கருமமன் றென்றுய்யக்
கருதினையேல்" (9, 7, 9)

என்ற வரிகளைக் காண்க. வெள்ளியார் - சுக்கிரன். அவரியற்றிய சுக்கிரநீதியும் பௌத்தத் திரிபிடகமும், சமணரது நூல்களும் இவண் குறிப்பிடப்பட்டன. இவற்றினின்று, புத்தர் போதிப் பத்தர் என்றும், சமணர் பிண்டி நோன்பியர் என்றும், துவராடையுடுப்பவர் என்றும், மழித்ததலையர் என்றும், மிக்குண்பவர் என்றும், மயிற் பீலிக் கையர் என்றும், மந்திர வித்தைகளில் நிபுணர் என்றும், மாசேறிய உடலினர் என்றும் அறியலாம்.

நிற்க, ஆழ்வார் தம்மைத் தலைவியாகப் பாவித்து இறைவனைத் தலைவனாக நினைந்து அகப்பொருட்டுறைகளில் கருத்துக்களை யமைத்துப் பாடிய அழகிய பகுதிகள் பலவுண்டு. அவைகள் கற்குந்தோறும் பெரிதும் இன்பம் பயப்பதுடன், பண்டைச் சங்க நூல்களில் ஆழ்வார்க்குரிய ஆழ்ந்த பயிற்சியையும் காட்டும். உதாரணமாக,

" ஓதிலு முன்பே ரன்றி மற்றோதா
ளுருகுநின் திருவுரு நினைந்து
காதன்மை பெரிது கையற வுடையள்
கயல் நெடுங்கண் டுயில் மறந்தாள்
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது" (2, 7, 5)

என்ற செவிலி கூற்றைக் காணலாம். தண்ணளி புரியாது பிரிந்த தலைமகனது பிரிவாற்றாது தலைவி வருந்திய நிலை மேலே காட்டப்பட்டது. மற்றும் திருவரங்கப்பத்தில்,

" பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும்
பாலூட்டாள் பாவை பேணாள்
வந்தானோ திருவரங்கன் வாரானோ

வென்றென்றே வளையுஞ் சோரும்
சந்தோகன் பௌழியன் ஐந்தழ லோம்பு
தைத்திரியன் சாமவேதி
அந்தோ வந்தென் மகளைச் செய்தனக
ளம்மனை மீரறிகிலேனே''

என்று பாடினர். இது செவிலி கூற்று. தன்னிடம் போந்து களவு முறையிற் புணர்ந்து பிரிந்த தலைவனது பிரிவாற்ருது வருந்திய தலைவியின் நிலையைக் கூறிய பாசுரம். தான் இயற்கையாக ஈடுபடும் விளையாட்டுக்களை மறந்து, திருவரங்கன் வரவையே யெதிர்நோக்கி நிற்கும் நிலையில் .தலைவிக்கு நேர்ந்த மெய்ப்பாடு இங்கே குறிக்கப் பட்டது. சந்தோகன் வேதம் ஒன்ருல் மட்டும் அறியப்படும் பரம்பொருள் என்ப. பௌழியன் இருக்கு வேதத்தாற் பிரதி பாதிக்கப்படும் கடவுள். தைத்திரியன் யசுர் வேதத்தில் தைத்திரிய சாகையைச் சேர்ந்தவன். நான்கு வேதங் களாலும் புகழப்படும் இறைவன் என்பது கருத்து. பிறிது ஓர் பதிகத்து,

'' பட்டுடுக்கு மயர்ந்திரங்கும் பாவை பேணுள்
பனிநெடுங் கணீர் ததும்பப் பள்ளிகொள்ளாள்
எட்டனைப்போ தென்குடங்கா லிருக்க கில்லாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கே யென்னும்
மட்டுவிக்கி மணிவண்டு முரலுங் கூந்தல்
மடமானை யிதுசெய்தார் தம்மை மெய்யே
கட்டுவிச்சி சொல்லென்னச் சொன்னுள் நங்கை
கடல் வண்ணரிது செய்தார் காப்பா ராரே''

இதுவும் செவிலி கூற்று. நற்ருய் கூற்றுமாம். தலைவி வருந்துவதைக் கண்ட தாய்மார் கட்டுவிச்சியென்ற குறி கூறுவோளை வினவ, அவள் தலைவியின் நோய்க்குக் காரணம் கூறியது. ஆழ்வார் திருவிந்தளூர் என்னும் திவ்ய தேசப் பத்தில்,

'' ஆசைவழுவா தேத்துமெமக்கிங் கிழுக்காய்த்தடியோர்க்
தேசமறிய வுமக்கேயாளாய்த் திரிகின்ருேமுக்குக் [குத்
காசினொளியில் திகழும்வண்ணம்காட்டீர் எம்பெருமான்
வாசிவல்லீ ரிந்தளூரீர் வாழ்ந்தேபோம்நீரே'' (4, 9, 4)

'வாழ்ந்தேபோம்நீரே' என்ற தொடர் "வாழ்ந்து போதீரே" என்ற சுந்தரமூர்த்திகளின் சொற்றொடரை நினைவுறுத்துகின்றது.

எவ்வுயிரும் இறைவனை யடைதல் வேண்டின் அவன் அருளாலேயே அடைதல் வேண்டும் என்பர். "அவனரு ளாலே அவன்றாள் வணங்கி" என்பது திருவாசகம். ஆழ்வாரும்,

"ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே"

என்ற வரிகளில் இக்கருத்தை யமைத்துள்ளனர். பசு தன் கன்றை நினைவது போன்று இறைவனை மறவாதழைப்ப தாகக் கூறுவர்.

"கறவா மடநாகு தன்கன் றுள்ளினாற்போல்
மறவா தடியே னுன்னையே யழைக்கின்றேன்" (7, 1, 1)

என்றது காண்க. நாவலர் போற்றும் நலத்தகையாகிய கம்பர் தமது இராமாயணத்தில்,

"தாய்தன்னை யறியாத கன்றில்லைத் தன்கன்றை
யாயுமறியும்"

என்றார். பிறிதோரிடத்தில் ஆழ்வார்,

"தாய்நினைந்த கன்றேயொக்க வென்னையும்
தன்னையே நினைக்கச் செய்து தானெனக்
காய்நினைந்தருள் செய்யுமப்பனை"

என்றார். செந்தமிழ் நாட்டில் வழங்கும் பல பழமொழிகள் இவரது பாசுரங்களில் அமைத்திருப்பதைக் காணலாம்.

"இருபா டெரிகொள்ளியி னுள்ளெறும்பேபோல்
உருகா நிற்கும்" (11, 8, 4)

என்ற வரிகள், "இருதலைக்கொள்ளியினுள் ளெறும் பொத்து" என்ற திருவாசக வரிகளை நினைவுறுத்தும். இருதலைக்கொள்ளியின் எறும்பென்றும் வழக்குண்டு. இங்கே ஈரிடத்தும் 'உள்ளெறும்பு' என்று காணப்படுவது

ஆராயத்தக்கது. கொள்ளி குழாய் வடிவினதென்றும், அதன் இருபுறமும் எரியென்றும், அதன் உள்ளே அகப் பட்ட எறும்பிற்குத் தப்பும்வழி யின்றென்றும் கூறிய வாறு. குழாய் வடிவில்லாத வெறுங்கோலெனின் எறும்பு கீழ் வீழ்ந்துய்தல் கூடும். உள்ளெறும்பிற்கு அஃதியலாமை காண்க. மற்றும்,

" வெள்ளத் திடைப்பட்ட நரியினம்போல
உள்ளந் துளங்கா நிற்பேன்" (11, 8, 5)

என்றும்,

" இடைய னெறிந்த மரமே யொத்திராமே
அடைய வருளா" (11, 8, 6)

யென்றும்,

" வேம்பின் புழுவேம் பன்றி யுண்ணாது" (10, 8, 7)

என்றும்,

" இரும்புண்ட நீர்போல்"

என்றும்,

" ஊமனார்கண்ட கனவுபோல்"

என்றும் கூறுவர். இவைகள் அவரது விரிந்த அறிவையும், உலகியலுணர்வையும் காட்டும்.

ஆழ்வார் தமது திருச்சித்திரகூடப் பதிகத்தில், அங்குக் கோயில் கொண்டுள்ள கோவிந்தராசப்பெரு மாளைத் தில்லை மூவாயிரவரும் பணிந்தனர் என்ப. அவர்கள் சைவப்பற்றுள்ளவரேனும், திருமாற்கும் வணக் கம் செலுத்தினர் என்ற செய்தி அறிந்து மகிழத்தக்கது,

" மூவாயிர நான்மறை யாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதித்
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம்" (3, 2, 8)

என்றது காண்க. ஆழ்வாரடியார் பத்தியிற் சிறந்தவர் என்பதும், அவர்களை இறைவனாகவே கருதி வழிபட்டனர்

என்பதும் பின்வரும் வரிகளால் தெற்றென விளங்கும்.

"தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார்
காண்மினென் தலைமேலாரே" (7, 4, 1)

"எம்பெருமான் தாள்தொழுவா ரெப்பொழுது
மென்மனத்தே யிருக்கின்றாரே" (7, 4, 2)

"பெருமான் உம்பராளும்
பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும்
பிரிகிலேனே" (7, 4, 4)

"எம்பெருமான் தாளைநாளும்
சிந்திப்பார்க் கென்னுள்ளம் தேனூறியெப்பொழுதும்
தித்திக்குமே" (7, 4, 5)

இவ்வரிகளிலிருந்து திருமாலடியாரிடம் இப்பெரியார் அன்பு செலுத்தியமை தெளியப்படும். "தேசிகர் தம்மையும் சிவநேசர் தம்மையும் ஈசனெனவே உளத்திலெண்" என்ற சைவநெறி கூறியாங்கு, இவரும் அடியாரையே தெய்வமெனப் போற்றி வந்தனர். திருவேடம் இறைவனுருவே என்ற கொள்கையினர்.

நிற்க, தலைவனைப் பிரிந்த தலைவி அன்னம், கிளி, நாரை, வண்டு முதலியவற்றை விளித்துத் தலைவன்பால் தூது விடுவதாகப் பெரியோர் பாசுரங்கள் அமைப்பர். சங்கப் பனுவல்களிலும், சைவ சமயாசாரியர்களின் திருப்பாட்டுக்களிலும், இத்தகைய முறையைக் காணலாம். ஆழ்வாரும் இம்முறையை மேற்கொண்டு பாடியுள்ளார்.

"தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே
பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரிவெஞ் சிலையானுக் கென்னிலைமை யுரையாயே"
(3, 6, 1)

இது வண்டுவிடு தூது.

"கூர்வாய சிறுகுருகே குறிப்பறிந்து கூறாயே" (3, 6, 3)

இது நாரைவிடு தூது. அஃறிணைப்பொருள்களேனும் "கேட்குநபோலவும் கிளக்குநபோலவும், அஃறிணை மருங்கினு மறையப்படுமே" என்ற இலக்கணம் பற்றி இவ்வாறு கூறுவது மரபு. இவர் செங்கால் மடநாரையை நோக்கித் தனது அவச நிலையைத் திருக்கண்ணபுரம் திருமாற்குக் கூறினுல், பின்னர் "பைங்கான மீதெல்லாம் உனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன் தந்தால், இங்கே வந்தினிதிருந்துன் பெடையுநீயு மிருநிலத்தி லினிதின்பமெய்தலாமே" என அணிபெறக் கூறுவர்.

இவர் சிறந்த தமிழன்பர். செந்தமிழில் ஆழ்ந்த பற்றுள்ளவர் என்பது இவர் பாசுரங்கள் கொண்டு இனிது தெளியப்படும்.

"செஞ்சொலா லெடுத்த தெய்வ நன்மாலை" (1, 1, 10)

"கலியனொலி செய்த தமிழ்மாலை" (1, 5, 10)

"இருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன்" (1, 7, 10)

"கலிகன்றி வண்டமிழ்ச்செஞ் சொன்மாலைகள்"(1, 8, 10)

"பண்ணர் பாடல் பத்தும்" (1, 9, 10)

"தண்டமிழ் செய்மாலை யீரைந்தும்" (2, 2, 10)

"இன்னிசையாற் சொன்ன செஞ்சொன்மாலை"(2, 8, 10)

"பாவுதண்டமிழ்ப் பத்திவை', (3, 1, 10)

"சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்" (3 4, 10)

"சங்கமலி தமிழ்மாலை" (3, 9, 10)

"பண்ணுளார்தரப் பாடியபாடல்" (4, 2, 10)

"கோவைத்தமிழாற் கலியன்சொன்ன" (5, 2, 10)

"கலியன் செஞ்சொலால் மொழிந்தமாலை" (5, 9, 10)

"கலியன் ஒலி" (6, 8, 10)

"வாமான்தேர்ப் பரகாலன் கலிகன்றி யொலிமாலை
கொண்டு தொண்டீர்
தூமாண்சேர் பொன்னடிமேற் சூட்டுமின்னும்
துணைக்கையாற் றெழுதுநின்றே" (7, 4, 10)

"சொன்ன வின்தமிழ் நன்மணிக்கோவைத் தூயமாலை"
(7, 7, 10)

"கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனென்று
காதலாற் கலிகன்றி யுரைசெய்த
வண்ணவொண் டமிழொன்பதோ டொன்றிவை
வல்லரா யுரைப்பார் மதியம்தவழ்
விண்ணில் விண்ணவராய் மகிழ்வெய்துவர்
மெய்ம்மை சொல்லின் வெண்சங்கமொன் றேந்திய
கண்ண நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள்தானே" (7, 10, 10)

"கலியன் தமிழிவை விழுமிய விசையினொ
டொலிசொலு மடியவ ருறுதுய ரிலரே" (8, 7, 10)

"பொங்குமாவலவன் கலிகன்றி
புகன்ற பொங்கத்தங் கொண்டு இவ்வுலகில்
எங்கும் பாடிநின் றுடுமின் தொண்டீர்
இம்மையே யிடரில்லை யிறந்தால்
தங்குமூ ரண்டமே கண்டு கொண்மின்" (10, 2, 10)

என்ற வரிகளைக் காண்க. சம்பந்தர், அப்பர் முதலிய சமயாசாரியர் போன்றே ஆழ்வாரும் பதிகத்தின் திருக் கடைக் காப்புத் தோறும் தமது பெயரை அமைப்பர். தமது பாசுரங்களைச் செந்தமிழ்ப் பாடல்கள் என்றும், இன்னிசையோடு கூடியன என்றும், அவை சங்கத் தமிழ் என்றும், அவற்றைக் கற்பதால் மக்கள் அடையும் பயன் இன்ன இன்னவென்றுங் கூறுவர். அம்மட்டோ தமது பாடலின் இனிய கருத்தையறிய விருப்பமுண்டெனில், திருமாலையும் தம்மிடம் வந்து கற்குமாறு அழைப்பர்.

"கண்ண நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள்தானே"

என்றது காண்க. சங்கத் தமிழ் என்று அவற்றைக் கூறியது கொண்டு ஆழ்வாரது சங்க நூற் பயிற்சியும், அவர்க்கு அந்நூற்கண் உள்ள பேரன்பும் வெளிப்படும்.

இனி, தொல்காப்பியம் செய்யுளியற்கண்,

"விருந்தேதானும்,
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய். 239)

என்று கூறப்பட்டுள்ளது. அதற்குப் பேராசிரியர் "விருந்துதானும் புதிதாகத் தொகுக்கப்படும் தொடர்நிலை மேற்று என்றுரை கூறி மேலும் "புதிதாகத் தாம் வேண்டியவாற்ருற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினேர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல்லுப" என்றெழுதினர். செந்தமிழில் 96 வகைத் தனிப் பிரபந்தங்கள் பிற்காலத்துப் பாட்டியல்களிற் பேசப்படுகின்றன. அவற்றில் பிள்ளைத்தமிழ், கலம்பகம், உலா முதலியனவும் அடங்கும். இப்பொழுது வழங்குகின்ற பிள்ளைத்தமிழ்கள் பெரியாழ்வார், திருமங்கைமன்னன் முதலான பெரியார்களின் அருளிச் செயல்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன என்று ஒருவாறு கூறலாம். முதன்முதலாகப் பிள்ளைத்தமிழ் இலக்கணம் நன்கமைதர இயற்றப்பட்ட நூல், நமக்குக் கிடைத்த அளவில், கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தன் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் ஆகும். அதன் பின்னர் சேக்கிழார்பெருமான் தமது ஆளுடைய பிள்ளையார் புராணத்தில் சம்பந்தப்பெருமானுடைய பிள்ளைப்பருவத்தை வருணிக்குங்கால், பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவத்தையும் அமைத்துப்பாடுகின்ருர். அம்புலிப்பருவம் என்பது அப்பருவமீரைந்துள் ஒன்று. இதற்கு ஆதாரம் சங்க நூல்களிலேயே காணலாம். "மறப்புலியுரைத்தும் மதியங்காட்டியும்" என்பது புறப்பாட்டு (160). இளம் சிருர்கள் உணவுண்ண மறுப்பினும், சிறு குறும்பு செய்யினும், மதியங்காட்டுவது பழந்தமிழ் மரபு. பெரியாழ்வார் தமது பாசுரங்களில் காப்பு, தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி, தளர்நடை முதலிய பருவங்களைக் கையாண்டுள்ளனர். திருமங்கையாழ்வாரும் தமது பாடல்களில், சிலவற்றைக் கைக்கொண்டுள்ளனர்.

"ஓங்கோத வண்ணனே சப்பாணி
ஒளிமணி வண்ணனே சப்பாணி"

என்றது காண்க. மற்றும் "பொங்கத்தம் பொங்கோ, குழமணிதூரம்" என்ற மகுடங்களைக் கொண்ட இனிய புதிய

பாடல்களையும் இப்பெரியாரது பாசுரங்களிற் காணலாம்.

ஆழ்வார் 10-வது பதிகத்தில், பறவைகளை நோக்கி மாயனை அழைக்குமாறு கூறும் பாடல்கள் மிகவும் இன்புறுத்துவன. செம்போத்து, காகம், குயில், கிளி, கோழி முதலிய பறவைகளை முன்னிலைப்படுத்தித் தலைவி கூறுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. இப்பகுதியில்,

"கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார்பூங்குழல் மாதவனை வரக்
கொட்டாய் பல்லிக்குட்டி"

என்ற பாடல் மிகவும் சுவையுள்ளதொன்று. பல்லியின் சொற்குப் பயன் கொள்வது பழந்தமிழ் நூல்களிலேயே காணலாம். "பல்லியும் பாங்கொத்திசைத்தது, நல்லெழிலுண்கணுமாடுமாலிடனே" என்பது பாலைக்கலி. "பல்லியின் சொல்லொரு சொல்லெனக் கொள்வரிப் பாசுரத்தே" என்பது திருவாய்மொழி. இந்தப் பாசுரம், "தலையே நீ வணங்காய்" என்ற ஆளுடையரசினது திருவங்கமாலைப் பாசுரம்போன்றுள்ளது உணரத்தக்கது.

## பெரும்புலவர் வரிசையில் ஆழ்வார்க்குரிய இடம்

இப்பெரியார் தெய்வத்தன்மை வாய்ந்தவரேனும், செந்தமிழ்ப் பாக்களியற்றி யருளியவகையில், சிறந்த புலவருமாவர். சங்க நூல்களிலும் முதலாழ்வார்கள், பெரியாழ்வார் முதலியோருடைய அருளிச் செயல்களிலும் மிகவும் ஈடுபட்டவர். தமது பாசுரங்களைச் சங்கத்தமிழ் என்று கூறுவது கொண்டே அவர்க்குச் சங்கச் சான்றோர்களின் பாட்டுக்களில் இருந்த அன்பும் ஆழ்ந்த பயிற்சியும் புலனும். "முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோற் போற்றும் புலவர்பெருமான்களில் இவரும் ஒருவர். இவரது பாசுரங்களின் கருத்துக்களையும் தொடர்களையும் இவர் காலத்துக்குப் பிற்பட்ட நூல்களிலும் காணலாம்.

"என்னை னென்னை யென்ன லல்லால்
என்னறிவன் ஏழையேன்" (திருநெடுந். 10)

என்பது.

"என்னை யென்னை யென்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே"

என்பது அப்பர் திருவாக்கு.

"அந்தணனை அந்தணர்தம் சிந்தையானை"

என்பது பெரிய திருமொழி.

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை"

என்பது அப்பர் திருத்தாண்டகம்.

"கொட்டாய் பல்லிக்குட்டி"

என்பது பெரிய திருமொழி. இதே சந்தத்தில்,

"தலையே நீ வணங்காய்"

என்பது அப்பர் திருவாக்கு.

"இருபாடெரி கொள்ளியின் உள்ளெறும்பே போல்"

என்பது பெரிய திருமொழி.

"இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து"

என்பது திருவாசகம்.

"இடைய னெறிந்த மரமே போல்"

என்பது பெரிய திருமொழி.

"இடையன் கொன்ற இன்னு மரத்தினேன்"

என்பது சிந்தாமணி.

"இடையன் எறிந்த மரம்"

என்பது பழமொழி.

"திருச்சாழல் திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளார். மாணிக்கவாசகரும் பாடியுள்ளார்."

"தாராய தண்டுளப வண்டுழுத"

என்பது பெரிய திருமொழி.

"தோடுழு தண்டார் வண்டும்"

என்பது கம்பராமாயணம்.

"அக்காரக் கனியை யடைந்துய்ந்து போனேனே"

என்பது பெரிய திருமொழி.

"மிக்கார் வேதவிமலர் விழுங்கும்என்
அக்காரக் கனியை"

என்பது திருவாய்மொழி.

"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை"

என்பது திருவிசைப்பா.

மணிவாசகரது திருவாசகத்திற் காணப்படுவதும், சிறு மகளிர் விளையாடற் பாட்டாகனவுமான அமைந்த பகுதிகளிற் சில இவரது பாசுரங்களிலும் காணப்படும். அவற்றுள் சாழல் ஒன்று. பெரிய திருமொழி 7-ஆம் பத்து ஏழாம் திருமொழிப் பாசுரங்கள் சுந்தரமூர்த்திகளின் திருப்புன்கூர்ப் பதிகம் போன்றிருப்பதைக் காணலாம்.

"கூறைசோறிவைதந்து"

என்பது பெரிய திருமொழி.

"இம்மையே தரும் சோறும் கூறையும்"

என்பது சுந்தரர் வாக்கு. பெரிய திருமொழி 7-ஆம் பத்து 9-ஆம் திருமொழிப் பாடல்கள் சுந்தரர் பாடிய "பித்தா பிறைசூடி" என்ற பாசுரச் சந்தத்தை ஒத்திருக்கக் காணலாம்.

"அருமாகடலமுதே யுனதடியே சரணமே"

என்பது பெரிய திருமொழி.

" அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே"

என்பது நாவலூரர் வாக்கு.

" நைவள நவிற்று பொழில்"

என்பது பெரிய திருமொழி.

" நைவள நவிற்று மொழி"

என்பது கம்பர் வாக்கு.

" வாசிவல்லீ ரிந்தருளுவீர் வாழ்ந்தேபோம் நீரே"

என்பது பெரிய திருமொழி.

" வாழ்ந்து போதிரே"

என்பது சுந்தரர் வாக்கு.

" அன்னமா யருமறைகள் அருளிச் செய்த"

என்பது பெரிய திருமொழி.

" அன்னமா யருமறைகள் அறைந்தாய் நீயே"

என்பது கம்பராமாயணம்.

" தாம்தம் பெருமை யறியார் தூது
வேந்தற்காய வேந்தரூர்"

என்பது பெரிய திருமொழி.

" தன்பெருமை தானறியாத் தன்மையான்"

என்பது திருவாசகம்.

" மையணிந்த குவளைகள்தங் கண்களென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும் கடைசிமார்கள்
செய்யணிந்து களைகளையா தேறும்காழிச்
சீராம விண்ணகரம்"

என்பது பெரிய திருமொழி. இதனையே இன்னும் அழகு படுத்திக் கம்பர்,

"பண்கள்வாய்மிழற்று மின்சொல்
கடைசியர்பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வாயொக்கும்
களையலாற் களையிலாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்தநேயம்
பிழைப்பரோ பெரியோர் பெற்றால்"

என்று கூறுவர்.

"சிற்றவை பணியால் முடிதுறந்தான்"

என்பது பெரிய திருமொழி.

"சிற்றவை பணித்தமௌலி பொலிகின்ற சென்னியானை"

என்பது இராமாயணம். இவ்வாறு திருமங்கைமன்னனது பாசுரங்கட்கும் அவர்க்கு முன்னும் பின்னும் விளங்கிய புலவர் பெருமக்களின் பாசுரங்கட்கும் உள்ள ஒற்றுமை மிகவும் பெரிது.

"மானமரு மென்னோக்கி வைதேகி விண்ணப்பம்"
(பெரியாழ்வார்)

"மானமரு மென்னோக்கி வைதேகி யின்றுணையா"
(திருமங்கை)

"ஆவியே யாரமுதே" (நம்மாழ்வார்)

"ஆவியே யமுதேயென நினைந்துருகி" (திருமங்கை)

"கரும்பமர் சோலைசூழ்ந்த வரங்கமாக் கோயில்கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டென் கண்ணிணை
களிக்குமாறே" (தொண்டரடிப்பொடி)

"கரும்பமர் சோலைசூழ்ந்த வரங்கமாக் கோயில்கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டென் கண்ணிணை
களிக்குமாறே" (திருமங்கை)

மற்றும் ஆழ்வார் பாசுரங்களில் பலவகைச் சொல்லணி பொருளணிகள் விரவி நிற்கக் காணலாம்.

"ஊனிடைச் சுவர்வைத் தென்புத் தூணட்டி
உரோம மேய்ந் தொன்பது வாசல்

*தானுடைக் குரம்பை பிரியும்போ துன்றன்*
*சரணமே சரணமென் றிருந்தேன் ''*

என்பது உருவகம்.

*'' ஒருகுறளா யிருநில மூவடி மண்வேண்டி ''* (3, 4, 1)

இவை கிரமாலங்காரம்.

*'' சேயனணியன் சிறியன்பெரியன் என்பதும் சிலர்பேச ''*

என்பது முரண்தொடையணி.

*'' பனிசேர் முல்லை பல்லரும்பப்*
*பானலொருபால் கண்காட்ட*
*நனிசேர் கமல முகம்காட்டும்*
*நறையூர் நின்ற நம்பியே ''* (6, 7, 2)

என்பது உவமை விரவிய உருவகம்.

*'' களியாவண்டு கள்ளுண்ணக்*
*கமர்தென்ற லலர் தூற்ற*
*நளிர்வாய் முல்லை முறுவலிக்கும்*
*நறையூர் நின்ற நம்பியே''* (6, 7, 4)

என்பது ஏதுத்தற்குறிப்பேற்றம்.

ஒரே செய்யுளில் திருமாலின் பத்துருவத்தையும் தொகுத்துக் கூறிய இடம்.

*'' மீனோடாமை கேழலரி குறளாய்*
*முன்னு மிராமனாய்த்*
*தானாய்ப் பின்னு மிராமனாய்த்*
*தாமோதரனாய்க் கற்கியும் ''* (8, 8, 10)

மற்றும் இவ்வாழ்வார் பல பழமொழிகளை இனிமையுற அமைத்துச் செய்யுளியற்றுவர்.

*'' முன்றிலெழுந்த முருங்கையிற்றேறன் ''* (10, 9, 2)

*'' ஆரெழில்வண்ண அங்கையின் வட்டாமிவள் ''* (10, 9, 3)

*'' சொல்லியென் னம்பியிவளைநீ யுங்கள்*
*தொண்டர் கைத்தண்டு என்றவாறே ''* (ஷை. 10, 9, 4)

'' பெருவழி நாவற்கனியினு மெளியள்
இவளெனப் பேசுகின்றூரே '' (ஷை. 10, 9, 5)

'' எருக்கிலைக்காக எறிமழுவோச்ச வென்செய்வது''
(10, 9, 5)

'' மாழைமென்னேக்கி மணிநிறங் கொண்டுவந்து''
(10, 9, 6)

'' கோழிவெண் முட்டைக்கென் செய்வதெந்தாய்''(10,9,7)

'' கருங்கடல்வண்ணு கவுள்கொண்டநீரா
மிவள்எனக் கருதுகின்றூயே'' (10, 9, 8)

'' ஆரழலோம்பும் அந்தணன் தோட்டமாக
நின் மனத்து'' (10, 9, 9)

திருமங்கை மன்னன் வைணவப் பரத்வம் கூறினரேனும், சமரசப் பான்மையும் அவரிடம் காணலாம்.

'' பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் உந்தியிலே தோற்றுவித்துக்
கறைதங்கு வேல்தடங்கண் திருவைமார்பில்
கலந்தவன் தாளணைகிற்பீர்'' (பெரியதிரு. 3, 4, 9)

'' எங்களுக்கு அருள் செய்கின்ற ஈசனை
வாசவார் குழலாள் மலைமங்கைதன்
பங்கனைப் பங்கில்வைத் துகந்தான் தன்னைப்
...கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே''
(7, 10, 3)

'' திருத்தனை ...... கண்ணுதல் கூடிய
அருத்தனையரியைக் கண்டுகொண்டேனே'' (7, 10, 7)

'' மழுவியல்படை யுடையவனிடம் மழைமுகில் தழுவிய
கணபுரம் அடிகள்தமிடமே'' (8, 7, 6) [வுருவினர்

இவ்வாறு திருமால் தனது பாகத்தில் பரமசிவனை வைத்திருக்கிறூர் என்று கூறினர். ஆழ்வார் ஓரிடத்தில் பகவானை மும்மூர்த்திகளுக்கும் அதீதமான நிர்க்குண ஸ்வரூபமாகவும் குறிப்பிடுவர்.

"அறமுதல் நான்கவையாய் மூர்த்திமூன்ருய்
இருவகைப் பயனுய் ஒன்ருய் விரிந்துநின்ருனை"
(திருவெழுகூற்றிருக்கை)

ஆழ்வார் சிவனடியார்களையும் சிவன் பணிவிடையாற்றியவரையும் போற்றியுள்ளார்.

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்"
(பெரியதிரு. 6, 6, 8)

இங்கே கோச்செங்கட் சோழனைப் புகழ்ந்துள்ளமை காண்க.

சைவ வைணவ வாதம் ஒழிந்து சமரஸப்பான்மை வளருமாறு நம் முன்னோர்கள் பலவாறு முயன்றுள்ளனர். "ஆழ்வார்களின் சமரசப் பெருந்தன்மை" என்ற ஒரு சிறு நூலிற் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "திருவானைக்காக் கோவிலுக்குள் திருமண விழாவிற்குத் தாரைவார்த்துக் கொடுப்பதற்காகத் திருவரங்கத்திலிருந்து திருவரங்கர் எழுந்தருளி வந்து தங்குவதற்கு ஒரு மண்டபமும், அவ்வாறே சம்புநாதர் வந்து தங்குவதற்காகத் திருவரங்கத்தில் அரங்கநாதர் கோவில் சந்திர புட்கரணியில் ஒரு மண்டபமும் ஏற்பட்டிருந்தன." ஆனால் இப்பொழுது மத வைராக்கியத்தாற் பல சச்சரவுகள் ஏற்பட்டு விட்டன. திருச்சித்திரகூடம் என வைணவர் போற்றும் திவ்யச் சிதம்பரத்தில் ஆடும் நடேசப்பெருமானும், அறிதுயில் கொண்டுள்ள கோவிந்தராசனும் சேர்ந்து காட்சியளிப்பதிலிருந்தே முன்னோர்கள் சமரசத்திற்காகப் பாடுபட்ட செய்தி தெளிவாகும்.

எட்டுத்தொகைபோன்று சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் இவ்வருளிச் செயல்களில் மிகுதியும் காணப்பெரு. துதிகள் ஆதலின் பண்டிதர் பாமரர் ஆகிய யாவரும் எளிதில் பொருள்தெரிந்து கற்கக்கூடியவைகள் திருமங்கை

யார் பாசுரங்கள். வைணவ சித்தாந்த நுட்பங்களைக் கூறும் பகுதிகள் சில பெரியார் உரை கொண்டறிய வேண்டியுள்ளன. மற்றும் தேவாரப் பாசுரங்கள்போன்றே இப்பாசுரங்களும் யாப்பிலக்கண முறைப்படி விருத்தங்களாகவும் கலித்துறைகளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. தேவாரங்கட்கும் பண் அடைவுண்டு. இச்செய்யுட்கும் பண்ணடைவுண்டு. ஆழ்வாரே தம் பாடல்களை இன்னிசையுடன் பாடுதல் வேண்டும் எனப் பணிப்பது காணலாம். சங்க காலத்தில் பெரிதும் வழங்கியவை வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்பன. அவைகள் இந்த ஆழ்வார் பாசுரங்களில் காண்டற்கில்லை. பெரும்பாலும் விருத்தப் பாக்களான்றியன்றவை இவரது பாசுரங்கள். இவரது பாடல்களில் பிற்காலத்துக் கவிகளிடம் காண்பது போன்று இல்பொருள் உவமைகளும், உயர்வுநவிற்சிகளும் காணப் படா. இயற்கை வருணனைகள் பல காணப்படும். அவைகளிற் சில முன்னரே காட்டப்பட்டன. தமது அநுபவங்களை விளங்கக் கூறிப் பிறர்க்கு யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை வற்புறுத்தும் பகுதிகள் பல இவரது அருளிச் செயல்களிற் காணலாம். பெரியாழ்வார், சுந்தரமூர்த்திசுவாமிகள் என்ற இவர்கள் திருமங்கை மன்னனுக்குக் காலத்தான் முற்பட்டவராவர்.

### திருமங்கையாழ்வார் காலம்

இப்பெரியார் வாழ்ந்த காலம் குருபரம்பரை முதலிய நூல்களில் ஒருவாறு கூறப்படும். ஆயினும் ஆராய்ச்சியாளர் கருத்துப்படி ஆழ்வார்கள் அனைவரும் கி. பி. மூன்று அல்லது நான்காம் ஆண்டுகள் முதலாக ஒன்பதாம் ஆண்டிற்குள்ளாக வாழ்ந்தவராவர். இவர்களுள் முதலாழ்வார்கள் முன்னும் அவரை யடுத்துத் திருமழிசையாரும், அவர்க்குப் பின் பெரியாழ்வாரும் அவரது மகளாகிய சூடிக்கொடுத்தநாய்ச்சியாரும் வாழ்ந்தனர் என்று மேலே ஆதாரங்களுடன் காட்டப்பட்டது. திருமங்கை மன்னனது காலத்தை வரையறுத்தற்கு அவரது பாசுரங்

களிற் காணப்படும் சில அரசியற் குறிப்புக்களும் பிறவும் மிகவும் பயன்படக் கூடியனவாக இருக்கின்றன. அவை பின் வருமாறு :—

(1) தென்னன் தொண்டையர் கோன் வணங்கும் நன் மயிலைத் திருவல்லிக்கேணி.

(2) மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிரமேகன் தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி.

(3) பல்லவன் மல்லையர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்.

(4) மண்ணையில்......செருவின் முனநாள் பரந்தவன் பல்லவர் கோன்.

(5) தென்னவனை முனையில் திறல்வாட்டிய பல்லவர் கோன்.

(6) உலகுடை மன்னவன் தென்னவனைக் கன்னிமா மதிள் சூழ் கருவூர் வெருவப்பல படைசாய வென்றான்.

(7) வில்லவன் நெல்மலியில் வெருவச் செரு வேல் வலக்கைபிடித்த பல்லவர் கோன்.

(8) கடல்போல் முழங்கும் குரற் கடுவாய்ப்படை யுடைப் பல்லவர் கோன்.

(9) செம்பியன் கோச்செங்கணான்.

இவற்றுள் இரண்டு முதல் எட்டு ஈறாக உள்ள வரிகள் ஆழ்வார் இயற்றியருளிய பரமேச்சுர விண்ணகரப் பதி கத்தில் உள்ளவை. இவ்வாலயம் நந்திவர்ம பல்லவமல்ல

னுக்கு முன் அரசுபுரிந்த இரண்டாவது பரமேச்சுரவன் மனால் கட்டப்பட்டதெனச் சரிதம் கூறும். இக்கோயிற் சுற்றுச் சுவரில் பரமேச்சுரவன்மன், பல்லவமல்லன் என்ற இம்மன்னர்கள் ஆட்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பெற்றுள்ளன. இரண்டாவது பரமேச்சுர வன்மன் சந்ததியின்றி இறந்தான். இறந்த அளவில், அரசுக்குரியாரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் எழுந்தது. அந்நிலையில் பல்லவமல்லற்கும், அரசர் வழியில் வந்த சித்திரமாயன் என்பவனுக்கும் போட்டி நிகழ்ந்தது. பாண்டியன் முதற் பராந்தகனும் சில தென் னிந்திய அரசரும் சித்திரமாயனுக்கு உதவியாகத் தோன் றினர். பல்லவமல்லற்கு, அவரது ஆட்சியில் இருந்த தலைவனாகிய பெரும்பிடுகு முத்தரையரும், அவனது சேனைத் தலைவனான உதய சந்திரனும், அதிகைமானும் உதவியாயினர். சங்கரமங்கை, மண்ணைக்குடி, நெல்வேலி, அழிந்தியூர், புகழியூர் என்ற போர்க்களங்களில் போர் நிகழ்ந்தது. புகழியூரில் அதிகமான் பாண்டியன் முதற் பராந்தகனால் தோல்வியுற்றான். இப்போர்களில், மண்ணை, நெல்வேலி, கருவூர் என்ற ஊர்களில் நிகழ்ந்த போர்கள் திருமங்கை மன்னனாற் குறிக்கப்பட்டுள்ளன. புகழியூர் என்பது கருவூர்க் கணித்தாய் இப்பொழுது விளங்கும் புகளூர் என்ப. கருவூரில் நந்திவர்மபல்லவமல்லன் முதற் பராந்தகனை வென்றான் என்று ஆழ்வார் பாசுரம் கூறும். நந்திவர்ம பல்லவமல்லன் பொருத போர்க்களங்களும், பரமேச்சுர விண்ணகரத்தைப் பணிந்த பல்லவர்கோன் பொருதனவாக ஆழ்வார் கூறும் போர்க்களங்களும் ஒன்றாக இருத்தலின், ஆழ்வாராற் புகழப்பட்ட பல்லவர் கோனே நந்திவர்ம பல்லவமல்லன் என்று கொள்ளலாம்.

பல்லவமல்லனது போர்முரசு கடுவாய்ப்பறை என்றும், அது கடல்போல் ஒலித்தது என்றும் ஆழ்வார் பாடுவர். இச்செய்தியும் ஆழ்வார் புகழ்ந்து பாடிய பல்லவமன்னன் பல்லவமல்லனென்றே காட்டும். பல்லவமல்லன் அரசு புரிந்த காலம் கி.பி. 717-779 என்று சரிதம் கூறும்.

நிற்க, பல்லவமல்லனுடன் பாண்டிநாட்டின் எல்லைப் புறத்திற் போர் நிகழ்த்திய பாண்டியன் பெரியாழ்வார் காலத்தவன் என மேலே காட்டப்பட்ட பராந்தகன் மாறவன்மனுவன். மேலே கூறப்பட்ட போர்க்களங்களுள், மண்ணைக்குடி என்பது தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கித் தாலுக்காவைச் சேர்ந்த மண்ணகுடி என்ற ஊர் என்றும், அதனை மண்ணி என்ற பெயரோடு இடவைக் கணித்தாக உள்ள ஊர் என்ற புரொபஸர் டூப்ராயில் கூற்று பொருந் துவதன்றென்றும் கூறுவர் மு. இராகவையங்கார் அவர்கள்.[1] மற்றும் சூதவனம் என்பது, திருவுசாத்தானம் எனத் தேவாரத்தும், கோவிலூர் என வழக்கிலும் வழங்குவது என்றும், நிம்பவனம் என்பது வேப்பங்காடு என்றும், சங்கரக்கிராமம் என்பது சங்கரனார் குடிக்காடு என்ற தலம் என்றும், நெல்வேலி என்பது நென்மலி என்ற ஊர் என்றும் அவ்வறிஞர் கூறுவர்.

இனி, இவ்வாழ்வார் தமது அட்டபுயகரப் பதிகத்தில்,

"மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்
நீண்முடி மாலை வயிர மேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
அட்டபுய கரத் தாதி தன்னை" (பெ. தி. 2, 8, 10)

என்று பாடுகின்றார். இவ்வரிகட்கு மு. இராகவையங்கார் அவர்கள், "வயிரமேகன் என்ற பெருவேந்தனது கீர்த்திப் பிரதாபங்கள் சூழ்ந்துள்ள கச்சிமாநகரைச் சார்ந்த அட்டபுயகரம்" என்பர்.

இவ்வயிரமேகன் யாவன், இவன் இரட்ட அரசனை தந்திதுர்க்கன் என்றும், அவன் பெருவேந்தன் என்றும், அவன் பல்லவனை வெற்றிகொண்டது காரணமாக அவனது புகழ் கச்சிமாநகரைச் சூழ்ந்ததென்றும் கூறுவர் மு. இராக வையங்கார். இக்கொள்கையை மறுத்து, இரட்ட அரசன் தந்தி கொடுங்கோலன் என்றும், அவன் அரசுரிமையி

---

1. ஆழ்வார்கள் காலநிலை, பக். 100.

னின்றும் விலக்கப்பட்டவன் என்றும், அவன் கச்சியிற் பல்லவனெடும் பொருதற்கு எந்தவகைக் காரணமுமின்றென்றும், ஆகவே கச்சியரசன் பல்லவனைப் பணியுமாறு செய்திருக்க இயலாதென்றும்கூறுவர் சிலர். இராகவையங்கார், தமது கொள்கையை உறுதிப்படுத்துவாராய், ஆழ்வார்சிறந்தவீரர் என்றும், அங்நிலையில் பல்லவமல்லன் தன் அரசனாக இருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாது, தன் அரசனுடன் வலிமை தோன்றப் பொருது அவனைப் பணியச் செய்த இரட்டவரசனை, வீரனை வீரன் பாராட்டுகின்ற நன்முறையில் புகழ்ந்து பாடினர் என்றும், அது பற்றி வயிரமேகன் என்பது தந்திதுர்க்கனையே குறிக்கும் என்றும் கூறுவர்.

மேற்கூறிய தந்திதுர்க்கனது மகள் ரேவா என்பவளை நந்திவன்மன் பல்லவமல்லன் மணந்ததாகச் சரிதம் கூறும். இந்த தந்தி என்ற தாய்ப்பாட்டன் பெயரையே பல்லவமல்லன் மகனை தந்திவன்மன் தரித்திருக்கக்கூடும் என்பதும் இதினின்று விளங்கும். இனிக் கச்சிப் பல்லவ மன்னர் வரிசையில் கடைசியாகக் காணப்படுபவன் அபராஜிதவன்மன். இவனது ஆட்சி நான்காவது ஆண்டில் காணப்படும் ஓர் சாசனத்தில் வயிரமேகன் என்ற வாண கோவரையன் காணப்படுகின்றான் என்றும், இந்த வயிரமேகன் என்ற பட்டம், நிருபதுங்கனலோ அவனது தந்தையான நந்திவர்ம பல்லவ மல்லனலோ, அத்தலைவர்க்கிடப் பட்டிருக்கவேண்டும் என்றும் கூறுவர் காலம் சென்ற ஆராய்ச்சியாளர் ஸ்ரீ கோபிநாத ராவ் அவர்கள். மேலும் உய்யக்கொண்டான் திருமலைச்சாசனம் ஒன்றில், வயிரமேகன் கால் என்ற கால்வாய் காணப்படுகிறதென்றும், அப்பெயர் தந்திவன்மனது புனைபெயராதலின், தந்திவன்மனே அக்கால்வாயை வெட்டச் செய்திருக்கவேண்டும் என்றும், வயிரமேகனைப்பற்றிய நிகழ்ச்சிகளை ஆழ்வார் நிகழ்காலத்திற் கூறியிருப்பதால், அவன் காலத்திலேயே ஆழ்வார் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும், இந்தக் கொள்கை ஏற்குமெனில், 9-ஆம் நூற்றாண்டின் முற்

பகுதியே ஆழ்வார் வதிந்த காலம் ஆகும் என்றும் எழுதுவர் ராயர் அவர்கள். தந்திவர்மனது ஆட்சிக்காலம் கி.பி. 779 முதல் 830 வரை என்ப.

காலம் சென்ற தஞ்சை ராவ்பகதூர் சீநிவாஸபிள்ளையவர்கள் 'தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை' என்பதற்கு, தொண்டையர் அரசனும், தன்னை வணங்கும் மன்னர் முடிகளையே மாலையாக உடையவனுமாகிய வயிர மேகன் என்றும், 'முடிமன்னர் பலர் வணங்கும்படி விளங்கியவன் வயிர மேகன்' எனவும் ஆழ்வாராற் பாடப்பட்ட இந்த வயிரமேகன் வைணவனைகத் தெரியும் தெள்ளாறெறிந்த மூன்ரும் நந்திவன்மனுதல் வேண்டும் என்றும் குறித்துள்ளனர். இக்கொள்கையை மறுத்து, ராவ்சாகிப் பண்டிதர் மு. இராகவையங்கார், "பல்லவமல்லன் பேரனும், தெள்ளாறெறிந்தவனுமான நந்திவன்மனிடம் ஆழ்வார் புகழ்ந்து பாடுதற்கேற்ற வைணத்துவம் விளங்கியதென்பதற்குச் சிறிதும் ஆதாரமில்லை என்றும், அதற்கு மாருக அவனைப் பரம சைவன் என்று சாசனங்கள் கூறுவதாகவும் எழுதுவதுடன்,

> "சிவனை முழுதும் மறவாத சிந்தையான்
> செய முனியுறவு தவிராத நந்தி"

என்ற நந்திக்கலம்பகத் தொடரை தமது கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுவர். மற்றும், வயிரமேகன் என்ற பெயர் மூன்ரும் நந்திவர்மனுக்கு வழங்கியதுண்டு என்பதற்குச் சாசனக் குறிப்பு ஒன்றும் கிடையாது. ஆகலின் மூன்ரும் நந்திவன்மன் காலத்தவராக வயிரமேகனை நிகழ்காலத்திற் பாடிய ஆழ்வார் இருந்திருக்க முடியாது.

இனி, ஸ்ரீ வெங்கையா அவர்களும், கே. ஆர். கண்ணபிரான் அவர்களும், பல்லவமல்லனுக்கும் இரட்டவரசனை தந்திதுர்க்கன் மகள் ரேவா என்பவளுக்கும் பிறந்த தந்திவர்மனே வயிரமேகன் என்றும், வயிரமேகப் பெயரைத் தன் பாட்டனிடமிருந்து, தந்திவர்மன் பெற்றிருத்தல் கூடும் என்றும் கருதினர். இதற்கு ஆதாரமாகத்

தந்திவன்மனது ஆட்சி 2, 9-ஆவது ஆண்டுகளில் உத்திர மல்லூர்ச் சாசனத்தில் காணப்படும் "வயிரமேகத்தடாகம்" என்ற தொடரே சான்று என்றும் கூறுவர். இது வரையப்பட்ட சாசன காலத்தவன் தந்திவர்மன். எனவே வயிர மேகப் பெயர் அவனே புனைந்தவனுவன் என்பது அன்னூர் கருத்து. இவ்வரசன் திருமால் பத்திமையிற் சிறந்தவன் ஆதலின் இவனையே ஆழ்வார் குறித்திருக்கக் கூடும் என்றும், ஆழ்வார் அவன் காலத்தவராக ஆதல் கூடும் என்றும் எழுதுவர். மு. இராகவையங்காரும் இக் கருத்தை உடன்பட்டு, ஆழ்வார் நந்திவர்மன் அவன் மகன் தந்திவர்மன் என்ற இருவர் காலத்தும் இருந்திருத்தல் கூடும் என்று கருதுவர். மேலும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்ற தொடரிலிருந்து, வயிர மேகன் என்ற அரசன் காலத்திலேயே இருந்தவர் ஆழ்வார் எனக் கொள்ளக்கிடக்கின்றது. புகழ் சூழ்ந்த கச்சி என மட்டும் கூறி அமையாது வலிசூழ்ந்த கச்சியென ஆழ்வார் கூறுதல் கொண்டு, அவ்வரசனுக்குப் பிற்பட்டவராயின், அவன் வலிமை கச்சியைச் சூழ்ந்திருந்தது எனப் பாடியிரார் என்பது தேற்றம். எனவே மேற்கூறிய வயிரமேகன் இரட்டனுன தந்திதுர்க்கனுயினும், பல்லவனுன தந்திவர்மனுயினும், அவனைப் பாடி புகழ்ந்த ஆழ்வார் 8-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். பல்லவராட்சி தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய காலமே திருமங்கை மன்னன் வதிந்த காலம் எனக் கூறலாம்.

இனி, மு. இராகவையங்கார் அவர்கள் தமது "ஆழ்வார்கள் கால நிலையில்" கி.பி. 795-க்கு முன் திருமங்கை மன்னன் இருந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறுர். ஆழ்வார் தமது திருவல்லிக்கேணிப் பதிகத்தில்,

"மன்னு தண் பொழிலும் வாவியு மதிலும்
மாட மாளிகையு மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன் மயிலைத்
திருவல்லிக் கேணி நின்றுனை"

எனப் பாடுகிறார். இங்கே திருப்பணிகள் செய்த பல்லவனைத் தென்னனெனப் புகழ்கின்றார். இப்பெயர் நந்திவன்ம பல்லவமல்லனையோ அல்லது அவன் மகன் தந்திவன்மனையோ குறித்து எழுந்திருக்க வேண்டும். இதே கோயிலில் தந்திவன்மனது பன்னிரண்டாம் ஆட்சியாண்டுச் சாசனம் ஒன்று காணப்படுகிறது. இவ்வாறு தென்னன் எனக் கூறுவதால் பாண்டியநாடு பல்லவராட்சிக்குட்பட்ட காலத்திலே இப்பதிகத்தை ஆழ்வார் அருளிச் செய்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். அத்தகைய தென்னுட்டாதிக்கம் தந்திவன்மனது 16-ஆம் ஆட்சி ஆண்டின்பின் பல்லவர் கையினின்றும் நழுவிப் பாண்டியர் வசமாயிற்று. ஆகவே தந்தியின் 16-ஆம் ஆட்சியாண்டாகவுள்ள கி.பி. 795-க்கு முன் ஆழ்வார் இப்பதிகத்தைப் பாடியிருத்தல் வேண்டும். எனவே கி.பி. 795-க்கு முன்னர் அவர் வாழ்ந்தவராவர் என்பது ஷையார் கருத்து.

சிலர் வயிரமேகன் என்ற பெயர் வேறு சில பல்லவர்க்கும் வழங்கியிருப்பதாகவும், அதனுல், அவருள் ஒருவரை ஆழ்வார் பாடியிருத்தல் கூடும் என்றும் கருதுவர். ஆனுல் அவைகள் காணப்படும் சாசனங்கள் மிகவும் பிற்பட்டனவாகலின் அக்கருத்தை ஏற்றற்கில்லை.

மற்றும், மு. இராகவையங்கார் முத்தரையர் என்ற வீர மரபினர் ஆழ்வார் காலத்தவர் என்றும், அவர்கள் வைணவப் பற்றுமிக்க கள்வர் குலத்தவரென்றும் திருமங்கை மன்னனும் அக்குலத்தினராக இருத்தல் கூடும் என்றும் கருதுவர். ஆனுல், முத்தரையர் தற்காலம் முத்துராசர் என்று வழங்கும் பரதவர் (வலைஞர்) ஆதலின் அவர்க்கும் கள்வர் மரபில் வந்த ஆழ்வார்க்கும் எவ்வித இயைபுமிருந்திருக்க முடியாது என்பது தேற்றம்.

இனித் திருமங்கை யாழ்வாரும் திருஞான சம்பந்தரும் ஒரு காலத்தவர் என்றும், அவ்விருவர்க்கும் சீகாழியில்

வாதம் நிகழ்ந்ததாகவும் குருபரம்பரைகள் கூறுகின்றன. திருஞானசம்பந்தர் 7-ஆம் நூற்றுண்டினனுன நின்றசீர் நெடுமாறன் என்ற கூன்பாண்டியன் காலத்தவர். திருமங்கையாழ்வார் கி.பி. 8-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராயின் இருவரும் சமகாலத்தவராகக் கருதற்கில்லை.

மற்றும், திருமங்கை மன்னன் நாகப்பட்டினத்துப் பௌத்தப் பள்ளியொன்றில் இருந்த ஓர் பொற்சிலையைக் களவிற் கைப்பற்றி அதைக் கொண்டு திருவரங்கத் திருமதில் கட்டினர் என்று குரு பரம்பரைகள் கூறும். 11-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கடார வேந்தனுன ஸ்ரீ மஹா விஜயோத்துங்கவன்மனுல் நாகப்பட்டினத்திற் 'சூடாமணி பத்ம விஹாரம்' என்ற பௌத்தப் பள்ளி ஒன்று கட்டப் பட்டதென்றும், அதற்கு முதலி ராஜராஜ சோழனுல் கி.பி. 1008-ஆம் ஆண்டு ஆனைமங்கலம் என்ற கிராமமொன்று தானமளிக்கப்பட்டதென்றும் சாசனத்தால் அறியப்படுகின்றன. இச்செய்திகளைக் கொண்டு மேற்குறித்த கதை எழுந்திருக்கவேண்டும். இதனைக்கொண்டு ஆழ்வாரைப் பதினேராம் நூற்றுண்டின் பின்னிருந்தவர் என்று கோடற்கில்லை. இராஜராஜன் மகன் முதலிராஜேந்திரன் சாசனத்தில் இப்பௌத்தப் பள்ளியைப் பற்றிய வரலாறு காணலாம். ராஜேந்திரன் 1013 முதல் கி.பி. 1045-வரை ஆட்சி செய்தவன். ஆகவே அவன் ஆட்சியில் ஷ விகாரம் நன்னிலையில் இருந்ததென்று தெளிவாம். இக்காலமே ஸ்ரீமந் நாதமுனிகளின் திருப் பெயரனுன ஸ்ரீ ஆளவந்தார் வதிந்த காலம் என்ப. ஆகவே முற்கூறிய கொள்கைப் படி கொண்டால், திருமங்கை மன்னன், அவ்வாளவந் தார்க்கும் பின்பிருந்தவர் என்று கொள்ள நேரும். இது எவ்வகையிலும் பொருந்துவதன்று. மேலும் இவ்வாழ்வார் காலத்திலும் பௌத்த சமணர்கள் சிற்சில இடங்களிற் தலைமைபெற்று விளங்கினர் என்பதற்கும், அந்நூற்றுண்டில் ஆண்ட மன்னர்கள் ஓரே சமயச் சார்பின்றிப் பல மதங்கட்கும் உதவி வந்தனர் என்பதற்கும் இலக்கியச்

சான்றுகள் உண்டு. இவ்வாழ்வாரே தமது திருமாலிருஞ் சோலைப் பதிகத்தில்,

" புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவு முகந்திட்
டெந்தை யெம்மானு ரிமையவர் தலைவர்
எண்ணிமுன் னிடங் கொண்ட கோயில் "

எனப்பாடியுள்ளார்.

நிற்க, திருமங்கை மன்னன் தம் காலத்தும் தமக்கு முன்னும் இருந்த சில அரசர்களைப் பற்றிக் குறிக்கின்றார். அரசர்க்கரசனும் பரம வைணவனுமான ஓர் தொண்டை மன்னனுடன் திருமால் ஏழு நாழிகையளவும் எழுந்தருளி யிருந்து திருமந்திரப் பொருளை அவற்குபதேசித்தருளினர் என்ற செய்தியை,

" துளங்கு நீண்முடி யரசர் தங்குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்
குளங் கொளன் பினோ டின்னருள் சுரந்தங்
கோடு நாழிகையே ழுடனிருப்ப
வளங்கொள் மந்திர மற்றவற் கருளிச்
செய்த வாறடி யேனறிந் துலக
மளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணி பொழிற் றிருவரங்கத் தம்மானே "
(பெரியதிரு. 5, 7, 9)

என்ற பாசுரத்தில் இவ்வாழ்வார் கூறுகின்றார். இவ் வரசன் சிம்மவிஷ்ணு, பரமேச்சுவரன், பல்லவமல்லன் என்ற இவர்களுள் ஒருவனாக இருந்திருத்தல் வேண்டும் என்பர் மு. இராகவையங்கார்.

அடுத்து இவரது பாசுரங்களிற் புகழ்ந்து பாடப்பெறும் மன்னவன் சோழன் செங்கணான் ஆவன். இவன் ஐந்தாம் நூற்றாண்டையடுத்து விளங்கியவன். சைவசமயாசாரியர் களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவ ராலும் புகழப்பட்ட பெருந்தகை. ஆழ்வாரும்,

'' வெங்கண்மா களிறுந்தி வெண்ணி யேற்ற
விறன் மன்னர் திறலழியவெம் மாவுய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ''
(பெ. தி. 6, 6, 4)

எனவும்,

'' பாராள ரிவரவரென் றழுந்தை யேற்ற
படை மன்ன ருடல் துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ''
(ஷை 4, 6, 4)

எனவும் பாடுவதால், வெண்ணி, அழுந்தை என்றபோர்க் களங்களிலே இவ்வளவன் அடைந்த வெற்றித்திறம் விளங்கும். இதே சோழன் விளந்தைவேளைப் போரிற் கொன்றதும்,

'' மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடக் குடகொங்கன் சோழன் '' (ஷை. 6, 6, 6)

என்று ஆழ்வாராற் குறிக்கப்பட்டது. விளந்தை என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் தாலூக்காவில் உள்ள ஓர் ஊர். சோழன் கட்டிய சிவாலயங்கள் எழுபது என்பதை,

'' இருக் கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்
கெழில்மாட மெழுபது செய் துலகமாண்ட
திருக் குலத்துவளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ''

என்ற பாசுரங்கொண்டறியலாம். இவ்வாறு செங்கணான் அமைத்த சிவன் கோயில்களாகத் தேவாரத்தால் அறியப் படுவன திருவானைக்கா, அம்பர், நன்னிலம், வைகன் மாடக் கோயில் என்பனவாம். சோழமண்டிலத்தின் பகுதியாக அமைந்த ஒவ்வொரு நாட்டிலும் ஓர் சிவாலயம் இச் சோழன் அமைத்ததாகச்,

> " செங்கணுன், அந்தமில்சீர், சோணுட் டிலகனுடு
> தொறுமணியார், சந்திர சேகர னமரும் தானங்கள் பல
> சமைத்தான் " (பெரியபு. கோச்செங்கட். 14)

என்ற பாட்டான் உணரலாம்.

இனி, ஆழ்வார் பல்லவமல்லற்குரியதாகக் கூறும் கடுவாய்ப்பறை கேந்தூர்ச் சாசனத்தில் குறிப்பிடப்படுகின்றது, மற்றும்,

> " மன்னன் தொண்டையர் கோன் வணங்கு நீண்முடி மாலை
> வயிர மேகன் "

என்ற ஆழ்வார் பாசுரத் தொடர்,

> " பிரணதாவ நீபதீம் மகுட மாலிகா லிட சரணுர விந்த : "

என்ற வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பேயாகும் என்றும், இவ்வாறு இவ்வாழ்வார் பாசுரத் தொடர்கட்கும் சாசனத் தொடர்கட்கும் ஒற்றுமை காணலாம் என்றும், மு. இராகவையங்கார் கூறுவர்.

திருமங்கை மன்னன் அருளிய பாசுரங்களில் சிறிய திருமடல் பெரிய திருமடல் என்பனவும் உண்டு. 'மடலூர்தல்' என்பது தான் விரும்பிய பெண்ணை அடையக்கூடாதவிடத்து ஆடவர் நிகழ்த்தும் தற்கொலை முறை என்ப. இது பழந் தமிழர் மேற்கொண்ட வழக்கு. காதலித்த ஆடவன் ஆடையின்றி எருக்கு, பூளை முதலிய மலர்களை அணிந்து கொண்டு பனங் கருக்காற் செய்த ஓர் குதிரையின்மீது தன் காதலியின் உருவத்தைத் தானே எழுதிய படத்தைத் தன் முன்னிறுத்திக்கொண்டு ஊரின் நான்கு வீதிகளிலும் வருவதுண்டென்றும், அச்சமயம் ஊர் மக்கள் அதற்கிரங்கி, அப்பெண்ணை அவர்க்குரிமையாக்குவர் என்றும், இன்றேல் அந்த ஆடவன் இறந்துவிடுவன் என்றும் பழைய நூல்கள் கூறும், ஆடவர்களே இதனை மேற்கொள்வர் என்பது,

> " கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
> மடலூரார் ஆடவர் மேலென்ப "

என்ற வரிகள் கொண்டு தெளியலாம். ஆயினும் திரு மங்கை மன்னன் தமது மடல்களிலே ஒரு பெண் திருமால் மீது காமுற்று மடல் ஊர்ந்தாள் என்று கூறப்பட்டுள்ளது. இதில், ''ஏறியதாகக்கூறுது'' 'ஏறுவேன்' என்றே இருத்தலின், அது பொருந்தும் என்பர். பிற்காலத்தெழுந்த பாட்டியலில், கடவுள் பொருட்டு மகளிர் மடலூர்தல் கூடும் என இலக்கணம் வகுக்கப்பட்டது. ஆகவே திரு மங்கை மன்னன் பாடியது அப்பாட்டியல் முறைக்குப் பெரிதும் பொருந்தும். ஆழ்வாரே தமது பெரிய திரு மடலில்,

''காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் மானேக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினேம்''

என்று கூறுதலின், மகளிர் மடலேறும் வழக்கில்லை என்பதை அவர் ஏற்றவராவர்.

இனித் திவ்ய சூரிசரிதத்தில், பெரியாழ்வார் திருமகளான ஸ்ரீ கோதைப்பிராட்டியை அழகிய மணவாளன் திருமணம் புரிந்து தம் பரிவாரங்களுடன் திருவரங்கம் நோக்கிச் செல்லும் இடைவழியில், திருமங்கை மன்னன், அவர்களை வழிமறுத்து அப்பெருமானிடம் திருமந்திரோபதேசம் பெற்றனர் என்ற வரலாறு காணப்படுகின்றது. இதுகொண்டு பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும் விளங்கிய காலமே இவ்வாழ்வார்க்கும் உரியதென முன்னோர் கருதினமை தெளிவாம்.

திருமங்கை மன்னன் சிறந்த கல்விமான். இனிய கவிகள் பாடும் பெரும்புலவன். ''இருந்தமிழ் நூற்புலவன்'' என இவரே தம்மைக் கூறிக்கொள்வர். ''கலைப் பெருமான்'' ''நாவீறன்'' என இவர் பிறரால் சிறப்பிக்கப்படுவர். வைணவப் பரமாசாரியரான இராமாநுஜ முனிவரை

"குறையற் கலைப் பெருமாள், ஒலிமிக்க பாலையுண்டு தன்னுள்ளம் தடித்ததனால், வலிமிக்க சீயம்" என அவர் காலத்தறிஞர் அவரைப் புகழ்வர். பட்டரின் திருத்தந்தை யாரும் ஸ்ரீ ராமா நுஜரது பிரதம சீடருமான கூரத்தாழ்வார் இவ்வாழ்வார் பாசுரங்களை,

"நெஞ்சுக் கிருள் கடி தீபம்"

என்றது காண்க.

இவரது பாசுரங்களில் இனிய பல இயற்கை வருணனை களைக் காணலாம்.

"கொங்கை கோங்கவை காட்ட வாய்குமுதங்கள்
காட்டப் பதுமங்கள்
மங்கைமார் முகங் காட்டிடு நாங்கூர்" (4, 2, 6)

"நூற்றிதழ்கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்
திளங் கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்
சேற்றளையில் வெண்முத்தம் சிந்தும் நாங்கூர்" (4, 4, 1)

"தடங்கண் முகந்து விசும்பிடைப் பிளிறத்
தடவரைக் களிறென்று முனிந்து
மடங்கல்நின்ற திருமாலிருஞ் சோலை" (9, 8, 6)

"கருங் கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று
காயெல்லா மரகதமாய்ப் பவளம் காட்டச்
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவலூர்" (2, 10, 7)

"மையணைந்த குவளைகள் தங்கண்கள் என்றும்
மலர்க் குமுதம் வாயென்றும் கடைசிமார்கள்
செய்யணைந்து களைகளையா தேறும் காழித்
சீராம விண்ணகரம்" (3, 4, 3)

இதே கருத்தை,

"பண்கள் வாய் மிழற்று மின்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண் கை கால் முகம் வாயொக்கும்
களையலாற் களையலாமை
உண்கள் வார் கடைவாய் மள்ளர்

களைகலா துலவி நிற்பார்
பெண்கள் பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்''

என்ற கம்ப நாடர் பாசுரத்தில் விளங்கக் காணலாம்.

நற்றாய் அல்லது செவிலி கூற்றாகப் பல இடங்களிலும் தலைவி நோயையும் வருத்தத்தையும் அணிபெறக் கூறுவர் இப்புலவர் பெருமான்.

'' தாய் வாயிற் சொற்கேளாள் தன்னையத்
தோடணையாள் தடமென் கொங்கை
யேயாரச் சாந்தணியா ளெம்பெருமான்
திருவரங்க மெங்கே யென்னும்'' (5, 5, 4)

என்றது காண்க.

இப்பெரியார் செந்தமிழ்மீது வைத்த அன்பும், தமிழ்ப் புலவர் மாட்டுக் கொண்ட பேரன்பும், பல பாடல்களில் காணலாம்.

'' செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவரிவர்'' (2, 8, 2)

'' நைவள நவிற்று பொழில் நந்தி புரம்'' (5, 10, 2)

இத்தொடரைக் கம்பநாடர், ''நைவள நவிற்று மொழி'' எனப் பாடுவார்.

ஓரிடத்தில், ''செந்திறத்த தமிழோசை'' ''வடசொல் லாக''த் திரிந்தது என்பர். மற்றும்,

'' வெண்சங்க மேந்திய கண்ண
நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் (தமிழ்க்) கவியின் பொருள் தானே''

என இறைவனையும் தமிழ் கற்குமாறு பணிப்பர். மற்றும்,

'' கலிய னொலிசெய் தமிழ் மாலை'' (1, 5, 10)

'' இருந் தமிழ் நூற்றலைவன் மங்கையாளன்
செஞ்சொல் மாலை'' (1, 7, 10)

"மங்கையர் தலைவன் கலிகன்றி வண்டமிழ்ச்
செஞ்சொல் மாலைகள்" (1, 8, 10)

"கலியன் பண்ணார் பாடல் பத்தும்" (1, 9, 10)

"கலிகன்றி யின்றமிழா லுரைத்த,
இம்மன்னு பாடல்" (2, 1, 10)

"கொண்ட சீரால் தண்டமிழ் செய்மாலை" (2, 2, 10)

"கலிகன்றி, குன்றா, இன்னிசையால்
சொன்ன செஞ்சொன் மாலை" (2, 8, 10)

"சங்க முகத் தமிழ மாலை பத்தும்" (3, 4, 10)

"கலிகன்றி சொன்ன சங்கமலி தமிழ் மாலை" (3, 9, 10)

"கலிகன்றி யூனமில் பாடலொன்ப தோடொன்றும்"
(4, 3, 10)

"கலியன் சொன்ன பாவளம் பத்தும் வல்லார்"
(4, 6, 10)

"கோவைத் தமிழால் கலியன் சொன்ன பாவைப் பாடப்
பாவம் போமே" (4, 2, 10)

"கலிகன்றி, நாமருவு தமிழ் மாலை
நாலிரண் டோடிரண்டு" (5, 6, 10).

"ஆலி நாடன் மங்கைக் குல வேந்தன்
சொன்ன விண் தமிழ் நன்மணிக் கோவை"
(7, 7, 10)

"கலியன் தமிழிவை விழுமிய விசையினொடு
ஒலி சொலு மடியவ ருறுதுய ரிலவே" (8, 7, 10)

"கற்ற நூல் கலிகன்றி யுரை செய்த
சொல் திற மிவை" (10, 1, 10)

இந்த மேற்கோள்களிலிருந்து, ஆழ்வார் செந்தமிழ்ப் பனுவல்களில் தேர்ந்தவர் என்றும், சங்க நூல்களைச் சிறப்பாகக் கற்றவர் என்றும்; அவர் பாடிய பாசுரங்கள் இசைக்கமைந்தன வென்றும்; அவ்வினிய பாடல்கள் திருமால் அன்பைப் பெருக்கி நற்கதியுய்க்க வல்லன என்றும் உணரலாம்.

மற்றும், சிறுர், மகளிர் இவர்தம் விளையாட்டாக அமைத்துச் சில பாசுரங்கள் திருமங்கை மன்னன் அருளிச் செய்துள்ளார். இப்பாசுரங்கள் பெரும்பாலும் மாணிக்க வாசகர் அருளிய பாசுரங்கள் போன்றன. கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் இருந்தவராகக் கருதப்படும் மணிவாசகப் பெருமானது பாசுரங்களை ஆழ்வார் பயின்றிருத்தல் கூடும் என்பது இதனுற் பெறப்படும். உதாரணமாக,

**பொங்கத்தம் பொங்கோ** - அதாவது தோற்றவர்கள் தோல்வியாகிய பறையடிக்க ஆடுவதொரு கூத்து. *(10, 2, 1)*.

**குழமணி தூரம்** - குணலைக் கூத்துப்போல தோற்ருர் தோல்விக்காக ஆடுவதோர் கூத்து. குணலை - தலைகீழாயாடுவதோர் கூத்து என்பர்.

" ஓங்கோத வண்ணனே சப்பாணி, ஒளி மணி வண்ணனே சப்பாணி " (10, 5, 1)

கோத்தும்பிப் பதிகமும் காண்க.

**கல்வெட்டுக் குறிப்புக்கள்**

1922. ஸ்ரீ ரங்கதேவராயர், திருமங்கையாழ்வார்க்கு விடுத்த நிலம்.

197. வெங்கடபதி தேவராய மகாராசா சகம் 1530. எம்பெருமானுர் திருநக்ஷத்திரத்தின் விநியோகத்திற்காக.

510 & 511 of 1922. விக்கிரமசோழன் ஆட்சி. திருமங்கையாழ்வார்க்குக் கோயில் அமைப்பு.

298 of 1923. திருக்கோட்டியூர் ஆலயத்தில், திருமொழி ஓத ஏற்பாடு.

299. வீரபாண்டியனது 6-ஆவது ஆண்டு. ஷை கோயில் வசந்தோற்சவத்துக்காகச் சடகோபனுல் விடப்பட்ட

மானியம்.

305. வீரபாண்டியனது 22-ஆவது ஆண்டில் திருக்கோட்டியூர் சொக்க நாராயணப் பெருமானின் திருவிழாவிற்காக.

315. மதுரை அழகர் விக்கிரகத்துக்காக நிவேதனத்தின் பொருட்டு. திருக்கோட்டியூர் கோயிற் சுவரில்.

322. குலசேகரதேவன் 13+13 year. திருக்கோட்டியூர் மதில்-ரேவதியில் சொக்கநாராயணப் பெருமாள் ஆராதனைக்காக.

336. சகம் 1601. சொக்கநாராயணப்பெருமாள் பரிவேட்டைக்காக.

407. திருச்சி மேலூர், நந்தவனத்தின்பொருட்டுத் திருக்குறுங்குடி நம்பிக்கு.

298 of 1924. சுந்தரபாண்டிய தேவர் காலம். திருக்கோட்டியூர். 10-நாள் திருவிழாவில் திருமொழி ஓதுதற்கு. (மார்கழி மாதம்).

1924. ஜடாவன்மன் அல்லது திருபுவனசக்கரவர்த்தி வீரபாண்டியதேவன் 6-ஆவது ஆண்டு. சடகோபனுக்கு-நில விக்கிரயம்-அவன் 5-நாள் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்தல்.

309. தளவாய் வேங்கடாத்திரி நாயக்கர்-ரகுநாத நாயக்கரின் காரியதரிசி. ராமாநுஜகூடத்தில் நிகழும் நிவேதனத்திற்காக.

407. திருக்குறுங்குடி நம்பி நந்தவனத்திற்காக.

## இந்நூல் எழுதுவதற்குதவியாயிருந்த நூல்கள், கட்டுரைகள் முதலியன

*The Indian Religions*: BARTH
*Nilakesi*
*Hathigumpha Inscription*
*The Gangas of Talikad*: M. V. KRISHNA RAO
*Kural*: Edited by A. CHAKRAVARTHI NAINAR
*Do.* PARIMELALAGAR COMMENTARY
*The Life of the Jains*: JAGADESH CHANDRA JAIN
*The 18 Minor Classics*
*The Panchakavyams*
*Tolkappiam and its Commentaries*
*The Heart of Jainism*: MR. SINCLAIR
*Sentamil Volumes*
*Perumkathai*
*The Jains*: K. C. VIRARAGHAVA IYER
*The Pallavas*: P. T. SRINIVASA AIYANGAR
*Kamba Ramayanam*
*Periyapuranam*
*Pathupattu*
*Ettuthokai*
*Aranericharam*
*Narivirutham*
*Udayana Kumara Kavyam*
*Meru Manthirapuranam*
*Nambi Akapporul*
*Nemi Nadam*
*Sivagnana Sidhiar*
*Tirukkalambagam*
*The South Indian Inscriptions*
*Ilakkana Vilakkam*
*Indian Philosophy*: SIR S. RADHAK HNAN
*Outlines of Indian Philosophy*: HIR INNA
*C. S. Srinivasachariar's 60th Birth Volume*
*Hieun Sang's Travel Anecdotes*
*Kongudesa Rajakkal*
*Buddha Jatakas*

*Virasoliyam*
*Baudhamum Tamilum* } Seeni Venkatasami
*Samanamum Tamilum* }
*Early History of Vaishnavism*: Dr. S. Krishnasamy Aiyangar
*Saivaism, Vaishnavaism and Other Religions*: Dr. R. G. Bhandarkar
*Alwargal Kalanilai*: M. Raghava Aiyangar
*Tamil Studies*: M. Srinivasa Aiyangar
*Tamil Varalaru*: K. Srinivasa Pillai
*Tiruvisaippa*
*Tirukkovayar*
*Tevara Tirumurai*
*Nalayira Divya Prabandham*
*The Baghavad Gita*
*The Upanishads*: Paul Deussen
*The Mahawamsa and the Dipavamsa*
*Indian Architecture*: E. B. Havell
*Chulamani*

## இந்நூற்கண் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் நூல்களும் அவற்றின் குறியீடுகளும்

---

திருக்குறள்—குறள்.
நீலகேசி.
மணிமேகலை—மணி.
நாலடியார்—நாலடி.
பெரிய புராணம்.
பழமொழி. பழ.
சிலப்பதிகாரம்—சிலப்—சிலம்பு.
நாடுகாண்காதை—நாடுகாண்.
களவழிநாற்பது—களவழி.
பெருங்கதை—பெருங்.
சிந்தாமணி—சிந்தா.
அறநெறிச்சாரம்—அறநெறி.
ஆசாரக்கோவை—ஆசாரக்.
பட்டினப்பாலை—பட்டினப்.
சீவக சிந்தாமணி—சீவக.
கம்பராமாயணம்—கம்பரா.
திருச்சிற்றம்பலக் கோவையார்—திருக்கோ.
சூளாமணி—சூளா.
பெரும்பாணாற்றுப்படை—பெரும்பாண்.
மதுரைக்காஞ்சி—மதுரைக்.
புறநானூறு—புறநா.
திருமுருகாற்றுப்படை—திருமுருகு.
அகநானூறு—அகநா.
ஐந்திணை எழுபது—ஐந்திணை எழு.
ஏலாதி.
சிறுபஞ்சமூலம்.
திணைமாலை நூற்றைம்பது—திணைமாலை.
சிவஞான சித்தியார்.
திருக்கலம்பகம்.
யாப்பருங்கல விருத்தி—யாப். விருத்.
இலக்கண விளக்கம். இலக்.வி.
தொல்காப்பியம்.
முல்லைக்கலி—முல்லைக்.
பரிபாடல்—பரி.

பெரியாழ்வார் திருமொழி—பெரியாழ். திரு.
திருப்பல்லாண்டு—திருப்பல்.
திருப்பாவை.
திருவெம்பாவை.
இயற்பா.
திருவிசைப்பா.
திருவிருத்தம்.
திருமாலை.
திருச்சந்த விருத்தம்.
பெரிய திருமொழி.
திருவாய்மொழி,
திருநெடுந்தாண்டகம்.
பெரிய திருமடல்.

# சொல்லகராதி அகரவரிசை


பக்கம்

அ

அகளங்கன் 93
அசுவசேனன் 6
அஜாதசத்துரு 7
அஜாதநாதர் 1
அசோகன் 3
அநிருத்தன் 215
அமராபரணன் 97
அரிட்டநேமி 1
அரியபிள்ளை 96
அருகர் துதி 129
அருங்கலச் செப்பு 79
அறநெறிச் சாரம் 78

ஆ

ஆசீவகர் 104
ஆண்டாள் 280

இ

இடபதேவர் 1, 4
இந்திரவிழா 6
இராகவையங்கார், மு. 374, 375
இராசராசன் 306
இராமாநுசர் 248
இலங்கையிற் பௌத்தம் 164
இறந்தவர்களை அடக்கம் செய்யும் வகை 7

ஈ

ஈஸ்வர கிருஷ்ணன் 172

உ

உதயணகுமார காவியம் 83

எ

எருத்துக்காட்டு வேளாளர் 20
எருமையூரன் 12

பக்கம்

ஏ

ஏலாதி 73
ஏலாரா 169

ஐ

ஐந்திணை எழுபது 72
ஐந்திரம் 23

க

கங்க நாடு 96
கங்க மன்னர் 4
கச்சியில் சமண சின்னங்கள் 131
கண்ணன் 1, 6
கபாடபுரம் 32
கருடவாகன பண்டிதர் 248
களப்பிரர் 4, 9

கா

காரவேலன் 3
காரிகை 93

கி

கிருஷ்ணராவ், எம்.வி. 4

கீ

கீதை 213

கு

குண்டலகேசி 93, 185
குணபத்திரர் 90
குலசேகரர் 91, 327
குழமணிதூரம் 384

கூ

கூன்பாண்டியன் 19

கொ

கொங்குதேச ராசாக்கள் 171
கொங்குவேள் 33

பக்கம்

**கோ**

கோசண்டி 214
கோசல முனிவர் 7
கோட்டம் 26

**கௌ**

கௌடபாதர் 172
கௌடில்யர் 5

**ச**

சக்கரவர்த்தி நயினார் 2, 5, 87
சங்கராச்சாரியார் 172, 215
சங்கருடணன் 214
சசாங்கன் 171
சதபதப் பிராம்மணம் 1
சந்திரகுப்தன் 3, 4
சம்பிரதி 3
சம்பூத விசயன் 8
சமணமும் தமிழும் 120
சமணர் இயற்றிய உரைகள் 98
சமணர் இயற்றிய கத்திய நூல்கள் 106
சமணம் தேய்ந்து குன்றிய வரலாறு 110
சம்பந்தரும் சமணரும் 99
சமந்த பத்திரர் 8
சனகாபுரம் 95

**சா**

சாங்கிய காரிகை 172
சாத்தன் 192

**சி**

சித்தார்த்தன் 7
சிம்ம விஷ்ணு 9
சியாத்வாதம் 8
சிரவண வேள்குளம் 3, 4, 20
சிலப்பதிகாரம் 23, 25
சிலாதித்யன் 171
சிறுபஞ்சமூலம் 77
சிற்றண்ணல் வாயில் 33

பக்கம்

**சீ**

சீயகங்கன் 96
சீவக சிந்தாமணி 40, 103
சீஞபுரம் 96
சீநிவாசய்யங்கார், பி.தி. 33

**சு**

சுப்பிரமணிய பிள்ளை, கா. 79
சுருதகேவலி 3
சுவேதாம்பரர் 5, 8

**சூ**

சூடாமணி 90
சூடாமணி பத்ம விகாரம் 376
சூளாமணி 80

**சே**

சேஞவரையர் 134

**சௌ**

சௌகதம் 172

**டா**

டாக்டர் பூலர் 33
டாக்டர் வீபர் 172
டாக்டர் ஹாவெல் 210

**த**

தஸ்யுக்கள் 139
தந்திவர்மன் 373, 374
தருமசேனர் 18
தலையாலங்கானம் 10

**தி**

திகம்பரர் 4, 8
திணைமாலை நூற்றைம்பது 77
திரிகடுகம் 237
திரிசயா 7
திருக்கலம்பகம் 109
திருக்கோயிலூர் 306
திருச்சந்த விருத்தம் 258
திருநாராயணய்யங்கார் 23
திருநாவுக்கரசு 18

| | பக்கம் |
|---|---|
| திருநுந்தா விளக்கு | 96 |
| திருப்பாணாழ்வார் | 338 |
| திருப்பாதிரிப்புலியூர் | 4 |
| திருப்பாவை | 284 |
| திருமங்கையாழ்வார் | 339 |
| திருமழிசையாழ்வார் | 251, 261 |
| திருவல்லம் | 96 |
| திருவாரூர் | 18 |
| திருவாய்மொழி | 308 |
| திருவிருத்தம் | 306 |
| திருவேகம்பர் | 96 |
| திலகவதியார் | 18 |
| திவ்யசூரி சரிதம் | 248 |
| திவாகரம் | 88 |
| **தீ** | |
| தீபங்குடி | 79 |
| தீர்த்தங்கரர் | 1, 2, 14 |
| **து** | |
| துத்தகாமணி | 169 |
| துர்விநீதன் | 33 |
| **தெ** | |
| தெள்ளாறு | 373 |
| **தே** | |
| தேவாரமும் சமணமும் | 102 |
| **தொ** | |
| தொண்டரடிப்பொடிகள் | 334 |
| தொல்காப்பியம் | 135 |
| தொல்காப்பியர் சமணரா ? | 22 |
| **ந** | |
| நந்திக்கலம்பகம் | 373 |
| நந்திவர்மன் | 9 |
| நம்பியகப் பொருள் | 91 |
| நம்மாழ்வார் | 294 |
| நரிவிருத்தம் | 80 |
| நன்னூல் | 94 |

| | பக்கம் |
|---|---|
| **நா** | |
| நாககுமார காவியம் | 85 |
| நாதமுனிகள் | 248 |
| நாலடியார் | 15, 16, 65 |
| நாளந்தா | 7 |
| **நி** | |
| நிகண்டு | 88 |
| நிகாயம் | 173 |
| நின்றசீர் நெடுமாறன் | 19 |
| **நீ** | |
| நீலகேசி | 86, 176 |
| **நெ** | |
| நெடுஞ்செழியன் | 10 |
| **நே** | |
| நேமிநாதம் | 93 |
| **ப** | |
| பக்திசாரர் | 252 |
| பண்டாரகர் | 214 |
| பதஞ்சலி | 214 |
| பதினெண்கீழ்க் கணக்கு | 9, 137 |
| பத்திரபாகு | 2, 3, 8 |
| பத்துப்பாட்டு | 236 |
| பராக்கிரம பாகு | 171 |
| பரிபாடல் | 224 |
| பவணந்தி | 95 |
| பழமொழி | 25 |
| **பா** | |
| பாகவத மதம் | 214 |
| பாஞ்சராத்திரம் | 219 |
| பாணினி | 214 |
| பார்சுவநாதர் | 1, 2, 6 |
| பார்த் | 1 |

| | பக்கம் |
|---|---|
| **பி** | |
| பிங்கலம் | 89 |
| பிடகம் | 173 |
| பிம்பசாரன் | 3 |
| பிரச்சன்ன பௌத்தம் | 173 |
| பிரத்யும்நன் | 215 |
| பிராம்மணம் | 143 |
| பிர்கதாரண்யம் | 212 |
| பிருகத் கதை | 33 |
| பிரம தந்திர சுவந்தர ஜீயர் | 248 |
| பிள்ளை லோகார்ய ஜீயர் | 97 |
| **பு** | |
| புகார் | 7 |
| புத்த பீடிகை | 183 |
| புத்தர் பிரான் | 7, 215 |
| **பூ** | |
| பூதத்தாழ்வார் | 252 |
| பூர்ண வர்மன் | 171 |
| **பெ** | |
| பெரியாழ்வார் | 271 |
| பெருங்கதை | 30 |
| பெஸ்நகர் | 214 |
| **பொ** | |
| பொங்கத்தம் பொங்கோ | 384 |
| பொய்கையாழ்வார் | 251 |
| **பௌ** | |
| பௌத்த திருப்பதி | 197 |
| பௌத்த துதிகள் | 201 |
| பௌத்தம் தோன்றிய வரலாறு | 160 |

| | பக்கம் |
|---|---|
| **ம** | |
| மகாவீரர் | 3, 7 |
| மகேந்திரவர்மன் | 18 |
| மண்டல புருடர் | 90 |
| மணிமேகலை | 146, 150 |
| மணிவாசகர் | 306 |
| **மு** | |
| முத்தரையர் | 9, 375 |
| முதலாழ்வார்கள் | 239, 250 |
| முதுகுடுமி | 9 |
| **மூ** | |
| மூர்த்தி நாயனார் | 9 |
| **மே** | |
| மேருமந்தர புராணம் | 83 |
| **ய** | |
| யசோதர காவியம் | 84 |
| யசோதரை | 7 |
| **யா** | |
| யாப். விருத்தி | 91 |
| **ரா** | |
| ராதா கிருஷ்ணன், ஸர். எஸ். | 138 |
| ராகவையங்கார், ரா. | 24 |
| ராஜ்யவர்த்தனர் | 171 |
| **ரி** | |
| ரிதம் | 143 |
| **ரே** | |
| ரேவா | 373 |
| **லி** | |
| லிச்சவிகள் | 3 |
| **வ** | |
| வச்சணந்திமாலை | 98 |
| வர்த்தமானர் | 1 |
| வளையாபதி | 190 |

| | பக்கம் |
|---|---|
| **வா** | |
| வாஜசநேய சங்கிதை | 1 |
| வாசுதேவன் | 214 |
| வான்மீகி முனிவர் | 2 |
| **வி** | |
| விக்கிரமாதித்தியன் | 9 |
| விசயநந்தி | 33 |
| விமலாதித்யன் | 9 |
| விம்பசார கதை | 189 |
| விருஷபர் | 6 |
| 'விநயம் | 173 |
| **வீ** | |
| வீரசோழியம் | 194 |
| **வெ** | |
| வெங்கையா | 373 |
| **வே** | |
| வேங்கடசாமி நாட்டார் | 92 |

| | பக்கம் |
|---|---|
| **வை** | |
| வைசாலி | 3 |
| வைரமேகன் | 373 |
| **ஸ்** | |
| ஸ்தலபத்திரர் | 8 |
| **ஜ** | |
| ஜகதீஷ் சந்திர ஜெயின் | 6 |
| ஜயங்கொண்ட சோழபுரம் | 20 |
| **ஜா** | |
| ஜாகொபி | 6 |
| **ஹ** | |
| ஹத்திகும்பா | 3 |
| ஹர்ஷவர்த்தனன் | 171 |
| **ஹெ** | |
| ஹெலியோ டோரஸ் | 214 |
| **ஹொ** | |
| ஹொய்சளர் | 20 |